வெளியீடு 2-1-1984] [Issued 2-1-1984]

1984
2798
எழும்பூர், சென்னை-600 008

# தமிழ் நாடு

# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பதிவுத்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 7, 1983—தொகுதி XLVIII எண். 4

Thursday the April 7th 1983 Volume XLVIII No. 4

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009

Legislative Assembly Department Fort St. George
Madras-600 009.

விலை .50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

2708

T. N. L. A Debates

OFFICIAL REPORT

VOL: XLVIII No: 4 and 5

April 7th and 8

983

©

V211,31 N83
N83.48.49
136032

ஆவணக்காப்பக
136032

உள்ளடக்கம்.

7—4—1983


| | பக்கம் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. | 789-820 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) உறுப்பினர் திரு. வெ. இராஜசேகரன் | 821 |
| கைது .. .. .. .. .. | 821-822 |
| (ஆ) நாளேடுகளின் செய்திகள் .. .. | 822-824 |
| (இ) காவிரி நீர்ப் பிரச்சினை .. .. .. | 822-824 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| உள்ளாட்சித் துப்புரவுத் தொழிலாளர்கள் போராட்டம் .. .. .. .. | 824-833 |
| 4. அறிவிப்பு— | |
| உறுப்பினர் திரு. வெ. இராஜசேகரன் கைது செய்யப்பெற்றுள்ளது .. .. .. | 833 |
| 5. அறிக்கைகள் அளித்தல்— | |
| (அ) விதி 107(1)-ன்கீழ் திருத்த அறிக்கை | 833-834 |
| (ஆ) உரிமைக் குழு .. .. .. .. | 839 |
| (இ) விதி 106-ன்கீழ் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிக்கை .. | 925-927 |
| 6. கவன ஈர்ப்புகள்— .. .. .. .. | |
| (அ) இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களில் வறட்சிக்குட்பட்ட பகுதிகளில் திட்டச் செயல் முறை .. .. .. .. | 834-836 |
| (ஆ) தண்டராம்பட்டுத் தொகுதியில் குடிநீர் தட்டுப்பாடு .. .. .. .. | 836-838 |


128/62—A

பக்க

7\. வரவு-செலவுத் திட்டம்—1983–84 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)—

| | |
|---|---|
| கோரிக்கை எண். 15—காவல் துறை .. | 839-925 |
| கோரிக்கை எண். 16—தீயணைப்புப்பணிகள் | |
| மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.. | 839, 40, 842, 869, 870, 894, 895, 896 |
| திரு. என். இட்டப்பா .. | 842-847 |
| திரு. மி. வின்செண்ட் .. | 847-856 |
| திரு. நா. சுந்தரராஜ் .. | 856-860 866-868 |
| திரு. சேலம் மு. ஆறுமுகம் .. | 870-871 |
| திரு. என். சங்கரய்யா .. | 878-901 |
| திரு. இரா. அமிர்தராஜ் .. | 901-905 |
| திரு. என். ஏ. பூங்காவனம் .. | 905-911 |
| திரு. குமரி அனந்தன் .. | 911-925 |

8\. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.. .. 927-928

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1983, ஏப்ரல் 7.

பங்குனி 24, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு —2014

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை."

அழிவு இல்லாததாய், வஞ்சனைக்கு இரையாகாததாய், தொன்று தொட்டு வந்த அஞ்சாமை உடையதே படையாகும்.

### 1. வினாக்கள் — விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

விவசாயிகளுக்கு விவசாயக் கருவிகளை இலவசமாக வழங்கும் திட்டம்.

*வினா எண். 676—திரு. ஆர். தவசி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு விவசாயக் கருவிகளான கலப்பை, மண்வெட்டி முதலியவைகள் இலவசமாகக் கொடுக்கும் செயற்குறிப்பு உண்டா ?

(ஆ) அவர்களுக்கு உரம் பாதி விலையில் கொடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இல்லை,

(ஆ) இல்லை,

[1983 ஏப்ரல் 7

திரு. ஆர். தவசி : தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு கலப்பை போன்ற கருவிகளை இனாமாகக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அது இந்தத் துறையின் மூலமாகச் செய்யப்படுவது இல்லை. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. அதிலும் கூட தனிப்பட்ட கருவிகளுக்கு மானியம் வழங்குவது அவசியம் இல்லை என்கிற வகையில் கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. ஆர். தவசி : தலைவர் அவர்களே, பல்வேறு வகைகளில் விவசாயிகளுக்கு அரசு செய்கிற சலுகைகளுக்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். ஆனால், ஒட்டுமொத்தமாக விவசாயிகளுக்கு உரங்களைப் பாதி விலையில் கொடுக்க அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாகக் கொடுப்பது என்பது தேவையற்றது. சிறு விவசாயிகளுக்கும், மிகச்சிறு விவசாயிகளுக்கும் மத்திய அரசு ஆதரவு அளிக்கும் சில திட்டங்களின் கீழ் 50 விழுக்காடு மானியத்திலும், 33⅓ விழுக்காடு மானியத்திலும் நாம் அதை வழங்கிக் கொண்டு இருக்கிறோம். வறட்சி நிவாரணப் பணிகளுக்காகத் தொடர்ந்து அத்தகைய பணிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக மானிய விலையின் அடிப்படையில் விவசாயிகளுக்கு கலப்பை, மண்வெட்டி போன்ற கருவிகளை வழங்குவதாகச் சொன்னார்கள். விவசாயத் துறை மூலமாக விவசாயிகளுக்கு ஏதாவது சலுகைகள் வழங்கப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப்பிட்டேன். சிறு விவசாயிகளுக்கும், மிகச்சிறு விவசாயிகளுக்கும் மைய அரசு ஆதரவு அளிக்கும் திட்டத்தின் அடிப்படையில் கடந்த காலத்தில் நாம் சில சலுகைகளை வழங்கினோம். வறட்சி நிவாரணப் பணியின் மூலமாக நாம் அப்படிப்பட்ட சலுகைகளை வழங்குவதற்கு உத்தேசித்து இருக்கிறோம். ஆனால், இப்போதுள்ள நிலைமையின் மலைவாழ் மக்களுக்குத்தான் அத்தகைய சலுகைகளை இத்துறை வழங்குகிறது.



1983 ஏப்ரல் 7]

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் மைய அரசு உதவி மூலமாக இந்தத் திட்டங்களைச் செய்வதாகச் சொன்னார்கள். சென்ற ஆண்டிலே நமக்கு எவ்வளவு கிடைத்தது ? கொடுக்கப்பட்ட முழுத் தொகையும் செலவு செய்யப்பட்டு விட்டதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது இப்போது நடைமுறைக்கு வந்து இருக்கும் திட்டம் அல்ல. கடந்த காலத்தில் இருந்து மைய அரசின் துணையோடு அத்தகைய திட்டங்கள் செயல்பட்டன. கடந்த ஆண்டில் அப்படிப்பட்ட திட்டம் இல்லை.

திரு. நி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் கொடுப்பதாகச் சொன்னார்கள். என்னென்ன உரங்கள் மானிய விலையில் கொடுக்கப்படுகின்றன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, இப்போது அவை இல்லை என்று குறிப்பிட்டேன். மலைவாழ் மக்களுக்கு வழங்கியதாகச் சொன்னேன், மணிச்சத்து, சாம்பல்சத்து உரங்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

திரு. து. வேணுகோபால் : தலைவரவர்களே, விவசாயிகளுக்கு கலப்பை, மண்வெட்டி போன்ற பொருள்களை மானிய விலையில் கொடுப்பதாக அறிவித்தார்கள். மிகவும் பின்தங்கிய வகுப்பினர்தான் இந்த விவசாயத் தொழில்களைச் செய்கிறார்கள். ஆகவே, பின்தங்கிய சமுதாயத்தினருக்கு இவற்றை மானியமாக அல்லது இலவசமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, கொடுப்பதாக நான் சொல்லவில்லை.

## கோவில்பட்டி ஒருங்கிணைந்த மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டம்.

*வினா எண். 677—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி ஒருங்கிணைந்த மானாவாரி நிலமேம்பாட்டுத்திட்டத்தை விளாத்திக்குளம் ஒன்றியப் பகுதிக்கு விஸ்தரிக்க அரசு செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** இல்லை.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** தலைவரவர்களே, விளாத்திக்குளம் ஒன்றியம் மானாவாரியாக இருக்கிற மிகப் பிற்பட்ட பிரதேசம். இப்போது இல்லை என்றாலும் இனி யாவது அரசாங்கம் இந்தத் திட்டத்தை அந்த ஒன்றியத்திற்கும் நீட்டிக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, அந்தத் திட்டம் இந்த முறையில் ஆண்டுக்கு 800 ஹெக்டேர், எடுக்கப்படுகிறது. இந்த ஆண்டு கயத்தாறு இத்திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. மு. அப்பாதுரை :** தலைவரவர்களே, இந்த ஒருங்கிணைந்த மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 800 ஹெக்டேர் நிலம் கயத்தாறில் எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அது என்னுடைய தொகுதியைச் சேர்ந்தது என்பதால் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் மூலம் மானாவாரிபயிர்கள் நல்லமுறையில் செய்வதற்கும், இது ஒரு ஆக்கப்பூர்வமான திட்டமாகவும் இருப்பதினால் புன்செய்யாக இருக்கிற ஓட்டப்பிடாரம், புதூர் ஒன்றியங்களையும், இப்போது திட்டம் செயல்படும் பகுதிக்குப் பக்கத்தில் இருப்பதால், அந்த ஒன்றியங்களுக்கும் விஸ்தரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பரிசீலிப்போம்.

### பருப்பு— எண்ணெய் ஆகியவைகளுக்கான விற்பனை வரி

**வினா எண். 610— திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பருப்பு—எண்ணெய்க்கு விற்பனை வரி முறையில் விலக்களிக்க வேண்டும் என அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வரிவிலக்குசெய்யும் உத்தேசம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) ஆம்,





(ஆ) அவ்வாறு பொருட்களுக்கு வரிவிலக்கு அளிப்பதால் வருவாய் இழப்பு ஏற்படும் என்பதால் அக் கோரிக்கை ஏற்பதற்கில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவரவர்களே, பருப்பு, எண்ணெய் போன்ற பொருள்களை ஏழை எளிய நடுத்தர மக்கள் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். குழந்தைகள் சாப்பிடும் போது சோற்றில் பருப்பை பிசைந்து ஊட்டுகிறார்கள். இப்போது மதிய உணவுக்கும் பருப்பைத்தான் போடுகிறோம். அதைப் போன்று எண்ணெய்யும் ஒரு அத்தியாவசியப் பொருளாக இருக்கிறது. ஆகவே இந்தப் பொருள்களுக்கு விற்பனை வரியில் முழு அளவுக்கு விலக்கு அளிக்காவிட்டாலும் வரியைக் குறைக்க ஏற்பாடு செய்வார்களா? ஓரளவுக்கு வரியை குறைத்தால் அதனால் அரசுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, பருப்பு, எண்ணெய் ஆகியவற்றிற்கு வரி விலக்கு அளிப்பதாக இல்லை. இந்த வரி நீண்டகாலமாக இருந்துவருகிற ஒன்றாகும். பருப்பு உள்ளிட்ட பருப்பு வகைகளுக்கெல்லாம் வரி விலக்குக் கொடுத்தால் சுமார் 670.28 இலட்சம் ரூபாய் ஆண்டுதோறும் அரசுக்கு இழப்பு ஏற்படும். அதைப்போன்று எண்ணெய் வகைகளுக்கு வரி விலக்கு கொடுத்தால் ஆண்டுதோறும் அரசுக்கு 486.51 இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்படும். ஆகையால் வரி விலக்கு கொடுக்கின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவரவர்களே, எண்ணெய் முதலிய பொருள்களுக்கு 3—7—1982-லிருந்து ஒருமுனை வரியிலிருந்து பலமுனை வரி விதிக்கப்படுகிறது. இதனால் சில்லரை வியாபாரிகள், கடலை எண்ணெய், தேங்காய எண்ணெய் பயன்படுத்தும் ஏழை எளிய மக்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே எண்ணெய் வகைகளுக்கு மீண்டும் ஒருமுனை வரி விதிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, ஒருமுனை வரியாக இருக்கும்போது சில தவறுகள் நடைபெறுவதற்கு வழிவகை இருந்ததால் அது பலமுறை வரியாக மாற்றப்பட்டது. எண்ணெயை கொண்டு செல்லும் போது வியாபாரிகள் தவறு செய்ய இடமிருந்தது. எங்காவது ஒரு இடத்தில் தப்பித்துவிட்டால் கடைசிவரையில் தப்பித்துவிடுகிறார்கள். அப்படிப்பட்ட தவறு நடக்காமல் இருக்கத்தான் பலமுனை வரியைக் கொண்டுவந்திருக்கிறோம்.

[1983 ஏப்ரல் 7

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, நம்முடைய மாநிலம் பருப்பு பற்றாக்குறை மாநிலமாக இருக்கிறது. பருப்பு வெளி மாநிலங்களிலிருந்துதான் வரவேண்டியிருக்கிறது. அதிலும், நடுத்தரக் குடும்பத்தினருக்கு சத்துணவு என்றால் இந்த பருப்பு வகைகளைத்தவிர வேறுவழியில்லை. அதனால் விற்பனை வரியைக் குறைத்து, குறைந்த விலையில் பருப்பு வகைகளைக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, பருப்பைப் பொறுத்தவரையில் வரியைக் குறைத்தால், அதனால் ஏற்படும் பலன் நுகர்வோருக்கு நிச்சயமாகப் போகாது என்பதை நாங்கள் ஆராய்ந்து பார்த்திருக்கிறோம். நுகர்வோருக்கு அந்த நன்மை கிடைக்காத காரணத்தாலும், பல இலட்சம் ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்படும் என்பதாலும் அதை அரசு பரிசீலிக்கத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9—10)

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலமுனை வரி போடுவதற்கு முன்னால் ஒரு முனை வரி இருந்தபோது அதாவது 1981—82 ஆம் ஆண்டில் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, பல முனை வரி அல்லது ஒரு முனை வரி ஆகியவற்றைப் பார்க்கின்றபோது ஏறக்குறைய ஒரேமாதிரியாகத்தான் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஏமாற்றுவதைக் கண்டுபிடிப்பதற்காகத்தான் இப்போது பலமுனை வரி போடப்பட்டிருக்கின்றது. ஆக, இதனுடைய பின் விளைவு இனிமேல்தான் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஒருமுனை வரி விதிக்கின்றபோது பல இடங்களில் தப்பிவிடுகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பலமுனை வரி போடுவதில் பலர் தப்ப மாட்டார்களா? மேலும் எண்ணெய், பருப்பு போன்றவற்றை விற்கின்ற வியாபாரிகள்தான் தப்பிவிடுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பலமுனை வரியினைப் பொறுத்தவரையிலே சிறு வியாபாரிகளுக்கு நல்லதுதான். ஏனென்றால் அவர்கள் 50 ஆயிரம் வரைக்கும் கணக்கு வைத்துக் கொள்ளவேண்டியதில்லை. ஆனால் ஒரு முனை வரியாக இருந்தால் 5 ரூபாய்க்கும் 10 ரூபாய்க்கும் பொருட்களை விற்றால் கூட அதற்கெல்லாம் அவர்கள் கணக்கு வைத்தாகவேண்டும். எனவே சிங்கிள் பாயின்ட் டாக்ஸ் என்கிறபோது அங்கேயே வரி கொடுத்துவிட்டோம் என்று அவர்கள் சொல்வது கஷ்டமாக இருக்கும். எனவே ஒருமுனை வரியினை விட பலமுனை வரி என்கின்றபோது சில்லறை வியாபாரிகளுக்கு நல்லதுதான். மேலும் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களைப் பொறுத்த வரையில் எந்தெந்தப் பொருட்களில் எல்லாம் ஏமாற்றிவிட முடியும் என்ற நிலைமை இருக்கின்றதோ அவற்றுக்குத்தான் பல முனை வரி விதிக்கப்பட்டிருக்கின்றது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பருப்புக்கும் எண்ணெய்க்கும் தற்போது விதிக்கப்படும் வரி விகிதம் என்ன என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் இனியாவது அந்த வரி விகிதத்தினைக் குறைக்க அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இப்போது பருப்புக்கு 4 சதவிகிதம் ஒருமுனை வரியும் எண்ணெய்க்கு 2 சத விகிதம் பலமுனை வரியும் விதிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் தமிழ் டெலக்ஸ் இயந்திரங்கள் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 611— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் நிறுவ இருக்கும் டெலக்ஸ் இயந்திரங்கள் ''தமிழ் டெலக்ஸ்'' இயந்திரமாக நிறுவப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்களிலும் டெலக்ஸ் வசதிகள் ஏற்கனவே ஆங்கிலத்தில் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. தமிழ் டெலக்ஸ் இயந்திரங்களை இயக்குவதற்கு வாய்ப்பில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 7

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலும் பிற அரசு அலுவலகங்களிலும் போதுமான தமிழ் டைப்ரைட்டர் கள் இல்லாததன் காரணத்தால் தமிழ் ஆட்சி மொழியாவதில் தடங்கல்கள் இருக்கின்றன. எனவே போதுமான தமிழ் டைப் ரைட்டர்களை குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக எல்லா அரசு அலுவலகங்களுக்கும் அளிக்க அரசுக்கு உத்தேசம் இருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா கலெக்டர் அலுவலகங் களிலும் தமிழ் டைப்ரைட்டர்களும், ஆங்கில டைப்ரைட்டர் களும் இருக்கின்றன. தாலூக்கா அலுவலகங்களில் முன்பு இல்லாமல் இருந்தது. இப்போது தாலூக்கா அலுவலகங்களுக்கும் தமிழ் டைப்ரைட்டர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தமிழகம் மற்றும் புதுவை மாநிலங்களில் லாரி, பஸ் சேசிஸ்களுக்கான விலை.

வினா எண். 612—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வரு வாய்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) தமிழகத்தைவிட லாரி பஸ்களின் சேசிஸ்விலை புதுவை மாநிலத்தில் குறைவாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் சேசிஸ் விற்பனை தமிழகத்தில் குறைந் திருப்பது உண்மையா ?

(இ) அதனால் தமிழக அரசுக்கு வருமான இழப்பீடு ஏற்பட்டு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) உண்மை தான்.

(இ) தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களில் (கர் நாடகா, கேரளம்), வரி விதிப்பு ஒரே அளவாகவும், பாண்டிச் சேரியில் எப்போதுமே வரி விகிதம் குறைவாகவும் உள்ளது ஏன்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,



1983 ஏப்ரல் 7]

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரி சேசிஸ், பஸ் சேசிஸ் போன்றவற்றை தமிழ் நாட்டில் வாங்குவதை விட பாண்டிச்சேரிக்கு சென்று வாங்கு வதில் 16 ஆயிரம் ரூபாய் குறைவாக இருக்கின்றது, டி.வி.எஸ். போன்ற நிறுவனத்தினர் பாண்டிச்சேரியில் தனியாக சேல்ஸ் ஆஃபீஸைத் துவக்கி அங்கே வாங்கிக்கொள்வதற்கான ஏற்பாடு களைச் செய்திருக்கின்ற காரணத்தால் தமிழ்நாட்டிலே இருந்து அங்கே சென்று வாங்குகிறார்கள். ஆகவே நம்முடைய வரு மானம் எல்லாம் புதுவை மாநிலத்திற்கு செல்கின்ற காரணத்தால் இதை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனைச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி விற்பனை வரி போடு கின்றபோது அண்டைய மாநிலங்களில் எப்படி போடப்படுகிறது என்பதை ஆராய்ந்து போடுகிறது. அப்படி போடுகிறபோது தமிழ்நாட்டில் 15 சதவீதம், ஆந்திராவில் 12 சதவீதம், கர்நாடகாவில் 15 சதவீதம், கேரளாவில் 15 சதவீதம் ஆகவே இப்படி பெரிய மாநிலங்களில் எல்லாம் ஒரே மாதிரியாக தான் விற்பனை வரி இருக்கிறது. புதுச்சேரியில் மட்டும் 30—3—1982 7 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக குறைத்து இருக்கிறார்கள். அதனால் நம்முடைய வியாபாரம் பாதிக்கப்படுகிறதா என்பதை இதற்கு முன்னாலும் இதற்கு பின்னாலும் பார்க்கிறபோது பாதிக்கப்படவில்லை என்ற கணக்கு தான் நம்மிடத்தில் இருக் கிறது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனால் நம்முடைய வியாபாரம் பாதிக்கப்பட வில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே அது என்னைப் பொறுத்தவரையிலும் முற்றிலும் உண்மை அல்ல இந்த ஆண்டு மட்டும் பாண்டிச்சேரி அரசாங்கத்திற்கு 20 கோடி ரூபாய் அந்த லாரி பஸ் சேசிஸ் விற்பனை மூலம் வருமானம் கிடைத்திருக்கிறது. நம்முடைய மாநிலம் அதற்கு பக்கத்தில் இருக்கிற காரணத்தால் நம்முடைய வியாபாரிகள் அங்கேபோய் வாங்குகிறார்கள். ஆகவே எப்படி பார்த்தாலும் 10 கோடி ரூபாய் அளவுக்கு நமக்கு இந்த விற்பனை மூலம் நஷ்டம் ஏற் படுகிறது. ஆகவே இதை தடுப்பதற்கு அரசு மறு பரிசீலனைத் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசுக்கு வருகிற வரி வருமானம் எப்படியாவது பக்கத்து மாநிலங்களுக்குப் போனால் அப்படி போவதைத் தடுப்பதற்கும் அதன் மீது நடவடிக்கை

[1983 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : விரைவில் அரசு பரிசீலனை செய்து எவ்வளவு சீக்கிரத்திலே நடவடிக்கை எடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்திலே எடுக்கும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9—20)

திரு. ஆர். மணிமாறன் : தலைவர் அவர்களே, நிர்வாக வசதிக்காக இப்படி டிவிஷனகள் பிரிக்கப்படுவது கூடாது என்று சொல்லி மத்திய சர்க்காரிடமிருந்து ஏதாவது தாக்கீது வந் துள்ளதா ? அப்படி வந்திருந்தால் அதுபற்றி அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர் களே, தருவதுஎன்பது ஏதாவது ஊராட்சி மன்றத் தேர்தல்கள் வருகிற போது அதைப்பற்றிஅவர்கள் கூறுவார்களே தவிர மற்ற நேரங்களில் நாம் பிரிப்பதைப் பற்றி அவர்கள் தாக்கீது செய்யமாட்டார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இம்மாதிரி வட்டங்களையும் மாவட்டங்களையும் இரண்டாகப் பிரிக்கிற நேரத்திலே அதற்கான அனுமதியை மத்திய அரசிடமிருந்து பெறவேண்டியுள்ளதா அல்லது மாநில அரசே அதைச் செயல் படுத்த வழியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையைப் பொறுத்த வரை யிலும் மாவட்டங்களையும் வட்டங்களையும் பிர்க்காக்களையும் பிரிப்பதையோ சேர்ப்பதையோ பற்றி மத்திய அரசிடத்திலே அனுமதி தேவை இல்லை.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நெகமத்தை தனி தாலுகாவாக ஆக்கும் செயற் குறிப்பு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார் கள். அதுபோல் நம் மாநிலத்திலே எத்தனை பெரிய தாலுக்காக் களை இரண்டாகப் பிரித்து நிர்வாக வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசிடம் திட்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன். என்னுடைய தாலுக்காவைக்கூட இரண்டாகப் பிரித்து ஒட்டன் சத்திரம் தனித் தாலுக்காவாக பிரிக்கப்படும் என்று சமீபத்திலே அவையிலேயே அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். அது எப்போது பிரிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.



சென்னை-600 0

1983 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அவர்கள் இருக்கிற தாலுக்காவை பற்றி பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் சுமார் 10 தாலுக்காக்களுக்கு மேலாக பிரிக்க வேண்டும் என்று பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேந்தமங்கலம் குடிநீர் திட்டம்.

* வினா எண். 678— திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

(ஆ) இந்தத் திட்டத்தின் கிணறு வெட்டும் பகுதிக்கு கோர்ட் தடையிருப்பதால் வேறு இடத்தில் கிணறு வெட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) சேந்தமங் கலம் பேரூராட்சிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் அமைப்பதற்கு அரசின் 16—9—1978 நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை ஆணை எண். 1467-ல் ரூ. 24.13 இலட்சங்கள் செலவில் குடிநீர்த் திட்டம் நிர்மா ணிக்கவும் ரூ. 35,000 பராமரிப்புச் செலவாகவும் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) உரிமை இயல் வழக்கு நீதி மன்றத்தில் நிலுவையில் இருந்தாலும் திட்ட வேலை துவங்க குந்தகம் இல்லை என நாமக்கல் கூடுதல் அரசு வழக்கறிஞரின் கருத்துக்கு ஏற்ப ஏற் கனவே தேர்ந்தெடுத்த இடத்தில், தலைமைப் பணியிட வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

உதகமண்டலம் நகருக்கு குடிநீர் வழங்கும் 'மர்லிமுண்ட்' நீர்த்தேக்கம்.

*வினா எண். 679—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) உதகமண்டலம் நகருக்கு குடிநீர் சப்ளை செய்து கொண்டிருக்கிற 'மர்லிமுண்ட் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் வற்றி நீர்த்தேக்கமே சிறிதாகி விட்டதால்தான் அங்கு குடிநீர் பஞ்சம் ஏற்பட்டுள்ளது உண்மையா?

எடுப்பதற்கும் இந்த அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறது. அதைப் பற்றி ஆராய்ந்து அப்படி நமக்கு வரி இழப்பு ஏற்படும் என்றால் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. வே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, லாரி சேசிஸ்களை இங்கே நிறுத்திக்கொண்டு பாண்டிச்சேரிக்கு போய் பில்லைப்போட்டுக்கொண்டு வந்து, இங்கே இருந்து வண்டியை எடுத்துக்கொண்டு போகிறார்கள். அங்கே ரோடுக்கு பணம் கட்டுவது என்று அங்கே கட்டிக் கொள்கிறார்கள். அந்த வருமானமும் போகிறது, இதற்கு அரசு ஏதாவது மறுபரிசீலனை செய்து இதைத் தடைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏமாற்றுகிறவர்கள் எப்போதும் நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். ஏமாற்றுகிறவர்களைப் பிடிப்பதற்கு அரசு தயாராகத் தான் இருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை என்ன செய்ய வேண்டுமோ அதை அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுவை மாநிலத்திலிருந்து லாரி, பஸ் சேசிஸ்களை வாங்கி வந்து தமிழ்நாட்டில் ரிஜிஸ்ட்ரேஷன் செய்கிறார்கள். இதற்கு முன்னால் சேசிஸ்களை நமது மாநிலத்தில் வாங்கி இங்கே ரிஜிஸ்ட்ரேஷன் செய்ய வேண்டும் என்ற ஒரு முறை இருந்தது. இப்போது பாண்டிச்சேரியில் வாங்கி வந்து தமிழ் நாட்டில் ரிஜிஸ்ட்ரேஷன் செய்கிற முறையை தடுப்பதற்கு, அரசு முன்வருமா ? அப்படி நடவடிக்கை எடுத்தால் நமது மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய வரிகள் முழுமையாக இங்கே கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இருக்கக்கூடிய சட்டப்படி இந்தியாவிலே எங்கே வேண்டுமானாலும் வாங்கலாம், ஆகவே அதை நம்முடைய மாநிலத்திற்கு கொண்டு வந்து 6 மாதம் கழித்தோ 3 மாதம் கழித்தோ புதுப்பித்துக்கொள்ளவேண்டும் என்ற சட்டம் இருக்கிறது. நமது மாநிலம் மட்டும் அதைத் திருத்தச் சட்டம் கொண்டு வரமுடியாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இரெ. ராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் லாரி சேசிஸ்களுக்கு புதுவையில் 6 சதவீதம் விற்பனை வரி என்றும், தமிழகத்தில் 15 சதவீதம்



விற்பனை வரி என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். பாண்டிச்சேரியை விட தமிழகத்தில் 2½ மடங்கு வரி அதிகமாக இருக்கிற காரணத்தால் அந்த வரியை ஓரளவுக்குக் குறைப்பதற்கு தமிழ் நாடு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக்கேள்விக்கு முதலிலேயே பதில் அளித்து இருக்கிறேன்.

## நெகமத்தை தனி தாலுக்காவாக்கும் திட்டம்.

* வினா எண். 613— திரு. கா. வே. கந்தசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தொகுதி நெகமத்தை தனி தாலுக்காவாக ஆக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தனி தாலுகாவிற்குரிய பணிகள் தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு கா. வே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது எப்போது தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் முடிவு எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொளகிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டங்களில் இருக்கின்ற வட்டங்களை அதிகமாக்கும் ஒரு முயற்சி இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி அது கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறது. நெகமம் போல கோவை தாலுக்காவையும் இரண்டாக பிரிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் விரும்பினார்கள். அதேபோல திருப்பூர் தனித் தாலுக்காவாக ஆக்கப்படும் என்று சொன்னார்கள். இவைகளை எல்லாம் அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். இது எப்போது நடைமுறைக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

சென்னை பெருநகர் குடிநீர் வாரிய ஊழியர்களுக்கான பயிற்சி நிலையம்.

*வினா எண். 680—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெருநகர் குடிநீர் வாரிய ஊழியர்களுக்கு பிரிட்டன் நிபுணர்கள் உதவியுடன் பயிற்சி நிலையம் துவக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) பயிற்சி காலம் எவ்வளவு?

(ஈ) எந்தவிதமான பயிற்சி அளிக்க உத்தேசம்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்

(ஆ) இங்கிலாந்தின் தேசிய நீர்குழு (National Water Council U.K), பயிற்சி மேலாளர் ஒருவரையும் மற்றும் சிறந்த வல்லுநர்கள் மூலமாகவும், பயிற்சி நிலையத்தை அமைக்க உதவுகிறது. பயிற்சிக்கு தேவையான இயந்திரங்களை இங்கிலாந்தின் வெளிநாட்டு வளர்ச்சிக்குழு ரூபாய் 8 இலட்சம் அளவில் அனுப்பிக் கொண்டிருக்கிறது. பயிற்சி நிலையத்திலுள்ள வகுப்பறைகள் இரசாயன. சோதனைக்கூடம், இயந்திர மின்சார தொழில் கூடங்கள் முதலியவற்றில் செய்முறையிலும், போதனை முறையிலும் வாரியத்திலுள்ள எல்லா நிலையிலும் உள்ள அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது, பயிற்சி நிலையம் மற்றும் அதற்குத் தேவையான நீர் ஆய்வுக் கூடத்திற்கான சாமான்கள் போன்றவற்றின் செலவு உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு அரசு கொடுத்துள்ளது.

(இ) பொதுவாக பயிற்சிகளின் காலம் ஒரு நாளிலிருந்து ஐந்து நாட்கள் வரையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

(ஈ) குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றல் ஆகியவைகளுக்கான பராமரிப்பு சுத்திகரிப்பு போன்ற துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.





(முற்பகல் 9—30)

திரு. பொ சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சியை பிரிட்டனிலிருந்து வந்திருக்கின்ற அந்த நிபுணர்கள் எத்தனை ஆண்டு காலத்திற்கு அளிக்க இருக்கிறார்கள்? இந்தப் பயிற்சியைப் பெருகின்ற அலுவலர்கள்? மொத்தம் எத்தனை! இதனால் வாரியத்திற்கும், அரசுக்கும் எவ்வளவு செலவாகும். என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி கொடுக்க வந்திருப்பவர்கள் வந்து போய் விடுவார்கள். இறுதியாக அவர்கள் இங்கே இருக்க மாட்டார்கள்.. இங்கிருந்து 9 பேர் அனுப்பப்பட்டு, பயிற்சி பெற்றவர்களாக வைத்திருக்கிறோம். இறுதியாக நம் நாட்டைச் சார்ந்தவர்கள் மூலம் பயிற்சி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். பிப்ரவரி 80 முதல் ஜீலை 82 வரை 1,290 நபர்கள் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறார்கள். வாரியத்தால், ஆட்சிக் குழு பயிற்சிநிலையத்திற்கு எல்லா கொள்கைகள் வகுக்கவும், பயிற்சி நிலையத்தின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையிலும் நியமிக்கப்பட்டுள்ளது. பயிற்சி நிலையத்திற்கான புதிய கட்டிடம் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. இந்த இடத்தில் இப்போது பயிற்சி நடந்து கொண்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு எவ்வளவு செலவாகும் என்று நான் ஏற்கெனவே கேட்டேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். இரண்டாவது, இந்தப் பயிற்சியால் நம்முடைய வாரிய அலுவலர்கள் பெறும் பயன் என்ன? வாரியத்திற்கும், நம்முடைய மாநிலத்திற்கும் இதனால் எந்தவிதமான லாபம் ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி பெறுவதால் அந்தத் தொழில் பற்றிய நுணுக்கம், திறமை பெறுகிறார்கள். 8 இலட்சம் மதிப்புள்ள பயிற்சிக்கான பொருள்களை பிரிட்டனால் வழங்கப்பட்டு வருகின்றது. பயிற்சி அளிக்கத் தேவையான இயந்திரங்களான தொலைக்காட்சி, புகைப்படக் கருவி, புரொஜெக்டர், துளைபோடும் கருவி, குழாய் வெட்டும் கருவி, சோதனை சாலை இயந்திரங்கள், கால்குலேட்டர், ஒலிபெருக்கி, நகலெடுக்கும் கருவி போன்ற இன்னும் பிற கருவிகளும் ரூ. 8 இலட்சம் மதிப்பீட்டில் பரிசுப் பொருள்களாக பிரிட்டனால் வழங்கப்பட இருக்கிறது. இது அன்னியில், அனைத்துலக நாடுகளின் வளர்ச்சிக்குழு,

[1983 ஏப்ரல் 7

(ஆ) பார்சன்ஸ் வாலி நீர்த்தேக்கத்திலிருந்து இரண்டாவது பைப்லைன் 4 கோடி செலவில் போடப்பட்டு வருவது பூர்த்தியாகி குடிநீர் சப்ளை எப்பொழுது ஆரம்பமாகும்.?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) பருவமழை தவறியதன் காரணமாக 'மர்லி முண்ட்' மற்றும் ஒன்பது நீர்த்தேக்கங்களில் நீர்மட்ட அளவு குறைந்துள்ளது. எனவே வழங்கப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இத் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, ஊட்டி நகரத்தில் அதிகமான அளவுக்கு ஜனங்கள் பல பகுதிகளிலிருந்து வந்து இருந்து சீஸன் டைம் இப்போது நடக்கிற காலத்திலேகூட தண்ணீர்ப் பஞ்சம் என்பது கடுமையாக இருக்கிறது. அங்கே மர்லி முண்ட் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் சப்ளையாகிக் கொண்டிருந்தது. அநேகமாக அந்தத் தேக்கமே வற்றிவிட்டது என்று சொல்லி, பார்சன் வேலித் திட்டம் என்ற முறையிலே 4 கோடி ரூபாய் செலவிலே நீண்டகாலமாக நிறைவேற்றப்படாமல் நின்றுகொண்டிருக்கிறதே, அதை உடனடியாக அமுலாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, நாள் ஒன்றுக்கு 9·092 மில்லியன் லிட்டர் குடிதண்ணீர் பார்சன்ஸ் வாலி பள்ளத்தாக்கு அணைக்கட்டிலிருந்து வழங்குவதற்கான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 457.44 இலட்சமாகும். இதை நிர்மாணிக்கவும் பராமரிக்கவும் ஒரு ஆண்டுக்கு ரூ. 29.2 8இலட்சமாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இன்னும் திட்ட அறிக்கை அரசுக்கு அனுப்பப்படவில்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து நிலைமை எவ்வளவு நெருக்கடியானது என்பது வெளியாகிறது. ஊட்டி நகரில், அதுவும் இப்போது ஸீஸன் டைம் வந்திருப்பதால் குடிநீர் பற்றாக்குறையினால் மோசமான நிலைமை ஏறுபடுவதைத் தடுப்பதற்கு எமர்ஜன்ஜி நடவடிக்கைகள் ஏதாவது எடுக்கப் போகிறார்களா? அதேபோல் இந்த பார்சன்ஸ் வாலி நீர்தேக்கத்தினால் அங்குள்ள குடிநீர் பிரச்சனை முழுவதும் தீர்ந்துவிடாது என்று சொல்கிறார்களே, எனவே இதோடுசேர்ந்து ஸ்டான்ட்-பையாக வேறு திட்டங்கள் ஏதாவது கொண்டுவர ஏற்பாடு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: டேவிஸ் பூங்கா மற்றும் பழைய ஊட்டிப் பகுதியில் உள்ள கிணறுகளிலிருந்து நீரேற்றம் செய்து புனிதமேரி குன்று, க்ளிஃப் ரோடு, மிஸனரப் குன்று பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் செய்யும் முயற்சியையும் நகராட்சி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. மு. அரங்கநாதன்: தலைவர் அவர்களே, உதகைக்குக் குடிநீர் தரக்கூடிய அந்த நீர்த்தேக்கம் முற்றிலும் வற்றி விட்டது. அதன் தொடர்பாக பல நீர்த் தேக்கங்களில் குடிநீர் இல்லாத சூழ்நிலையில் அங்குள்ள மக்களுக்கு உடனடியாக குடிநீர் வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியுள்ள மதிப்பீட்டு தொகை எவ்வளவு? இந்தநேரத்திலாவது அங்குள்ள மக்களுக்கு தண்ணீர் உடனடியாக கிடைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியுள்ள மதிப்பீட்டுத் தொகையை உடனடியாக அனுப்பித் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களின் கேள்விக்குப் பதில் சொல்லும்போது பார்சன்ஸ் வாலி நீர்த்தேக்கத்திலிருந்து 457.44 இலட்சம் ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அதற்கு மேலும் டேவிஸ் பூங்கா திட்டம் பற்றியும் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை மனதில் வைத்து இந்தத் திட்டங்களை மேலும் துரிதப்படுத்த வேண்டும் என்று நீங்கள் விரும்புகிற காரணத்தால் இதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் நேரில் பேசுவதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இப்போது கடும் வறட்சி இருப்பது இங்குள்ள எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். இந்த நேரத்தில் பார்சன்ஸ் வாலி திட்டத்தில் எவ்வளவு தண்ணீர் நாள் ஒன்றுக்கு அங்கே பம்ப் செய்யப்படுகிறது? அந்த முழு அளவுத் தண்ணீரும் உதகை நகர மக்களுக்கு செலவிடுவதற்காக அரசு வழிவகை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் முன்பே இதைப்பற்றிச் சொல்லிவிட்டேன். 9.092 மில்லியன் லிட்டர் குடிநீர் அந்த அணைக்கட்டிலிருந்து வழங்குவதற்கு திட்டம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறேன். இதைப்பற்றி மூன்று உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதிலிருந்து இதன் முக்கியத்துவம் தெரிகிறது. நான் இதைப்பற்றி கலெக்டரிடம் பேசுகிறேன்,

அதாவது இன்டர்நேஷனல் டெவலப்மென்ட் அசோசியேசன் இப் பயிற்சி நிலையத்தை அமைப்பதற்காக ரூ. 27.68 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

### செங்கல்பட்டு வேதாசலம் நகரில் அமைந்துள்ள குழந்தைகள் விளையாட்டுத் திடல்.

*வினா எண். 681—திரு. சி. கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) செங்கற்பட்டு வேதாசலம் நகரில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலம் அமைந்துள்ள குழந்தைகள் விளையாட்டுத் திடல் பயன் இல்லாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது பயன்படும் வகையில் செப்பனிட்டு தர கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) வேதாசலம் நகர், அழகேசன் சாலையிலிருக்கும் குழந்தைகளுக்கான பூங்காவினை குழந்தைகள் அல்லாதவர்களே பயன் படுத்த தலைப்பட்டதாலும், குடியிருப்புகள் சூழப் பட்டுள்ள இடமாக இருப்பதாலும், செங்கற்பட்டு கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் பூங்காவின் பராமரிப்பை கைவிடும் நிலை நேர்ந்தது என்றும் தற்பொழுது இச்சங்கம் இந்தப் பூங்காவில் தேவையான வசதிகளை செய்து தந்து பராமரிப்பதற்கு தயாராகவும், விருப்பமாகவும் உள்ளது என்றும் வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அரசுக்குத் தெரிவித்துள்ளார்.

திரு. சி. கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பூங்காவை பராமரிப்பது கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளது என்று அறிவித்தார்கள். இந்த நிலை இருந்தால், அங்குள்ள குழந்தைகளுக்கு ஏமாற்றம் ஏற்படுமென்பதால், வேறு எங்காவது அதை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூங்கா வேதாசலம் நகரின் ஓர் மையப் பகுதியில் சங்க அலுவலகத்திற்கு அருகாமையில் உள்ளது. ஆகவே, சுயக் கட்டுப்பாடில்லா வயது வந்த





இளைஞர்கள் நுழைவதற்கும், பூங்காவிலுள்ள பொருட்களுக்கு சேதம் விளைவிக்கவும் ஏதுவாக இருந்தது. சேதம் விளைவிக்கவும் செய்தார்கள். தட்டிக் கேட்ட காவல்காரரையும் அதட்டி உருட்டி மிரட்டி அடிக்க, உதைக்க வந்தனர். காவலரால் அவர்களைக் கட்டுபடுத்த முடியவில்லை. இது சங்கத்தின் அலுவலகப் பணிகளை பாதித்தது. அது மட்டுமல்லாமல், அமைதியை விரும்பும் குடும்பக்காரர்கள் குடியிருப்புகளால் சூழப்பட்டுள்ள ஒரு இடமாக இருந்ததாலும், பூங்காவை குழந்தைகள் அல்லாதவர்களே பயன்படுத்தத் தலைப்பட்டதாலும், அதன் பராமரிப்பை கைவிடும் நிலை நேர்ந்தது. இருப்பினும் சங்கம் தற்போது அந்தப் பூங்காவைப் பராமரிப்பதற்குத் தயாராகவும், விருப்பமாகவும் உள்ளது. தேவையான வசதிகளை செய்துதரவும் சம்மதித்திருக்கிறது.

திரு. சி. கணேசன் : பேரவைத் தலைவரவர்களே பூங்காவை வேறு இடத்தில் அமைக்க, சம்மதித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஏதாவது குறிப்பிட்ட இடம் அதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறதா. அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அந்த இடத்தை இப்போதே அறிவித்தால், அதிலே வேகமாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதற்காக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன் தற்போதுள்ள பூங்கா வேதாசல நகரின் மையப் பகுதியில் இருக்கிறது என்றும், அலுவலகத்திற்கு அருகாமையில் இருக்கிறது என்றும் சொன்னேன். மேற்கண்ட இடத்தைத் தவிர, சங்கம் செங்கற்பட்டில், அண்ணா நகர் என்னும் இடத்தில் 48 சென்ட் நிலத்தை பூங்காவிற்காகவும், அதன் வளர்ச்சிக்காவும் ஒதுக்கி உள்ளது. சங்கம் தற்போது, சாலை அமைத்தல், கழிவு நீர் வடிகால் அமைத்தல், மதகுகள் கட்டுதல் போன்ற முக்கிய பணிகளில் ஈடுபட்டு, அவைகளைச் சீக்கிரத்தில் முடிக்க உள்ளது, முடிந்தபிறகு சாலைகள் சாக்கடைகள் சீர்படுத்துதல், மின்விளக்குகள், கழிவு நீர் வடிகால், மதகுகள், மற்றும் பூங்காக்களையும், பராமரிக்கின்ற பணிக்காக நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட உள்ளது.

மேலும், புதிய பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம், வேதாசலம் நகரில் உள்ள இடத்தை விட பெரிய அளவில் உள்ளதாலும், குடியிருப்புகள் அதை விட சற்றுத் தொலைவில் உள்ளதாலும், குடியிருப்புகளுக்கு இடையூறுகள், பூங்காவிற்கு

வருபவர்களால் ஏற்படுவது குறைவாகவே இருக்கும். ஆகவே அந்த அண்ணா நகர் பூங்காவை பெரிய பூங்காவாகவும் சிறப்பான பூங்காவாகவும் வளரச் செய்யமுடியும்.

## 1981–82ம் ஆண்டில் சிறு சேமிப்புத் திட்டத்தின் இலக்கினை எய்திய மாவட்டங்கள்.

*வினா எண் 674—திரு. செ. செம்மலை: மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981–82-ம் ஆண்டில் சிறு சேமிப்பு திட்டத்தின் இலக்கினை எய்திய மாவட்டங்கள் யாவை?

(ஆ) இத்திட்டத்தை தீவிரப்படுத்த அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை * தனியே வைக்கப் பெற்றுள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்பு திட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு குறியீட்டை நிர்ணயித்து, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் குறிப்பிட்ட தொகையை வசூல் செய்ய வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்துவதால் அதிகாரிகளும், அந்த முறையை நிறைவேற்றுவதற்காக ஒரு குறிப்பிட்ட நபர்களிடத்திலே வந்து வசூல் செய்து விடுகிற நிலைமைதான் இருக்கிறது. அந்த நிலையை மாற்றி அந்த திட்டத்தை, மக்கள் இயக்கமாக, மக்கள் விரும்பி சேமிக்கத் தக்க அளவில் அந்த திட்டத்தை நடைமுறைபடுத்த, ஏதேனும் சிறப்புத் திட்டத்தை அரசு பரிசீலித்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்பு திட்டத்தைப் பொறுத்தவரையில் யாரும் யாரையும் வற்புறுத்தி, கட்டாயப் படுத்தி வசூலிக்கக்கூடாது என்ற முறையிலேதான் அகில இந்திய அளவிலேயும்சரி, மாநில அளவிலேயும் சரி செய்யப் பட்டு வருகிறது. ஆனாலும் கூட, கேட்காமல் யாரும் தர மாட்டார்கள். தூண்டுதல் தராமல் யாரும்தர மாட்டார்கள்.

---

* 928–929ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது





ஆகவே, ஆங்காங்கே பல்வேறு இடங்களில் இத் திட்டத்தைக் குறித்து அரசு விளம்பரம் செய்து வருகிறது. இதற்கென 3 மாவட்டங்களைத் தவிர, பல்வேறு மாவட்டங்களில் ஊர்திகள் வழங்கப்பட்டு, ஆங்காங்குள்ள மக்களுக்கு இதனுடைய பலன்கள் எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. அது மட்டும் அல்லாமல், பல்வேறு இடங்களிலே இதிலே போடப் படுகிற பணத்திற்கு, வங்கிகளிலே போடப்படுகிற பணத்தை விட, கூடுதலாக வட்டித் தொகை தருகிற அளவுக்கு சிறு சேமிப்பு திட்டத்தில் முன்னேற்றம் வந்திருக்கிறது.

ஐந்து ஆண்டு காலத்திற்கு சிறு சேமிப்பு நிதியில் வைப்பு நிதியாக வைப்பார்களேயானால் 10.5 சதவீதம் வட்டி என்பது– –அண்மையில் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையிலே மைய அரசின் நிதியமைச்சர் வெளியிட்டிருக்கிறபடி 11½ சதவீதமாக வட்டித்தொகை, இந்த வைப்புத் தொகைகளுக்கு கிடைக்கும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல், சிறு சேமிப்பு திட்டம் போன்றவைகளில் அதிகமான அளவுக்கு பாதுகாப்பு பலன்கள் கிடைக்கின்ற சூழ்நிலையும் ஏற்பட்டு வருகிறது. அதிலே போடப்படுகிற சில பல வகைகளுக்கு இன்கம்டாக்ஸ்—வருமானவரியில்கூட சில வகைகளுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதிலே இருக்கிற வாய்ப்பு வசதிகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும் என்று ஆங்காங்கு இருக்கிற சிறு சேமிப்பு திட்டங்களில் ஈடுபட்டிருக்கக்கூடிய அலுவலர்களும் அதிகாரிகளும் பிரச்சாரங்கள் மூலமாக, நாடகங்கள் மூலமாக கலை நிகழ்ச்சிகள் மூலமாக எடுத்துச் சொல்லி வருகிறார்கள். மக்களுக்கு அந்த சேமிப்பு உணர்வு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக 1982 ஆம் ஆண்டிலே மட்டும் 100 நாடகங்கள் நடத்த அனுமதிக்கப் பட்டிருக்கிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலக்கு நிர்ணயிக்கப்பட்டதை விட கூடுதலாக வசூல் செய்த 3 மாவட்டங்களுக்கு ஊக்கத் தொகை அளிக்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு தமிழக அரசின் ஊக்கத் தொகையைப் பெற்ற அந்த 3 மாவட்டங்கள் எவை எவை என்ற விவரங்களையும் சிறு சேமிப்பு திட்டத்தைப் பொறுத்தவரையில், கூடுதலாக வசூல் செய்யப்படுகிறபோது, தமிழக அரசுக்கு மைய அரசு ஏதாவது ஊக்கத் தொகை வழங்கியுள்ளார்களா என்றும் தயவுசெய்து அறிய விரும்புகிறேன்.

[1983 ஏப்ரல் 7

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள, 1981-82 ஆம் ஆண்டு குறியிட்ட இலக்கை விட அதிகமான அளவுக்கு சிறு சேமிப்பு தொகையை வசூலித்த மாவட்டங்கள் மொத்தம் 10 மாவட்டங்களாகும். இந்த 10 மாவட்டங்களில் மாநில அளவில் பரிசு பெற்ற அந்த 3 மாவட்டங்கள் எவை எவை என்பதற்கான விவர குறிப்புகள் இல்லை. ஆனால் இந்த 10 மாவட்டங்களில் 1 கோடி ரூபாய்க்கு மேல் இலக்கு விதிக்கப்பட்டு அதற்கு மேல் கூடுதலாக தொகையை வசூல் செய்ததற்காக 50 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையாகத் தரப்படுகிறது. ஒரு கோடி ரூபாய்க்கு கீழே இலக்குத் தொகை விதிக்கப்பட்டு. அந்தத் தொகையைவிட அதிகமான தொகையை வசூல் செய்து தருகிற மாவட்டங்களுக்கு 25,000 ரூபாய் தரப்படுகிறது. அதைத்தவிர, மாநில அளவிலே அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குத் தொகையை வசூல் செய்து தந்திருக்கிற மாவட்டங்களுக்கு, அதைவிட கூடுதலான அளவுக்கு செய்த கணக்கினைப் பார்த்து, அதில் முதல் 3 மாவட்டங்களுக்கு அளிக்கப்படுகின்றன.

(முற்பகல் 9-40)

முதலாவதாக வருகிற மாவட்டத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், இரண்டாவதாக வருகிற மாவட்டத்திற்கு 75 ஆயிரம் ரூபாயும், மூன்றாவதாக வருகிற மாவட்டத்திற்கு 50 ஆயிரம் ரூபாயும் தரப்படுகிறது. சிறுசேமிப்புத் திட்டத்தைப் பொறுத்த வரையில் எவ்வளவு வசூலித்துத் தருகிறோமோ அதிலே மூன்றிலே இரண்டு பகுதியை மாநில அரசிற்கு மத்திய அரசு தருகிறது. ஒரு பகுதியை மத்திய அரசு வைத்துக்கொள்கிறது. ஆகவே குறைந்த வட்டியிலே நீண்டகால கடன் தொகையாக தருவது வளர்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுவதற்கு பயன்படுகிற அளவிலே இவைகள் அமைகின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறு சேமிப்புத் திட்டத்தில் மக்களை ஈடுபடுத்துவது நல்லது தான். ஆனால் அரசாங்கம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு ஒரு இலக்கினை ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயிக்கிறார்கள். ஆணையாளர்கள் பொதுமக்களைச் சந்தித்து இந்த நிதியைச் சேர்ப்பதை விட்டுவிட்டு, தனி அதிகாரிகளாக இருக்கிற காரணத்தால் ஊராட்சி மன்றத்தினுடைய நிதியை எடுத்து இந்த சிறு சேமிப்புத் திட்டத்தில் போட்டுவிடுகிறார்கள் ; இதுபோன்று ஊராட்சி ஒன்றிய நிதியை போடக்கூடாது ; பொதுமக்களிடமிருந்து தான் வசூலிக்க வேண்டும் என்று அரசாங்கம் உடனடியாக ஆணை பிறப்பிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்,



1983 ஏப்ரல் 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பொதுமக்கள், மற்ற நிறுவனங்கள், மற்ற அமைப்புகள் ஆகியவைகளிடமிருந்து மிச்சப்படுகிற நிதியை சிறு சேமிப்பாக போடவேண்டுமென்பதுதான் இதன் நோக்கம். ஊராட்சி மன்றங்களுக்கென்று தேவையான செலவு இருந்து அவசியமான செலவுகள் இருந்து, அந்த அவசியமான செலவுகள் செய்யப்படாமல் சிறுசேமிப்புக்கு மாற்றிவிடப்பட்டால் அது தவறாகமுடியும். ஆனால், அவசியமான செலவுகளைச் செய்து சில பலஊராட்சி மன்றங்கள் சர்ப்ளஸ்ஸாக வைத்து இருக்கிற நிதியை தான் இப்படிப்பட்ட வகைகளுக்குத் திருப்பிவிடுகின்றன. அப்படி ஏதாவது தனிப்பட்ட வகையிலே சிலபல ஊராட்சி மன்றங்களை கவனத்திற்கு கொண்டுவந்தால் அவைகளை எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று வேண்டுமானால் அரசு அறிவுரை கூறலாம்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சிறு சேமிப்பை சேர்ப்பதற்காக தனி நபர்களை அரசு ஏஜெண்டுகளாக நியமித்து இருக்கிறதா ? அப்படியென்றால் எந்த அடிப்படையில் தனிநபர்களை ஏஜெண்டுகளாக அரசு நியமித்திருக்கிறது ? அவர்களால் என்ன பலன் கிட்டியது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனி நபர்கள் ஏஜெண்டுகளாக ஆங்காங்கு அமைந்திருக்கிறார்கள். ஆடவர்களும் அமைந்திருக்கிறார்கள்; மகளிரும் அமைந்திருக்கிறார்கள். அது குறித்து அவர்களுக்கு விதிக்கப்படுகிற நிபந்தனைகள், விதிகள் என்னிடத்தில் இல்லை. அவர்களால் வசூலிக்கப்படுகிற தொகைக்கு ஒரு சதவீத விழுக்காடு அவர்களுக்கு ஊக்கத் தொகையாகத் தரப்படுகிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த சிறுசேமிப்புத் திட்டத்தில் பணம் போடுகிறார்கள். பணம் படைத்தவர்களுக்கு வரிச்சலுகை கூடக் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் போடுவது நல்லது. அவர்கள் எவ்வளவு போடுகிறார்களோ போடட்டும். ஆனால் சாதாரண மக்களிடமிருந்து வசூலிப்பதற்கு வருவாய்த்துறை, முனிசிபாலிட்டி, கார்ப்பரேஷன் போன்ற துறைகளிலிருக்கிற அதிகாரிகள் ஓரளவிற்கு நிர்ப்பந்தம் செய்து வசூலிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை வராமல், இந்தமாதிரியான புகார்கள் இல்லாமல், நிர்ப்பந்தம் இல்லாமல் காரியங்களை ஆற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி இதிலே நிர்ப்பந்தம் கூடாது ; யாரையும் கட்டாயப்படுத்தக்கூடாது என்று தான் சொல்லியிருக்கிறோம். ஆனாலும் கூட அதிகாரிகள், அலுவலர்கள், மற்றவர்கள் தனிப்பட்ட தன்மையில் இல்லாமல் அரசிற்கு பயன்படுகிற ஒன்றாகவும், அரசினுடைய நிதியாதாரங்களைப் பெருக்கி அதன்மூலம் வளர்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுவதன் காரணமாக அதிகாரிகள், அலுவலர்கள் இதிலே ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஆனால் கட்டாயப்படுத்தக் கூடாது. நிர்ப்பந்தம் என்பது கூடாது என்றுதான் சொல்கிறோம். ஆனால் அவரவர்களுக்கு விதிக்கப்படுகிற இலக்கை எப்படியாவது அடையவேண்டுமென்று சிலபல இடங்களில் அவர்கள் வற்புறுத்தி கேட்கவும் கூடும். ஆனால் அப்படிப்பட்ட இடங்களில் கொடுக்கிறவர்கள் கொஞ்சம் தைரியமாக இருந்து அவர்களுடைய வற்புறுத்தலுக்கு இணங்காமல் இருக்கவும் வேண்டும். இவர்களும் வற்புறுத்தாமல் இருக்க வேண்டும். அந்த முறையைக் கையாண்டால் தான் நல்லது.

## சிறு சேமிப்பு மையங்கள் திறக்கப்பட்டுள்ள கல்லூரிகள் மற்றும் பள்ளிகள்.

* **வினா எண். 675—திரு. எஸ். இராமாராமன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிறு சேமிப்பு மையங்கள் மாநிலம் முழுவதும் எத்தனை கல்லூரிகள், பள்ளிகளில் திறக்கப்பட்டு உள்ளன ?

(ஆ) இதன்மூலம் சேர்ந்த தொகை எவ்வளவு ?

(இ) இதில் சேர்ந்த தொகை என்னென்ன திட்டங்களுக்கு செலவழிக்கப்படுகிறது.?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம் மாநிலத்தில் 4464 பள்ளிகளில் இயங்குகின்றன. கல்லூரிகளில் இந்த திட்டம் இன்னும் மைய அரசு அறிமுகப்படுத்தவில்லை.

(ஆ) டிசம்பர் 1982 வரை இத்திட்டத்தில் ரூ.45,27,384 வசூல் செய்யப்பட்டது.

(இ) இத் திட்டத்தில் சேர்ந்த தொகையை அஞ்சலகத்தில் முதலிடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் சேமிக்கப்படும் நிகரவசூலில் மூன்றில் இரண்டு பங்கு நீண்ட காலக் கடனாக மைய அரசால் திட்ட உதவியாக



மாநில அரசுக்குக் கொடுக்கப்படுகின்றன. அவ்வாறு நீண்ட காலக் கடனாகப் பெறும் பணத்தை மாநில அரசு வளர்ச்சித் திட்டங்களுக்கு உபயோகப்படுத்துகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் இளமையிலேயே மாணவர்களுக்குச் சிறு சேமிப்புப் பழக்கத்தை உண்டுபண்ணுகிற அளவில் அரசு இத்திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால், வசதியான மாணவர்கள்தான் தங்களுடைய தகப்பனார் தாயார் 5 பைசா, 10 பைசா கொடுப்பதைச் சேமித்து வைக்கிறார்கள். ஏழை, எளிய மாணவர்களுக்குச் சேமித்து வைக்கிற வாய்ப்பு இல்லாமல் போகிறது. ஆகவே, அரசாங்கமே தினசரி 5, 10 பைசா, சேமிக்கமுடியாத நிலையிலுள்ள அந்த ஏழை, எளிய மாணவர்களுக்குக் கொடுத்து, இளமையிலேயே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஏழை மாணவர்களுக்கு 5 பைசா நாங்கள் கொடுத்து திருப்பி வாங்குவதை விட நாங்கள் கொடுக்காமலே நாங்களே வைத்துக்கொள்ளலாம். அப்படிப்பட்ட ஏழை மாணவர்களுக்குக் கொடுக்க ஆரம்பித்து விட்டால் அவர்கள் எல்லாம் தாமரைக்கனி மாதிரி ஆகி விடுவார்களோ என்று அஞ்ச வேண்டியிருக்கிற காரணத்தினாலே அந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கில்லை.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பள்ளிகளிலே சிறுசேமிப்புத் திட்டம் மாணவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறோம். அதன் மூலம் இவ்வளவு வருமானம் வருகிறது என்று கூறினார்கள். பள்ளிகளிலே, இரண்டு மூன்று வயது மாணவர்களிடம், அவர்கள் வைத்திருக்கின்ற 10 பைசா, 20 பைசாவை வாங்குகிறார்கள். பாதியிலே படிப்பை நிறுத்தி விடுகின்ற அந்த மாணவர்கள், நோட்டுகளைத் தொலைத்து விடுகிறார்கள். அதனால் திருப்பிப் பெறமுடியாமல் போய் விடுகிறது. அதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது ? அந்த மாணவர்கள் திருப்பிப் பெறுவதற்கு அரசு உத்தரவாதம் அளிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்கள் செலுத்துகின்ற சிறு சேமிப்புக் கணக்குகளெல்லாம் அந்தந்தப் பள்ளிகளிலே செம்மையாக வைக்கப்படுகின்றன. எக்காரணம்

கொண்டும் அது திருப்பி அளிக்கப்பட வேண்டும். அளிக்கப் படாத சூழ்நிலை எங்காவது இருக்குமானால், அது கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால், காரணத்தைக் கண்டறிந்து அந்த ஆதாரத்தின் அடிப்படையில் அவர்களுக்குத் திருப்பி அளிப்பதற் கான முயற்சிகளை நாம் செய்யலாம். மாணவர்களைப் பொறுத்தவரையிலே ஓராண்டுக் காலம் வைத்து, பிறகு அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்றுதான் வைக்கப்பட்டிருக் கிறது. ஏனென்றால் மாணவர்கள் ஆண்டுக்காண்டு சில பேர்கள் இருப்பார்கள். ஓராண்டு முடிந்த பிறகு சிலபேர் படிப்பை நிறுத்தி விடவும் கூடும். மேல் படிப்பு போகவும் கூடும். ஆனால், அந்த வகையில் எங்காவது கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்படுமானால், அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால், அதுபற்றி விசாரித்து தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில வங்கிகளில் பொம்மைகள் கொடுத்து, சேமித்து வைப்பது போல், பள்ளி, கல்லூரிகளில் கவர்ச்சிகரமான பொம்மைகளைக் கொடுத்து, அந்தச் சேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முயற்சிகள் பல இடங்களிலே கையாளப்பட்டு வருகின்றன. இது நல்ல தொரு யோசனை. அதை அரசு பரிசீலிக்கும்.

சென்னை- தூத்துக்குடி இரட்டை வழி அகல இருப்புப் பாதை.

*வினா எண். 619—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை முதல் தூத்துக்குடி வரை இரயில்வே இரட்டை வழி அகல இருப்புப்பாதை அமைப்பது சம்பந்தமாக மத்திய அரசுக்கு தமிழக அரசு சிபாரிசு செய்திருக்கிறதா ?

(ஆ) ஆமெனில் மத்திய அரசு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : (அ) சட்டமன்ற உறுப்பினரது கோரிக்கையைப் பரிசீலித்து தேவையென்றால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.





திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர் களே, சென்னை தூத்துக்குடி வரை இப்பொழுதுள்ள மீட்டர் காஜ் பாதை ஒருவழித் தடமாக இருக்கிறது. அதை இரட்டை வழிப் பாதையாக மாற்ற வேண்டுமென்று மத்திய அரசுக்கு இந்த அரசு எழுதியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : : தலைவர் அவர்களே, அப்படி எழுதியுள்ளதாக எந்தக் குறிப்பும் இங்கே இல்லை. நான் அதனால்தான் ஏற்கனவே அதைமிக ஜாக்கிரதையாகச் சொல்லி யிருக்கிறேன், சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கையைப் பரி சீலித்து—மீட்டர் காஜ் இரட்டை வழிப் பாதையாக இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். எப்படியிருந்தாலும் அதைப் பற்றி எழுதியதாகத் தெரியவில்லை. எனவே—மேற்கொண்டு நட வடிக்கை எடுக்கப்படும் என்று.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலிலே பதில் சொல்கின்ற நேரத்திலே அதுமாதிரி எழுதவில்லை. தேவையா னால் பரிசீலிக்கப்படும் என்று சொன்னதாக எனக்கு நினைவில் இருக்கிறது. இந்தச் சென்னை—தூத்துக்குடி அகல ரெயில் பாதை நீண்ட நாட்களாக வற்புறுத்தி வருகின்ற ஒரு நியாயமான தேவையாகும். தென் மாவட்டங்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கும் இன்னும் போக்குவரத்து வளர்ச்சிக்கும், இன்னும் வணிக வளர்ச்சிக்கும் அது மிக அவசியம் என்று பல்வேறு கால கட்டங்களிலே நாமே உணர்ந்திருக்கிறோம். இதை எடுத்துச் சொல்வதிலோ, அல்லது வேறுபல நியாயமான முயற்சிகளைக் கையாள்வதிலோ, ஏன் அரசாங்கம் பரிசீலனை செய்யலாம் என்ற நிலையிலேயே இருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே, 6, 7, பிரச்சினைகள் சம்பந்தமாக மத்திய அரசுக்கு எழுதி, ஏதோ இப்பொழுதுதான் மெதுவாக ஒன்று வந்து சேர்ந்திருக்கிறது. மீதம் அப்படியே நிலுவையிலே இருக்கிறது. எனவே, இதை நாம் பரிசீலித்து அனுப்பிய உட னேயே அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று சொன்னால், உடனடியாக அனுப்பி விடலாம்.

(முற்பகல் 9—50)

ஏற்கனவே இருக்கின்ற அந்த ஐந்தும் இதைவிட முக்கிய மானவை. ஆகவேதான் முதலில் அவைகளை எடுத்துக்கொண்டி ருக்கிறோம். அவைகளுக்கே இன்னும் அனுமதி கிடைக்கவில்லை.

அந்த வகையில் இதையும் சேர்த்து வேண்டுமானால் எழுதலாம். மத்திய அரசாங்கம் நீங்கள் சொல்லுகின்ற வேகத்தில் செயல்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய ஆசையும்கூட,

திரு. இ. கணேசன் : பேரவைத் தலைவரவர்களே, மேட் டூர் அனல் மின் திட்டம்—விரிவாக்கத் திட்டம் இருப்பதால் சேலம்-மேட்டூர் இரட்டை வழி அகல இருப்புப் பாதை அமைக் கின்ற யோசனை மத்திய அரசுக்கு அனுப்பப்படுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, தேவையைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கலாம்,

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, சென்னை- தூத் துக்குடி அகல இரயில்பாதை என்பது மிகவும் அவசியமானது; தூத்துக்குடியில் இப்போழுது போர்ட் டிரஸ்ட் உருவாக்கப்பட்ட பிறகு போக்குவரத்திற்கு மிகவும் அவசியமாக இருக்கக் கூடியது; வட நாட்டோடு சுருக்கமான வழியில் தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்ய வழி உண்டு. சமீபத்தில் 70 கோடி ரூபாய்களை மத்திய அரசாங்கம் அனுமதித்திருப்பதாகப் பத்தி ரிகையில் பார்த்ததாக எனக்கு ஞாபகம். எனவே, அது தொடர்பாக இன்னும் விரிவாக, வேகமாக இந்த அகல இரயில் பாதையை அமைப்பதற்கு அரசின் நடவடிக்கை என்ன என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொல்லியபடி, நாம் முன்பே ஆறு ஏழு தடங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவர் கள் பகுதி பகுதியாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். தனியாக ஒவ்வொரு பகுதிக்கும் எழுத வேண்டியிருக்கிறது. ஏற்கனவே நிலுவையில் இருக்கின்றன. அதோடு சேர்த்து இதையும் வைக்கலாம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர் களே, இந்த இரயில் பாதையின் முக்கியத்துவத்தைப் பற்றி மற்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். எனவே, நான் அதற்குள் போகவில்லை. போதுமான அளவிற்கு, அதிகமான அளவிற்குப் பணத்தை ஒதுக்காததன் காரணமாக காலம் கடந்து கொண்டே போகிறது. எனவே, அதிக அளவிற்குப் பணத்தை ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை மாநில அர சாங்கம் மீண்டும் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஏற் கனவே வற்புறுத்திக்கொண்டே வந்து கொண்டிருக்கிறோம். ஓரளவுக்குப் பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். அதுவே நமக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. வேலையைத் தொடங்கினாலே போதும், பணத்தை ஒதுக்குவார்கள் என்ற நம்பிக்கையில் இருக்கி றோம். தேவையான நேரத்தில் நிச்சயமாக வலியுறுத்துவதற்கு இந்த அரசு தயாராக இருக்கும்,

**1980-81, 1981-82, ஆம் ஆண்டுகளில் அரசுடமை ஆக்கப்பட்ட வழித்தடங்கள்.**

*வினா எண். 620—திரு. திரு. என். எஸ். வி.சித்தன் : மாண்பு மிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1980—81, 1981—82 ஆம் ஆண்டுகளில் அரசுடமை ஆக்கப்பட்ட வழித்தடங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தமிழகத்தில் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 1980-81 ஆம் ஆண்டில் 382 வழித்தடங்களிலும் 1981—82ஆம் ஆண் டில் 440 வழித்தடங்களிலும் பேருந்து விடத் தற்கால உரி கள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை கிலோ மீட்டர் தூரம் ஓடுகின்ற பேருந்துகளை நாட்டுடைமையாக்குவதற்கு அரசு முடிவு செய் திருக்கிறது? மாண்புமிகு அமைச்சரவர்கள் 382 வழித்தடங்கள் என்றும், 440 வழித்தடங்கள் என்றும் சொன்னார்கள். அவை களில் எத்தனை வழித்தடங்கள் இலாபகரமாக இயங்குகின்றன என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இது சம்பந்தமான வழக்கு உச்ச நீதி மன்றத்தில் இருக்கிறது. எனவே, அது வந்த பிறகு தான் அதன் மீது முடிவெடுக்க முடியும். இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கின்ற வழித்தடங்களில் எது எது இலாபகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது அல்லது நஷ்டமாக ஓடிக் கொண்டிருக்கிறது என்ற விவரங்கள் இப்பொழுது என் னிடத்தில் இல்லை. ஆனால், நாம் இவைகளைக் கொடுத் திருப்பதன் மூலம் இந்த வழித்தடங்கள் மறைமுகமாகத் தேசிய மய்மாக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் சொல்ல முடியும். மற்றபடி இலாப நஷ்டம் என்பதைப் பொறுத்த விளக்கம், அதற் கான குறிப்பு இப்பொழுது என்னிடத்திலே இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, தனியார் பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்த வழித்தடங்கள் அரசுடைமை யாக்கப்பட்ட பின்பு எல்லா வழித்தடங்களிலும் நமது அரசுப் பேருந்துகள் விடப்பட்டுள்ளனவா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே தனியாருக்குச் சொந்தமான பேருந்துகளை நாம் தேசியமய மாக்கினாலும், அதிலே பேருந்துகள் ஓடிக் கொண்டேயிருக்கும். புதிதாக மீண்டும் விட வேண்டுமானால் தேவைக்கேற்ப நாம் நடவடிக்கை எடுத்துக்.கொண்டே இருக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே கேட்டேன், எத்தனை கிலோ மீட்டர் தூரத்திற்கும் மேலே ஓடும் பேருந்துகளை தேசிய மயமாக்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்று. இத்தனை கிலோ மீட்டர் தூரத்திற்கும் மேலே ஓடு கின்ற எல்லாப் பேருந்துகளையும் அரசுடைமையாக்குவதற் கான திட்டம் இருப்பதாக எனக்குக் கிடைத்த தகவல் தெரி விக்கிறது. அவைகள் இலாபகரமாக உள்ள இடத்தில் இருப்ப தால் தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே' நான் ஏற்கனவே சொன்னேன். உச்ச நீதி மன்றத்தில் இந்த வழக்கு முடியாமல் இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது, தனியாரிடத்தில் இருப்பதைத் தேசிய மயமாக்குவது என்ற நிலைமையே இல்லை. உச்ச நீதி மன்றத்தில் வழக்கு முடிந்த பிறகு தான், நாம் சொல்லியிருப்பது நியாயமா அல்லது அவர்கள் சொல்வது நியாயமா என்ற முடிவுக்கு வந்த பிறகு தான் நட வடிக்கை எடுக்க முடியும் என்பதை நான் ஏற்கனவே சொன் னேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லுகின்ற பொழுது தேசியமய மாக்குவது குறித்து உச்ச நீதி மன்றத்தில் வழக்கு இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி வழக்கு இருந்தாலும் கூட அந்தச் வழித்தடங்களுக்கு ஆண்டு தோறும் அவர்களுக்கு எக்ஸ்பைரி ஆகின்ற தேதியிலிருந்து ரெழன்யூவல் செய்யாமல் அரசு எடுத்துக் கொள்வதற்கு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கிற சட்டப்படி நாம் அப்படிச் செய்ய முடியாது. ஆனால் புதிதாக கொடுக்கின்ற வழித்



தடங்கள் அத்தனையும் அரசாங்கத்திற்கு வர வேண்டுமென்ற அடிப்படையிலே தான் தனியாருக்குக் கொடுக்காமல் ஒரு வித மான நேசனலைசேசன் என்ற அடிப்படையிலே நாம் அர சாங்கப் போக்குவரத்துக் கழகங்களுக்கு மட்டும் கொடுத்து இருக் கிறோம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : : பேரவைத் தலவைர் அவர்களே, நாட்டுடைமையாக்கப்படுவதிலே எத்தனையோ சிரமங்கள் இருந் தாலும் கூட, தனியார் பேருந்துகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு எந்த விதமான பாதுகாப்பும், போதுமான ஊதியமும் இன்று இந்த மோட்டார் நிறுவனங்களில் கொடுக்கப் படவில்லை என்ற காரணத்தினால், நேசனலைசேசன் இம்ப்ளி மென்ட் பண்ணுவதற்கு காலதாமதம் ஏற்படுமானால், டிரான்ஸ் போர்ட் கமிஷனர் வழியாக அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை உத்தரவாதமும், ஒழுங்காக ஊதியம் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் நலன் மானியம்வர இருக்கின்றது. அதிலே நீங்கள் சொல்வீர்களானால், தகுந்த நடவடிக்கை எடுப் பார்கள்.

### ஐயன்பேட்டை — காஞ்சிபுரம் இடையே நகரப் பேருந்து விடுவதற்கான கோரிக்கை.

*வினா எண். 621—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்பு மிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐயன்பேட்டை—காஞ்சீபுரம் அரசு நகரப் பேருந்து வேண்டுமென கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) : ஐயன்பேட்டை முதல் காஞ்சீபுரம் வரை நகரப்பேருந்து விட வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் திரு. ப. வெங்கட சுப்பிரமணியம் அவர்கள் விடுத்துள் ளார்கள். இக்கோரிக்கையை பல்லவன் போக்குவரத்துக் கழகத் துடன் கலந்தாலோசித்துப் பரிசீலிக்கப்பட்டது. மேற்படி வழித் தடத்தில் ஏற்கனவே போதுமான அளவு அரசுப் பேருந்துகள் ஓடிக் கொண்டுள்ளன எனவும் எனவே புதிதாக வேறு பேருந்துகள் விடத் தேவையில்லை எனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

[1983 ஏப்ரல் 7

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆயிரம் மக்கள் வாழ்கின்ற அந்தக் கிராமத்தில், காஞ்சீபுரம் நகரத்திற்குச் செல்ல எந்தவிதமான பேருந்து வசதியும் இல்லை. செங்கற்பட்டு நெடுஞ்சாலையிலே இருந்தாலும், அந்த நெடுஞ்சாலையிலே போகின்ற அந்தப் பேருந்துகள் அந்தப் பகுதியிலே நிற்பதில்லை. எனவே அந்தப் பகுதி மக்களுடைய நிலையினைக் கருதி அருள் கூர்ந்து பேருந்து விட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஐயன்பேட்டையிலேயிருந்து காஞ்சீபுரம் 8 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதாக எனக்குக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள், இதிலே புறநகர்ப் பேருந்து 76 முறையும், நகரப் பேருந்து 74 முறையும் போகிறது. ஒரு வேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் புறநகர்ப் பேருந்து அங்கே நிற்கவில்லை என்றாலும், நகரப் பேருந்துகள் நிற்காமல் போவதற்கான வாய்ப்பில்லை. இருந்தாலும் மீண்டும் உங்களுடைய கோரிக்கையைப் பார்த்து, பரிசீலித்து தேவை இருந்தால் மட்டும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியிலே நகரப் பேருந்து ஏதும் செல்லவில்லை. எனவே அருள் கூர்ந்து அமைச்சர் அவர்கள் நகரப் பேருந்து விட ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழித்தடத்திலே நகரப் பேருந்து போவதாகவும், அந்தப் பகுதியைத் தொட்டுச் செல்வதாகவும் தான் எனக்குக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அங்கே நகரப் பேருந்து இல்லை என்று சொல்லுகிறார்கள். அதைப் பார்த்து, இல்லாமல் இருக்குமானால் நிச்சயமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. காவல் கோரல்.

### (அ) உறுப்பினர் திரு. வே. இராஜசேகரன் கைது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, சற்று முன்னால் ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. நடிகர் திலகம் சிவாஜி ரசிகர் மன்ற உறுப்பினர்களும், நம்முடைய மன்ற உறுப்பினர் ராஜசேகரன் அவர்களும் இன்றைக்கு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று எங்களுடைய கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். எனவே இது சம்பந்தமாக விவரங்கள் வந்திருக்கிறதா ? பல்வேறு பிரச்சினைகளின் அடிப்படையிலே இன்றைக்கு அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதாக இருந்தது. தங்களுக்கு அது பற்றி ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ? அதைத் தாங்கள் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றி எந்த விதமான தகவலும் இதுவரையில் வரவில்லை. வந்தவுடன் சபைக்கு அறிவிக்கிறேன்.

### (ஆ) நாளேடுகளின் செய்திகள்.

திரு. பு. நெடுமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே* இந்தச் சபையின் பெருமையையும், அவைத் தலைவராக உள்ள உங்களின் பெருமையையும் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. நேற்றைய தினம் டெல்லி பாராளுமன்றத்திலே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கும், திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர்களுக்கும் வாய்த்தகராறு வந்த போது, இது தமிழ்நாடு சட்டசபையல்ல என்று பாராளுமன்ற சபாநாயகர் அவர்கள் சொன்னதின் மூலம் இந்த அவையை அவமதித்து இருக்கிறார்கள். அது சம்பந்தமாக தாங்கள் என்ன நடவடிக்கை எடுக்க விரும்புகிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாராளுமன்ற சபாநாயகர் எந்த நேரத்தில் இதைச் சொன்னார் என்று எனக்குத் தெரியாது. அவர்கள் சிலவற்றைச் சொல்வதற்கு உரிமையுண்டு. ஆனால் இதை ஒரு பிரச்சினையாக்கி, பாராளுமன்றத்திற்கும் நமக்கும் ஒரு பிரச்சினையாக்க வேண்டாம். அதனால் அப்படிப்பட்ட பிரச்சினைகளைச் சொல்லாமல் இருப்பது நல்லது.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இரண்டு
நாட்களாக வருகின்ற செய்தியின்படி, மத்திய அமைச்சர் வெளி
யிட்ட அறிக்கையின் அடிப்படையில் இரயில்கள் மூலமாகவும்,
கப்பல்கள் மூலமாகவும் குடிநீர் கொண்டு வந்து, குடிநீர் பிரச்சி
னையை ஓரளவிற்கு நிவர்த்தி செய்வதற்கு தண்ணீர் தரப்படும்
என்று ஓரளவிற்கு மகிழ்ச்சி அடையக்கூடிய செய்தி வந்தது.
இன்றைக்கு பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளைப் பார்க்
கிறபோது, அதை மாநில அரசு ஏற்றுக் கொள்ளுமா, என்ற ஒரு
வினா எழுப்பப்பட்டு இருக்கிறது. அப்படி ஏதாவது ஏற்றுக்
கொள்ளாத அளவிற்கு நிலைமை இருக்கிறதா ? ஏனென்றால்
ஒவ்வொரு துளி தண்ணீரும் பொன் போன்றது என்று விளம்பரம்
செய்யும் நேரத்தில் அப்படி வரும் தண்ணீரை வேண்டாம் என்று
சொல்லும் கூற்று ஒன்று சொல்லப்படுகிறதே, அது சரியா?
அல்லது பத்திரிகையில் வந்துள்ள தகவல் தவறானதா என்பதை
அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்
களே, இது பற்றி விவாதிப்பதற்காக இரயில்வே அதிகாரி
கள் இன்றையதினம் 11 மணிக்கு என்னைக் கண்டு பேச வேண்
டும் என்று சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சரின் அனுமதி
பெற்று, இன்றையதினம் 11 மணிக்கு நான் அந்த அதிகாரிகளோடு
கலந்து பேசுவதாக இருக்கிறேன். அவர்களோடு கலந்து பேசிய
பிறகு தான் அதைப் பற்றி சொல்ல முடியும். அதுவரையில்
இந்த அரசைப் பொறுத்தவரையில் எந்த விதமான முடிவையும்
சொல்வதற்கு இல்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு எதிர்க்கட்சித்
தலைவர் அவர்கள் எழுப்பிய பிரச்னை சம்பந்தமாக பேசுவதாக
அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். பேசுவது என்று சொன்
னால், தண்ணீர் வேண்டாம் என்பதற்குப் பேசப் போகிறார்களா?
வேண்டும் என்றால் எதற்காகப் பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேச்சு வார்த்தை நடத்து
வது என்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்
தெரியும் என்று நினைக்கிறேன். தற்போது அதனுடைய
டீட்டெய்ல்ஸுக்குப் போகவேண்டாம். இங்கே அதற்காக
பேச்சு வார்த்தை நமக்குள்ளே வேண்டாம். அவர்களுக்குள்
பேச்சு வார்த்தை முடிந்த பின் தானே அமைச்சர் அவர்கள்
அதைப் பற்றி தெரிவிக்க முடியம்.



(இ) காவிரி நதி நீர்ப் பிரச்சினை .

திரு. நா. சுந்தரராஜ் : : தலைவா அவர்களே, இரண்டு
மூன்று நாட்களுக்கு முன்னால் டெல்லியில் முதலமைச்சர்கள்
மாநாடும், காவிரி நீர் சம்பந்தமான ஒரு கூட்டத்தையும் நடத்தி
னார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
அதிலே கலந்து கொள்ளவில்லை என்பது எல்லோருக்கும்
தெரியும். காவிரி நீர் சம்பந்தமான கூட்டத்தில் அந்தத் துறையை
சார்ந்த அமைச்சர் கலந்து கொள்ளவில்லை. மாண்புமிகு மின்
துறை அமைச்சர் அவர்கள் தான் கலந்து கொண்டு இருக்கிறார்
கள். அதிலே என்ன பேசப்பட்டது என்பதைப் பற்றி அவையில்
தெரிவிக்க அரசு தயாராக இருக்கிறதா ? முதலமைச்சர் அவர்கள்
ஏன் கலந்து கொள்ளவில்லை என்பதற்கான காரணத்தைச்
சொல்ல முதலமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார்களா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களின் நன்மையை
முன்னிட்டு சிலவற்றை வெளியிட முடியாத சூழ்நிலை ஆங்காங்
குள்ள அரசுகளுக்கு இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் அறிவார்கள். காவிரி நீர் சம்பந்தமாக மாண்பு
மிகு உறுப்பினர் அவர்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ
அந்த அளவிற்குச் சிறிது கூடக் குறையாமல்—அதைவிட அதிகம்
என்று சொல்லக் கூடாது, நான் அவர்களை மதிக்க வேண்டும்
என்று கருதுகிறேன், அந்த அளவிற்கு அக்கறை இருக்கிறது.
எவ்வளவு விரைவில் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமோ
அதற்கு முயற்சித்துக் கொண்டு இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்
திரு. ரகுமான் கான் அவர்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை
11 ஆம் தேதி எடுத்துக் கொள்ளப் பெறும்.

திரு. அ. ரகுமான்கான் : 'தின மணி' பத்திரிகை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய 'தினமணி'
பத்திரிகையைப் படித்துப் பாருங்கள். தெரியும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : 'தினமணி' பத்திரிகைக்
விளம்பரம் தருகிறீர்களா ?

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் காலையில்
எதிர்பாராத வகையில் "தினமணி" பத்திரிகை பார்த்
தேன். இங்கே நடைபெற்ற முழு விவரமும் அதிலே வரவில்லை.
எதிர்க்கட்சித் தலைவர் குறுக்கிட்டுச் சொன்ன உண்கமனை
அதிலே வரவில்லை. உங்கள் தீர்ப்பு மட்டும் தான் வந்து
இருக்கிறது.

[1983 ஏப்ரல் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிகாரிகளுடைய பெயர்களை எல்லாம் ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்? துப்பரவுத் தொழிலாளர்களுடைய கோரிக்கைகளைச் சொல்லுங்கள். தொழிலாளர்களுக்குப் பாடுபடும்போது அவர்களுடைய குறைகளைச் சொல்லுவதுதான் வலுவாக இருக்கும்.

(முற்பகல் 10–10)

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெயர்களைச் சொல்வதற்குக் காரணம்——இன்னும் நிறைய பெயர்கள் இதன் பின்னால் இருக்கின்றன, மாண்புமிகு பேரவைத் தலைவர் அனுமதிக்காததால் சொல்ல இயலவில்லை——இவர்கள் எல்லாம் சேர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி உடன்பாடு ஏற்பட்டு, அந்த உடன்பாட்டை மாநில அரசாங்கம் அமுல் படுத்துவதற்கு ஆணை பிறப்பிக்கவில்லை என்று சொன்னால் என்ன செய்ய முடியும் அந்த தொழிளாலர்களால்? இந்த இலாக்காவிற்கே மொத்தம் இருக்கும் செயலாளர்கள் இவர்கள் தான். இவர்களால்தான் தமிழகத்திலுள்ள முக்கிய இலாக்காக்கள் செயல்படுகின்றன. இவர்களால் ஒத்துக்கொள்ளப்பட்ட கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்ற அவல நிலை ஏற்பட்டதற்குப் பின்னர்தான், தமிழகத்திலுள்ள சுதார ஊழியர்கள் போராட்டம் செய்வது என்ற நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். அந்த நிலையைத் தவிர்க்க வேண்டும் என்றால், அவர்களுடைய கோரிக்கைகளான, உடை வசதி, சம்பள உயர்வு, குடியிருப்பு வீடுகள், குழந்தைகளுக்கு பராமரிப்பு வசதி வைத்திய வசதி போன்றவைகளை தேவையான அளவுக்கு அவர்களுக்கு அளிப்பதற்காக அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே அவைபற்றி விவாதிக்க மன்றத்தின் இன்றைய பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. கு. ரமணி : மாண்புமிகு மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சுகாதாரத் தொழிலாளர்களுடைய இந்த வேலை நிறுத்தம் நடத்தப்பட்ட இருப்பதால், உண்மையிலேயே இந்தத் தமிழகத்தில் இருக்கும்படியான மக்களுக்கு இடைஞ்சலைத் தர வேண்டும் என்ற நோக்கம் அந்த தொழிலாளர்களுக்கு கிடையாது. தொழிற்சங்கங்களுக்கும் அப்படி ஒரு எண்ணமில்லை. ஆனால் அவர்கள் போராடித்தான் ஆக வேண்டிய நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களும் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

அவர்களுடைய கோரிக்கைகள் என்பது, 1976 லிருந்தே விவாதிக்கப்பட்டு வந்த விஷயம். 1977 லே முத்தரப்பு மாநாடு போட்டோம். அதிலே இந்த விஷயங்களை அனேகமாக



எல்லாத் தரப்பும் ஒப்புக் கொண்டது. முத்தரப்பு மாநாடு என்று சொன்னாலே அர்த்தம் அதுதான். அந்த மாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட முடிவுகள் சம்பந்தமாக அரசு பிறப்பித்த ஆணைகள் அமுல்படுத்தப்படவேயில்லை. அந்த ஆணைகள் நிறைவேற்றப்படவே இல்லை. மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டு, அவர்கள் கேட்ட சில கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று பிறப்பிக்கப்பட்ட ஆணைகள், நிறைவேற்றப்படவே இல்லை என்றால், அது யாருடைய குற்றம்? யார் அதை நிறைவேற்ற விடாமல் செய்து வருகிறார்கள் என்ற பிரச்னை எழுகிறது.

அதற்கு அடுத்து 1980-லே நடந்திருக்கும்படியான ஒரு முக்கியமான மாநாட்டிலேகூட, இதே மாதிரி லேபர் கமிஷனரைக் கூட்டி வைத்து,— தொழிலாளர் இலாகா சார்பில் கூட்டி வைத்து, இந்த விஷயங்களிலே ஏதாவது முடிவுக்கு வரவேண்டும் என்று எடுக்கப்பட்ட முடிவுகள் கூட, அதற்குப் பிறகு அமலுக்கு வரவேயில்லை. சென்ற முறை சட்டமன்ற கால கட்டத்தில் நான் உறுப்பினராக வந்தபோதுகூட, இரண்டு மாண்புமிகு அமைச்சர்களை சந்தித்துப் பேசி, அதிகாரிகளை கூட்டி வைத்து, தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி, அவர்களின் ஒரு சில கோரிக்கைகளையாவது நிறைவேற்றுங்கள் என்று எடுத்துக் கூறியும், அப்படி ஏற்றுக் கொள்ளப்பெற்றும், எந்தக் காரியமும் நடைபெறவில்லை. அதற்குப் பிறகு என்னதான் வழி? தொழிலாளர் இலாக்காவாவது, சம்பந்தப்பட்ட இலாகாவோடு கலந்து பேசி இந்தப் பிரச்னையில் ஒரு பாதுகாப்பான முடிவைக் கொண்டு வர முடியும் என்று முயற்சிகளை எடுப்பதற்காக வந்து, அதற்கான ஒரு திட்டத்தை ஜாயின்ட் லேபர் கமிஷனர் கூட்டி, அந்தக் கூட்டத்திலே பங்கேற்ற அதிகாரிகளுடைய பெயரைத்தான் மாண்புமிகு உறுப்பினர் பூங்காவனம் அவர்கள் குறிப்பிட்டார்கள். சம்பந்தப்பட்ட இலாகாக்களை சேர்ந்த கிட்டத்தட்ட 10 அதிகாரிகள் பங்கு பெற்றார்கள். இவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து முடிவு எடுத்தது 18–9–82 ஆம் தேதி. அது அறிக்கையாக அனுப்பப்பட்டுள்ளது.

அனைத்து நகராட்சிகளுக்கும், முனிசிபாலிட்டிகளுக்கும், அல்லது வேறு எந்த இடங்களில் இந்தத் தொழிலாளர்களும் இருக்கிறார்களோ அந்த அலுவலகங்கள் அனைத்திற்கும் இந்த அறிக்கை அனுப்பப்பட்டது. ஆனால் அதில் இன்று வரையில் இந்த தொழிலாளர்களுக்கு எந்தக் காரியமும் செய்துக் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால், இதில் அவர்கள் போராடுவது தவிர வேறு என்ன செய்வது. அந்தக்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அளித்த தீர்ப்தானே முக்கியம். அது வந்து இருக்கிறது.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

#### உள்ளாட்சித் துப்புரவுத் தொழிலாளர்கள் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். ஏ. பூங்காவனம், தி. கா. நல்லப்பன், செ. சிவசாமி, மு. அப்பாதுரை, மு. அம்பிகாபதி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம். ரா. கிருஷ்ணன், என். வரதராஜன், கு. ரமணி. கே. ஆர். சுந்தரம், டி. மணி, எம். ஆறுமுகம், ப. பொன்னுரங்கம் ஆகியோர் '' தமிழ்நாடு முழுவதும் உள்ள மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகியவற்றின் துப்புரவு பணியாற்றும் தொழிலாளர்கள் தங்கள் போராட்டம் குறித்து எடுத்துள்ள முடிவினால், ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்.'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் உள்ள மாநகராட்சி, நகராட்சி பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம் ஆகிய ஸ்தாபனங்களில் பணியாற்றுகிற சுகாதார ஊழியர்கள் கடந்த இரண்டாண்டு காலமாகத் தங்களுடைய வேலைகள் முறையாக பகிர்ந்தளிக்கப் பட வேண்டும்; சம்பள உயர்வு தரப்பட வேண்டும்; வீட்டுவசதி செய்து தர வேண்டும்; உடை வசதி வேண்டும் இவை போன்ற இன்னும் பல கோரிக்கைகளை வைத்து பலமுறை பேச்சு வார்த்தை நடத்தியும் எந்தவிதமான தீர்வும் இதுவரையில் காணப் படாததால் நாளை முதற்கொண்டு தமிழ்நாடு முழுவதும் இருக்கிற இலட்சக்கணக்கான சுகாதாரத் தொழிலாளர்கள் அதாவது துப்பரவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய இருக்கிறார்கள். நாடு சுதந்திரம் அடைந்து 36 ஆண்டுகள் ஆனபிறகும் இந்தத் தொழிலாளர்கள் பிரச்சனை தீர்க்கப் படவில்லை. அரசுத் துறையில் வேலை செய்கின்ற பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் பல சலுகைகளைப் பெற்றிருந் தாலும், பல சம்பள உயர்வு பெற்றிருந்தாலும் இந்தத் துப்பரவுத் தொழிலாளர்களுக்கு பெரிய மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. குறைந்த பட்சம் அவர்கள் வேலை செய்கிறபோது கையில் அணிந்துகொள்கின்ற உறை கூட தரப் பட வில்லை. குடியிருக்க நிரந்தர வீட்டுவசதி இல்லை



அவர்கள் வேலைசெய்வதற்குத் தேவைப்படுகின்ற கரண்டி, மலம் எடுத்துச் செல்லும் கூடை, முறம், துடப்பம் இப்படிப்பட்டசாதரண பொருள்கள் கூட முறையாக அநேகமாக எல்லா நகராட்சி ஸ்தாபனங்களிலுமே வழங்கப்படவில்லை. இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஒவ்வொரு தொழிலாளியும் 115 முதல் 130 வீடுகள் வரை துப்பரவு செய்ய வேண்டியிருக்கிறது. தாய்மார்கள் இந்தப் பணியைச் செய்கிறார்கள். இதில் மாற்றம் வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும்; போதிய ஆட்களை நியமிக்க வேண்டும் என்று தொடர்ந்து கேட்டு வந்தும், அரசுத் தரப்பிலிருந்து ஆணை பிறப்பிக்கப் படவில்லை. தொழிலாளர்களுடைய வேலைப்பளு ஒரு பக்கம் இருக்கிறது. மற்றொரு பக்கம் விலைவாசி அடிப்படையில் அவர்களுக்கு நியாயமான சம்பளம் கொடுப்பதில் மிகவும் பின் தங்கிய நிலை இருக்கிறது. பல்வேறு அரசியல் கட்சிகளும் பிற்பட்டமக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எல்லா நலன்களையும் செய்யவேண்டுமென்று சொல்லுகின்ற இந்த நேரத்தில் துப்பரவுத் தொழிலாளர்களுக்கு குடியிருக்க வீடு கிடையாது. வீடு கேட்டால் அந்தத் தொழிலாளர்களுக்கு கொடுக்க சட்டத்தில் இடமில்லை; மத்திய அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு வர வேண்டுமென்று சொல்லப்படுகிற அவல நிலை இருக்கிற சூழ்நிலை காரணமாக மாநிலம் முழுவதும் உள்ள தொழிலாளர்கள் அந்த சம்மேளனத்தின் சார்பில் நாளை முதல் வேலை நிறுத்தம் செய்ய இருக்கிறாகள்.

வேலை நிறுத்தத்திற்கு அடிப்படைக் காரணமாக இருப்பது, முதல் காரணம் அந்த துப்பரவுத் தொழிலாளர்களுக்கு உடை வசதி கிடையாது. வேலூர் நகராட்சியில் இதுவரை உடை கொடுக்கப்படவில்லை. உடை தைக்கக் கூலி கொடுக்கப் படவில்லை. மற்ற கோரிக்கைகளும் நிறைவேற்றப்படவில்லை. அதனால் நம்பிக்கை இழந்த நிலையில் அவர்கள் போராடப் போகிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இதை சற்று கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

18–9–1982–ல் சென்னையில் தொழிலாளர் நல ஆணையர் அலுவலகம் முன்னால் ஒரு பேச்சுவார்த்தை நடந்தது. அதில் எச். பி. என்ஷெட்டி, ஸ்தல ஸ்தாபனத்துறை ஆணையாளர் ராஜா சுப்பிரமணியம், தொழிலாளர் நல இணை இயக்குநர் டாக்டர் கபாலி, பொதுச் சுகாதாரத் துறை இயக்குநர்; எஸ். ஆர். கருப்பண்ணன் சென்னை மாநகராட்சி ஆணையாளர், பி. சோமசுந்தரம், பி, பாபநாசம்....

கோரிக்கைகளை எல்லாம் விளக்கிச் சொல்ல நான் விரும்பவில்லை. விவாதிக்க தலைவர் அனுமதித்தால், விளக்கிச் சொல்லத் தயார். இன்னின்ன தேவைகள் அவர்களுக்கு இருக்கிறது என்று விளக்கிச்.சொல்லத் தயார்.

ஒரே ஒரு விஷயம் நான் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதை மிக மிக அவசியம் என்று கருதுகிறேன். இந்தப் பணியைச் செய்யும் ஊழியர்கள், நாமெல்லாம் அருவருக்கின்ற பணியைச் செய்பவர்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே கீழ்மட்டத்திலே இருப்பவர்கள். அப்படிப்பட்ட மக்கள், ஊழியர்களுக்கு, ஒரு அரசாங்கத்தினுடைய குறைந்தபட்ச 4 ஆம் தர சிப்பந்திக்கு தரப்படுகிற சம்பள விகிதத்தைக்கூட கொடுக்காமல், சென்னை மாநகராட்சியிலே கொடுக்கப்படுகிற சம்பளம் அளவு கூட கொடுக்கப்படாமல், கோவையிலே, மதுரையிலே, திருச்சியிலே, சேலத்திலே உள்ள ஊழியர்களின் நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளை அந்த ஊழியர்களுக்கு வேண்டி எடுத்துச் சொல்வதற்கும் யாரும் கிடையாது. ஆகையினால்தான், அவர்களுடைய நிலைமை தாங்க முடியாத அளவுக்கு போனதினால் தான், அவர்கள் போராட்டத்திலே இறங்கவேண்டிய நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். கோவை மாநகரத்திலே இருந்து வந்த .செய்தியை ஒரு முறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டேன், அந்தத் தொழிலாளர்கள், அரிசனத் .தொழிலாளர்கள் இறந்து போனால், அவர்களின் பிணத்தை எடுப்பதற்காக உடனடியாக 50 ரூபாய் .கொடுக்க வேண்டும் என்று இருக்கும் விதி, இதுவரையில் நூற்றுக்கணக்கான பேர்களுக்குக் கொடுக்கப்படாமல், அமுல் படுத்தப்படாமல் இருக்கிறது. அதற்காக ஒதுக்கப்பட்ட பணம் கூட அந்த இலாகாவிற்கு போய்ச் சேராமல் இருக்கிறது என்று சொன்னேன். அவரும் உடனே நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இன்னமும் அந்த விதி முறை அந்த இடத்திலே அமுல் ஆகாமல் தான் இருக்கிறது.

இங்கே இருந்து பிறப்பிக்கப்படுகின்ற .ஆணைகள் எல்லாம் ஏன் அங்கே அமுல் படுத்தப்படாமல் இருக்கிறது? அங்கே இருக்கும்படியான அதிகாரிகள் இவைகளை எல்லாம் அமுலுக்கு வருவதிலே ஏன் தயக்கம் காட்டுகிறார்கள். இவை எல்லாம் மிகவும் சிக்கலான நிலைமை, சிக்கல் நிறைந்த விஷயங்கள். அதைத் தடுக்க வேண்டும் என்கிற உத்தேசத்தோடுதான் இந்தப் பிரச்னையை நாம் இங்கே .கொண்டு வந்திருக்கிறோம்.



ஆகவே பொதுவாக அந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து எல்லோருக்கும் உபத்திரவம் கொடுக்க வேண்டும் என்று விரும்புவதில்லை. அவர்களுக்கு வேறு கதியே இல்லாததன் காரணத்தால்தான் இப்போது அவர்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. எனவே நாளைய தினம் அவர்கள் வேலை நிறுத்தம் செய்வது என்று முடிவுக்கு வந்திருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தத் தொழிலாளர்கள் கொடுத்துள்ள கோரிக்கைகளில் எவை எவை ஒத்துக்கொள்ளக் கூடியது என்று பார்த்து ஆணை செய்யவேண்டும். 18–9–82 அன்று அரசு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள கோரிக்கையில் எவை எவை உடனே ஒத்துக் கொள்ளக் கூடியவை என ஆய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுத்தால் அது மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும். எனவே இந்தப் பிரச்சினை மிகவும் சிக்கலான பிரச்சினையாக இருப்பதன் காரணத்தால் அது பற்றிய பல விவரங்களைப் பேச வேண்டி இருப்பதன் காரணத்தால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை முதற்கொண்டு துப்புரவுத் தொழிலாளர்கள் தமிழகம் முழுவதும் வேலை நிறுத்தம் செய்ய இருக்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்கு முன்னால் பேசியவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். அவர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கான சிலபல காரணங்களைச் சுட்டிக் காட்டினார்கள். அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கைகளைப் பொறுத்தவரையில் ஒன்றும் பெரிதாகக் கேட்டு விடவில்லை. பேசிக் பே, போனஸ், மெடிகல் அலவன்ஸ், பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உதவி போன்ற இப்படிப் பட்ட கோரிக்கைகளைத்தான் கேட்கிறார்கள். இது நியாயமான கோரிக்கைதான். இன்றைக்கு தமிழ் நாட்டிலே உள்ள அனைத்துத் தொழிலாளர்களும் அவற்றை எல்லாம் அனுபவிக்கிறார்கள். ஃபேனுக்கு கீழே இருந்து வேலை செய்பவர்கள் அனுபவிக்கிறார்கள். டிரைவர், கண்டக்டர் போன்ற எல்லோரும் அனுபவிக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் எல்லாம் வரத் தயங்குகின்ற, இழிவான வேலை என்று மற்றவர்களால் கருதப்படுகின்ற பணியினைச் செய்கின்ற தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதி கூடச் செய்து கொடுக்கப் படவில்லை, அடிப்படைச் சலுகைகள் கூட இல்லை என்றால் அது எப்படி நியாயம் என்பதைக் கேட்க விரும்புகிறேன். எனவே இது முக்கியமான பிரச்சினை. இன்றைக்கே தெருவில்.எல்லாம் நாற்றம் அடிக்கின்றது, அதாவது அவர்கள்

[1983 ஏப்ரல் 7

**மாண்புமிகு* திரு. எம். ஜி. இராமச்சந்திரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகத் தெளிவாக ஒன்றை சொல்லியிருக்கிறார்கள். நான் அதற்கு நன்றி கூறுகிறேன்.

துப்புரவுத் தொழிலாளர்கள் பணிசெய்யும் போது ஆபத்து ஏற்பட்டால் அவர்களுக்கு நிதி அளித்து வந்திருக்கிறோம் என்பதை இங்கே சொல்வதிலே மனநிறைவு பெறுகிறேன். பலருக்கு அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நானே தான் உத்தரவு போட்டேன் என்பதால் சொல்கிறேன். தேவைக்காக வேலை நிறுத்தம் செய்வது என்பது அவசர தேவையை வற்புறுத்துவதற்கு ஏற்ப ஒவ்வொருவருக்கும் அந்த உரிமையைப் பயன்படுத்திக்கொள்வதற்கு ஜனநாயகம் அனுமதி அளித்து இருக்கிறது. எசன்சியல் சர்வீஸ் என்ற அளவிலே தடைச் சட்டம் கொண்டு வந்த போது ஆத்திரப்பட்ட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட இன்றையதினம் அது நியாயமாக இருக்குமா என்று கருதுவார்கள் என்று நான் நம்புகின்றேன். பேசித் தீர்க்க வேண்டியதை பேசித் தீர்க்கவேண்டும். என்ன என்ன குறைகள் இருக்கிறதோ அவைகளை தீர்ப்பதற்கு தான் அரசாங்கம் இருக்கிறது. சூழ்நிலை, நிதிவசதி இவைகளை எல்லாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆனால் அதற்காக மற்றவர்களுக்கு உள்ள உரிமை அந்த தொழிலாளர்களுக்கு இல்லை என்று இந்த அரசு சொல்லவில்லை. ஆவன செய்யும் என்பதை நான் நிச்சயமாகச் சொல்கின்றேன். அதில் பின்வாங்காது. பேசட்டும், பேசிய பிறகு இந்த அரசு வேண்டும் என்றே அவர்களை ஒதுக்கித் தள்ளுகிறது, அக்கறை காட்டவில்லை என்ற நிலைமை ஏற்பட்டால் அவர்கள் எந்தப் போராட்டம் செய்தாலும் நாங்களும் உடன் சேர்ந்து போராடுவோம். ஆனால் நாட்டிலே நிலைமை மோசமாகி.விடும் என்று சொல்வார்களானால்—இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது ஒன்றைச் சொன்னார்கள் குப்பைகள் எல்லாம் மேலே கொட்டிவிடும், சாக்கடை நீர் எல்லாம் தேங்கிவிடும் என்று சொன்னார்கள்—சுதந்திர போராட்டகாலத்தில் மகாத்மா காந்தி அவர்களும், வேறு வகையில் பேராட்டக் காலத்தில் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களும் நமக்குச் சொல்லித் தந்து இருக்கிறார்கள், நாமே அந்தப் பணியை மேற்கொள்வதற்குத் தயாராக வேண்டும். அதைச் செய்யலாம். அதில் ஒன்றும் தவறு இல்லை. அவர்கள் தான் செய்ய வேண்டும் என்பது இல்லை. அது அவர்களுக்குத்தான் உண்டாக்கப்பட்ட தொழில் என்பதும் இல்லை. தேவைக்காக நாமும் அந்தத் தொழிலை மேற்கொள்ளலாம். அந்த வகையில் அச்சுறுத்தாமல் அவர்கள் இருக்க வேண்டும் என்பது தான் இந்த அரசினுடைய கோரிக்கையும், எண்ணமும் ஆகும். தேவையானதை பேசித் தீர்த்துக்கொள்ள அவர்கள் முன்வரவேண்டும். அதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்



1983 ஏப்ரல் 7] [திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்]

அவர்கள் மூலமாகச் சொல்லி அதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய காரணம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

### 4. அறிவிப்பு.

**உறுப்பினர் திரு. வெ. இராஜசேகரன் கைது செய்யப பெற்றுள்ளது.**

**Mr. SPEAKER:**

I have received a mess g from the Police Commissioner. I have the honour to inform you that Thiru V. Rajasekharan, M.L.A, Radha krishna Nagar Assembly Constituency along with some others were arrested today (7-4-83) at 8-30 hours in X Station CR.No.300/83 under Section 143 IPC 41 Madras City Police Act read with 7(1) (a) Criminal Law Amendment Act on Annasalai, near Tepnampet Congress Grounds when he took out a procession with the intention of proceeding to the Madras Collectorate to stage a picketing in violation of the prohibitory orders in force in the City."

### 5. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) விதி 107(1)ன் கீழ் திருத்த அறிக்கை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11—3—1983 அன்று தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் உடுக்குறியிட்ட வினா எண். 365 பழைய எண். 13153 தொடர்பாக நடைபெற்ற விவாதத்தின் போது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பெ. சு. திரு வேங்கடம் அவர்கள் கீழ்க்கண்ட விளக்கங்களைக் கேட்டார்கள். "லாட்டரி பரிசு பெறுகிறவர்கள் பல பேர் பணம் திரும்ப வாங்காதது ரூபாய் 3 கோடி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அரசாங்கம் பரிசு பெற்றவர்கள் பணத்தைத் திரும்பப் பெற வில்லை யென்று ஏதாவது விளம்பரம் செய்ததா, கிராமங்களிலே இந்தச் சீட்டுகளை வாங்குகிறவர்கள் சரிவர பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்கு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்" என்று கேட்டிருந்தார்கள்.

[திரு. ப. பொன்னுரங்கம்] [1983 ஏப்ரல் 7

வேலை செய்துகொண்டிருக்கும்போதே. வேலை நிறுத்தம் செய்துவிட்டால் மிக மோசமான நிலைமை ஏற்பட்டுவிடும். என்னுடைய தொகுதியிலே இப்போது தெருவிலேதான் சாக்கடை ஓடுகின்றது, லாங் ஜம்ப் பண்ணித்தான் வரவேண்டி இருக்கின்றது. தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருக்கும்போதே இப்படிப்பட்ட நிலைமை என்றால் நாளைக்கு அவர்கள் வேலை நிறுத்தம் செய்த பிறகு பறந்துதான் வரவேண்டி இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கத்தால் லாங் ஜம்ப் பண்ண முடியாது. (சிரிப்பு).

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, நாளை அவர்கள் வேலை நிறுத்தம் செய்துவிட்டால் குப்பை கூளங்கள் குவிந்துவிடும் என்பதால் அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும். இப்போதே சாக்கடைகள் எல்லாம் அடைத்துக்கொண்டிருக்கின்றன. இனிமேல் மேலேயே வந்துவிடும். அந்த நிலைமை ஏற்படாமல் உடனடியாகத் தடுக்கவேண்டும். இது முக்கியமான பிரச்சினை. நாம் எல்லாம் ஸ்ட்ரைக் செய்தால் சட்டசபையை மூடிவிட்டுப் போய்விடலாம். ஆனால் அவர்கள் வேலை நிறுத்தம் செய்துவிட்டால் லிட்டர் ஃபிரீ ஜோன் என்று மெரினா பீச் போன்ற இடங்களை டிக்ளேர் செய்திருக்கிறோமே அந்த இடங்கள் கூட நாற்றம் எடுத்துவிடும். எனவே இந்தப் பிரச்சினையை விரைவில் கவனிக்கவேண்டும். அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கூட இல்லாத நிலைமை இருக்கின்றது. என்னுடைய தொகுதியிலே கடந்த மாதம் 3-ஆம் தேதி ஆர். ராமதாஸ் என்ற துப்புரவுத் தொழிலாளி மேன்ஹோலைக் க்ளீன் செய்கின்றபோது ஆவி அடித்து இறந்துவிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதன் காரணத்தால் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுப்பார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். அதேபோன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் கீரனூர் என்ற இடத்திலே 3 தொழிலாளர்கள் இறந்திருக்கிறார்கள். அது குறித்து நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இருப்பினும் அவற்றை எல்லாம் நீங்கள் தள்ளிவிட்டீர்கள். நீங்கள் தள்ளிவிடுவீர்கள் என்று தெரியும் எனவே நானும் பேசாமல் இருந்துவிட்டேன். பள்ளிவாசல் என்ற இடத்திலே அப்படி துப்புரவு தொழிலாளி இறந்திருக்கிறார் எனவே அவர்களுக்குப்பாதுகாப்பற்ற நிலைமையும் இருக்கின்றது. ஆகவே இதைப்பற்றி எல்லாம் அரசாங்கம் தீர கவனிக்க வேண்டும். அந்தத் தொழிலாளர்கள் ஒரு கையுறை வேண்டும் என்று கேட்டார்கள். முதலிலே உயிரைக் காப்பாற்ற வேண்டும். அமைச்சர் திரு. கே. ஏ. கே. அவர்களுடைய தொகுதியான ஆயிரம் விளக்கு தொகுதியிலே இரண்டு பேர் இறந்ததற்கு பேமென்ட் பட்டுவாடா ஆகிவிட்டது. என்னுடைய தொகுதியில் பட்டுவாடா செய்யப்படவில்லை. ஆகவே அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கைகள் எல்லாம் நியாயமான கோரிக்கைகள்தான், நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தித்தான் வேலைநிறுத்தம் செய்ய இருக்கிறார்கள். இப்போது நாம் மற்றும் ஸ்டாஃப் எல்லோரும் வேலை செய்கிறோம். டிரைவர் போன்றவர்களுக்கு எல்லாம் எல்லா வசதிகளும் இருக்கின்றன.



1983 ஏப்ரல் 7] [ப. பொன்னுரங்கம்]

(முற்பகல் 10-20)

கடைசியாக கலைஞர் ஆட்சிக்காலத்தில் இறந்தால் 10 ஆயிரம் என்று சொல்லி அவர்களுக்கு இருந்தது. இப்போது அந்த தொழிலாளர்களுக்கு இல்லை. ஒரு சமயம் இது அரசாங்கத்தின் கவனத்திற்கு வரவில்லையோ என்னவோ. எனக்கு தெரியவில்லை. இந்த ஸ்கேவன்ஜர்ஸ்க்கு கையை வைத்துவிட்டார்கள். அதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அந்த ஸ்கேவன்ஜர் தொழிலாளர்களுக்கு நிறுத்தப்பட்ட அந்த கலைஞர் ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்ட இறந்தால் 10 ஆயிரம் என்று இருக்கின்ற அந்த தொகையை மீண்டும் உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும். இது போன்ற அடிப்படை சலுகைகளைஎல்லாம்அவர்களுக்கு வழங்க வேண்டும். அவர்கள் இல்லை என்றால் நாம் சுகாதாரத்தோடு வாழ முடியாது. நாற்றத்தை தான் மோர்ந்து கொண்டு வாழ வேண்டி இருக்கும். கொசுக்கள் நம்முடைய ஊரை சுற்றி கொண்டு கோட்டைக்கு வந்துவிடும். இப்போது வாசல் வரை இருக்கிறது. பிறகு கோட்டைக்குள்ளே வந்துவிடும். ஆகவே இந்த அவல நிலை எல்லாம் அகல வேண்டும் என்றால் தண்ணீர் தட்டுப்பாடுஇருக்கும்இந்தநேரத்தில் மெட்ரோவாட்டர் பிரிவிலே இருக்கும் அந்த துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை செய்ய மறுப்பார்களானால் அது அரசுக்கு ரொம்ப சங்கடங்கள் வரும். வருகிற தண்ணீரும் வராமல் போய்விடும். ஆக இதுபோன்ற பிரச்சனைகள் இருக்கிற காரணத்தால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும். அப்போது தான் ஒரு முறையான முடிவை எடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று நான் கூறி உடனடியாக அந்த தொழிலாளர்களின் பிரதிநிதிகளை அழைத்து அமைச்சர் அவர்கள் பேசுவதன் மூலமாக நாளைய தினம் நடக்கவிருக்கும் வேலை நிறுத்தத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, இவைபற்றி விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 7

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவர் அவர்களே, அறிக்கையின்படி இராமநாதபுரம் மாவட்டத்தில் 16 வட்டாரங்களுக்கும் தர்மபுரி மாவட்டத்திலே 6 வட்டாரங்களுக்கும் மத்திய அரசு அளித்து வந்த நிதி உதவியை நிறுத்திவிட்டது என்றும் மாநில அரசு தன் நிதி ஆதாரத்தைக் கொண்டே அதனை நடத்துவது என்று முன் வந்துள்ளது என்றும் அறிக்கையிலே கொடுக்கப்பட்டுள்ளது. உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் களைவதாம் தமிழக அரசு என்ற வகையில் அதைப் பாராட்டக் கடமைப்பட்டுக் கொள்கிறேன். அதே தருணத்தில் மத்திய அரசு நிதி கொடுக்க மறுத்ததைத் தொடர்ந்து கொடுக்க வேண்டும் என்ற வகையில் வலியுறுத்த தமிழக அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ? அதற்கு மத்திய அரசு என்ன பதில் அளித்துள்ளது ? மற்றும் வேறு மாநிலங்களில் இது போன்ற நிதி உதவி அளித்து வந்ததை மத்திய அரசு நிறுத்தி உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மைய அரசின் சார்பாக அமைக்கப்பட்ட பணிக் குழு சில கருத்துக்களை தெரிவித்தது என்ற அடிப்படையில் இந்த நிதி உதவியை நிறுத்தி இருப்பதாக மைய அரசு தெரிவித்தது. நம்முடைய வேளாண்மைத் துறையின் சார்பாக மத்திய வேளாண்மைத் துறை அமைச்சருக்கு இதுபற்றி விளக்கி நிதி உதவி கிடைக்க வேண்டும் என்றும், முகவை, தர்மபுரி போன்ற மாவட்டங்கள் மிகவும் வறட்சியினால் தொடர்ந்து பாதிக்கப்பட்டிருக்கிற மாவட்டங்கள் என்றும் நாம் எடுத்துத் தெரிவித்து இருக்கிறோம். இது இந்திய அரசு அளவிலே எடுக்கப்படுகிற கொள்கை முடிவு. ஆகவே மறு பரிசீலனை செய்வதற்கு இல்லை என்று மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். இருந்தாலும் தொடர்ந்து அதை நாம் வலியுறுத்துவோம்.

(ஆ) தண்டராம்பட்டுத் தொகுதியில் குடிநீர் தட்டுப்பாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் த. வேணுகோபால், பாபு ஜனார்த்தனன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

* திரு. த. வேணுகோபால் : அவர்களே, ''தண்டராம்பட்டுத் தொகுதியிலுள்ள தானிப்பாடி, சாத்தனூர், மோத்தக்கல் மற்றும் சின்னியம்பேட்டை ஆகிய ஊர்களில் குடி தண்ணீர் அறவே இல்லாததால்மக்கள்படும் இன்னல் குறித்த'' அவசரப்



[திரு. தே. வேணுகோபால்]

[1983 ஏப்ரல் 7

பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

வடஆற்காடு மாவட்டம் தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தானிப்பாடி, சாத்தனூர், மோத்தக்கல் மற்றும் சின்னையம்பேட்டை ஆகிய ஊர்களின் 1971 ஆம் ஆண்டுகணக்கெடுப்பின்படி மக்கட் தொகை முறையே 799, 2,572, 4,092 மற்றும் 4,028 ஆகும். தானிப்படி கிராமத்தில் 1981 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் நான்கு ஆழ் குழாய் கிணறுகளும், 1982 ஆம் ஆண்டின் வறட்சி நிவாரணத்தின் கீழ் ஒரு ஆழ் குழாய்க் கிணறும் அமைக்கப்பட்டன. இந்த குழாய்க் கிணறுகளில் தண்ணீர் இல்லாத இரண்டு கிணறுகளைத் தவிர, மூன்று குழாய்க் கிணறுகளில் கை இறைப்பான்கள் பொருத்தப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. சாத்தனூர் மற்றும் சின்னையம்பேட்டை ஆகிய இரு கிராமங்களிலும் 1981ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் தலா ஒரு ஆழ் குழாய்க் கிணறு வீதம் அமைக்கப்பட்டு கை இறைப்பான்கள் பொருத்தி குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. மோத்தக்கல் கிராமத்தில் 1980 ஆம் ஆண்டின் வறட்சி பணிகளில் கீழ் குழாய் கிணறு அமைத்து கை இறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய அனைத்து கை இறைப்பான்களும் தற்போது ஊராட்சி ஒன்றிய பராமரிப்பின் கீழ் இருந்து வருகின்றன.

மேலும் தானிப்பாடி, சாத்தனூர் மற்றும் மோத்தக்கல் ஆகிய கிராமங்கள் பிரிவு 6-ல் இருந்து 3-க்கு வகை மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இக்கிராமங்களுக்கு அடுத்த ஆண்டு (1983—84) திட்டங்களின் கீழ் மேல்நிலை தொட்டிகள் கட்டி குடிநீர் திட்டங்கள் மேற்கொள்ள பரிசீலனை செய்யப்படும். ஆகையால் இவ்வூர்களை விட்டு ஜனங்கள் வெளியேறத் தேவையில்லை.

(முற்பகல் 10—30)

திரு. த. வேணுகோபால் : தலைரவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தானிப்பாடி, மோத்தக்கல், சின்னையன்பேட்டை, சாத்தனூர் போன்ற கிராமங்களுக்கு அங்கே 1980—81-ஆம் ஆண்டுகளில் போடப்பட்ட ஆழ்துளை கிணறுகள், கைம்பம்புகள் மற்றவைகள் பற்றி விளக்கமாகச் சொல்லி, போதுமான தண்ணீர் இருக்கிறது, ஆதலால் அவர்கள் எல்லாம் கிராமங்களை விட்டு வெளியே செல்லவேண்டிய அவசியம், அதற்கான சூழ்நிலைஇல்லை

[திரு. த. வேணுகோபால்)

[1983 ஏப்ரல் 7

என்று சொல்லியிருக்கிறார்கள். மோத்தக்கல், சாத்தனூர் போன்ற கிராமங்களில் இன்றுகூட தண்ணீர் கிடைக்காமல் இருக்கிறது; கைபம்புகள், பவர் பம்புகள் வேலை செய்வதில்லை. அந்த பகுதிகளில் இருக்கிற கிராமங்களில் அறவே குடிதண்ணீர் இல்லை. சாத்தனூர், தானிப்படி போன்ற கிராமங்கள் எல்லாம் 10,000 ஜனத்தொகை கொண்ட கிராமங்கள். அந்த கிராமங்களில் இன்றைக்குகூடமக்கள் ஒரு குடம் தண்ணீர் 20 பைசா என்று கொடுத்து வெளியேயிருந்து வாங்கிச் சாப்பிடுகிறார்கள்; இந்த நிலைமையில் அந்த பகுதியில் மக்கள் இருந்து வருகிறார்கள். ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் கிணறுகளை ஆழப் படுத்துவதற்கோ முடியாமல் இருக்கிறது; அந்த கிணறுகள் ஆழப்படுத்துகிற சூழ்நிலையில் இல்லை. ஏற்கெனவே போடப்பட்ட கைப் பம்புகள், விசைப் பம்புகள் இருந்தாலும் அவற்றில் தண்ணீர் வருவதில்லை. என்னுடைய தொகுதியில் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியப்பகுதியில் அண்டம்பள்ளம், மதுராம்பட்டு, நாரையூர், மெய்யூர், மேல்தச்சிணாம்பட்டு ஆகிய கிராமங்களில் இப்படிப்பட்ட நிலைமை இருந்து வருகிறது. தமிழ்நாட்டிலே வறட்சி நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் கடுமையான குடிதண்ணீர் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால் அரசு அதற்காக அவசர நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எந்தெந்த ஊரில், என்னென்ன வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இரண்டு குழாய் கிணறுகளைத் தவிர மற்றவைகள் எல்லாம் ஒழுங்காக செயல்படுகின்றன என்ற தகவல் கிடைத்து இருக்கிறது. ஆகவே தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் தானிப்பாடி, சாத்தனூர், மோத்தக்கல் போன்ற கிராமங்கள் பிரிவு ஆறில் இருந்திருக்கிறது. அப்படியென்று சொன்னால் 1976-ம் ஆண்டின் கணக்கின்படி போதுமான அளவு தண்ணீர் ஆண்டு பூராவும் கிடைக்கிறது என்று பொருள்; ஆனால் முறையீட்டின் பேரில் மூன்றாவது பிரிவாக மாற்றப்பட்டிருக்கிறது. மூன்றாவது பிரிவாக மாற்றப்பட்டதன் காரணமாக 1983–84-ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் இப்போது மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டி—அது தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆசை; அது நிறைவேற்றப்படும்—குடிநீர் திட்டம் மேற்கொள்ள செயல்பட்டிருக்கிறோம். உறுப்பினர் அவர்கள் இதை துரிதப்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்தை எடுத்துச் சொல்லி, துரிதப்படுத்த வேண்டுமென்று இந்த அரசு சொல்லும்.



[1983 ஏப்ரல் 7]

5. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

(ஆ) உரிமைக்குழு.

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, 29–4–1981 அன்று பேரவையில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்த உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக்குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

7. வரவு–செலவுத் திட்டம் 1983—84—வாக்கெடுப்பு தொடர்ச்சி

கோரிக்கை எண் 15—காவல் துறை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 76,23,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் காவல் துறை ஊழியருக்கும் குடியிருப்பு வசதி செய்யக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 76,23,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. இல. பலராமன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் காவலர்களை அதிகப்படுத்தி சட்டம், ஒழுங்கை நன்முறையில் நிர்வகித்தல் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 76,23,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 7

அதற்கு, பரிசு குலுக்கல் நடந்த 90 நாட்களுக்குள் வாங்கிக் கொள்ளலாம் என்று இருக்கிறது. அதற்குப் பிறகு வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் முடிவு அறிவிக்கப்பட்ட 3 ஆண்டுகளுக்குள்ளே காரணம் காட்டி எழுதிப் பெற்றுக் கொள்ள லாம் என்பதற்குப் பதிலாக கீழ்க்கண்ட திருத்த பதிலை அளிக்க நான் விரும்புகிறேன்.

பரிசுப் பணத்தைப் பரிசு குலுக்கல் நடந்த 90 நாட்களுக்குள் வாங்கிக் கொள்ளலாம் என்று இருக்கிறது. அதற்குப் பிறகு வாங்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டால் முடிவு அறிவிக்கப்பட்ட 180 நாட்களுக்குள் காரணம் காட்டி பரிசு சீட்டு இயக்குநருக்கு விஷேச மனு செய்து பெற்றுக்கொள்ளலாம் 180ஆம் நாளுக்குப் பின்னர் வரும் கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டா என்று திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## 6. கவன ஈர்ப்புகள்.

### (அ) இராமநாதபுரம், த மபுரி மாவட்டங்களில் வறட்சிக்குட்பட்ட பகுதிகளில் திட்டச் செயல் முறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி அவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் இதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவர் அவர்களே, ''வறட்சிக்கு இலக்கான பகுதியின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இராமநாத புரம், தர்மபுரி மாவட்டங்களில் உழவர் பயிற்சிப்பள்ளி, புஞ்சைப் பயிர் சாவடி மற்றும் நடமாடும் மண் பரிசோதனை நிலையம் ஆகியவற்றிற்குக் கொடுத்து வந்த நிதியை மத்திய அரசு நிறுத்தி விட்டது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் மத்திய அரசினால் ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். இத் திட்டப் பணிகள் மத்திய அரசு கூறும் அறிவுரைகளின்படி நிறைவேற்றப்பட வேண்டும்.



1983 ஏப்ரல் 7] [டாக்டர் கா. காளிமுத்து]

இதன் செலவை மத்திய அரசும், மாநில அரசும் 50 : 50 என்ற விகிதத்தில் ஏற்பர். மத்திய அரசு கொடுக்கும் நிதி ஒதுக்கீட்டின் அளவைப் பொறுத்து இத் திட்டங்களின் செயல்பாடும் அமையும்.

இத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் (32 வட்டாரங்கள்), தருமபுரி மாவட்டம் முழுவதும் (16 வட்டாரங்கள்) இதன் கீழ் செயல்பட்டு வந்தன. ஆனால் மத்திய அரசினால் அமைக்கப்பட்ட ஒரு பணிக்குழு (Task Force) இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பகுதிகள் பற்றி, அங்கு பெய்த சராசரி மழை அளவு, விதைக்கப் பட்ட பரப்புகளின் அளவில் நீர்ப்பாசனம் பெற்ற பரப்பளவு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தது. ஆராய்ந்த பின், இராமநாதபுரம் மாவட்டத்தில் 16 வட்டாரங் களையும், தருமபுரி மாவட்டத்தில் 6 வட்டாரங்களையும் இத் திட்டத்திலிருந்து நீக்கிவிடுமாறு இக்குழு பரிந்துரை செய்தது. அதன்படி மத்திய அரசு மேற்கண்ட வட்டாரங்களை 1982—83 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தின் செயல்பாட்டிலிருந்து நீக்கி யுள்ளது, இதனால் இத் திட்டம் செயல்படும் பகுதிகள் குறைந்த தோடு அல்லாமல் இத்திட்டத்திற்கான ஆண்டு நிதி ஒதுக்கீடும் குறைந்தது. மேலும் நீக்கப்பட்ட வட்டாரங்களுக்கு 1983—84 ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் எந்த நிதி உதவியும் அளிக்க இயலாது என மத்திய அரசு தெரிவித்துள்ளது. மேற்கூறிய காரணங்களால் பல பணிகளை இத்திட்டத்திலிருந்து நீக்க வேண்டியுள்ளது. அவற்றில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டு உள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள உழவர் பயிற்சிப் பள்ளி, புஞ்சைப்பயிர் சாகுபடி, நடமாடும் மண் பரிசோதனை நிலையம் ஆகிய பணிகளும், தருமபுரி மாவட்டத்தில் உழவர் பயிற்சிப்பள்ளி, நடமாடும் மண் பரிசோதனை நிலையம் ஆகிய பணிகளும் அடங்கும்.

இருப்பினும் இராமநாதபுரம் மாவட்டம் பொறுத்தவரை மேற்கூறிய பணிகளை மாநிலத் திட்டத்தின் கீழ் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்ற பரிந்துரை வேளாண்மை இயக்கு நரிடமிருந்து பெறப்பட்டு, இரண்டு மாதங்களுக்கு (மார்ச், ஏப்ரல், 1983) இத்திட்டங்களைத் தற்காலிகமாகத் தொடர ஆணை இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளது. மாநிலத் திட்டத் தின் கீழ் மேற்படி திட்டங்களை மேலும் தொடர்வது பற்றிய முடிவு, வேளாண்மை இயக்குநரிடமிருந்து விரிவான கருத்துரு பெற்ற பிறகு எடுக்கப்படும்.

தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை உழவர் பயிற்சிப்பள்ளி, நடமாடும் மண் பரிசோதனை நிலையம் ஆகியவை மாநில நிதியின் கீழ் செயல்பட 1—4—1982 முதல் மாற்றப்பட்டு உள்ளன.

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், மேட்டுப் பாளையம் வட்டம், பரணி மாணூர் அத்திக்கடவு மலைகளில் வசிக்கின்ற ஆதிவாசிகள் மீது காவலர் பல வழக்குகளைப் போடுகிற நிலமையைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் திர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 76,23,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. பொ. உந்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினருக்கும் கொடுத்து வந்த உணவுப் பொருட்கள் இடையில் பாதியாகக் குறைக்கப்பட்டதை மீண்டும் முழுமையாகக் கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 76,23,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம், குரும்பூரில் காவல்நிலையம் அமைப்பது குறித்து விவாதிக்க நாண் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 76,23,95,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

கோரிக்கை எண். 16 — தீயணைப்புப் பணிகள் :

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,64,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :



''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,64,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைமை இடங்களில் உள்ள தீயணைப்பு நிலையங்களில் நவீன இயந்திரங்கள் வாங்குதல் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,64,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,64,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. தி. நா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புப் பேருந்துகள் எந்த நேரமும் தண்ணீருடன் வைத்திருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,64,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் சாத்தான் குளம் தொகுதி சாத்தான் குளத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,64,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை, தீயணைப்புத் துறை மீதான .கொள்கை விளக்கக் குறிப்புகள்* மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை நான் படித்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்குப் பிறகு என்னுடைய எண்ணத்தை வெளியிடலாம் என்று நான் கருதுகிறேன். அதற்கு அனுமதி கோருகிறேன்.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறை, தமிழ்நாடு தீயணைப்புத்துறை ஆகியவை மீதான விவாதத்தில் திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் அந்த மானியக் கோரிக்கையினைப் பற்றி கழகத் தொண்டன் என்ற முறையில் சிலவற்றைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

" இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும் "

என்றார் திருவள்ளுவர். அந்தக் குறளை நான் இங்கே நினைவு படுத்தும்போது ஆளும் தரப்பிலே உள்ளவர்களும் அவர்களுக்கு உறுதுணையாக உள்ளவர்களும் அந்தக் குறளை எண்ணிப் பார்த்து நான் பேசுபவற்றைப் பொறுத்துக் கொள்ள வேண்டும், கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அதையும் பார்த்து விட்டுப்பேச வேண்டுமென்று நான் சொல்லுகின்றேன்.

திரு. என். கிட்டப்பா : திராவிட பாரம்பரியம்— அண்ணா வழியில் ஆட்சி நடத்துகிறோம் என்று பேசப்படும் காலத்தில் தான் அண்ணா மதித்த, பெரியாரின் கொள்கைகளைத் தோளில் தூக்கித் திரியும் தமிழர் தளபதி திரு. கி. வீரமணியை ராஜபாளையம் அருகில் மம்சாபுரத்தில் கல்லால் அடித்த காட்சியைக் காண முடிந்தது. இந் நிகழ்ச்சியைப் பற்றிய விசாரணை இன்னும் வந்ததாகத் தெரியவில்லை.

* 930–1007 ஆம் பக்கங்களில் இணைப்பு II, III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



தஞ்சைப் பஞ்ச பூமியாகிவிட்டது வேறு விஷயம். நெற்களஞ்சியம் எனப் பெயர் பெற்ற மாவட்டம் அரிசிக்கு ஆலவட்டம் போடுகின்றது. அதைப் பற்றி நான் இங்கே பேச வரவில்லை. ஆனால், அறுவடைக் காலங்களில் அறுவடைக்கு வருகின்ற கூலியாட்கள் பெறும் கூலியை நெல்லாகப் பெறுவது தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வழக்கம்.

(முற்பகல் 10–40)

அண்மையில் அரசு போட்ட அவசரச் சட்டத்தால் கூலியாகப் பெற்ற நெல்லைக் கூடக் கொண்டு போக முடியாமல் தொழிலாளிகள் படும் வேதனையை விவரிக்க முடியாது. அண்மையில் நான் கண்கூடாகப் பார்த்தேன். அப்படிப்பட்டவர்களிடமிருந்து, அவர்கள் கூலியாகப் பெற்றுச் சென்ற நெல்லை நமது காவல் துறையினர்—நமது என்று தான் சொல்கிறேன்—பிடுங்கிச் சென்றார்கள். நெல்லை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள் ; அவைகள் இருந்த பைகளை எங்களிடத்தில் தந்து விடுங்கள் என்று அந்தக் கூலிகள் கெஞ்சிக் கேட்டுக் கொண்டும்கூட பைகள் கூடத் தரப்படவில்லை. இதை நிரூபிக்க முடியுமா என்று கேட்டால், நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

பெரும் பயங்கரவாதி என்று வர்ணிக்கப்பட்ட அகரம் நாராயணசாமியைப் பிடித்து ஏழாண்டு சிறைத் தண்டனையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மகிழ்ச்சியடைகிறேன்; காவல் துறையை அதற்காக நான் பாராட்டுகிறேன்.

சாதாரணமாக போலீஸ் என்றால் நடைமுறைகளை மீறினால் மன்னித்து விடலாம்.

ஆனால் இந்தத் தமிழகத்தில் ஏழாண்டுக் காலமாக முதல் அமைச்சராக இருந்து ஆட்சி புரிந்து, இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற, இந்த மண்ணின் மைந்தராகிய டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தியத் துணைக் கண்டப் பிரதமர் மதிப்பிற்குரிய மாண்புமிகு அம்மையார் அவர்களை விமான நிலையத்தில் வரவேற்கச் செல்கிறார்; அதுவும் அழைப்பு வந்த பிறகுதான் செல்கிறார். .ஆனால் அவரை அனுமதிக்க வேண்டிய ஒரு காவல் துறை உயர் அதிகாரி கலைஞர் கையைப் பிடித்து இழுத்துத் தள்ளியிருக்கிறார். இதற்கு முன்னாலே எங்களுடைய கட்சியின் துணைத் தலைவரவர்கள் இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பியிருக்கிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் கே. டி. கோசல்ராம், அன்பரசு அனைவரும் சொல்லியும் கேட்கவில்லை என்றால் அது சட்டத்தை மீறியதாகாதா ? மேலிட உத்தரவு என்கிறார். மேலிடம் என்றால் எது அதைத் தெரிந்துக் கொள்ள மக்கள் ஆசைப்படுகிறார்கள்.

இந்த நிலை இன்றைய தினம் முதலமைச்சராக இருக்கின்ற நமது மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுக்கு—அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக சீக்கிரத்திலே வந்து விட வேண்டுமென்று நான் ஆசைப்பட வில்லை. ஆனாலும் எதிர்க் கட்சித் தலைவராக அவர் வந்து—அப்படியொரு நிலைமை ஏற்பட்டு விடுமேயானால் எப்படித் துடிதுடிப்பார்கள் ஆளுங் கட்சியிலே உள்ளவர்கள் என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நாடறிந்து, மக்கள் மதிக்கின்ற தலைவரையே அப்படி போலீஸ் தரக் குறைவாக நடத்துகிறது என்றால், சாதாரண பாமர மக்களை, என்னைப் போன்றவர்களை எவ்வளவு மிருகத்தனமாக நடத்துவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

இண்டர்போலுக்குத் தலைமை வகித்த எஃப். வி. அருள் ஐ.ஜி. யாக இருந்து பெருமை சேர்த்த காவல் துறை; இந்தியத் துணைக் கண்டத்திலேயே காவல் துறைக்குப் .பெயர் பெற்ற தமிழ்நாடு எவ்வளவு தரம் தாழ்ந்து போய் விட்டது என்பதை எண்ணும்போது வெட்கப்படுகிறோம், வேதனைப்படுகிறோம். அண்ணா அவர்கள் வேறொரு விஷயம் சம்பந்தமாகக் கூறும்போது, வெட்கப் படுகிறோம், வேதனைப்படுகிறோம், விசாரப்படுகிறோம் என்று சொன்னார்கள். அதையேதான் நானும் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

திருவாளர்கள் தினகரன் கே. பி. கந்தசாமி, வை. கோபால்சாமி, எம்.பி., நெல்லை நெடுமாறன் இவர்களெல்லாம் இ.பி. கோ. 307 ஆவது பிரிவின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்கள். சாதாரண பிரிவுகளை நமது காவல் துறையினர் போடுவதில்லை. முக்கியமாக அவர்கள் போடுவதெல்லாம் இரண்டே இரண்டு பிரிவுகள், ஒன்று 302, மற்றொன்று 307.

திருவாளர்கள் கே. பி. கந்தசாமி, வை. கோபால்சாமி, எம்.பி., இருவரும் தேர்தல் குழுவில் உள்ளவர்கள். நெல்லை நெடுமாறன் அந்தத் தொகுதி வேட்பாளர். ஜனநாயக முறைப்படி தேர்தலையும் வைத்து விட்டு, பிரச்சாரத்திற்கும் வழி விட்டுவிட்டு, பிற்பாடு கொலை முயற்சி வழக்கு போடுகிறீர்கள்.





ஆட்சியில் இருப்பவரைத் திருப்திப்படுத்த வேண்டும், அவர்களுக்கு மகிழ்ச்சி கொடுக்க வேண்டும் என்பதற்காக காவல் துறையில் உள்ளவர்கள் ஓர வஞ்சகமாக நடக்கக் கூடாது. எல்லோரும் அப்படி நடக்கிறார்கள் என்று நான் சொல்ல மாட்டேன். சில பலர் அப்படி நடந்துக் காட்டிக் கொள்கிறார்கள். இது நாட்டுக்கு நல்லதல்ல. நிச்சயமாக இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

அடுத்து, ஓரிரு நாட்களுக்கு முன்பு நமது சென்னை மாநகரத்திலே ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. மரியாதையாகப் பேசுங்கள் என்று சொன்ன ஒரே காரணத்திற்காக இரு மாணவர்களை மிருகத்தனமாக நமது காவல் துறையினர் தாக்கியிருக்கிறார்கள். எலும்பு முறிவு ஏற்படும் அளவுக்குத் தடியால் அடித்திருக்கிறார்கள். காது, கைகளில் ரத்தம் வழியும் அளவுக்கு வெறியுடன் தாக்கியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் மகன் குலோத்துங்கன், அவரது நண்பர் ஷைலேஸ் ஆகிய இருவருக்கும் அந்தநிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலும் விட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. அவர்களைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அண்ணா சாலை காவல் நிலையம் என்றுநினைக்கிறேன் நான் சொல்வது சரியாக இருக்குமானால், தனது நினைவு சரியாக இருக்குமானால், அண்ணா சாலை காவல்நிலையத்திற்கு அழைத்துச்சென்று உடைகளை எல்லாம் கழட்டி, நிர்வாணமாக அடித்தார்கள் என்று நான் கேள்விப்படவில்லை—போனால் போகிறது என்று அண்டர்வேரோடு விட்டு விட்டு, அவர்களை அடித்திருக்கிறார்கள். இந்த நிலை மாற்றப்பட .வேண்டும். ஆளும் கட்சியில் உள்ளவர்கள் கூட இதை ஆதரிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இத்தனைக்கும் அந்த மாணவர்கள் செய்த தவறு என்ன ? மாலை ஏழு மணிக்கு பூங்காவிலே பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

இறுதியாக எனது தொகுதியான மயிலாடுதுறை காவல்துறை பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். வாதி-பிரதிவாதி இரு மனுதாரர்களுக்குமிடையில் இரண்டு பேர்களிடமிருந்தும் பணத்தைப் பெற்றுக் கொண்டு—எல்லோரும் அல்ல, குறிப்பாகச் சிலர்—இரு தரப்பு மீதும் வழக்குகளை தொடுத்து வருகின்றனர். இதை நிரூபிக்க முடியுமா என்று கேட்டால் நிச்சயமாக நான் பொறுப் பேற்றுக் கொள்கிறேன். நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். மயிலாடுதுறையிலே உள்ள காவல் துறையினர் உண்மைக்குப் புறம்பான வகையில் வழக்குகளைப் போட்டு வருகிறார்கள். சிலபல நாட்களுக்கு முன்னாலே கூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் செங்குட்டுவன் மீது அப்படிப்பட்ட தவறான வழக்கு போடப்பட்டு, 307 ஆவது பிரிவின்

கீழ் கைது செய்யப்பட்டு அங்கிருந்து நாகைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கேயிருந்து நீதித் துறை பாதுகாப்போடு ஜாமீனிலே விடப்பட்டு இருப்பதாக தந்தி மூலமாக நான் நேற்றைய தினம் செய்தி அறிந்தேன்.

அடுத்து மயிலாடுதுறை பெண் காவலர்களுக்கு தனிக் குடியிருப்புகள் கட்டித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பெண்களுக்கு பாதுகாப்புத் தர வேண்டுமென்று எண்ணம் உள்ள அரசு அதை நிச்சயமாகச் செய்ய வேண்டும். மயிலாடுதுறையில் உள்ள பெண் காவலர்களுக்கு தனிக் குடியிருப்புகள் கட்டித் தர வேண்டும் என்று சொல்வதற்குக் காரணம் இருக்கிறது அதை நான் வேண்டுமானால் தனியாகச் சொல்கிறேன். இங்கே சொல்வது அவ்வளவு இங்கிதமாக இருக்காது என்ற எண்ணத்தினால்.

அடுத்து, மயிலாடுதுறையில் தற்போது உள்ள மக்கள் தொகை பெருக்கத்தின் அடிப்படையிலே இப்போது உள்ள நிலையினை மாற்றி, மயிலாடுதுறையில் இப்போது ஒரே ஒரு காவல் நிலையம் இருக்கிறது. ஆனால் இப்போது அதை இரண்டாகப் பிரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நான் கேள்விப்படுகிறேன். இந்த நிலை ஏற்படுமானால், குறிப்பாக மயிலாடுதுறை நகரத்தின் ஒரு பகுதியில், அதாவது கிழக்கே, மற்றொன்று கூறைநாடு பகுதியிலேயும், இரண்டு காவல் நிலையங்களை அமைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுக்க நான் ஆசைப்படுகிறேன்.

அடுத்து, மயிலாடுதுறை தீ அணைப்பு நிலையத்தில், இதற்கு முன்னால் பல்லாண்டுக் காலமாக நீர் தாங்கி வண்டி ஒன்றும், இழுக்கும் ஊர்தி ஒன்றும் இயங்கிக் கொண்டிருந்தன. ஆனால் தற்போது சில காலமாக நீர் தாங்கி வண்டி ஒன்று மட்டுமே உள்ளது. இழுக்கும் ஊர்தி ஒன்று இருந்தது. வேறு இடத்திற்கு அது மாற்றப்பட்டுள்ளது, அதற்கான காரணம் என்ன என்று தெரியவில்லை. இவ்வளவு பெரிய நக்ரத்தில் இருந்து அந்த ஊர்தி மாற்றப்படுவதற்கான காரணத்தை என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை. தெளிவு இல்லாத என்னைப் போன்றவர்களுக்கு நீங்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எனவே இரண்டு வண்டிகள் அங்கு பணியாற்றிட ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒருவரையொருவர் கெடுக்காமல் வாழ முடியும்





என்ற நிலையும், ஒருவரையொருவர் பகைக்காமல் வளர முடியும் என்ற நிலையும் நிலைநாட்டப்படுவதைத்தான் நான் விரும்புகிறேன் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நினைவு கூர்ந்து என் உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

(முற்பகல் 10–50)

* திரு. மி. வின்சென்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல்துறை, தீயணைப்புத்துறை ஆகிய மானியக் கோரிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பு தந்தமைக்கு எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலேயே, தமிழ்நாட்டிலேதான் சட்டம்-ஒழுங்கு சீராக நடைபெறுகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

உலகப் புகழ் பெற்ற பெடரல் போலீசுக்கும், ஸ்காட்லேன்ட்யார்ட் போலீசுக்கும் இருக்கின்ற எலக்ட்ரானிக் எகுப்மென்ட்ஸ்களும், கம்ப்யூட்டர் வசதிகளும், கம்யூனிகேஷன் வசதிகளும், ஹெலிகாப்டர் வசதிகளும் நமது தமிழக காவல் துறைக்கு இருக்குமானால் உலகமே வியக்கும் அளவிற்கு, உலகத்திலே புகழ் பெற்று விளங்கும் அளவிற்கு நிர்வாகத் திறன் கொண்டதாக அது அமையும் என்பதை சந்தேகத்திற்கு இடம் இல்லாத வகையில் அந்தத் துறை நிரூபித்துக்கொண்டு இருக்கிறது. அண்மையில் டெல்லி மாநகரில் நடந்த டி.ஐ.ஜி., மற்றும் ஐ.ஜி. கான்பரன்சில் மற்ற மாநிலங்களின் அதிகாரிகள் தெரிந்துகொள்கிற அளவிற்கு நம்முடைய நிர்வாக முறையையும், செயல்முறைகளையும் அவர்கள் கேட்டு தெரிந்து கொண்டார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் உண்மையிலேயே நம்முடைய அதிகாரிகள் திறமையை நாம் மெச்ச வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், சட்டமும் ஒழுங்கும் சீரான முறையில் செயல்படுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டுதான் அண்மையில் நடந்து முடிந்த பெரியகுளம் நாடாளுமன்றத் தேர்தலும், திருச்செந்தூர் சட்டமன்றத் தேர்தலும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த இரண்டு தேர்தல்களிலும் எந்த ஒரு அசம்பாவிதமும் கூட நடைபெறாத அளவிற்கு தேர்தல்கள் நடந்து முடிந்து இருக்கின்றன என்பதை எல்லா உறுப்பினர்களும் ஒப்புக்கொள்வார்கள். பெரிய கலவரங்கள் என்று சொல்கிற அளவிற்கு அண்மைக்காலங்களில் தொழிலாளர்கள் பிரச்னையானாலும் சரி, மாணவர்கள் பிரச்சினையானாலும்

[திரு. மி. வின்சென்ட்] [1983 ஏப்ரல் 7

கொள்ளைக்காரி பூலான்தேவி சொன்னால் அதையும் ஏற்றுக் கொள்கின்ற நிலை இந்திய நாட்டில் இருக்கிறது என்றால் சிறைச் சாலையிலும் சட்டம் வளைகிறது என்றால், ஏ இந்திய நாடே வெள்ளைக்காரனே வெளியே போ என்று சொல்லி, இந்தியா சுதந்திரம் இதற்காகத்தான் பெற்றாயா என்ற கேள்வியை நான் பணிவோடு கேட்க விரும்புகிறேன்.

ஆனால், தமிழ்நாட்டில் பூலான்தேவியும் இல்லை, மான்சிங்கும் இல்லை. அவர்கள் இங்கே இருந்தால் விலங்குபோட்டு வீதியிலே நிறுத்துகின்ற சக்தி தமிழக போலீசாருக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். வடநாட்டுக்காரர்கள் 15—11—1981-ல் காட்பாடி அருகே வேலூர்-சித்தூர் ரோட்டில் 20-க்கு மேற்பட்ட பயங்கர ஆயுதங்களுடன் வந்து 3 பஸ்களையும் 3 லாரிகளையும் லூட் பண்ணுகிறார்கள். விழித்தெழுந்தது தமிழக போலீஸ். அந்தக் கொள்ளைக்காரர்கள் எங்கே சென்றார்களோ அந்த பீகார் மாநிலத்திற்கே செல்கிறார்கள். அங்கே ரெய்டு பண்ணி, பாலமாவு டிஸ்டிரிக்டில் 8 கொள்ளைக்காரர்களைக் கைது செய்து, கையோடு இழுத்துவந்து, அன்றையதினம் 44,444 ரூபாய்க்கான பொருட்களை மீட்டது மட்டுமல்ல ; 7 ஆண்டு கடுங்காவல் தண்டனையும் (ரிகரஸ் இம்பிரசன்மென்ட்) வாங்கித் தந்த பெருமை நம்முடைய தமிழக போலீசாருக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிலைகள் திருட்டு என்றால் கணக்கில் வராமலும் தெரியாமலும் இருந்த காலம் ஒன்று இருந்தது. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னால் சிலை திருட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. 1981 ஆம் ஆண்டில் 52 சிலை திருட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டன. 1982-ல் 38 சிலை திருட்டுக்கள் கண்டுபிடிக் கப்பட்டன. 1983-ல் சுமார் 3 மாத காலத்தில் 16 சிலை திருட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலுள்ள குத்தாலம் என்ற இடத்தில் நடராஜர் சிலை திருடப்பட்டு, அது அமெரிக்காவுக்குப்போய்விட்டது இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 6 இலட்சம் யு.எஸ். டாலர், அதாவது 60 இலட்சம் ரூபாய்க்கு விற்கப்பட்ட அந்த நடராஜர் சிலையை போர்ட் Worth Texas Kimbell ஆர்ட் மியூசியத்தில் நம்முடைய போலீசார் கண்டுபிடித்துவிட்டார்கள்.



1983 ஏப்ரல் 7] [திரு. மி. வின்சென்ட்]

அதைப்போன்று ஸ்காட்லட்யார்டு போலீஸ் உதவியுடன் பத்தூர் விஸ்வநாதசாமி சிலை இலண்டனில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கடல் கடந்து போகும் சிலைகளைக்கூட கண்டு பிடிக்கும் நம்முடைய போலீஸ், கடல் கடந்து வந்த ஆப்ரகாம் சிலையையும் வெகு விரைவில் கண்டுபிடிக்கும் என்று நான் நம்புகிறேன்.

[முற்பகல் 11-00]

முக்கியமான சிலைகள் திருட்டுப் போகாமல் இருக்க வில்லேஜ் விஜிலன்ஸ் கமிட்டி போட்டிருப்பதை முழுவதுமாக நான் பாராட்டுகிறேன். முக்கியச் சிலைகளை புகைப்படம் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப் பட்டிருப்பதை நான் முழுமையாகப் பாராட்டுகிறேன். இத்தகைய திறன் படைத்த தமிழக காவல் துறைக்கு புகழாரம் சூட்டுகிறது நேஷனல் போலீஸ் கமிஷன் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆட்சியிலே இருந்த ஜனதா அரசு நேஷனல் போலீஸ் கமிஷனை அமைத்தது. எமர்ஜென்சி நேரத்தில் போலீசார் அதிகார துஷ்பிரயோகம் செய்து நடந்துக்கொண்டார்கள் என்பதைப் பற்றியும், ஷா கமிஷன் Report பற்றியும், ஆக இரண்டையும் வைத்துப் போடப்பட்ட பட்ட கமிஷனாகும் அது. மைய கேபினட்டின் செக்ரட்டரியாக இருந்த, மேற்கு வங்கத்தின் கவர்னராக இருந்த தர்மவீர் ஐ.சி.எஸ். என்பவரின் தலைமையிலே அது நியமிக்கப்பட்டது. அந்தக் கமிஷன் தன்னுடைய முதல் அறிக்கையை, 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தாக்கல் செய்தது. அதன் பிறகு 8 பெரிய அளவிலான Volumes கொண்ட முழுஅறிக்கையினை அந்தக் கமிஷன் மத்திய அரசிடம் தாக்கல் செய்தது. ஆனால் 15 நாட்களுக்கு முன்னால்தான், அந்த அறிக்கையினை நாடாளுமன்றத்திலே மத்திய அரசு தாக்கல் செய்தது.

ஒரு அறிக்கை நாடாளுமன்றத்திலானாலும் சரி, சட்டமன்றத்திலானாலும் சரி, அது தாக்கல் செய்யப்படுகிற நேரத்திலே அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதையும் வைத்துத்தான் அதன்மீது சமர்ப்பிக்கப்படுவது வழக்கம். ஆனால் இந்த அறிக்கையின் மீது மத்திய அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அதற்கு என்ன காரணம் சொல்கிறது என்றால், சம்பந்தம் இல்லாத விஷயங்களில் புகுந்து தேவையில்லாத ஆலோசனைகளை யாரும் கொடுக்காத வகையில் கொடுத்திருக்கிறது என்று மத்திய அரசு சொல்லி, அதை மாநில அரசுகளுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வேண்டுமென்றால், மாநில அரசுகள் அதன் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லி அனுப்பிவிட்டது.

விவசாயிகள் பிரச்சினையானாலும் சரி, பெரிய கலவரங்கள் எதுவும் நடக்கவில்லை என்ற காரணத்தால், தொழிலாளர்களுக்கும், மாணவர்களுக்கும், விவசாயிகளுக்கும் நான் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்ற அதே நேரத்தில், சின்னப்பிரச்சினையாக இருந்தாலும், அதைப் பெரிதாக எண்ணிச் செயல்பட்டு, வருமுன் காத்த ''இன்டலிஜென்ட் துறையை'' You did a good jo என்று நான் வாழ்த்துகிறேன்.

1980—82-ஆம் ஆண்டுகளில் சொத்து குறித்து நிகழ்ந்த குற்றங்கள் பற்றிய புகார்கள் ஆண்டுக்காண்டு குறைந்து வருவதும், அவைகளைக் கண்டுபிடிப்பது அதிகமாகவும் காவல் துறையின் திறமைக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. 1980-ஆம் ஆண்டில் ஆதாயத்திற்காகக் கொலை, கொள்ளை, வழிப்பறி, கன்னக்களவு, பெரிய திருட்டுகள், சிறிய திருட்டுகள் கால்நடை திருட்டுகள் போன்ற குற்றங்களுக்காக வந்த புகார்களின் எண்ணிக்கை 39, 087. ஆனால், அடுத்த ஆண்டு 1981-ஆம் ஆண்டில் வந்த புகார்களின் எண்ணிக்கை 38,029, என்ற அளவில் குறைகிறது. 1982 ஆம் ஆண்டில்வந்த புகார்களின் எண்ணிக்கை 34,680 என்ற அளவில் குறைகிறது. இப்படி இரண்டு ஆண்டுக் காலத்தில் 5 ஆயிரம் குற்றங்கள் குறைந்து இருக்கின்றன என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், அந்தக் குற்றங்களைக் கண்டுபிடித்ததற்கான விழுக்காடு 59 சதவிகிதம்—1980-ஆம் ஆண்டில். 1981-ஆம் ஆண்டில் அது 69 சதவிகிதம் என்ற அளவிற்கு உயர்கிறது. 1982-ஆம் ஆண்டில் அது 72 சதவிகிதம் என்ற அளவிற்கு உயர்கிறது. ஆகவே, அந்த அளவிற்கு குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த அளவிற்கு இந்திய நாட்டிலே வேறு எந்த மாநிலத்திலும் நிலைமைகள் இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெளிவாக்க விரும்புகிறேன்.

களவாடப்பட்டு மீட்கப்பட்ட பொருள்களின் சதவிகிதம் இந்தியாவில் 1973-இல் 24.1 சதவீதத்தில் இருந்து, 1974-இல் 28.3 சதவீதமாக உயர்ந்தது. மறுபடியும் 27.3 சதவீதமாக 1975-ஆம் ஆண்டில் குறைந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், மீட்கப்பட்ட பொருள்களின் குறைந்த பட்ச மதிப்பு 1978-ஆம் ஆண்டில் 41.2 சதவிகிதமாகும். 1982-இல் அது 58.85 சதவிகிதம் என்ற அளவிலும் இருந்துள்ளது.





தமிழ்நாட்டைத் தவிர, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் 50 சதவீதத்திற்கு மேல் சொத்து வழக்குகளைக் கண்டுபிடிக்காமல் இருக்கும்போது, 50 சதவீதத்திற்கு மேல் வெற்றி பெறாமல் இருக்கும்போது, நம்முடைய தமிழ்நாட்டிலே 1980 முதல் தொடர்ந்து 60 சதவீதத்திற்கு அதிகமாக சொத்து வழக்குகளைக் கண்டுபிடித்து வெற்றி கண்டுள்ளார்கள். இது, தமிழக காவல் துறையின் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜப்பான் நாட்டில் முதல் 5 பெரிய நகரங்களான டோக்கியோ, யோககாமா, ஒசாகா, நகோயா, நாகசாகி போன்ற நகரங்களில் 100 பேர்களுக்கு ஒரு போலீஸ் என்ற அளவில் நியமிக்கப்பட்டு சட்டம் ஒழுங்கை காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய தமிழ்நாட்டில் 4.8 கோடி மக்கள் இருந்தபோதிலும்கூட, 54,000 போலீஸ் அலுவலர்களே இருந்தாலும்கூட, ஆயிரத்திற்கு ஒருவர் என்ற நிலையில் இருந்தாலும்கூட சட்டம் ஒழுங்கு வெகு சீராக இருப்பதை அறிந்து உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன்.

ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் போக்குவரத்தை சீர் படுத்துவதற்கு டி.வி.க்களை வைத்து மேலதிகாரிகள் கண்காணித்து வருவதைப் போல சென்னையிலும் அப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்து, போக்குவரத்து இடையூறுகளைத் தவிர்க்க அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தொடர்ந்து காவல் துறையினரை கொலைக்காரர்களோ கொள்ளைக்காரர்களோ, இன்றைய தினம் வரையில் சவால்விட்டு நடந்ததாக வரலாறு இல்லை. ஆனால், வடநாடுகளைப் பொறுத்த வரையில், உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசத்தில் தொடர்ந்து பல்வேறு கொலைகாரர்களும், கொள்ளைக்காரர்களும் அரசை மிரட்டுகின்ற அளவுக்கு சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன என்பதையும் இன்றைய தினம் அவர்களை அடக்கமுடியாமல், அவர்களே சரணடைய முன்வந்தார்கள் என்ற நிலையையும் பார்க்கிறோம். மத்தியப்பிரதேச முதலமைச்சரே ஒரு கொள்ளைக்காரிக்காக காத்திருந்தார் என்பதை எண்ணிப்பார்க்கும்போது வளருகின்ற சமுதாயத்திலே குற்றவாளிகளுக்கு இது அச்சத்தை உருவாக்காது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போன்று சிறையில் ஒரே அறையில் ஒரு ஆணையும் இன்னொரு ஆணையும் சேர்த்து வைக்க முடியாத நிலை இங்கே இருக்கிறது. ஆனால், ஆணோடுதான் நான் வாழ்வேன் என்று

[திரு. மி. வின்சென்ட்] [1983 ஏப்ரல் 7

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அந்த அறிக்கையின் 6-வது வால்யூமில் அந்தந்த மாநில காவல் துறை சம்பந்தமாக, சரியாக நடக்கிறதா என்று ஆய்வு நடத்தி, அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. By Farless Preponderance என்ற முறையில், அரசியல் தலையீடே இல்லாமல் மிகத் திறமையாகச் செயல்படுகின்ற போலீஸ் துறை தமிழகத்தில் இருப்பதாக கோடிட்டுக் காட்டியிருக்கிறது. அந்த அறிக்கை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோலத்தான் சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் 1861 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்தியன் போலீஸ் ஆக்ட் சில முறைகளில் மாற்றம் காணவேண்டும் என்று பரிந்துரை செய்தது. அந்தப் பரிந்துரைகளை இன்றையதினம் மத்திய அரசு நிராகரித்துவிட்டது.

ஆனால் அதேபோல இன்னொரு பரிந்துரை, — வீக்கர் செக்ஷன் ஆப் தி சொசைட்டி — அவர்களிடம் போலீஸ் துறையினர் பாசத்தோடு நடந்துகொள்ள வேண்டும் என்பது. அதை இன்றைய தினம் நம்முடைய காவல் துறை மானியக் கோரிக்கை அறிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'காவலர் பொதுமக்கள் தொடர்பு நீடிக்க வேண்டும்' என்று சொல்லி, அவர்கள் கூறிய பரிந்துரை தமிழகத்திற்கு கிடைப்பதற்கு முன்னாலே செயல்படும்படி போட்டிருக்கிறார்கள். அதே போல அவர்களின் இன்னொரு பரிந்துரை வில்லேஜ் போலீஸ் பற்றியது. வில்லேஜ் போலீசார்கள் என்று கிராமங்களிலே நியமிக்கப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதை வில்லேஜ் விஜிலென்ஸ் கமிட்டி என்ற பெயரால் சிலை திருட்டுக்களை தடுப்பதற்காக, தமிழக அரசு போட்டு , அந்தப் பரிந்துரையையும் செயலாக்கியிருக்கிறது. அந்த அளவுக்கு கமிஷன் போட்ட தீர்மானங்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னால், அவைகளை செயல் முறைக்கு கொண்டு வரும் அரசு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான், அந்த அரசுக்கு தான் இத்தகைய பெருமை இருக்கிறது. அந்தப் பெருமையை சேர்ந்த உத்தமருக்கு புகழ் பாட வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல எக்கனாமிக் அப்பென்ஸஸ் விங்[Economic Offences wing]என்றுஒன்றைஉருவாக்க வேண்டும் என்றுஅந்தஅறிக்கையிலே பரிந்துரைசெய்யப்பட்டிருக்கிறது. எப்படி சென்டர் அமைப்பிலே, சென்டிரல் பீரோ ஆப் இன்வெஸ்டிகேஷன் என்று அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ,அதேபோல மாநிலங்களிலுள்ள பொருளாதார குற்றங்களை கண்டு பிடித்து விசாரிக்க எக்னாமிக் அஃபென்ஸஸ் விங் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே இந்த அரசுக்கு நான் என்னுடைய பரிந்துரையாக வைக்க விரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 7] [திரு. மி. வின்சென்ட்]

கவர்மெண்ட் ஆப் இந்தியாவின் பப்ளிகேஷனில், 'Crimes in India' 1980-ல் பக்கம் 102—103-ல் குறிப்பிடப்பட்டுள்ள கொலைகள் கொள்ளைகள் குற்றங்கள் போன்றவற்றை மற்ற மாநிலங்களோடு தமிழ்கத்தை ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், தமிழகத்தின் அதன் ஆவரேஜ் பெரும்பாலும் குறைவாகவே இருப்பதை உணரலாம். 1980 ஆம் ஆண்டு கொலைகளை மட்டும், நேஷனல் அளவிலே எடுத்துக் கணக்குப் பார்த்தால், உத்திரபிரதேசத்திலே 39 சதவீகிதம் கொலைகள் நடந்திருக்கிறது என்றால், தமிழகத்தில் அது 6 சதவீதம் என்று தான் கணக்கிடப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களை விட இது மிகமிக குறைவு. அதேபோல கொலை என்று வராத மரணம் விளைவிக்கும் குற்றம் புரிந்த செயல் என்று பார்த்தால், உத்தரபிரதேசத்திலே 36 சதவீதமாக இருந்தால் தமிழ்நாட்டில் 4 சதவீதம் மட்டும் தான். இதுவும் மற்ற மாநிலங்களை விடக் குறைவுதான். ரேப்பை பொறுத்த மட்டில் டில்லியில் ஆயிரம் ஜனத் தொகைக்கு 42 பேர்கள் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் 2 பேருக்கும் குறைவாக இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கொள்ளைகளைப் பொறுத்த மட்டில் உத்திரப் பிரதேசத்திலே 410 குற்றங்கள் பதிவாகி இருக்கின்றன என்றால், தமிழகத்தில் வெறும் 19 தான் பதிவாகி இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் வெறும் 19 தான் பதிவாகி இருக்கின்றது என்பதையும் இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். இதர குற்றங்களான ஆர்ம்ஸ் ஆக்ட் ஓ.பி.எம். ஆக்ட், கேம்பிளிங் அன்ட் ரெயில்வே ஆக்ட் போன்றவற்றைக் கணக்கிட்டுப் பார்த்தால் தமிழ்நாட்டில் 8.4 சதவீகிதம் நடந்திருக்கின்றது. இது மற்ற மாநிலங்களை விட மிக மிக குறைவு என்று சொல்கிற நேரத்தில் குஜாரத்தில்27.2சதவீதம்குற்றங்க்ள்நடத்திருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து துப்பாக்கிச் சூட்டைப் பொறுத்தவரையில் 1979]ல் உத்தரபிரதேசத்தில் 508 முறை சுட்டியிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் 16 முறைதான். 1980]ல் உத்தரபிரதேசத்தில் 414 முறை துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கின்றது. ஆனால் தமிழ்நாட்டில் 18 முறைதான். 1981ல் 895 முறை உத்தர பிரதேசத்தில் சுட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் 22 முறைதான். நான் இவற்றை எல்லாம் குறிப்பிடுகின்ற நேரத்தில் அன்னையின் பூமி உத்தரபிரதேசத்தில் பனையளவு குற்றங்கள் நடந்தால் அண்ணாவின் பூமி தமிழ்நாட்டில் தினையளவுதான் குற்றங்கள் நடக்கின்றது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. மீ. வின்சென்ட்] [1983 ஏப்ரல் 7]

தமிழ்நாட்டில் போலீஸ் ராஜ்யம் நடக்கின்றது என்றார்கள். ஆதாரம் சொல்ல முடியுமா ? (Peoples Union civil Libery) என்ற யூனியன் அளித்த Report யை மேற்கோள் காட்டி போலீஸ் ராஜ்யம் என்ற விரிவாக எழுதினார்கள். ஆனால் இந்த அமைப்பு அரசியல் பின்னணியைச் சார்ந்தது என்பதை ஆதாரத்துடன் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்

1982 ஆம் ஆண்டு மத்தியில் அகில இந்தியக் குழுக் கூட்டம் நடந்தது. இந்த நிர்வாகக் குழுவின் ஒரு உறுப்பினராக திரு. சோ. இராமசாமி அவர்களும் இருக்கிறார். ஆனால் இந்த நிர்வாகக் குழு கூடும்போது நக்ஸல்பாரிகளைக் கொன்றுவிட்டு மோதலில் இறந்ததாகச் சொல்வது போலியானது என்று இந்தக் குழு தீர்மானம் போட்டது. இந்தத் தீர்மானதைப் போட்டு விட்டு வன்முறை எங்கே இருந்து வந்தாலும் கண்டிக்கத்தக்கது என்று தீர்மானம் போடப்பட்டது. அந்த நேரத்தில் திரு. சோ அவர்கள் போலீஸ் வன்முறை எந்த அளவுக்குக் கண்டிக்கத்தக்க தோ அதே அளவுக்கு போலீசுக்கும் மக்களுக்கும் எதிரான வன் முறையும் கண்டனத்திற்குரியது என்று தீர்மானம் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தை நிர்வாகக் குழுவினர் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர். அதற்குள் காரணம் என்ன ? ஜீஸ்டிஸ் தார்குண்டே என்ன சொன்னார் தெரியுமா? இதை நாம் ஏற்றுக்கொண்டால் இடதுசாரி இளைஞர்களின் நம்பிக்கை யையும் நாம் இழந்துவிட வேண்டிய கட்டாய சூழ்நிலை உருவாகும் என்று கூறி அந்தத் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது அதனால் திரு. சோ அந்தக் குழுவிலே நீடிக்க முடியாத நிலைமை உருவாகி அவர் அந்த குழுவிலே இருந்து வெளியேறு கின்ற சூழ்நிலை உருவானது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுகின்றபோது இந்த அமைப்பின் உள் நோக்கம் புரிகிறதல்லவா ? எந்தப் பின்னணியைச் சார்ந்தது என்பது விளங்குகிறதல்லவா ? அதற்கு அரசியல் வண்ணம் பூசப்பட்டி ருப்பது பளிச்சிடுகின்றதல்லவா ? நடுநிலையிலிருந்து தவறியது தெரிகிறதல்லவா ? பீப்பிள்ஸ் யூனியன் ஆப் சிவில் லிபர்ட்டி என்பது அரசியல் உள்நோக்கம் கொண்டது வெட்ட வெளிச்சம் ஆகின்றதல்லவா ? இதை எல்லாம் நான் இந்த நேரத்தில் குறிப் பிடுவது என்னுடைய கடமையாகும். இந்த யூனியன் அரசியல் நோக்கத்தோடு கருத்துக்களைச் சொல்லியது போலீஸ் ராஜ்யம் என்று. ஆனால் இது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. தமிழ் நாட்டில் போலீஸ் ராஜ்யம் என்பது உண்மையல்ல. போலீஸ் துறையில் சரியான சிறப்பான நிர்வாகத்திற்கு இந்திய நாட்டுக்கே வழிகாட்டியாக தமிழ்நாட்டு போலீஸ் துறை செயல் பட்டு வருகின்றது என்பதுதான் உண்மை என்பதை இந்த நேரத்தில் தெரிவிப்பது என்னுடைய கடமையாகும்.



1983 ஏப்ரல் 7] [திரு. மீ. வின்சென்ட்]

அடுத்து பெண் காவல் துறை வலுப்படுத்தப்பட்டிருக்கின்றது. பெண் ஆய்வாளர்கள் 82 பேர்களும், பெண் தலைமைக் காவலர்கள் 74 பேர்களும், பெண் காவலர்கள் 666 பேர்களும் நியமிக்கப்பட்டு அந்தத்துறை வலுப்படுத்தப்பட்டு இருக்கின்றது

அடுத்து பெண்களை லாக் அப் பண்ணக்கூடாது. எல் கொயரிக்காக 6 மணிக்குப் பிறகு அழைக்கக்கூடாது, பெண் களைப் பொறுத்தவரையில் பெண் போலீஸ்தான் விசாரிக்க வேண்டும் என்ற ஆணைகள் இடப்பட்டிருப்பது கற்புக்கரசிகள் பிறந்த இந்த மண்ணில் உள்ள பெண் இனத்திற்கு பெருமை சேர்ப்பதாகும். இது புரட்சித் தலைவரின் ஒரு பெரிய சமுதாய சீர்திருத்தமாகும்.

அடுத்து 9 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் தமிழ் நாட்டின் பெண் காவலர்கள்தான் அழைக்கப்பட்டார்கள். இது எல்லாம் நம்முடைய தமிழ்நாட்டுப் பெண் இனத்திற்கு பெருமை அல்லவா.

கடற்கரையிலும், காவேரி ரிவர் பகுதிகளிலும் சாராயம் காய்ச்சுபவர்களும், குற்றங்கள் செய்பவர்களும் கடலில் நீந்தி அல்லது காவேரி ஆற்றில் நீந்தி சென்று விட்டால் அவர்களைப் பிடிக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. அதைத் தவிர்க்க லாஞ்ச் மோட்டார் படகுகள் போலீஸ் துறைக்கு வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

(முற்பகல் 11–10)

எல்லா காவல் நிலையங்களுக்கும் உடனடியாக தொலைப்பேசி வசதியை செய்து கொடுக்க இந்த அரசுமுன்வர வேண்டும் என்பதையும், வாக்கிடாக்கி போன்றவற்றை கொண்டு வந்து நம்முடைய, போலீஸ் துறையை நவீனப்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சின் இந்த நேரத்தில் [illegible] கடைசி விருப்பதை ஒன்றை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் [illegible] உறுப்பினர் திரு. இட்டப்பா அவர்கள் பாதுகாப்பு இல்லை என்று குறிப்பிட்டார்கள். அவருக்கு சில தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். நான் அதற்கு ஒன்றை பாதுகாப்புக்காக தமது தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு அவர்கள் இன்ஸ்பெக்டர் ரேங்கில் [illegible] புரட்சித் தலைவர் அதிகாரியை கொடுத்தார்கள். ஆனால் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அதை [illegible] மறுத்து விட்டார்கள்.

கார் வசதியைப் பெற்றுக்கொண்ட நமது எதிர்க்கட்சி தலைவர் அவர்கள், தனி அறை வசதியைப் பெற்றுக்கொண்ட நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், டெலிபோன் வசதியைப் பெற்றுக்கொண்ட நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பணியாளர்கள் வசதியைப் பெற்றுக்கொண்ட நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், என் பாதுகாப்புக்காக போடப்பட்ட இன்ஸ்பெக்டர் வசதியை அவர் பெற்றுக்கொள்ள மறுத்தார் கள் என்பது எங்களுக்கு புரியவில்லை. அவர் தானாக முன் வந்து அந்த பாதுகாப்பு வசதியை பெற்றுக்கொள்ள முன்வர வேண்டும் என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய தமிழக காவல் துறையைப் பொறுத்தவரையில் அது (Scotlaud yard and Federal Sovict U io ) க்கும் சவால் விடுகின்ற அளவுக்கு உலகத்திலேயே தலைச்சிறந்த காவல் துறை என்ற பெயரைப் பெறும் அந்த பெறுமையை தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் பெற்றுத்தருவார் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டி புரட்சித்தலைவர் இருக்கும் வரை தமிழ் நாடு வளரும், தமிழன் வளர்வான், தமிழ்நாடு பாதுகாக்கப் படும், தமிழன் பாதுகாக்கப்படுவான் என்று இந்த நேரத்தில் சொல்லி வாழ்க எங்கள் தலைவர் அவருடைய தொண்டு எனக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. நா. சுந்தரராஜ : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கின்ற காவல் துறை மற்றும் தீயணைப்புத்துறை சம்பந்தமான மானியக் கோரிக்கைகள் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை எடுத்து வைக்கமுன்வருகிறேன். இன்றைக்கு காவல் துறைஎன்பதுதமிழகத் தில் மொத்தமாக எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால் அதிகாரிகளிலிருந்து சாதாரண கான்ஸ்டேபிள் வரையில் சுமார் 55 ஆயிரம் பேர் தான் இருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தின் ஜனத்தொகை கிட்டத்தட்ட 4½ கோடிக்கு மேல் இருக்கிறார்கள் இந்த அளவுக்கு ஒரு சிறிய எண்ணிக்கையை வைத்து மிகப் பெரிய எண்ணிக்கையில் உள்ள மக்கள் மத்தியில் அவர்கள் நடமாடுவது மட்டுமல்ல சட்டம் ஒழுங்கு பல்வேறு குற்றங் களை தடுக்கவும், நடைப்பெற்ற குற்றங்களை தண்டிக்கவும் அவர்கள் இன்றைக்கு கடுமையாக உழைக்கவேண்டிய கட்டாயத் தில் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணர்வோம். ஆனால் அதே நேரத்தில் ஒட்டுமொத்தமாக பணியில் இருக் கிறவர்கள் அத்தனைப் பேரும் சிறந்தவர்கள், தலைச்சிறந்த வர்கள், நாணயம் உள்ளவர்கள் என்று சொல்லிவிடவும் முடியாது. அதிலும் சிலர் தவறு செய்யக்கூடியவர்கள் இருக் கிறார்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.





குறிப்பாக இன்றைக்கு நம்முடைய அரசு கொடுத்து இருக்கின்ற ள்ளிவிவரத்தின் அடிப்படையில் 1980 ஆம் ஆண்டு ஆதாயத் திற்காகக் செய்யப்பட்ட கொலைகள் 53, அதில் கண்டுபிடிக்கப் பட்டவை 28, 1981 ஆம் ஆண்டு 66 கொலைகள் நடைப்பெற்று யிருக்கின்றன, அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 35, அதேபோல் 1982 ஆம் ஆண்டு 52 கொலைகள் நடைபெற்றிருக்கின்றன அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 24, அதேபோல் பெரிய திருட்டுகள் 1980 ஆம் ஆண்டு 25,991 அதில் கண்டு பிடிக்கப்பட்டவை 15,802, 1981ம் ஆண்டு 25,623 அதில் கண்டு பிடிக்கப்பட்டவை 18,218, அடுத்து 1982ம் ஆண்டு 23,654 அதில் கண்டு பிடிக்கப்பட்டவை 15,744 என்ற புள்ளி விவரத்தை கொடுத்திருக்கிறார்கள். ஆக ஒட்டு மொத்தமாக அதைக் கணக்கிட்டுப்பார்த்தால், சராசரியாக 50 சதவீதம் கண்டு பிடிக்கப்படாமல் இருக்கிறது. இந்த 50 சதவீதம் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையிலே கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. புகார் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கின்ற கொலைக் குற்றங்கள் எத்தனை, புகார்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கின்ற பெரிய திருட்டுகள் எண்ணிக்கை என்ன என்பதை இங்கே குறிப்பிடவில்லை பலபேர் புகார்கள் கொடுக்காமல் இருக் கிறார்கள். கொடுத்தாலும் ஏற்றுக்கொள்வதற்கு பல காவல் துறை அதிகாரிகள் தயாராக இல்லை. ஆகவே இந்த புகார்கள் அடிப்படையில் எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்கள் இந்த அரசாங்கத்தை பாராட்ட வேண்டிய கடமை உணர்வு இருந்ததாலும், என்னைப் பொறுத்த வரையில், நான் நிச்சயமாக பாராட்ட முடியாது என் பதை சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல் அஸிஸ்டென்ட் சப் இன்ஸ்பெக்டர்களை நீங்கள் சப்இன்ஸ்பெக்டராக உயர்வு செய்திருக்கிறீர்கள். அதைப் போலவே டெபுடி இன்ஸ்பெக்டர்களை இன்ஸ்பெக்டர்களாக உயர்வுசெய்திருக்கிறீர்கள், ஆனால் பர்ஸ்ட் கிரேட் கான்ஸ்டபிள் என்று சொல்லக்கூடிய பட்டதாரி இளைஞர்கள் 1972 ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்டவர்கள் அவர்கள் தொடர்ந்து இன்றைக்கு வரைக்கும் அதே பணியில் இருந்துகொண்டிருக்கிறார்கள். எந்த விதமான பதவி உயர்வும் கொடுக்கப்படவில்லை. ஆகவே அரசாங்கம் அவர்களுடைய கோரிக்கையை பரிசீலித்து அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

அடுத்ததாக நான் இங்கே பேசுகின்ற நேரத்திலே சட்ட மன்ற உறுப்பினர்கள் இங்கே இத்தனை பேர்கள் இருக்கிற நேரத்திலே நம்மைச் சுற்றி நம் காவல் துறை விஜிலன்ஸ் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் சுற்றிவர இருக்கிறார்கள் குறிப்பாகச்

[திரு. நா. சுந்தரராஜ்]

சொல்லவேண்டுமானால் ஆளுங்கட்சிப் பக்கம் அவர்கள் இருக்க மாட்டார்கள். ஆனால் எதிர்க்கட்சிகள் பக்கத்திலே நாங்கள் டீ சாப்பிடப்போனாலும் அங்கே இருப்பார்கள், லாபியிலே உட்கார்ந்து இருந்தாலும் அங்கே இருப்பார்கள், எங்கெங்கெல்லாம் நடமாடுகிறோமோ அங்கேயெல்லாம் இருப்பார்கள், காரணம் என்ன ? நாங்கள் எங்கேயும் எதையும் யாருடனும் பேசமுடியாத அளவுக்கு இன்றைக்கு ஒரு கைதிகளைப் போல போலீஸ் துறையினுடைய இலாகா சட்டமன்றத்திலே பணியாற்றிக்கொண்டு இருக்கிறது என்பதை நான் கட்டாயமாகச் சொல்லவேண்டும்.

சுமார் 2½ ஆண்டு காலமாக நீங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததில் இருந்தது இது நாள்வரை நம்முடைய சிடி போலீஸ் ஆக்ட் செக்ஷன் 41 இன் மூலம் கோட்டைக்குப் பக்கத்தில் 3, 4 பேர்கள் சேர்ந்து வரக் கூடாது என்ற சட்டம் தொடர்ந்து பின்பற்றப்படுகிறது கமிஷ்னர் ஆப் போலீஸ் மூலமாக. ஏன் ? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நீங்கள் மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகளைச் செய்ய வேண்டிய நீங்கள் ஏன் மக்களைக் கண்டு பயப்படுகிறீர்கள் என்பது என்னுடைய கேள்வியாக இருக்கிறது.

அன்றைக்கு இந்த அவையிலே மிக முக்கியமான பிரச்சினை எழுப்பப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைத் தலைவர் மட்டும் பேசினார். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு கலைஞர் அவர்கள் வெறும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மட்டுமல்ல. எதிர்க்கட்சித் தலைவரும்கூட, முன்னாள் முதலமைச்சரும்கூட, பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சென்ற வாரம் வந்த நேரத்திலே அவரை வரவேற்க சென்ற நேரத்திலே—அரசாங்கம் அழைத்த அழைப்பின் பேரில் சென்ற நேரத்திலே—அவரை கையைப் பிடித்து முறுக்கியிருக்கிறார் ஒரு காவல் துறை அதிகாரி, ரமணன் என்று பெயர். அன்றைக்கே இந்தப் பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டது. அதற்கு நம்முடைய அவைமுன்னவர் அவர்கள் விளக்கம் தந்து நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னார்கள். ஆனால் 2 நாட்கள் கழித்து திருச்சியிலே நிருபர்கள் கூட்டத்திலே பேசிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒழுங்கான வரிசையிலே வந்திருந்தால் அந்தத்தவறு நடந்திருக்காது. ஆகவே ஒழுங்கை அவர் மீறியிருக்கிறார் என்பதைப் போன்ற ஒரு உணர்வோடு பத்திரிகை நிருபர்கள் மத்தியிலே பேசியிருக்கிறார். அந்த அதிகாரி இதைப் புதிதாகச் செய்யவில்லை. இதற்கு முன்னால் மத்திய உள்துறை அமைச்சராக இருந்த ஜனாதிபதி பதவிக்கு வேட்பாளராக போட்டியிடக்கூடிய அளவுக்கு இருந்த திரு ஜெயில்சிங் அவர்கள் சென்னைக்கு வந்த நேரத்திலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள்





[திரு. நா. சுந்தரராஜ்]

குறிப்பாக, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு.எம். பி. சுப்பிரமணியம், திரு. சிவாஜிகணேசன், அருமைச் சகோதரர் சித்தன் நம்முடைய திரு ஹாஜா செரீப் ஆகியவர்கள் எல்லாம் சென்ற நேரத்திலே 3 பேர்களை உள்ளே வரவிட்டுவிட்டு திரு. ஹாஜா செரீப் அவர்களை மட்டும் தடுத்து நிறுத்தியிருக்கிறார். அவர் உள்ளே வரக் கூடாது என்று சொல்லியிருக்கிறார். அவர்கள் எவ்வளவோ சொல்லியிருக்கிறார்கள். வோட்டு கேட்க வருகிறார் என்றும் அவர் சட்ட மன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவரை விடுங்கள் என்று சொன்ன நேரத்திலே முடியாது என்று மறுத்த நேரத்திலே அந்த 3 பேர்களும் வெளியே வந்துவிட்டார்கள் திரு. ஹாஜா செரீப் அவர்களோடு எதிர்ப்பைத் தெரிவிக்கின்ற வகையில், ஆகவே இதுபோன்ற ஒரு அதிகாரி பல வெளிநாட்டு பிரமுகர்கள், உள்நாட்டு தலைவர்கள் வருகிற நேரத்திலே மற்றவர்களை அவமானப்படுத்துகிற நோக்கத்தோடு அங்கே நியமனம் செய்யப்பட்டிருக்கிறாரா, என்று நான் அரசாங்கத்தை பார்த்துக் கேட்க விரும்புகிறேன். அதுபோன்ற அதிகாரிகளை அனுமதிப்பதினால் அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுப்பார்களானால் முன்னோடும் வாய்க்கால் பின்னோடும் என்பதை நீங்கள் மனத்திலே வைத்துக் கொள்ளுங்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

எதிர்க்கட்சியாக இருக்கிறவர்கள் நாளைக்கு ஆளுங்கட்சியாக மாறலாம். ஆளுங்கட்சியாக இருக்கிறவர்கள் எதிர்கட்சியாக வரலாம். அன்றைக்கும் இதேபோல்தான் உணர்வு வரும். ஆளுங்கட்சியிலே இருக்கக்கூடிய தலைவர்களுக்கு நாம் நல்லவர்களாக நடக்கவேண்டும். நல்லவர்களாக நடப்பதன் மூலம் சலுகையைப் பெறவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு வருமானால் வளருமானால் நிச்சயமாக எதிர்க்கட்சி யாராக இருந்தாலும் அவர்கள்மீது இதுபோன்ற தவறான நடவடிக்கை மேற்கொள்வதற்கு அந்த அதிகாரிகளுக்கு துணிவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு தமிழ்நாட்டிலே எந்த அளவுக்கு சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டு இருக்கிறது என்பதற்கு உதாரணங்கள் சொல்ல வேண்டுமானால் ஏராளமாகச் சொல்லமுடியும். குறிப்பாக சென்னை நகரத்தை எடுத்துக் கொண்டால் இரவிலே பெண்கள் நடமாட முடியவில்லை. உண்மை தான். யாரும் மறுக்க முடியாது. இதற்குப் பல பேர்கள் அளித்த பேட்டியைப் பார்க்கலாம். நாட்டியக்கலை ஆசிரியர் சொல்லியிருக்கிறார்கள், மாலை 6 மணிக்கு மேல் தான் நாட்டியக் கலையைச் சொல்லிக்கொடுக்க முடியாது

[திரு. நா. சுந்தரராஜ்]

காரணம் மாலையிலே சாராயம் குடித்துவிட்டு கலாட்டா செய்கிறவர்கள் உள்ளதால் பெண்கள் வரப் பயப்படுகிறார்கள். ஆகவே 6 மணிக்கு முன்பாகவே அவர்களையெல்லாம் வீட்டுக்குப் போகச் சொல்லிவிடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

(முற்பகல் 11-20)

இன்றைக்கு இருக்கிற சூழ்நிலை என்னவென்றால், சென்னையில் ஆர். கே. மட் சாலை என்று ஒன்று இருக்கிறது. அங்கே ஒரு மதுக்கடை—ஃபாரின் பிராந்திக் கடை—ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த மதுக்கடை எங்கே இருக்கிறதென்றால், சத்திய சாயி மேல் நிலைப் பள்ளிக்குப் பக்கத்திலே இருக்கிறது; அதற்கு பக்கத்திலே சென்யிட் ஜான்ஸ் மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அசரத் அலி தர்க்கா அங்கே இருக்கிறது; ஞானசுந்தரி விநாயகர் கோவில் அங்கே இருக்கிறது; இவற்றிற்கு மத்தியில் அந்த மதுக்கடை இருக்கிறது; அந்த மதுக்கடையை வைத்திருப்பவர் ஒரு பெரிய புள்ளி; பண வசதி உடையவர்; அந்த மதுக்கடையை அங்கேயிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டு கங்காதரன், இராதாகிருஷ்ணன் என்பவர்கள் உண்ணா விரதம் இருப்பதற்காக முயற்சி எடுத்திருக்கிறார்கள்; உண்ணா விரதம் இருக்கக்கூடாது என்று அந்த பெரிய புள்ளி அவர்களை கண்டித்திருக்கிறார். அதையும் மீறி அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிற நேரத்தில் அவர் அந்த பகுதியைச் சேர்ந்த துணை ஆய்வாளர், சப்-இன்ஸ்பெக்டரிடம் சொல்லி அவர்கள் மீது பல்வேறு வழக்குகளை தொடரச் சொல்லுகிறார் அதற்காக அவர்களை இரவோடு இரவாக 16-ஆம் தேதி இ-5 காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, அந்த இருவர் முகத்திலும் சாராயத்தை ஊற்றி, டாக்டர் சர்டிபிகேட் வாங்கி, அதற்கு பின்னாலே லாக்கப்பிலே வைத்து அடித்திருக்கிறார்கள். அதில் இராதாகிருஷ்ணன் என்பவருடைய கை உடைந்திருக்கிறது. தர்மலிங்கம் என்ற சப்-இன்ஸ்பெக்டர் அடித்திருக்கிறார். அந்த தர்மலிங்கம், சப் இன்ஸ்பெக்டர் பற்றி நமக்கு முன்னாலேயே நன்றாகத் தெரியும். காரணம் வேப்பேரி போலீஸ் ஸ்டேஷனில் சென்ற ஆண்டு அவர், பணிபுரிகின்ற நேரத்தில், அண்ணனையும் தங்கையையும் ஒன்றாக உடலுறவு செய்துகொள்ள வேண்டுமென்று தன்னுடைய போலீஸ் ஸ்டேஷனில் கட்டாயப்படுத்தி, அதன் விளைவாக அந்த அண்ணன்காரர் அடிபட்டு பின்னால் செத்துப் போனார். அந்த தர்மலிங்கத்திற்கு என்ன தண்டனை தெரியுமா] 15 நாட்கள் சஸ்பென்ஷன்; அதற்கு பின்னால் அதுவும் கேஷுவல் லீவாக மாற்றப்பட்டிருக்கிறது.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு காவல் துறை அதிகாரியைப் பற்றி ஒரு குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டு ஏற்கனவே இந்த அவையிலே பேசப்பட்டதா, இல்லையா என்பது எனக்கு நினைவில்லை. இருப்பினும் அவர் அதற்கான விளக்கத்தைச் சொல்ல முடியாத சூழ்நிலையில் தனிப்பட்ட முறையிலே ஒரு பயங்கரமான குற்றச்சாட்டைச் சொல்வது முறையானதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா : அரசினுடைய சார்பில் பதில் சொல்கிற போது அது உண்மையா, இல்லையா என்று சொல்லிவிடலாமே; இல்லையென்றால் எந்தவிதமான குற்றச்சாட்டையும் இங்கே சொல்ல முடியாமல் போய்விடும். உங்களிடம் பதில் இருந்தால் இப்போதே சொல்லலாம். அல்லது பின்னாலே சொல்லலாம். அதை பேசவே முடியாது என்றால் போலீஸ் மானியத்தில் எதைத் தான் பேசுவது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாற்றுத்தலைவர் அவர்களே, செய்கிற கடமைகளில் குறை சொல்வது என்பது ஒன்று; ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் சொல்வது அவர் செய்யத்தவறிய கடமையைப்பற்றியோ அல்லது செய்த கடமைகளில் ஏற்பட்ட தவறுகளைப் பற்றியோ அல்ல. அண்ணன், தங்கையை உடலுறவு செய்துகொள்ள வைத்தார் என்று அவர் சொல்லியிருக்கிறார். அது எப்படி முறையாகும் ? அதை எப்படி நிரூபிக்க முடியும் ? வழக்கு பதியவில்லை என்று சொல்லுங்கள்; வழக்கில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லலாம். ஆனால் இதை எப்படிச் சொல்லுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. துரைமுருகன் : மாற்றுத் தலைவர் அவர்களே, அதாவது அதிகாரிகளைப் பற்றிச் சொல்லக் கூடாது; பதில் சொல்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பில்லை; அதனால் அவர்களைப் பற்றி மென்ஷன் பண்ணக் கூடாது என்று மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இந்த அவையிலே மணவாளன் என்ஜினியர் அவர்களைப் பற்றியும், நாகராஜன், ஐ.ஏ.எஸ். அவர்களைப் பற்றியும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார். அவர்களுக்கும் வாய்ப்பு கிடையாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் கேட்கவேண்டும். நான் சொன்னது அதிகாரிகளை குறைச் சொல்லக் கூடாது என்றல்ல

[திரு. ச. இராமச்சந்திரன்]

அவர்கள் சொல்கிற குற்றச்சாட்டு வேறு. லாப்சஸ் எப்பொது வேண்டுமானாலும் சொல்லலாம். அதிகாரிகள் கடமையை செய்கிறபோது, தகராறு நடந்தது, வழக்கு பதிவு செய்ய வில்லை; அல்லது வழக்கு பதிவு செய்தார்கள் பின்னால் விட்டுவிட்டார்கள். அவர்களுடைய தவறுகளை சுட்டிக் காட்டுவது தவறல்ல. ஆனால் மாண்புமிகு சுந்தரராஜ் அவர்கள் அதோடு நிற்கவில்லை, மேலே ஒரு படி சென்று அது கிடைத்த தகவல் இல்லை; இவர் வற்புறுத்தினார் என்று சொல்கிறார்கள். அது எப்படி பொருத்தமாக இருக்கும்? அதை எப்படி நிருபிப்பதற்கு முடியும்? நாளைக்கு யாரைபற்றி வேண்டுமானாலும், அப்படி சொல்ல ஆரம்பித்து விட்டால் என்ன நிலைமையாகும்?

திரு. ந. சுந்தரராஜ் : மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் பெர்மிஷனோடு செய்தித் தாளிலே வந்த ஒரு செய்தியை சொல்கிறேன். வேப்பேரி போலீஸ் லாக்கப்பிலே வாலிபர் படுகொலை. தங்கையோடு படுக்கவைத்த கொடுமை................ (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் ஏற்கனவே பலமுறை தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஒரு குற்றச்சாட்டைக் கூறுகிற பொழுது, அது செய்தித்தாளிலே வந்தது, ஆகவே, நான் கூறுகிறேன் என்று சொல்வது நிச்சயமாக முறை அல்ல, அது மரபும் அல்ல. நான் சொல்வது, இது ஒரு பயங்கர மான குற்றச்சாட்டு. இந்தப் பயங்கரமான ஒரு குற்றச் சாட்டை நிருபிக்க தாங்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறீர் களா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) :மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீங்கள் சொல்லிய குற்றச் சாட்டுக்கு நிரூபணம் இருக்கிறதா, அல்லது பொறுப் பேற்றுக் கொண்டு பேசுகிறீர்களா? இந்த இரண்டில் எதை வைத்துப் பேசுகிறீர்கள் என்று விளக்கம் கேட்கிறார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இது மாதிரி நீங்கள் சொல்லவே கூடாது. அமைச்சர் பொறுப் பேற்று விசாரித்து பதில் சொல்ல வேண்டும். (கூச்சல்-குழப்பம்).



மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) : இந்தப் பொறுப்பிலே இருப்பதாலேதான் கேட்கிறேன். ஒன்று பொறுப்பெற்றுக் கொண்டு பேசவேண்டும். தனிப்பட்ட அதிகாரி யைப்பற்றி பேசுவது முறை அல்ல.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள் ஒரு குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி இன் னமும் சொல்லவும் இருக்கிறார்கள். அரசுக்கு விசாரிக்க அதிகாரம் இருக்கிறது. பின்னாலே பதில் சொல்ல வாய்ப்பிருக்கிறது. பின்னாலே பதில் சொல்ல வாய்ப்பிருக் கிறபோது, அமைச்சர் இவ்வாறு கூறினால், அவையிலே எதுவுமே கூற முடியாது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) : அவையிலே, எதையுமே, பேச முடியாது. ஒன்று பொறுப் பெற்றுக்கொண்டு பேசவேண்டும். அல்லது ஆதாரத்தோடு பேசவேண்டும். (கூச்சல், குழப்பம்.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கொஞ்சம் பொறுமை யாகக் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தகவலைத் தரலாம். குறைகளைச் சுட்டிக் காட்டலாம். அவர்கள் கடமைகளை ஆற்றுகிறபொழுது இருக் கின்ற குற்றங்களைச் சொல்லலாம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்கு அப்பாற்பட்டு தனிபட்ட முறை யில் ஒரு அதிகாரியைப் பற்றி குற்றச்சாட்டு கூடாது என்பது நம்முடைய சட்டமன்ற விதிகளில் தெளிவாக இருக்கிறது. பத்திரிகையிலே வந்த செய்தியைப் பார்த்து நீங்கள் பேசுகிறீர்கள். பத்திரிகையிலே வந்த செய்தியைப் பார்த்து சட்டப் பேரவையில் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லக் கூடாது என்பதற்கு ஏற்கனவே பல தீர்ப்புகள் நம்முடைய சட்டப் பேரவையிலே இருக்கின்றன. உங்களுக்குத் தெரிந் ததை, நீங்கள் உண்மை என்று கருதுவதை, நம்புவதைத் தான் சொல்லாம். ஆனால், அப்படிச் சொல்கிறபொழுது அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். அப்படிப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு அதைப் பற்றி விசாரித்து, அது உண்மையில்லை யென்றால் தாங்கள் எந்தத் தண்டனைக்கு ஆளாகிக்கொள்கிறீர்கள் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (கூச்சல், குழப்பம்).

Thiru V. Krishnamurthy: He is very irresponsible and making irrelevant............ (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) : தயவுசெய்து அமைதியாக இருக்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்.)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

Thiru. V. Krishnamurthi : He should withdraw those remarks

Thiru. N. V. N. Somu: Pleas: expurge those remarks

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : என்ன? தண்டனை பெரிய தண்டனை.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சொல்வதற்கு அவர்களில் யாராவது மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் எழுந்து பதில் சொன்னால், அதை நான் கேட்டுக்கொள்ளத் தயாராக, இருக்கிறேன். ஆனால், இதே மற்றத்தில் இன்யைதினம் மாண்புமிகு எதிக்கட்சித் தலைவராக இருக்கிறார்களே அவர்களே கூடச் சொல்லியிருக்கிறார்கள், 'ஸ்வீப்பிங் அலிகேஷன்' போகிற போக்கிலே, புழுதிவாரி தூற்றிவிட்டு போகக் கூடாது என்பது நம்முடைய மரபு என்று. அதற்காகத்தான் நான் சொல்கிறேன், நீங்கள் நம்பினால், உண்மை என்று கருதினால் சொல்லுங்கள். அதற்குப் பிறகு மன்றம் என்ன செய்யலாம் என்பதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. துரைமுருகன் : இதற்கு 'போட்டோ' வா எடுக்க முடியும், சார், சிலவற்றிற்குத்தான் ஆதாரம் இருக்க முடியும்.

It is a Democ acy? we want to know whether it is Assembly or P ivate Company.

(கூச்சல், குழப்பம்)
(முற்பகல் 11—30).

Thi u. V. Krishnamurthy : Pl. Speaker Si : W want your p.otection. How can the Minister say like this

கூச்சல் குழப்பம்

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, அதுபற்றிய ஒரு தீர்ப்பு வேண்டுமானால், நாடாளுமன்றத்தில் துணை சபாநாயகர் அதைப்போல ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் துணை சபாநாயகராக இருக்கின்ற, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. லட்சுமணன் அவர்கள்கூட இது போல ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறார்கள். அதையாவது ஏற்றுக் கொள்வார்களா என்று கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு).

திரு. என்.வி.என். சோமு : தண்டனை என்ற வார்த்தையைச் சொல்லியிருக்கிறார்கள்; அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டும்.



திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சேலத்திலே ரேப் நடந்திருக்கிறது. அரிசனப் பெண்ணைக் கற்பழித்தார்கள் போலீஸ் என்று பேப்பரிலே வந்திருக்கிறது. அதைப் பற்றிப் பேசக் கூடாதா? அதற்கு ஆதாரத்தை வைத்துக்கொண்டுதான் கேட்க வேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் உணர்ச்வசப்பட வேண்டாம். திரு. சுந்தரராஜனே நன்றாகப் பேசுவார், அவருக்குத் துணையாக இவ்வளவு பேர்களா? (குறுக்கீடுகள்) சுந்தரராஜன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரகள் இருந்தால், அது குறித்துப் பேசுவது பற்றி மறுப்பு கிடையாது. (குறுக்கீடு) இதெல்லாம் அவைக் குறிப்பிலே இருக்க வேண்டாம்.

திரு. என்.வி.என். சோமு : தண்டனை என்ற வார்த்தையைச் சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொறுப்பேற்றுக் கொண்டு, அது சரியில்லை என்றால். என்ன தண்டனை ஏற்று கொள்கிறீர்கள் என்ற வழக்காற்றலில்தான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படியொரு தண்டனை கொடுப்பதாக இருந்தாலும் இந்த அவைதான் கொடுக்க முடியுமே தவிர தனிப்பட்ட யாரும் கொடுக்கப் போவதில்லை. உறுப்பினர்களுக்கு இருக்கின்ற உரிமைகள் பாதுகாக்கப்படும், ஒன்றும் பயப்படத் தேவையில்லை பொறுப்பேற்றுக் கொண்டு பேசுவது என்றால் பேசலாம்.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அவர் பேச்சிலே குறுக்கிட்டு பேச வேண்டுமென்பது இல்லை.

On the personal conduct of the cfficial ycu cannot Criticise but you ciriticise the discherge by his ‹ff c‹al cuties.

அப்படி இருக்க அவர் சொன்ன குற்றச்சாட்டை எப்படி நிரூபணம் செய்யப் போகிறார்?

It is Sweeping allegation. How can he prove this?
(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆதாரம் இருந்தால் பேசுங்கள் (குறுக்கீடு).

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இப்படிப் பேசாமல் வேறு எப்படிப் பேசமுடியும் (குறுக்கீடு). கர்நாடகத்திலே ஒரு பெண்ணைக் கொண்டு வந்து காட்டினார்கள். அந்த மாதிரி கொண்டு வந்து

ஹைகோர்ட்டிலே போய் அதற்கான பாதுகாப்பைத் தேடிக் கொண்டார்கள் என்று சொன்னாலும்கூட, அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? வேறு விதமான நடவடிக்கையை, அவர்கள் சொத்து வைத்திருக்கிறார்களே, அதையாவது பறி முதல் செய்வதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கக் கூடாதா? பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கக் கூடாதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதேபோல் இன்றைக்கு சென்னை நகரத்திலே எச் 1 காவல் நிலையத்திலே ஒரு பெண் தெய்வானை என்ற பெண்ணை லாக்கப்பிலே இரவோடு இரவாக 3—4—1983 அன்று அவர்கள் வைத்திருக்கிறார்கள். எந்தக் குற்றமும் செய்யாத நிலையிலே அந்தப் பெண்ணை வேண்டுமென்றே தங்களுடைய உணர்வுக்கு அந்த ஆசைக்கு இணங்கவில்லை என்பதற்காக ஹெட் கான்ஸ்டபிள் 1156 என்பவர் அந்தப் பெண்ணை லாக்கப்பிலே வைத்து அடித்திருக்கிறார்கள்.

முற்பகல் 11—40

அதேபோல் மதுரை மாவட்டம், கருங்காலக்குடி என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒருவரை, அவர்கள் ஒரு ஆண்டுக்கு முன்பாக தற்கொலை செய்துக் கொண்டார் என்று சொல்லி, போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டிலே சொல்லப்பட்டது. ஆனால், ஒரு வருடத்திற்கு பின்னர் ஒரு 8 பேர்கள் மீது 307 செக்ஷன் போட்டு அவர்கள் மீது, அவர்களை தண்டிக்க வேண்டுமென்பதற் காக அங்கே உள்ள அதிகாரிகள் இப்படி நடந்துகொண்டு இருக்கி றார்கள். என்ன காரணம்? அவர்கள் ஏதாவது லஞ்சம் கொடுக்கவில்லை என்ற காரணத்தாலா, என்பது தெரியவில்லை. அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது. (குறுக்கீடுகள்).

அன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உலகத் தமிழ் மாநாடு மிகச் சிறப்பாக நடத்தினார்கள். அதிலே கலந்துகொள்ள நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் மதுரைக்கு வந்த நேரத்தில், அவர்களை வைத்துக்கொண்டு, அந்த விழாவில் பாராட்டிய நேரத்தில் இந்திரா காந்தி அவர்களை 'மதுரை மீனாட்சி மட்டுமல்ல. இந்தியாவின் மீனாட்சி' என்று சொன்னார்கள். நாங்கள் புளகாங்கிதம் அடைந்தோம். ஆனால் சென்னையில் இந்த மாதம் 3-ந் தேதி நடைபெற்ற சைக்கிள் ஊர்வலத்தில் * * * * * * *

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஊர்வலத்தில் எப்படியெல்லாம் குரல் எழுப்பி னார்கள் என்று சொன்னார்கள். அவர்களிடம் டேப் இருந்தால் தான் அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். அவர் டேப் எடுத்து இருக்க வேண்டும். யாரோ ஏதோ சொன் னார்கள் என்பது முறையல்ல. நியாயம் அல்ல. ஏனென் றால்,. என்னவெல்லாம் ஒலிக்க வேண்டும் என்பதை முன்கூட்டியே பத்திரிக்கையில் விளம்பரம் செய்த பிறகுதான் அந்தப் பேரணி நடந்தது என்பதை நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

தயவு செய்து நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அவருக்கு நினைவு குறைவாக அல்லது யாராவது தவறாகச் சொன்னார்களா என்பது எனக்குப் புரியவில்லை. (குறுக்கீடு) நான் பேசுவதற்கு அவைத் தலைவர் அவர்கள் இங்கே உரிமை தந்து இருக்கிறார்கள். நான் 'மீனாட்சி' என்று பேசியது எல்லாம் மீனாட்சி கல்லூரியில் நடைபெற்ற படத்திறப்பு விழா வில். அது கூட அவர்களுக்கு ஞாபகம் இல்லை. (குறுக்கீடு) அந்த மீனாட்சி கல்லூரி கோடம்பாக்கத்தில் இருக்கிறது. ஆனால் நீங்கள் மதுரையில் பேசியதாக ஞாபகம் வைத்து இருக்கிறீர் கள். அந்த வார்த்தை மதுரையில் பயன்படுத்தப்பட்டது அல்ல. நான் மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்களுக்குத் தெரி வித்துக் கொள்வேன். அவர்கள் தலைவரை என்னென்ன வார்த்தைகள் கொண்டு சொல்ல வேண்டும் என்று விரும்புகிறார் களோ அதைப்போல் அவர்கள் தலைவரை அவர் சொல் லட்டும். எனக்கு அக்கரை இல்லை. ஆனால் நான் சொன்ன தாக தயவு செய்து உண்மைக்குப் புறம்பாகச் சொல்ல வேண் டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்தி ரிக்கையில் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகையில் வந்துள் ளது என்பதற்காக அதை இங்கே சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அந்த வார்த்தைகளை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.
I don't want these words to go on rec rd. I won't allow it.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். தவறான தகவல் பத்திரிகைகளில் வந்து விடக்கூடாது என்பதற்காக ஒரு திருத்தம் சொல்ல விரும்புகிறேன். மாண்பு மிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்கள் பேசுகின்ற நேரத் தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு கார்

காட்டமுடியுமா ? கற்பழிக்கப்பட்டார் எனபதற்கு எப்படி ஆதாரத்தைக் கொண்டு வர முடியும் (குறுக்கீடு). அந்தப் பெண்ணைக் கொண்டு வந்து நிறுத்துவதுதான் ஆதாரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களிடம் ஆதாரம் இருந்தால் பேசுங்கள் (குறுக்கீடுகள்) அதைத்தான் சொல்கிறேன். பொறுப்பேற்றுக் கொண்டு பேசுங்கள் (குறுக்கீடு). இதிலே பாயிண்ட் ஆஃப் ஆர்டர் கிடையாது. (குறுக்கீடு). விரைவிலே முடித்து விடுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, பொறுப்பேற்றுக் கொண்டுதான் பேசுகிறேன். அந்த எஸ். ஐ. அந்தக் காரியத்தை நடத்தியதன் விளைவு, கொடுமைப்படுத்தியதன் விளைவாக அண்ணன் இறந்திருக்கிறான். தங்கை காவல் துறை அதிகாரிகளிடத்திலே வந்து மனு கொடுத்திருக்கிறாள். அதன் மீது 15 நாட்கள் அவர் சஸ்பென்சன் செய்யப்பட்டிருக்கிறார். பிறகு வேலூர் ஸ்டேஷனுக்கு மாற்றப்பட்டு, இன்றைக்கு மயிலாப்பூரிலிருந்து, அட்டகாசங்களைச் செய்து கொண்டிருக்கிறார் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. மாண்புமிகுஅமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டு அப்படி இல்லை .என்றால், தண்டனையை ஏற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்கிறார். இதை என்னால் நிருபிக்க முடியவில்லை, அல்லது இதற்கான சான்றுகளைக் காட்ட முடியவில்லை என்று சொல்வார்களானால் நீங்கள் . என்ன தண்டனை அளிக்க வேண்டுமென்று நினைக்கிறீர்களோ, அதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதேபோல் உங்களால் முடியவில்லை என்றால் அந்தத் தண்டனையை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஒரு ஜுடிசியல் என்கொயரி அமையுங்கள். ஒரு நீதிபதியைப் கொண்டு ஒரு விசாரணை அமையுங்கள் தயாரா ?

அடுத்து, இன்றைக்கு திருச்சி மாவட்டம், உடையார் பாளையம் வட்டத்திலே ஜெயங்கொண்டம் சரகத்தில் உள்ள கீழ்க்குடியிருப்பைச் சேர்ந்த ரசோக்கியம் என்பவருடைய மகள் வீட்டிலே இருந்திருக்கிறாள். அவர்களுடைய தாயும் இருந்திருக்கிறார்கள். இரவு 12 மணிக்கு ஒரு நபர் குடித்துவிட்டு வந்து அந்த வீட்டின் கதவைத் தட்டியிருக்கிறார். வெளியே போன தந்தைதான் திரும்பி வருகிறார் போல் இருக்கிறது என்று அந்த வீட்டிலே இருந்த அந்தப் பெண் கதவைத் திறந்த நேரத்தில் ஒரு இளைஞன் குடித்துவிட்டு அந்தப் பெண்ணினுடைய வாயிலே துணியை வைத்துக் கட்டி அவளைக் கற்பழிக்க முயற்சி செய்திருக்கிறான். ஆனால் சத்தம் கேட்டதின் விளைவாக பக்கத்திலே அந்தக் கிராமத்திலிருந்து மக்கள் எல்லாம் சேர்ந்து



அவரைப் பிடித்ததன் விளைவாக காவல் நிலையத்திற்கு அவரை அழைத்துச் சென்றிருக்கிறார்கள். ஆனால் நடவடிக்கை இல்லை. அந்தப் பெண் என்ன நினைக்கிறாள். இந்த அளவிற்கு அவமானம் வந்துவிட்டதே .என்று தற்கொலை செய்துக் கொள்கிறாள். அந்தப் பெண்ணினுடைய பெயர் ஜெகதாம்பாள். என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் ? இதுவரையிலும். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கிட்டத்தட்ட 1 மாதம் 1½ மாதங்கள் ஆகிறது.

அதைப்போல் திருச்சி மாவட்டம், தாழ்ப்டனூர் அரசினர் பள்ளியில் மேல்நிலை வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் இன்றைக்கு கொடுமைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். காரணம் அங்கே உள்ள காவல் நிலையத்தைச் சேர்ந்த ஒரு ஏட்டும் அங்கே உள்ள அதிகாரிகளும் சேர்ந்து அந்த மாணவர்கள் மீது பல்வேறு பொய் வழக்குகளைப் போட்டு, ஒரு சிலருடைய தூண்டுதலின் பேரில் அவர்களை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். பரீட்சை எழுதுவதற்குக்கூட முடியவில்லை. அந்த அளவிற்கு அவர்கள் இன்றைக்கு தடை செய்யப்பட்டிருக்கிறார்கள். என்ற செய்தி நமக்கு வந்திருக்கிறது. அரசாங்கம் இதுவரையிலே ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? இதுவரையில் இல்லை.

அதேபோல் இன்றைக்கு தென் ஆற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டத்தைச் சேர்ந்த தண்டரை கிராமத்தைச் சேர்ந்த முத்துச்சாமி என்பவர் ஓய்வு பெற்று சப்-இன்ஸ்பெக்டர் கள்ள நோட்டு மாற்றினார் என்பதற்காக அவர் தண்டிக்கப்பட்டு பிறகு விடுவிக்கப்பட்டார். ஆனால் இன்றைக்கு அவர் அங்கே உட்கார்ந்துக் கொண்டு அந்தக் கிராமத்திலே உள்ள கோவில் சொத்துக்களை எல்லாம் சாப்பிட்டுக்கொண்டு, மக்களை எல்லாம் மிரட்டி, போலீஸ் ஸ்டேசன் என் கையில்தான் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு, ஆயிரக்கணக்கான ரூபாய்களை மிரட்டி சேர்த்திருப்பதாக நமக்குதகவல்கள்வருகின்றன. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவராமன் அவர்கள் மூலமாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரையில் நீங்கள் அவர் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை, என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல் சென்னையில் ஒரு மோசடி, மிகப் பெரிய உம்மிடி பார்ஸ் (குறுக்கீடு) சுமார் 3½ கோடி ரூபாய் அளவிற்கு மோசடி நடந்து இருப்பதாகச் செய்தி, ஊர்வலங்கள் நடத்தப் பட்டன. ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனால் அவர்கள்

கொடுக்கப்பட்டிருக்கிறது, வீட்டு வாடகைப்படி கொடுக்கப்பட்டு இருக்கிறது. திரு. சண்முகநாதன் என்ற பி. ஏ. கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அவைகள் எல்லாம் அப்படியே பத்திரிகையில் வந்து விடக்கூடாது என்பதற்காக சரியான தகவலைத் தருகிறேன். கார் வசதியை அவர் பெற்றுக்கொள்ளவில்லை. வீட்டு வாடகைப்படியாக 1,500 ரூபாய் பெற்றுக் கொள்ளலாம் என்று சொன்னாலும், அவர் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை. வெறும் ரூ. 100-ஐத் தான் டோக்கனாகப் பெற்றுக்கொள்கிறார்கள். திரு. சண்முக நாதன், பி. ஏ., சஸ்பென்ட் செய்யப்பட்டு இருக்கிறார். பி.ஏ. வாக வேறு யாரையும் போடவில்லை. டைப்ரைட்டர் தரப்பட்டு இருந்தது. அதையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டு விட்டது. எனவே அவர் சொன்னது தவறான தகவல் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் என்ன கருத்து சரியானது என்று சொல்கிறார்களோ அதிலே ஒரு சிறு திருத்தம். பி.ஏ. வாக வேறு யாரையும் போடப்படவில்லை என்று சொன்னார். போடப்படவில்லை என்பது அல்ல, வேண்டாம் என்று அவர் மறுத்து விட்டார்

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம், காவல் துறை பற்றியும் தீயணைப்புப் பணிகள் பற்றியும் ஆளும் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்ததற்காக முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நாடு சுதந்திரம் அடைந்து 36 ஆண்டுகளாகியும் கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்புவரை காவல்துறை என்பது ஒரு துருப்பிடித்த இயந்திரம் போலவும், இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பழுதுபட்ட வண்டிகளையும் வைத்துக் கொண்டு, எங்காவது ஒரு இடத்தில் கலவரம் என்று தகவல் வந்தால் விரைந்து ஓடிச் சென்று நடவடிக்கை எடுக்கமுடியாத நிலையில் அந்த வண்டிகளை உடனே ஸ்டார்ட் செய்ய முடியாமல் போலீஸ்காரர்கள் தள்ளி, தள்ளி, தள்ளாடிக்கொண்டிருப்பது போலவும் இந்த நிலையை மாற்றி, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சித் பொறுப்பை ஏற்றபிறகு, காவல்துறை இன்று இந்தியத் துணைக்கண்டத்திலேயே ஒளிமிக்க ஒரு துறையாக பிரகாசிக்கிறது. அதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது என்பதை ஆணித்தரமாக நான் கூறமுடியும்.





ஒரு நாட்டின் சமுதாயம் முன்னேற வேண்டுமென்றால் போலீஸ் இலாகா திறமையோடு செயல்பட வேண்டும் ; திறமை மிக்க போலீசார் அதிலே இருக்க வேண்டும் ; அவர்களுக்கு போதுமான வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் ; காவல் துறையில் எங்கும் யாரும் தலையிடாமல் இருக்க வேண்டும்; தலையிடுகிறவர்களுக்கு சாதகமாக தீர்வு காணக்கூடாது என்ற இந்தக் கொள்கைகளை தன்னுடைய உயிர்மூச்சாகக் கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த காவல்துறையை தன்னுடைய பொறுப்பில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மானியக் கோரிக்கைகள்மீது இன்றைக்கு தொடக்க உரையிலே கருத்துக்களைத் தெரிவித்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் ஏதோ கடந்த காலத்தில் தாங்கள் தர்மத்தின் புத்திரர்கள் போலவும், சத்தியத் தொண்டர்கள் போலவும் பேசினார்கள். ஏதோ பெரியகுளம் தேர்தல், திருச்செந்தூர் தேர்தல் என்று சில விவரங்களை உண்மைக்கு மாறாகப் பேசினார்கள். 1973-ல் இந்த நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது திண்டுக்கல் தேர்தலில் நடைபெற்ற சம்பவத்தை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அன்று நடந்து வந்த பாதையை நீங்கள் சற்று திரும்பிப்பாருங்கள்.

அன்றைக்கு வத்தலகுண்டு ஆறுமுகம் கொலை செய்யப்பட்
டார். அது தொடர்பாக எத்தனை அண்ணா திராவிட முன்
னேற்றக் கழகத் தொண்டர்கள் மீது பொய் வழக்கு போட்டார்
கள் ? மாண்புமிகு முசிறிபுத்தன் அவர்கள், அகில இந்திய
எம். ஜி. ஆர். மன்றத் தலைவராக இருக்கக்கூடியவர், திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியில் 1973 ஆம் ஆண்டில் சென்னை
அண்ணா சாலையில் ஜன நடமாட்டம் அதிகமாக உள்ள வெல்
லிங்டன் தியேட்டருக்கு அருகில் மாலை 6 மணி அளவில் முன்
னாள் முதலமைச்சரின் நண்பர் வேணுச் செட்டி என்பவரை
கொலை செய்வதற்கு அரிவாளை கையில் வைத்துக்கொண்டு,
பயங்கர ஆயுதத்தை வைத்துக்கொண்டு, ஓட ஓட விரட்டினார்
என்று குற்றஞ்சாட்டினார்கள். அருமை நண்பர் முசிறி
புத்தன் அவர்களைப் பற்றித் எல்லோருக்கும் தெரியும். அவ
ருடைய காலில் போலியோ வந்து, சரியாக நடக்கக்கூட முடி
யாமல் இருப்பவர் அவர். அவர் வேணுச் செட்டி என்பவரை
கொலை செய்ய துரத்தினார், ஓடினார், ஓடினார், ஓடினார்,
ஓடி ஓடி விரட்டினார் என்று சொன்னார்கள். தப்பி ஓடியவர்
இராயப்பேட்டை காவல் நிலையத்தில் தஞ்சம் அடைந்ததாகப்
புகார் கொடுத்தார்கள். அதன் காரணமாக நண்பர் முசிறிப்
புத்தன் மீது 307-வது செக்ஷன் மற்றும் 6 செக்ஷன்களின்கீழ்

வழக்குப் போட்டார்கள். இதை எங்காவது உலகம் ஒப்புக்கொள்ளுமா ? நண்பர் முசிறிபுத்தன் ஓடினார், துரத்தினார் என்றால் அது நடக்கக்கூடியதா ? அவர் ஓடினார் என்பதில் எந்த அளவுக்கு உண்மை இருக்க முடியும் ? அது இந்த நாட்டு மக்களை ஏமாற்றுவதற்கு திட்டமிட்டு செய்கிற பொய் பிரச்சாரம், உண்மைக்கு மாறாக சாட்டப்பட்ட குற்றச்சாட்டு என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. '' சொன்னால் வெட்கக்கேடு, சொல்லாவிட்டால் மானக்கேடு '' என்பதால் அதற்காகச் சொல்கிறேன்.

அதுமட்டுமல்ல. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 13,000-க்கு மேற்பட்ட அண்ணா தி.மு.க. தொண்டர்கள்மீது உண்மைக்கு மாறான வழக்குகளைப் போட்டார்கள். இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எத்தனை வழக்குகளைச் சந்தித்தார்கள் ? எத்தனை நீதிமன்றங்கள் ஏறி, ஏறி இறங்கினார்கள் ? அதை எல்லாம் இந்த நாட்டு மக்கள் மறந்துவிடமாட்டார்கள். இந்த சந்தர்ப்பத்தில் எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. அன்றைய முதலமைச்சர் வசனம் எழுதி இன்றைய முதலமைச்சர் நடித்த, சேலம் மாடர்ன் தியேட்டர் சார் தயாரித்த ' மந்திரி குமாரி ' என்ற திரைப்படத்தில் ஒரு வசனம் வருகிறது. அதாவது, ' புலி ஆட்டைக் கொல்லாமல் இருந்தால், கொக்கு மீனை கொத்தாமல் இருந்தால், பாம்பு தவளையை விழுங்காமல் இருந்தால் நானும் கொள்ளையடிக்காமல் இருப்பேன், கொலை செய்வது எனக்கு ஒரு கலை'' என்று எஸ். ஏ. நடராஜன் பேசியதாக ஒரு வசனம் நினைவுக்கு வருகிறது.

(முற்பகல் 11–50)

அந்த வசனமானது அத்தகைய திரைப்படத்திலே வரக்கூடிய ஒரு காட்சி மட்டும் அல்ல, அன்றைய கலைஞருடைய ஆட்சியிலே அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சி என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் இன்றைக்கு நடக்கக்கூடிய இந்த ஆட்சியில் வேண்டும் என்றே திட்டமிட்டு விமான நிலையத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களை அவமதித்ததாகச் சொல்லுகிறார்கள். அன்றே நாவலர் அவர்கள் பேசினார்கள், ** ..அப்படி இருந்தும் வேண்டும் என்றே உண்மைக்கு மாறான செய்தியை மாறி மாறி சொல்லி சொல்லி, மெய்யாக்கப் பார்க்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் நம்முடைய இந்தியத் துணை கண்டத்தில், 22 மாநிலங்களில் ஊரடங்குச் சட்டம் என்ற வார்த்தையை கேளாத மாநிலம் ஒன்று இருக்குமேயானால் அது தமிழகம் தான் என்பதை தேசீய நீரோட்டத்திலே பாய்ந்து சேர்ந்து செல்லக்கூடிய நண்பர்கள் அறிவார்கள். இங்கே அந்த தேசீய நீரோட்டத்தைச் சேர்ந்த, மாண்புமிகு உறுப்பினர், நண்பர் சுந்தரராஜன் அவர்கள்

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



சொன்னார்கள். ஏதோ இந்த ஆட்சியிலே தான் அவர் காணாத சில அதிசயங்களை கண்டு விட்டது போலவும், அவர்கள் ஆளக்கூடிய வட மாநிலஙகளில் ஏதோ பொற்காலம் இருப்பது போலவும், அவர்களுடைய துப்பாக்கிகளில், இருந்து பூச்செண்டுகள் தான் வருகின்றன என்பது போலவும்....(குறுக்கீடு)

திரு. க. அன்பழகன் : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களுக்கு முன்னால், ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் இங்கே இந்த அவையிலே எடுக்கப்பட்டு எதிர்க்கட்சி தலைவருக்கு இழைக்கப்பட்ட ஒரு அவமானகரமான நிகழ்ச்சியை, இந்த சட்டமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் அந்த விவாதத்திலே கலந்து கொண்டு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முன்னவர் அவர்கள் பதில் கூறும்போது, அது பற்றி விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள். மாறாக, பேசுகின்ற உறுப்பினர் முன்னவர் அதை மறுத்தார் .என்றும், மறுத்த காரணத்தால் இழைக்கப்பட்ட அந்த அவமானகரமான நிகழ்ச்சி கற்பனையாகப் பேசப்படுகிறது என்றும் தோன்றும்படியாக மாண்புமிகு உறுப்பினர் பேசியிருக்கிறார்கள். அது, ஏற்கெனவே அவை நடவடிக்கையில் பதிவான உண்மை நிகழ்ச்சிகளுக்கு, மாறாக இருக்கிற காரணத்தால், தாங்கள் அதை அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் சொன்ன மாதிரி, அவை முன்னவர் அவர்கள் 4 பேர்களை அது குறித்து விசாரிக்கப் போவதாகத்தான் சொன்னார்கள். அந்த விவரம் தான் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு மாறாக தவறான கருத்து கூறப்பட்டிருந்தால் அதை நீக்குகிறேன். அந்தப் பிரச்சினையை விட்டு விட்டு, மேற்கொண்டு பேசும்படி திரு. ஆறுமுகம் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சேலம். மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி தமிழகத்திலிருந்து கலைக்கப்பட்ட ஒரு சில வாரங்களில் சென்னையிலே நடந்த கண்டன ஊர்வலத்தின்போது, அந்த ஊர்வலத்தின்மீது காவல் துறையினர் ஏவிவிட்ட கண்ணீர் புகை குண்டுகளையும், தடியடிப் பிரயோகத்தையும் எவ்வளவு என்று இந்த நாடு நன்கு அறியும். இப்போது இங்கே எங்கே பார்த்தாலும் கலவரம் கலவரம் என்று சொல்லுகிறார்களே, அவர்களுடைய ஆட்சியிலேதான் தமிழகத்தினுடைய நிலவரம் கலவரமாக இருந்தது என்று சொல்லிக் கொள்ளப் பிரியப்படுகிறேன்.

நியாயத்தைப் பற்றி பேசுகிறார்கள். இன்றைக்கு அவர்கள் ஆளக்கூடிய மாநிலங்களிலாகட்டும், அல்லது கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஆகட்டும் நடைபெற்ற சம்பவங்களை மறந்து ஆதாரம் இல்லாமல் பேசுகின்ற நண்பர்களை கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய ஆட்சியின்போது, இந்த நாட்டு மக்களுடைய உயிருக்கு ஏற்பட்ட சேதாரங்கள் எத்தனை என்பதை இங்கே சாட்சியாக என்னால் காட்ட முடியும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிப்பார்களே யானால். (குறுக்கீடு)

நியாயம் நியாயம் என்று சொல்லுகிறீர்களே, நியாயம் என்பது உங்களுடைய ஆட்சியில் வெறும் காயமாகத்தான் இருந்தது என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள். 1981 ஆம் ஆண்டு எத்தனை போராட்டங்களை புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி சந்தித்து இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு ஆண்டுக்கு 365 நாட்கள் என்றால், 1981 ஆம் ஆண்டு 364 நாட்களில் 891 போராட்டங்களை எதிர்க்கட்சிக்காரர்கள் தலைமை ஏற்று நடத்தி, எதிர்க்கட்சிகள் நடத்துகின்ற ஆர்ப்பாட்டங்களுக்கு துணை போனார்கள். தூண்டி விட்டார்கள். தூபம் போட்டார்கள், தீபம் காட்டினார்கள். இப்படி நடைபெற்ற போராட்டங்கள் 891 என்றால், இந்த நாட்டிலே, இல்லை, உலகத்திலேயே ஒரு ஆட்சி ஏற்பட்ட ஒரு ஆண்டு காலத்தில், ஒரு மாநில அரசு 891 போராட்டங்களை சந்தித்திருக்கிறது. என்றால், அது வரலாற்றிலேயே காண முடியாத ஒரு அதிசயம்.

அப்படிப்பட்ட சோதனைகளை எல்லாம் கடந்து சாதனைக்குரிய ஒரு மாபெரும் தலைவராக இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஒரு பாப்புலாரிட்டி சீஃப் மினிஸ்டர் என்று சொல்லக்கூடிய அளவுக்கு மக்கள் செல்வாக்கு மிக்க தலைவராக புரட்சித் தலைவர் இருக்கின்றார். அவருடைய ஆட்சியினைப் பார்த்துத்தான் இன்றைக்கு ஆதாரம் இல்லாமல் சேற்றை வாரி இறைத்து கொண்டிருக்கிறார்கள். என்னால் சில சம்பவங்களைக் கூற முடியும். இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே மிகச் சிறப்பாக ஆட்சி புரியும் மாநிலம் தமிழகம்தான் என்பதைச் சொல்ல முடியும். கொள்ளை வழக்குகளைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் 1980 ஆம் ஆண்டு 1,289, 1981 ஆம் ஆண்டு 1,391, 1982 ஆம் ஆண்டு 1,343. ஆந்திராவில் 1980 ஆம் ஆண்டு 1,364, 1981 ஆம் ஆண்டு 1,318, 1982 ஆம் ஆண்டு 1434. உத்திர பிரதேசத்தில் 1980 ஆம் ஆண்டு 5,680, 1981 ஆம் ஆண்டு 4287, மத்திய.பிரதேசதத்தில் 1980 ஆம் ஆண்டு 2392.





அடுத்து, கூட்டுக் கொள்ளை என்பதைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் 1980 ஆம் ஆண்டு 82, 1981 ஆம் ஆண்டு 46, 1982 ஆம் ஆண்டு 57. ஆந்திராவில் 1980 ஆம் ஆண்டு 350, 1981 ஆம் ஆண்டு 378, 1982 ஆம் ஆண்டு 307, கர்நாடகத்தில் 1980 ஆம் ஆண்டு 265, 1981 ஆம் ஆண்டு 231, 1982 ஆம் ஆண்டு 171, உத்திர பிரதேசத்தில் 1980 ஆம் ஆண்டு 7309, 1981 ஆம் ஆண்டு 4,095. ராஜஸ்தானில் 1980 ஆம் ஆண்டு 116, 1981 ஆம் ஆண்டு 152, 1982 ஆம் ஆண்டு 146, அஸ்ஸாமில் 1980 ஆம் ஆண்டு 363, 1981 ஆம் ஆண்டு 230, ஒரிசாவில் 1981 ஆம் ஆண்டு 278, 1982 ஆம் ஆண்டு 281.

கற்பழிப்பு என்பதைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் 1980 ஆம் ஆண்டு 157, 1981 ஆம் ஆண்டு 180, 1982 ஆம் ஆண்டு 180. ஆந்திராவில் 1980 ஆம் ஆண்டு 135, 1981 ஆம் ஆண்டில் 171, 1982 ஆம் ஆண்டில் 229. மகாராஷ்டிராவில் 1980 ஆம் ஆண்டு 404. ராஜஸ்தானில் 1980 ஆம் ஆண்டு 298, 1981 ஆம் ஆண்டு 339, மத்திய பிரதேசத்தில் 1980 ஆம் ஆண்டு 899. இப்படி மற்ற மாநிலங்களை எல்லாம் விட மிகக் குறைவான அளவில்தான் தமிழகத்தில் இப்படிப்பட்ட வழக்குகள் இருக்கின்றன. எனவே மிகச் சிறப்பாக இந்த காவல் துறை பணியாற்றுகின்றது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில் தான் காவல் துறைக்கு எந்த ஒரு புகார் வந்தாலும், அந்தப் புகார்மீது நடவடிக்கை எடுத்தாலும், எடுக்காவிட்டாலும், கண்டுபிடித்தாலும், கண்டுபிடிக்காவிட்டாலும் அவற்றைப் பதிவுசெய்து முறையான வகையில் ரசீது கொடுக்கக் கூடிய முறை இருக்கின்றது. அதனால்தான் மற்ற மாநிலங்களைவிட இங்கே அதிகமான வழக்குகள் பதிவாகி இருப்பதாக கண்களுக்குத் தெரிகின்றன. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் எவ்வளவோ வழக்குகள் கொடுத்தாலும் அதை அவர்கள் பதிவு செய்ததில்லை. ஆகவே அவர்களுடைய காலத்தில் வழக்குகள் குறைவாகத் தெரிந்தன. வழக்குகளைப் பதிவு செய்து அவர்கள் காலத்தில் ரசீது கொடுக்கப்படவில்லை. ஏதேனும் கண்டுபிடிக்கக் கூடிய வழக்குகளை மட்டும்தான் அவர்கள் பதிவு செய்தார்கள். அவற்றுக்குத்தான் டிஸ்போஸல் கொடுக்கக்கூடிய நிலைமை இருந்தது. எனவே இப்போது நாம் எடுத்திருப்பது போன்ற நடவடிக்கைகளை அவர்கள் எடுக்கவில்லை.

மேலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் எத்தனையோ வழக்குகள் கண்டு பிடிக்கப்படாமல் இருக்கின்றன. கோவை மாவட்டம், மதுக்கரை காவல் நிலையக் குற்ற எண். 560/72-ன்படி 5-8-1972 அன்று தூளப்பள்ளம் என்னும்

இடத்தில் யாரென்றறியாத குற்றவாளி, காதர் என்பவரைக் கொலை செய்து விட்டு ரூ. 1,500 மதிப்புள்ள வண்டியையும் மாட்டையும் ஓட்டிக் கொண்டு போய்விட்டார். எவ்வித துப்பும் கிடைக்கவில்லை.

தஞ்சாவூர் (கிழக்கு) மாவட்டத்தில் குத்தாலம் என்ற இடத்தில் குற்ற எண். 73/73-ன்படி 16—6—1973 அன்று மூவாயர் என்னும் இடத்தில் யாரென்றறியாத குற்றவாளி, 73 வயதான மீனாட்சியம்மாள் என்னும் விதவையைக் கொலை செய்து விட்டு ரூ. 2,400 மதிப்புள்ள தங்க நகைகளை எடுத்துச் சென்று விட்டார். எவ்விதத் துப்பும் கிடைக்கவில்லை. கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் குற்ற எண். 130/74-ன்படி 16—3—1974 அன்று சங்கர நகர் குட்டை என்னுமிடத்தில் யாரென்றறியாத குற்றவாளி, சுப்பையன் என்பவரைக் கொலை செய்து விட்டு 6 பவுன் தங்கச் சங்கிலியை எடுத்துச் சென்று விட்டார். எவ்விதத் துப்பும் இல்லை. இப்படி தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் நடந்த பல குற்றங்கள் இன்றைக்கு வரை கண்டுபிடிக்கப்படவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்போது தமிழகத்தில் காவல் துறையினரின் துரித நடவடிக்கை காரணமாக இந்த 1981 ஆம் ஆண்டு 1,18,471 வழக்குகள் பதிவாயின. காவல் துறையின் துரித நடவடிக்கை மற்றும் திறமை காரணமாக 1982 ஆம் ஆண்டில் 1,12,845 வழக்குகளாக அது குறைந்திருக்கின்றது. எனவே 5 சதவீதம் வழக்குகள் குறைந்திருக்கின்றன. இதன் மூலம் காவல் துறை விழிப்போடும், முன் எச்சரிக்கையோடும் குற்றங்களைத் தடுத்து நிறுத்துகின்றது என்பதை எல்லோரும் நன்றாக அறிவார்கள்.

(நண்பகல் 12-00)

இன்றைக்கு நம்முடைய சென்னை நகரத்தில் 51 காவல் நிலையங்களில் இரவு காவலர்கள் ரோந்து சுற்றி வருவதற்கு 51 மோட்டார் சைக்கிள்கள் வாங்கிக் கொடுத்து இருக்கின்றன. ஆனால் அந்த மோட்டார் சைக்கிளில் செல்லக் கூடிய காவலர்கள் 51 பேர்களுக்கும் கைத் துப்பாக்கி ஒரு காவல் நிலையத்திற்கு 5 வீதம் வைப்பதற்கு இந்த அரசு பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு அனுப்பியது. அப்படி அனுப்பிய நேரத்தில் மத்திய அரசு இரவு ரோந்துக்கு செல்லக் கூடிய காவலர்கள் கைத் துப்பாக்கி ஏந்தக் கூடாது என்று அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள். இது என்ன நியாயம். எதற்கு எடுத்தாலும் மத்திய





அரசு. ஏன் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கக் கூடாது. சாதாரணமாக இரவு நேரத்தில் இங்கே நடக்க முடிவது இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தர்ராஜ் அவர்கள் சொன்னார்கள். இது என்ன டெல்லியா ? ரங்கா, பில்லா இங்கே நடமாடிக்கொண்டா இருக்கிறார்கள். இன்றைக்கு வட நாட்டில் எத்தனை பேர் மாலை 6 மணிக்கு மேல் வெளியே நடமாட முடியவில்லை. அங்கே எந்த நேரமும் ஊரடங்கு சட்டம். ஊரே ஊரடங்கு சட்டம் தான். அப்படிப் பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டு இருக்கக்கூடியவர்கள் இன்றைய தினம் தமிழகத்தைப் பார்த்து நடமாட முடியவில்லை என்று சொல்லுகிறார்கள் ஒருவேளை * *

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கள் கட்சி * *
என்று சொல்கிறார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்திரவிடுகிறேன். இனிமேல் அந்த மாதிரியான விவரங்களை எல்லாம் பேசக் கூடாது.

திரு. சேலம். மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு எளிதில் சேவை செய்ய வேண்டும் என்பதற்காக புதிய 31 புறக் காவல் நிலையங்கள் தமிழகத்தில் திறக்கப்பட்டு இருக்கின்றன. 1977-ம் ஆண்டு தமிழகத்தில் 837 புறக்காவல் நிலையங்கள் இருந்தன. 1983-ம் ஆண்டு 921 ஆக உயர்த்தி இந்த 6 ஆண்டு கால ஆட்சியில் 84 புறக்காவல் நிலையங்கள் புதிதாகத் திறக்கப்பட்டு மக்களுடைய உரிமைக்கும், உடமைக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. காவல் துறையில் பணியாற்றக்கூடிய காவலர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. அதைப் போல காவல் துறை அதிகாரிகளுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும். இன்றைக்கு சென்னையில் இருக்கக் கூடிய ஐ.ஜி., ஏ.ஐ.ஜி., எஸ்.பி. போன்றவர்களுக்கும் குடியிருப்புகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்......(மணியடிக்கப் பெற்றது).

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1983 ஏப்ரல் 7

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இங்கே வைக்கப்பட்டிருக்கக்கூடிய காவல் துறை, தீயணைப்பு மானியங்கள் மீது மார்க்ஸீஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பின்வரும் கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த இந்தியா பூராவிலும் இன்றைக்கு இருக்கக்கூடிய போலீஸ் சட்டமே ஒரு நூற்றாண்டுக்கு முன்னதாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினுடைய வசதிக்காக நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம்தான் இன்றைக்கும் அமுலில் இருக்கிறது என்பது இந்தியாவில் இருக்கக்கூடிய மக்கள் அனைவருமே மிகுந்த ஆட்சேபனை செய்யக்கூடிய, எதிர்க்கக்கூடிய, வருத்தப் படக்கூடிய பிரச்சினை ஆகும். 1857-ம் ஆண்டிலே இந்தியாவினுடைய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் செய்த கொடுமையான ஏற்பாடுகளைத் தொடர்ந்து அவர்கள் 1861-ம் ஆண்டிலே நிறைவேற்றப்பட்ட போலீஸ் சட்டம் தான் இன்றைக்கும் இந்த நாடு ஒரு சுதந்திர குடியரசாகி இத்தனை ஆண்டுகளுக்கு பிறகும் அதே சட்டம் நீடிக்கிறது என்றால் அதன் கீழ் செயல்படக்கூடிய அமைப்புகள் எவ்வாறு இருக்கும் என்பதை நான் தெளிவாக புரிந்து கொள்ளமுடியும். நான் மற்ற சில பிரச்சனைகளுக்குப் போவதற்கு முன்னால் காவல் துறை மானியத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைத்து இருக்கக்கூடிய அறிக்கையில் இறுதியாக முடிவு என்று சொல்லப்பட்ட பகுதியில் சில அம்சங்களைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதிலே (1)(ஆ) பிரிவிலே மிகச் சிறிய குற்றங்களைச் செய்பவர்களை எச்சரித்து விட்டுவிட வேண்டும். இது அரசினுடைய கொள்கை என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது சரியான கொள்கைதான். ஆனால் பிரச்சனை என்னவென்றால் இன்றைக்கு தமிழகத்திலே இது அமுலில் இருக்கிறதா என்று கேட்டால் இது அமுலில் இல்லை. சாதாரணமான குற்றங்களுக்கு எல்லாம் கூட அவர்களைக் கைது செய்து ரிமாண்டிலே வைத்து அவர்களைச் சிறைச்சாலைகளில் பல காலம் வைத்து இருக்கக்கூடிய போக்குகள் என்பது நடைமுறையில் ஊறிப்போய் இருக்கக்கூடிய ஒரு பிரச்சனை ஆகும். ஆகவே இன்றைக்கு அப்படிப்பட்ட சில வழக்குகள் வந்தாலும் கூட இந்தக் காவல் நிலையத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள் அதற்கு ஜாமீன் கூட கொடுப்பது இல்லை. அவர்களை கோர்ட்டில் போய் எடுத்துக்கொள்ளுங்கள் என்று திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். இதன் காரணமாகத்தான் ஏராளமான சிறிய குற்றங்களுக்காக மக்கள் கைது செய்யப்படுகிறார்கள்.



1983 ஏப்ரல் 7] [திரு. என். சங்கரய்யா]

உதாரணமாக எடுத்துக் கொண்டால் இந்தப் புள்ளி விவ்ரங்கள் நிர்ணயிப்பதற்காக இத்தனை கேஸ்களை இந்த போலீஸ் இலாகா பிடித்தது என்பதைக் காட்டுவதற்காக ரயில்வே ஸ்டேஷன்களிலேயும் பஸ் ஸ்டாண்டுகளிலேயும் இரவு நேரங்களில் இரயில் கிடைக்காமல் பஸ் கிடைக்காமல் ஒதுங்கியிருக்கக்கூடிய சாதாரணமான எத்தனை நபர்கள் கைது செய்யப்படுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ? அவர்கள் இப்போதாவது உத்திரவு இடுவார்களா ? இம்மாதிரியான யாரையும் கைது செய்யக்கூடாது என்று அவர்கள் உத்திரவிடுவார்களா ? காரணம் கேட்டால் சந்தேகம். சந்தேகம் என்றால் அவர்களை 15 நாட்கள் ரிமாண்டிலே வைத்துவிடலாம். அதற்குப் பிறகு அவர்கள் யார் என்ன என்பதைப்பற்றி அவர்களுக்கு திறமை இருந்தால் அவர்கள் வந்து ஜாமீனிலே எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு எத்தனை ஆயிரக்கணக்கான பேர்கள் தமிழகத்திலே கைது செய்யப்படுகிறார்கள் என்பதை அரசாங்கம் கவனத்தில் எடுத்து இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய முறையிலே இந்த சந்தேக கேஸ் என்பதை அறவே கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சாதாரணமான விஷயங்களை நான் வற்புறுத்த விரும்புகிறேன், இன்று காவல் நிலையங்களிலே பல பேர்களை உண்மையிலேயே கைதுசெய்து அவர்களைக் கைது செய்ததாக ரிஜிஸ்டரிலே எழுத மாட்டார்கள். பல நபர்கள் பல நாட்களாக அப்படி காவல் நிலையங்களிலே வைத்துக் கொள்ளப்பட்டு இருப்பார்கள். ஆனால் ரிஜிஸ்டரிலே அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக எந்தவிதமான ரெக்கார்டும் இருக்காது, இது சரிதானா ? ஒரு சிறந்த காவல் அமைப்பு என்று சொல்லிக்கொண்டு ஏன் இப்படி ? இன்னும்கூடச் சொல்வார்கள், சில அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள் என்னிடமே. 24 மணி நேரத்திலே கோர்ட்டிலே கொண்டுபோய் ஆஜர்படுத்துவது என்றால் எங்களால் குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியாது. ஆகவே நாங்கள் அப்படித்தான் செய்வோம். எப்படி ? ரிஜிஸ்டர் செய்யாமல் வைத்துக்கொண்டு பல நாட்கள் வைத்துக் கொண்டு அவர்களை விசாரணை செய்கிறோம் என்ற பெயரிலே சொல்கிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா ? 24 மணி நேரத்திலே கோர்ட்டிலே கொண்டுபோய் அவர்களை ஒப்படைக்க வேண்டும் என்பது நடக்காத காரியம், என்று அவர்களே சொல்கிறார்கள்.

இங்கே இருக்கக்கூடிய அரசாங்கம் சொல்வது நடக்கிறதா, அல்லது அவர்கள் சொல்வது நடக்கிறதா என்பதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் காவல் துறை பெரிய அதிகாரிகளும் பரிசீல்னை செய்யவேண்டும். அது மட்டுமல்ல நான் கேட்க விரும்புகிறேன். ஒரு லாக்கப்பிலே எத்தனை

பேர்களை வைத்து இருக்கலாம் ? லாக்கப்பிலே வைத்து இருப்பதற்கு ஏதாவது கைட்லைன்ஸ் இருக்கிறதா ? இன்றைக்கு ஏராளமான புகார்கள். ஒருவரை லாக்கப்பிலே வைத்தால் அவருடைய உள் ஆடை தவிர பாக்கி ஆடைகள் பூராவையும் எடுத்துக்கொள்கிறார்கள் ஆண்களாக இருந்தால். அவர் தற்கொலை செய்துகொள்வார் என்ற காரணத்தைச் சொல்லி எங்களுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன் என்ற ஊழியரை குமரி மாவட்டத்திலே கைது செய்து தோழர் ஹேமச்சந்திரன் உயர் அதிகாரிகளுக்கு போன் செய்தபோது சொல்கிறார்கள், தற்கொலை செய்து கொள்வார்கள் என்று சந்தேகப்பட்டால் அவர்களுடைய ஆடைகளை எல்லாம் கழற்றிவிட்டு சிமிண்ட் தரையிலே படுக்க வைப்பார்கள். எத்தனை போலீஸ் ஸ்டேஷன்களிலே நடக்கிறது என்று அதிகாரிகளுக்கு தைரியம் இருந்தால் அவர்கள் இரவு நேரங்களில் போய் சோதனை செய்து பார்க்க வேண்டும். அவர்கள் மனிதர்களாக நடத்தப்படுகிறார்களா ? படுப்பதற்கு பாய் இருக்கிறதா ? அல்லது சமுக்காளம் கொடுக்கிறார்களா ? அவர்கள் இந்தியாவினுடைய மக்கள் அல்லவா? அவர்கள் கேஸிற்காக கைது செய்யப்படுகிறார்கள் என்றால் அவர்கள் பூரணமாக உரிமைகளை இழந்து அடிமைகளாக ஆகி விடுகிறார்களா ? யோசனை செய்து பார்க்கவேண்டும். நான் கேட்க விரும்புகிறேன், ஒரு லாக்கப்பிலே எத்தனை பேர்கள் அங்கே இருக்கிறார்கள், இன்ன இன்னார், இன்ன இன்னாருடைய பிள்ளை, இன்ன வீட்டைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்ற பட்டியலை காவல் நிலையத்திலே வெளியே வைப்பார்களா ? இன்றைக்கு அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுடைய உறவினர்கள் சென்றால் தவிர அந்த காவல் நிலையத்திலே சாப்பாடு கொடுக்கப்படுகிறதா ? லாக்கப்பிலே இருக்கிறார்களா இல்லையா என்ற தகவலை கூட சாதாரணமாக சொல்ல மாட்டார்கள். ஆகவே இது ஊழலுக்கு, ஆதாயம் கிடைக்கக் கூடிய வருமானம் பெறக்கூடிய காரியமாகப் பயன்படுகிறது என்றால் இன்றைக்கு இங்கே யோசிக்கவேண்டும்.

இன்று ஆட்சிகள் மாறலாம், அரசாங்கத்திலுள்ளவர்கள் மாறலாம், ஆனால் நீண்டகாலமாக புரையோடிக்கொண்டிருக்கிற இந்த நடைமுறைகள் மாறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் பல அதிகாரிகள் ஏன் சாதனை செய்யக்கூடாது ? மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர்கள், தாசில்தார்கள், அஸிஸ்டெண்ட் கலக்டர்கள் ஏன் காவல் நிலையத்தை சோதனை செய்யக் கூடாது ? லாக்கப்பிலே அவர்கள் சொல்லியிருக்கக் கூடிய பட்டியலின்படி உள்ள எண்ணிக்கை இருக்கிறத





அல்லது கூடுதலாக வைத்திருக்கிறார்களா சட்ட விரோதமாக பதிவு செய்யாமல் வைத்திருக்கிறார்களா என்று பார்க்கலாம். சில ஆண்டுகளுக்கு முன்னால் நான் ஒரு தடவை சத்தியாக்கிரகத்திலே சென்றபோது பார்த்தபோது சிறு பையனை சங்கிலிபோட்டு வைத்திருந்தார்கள், திருவாரூர் ஸ்டேஷனிலே. நான் கேட்டேன், அந்த இன்ஸ்பெக்டரை. எங்களுக்கு முன்னாலே இப்படி சங்கிலி போட்டு சிறுவனை வைத்திருக்கிறீர்களே கைது செய்து இருக்கிறீர்களா என்று. இல்லை ஒரு கோழி திருட்டு சம்பந்தமாக புகார் அதை விசாரிப்பதற்காக வைத்திருக்கிறோம் என்று சொன்னார் குரங்கை செயினில் போட்ட மாதிரி இருந்தது. நான் கடுமையாக ஆட்சேபித்தேன். ஆட்சேபித்ததற்குப் பிறகு அவர்கள் அவனை வெளியே விட்டார்கள்.

(பிற்பகல் 12-10)

எதற்காக கூறுகிறேன் என்றால், நடக்கக்கூடிய நடைமுறை இப்படி இருக்கிறது. இன்றைக்கு லாக்கப்பிலே மலஜலம் கழிக்க வசதி இருக்கிறதா? இவ்வளவு கோடி செலவழிக்கிறோமே; அவர்களும் மனிதர்கள் அல்லவா ? அவர்களை லாக்கப்பிலே இரவு நேரங்களில் வைக்கிறபோது அந்த வசதிகளை செய்து கொடுக்க வேண்டாமா ? தற்கொலை செய்துகொள்வார்கள் என்று சொல்லி ஆடைகளை அகற்றி விடுகிறார்கள். என்னுடைய இயக்கத்தைச் சார்ந்த ஊழியர் ஒருவரை கிரோம்பேட்டை ஸ்டேஷனில் ஒரு சமயம் கைது செய்தபோது— என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்கிறேன் — உள்ளாடைகளை தவிர மற்றதை அக்ற்றி சிமெண்ட் தரையில் படுக்க நிர்ப்பந்திக்கப்பட்டார். ஆகவே தான் இந்த கொடுமைகளை நீங்கள் தடுத்து நிறுத்துவீர்களா என்று கேட்க விரும்புகிறேன். அவர்களுக்கு உணவு கொடுக்கப்படுகிறதா ? லாக்கப்பிலே இருப்பவர்களுக்கு அவர்களுடைய உறவினர்கள் வந்து கொடுத்தாலொழிய உணவு கிடைப்பதில்லை. அரசாங்கத்தின் செலவுகளில் எழுதப்படுகிறதா என்பதை சிந்திக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, ஒரு சாதாரண் காரியத்தை காவல் துறை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன். போகிறபோது பல பேரை ஏதாவது ஒரு காரணத்திற்கு கைது செய்வார்கள். அவர்கள் வீட்டில் அவர்கள் குடும்பத்தினர் தவித்துக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு ஒரு நபரை அனுப்பி, இந்தமாதிரி இவர் இந்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டிருக்கிறார் ; காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கிறார் என்ற தகவலை கொடுத்தால் அவரை விடுவிப்பதற்கோ அல்லது ஜாமீன் எடுப்பதற்கோ அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். அப்படி உரிய தகவல் இல்லாமல் எத்தனை குடும்பங்கள் தவித்துக் கொண்டிருக்கின்றன என்பதை பார்க்க வேண்டும்.

[திரு. என். சங்கரய்யா] [1983 ஏப்ரல் 7

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

புலன் விசாரணை செய்வதற்கு ஏராளமான நவீன கருவி கள் வாங்கப்படுவதற்காக லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்திருப்பதாக சொல்லப்படுகிறது. அதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். தடயங்களை ஆராய்ந்து அதன்மூலமாக கண்டு பிடிப்பதற்கு இத்தனை வசதிகள் இந்த காவல்துறைக்கு இருக்கிற போது, இன்றைக்கு ஏன் சித்தரவதை நடக்கிறது ? குற்றங்களை கண்டுபிடிக்க முடிந்தால் பிறகு அடித்து, துன்புறுத்தி, அவரிடம் வாக்குமூலம் பெற்று, வழக்குகளை போட வேண்டிய அவல நிலைமை ஏன் ? காரணம் நம்முடைய நாட்டிலே இருக்கிற காவல் துறை மக்களை மக்களாக கருதவில்லை. அவர்களை மக்களாக கருதவேண்டும். அந்த அடிப்படையான அணுகுமுறை காவலர்களிடமிருந்து, அதிகாரிகள்வரையில் அவர்களுக்கு பயிற்சி காலத்திலேயே போதிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் இந்த நிலையில் மாறுதல் இருக்காது. அடுத்து இந்த நக்சல் பாரிகளைப்பற்றி இதிலே கூறப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அவர்களும் மனிதர்கள் தானே ; நக்சல்பாரிகளின் கொள்கை களும், எங்களுடைய கொள்கைகளும் நேர் மாறானது. இவர்களு டைய தனிநபர் பயங்கரவாதம் என்பதை நாங்கள் எதிர்க்கிறோம். மக்களுடைய புரட்சிகரமான இயக்கத்தின் மூலமாகத்தான் புரட்சி மாற்றங்களை உண்டுபண்ணமுடியும் என்று கூறுகிறோம்.

ஆனால் தர்மபுரி, வடஆற்காடு மாவட்டங்களில் நக்சல்பாரி களை ஒடுக்குகிற பெயரால் எத்தனை சாதாரண மனிதர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள்; எத்தனைபேர் கொடுமைப்படுத்தப்பட்டார் கள் ; அங்கே நாங்கள் ஒரு பாதயாத்திரை சென்றிருந்த போது சொன்னார்கள். தர்மபுரி மாவட்டத்திலே சாதாரண போலீஸ கான்ஸ்டேபிள் கூட அங்கே ஆடுமேய்க்கக்கூடிய சிறுவர்களை, மாடு மேய்க்கக்கூடிய சிறுவர்களை, ஸ்டேஷனுக்கு இத்தனை மணிக்கு வரவேண்டுமென்று ஒரு தகவல் அனுப்பிவிடுவார்கள். அவர்கள் போகவில்லை என்றால் அவர்களுடைய முதுகு தோலை உரித்துவிடுவார்கள். அங்கே போயிருந்த போது அவர்கள் சொன்னார்கள். நாங்கள் இங்கே ஆடு மேய்த்துக் கொண்டிருக் கிறோம் ; மாடு மேய்த்துக் கொண்டிருக்கிறோம் ; இன்றைக்கு சாயங்காலம் அங்கே போகவேண்டும் ; நக்சல்பாரி பிரிவைச் சார்ந்த அந்த காவலர் சொல்லிவிட்டார். நாங்கள் அங்கே போனால் கூட அவர் சினிமாவிற்கு போயிருப்பார். அவர் சினிமாவிலிருந்து வருகிறவரையில் நாங்கள் காத்திருக்க வேண்டும். போகாவிட்டால் அடிப்பார்கள் ; என்று சொன்னார்கள். அந்த முறையைப் பற்றி சிந்திக்க வேண்டும். ஆகவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய காவல் துறை நிர்வாகத்தில் எல்லாம் சரியாக மனித உரிமைகளின் அடிப்படை யில் நடக்கிறது என்று நினைத்துக்கொண்டிருந்தால் அது நடை முறைக்கு மாறானது என்று தெரிவிக்க விரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 7] [திரு. என். சங்கரய்யா]

நக்சல்பாரி பற்றி நடந்த விஷயங்களை விசாரிக்க வேண்டும். விசாரணை வேண்டுமென்று கூறினோம். ஆனால் நடத்தப்பட வில்லை. ' ஏன் கூறுகிறேன் என்றால் அவர்களும் மனிதர்கள், மனித உரிமையை யாருக்கும் இன்றைக்கு மறுக்கமுடியாது.

இன்றைக்கு மொபைல் கோர்ட்ஸ் மீண்டும் வந்திருக்கின்றன. இந்த நடமாடும் நீதிமன்றம் முன்னாலே இரண்டு, மூன்று ஆண்டு கள், முன்பு இருந்த அமைச்சரவையின் போது இருந்தது. நாங்கள் ஒரு தூது குழுவாகச் சென்று எத்தனை ஊழல்கள் இதில் நடக்கின்றன என்று மவுண்ட் ரோடில் நடப்பதை முதலமைச்சரிடத்தில் எடுத்துச் சொன்னோம். கைது செய்வார் கள் ; பத்து ரூபாய் கையில் கொடுத்தால் விடுவார்கள். அந்த நடமாடும் நீதிமன்றத்தின் நீதிபதி வந்து சர்க்கார் எஸ்டேட் டில் இருக்கிற சட்டசபை ஹாஸ்டலுக்கு முன்னாலே உள்ள இடத்தில் வண்டியை நிறுத்திவிட்டால் ; அவர் வந்துவிட்டார் என்பதற்காக 100 பேர் ,200 பேரை பிடிக்கவேண்டும். அவர்கள் தவறு செய்கிறார்களா, இல்லையா என்பது அவசியமில்லை. நீதிபதி வந்தாகிவிட்டது ; அவருக்கு வேலை இருக்க வேண்டும். ஆகவே ரோடிலே போகிறவர்களை, குறிப்பாக சைக்கிளில் போகிறவர்கள் தான் அவர்களுடைய குறி. ஏனென்றால் காரிலே போகிறவர்களுக்கு கார் நம்பர் இருக்கிறது ; அவர்கள் கோர்ட் டிற்கு போய் விடலாம். சைக்கிளில் வருகிறவர்களை, ஸ்கூட் டரில் வருகின்றவர்களை தான் பிடிக்கிறார்கள். நானே சட்ட சபை ஹாஸ்டல் முன்னாலேயிருந்து இதை கவனித்தேன். எப்படிப்பட்டவர்களை பிடிக்கிறார்கள் ? அவசரமாக வேலைக் கும் மற்ற இடங்களுக்கும் போகிறவர்களை, 20, 30 பேர் களை கூப்பிட்டு நிறுத்திவிடுகிறார்கள். இது நியாயம் தானா ? நான் கேட்கிறேன். அவர்களை ஏன் நம்பக்கூடாது ? அவர்கள் ட்ராபிக்கை மீறி தவறு செய்தால், அவர்கள் எங்கே வேலை செய்கிறார்கள் என்பதை கேட்டுக்கொண்டு கோர்ட் டிற்கு வாருங்கள் என்று சொல்ல வேண்டியது தானே ? பணக் காரர்கள் காரில் வந்தால் உடனடியாக நடமாடும் நீதிமன்றத் திற்கு வரவேண்டாம். ஆனால் இவர்கள் ஏழைகள், நடுத்தர மக்கள் வந்தால் இவர்கள் நடமாடும் நீதிமன்றத்தில் பல மணி நேரம் காத்திருக்கவேண்டும்.

அது மட்டுமல்ல, மவுண்ட் ரோடிலே, சென்னை நகரத்திலே, தமிழகத்திலேயே, ரோடுகளிலே போகக் கூடாது, தடுக்க வேண்டும் என்று தண்டித்துத் தடுக்க முடியுமா ? பிரச்சாரம் செய்து, உண்மையிலே காவலர்கள் மக்களின் நண்பர்கள் என்றால் போகாதீர்கள் ஐயா, உயிருக்கு ஆபத்து என்று எத்தனை முறை சொன்னாலும் தப்பில்லை. அப்படிச் செய்யாமல், அவர்களைத் தண்டிப்பது என்றால், நிச்சயமாகச் சொல்கிறேன், மீண்டும்

விசாரிக்க வேண்டுமே தவிர, அவர்களுடைய பாதுகாப்பு இல்லா
மல், எந்தப் பெண்ணையும் லாக் அப்பில் வைக்கக் கூடாது என்று
கூறவிரும்புகிறேன். இதை நான் ஏதோ ஒரு கட்சியினுடைய
பிரச்னையாகக் கூறவில்லை. இது ஒரு பொதுவான மக்களைப்
பாதிக்கக்கூடிய பிரச்னை. எல்லா போலீஸ் நிலையங்களிலும்
பெண் போலீசைப் போடுங்கள். ஏனென்றால், இன்றைக்கு
போலீஸ்காரர் துப்பாக்கியோடு நிற்கிறார். அந்த சேலம் கேசிலே
கூட அதுதான் நடந்தது. செல்லம்மாள் என்ற அம்மாள்போய்
பார்த்திருக்கிறார். உள்ளே விடவில்லை. துப்பாக்கியோடு
காவல் ; அதற்குப் பின்னாலே, கற்பழிப்பு நடந்தால்
இந்த நாட்டில் என்ன பாதுகாப்பு அளிக்க முடியும் ?
இதை அப்படிப் பயன்படுத்திக் கொண்டால் இதற்கு என்ன பரி
காரம் காணப் போகிறீர்கள் ? இப்படி எத்தனை சம்பவங்கள்
நடந்திருக்கின்றன ?

(பிற்பகல் 12-20).

**அடுத்து.** வரதட்சிணை கொடுமை ஒரு பக்கம். வசதியுள்ள
குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் வரதட்சிணைக் கொடு
மையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். பெண்ணை எரித்தாலும்
சரி, மண்ணெண்ணெயை ஊற்றி எரித்தாலும் சரி, இது சம்பந்த
மாக எத்தனை புகார்கள் ஜனநாயக மாதர் சங்கத்தினால் போடப்
பட்டிருக்கின்றன ; எத்தனை வழக்குகள் தாக்கல் செய்யப்
பட்டன ; அவற்றில் எத்தனை வழக்குகளில் காவல் துறை
வெற்றி கண்டிருக்கிறது ? இப்படியே போனால் எத்தனை ஆயிரக்
கணக்கான பெண்கள் இந்தக் கொரசினுக்கு இரையாகித் தீயில்
எரிய வேண்டும் ? நான் கேட்க விரும்புகிறேன், அவர்கள் எவ்
வளவு பெரிய பணக்காரர்களாக இருநதாலும் சரி, ஒரு பெண்
கல்யாணமாகி ஐந்து வருஷம் ஏழு வருஷங்களுக்குள் தற்கொலை
செய்து கொண்டார் என்ற செய்தி வந்தால் உடனே அதைப்
பற்றிச் சந்தேகிக்க வேண்டும் ; எடுத்த எடுப்பிலேயே சந்
தேகிக்க வேண்டும் ; அதைப்பற்றி விசாரிக்க வேண்டும் ;
போஸ்ட் மார்ட்டம் இல்லாமல் அனுமதிக்கக் கூடாது என்ற
நிலைமை ஏற்பட்டாலொழிய இந்த வரதட்சிணைக் கொடுமை
யைத் தடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

அடுத்து, அபின், கஞ்சா குடிப்பது சம்பந்தமாக எடுத்துக்
கொண்டால், இது மாணவர்களையும், வாலிபர்களையும் கெடுப்
பதாக இருக்கிறது. மதுவைப் பற்றிச் சொல்கிறோம், அந்த
மதுவைவிட ஆயிரம் மடங்கு அதிக அபாயம் உள்ளது இந்த



அபின், கஞ்சா விஷயம். அபின், கஞ்சா ஆகியவை இறக்குமதி
செய்யப்படுகிறது. இது கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் படிக்
கின்ற மாணவர்களையும், வாலிபர்களையும் கெடுக்கிறது. இதைத்
தடுத்து நிறுத்துவதற்கென நடவடிக்கைகளை எடுக்க முடிந்தால்
அது இந்த மாநிலத்திலுள்ள சாதாரண மக்களுக்குப் பெரிய
பாதுசாப்பாக இருக்கும்.

அடுத்து, கள்ளச் சாராயத்தைத் தடுத்தல், ஒழித்தல். அர
சாங்கத்தின் சொள்கை அது என்று சொல்லப்படுகிறது. அதைத்
தடுப்பதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்
கிறீர்கள். அரசாங்கமே கடை வைத்திருக்கிறது : அது சட்ட
பூர்வமாக ஆக்கப்பட்டிருக்கிறது. கள்ளச் சாராயம் சாப்பிடு
வதைத் தடுப்பதற்காக இப்படிப்பட்ட கடைகள் வைக்கப்பட்
டிருக்கின்றன. பெரிய பணக்காரர்களைத் தவிர வேறு யார்
கள்ளச் சாராயத்தைக் கொடுப்பார்கள் ? போலீஸ் நிலையத்
திற்கு இதெல்லாம் தெரியாது என்று சொல்கிறீர்களா ? போலீஸ்
நிலையத்திற்குத் தெரியாதது ஒன்றுமே இல்லை. ஆனால் ஏன்
அவை தடுக்கப்படவில்லை ? அங்கேதான் பணம் விளையாடு
கிறது. இதை எப்படித் தடுப்பது என்பதுதான் பிரச்னை.

அடுத்து, (இ) என்ற பகுதியில் குறிப்பிட்டிருப்பதை நான்
வரவேற்கிறேன். அதிலே என்ன சொல்கிறார்கள் என்றால்,
" குற்றம் சாட்டப்பட்டவராகவோ அல்லது உதவி கோரியோ
வருபவர்களில் பெரும்பான்மையான மக்கள் ஏழைகளாகவும் சமூ
கத்தில் கீழ் மட்டத்தில் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் "
என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்கிறார்கள்.
மேலும், " அவர்களிடம் காவலர் அன்பும் அனுசரணையும்
காட்டி நடந்து கொள்ளவேண்டும். " என்று சொல்கிறீர்கள்.
அது உண்மை. உதவி கோரி வருபவர்கள் கீழ் மட்டத்திலே
யிருந்து வருகிறார்கள். குற்றம் சாட்டப்பட்டவராக வருபவர்கள்
கீழ் மட்டத்திலேயிருந்து வருகிறார்கள். சாதாரணமாகப் பார்த்
தால், ஒரு வேலைக்காரன் பத்து வருஷங்களாக ஒரு பணக்
காரரிடம் வேலை பார்த்துக் கொண்டிருப்பான் ; திடீரென்று
ஒருநாள் அவன் மேல் அந்தப் பணக்காரருக்குச் சந்தேகம் ஏற்
பட்டு விடும் ; அவர் போலீசுக்குச் சொன்னவுடன் போலீஸ்
அந்த வேலைக்காரனை உதைக்க வேண்டியது. இப்படித்தான்
நிலைமை இருக்கிறது. குற்றம் சாட்டப்பட்டவராகவோ அல்லது
உதவி கோரியோ வருபவர்களில் பெரும்பாலோர் கீழ் மட்டத்
திலே உள்ளவர்கள். அவர்களிடம் அன்பும் அனுசரணையும்
இப்பொழுது காட்டப்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.
" டேய், இங்கே வாடா " என்றுதான் அவர்களைச் சொல்
கிறார்கள். நான் ப்ளெயினாகப் பேச விரும்புகிறேன். இன்றைக்
குப் போலீஸ் அதிகாரிகள் ; குற்றம் சாட்டப்பட்ட ஒருவரைப்

பல்லாயிரக்கணக்கான ரிக்ஷா ஓட்டுனர்கள், சைக்கிள் ரிக்ஷாக்காரர்கள் தண்டனை பெறவேண்டி வரும். அந்த மொபைல் வேன்களைத் தயவுசெய்து, நிறுத்திவிட்டு, எத்தனையோ ஆஸ்பத்திரிகள், ஆம்புலன்ஸ்கள் இல்லாமல் இருக்கின்றன. அந்த ஆஸ்பத்திரிகளுக்கு அவைகளை அனுப்பினால் நல்லது. இதை விடப் பொன்னான காரியம் இன்றைக்கு இருக்க முடியாது என்று நான் கூறவிரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த லாக் அப்பில் ஏற்படுகின்ற மரணம் எத்தனை? கடைசியாக இங்கே பேசப்பட்டது முதலமைச்சரிடத்திலே, பேசினேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல், ஒன்றைச் சொல்கிறேன். சேலத்திலே கிச்சிப்பாளையத்திலே, 15-3-1983 அன்று காலை, தெய்வயானை என்ற அரிசனப் பெண் — ஒன்று பெண்; இரண்டாவது அரிசனப் பெண் — எவர்சில்வர் தட்டு திருட்டு என்ற குற்றத்திற்காக, பேச்சி அம்மாள் என்பவரோடு அழைத்துச் சென்று அந்தப் பேச்சி அம்மாள் என்பவரை அனுப்பிவிட்டார்கள். 'நீ போ' உன்னிடம் வேலை இல்லை, அந்தப் பெண்ணிடம்தான் எங்களுக்கு வேலை' என்று சொல்லி, இரவு என்னவாயிற்று? $9\frac{1}{2}$ மணி அளவில் அந்தப் பெண் இறந்து விட்டாள். அந்தச் சடலத்தைக்கூட பார்க்க அந்தப் பெண்ணின் உறவினர்கள் அனுமதிக்கப்படவில்லை. எனக்குத் தகவல் வந்திருக்கிறது, சர்வ கட்சித் தலைவர்களுக்கு வந்திருக்கிறது. அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது, கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறாள் என்று. அங்கே என்ன நடந்தது என்பது தெரியாது. யார் மருத்துவச் சான்றிதழ் கொடுத்தார்கள் என்பது தெரியாது. மாண்புமிகு அவை முன்னவரிடத்திலே கூறினேன், முதல்வரிடத்திலே கூறினேன், நிச்சயமாக அந்தப் பெண்ணின் சடலத்தைச் சுடுகாட்டிலேதான் உறவினர்கள் பார்த்திருக்கிறார்கள். மார்பிலே ஏன் ஐயா காயம்? தொடையிலே ஏன் ஐயா காயம்? அவள் இளம் பெண். ஆகவே, இந்த அரசிலே அரிசனப் பெண் என்றால் கேள்வி கேட்பதற்கு ஆளில்லையா? காவல் கூடங்களா, கற்பழிப்புக் கூடங்களா என்ற கேள்வி எழுந்தால் என்ன ஆச்சரியம்? நான் கேட்கிறேன், அதிகாரிகள் ஏன் கைது செய்யப்படவில்லை. அவர்களைக் கைது செய்யாமல் இருப்பதால் இன்றைக்கு என்ன நிலைமை? பெரிய உத்தியோகஸ்தர்கள் நினைக்கிறார்கள்., தங்களுடைய ஆளுகையின் கீழே உள்ள இலாகாவில் இந்தத் தப்பு நடந்தது என்று ஒப்புக் கொண்டால் தனக்கு அவமானம் என்று. அப்படி இல்லை, சார். வேலியே பயிரை மேய்ந்தால் யாரைப் பாதுகாக்க முடியும். ஆகவே, நான் கேட்கிறேன், லாக் அப்பிலே நடைபெறுவதாகச் சொல்லகூடியவைகளைக் கவனிக்க வேண்டும். லாக் அப்பிலே பாரா போடுங்கள் — எப்படி அவர்கள் தற்கொலை செய்து கொள்ள முடியும்?





இன்னொரு கேஸ் வந்தது. இருதய நோயினால் செத்து விட்டார்கள், என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், அவ்வளவு இருதயமற்றவர்களா? ஒரு மனிதனை அரெஸ்ட் செய்யும்போது அவரை லாக் அப்பிலே வைக்கும்போது, தனக்கு இருதயநோய் என்று சொன்னாலுங்கூட, அவரை லாக் அப்பில் வைக்கலாமா? அதற்குப் பிறகு காலை 4 மணி அளவிலே இருதய நோயினால் செத்துப் போய் விட்டார் என்று ஒரு சாக்கு சொல்கிறார்கள். இவைகள் அனைத்தும் சாக்குகள்தான். அவர்கள் கடந்த காலத்திலே அடிக்கப் பட்டு கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதைத் தீர்க்க வழி என்ன? நாங்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். லாக் அப்பிலே தற்கொலை என்று சொன்னால், எடுத்த எடுப்பிலே, பிரைமா பேசி, அது கொலை என்று கருதப்பட வேண்டும், முதலிலேயே. அது கொலை அல்ல என்று நிரூபிக்க வேண்டியது ஸ்டேஷனிலே இருக்கிற அதிகாரிகளுடைய பொறுப்பு. இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருக்கலாம், நாளைக்கு வேறு கட்சி ஆட்சிக்கு வரலாம். அதற்காக நான் சொல்லவில்லை. ஆனால், நான் குறிப்பிட்ட நிலைமை ஏற்பட்டாலொழிய இந்நிலை மாறப்போவதில்லை. ஏனென்றால், ஆளுங்கட்சி அவர்களுக்கு ஆதரவு அளிப்பதன் காரணமாக, தவறு செய்யக்கூடிய அதிகாரிகள், எப்படியும் சரிக்கட்டி மறுபடியும் தப்பித்துக்கொள்ளலாம் என்று பார்க்கிறார்கள். இந்த முறை இருந்தால் மக்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கமுடியும்? என்று நான் கேட்கிறேன். ஆகவே, இதை மேலதிகாரிகள் கவனிக்கவேண்டும்.

சேலத்திலேயுள்ள கிச்சிப்பாளையம் சம்பவத்திலே பல அதிகாரிகள் சேர்ந்து மூடி மறைத்திருக்கிறார்கள். என்ன செய்ய முடியும்? இங்கே இருந்து கூட உத்திரவுகள் போயிருக்கின்றன, அதைப் பற்றி விசாரியுங்கள் என்று. ஆனால், இதுவரையில் ஒன்றும் நடைபெறவில்லை. சிந்திக்க வேண்டாமா? ஆகவேதான் கூறவிரும்புகிறேன், பெண்களுக்குப் பாதுகாப்பில்லை என்று லாக்-அப்பிலே பெண்கள் இருக்கக் கூடாது, என்று முன்னாலே பல காலமாகவே ஆர்டர் போடப்பட்டிருக்கிறது. இன்றைககு அது கடை பிடிக்கப்படுகிறதா? லாக் அப்பிலே இரவிலே பெண்கள் வைக்கப்படவில்லையா? அப்படி கடுமையான உத்தரவுகளை மீறி ஏதாவது—யாராவது—நடந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்படும்? இது ஒன்று.

அடுத்து, பெண் போலீஸ் இல்லாமல் ஒரு பெண்ணை ஏன் கைது செய்ய வேண்டும். கைது செய்யக் கூடாது. தேவையானால் பெண் போலீசை அதிகமாக்குங்கள். பெண்களைக் காவல் நிலையங்களிலே விசாரிக்கவேண்டுமென்றால், பெண் காவலர்கள், மற்றும் பெண் அதிகாரிகளை வைத்துக்கொண்டு தான்

பார்த்து, '' ஐயா, உட்காருங்கள் '' என்று சொல்கிறார்களா ?
அங்கே உட்கார வைக்கிறார்களா ? ''டேய், இங்கே வந்து நில்''
என்றுதான் சொல்கிறார்கள். பெரிய மனிதர்கள் யாரேனும்
போலீஸ்நிலையத்திற்குப் போனால் உட்கார வைக்கிறார்களே
தவிர, வேறு யாரேனும் போனால் உட்கார வைக்கிறார்களா
என்று கேட்க விரும்புகிறேன். தாசில்தார் அலுவலகத்திற்கோ,
கலெக்டர் அலுவலகத்திற்கோ போனால் பெஞ்சில் உட்காரச்
சொல்கிறார்கள். எனவே, ஜனங்கள் தாசில்தார் ஆபீசுக்குப்
போவதென்றால் சந்தோஷமாகப் போகிறார்கள் ; சர்வேயர்
ஆபீசுக்கு போவதென்றால் சந்தோஷமாகப் போகிறார்கள் ;
கலெக்டர் ஆபீசுக்குப்போவதென்றால் சந்தோஷமாகப் போகி
றார்கள். ஆனால் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகச் சொல்
லுங்கள், அப்படிச் சந்தோஷத்தோடு போகிறார்களா என்று
பார்க்கலாம். ஒரு போலீஸ் ஸ்டேஷனில் சரஸ்வதி பூசை கொண்
டாடிவிட்டு, அந்த அவலை வாங்கிக் கொண்டு போவதற்காக
பக்கத்திலிருந்தவர்களைக் கூப்பிட்டிருக்கிறார்கள். அதைப்
பார்த்த ஜனங்கள் ஓடுகிறார்கள். அவனவன் ஏதோ விஷயத்திலே
நம்மை மாட்டி விடப் பார்க்கிறார்கள் என்று நினைத்துக்
கொண்டு ஓடுகிறான். இதுதான் தமிழ் நாட்டிலுள்ள காவல்
துறையைப் பற்றி ஜனங்களுக்கு இருக்கின்ற ஒரு இமேஜ். எனவே,
இது சம்பந்தமாக காவல் துறையில் உள்ளவர்களுக்குப் புதுப்
பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். காவல் துறை இன்ஸ்பெக்
டர்கள், உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் ஆகியவர்களுக்குப்
புதுப் பயிற்சியை, ஆரம்பப் பயிற்சியைக் கொடுத்து, மக்களின்
நண்பன் போலீஸ், மக்களின் ஊழியன் போலீஸ் என்ற எண்ணம்
அவர்களுக்கு இருக்க வேண்டும், அப்படிப்பட்ட பயிற்சி தேவை
என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அந்தப் பயிற்சி
கொடுக்கப்படுகிறதா என்று நான் கேட்கிறேன். அதை மீறி
நடப்பவர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ? மற்ற நாடு
களில், குற்றம் சாட்டப்பட்ட ஆளைக்கூட, கோர்ட் அவரைத்
தண்டிப்பதற்கு முன்னால், அவரை உட்கார வைத்து விசாரிப்
பார்கள். அப்படியிருக்கும்பொழுது, உங்களிடம்தான் நவீன
முறை இருப்பதாகச் சொல்கிறீர்களே. அந்த நவீன முறைப்
படி விசாரிக்க வேண்டியதுதானே ? அப்படி விசாரிக்க வேண்டுமே
தவிர, அவர்களை அடிக்கக் கூடாது. போலீஸ் லாக்கப்பிலே
வைத்திருந்து கோர்ட்டிலே ஆஜர்படுத்தி வழக்குகளை நடத்த
வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
எனக்கு என்ன பெரிய கவலை என்றால், மக்களின் நண்பனாக
போலீசை மக்கள் பார்க்க வேண்டும். நீங்கள் பார்த்தால் ஒரு
சிறைச்சாலைக்கு ஒரு போலீஸ்காரர் போய் விட்டால் சிறை
அதிகாரிகள் அவரை தனியாக வைக்கவில்லை என்றால்
அவருடைய உயிருக்கே ஆபத்து. நாங்கள் ரொம்ப நாட்கள்
ஜெயிலிலே இருந்திருக்கிறோம். தேசிய இயக்கத்திலே, காங்கிரஸ்
காலத்திலே இருந்து ஜெயிலிலே இருந்து இருக்கிறோம்.





போலீஸ்காரர்கள் என்று சொன்னால், எப்படி அவர்கள் நடந்து
கொண்டார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகவே நான்
கூறுகிறேன். நான் உண்மையிலே சந்தோஷப்படுகிறேன். அதாவது
சில கட்டளைகள் என்று போர்டுகள் வைத்திருக்கிறார்கள்.
பல போலீஸ் ஸ்டேசன்களிலே நான் பார்க்கிறேன். அந்த
போர்டை ஒரு மூலையிலே கொண்டுபோய் வைத்திருக்கிறார்கள்.
பெரியதாக வையுங்களேன். போலீஸ் உங்களுடைய நண்பன்,
உங்களுடைய குறைகளைச் சொல்லலாம். நீங்கள் வந்து ஆதரவு
கேட்கலாம் என இந்த அரசாங்கம் ஏன் செய்யக் கூடாது.
இதற்கு பதிலாக,பணக்காரர்களுக்கு வசதி. இன்னும் சொல்லப்
போனால் பெரிய சேம்பர் ஆப் காமர்ஸ், போன்ற வர்த்தக
ஸ்தாபனங்கள் கூட்டுகின்ற கூட்டத்திற்கு பெரிய போலீஸ் அதி
காரிகள் போய் விருந்து சாப்பிடுகிறார்கள். அங்கே போய் பேசு
கிறார்கள். லையன்ஸ் கிளப். சிங்கங்களினுடைய சங்கம்.
அங்கே போய் கலந்து கொள்கிறார்கள். ஆனால் தொழிற்சங்
கத்தினுடைய நிர்வாகிகளுடைய ஒரு கூட்டத்திற்கு போவார்
களா ? பிற மாவட்டங்களிலே உள்ள விவசாயச் சங்கத்தினுடைய
ஊழியர்களுடைய கூட்டத்திலே வந்து கலந்து கொள்ளுங்கள்
ஐயா என்று கேட்டால், அவர்கள் போவார்களா ? ஏன் என்றால்
இது ஒரு வர்க்கப் பார்வை. இன்றைக்கு இந்த நாட்டிலே
இருக்கக் கூடிய பெரும் போலீஸ் அதிகாரிகள், பெரும்.வசதியுள்ள
குடும்பங்களிலேயிருந்து வரக்கூடிய காரணத்தினாலேதான் இந்த
ஊழியர்கள் அல்லது தொழிலாளிகள் அல்லது இந்த நாட்டிலே
உள்ள விவசாயிகள், நாட்டிலே செல்வத்தை உற்பத்தி செய்கின்ற
அந்த விவசாயத்தொழிலாளிகளையும் நீங்கள் மனிதனாகப்பார்க்க
வேண்டும். ஆனால் மனிதனாகப் பார்ப்பயற்கு தயாராக இல்லை.
தொழிற்சங்கப் . பிரதிநிதிகளோடு இந்தச் சட்டம் ஒழுங்கைப்
பராமரிக்கக் கூடிய அதிகாரிகள் கலந்து பேசட்டுமே. பிறகு ஏன்
தகராறு வருகிறது. உங்களுடைய உரிமைகள் என்ன ? எங்
களுடைய கடமைகள் என்ன ? அதனுடைய முடிவுகள் என்ன?
இவற்றை எல்லாம் அவர்களோடு கலந்து பேசி முடிவுகள் எடுக்க
முடியாதா அவர்களுடன் பேச முடியும். ஆனால் அப்படிப்
பேசுவதில்லை. சர்வகட்சி ஊழியர்களுடைய கூட்டத்தைக்
கூட்டுங்கள். இன்றைக்கு இந்த நாட்டிலுள்ள ஒரே பாதுகாப்பு
சர்வ கட்சிகள் பாதுகாப்புதான். ஏன் என்றால் ஒரு கட்சி
தப்பு செய்தால், அதை 3 கட்சிகள் பார்க்கும். ஒவ்வொரு
போலீஸ் நிலையத்திற்கும் சர்வக் கட்சியைச் சேர்ந்தவர்களைக்
கொண்ட ஒரு பிரதிநிதிகளைக் கொண்டு ஒரு காவல் நிலைய
ஆலோசனைக் குழு போடுங்கள். அப்போது லாக் அப்பிலே
வைத்து அடிக்கிறான் என்றால் அவர்கள் வந்து பார்க்கட்டும்.
உங்களுக்கு எந்தச் சந்தேகமும் இருக்க வேண்டிய அவசியம்
இல்லை. உங்களுக்கு பொறுப்பே இருக்காது. நான் கேட்கி
றேன். ஆயுதம் தாங்கிய போலீஸ் நிற்கிறது என்றால் அவன்

[திரு. என். சங்கரய்யா]

படுகிறது. அதிகாரிகள் ஒரு முக்கியமான ஊருக்கு டூர் போகிறார்கள் என்றால், அல்லது அதிகாரிகள் தங்கள் குடும்பத்தை அந்த முக்கியமான ஊருக்கு அனுப்புகிறார் என்று சொன்னால், உடனே அங்கேயுள்ள காவல் நிலையத்திற்கு தகவல் அனுப்பப்படுகிறது. இன்னார் குடும்பம் இந்தத் தேதியில் வருகிறது. அவர்களை லாட்ஜில் தங்க வைத்து, கோவிலுக்கு அழைத்துச் சென்று, அவர்களை நல்ல முறையில் கவனித்து அனுப்பச் சொல்கிறார்கள். இதை எல்லாம் செய்வதற்கு அவர்களுக்குப் பணம் வேண்டாமா? அதனால் அவர்கள் என்ன செய்கிறார்கள், லாட்ஜ் முதலாளிகளிடத்தில் போய் பல்லைக் காட்ட வேண்டியிருக்கிறது. ஓட்டல் முதலாளிகளிடத்தில் கேட்க வேண்டியிருக்கிறது இப்படி அவர்களிடத்தில் சலுகை பெற்றுவிட்ட பின்னாலே அங்கே ஒரு தொழிலாளர்கள் போராட்டம் என்று சொன்னால் அவர்கள் யார் பக்கம் இருப்பார்கள். ஆகவே, அதிகாரிகள் குடும்பங்களை ஊருக்கு அனுப்பினால், அவர்கள் சொந்தச் செலவில் செல்ல வேண்டும். அப்போதுதான் இதனைத் தவிர்க்க முடியும்.

மற்றொன்றும் சொல்லப்படுகிறது. ஒரு எஸ்.ஐ. 500 ரூபாய் பாக்கெட்டில் இல்லாமல் வீட்டிற்குப் போக மாட்டார். எப்படி இந்த நிலைமை ஏற்படுகிறது? எதனால் ஏற்படுகிறது என்பதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். இதை எல்லாம் பரிசீலிக்க நேஷனல் போலீஸ் கமிஷன் வேண்டுமென்பதல்ல. நம்முடைய மாநிலத்திலே இந்த நிலைமைகளை களைவதற்கு என்ன செய்யலாம் என்பதை நாமே பார்த்தால் போதும். மக்களின் நல் எண்ணத்தைப் பெற்றுதான் நாம் ஆட்சியை அமைக்கிறோம். அமைச்சர்களாக இருக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. நல்ல மனசாட்சி இருந்தால்தான் எந்த ஒரு ஆட்சியும் நல்ல முறையில் காரியங்களைச் செய்ய முடியும். ஜனநாயகத்தில் மக்களின் நல்லெண்ணம், மக்களின் மனசாட்சி ஆகியவை அடிப்படையாக இருக்கின்றன, ஆனால் போலீஸ் துறையில் இப்படி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். ஒரு போலீஸ் அதிகாரி வருகிறார் என்றால் முதலமைச்சருக்கு டிராஃபிக் விலக வேண்டும் என்று செய்வது போல் இவர்களுக்கும் செய்யப்படுகிறது. ஜனநாயகத்தில் எல்லோருக்கும் சம உரிமை என்கிறபோது இந்தப் போலீஸ் அதிகாரிகளுக்கு மட்டும் ஏன் இந்தச் சிறப்பு மரியாதை? சொந்தக் காரணங்களுக்காகப் போகிறபோது அவர்கள் அரசாங்க வாகனங்களைப் பயன்படுத்துகிறார்கள். அவர்களுடைய குடும்பங்கள் சினிமா பார்க்க ஜீப்பில் அழைத்துச் செல்லப்படுகின்றன. அப்படியானால் அரசாங்கம் பெட்ரோல் செலவை எப்படிக் குறைக்க முடியும் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.





[திரு. என். சங்கரய்யா]

நான் பல ஊர்களில் பார்த்திருக்கிறேன். போலீஸ் இலாகாவில் உள்ள வண்டிகளை மெயின்டெயின் செய்வதில் சில தவறுகள் ஏற்படுகின்றன. தனியாரிடம் அவை தரப்பட்டு, அவர்கள் மோசமான தரக்குறைவான கருவிகளை எல்லாம் போட்டுக் கொடுத்து அதிகமாக பணம் வசூலித்து விடுகிறார்கள், இந்த நிலைமையைப் போக்குவதற்காக அரசாங்கமே. மோட்டார் வெகிகில்ஸ் மெயின்டெனென்ஸ் ஆர்கனைசேஷன் காவல் துறைக்கெனத் தனியாக வைப்பதை நான் வரவேற்கிறேன்.

இன்றைக்குக் காவல் துறையில் பணியாற்றுகிறவர்கள் எத்தகைய வாழ்க்கையை நடத்துகிறார்கள்? ஒருவனுடைய நடத்தை தானே வாழ்க்கைக்கு உரைகல்லாக அமைகிறது? இந்த காவல் துறை அதிகாரிகள் எப்படி வாழ்கிறார்கள். எளிய வாழ்க்கை நடத்துகிறார்களா? சிலர் வருமானத்திற்குச் சமமாக வாழ்க்கை நடத்துகிறார்களா என்றால் இல்லை. ஒரு ஆய்வு எடுத்துப் பார்த்தால் தெரியும். அவர்கள் எளிய வாழ்க்கை நடத்த வேண்டும். தமிழ்நாட்டு மக்களோடு மக்களாக அவர்கள் வாழ வேண்டும். இதை எப்படி அவர்கள் மனதில் ஊட்ட முடியும். போலீஸ் பயிற்சி நிலையத்தில் இதை மனதில் பதியச் செய்ய வேண்டும். வேலூர், கோயம்புத்தூர் போலீஸ் பயிற்சி நிலையங்களில் இதைச் செய்ய வேண்டும். அதற்கான முறையில் ஹோம் செக்ரடரியும் டி.ஜி.பி.யும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வகுப்புக் கலவரங்கள், மதக் கலவரங்கள் தமிழ்நாட்டில் ஆங்காங்கு தலை தூக்குகின்றன. இங்கே இருக்கும் இன்டலிஜென்ட் மெஷனரி எதற்காக இருக்கிறது? அரசியல் வாதிகளைக் கண்காணிப்பதற்குத்தானா. அல்லது மத வெறியர்கள், வகுப்பு வெறியர்கள் இப்படி சமுதாயத்தின் உள்ளே புகுந்து கொண்டு கலவரங்களை உண்டு பண்ணிக்கொண்டு இருக்கிறார்களே, அவர்களை ஏன் இவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. உதாரணமாக குமரி மாவட்டத்தில் ஏற்பட்ட வகுப்பு கலவரத்தில் ஆர்.எஸ்.எஸ்.-ஐச் சேர்ந்தவர்கள் அதிலே. ஊடுருவி இருக்கிறார்கள் என்பது எங்களுடைய குற்றச்சாட்டு

சில வகுப்புவாத ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், ஜாதியின் பெயரால் சங்கம் வைத்திருக்கிற அதிகாரிகள் கையில் அதிகாரம் இருந்தால் மற்ற ஜாதிக்கு என்ன நம்பிக்கை ஏற்பட முடியும்? ஆகையால் ஒரு செக்குலர் ஸ்டேட், ஜாதி மத வித்தியாசம் இல்லாத ஒரு அரசாங்கத்தினுடைய அதிகாரிகள், அவர்களுடைய சொந்த மதம் வேறாக இருக்கலாம், அவர் வீட்டிற்குப் போன பிறகு கும்பிடலாம், ஆனால் உத்தியோகத்தில் இருக்கும்போது தேரைப் பிடித்து இழுக்கலாமா? உத்தியோகத்தில் இருக்கும்போது தேர் பிடித்து இழுத்தால் தேர் பிடித்து இழுக்காத மதத்தைச் சேர்ந்தவர்கள் அவரை யார் என்று சொல்வார்கள்? இதைத்தான் நான் கேட்கிறேன்.

எப்படிப் போவான். சாதாரண மனிதன். அதனால்தான் சொல்கிறேன். இன்றைக்கு ஒவ்வொரு மாவட்டத்திலேயும், எஸ். பி. மட்டத்திலேயும், டி. எஸ். பி. மட்டத்திலேயும், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மட்டத்திலேயும், சர்வ கட்சிகளுடைய பிரதிநிதிகளைக் கொண்ட, விவசாயப் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக் கூட்டத்தை நடத்துங்கள். உங்கள் மீது வரக் கூடிய புகார்களை அவர்களிடம் சொல்லுங்கள். அவர்கள் சொல்லக் கூடிய புகார்களுக்கு பதில் சொல்லுங்களேன். பிரச்னைகள் உருவாகாமல், உறவுகள் பலமாகாதா. ஆகவேதான் கூறுகிறேன்.

இன்றைக்கு தொழிற்சங்கப் பிரச்னை எப்படி வருகிறது என்றால் ஒரு பெரிய தொழிற்சாலை, அதனுடைய பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அந்த எம். டி. போன் பண்ணுகிறார். இங்கே தொழிலாளிகள் கலாட்டா பண்ணுகிறார்கள் என்று. உடனே அந்தப் போலீஸ் அதிகாரிகள் போய் அங்கே தாக்குகிறார்கள். ஏன் தெரியுமா ? இந்த எம். டி. இடத்திலே தங்களுடைய உறவினர்களுக்கு நல்ல வேலைகளை எதிர்பார்க்கிறார்கள், பெரிய பேக்டரியிலே உள்ள, கெஸ்ட் ஹவுசிலேயும் மற்ற இடங்களிலேயும் போய்த் தங்குவதற்கு அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். எல்லா வசதிகளையும் எதிர்பார்க்கிறார்கள். எனவே முதலாளிகளுடைய தயவை நம்பி உயர்தர போலீஸ் அதிகாரிகள் இப்படிச் செய்தால், இந்தப் போலீஸ் மீது தொழிற்சங்கத்தினருக்கு என்ன நம்பிக்கை ஏற்படமுடியும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து பெண்கள் விஷயத்திலே ஒழுக்கக்கேடு உள்ளவர்களாக சிறு சிறு ஆன்டிசெடன்ட்ஸ், பழைய சம்பவங்கள், அதாவது ஒரு அதிகாரியைப் பற்றியோ அல்லது காவலர்களைப் பற்றியோ அவர்கள் இப்படிச் செய்தார்கள் என்று புகார்கள் வந்தால், உடனே அவர்களை நீக்க வேண்டும். இன்றைக்கு பல பேர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். ஒரு கேசிலிருந்து தப்பித்து இன்னொரு கேசுக்குப் போகிறார்கள். நாம் பண்பாட்டைப் பற்றிச் சொல்லுகிறோம். ஒழுக்கக்கேடாக இருக்கிறது என்று சொல்கிறோம். நான் கேட்கிறேன். பெரிய விஜிலன்ஸ் ஆர்கனைசேஷன் இந்த மாநிலத்திலே இருக்கிறது. போலீஸ் தவிர, தனியாக சி.ஐ.டி. சில சமயங்களிலே ஒழுங்காக விசாரணை நடைபெறவில்லை என்றால் நாமே வலியுறுத்துகிறோம். மாநிலத்திலே உள்ள போலீஸ் சி.ஐ.டி.க்களை வைத்து விசாரிக்க வேண்டுமென்று. நான் கேட்கிறேன். சந்தேகமான கேஸ்கள் பூராவும், அந்த லோக்கல் நிலையத்திற்குத் தெரியாமல் மாநில சி.ஐ.டி.க்கள் மூலமாக விசாரித்தால்தான் சில உண்மைகளாவது புலப்படும்.





இதிலே என்ன ஒரு போலீஸ் பிரதர்ஹூட். ஒரு போலீஸ் அதிகாரி தப்புச் செய்தால், வேறு ஒரு போலீஸ் சகோதரர் விசாரணை செய்து அவர் தப்புச் செய்யவில்லை என்று அவரைப் பாதுகாக்க வேண்டுமென்ற ஒரு எண்ணம் அந்த விசாரிக்கும் அதிகாரிக்கு வந்தால் நாடு எப்படி உருப்படியாகும். எனவே அப்படி வந்தால் என்ன ஆகும். ஆகவேதான் சொல்கிறேன்.

அடுத்து விஜிலன்ஸ். லஞ்ச ஊழல். இவற்றைக் கவனிக்க வேண்டியது போலீஸ் இலாக்கா. இன்றைக்கு நான் ஒன்றைச் சொல்கிறேன். கடந்த காலத்திலே ரிட்டையர் ஆகியிருக்கக் கூடிய பல அதிகாரிகளுடைய சொத்துக்களைப் பற்றி ஒரு ஆய்வு நடத்துங்கள். அவர்களுக்குக் கிடைத்த வருமானத்திற்கு ஏற்றவாறு அவர்களிடம் இன்றைக்குச் சொத்துக்கள் வைத்து இருக்கிறார்களா என்று. ஒரு 10, 15 ஆண்டுக் காலத்திற்குள்ளே நடந்த அந்தச் சம்பவங்களைப் பற்றி ஆய்வு நடத்துங்கள். நிச்சயமாக அதிலே உங்களுக்கு பயங்கரமான உண்மைகள் புரியும்.

(பிற்பகல் 12-30)

ஒரு பெரிய பணக்காரர் ஒரு கொலையில் சிக்கிக்கொண்டார் என்று சொன்னால், அவர் இலட்ச ரூபாய் கொடுக்கின்றார் என்றால், அவர் அதற்குத் தயார் என்றால், அவர் தப்பித்துக் கொள்கிறார். இதைத் தடுக்க என்ன இயந்திரத்தை, என்ன அமைப்பை, இந்த அரசாங்கம் செய்து இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஆகவே, நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ''விஜிலென்ஸ்'' என்பது தனியாகப் பிரிக்கப் பட்டு, அவர்களிடத்தில் இந்த போலீஸ் கரெப்ஷனையும் பார்க்கச் சொல்ல வேண்டும். போலீஸ் அமைப்பே கரெப்ஷனையும் பார்க்கின்ற நேரத்தில் என்ன நடைபெறுகிறது என்று சொன்னால் எனக்குத் தெரிந்த சில போலீஸ் அதிகாரிகள், என்னைப் பார்க்கிற போது சொல்வது உண்டு. சார், நான் இப்போது விஜிலென்சில் இருக்கிறேன். எங்காவது கரெப்ஷன் நடந்தால் சொல்லுங்கள் பிடித்து விடுகிறேன், கமர்சியல் டாக்சில் இருக்கிறது என்று சொன்னால், அதைப் பிடித்து விடுகிறேன் என்று சொல்கிறார்கள். அப்படியானால், அந்த ஒரு துறையில் மட்டும்தான் கரெப்ஷன் இருக்கிறதா ? இந்த போலீஸ் துறையில் இருக்கும் கரெப்ஷனை யார் கண்டுபிடிப்பது ? இதைப் போக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு என்ன நடைபெறுகிறது என்று சொன்னால், ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் மாமுல் போய்க்கொண்டு இருக்கிறது. இன்னொன்றும் நடைபெறுகிறது என்று சொல்லப்

போலீஸ் ஸ்டேஷனில் ஒரு மதக் கடவுள் படத்தை வைத்தால், அங்கே வேலை பார்க்கும் மற்ற மதத்தைச் சேர்ந்த ஊழியர்களுடைய மனம் எப்படி இருக்கும்? அப்படியானால் இது செக்குலர் ஸ்டேட், மத சார்பற்ற அரசு என்பதற்கு என்ன மரியாதை இருக்கும் என்று கேட்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட போலீஸ் துறைக்கு பொறுப்பாக இருக்கிற அமைச்சர் கூட, 'இந்து சமய கலைக் கூட்டத்தில் போய் பேசியிருக்கிறார்கள். அது என்னவோ இந்திய சமய பண்பாடு என்று இருக்கிறதா என்று நான் கூட பார்த்தேன். போஸ்டரில் போய் மறுபடியும் பார்த்தேன். இந்துசமய கலை என்றுதான் இருக்கிறது. அப்படியென்றால் முஸ்லீம் என்ன நினைப்பார்கள்? கிறிஸ்தவர்கள் என்ன நினைப்பார்கள்? பௌத்தர்கள் என்ன நினைப்பார்கள்? நான் கேள்விபட்டேன். ஒரு போலீஸ் அதிகாரி கூட அங்கே அந்த மாநாட்டில் பேசியிருக்கிறார். சங்கராச்சாரியார் பேசியிருக்கிறார். அவர் பெரியவர், அது வேறு விஷயம் ஆனால் மற்ற மதத்தினர் இந்த போலீஸ் அதிகாரி பற்றி என்ன நினைப்பார்கள்? மைனாரிட்டி மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுமா ஆகவேதான் நான் கேட்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்........ .......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு தற்காலிகத் தலைவரவர்களே, இந்து சமய கலாச்சார கலை அல்ல; இந்திய சமய கலாச்சாரம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : நானும் அப்படித்தான் நினைத்தேன். இப்போது கூட உங்கள் அதிகாரியை அழைத்து மவுண்ட் ரோட்டில் ஒட்டப்பட்டிருக்கிற அந்த பெரிய போஸ்டர்களை எடுத்துவரச் சொல்லுங்கள். அதிலே இந்து சமய கலை என்று போட்டிருக்கிறதா அல்லது இந்திய சமய கலை என்று போட்டிருக்கிறதா என்பதைப் பாருங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ; மாண்புமிகு தற்காலிகத் தலைவரவர்களே, அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட நான், அங்கே பேசிய நான் சொல்கிறேன். அங்கே பேசப்பட்ட விஷயங்கள் அப்படித்தான் இருக்கின்றன. அதிலே கலந்துகொண்டவர்கள் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். முஸ்லீம்கள் இருக்கிறார்கள். நானும் கலந்துகொண்டிருக்கிறேன் இதில் நான் குறிப்பிட்டே சொல்கிறேன். ''இந்திய சமய கலாச்சார கலைவிழா'' அது. போஸ்டரிலே தவறாக இருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.





திரு. என். சங்கரய்யா : ஒரு வேளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய அந்த இடத்தில் மட்டும் இந்திய சமய கலாச்சார கலைவிழா என்று எழுத்துக்களைப் பொறித்திருந்தாலும்கூட ஆச்சரியப் படுவதற்கில்லை. நான் நேற்றைய தினம் தெருவிலே ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்களைப் பார்த்தேன். இன்னொன்றையும் சொல்கிறேன். டாக்டர் கரன்சிங் அவர்களைத் தலைவராகக் கொண்ட விஸ்வ ஹிந்து பரிஷத்திலே காங்கிரஸ்காரர்கள் கூட சேரக்கூடாது என்று....

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்னொன்றையும் நான் சொல்கிறேன். இப்போது பெரியவர்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்களே, அவர்கள் குறிப்பிட்டது பத்திரிகையிலே வந்திருக்கிறது. நிருபர்கள் கேட்டதற்குத் தெரிவித்திருக்கிறார்கள். இது இந்து சமய கலாச்சாரம் அல்ல, இந்திய சமய கலாச்சார கலை விழா என்று சொல்லியிருக்கிறார்கள்; அது பத்திரிகையில் வந்திருக்கிறது.

திரு. என். சங்கரய்யா : அதைக்கூட நான் பார்த்தேன். தாங்கள் கூட பேசும்போது மௌலானா சாகிப் அவர்கள் நாதசுரம் வாசித்ததையும் அண்ணா தி.மு.க. எம்.பி. ஒருவர் பேசியதையும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதுதான் அதில் இருக்கக் கூடிய மேல் பூச்சு. பாக்கியை நான் கேட்கிறேன் அப்படி என்றால் முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவர்கள், கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் அந்த விழாவிலே கலந்து கொண்டார்கள்? அந்த கலைகளிலே வல்லுநர்களாக இருக்கக் கூடியவர்கள் அழைக்கப்பட்டார்களா?

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிற எண்ணம் என்னஎன்பது. எனக்குத் தெரியும். அவர்கள் ஜாதி, மத வித்தியாசம் போக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை உடையவர்கள். ஆகையால்தான் கேட்கிறேன். அப்போது நடந்திருக்கக்கூடிய அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய பிறகு, குமரிமாவட்டத்திலே அந்த இந்து முன்னணி ஊர்வலத்தை தடை செய்தது பற்றிக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நானும் இங்கே குறிப்பிட்டேன். தாணுலிங்க நாடார் போன்ற பெரியவர்கள் மார்ஷல் நேசமணியோடு சேர்ந்து தமிழ்நாட்டினுடைய விடுதலைக்காகப் பேராடியவர்கள் எல்லாம் இன்றைக்கு அதில் இருப்பதைப்பற்றி நான் வருத்தப் படுகிறேன். இன்றைக்கு ஆர்.எஸ்.எஸ். இயக்கம் ஊடுருவி வருகின்றது. அந்த திக்கு நோக்கி இவர்கள் அழைத்துச் செல்லப் படுகிறார்கள். முதலமைச்சர் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்.

ரட்டரி தலைமையிலே ஒரு போர்ட் வைத்து அவர்கள் ஒரு டிட் டென்ஷன் தேவையா என்பதைப்பார்த்து அவர்கள்தான் உத்தரவு இடுகின்ற நிலைமை இருந்தது. 1941- ஆம் ஆண்டிலே நாங்கள் கைது செய்யப்பட்டபோது கூட சீஃப் செக்கரட்டரியை தலைவராகக் கொண்ட போர்ட்டுத்தான் டிடென்ஷன் உத்தர வினை இட்டது. ஆனால் இன்றைக்கு இந்த குண்டா சட்டத தின் படி பால்காரர்கள், சாதாரண நபர்கள் ஆகியோர்களை எல்லாம் கைது செய்கிறார்கள். அவர்கள் குற்றம் செய்திருக்க லாம். ஆனால் அப்படிக் குற்றம் செய்ததற்காக தண்டனை கொடுப்பதற்கு வேறு வழிவகைகள் இருக்கும்போது இந்த சட் டத்தைக் கொண்டு வந்தது சரியல்ல. எனவே அந்தக் குண்டா சட்டத்தைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் போகப் போக பல்வேறு அரசியல் காரணங்களுக்காகவும் இந்தத் தடுப்புக் காவல் சட்டத்தைப் பயன்படுத்தக் கூடிய அபாயம் ஏற்படும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்து காவலர்களிடைய சில வசதிகளைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே வீடு கட்டுவதற்கு கடனும் அவர் கள் எமர்ஜென்சி காலத்திலே வேலை செய்யும் போது கொடுக்கக் கூடிய படியினைப் பொறுத்தவரையில் 4 ரூபாய் 50 பைசா என்பது உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார் கள். அதேபோன் ஓய்வு நாளில் பணி செய்தால் விடுமுறையும் இரட்டிப்புச் சம்பளமும் கொடுக்க வேண்டும் என்று கே ட்டிருக் கிறார்கள். அவர்களுக்கு துணி, மருத்துவ சிகிச்சை போன்றவை சம்பந்தப்பட்ட வகையிலேசில வசதிகளைச் செய்ய வேண்டும் என்றுகேட்டிருக்கிறார்கள். அதேபோன்று போலீஸ் துறையினைச் சேர்ந்த எழுத்தர்களைப் பொறுத்த வரையில் கூடுதலாக 600 ஸ்டாம்ப்கள் கொடுக்கவில்லை என்ற குறையினை சொல்கிறார் கள். வேலைப்பளுவால் அவர்கள் பாதிக்கப்படுவதாகச் சொல் கிறார்கள். போலீஸ் வீடு கட்டும் திட்டத்தில் அவர்களுக்கும் இடம் வேண்டும் என்று கேட்கிறார்கள்.

அடுத்து போலீஸ் யூனியன்—அது குறித்து அரசாங்கம் என்ன செய்கின்றது? அவர்களுடைய உரிமையைப் பாதுகாத்துக் கொள் வதற்கு சங்கம் வைத்துக் கொள்வதற்கு ஜனநாயக ரீதியில் அதை வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அப்படி அவர் களுக்கு உரிமையினை வழங்கினால்தான் அவர்களுக்கு சரியான வகையில் திருப்தி ஏற்படும்படி செய்தால்தான் அவர்களிடத்திலே இருந்து நல்ல வேலைகளை நாம் எதிர்பார்க்க முடியும் என்பதைக்கூறிக் கொள்கிறேன்.





அடுத்து குமரி மாவட்டத்தில் கல்குளம் தாலூகாவில் அங்கே இருக்கின்ற சில விவசாயிகளை நிலத்தை விட்டு வெளியேற்று வதற்கு ஏற்பாடு செய்தார்கள். 21—1—1983 அன்று கரும்பு மூட்டுக் காந்திநகர் என்ற கிராமத்தில் சுமார் 8 வருடங்களாக நிலத்தினை கைவசம் வைத்திருக்கும் விவசாயிகளை வெளியேற்று வதற்காக குலசேகரம் காவல் நிலைய ஆய்வாளர் தோழர் திரு. டி. மணி அவர்களை முன் வைத்தே மிரட்டியுள்ளார். எப்படி மிரட்டினார் தெரியுமா? ''மண்டைக் காட்டிலே நாங்கள் சுட் டோம், எங்களை ஒன்றும் செய்யவில்லை'' என்று சொல்லி யிருக்கிறார். அதுபற்றி புகார் செய்தும் இதுவரையில் நட வடிக்கை எடுக்கவில்லை. அதேபோன்று கோவையிலே செல்வ புரம் அவுசிங் யூனிட்டில் உள்ள எண். 6 என்ற வீட்டில் குடி யிருந்த கண்ணம்மாள் என்பவர் மரணம் குறித்து தோழர் திரு. கு. ரமணி அவர்கள் புகார் கொடுத்தார். அவர்களுக்கு பய முறுத்தல் கடிதம் வந்தது. அதுபற்றியும் அவர் புகார் கடிதம் கொடுத்திருக்கிறார். ஆனால் இதுவரையில் நடவடிக்கை எடுக்க வில்லை என்பதை உங்களிடத்திலே கூறி இந்தக் காவல் துறை மானியத்திலே என்னுடைய கருத்துக்களை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

* திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை மற்றும் தீயணைப்புத்துறை பற்றிய மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து ஒருசில கருத்துக்களை மட்டும் எடுத்து வைக்க விரும்புகிறேன். தமிழகத்தில் முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சியின் சீரிய தலைமையின்கீழ் இந்தியத் துணைக் கண்டத்தி லேயே மிகச் சிறந்த காவல் துறையைத் தமிழகம் பெற்றிருக் கின்றது.

136032

(பிற்பகல் 12–50)

சட்டம் ஒழுங்கு மற்ற மாநிலங்களில் சின்னாபின்னம் அடைந்து வருவதை இன்றையதினம் பத்திரிகையின் வாயிலாக நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். சட்டத்தின் முன்பு அனைவரும் சமம் என்ற தத்துவத்தின் அடிப்படையில், சட்டம் ஒழுங்கைக் கட்டுப்படுத்துவதில் கட்சி பாகுபாடின்றி, செயல் படுகின்றது என்பதை உணர்த்த, ஆதாரங்களை தேடி அலைய வேண்டிய நிலை எதிர் கட்சியினருக்கு இல்லை என்பதை நான் நினைவூட்ட கடைமைப்பட்டுள்ளேன்.

மனசாட்சி உள்ளவர்கள் இம்மாமன்றத்திலேயே ஆதாரங் களை கண்டு நிலைமையை புரிந்து இருப்பார்கள். இருப்பினும் ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்ற

அவர் இப்படிப்பட்ட ஒரு மத ரீதியான அல்லது அப்படிப்பட்ட சக்தியைப் பரப்புவதற்கு மறைமுகமாகக்கூட உதவி செய்துவிடக் கூடாது என்ற பயத்தில் இதை கூறுகிறனே தவிர வேறல்ல.

(பிற்பகல் 12-40)

**மாண்புமிகு திரு. எம். ஜி. ஆராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அங்கே இன்னொன்றையும் குறிப்பிட்டேன். எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்றும் அவரவர்களுடைய கருத்துக்களைச் சொல்ல உரிமை இருக்கிறது. என்பதையும் சொன்னதோடு, மட்டும் அல்லாமல், நாஸ்திகத்திற்கு சாருவாக மதம் என்ற பெயரும் கூட உண்டு. நாஸ்திகத்தை இப்போது எல்லாம் ஒரு வாதம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதை மதம் என்று முன்னால் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதை சாருவாக மதம் என்று அழைத்தார்கள் என்பதையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னைப் பற்றி அவர் சொன்ன நம்பிக்கைக்கு நன்றி, நிச்சயமாக ஏமாற மாட்டார்.

**திரு. என். சங்கரய்யா :** எனக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளுடைய பொதுவான பாரம்பரியம், பொதுவான அணுகுமுறை என்ன என்பது தெரியும். அதிலே எங்களுக்கு பெருத்த அளவிலே உடன்பாடு இருக்கிற காரணத்தால்தான் நான் இங்கே அது பற்றி பேசிக் கொண்டிருக்கிறேன். ஆகவே தான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு இதை உதாரணமாக ஆரம்பித்தால், போலீஸ் அதிகாரிகள் கிராம மட்டத்தில், தாலுக்கா மட்டத்திலே இருக்கக்கூடிய மத சார்புள்ள அந்த விழாக்களுக்கு செல்ல ஆரம்பித்தால், அங்கே மைனாரிட்டியாக உள்ள மக்கள் மத்தியில் எப்படி நம்பிக்கையை அது ஏற்படுத்தும் என்றுதான் நான் இன்றைக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காக கேட்கவிரும்புகிறேன். அதேபோல புளியங்குடியிலே நடைபெற்ற பல்வேறு சம்பவங்கள் பற்றியெல்லாம் இங்கே வரும்போது, அங்கேயுள்ள சிறுபான்மையினரைச் சேர்ந்த அதிகாரிகளும் போகும்படியான அளவுக்கு, அந்த அதிகாரிகள் மத்தியிலே பரவலாக்கப்பட்ட ஒரு ஏற்பாடு இருக்க வேண்டும். இந்த மாநிலத்திலே என்னென்ன சென்சிடிவ் ஏரியா என்று பார்த்து, இந்த மாதிரியான வகுப்புக் கலவரங்கள், மத மாச்சாரியங்கள் உண்டு பண்ணக் கூடிய ஏரியாக்கள் எங்கே எங்கே இருக்கின்றன என்று பார்த்து, அங்கே உள்ள மைனாரிட்டி மக்களுக்கும் நம்பிக்கை அளிக்கக்கூடிய முறையிலே, உத்தியோகஸ்தர்களுடைய டிஸ்டிரிபியூஷன் முறை அமைக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



அடுத்து, இந்த அரிசன உரிமைகளைப் பொறுத்தவரைக்கும் இருக்கக்கூடிய சிவில் ரைட்ஸ் என்பதை நாடு முழுவதும் தீவிரப்படுத்தப்படவேண்டும் .என்று நான் கேட்க விரும்புகிறேன். காரணம் சுடுகாட்டுக்குப் போகக்கூட பல இடங்களிலே அவர்களுக்கு உரிமை மறுக்கப்படுகிறது. அவர்களுக்கு இன்றைக்கும் கூட பல ஓட்டல்களிலே பல கிராமங்களிலே மற்றவர்களுக்கு கொடுக்கக்கூடிய கோப்பைகளிலே அவர்களுக்கு உணவு அளிக்கப்படுவதில்லை. இதனை தைரியமாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நூற்றாண்டுக்காலமாக இருக்கக் கூடிய இந்த தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று எடுத்தால், இதற்கு ஒரு பிரேக் வரவேண்டும். ஏதாவது ஒரு கால கட்டத்திலே அதை ஒழித்தேயாகவேண்டும். ஆகவே, அந்த சிவில் ரைட்ஸை அமுல்படுத்தக்கூடிய பகுதிகளுக்கு நல்ல அதிகாரிகளைப் போட்டு, மாநிலத்திலே இது சம்பந்தமாக எண்ணம் கொண்ட, தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று எண்ணுகிற அனைத்து அரசியல் கட்சிகளுடைய பிரதிநிதிகளை கூட்டி அவர்களுடைய உதவியோடு, இவைகளை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து லா அண்ட் ஆர்டர் பிரச்னைக்கு வரும்போது, சொல்லவிரும்புவது, தர்ணா நடத்துவது மறியல் நடத்துவது போன்ற இம்மாதிரியான முறைகள் எல்லாம் நீண்டகாலமாக இந்த நாட்டிலே இருந்து வந்திருக்கிறது. தேசீய விடுதலை காலத்திலிருதே வந்திருக்கக் கூடிய உரிமைகள். ஆகவே, அதைப் பொறுத்தவரையில் அனுமதி மறுப்பது என்ற பிரச்னைக்கு இடம் இருக்கக்கூடாது. அவர்கள் சமாதான முறையிலே சாத்வீக முறையிலே தர்ணா நடத்துவதற்கும் சமாதான பிரயோக முறையிலே போராட்டங்களை நடத்துவதற்கும், வேலை நிறுத்தங்களை நடத்துவதற்கும் உரிமை உண்டு என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அப்படி வரும்போதுதான், இந்த சங்க அமைப்புகளைப் பற்றி நான் சொன்னேன். அதுதான் முன்னாடியே சொன்னேன். தொழிற் சங்கங்கள், உழைப்பாளர் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள் போன்ற அமைப்புக்ளுடனும் மக்களிடமும் எப்படி அன்போடும் ஆதரவோடும் பழக வேண்டும் என்பதுபற்றி, காவல் துறையினர் தெரிந்திருக்க வேண்டும். இங்கே நீங்கள்குறிப்பிட்டிருக்கிறீர்கள், உங்கள் அறிக்கையிலே, காவல் துறையினருடைய வாழ்க்கை கடுமையான வாழ்க்கை என்று, அங்கேயிருந்துதான் ஆரம்பம், பொருளாதாரத்தில் ஓரளவு நல்ல நிலைமையுள்ள காவல் துறையினருடைய வாழ்க்கையே கடுமையானது என்கிறபோது, அவர்களை விட வேலை இல்லாமல் இருக்கக்கூடிய, பாடுபடக் கூடிய மற்ற தொழிலாளர் மக்களுடைய வாழ்க்கை எவ்வளவு கஷ்டம்?

நிலையில் தான் காவல் துறையைப் பொறுத்தமட்டில் எதிர் கட்சியினர் இருக்கிறார்கள் என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

கட்சி பாகுபாடு இன்றி இன்றைய தினம் நடவடிக்கை எடுக்கும் மனப் பக்குவம் புரட்சித் தலைவர் அவர்களுக்குத்தான் உள்ளது. ஆனால் இமாலய தவறுகள் செய்பவர்கள் தனது கட்சியினர் எனத் தெரிந்தும் அவைகளை மூடி மறைக்கின்ற அளவுக்கு காவல்துறை மீது தேவையில்லாத பழியைப் போட்டு குற்றங்களை சுமத்தி, அபாண்டமான குற்றச்சாட்டுகளை, சுமத்துவதில் ஒரு சிலர் கைதேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டுள்ளேன்.

எனக்கு நினைவுக்கு வருவது எல்லாம், தங்களை தொடர்ந்து விரட்டி வரும் போலீசிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள ஓடுகின்ற திருடன், எப்படி திருடன் திருடன் என்று கத்திக் கொண்டு தப்பித்து ஓடுவதாக படித்த பால பாடமாகும். அது இப்போது என் நினைவுக்கு வருகிறது என்பதை இந்த மன்றத்தில் சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

தி.மு.க. ஆட்சியில் திண்டுக்கல் பாராளுமன்றத்திற்கும், கோவை சட்டமன்றத்திற்கும் இடைத் தேர்தல்களை அனைத்திந்திய அண்ணா தி.மு.க. சந்திக்க நேரிட்டது.

அதைப்போல் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சியில் பெரியகுளம் பாராளுமன்றத்திற்கும், திருச்செந்தூர் சட்ட மன்றத்திற்கும் இடைத் தேர்தலையும், தி.மு.க. சந்திக்க நேரிட்டது. ஆனால் அன்றும், இன்றும், என்றும் வெற்றி புரட்சித் தலைவருக்குத்தான் என தமிழகம் தீர்ப்பு வழங்கியது. ஆனால் அன்று பணபலம், படைபலம், அதிகார பலத்தையும் வைத்து அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தொண்டர்கள் மீது பொய் வழக்குகள், செய்த படுகொலைகள் என் நினைவுக்கு வருகின்றன. வேலை நீக்கம் செய்யப்பட்டு நடை பிணமாக்கப்பட்ட தொழிலாளர் சௌந்திரபாண்டியன் என்பதை எல்லாம் நினைக்கும் போது எங்கள் எண்ணம் எல்லாம் அதன் மேல் செல்கிறது.

இன்று புரட்சித் தலைவரின் ஆட்சியில் அதே சூழ்நிலையில் படுகொலைகள் கிடையாது. பொய் வழக்குகள் கிடையாது. அமைதியாக தேர்தல்கள் நடந்துள்ளன. சட்டம் ஒழுங்கு செவ்வனே செயல்படும் பொற்காலம் தான் புரட்சித் தலைவரின் ஆட்சி காலம் என்பதற்கு இதைவிட வேறு சான்று இல்லை என்பதை நினைவூட்ட கடமைப் பட்டுள்ளேன்.





காவல் துறையை அனாவசியமாக குறை கூறி, அபாண்டமான பழிகளை சுமத்தி, அவர்களது தன்னம்பிக்கையை இழக்கவைத்து, தாழ்வு மனப்பான்மையை உருவாக்கி அவர்களை செயல்பட விடாமல் முடக்கி அதன் மூலம் தனது நண்பர்களை, செய்த குற்றங்களிலிருந்து தப்புவிக்க, தமிழினத் தலைவர்கள் முயல்வது வேதனைக்குறியது ஆகும். அதற்காக ஒன்று இரண்டு கருத்துக்களை இந்த மன்றத்தில் எடுத்து வைக்க கடமைப்பட்டுள்ளேன்.

திருச்செந்தூரில் நடைபெற்ற சட்டமன்ற இடைத் தேர்தலையொட்டி பூச்சிக்காட்டிலுள்ள 8 தி.மு.க.—காங்கிரஸ் நண்பர்கள் மீது பெட்டி கேஸ் போட்டதை வைத்து அரசியல் ஆதாயம் தேட முனைவோர், நா. முத்தையாபுரத்தில் 6 அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வினர் வழக்குகளை சந்திப்பதை மறந்துவிடக் கூடாது. திருச்செந்தூரில் சிட்டி போலீஸ் சட்டம் 75 பிரிவின் கீழ் தி.மு.க. வினர் ஒருவர் மட்டுமா வழக்கை சந்திக்கின்றார் அல்ல. ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவரும் அந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கிறார். அவதூறு பேசியதாக 5 அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வினர் மீது திருச்செந்தூர் காவல் நிலையம் வழக்கு தொடர்ந்து உள்ளது. தேர்தல் அன்று ஆள் மாறாட்டம் செய்ய முயற்சித்ததாக 5 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இதை வைத்து தனது கட்சியினர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக தி.மு.க. புகார் கூறாது என்று நான் நம்புகின்றேன். குலசேகரப்பட்டணத்தில் 5 தி.மு.க. வினர் மீதும், 5 அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வினர் மீதும் வழக்கு இருக்கிறது. காயல்பட்டணத்தில் அடிதடி சண்டைக்காக மட்டும் 4 தி.மு.க. வினர் மீது மட்டும் வழக்கு தொடரப்படவில்லை. 4 அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வினர் மீதும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

சட்ட விரோதமாக அனுமதிக்கப்படாத பொதுக் கூட்டத்தைக் கூட்டி ரகளை செய்த 10 பேர் மீது காயல்பட்டணத்தில் வழக்கு இருக்கிறது. 30,000 மக்கள் தொகை கொண்ட காயல்பட்டணத்தில் 10 சமூக விரோத சக்திகள் மேல் நடவடிக்கை எடுத்தால் அதை ஓர் சமுதாயப் பிரச்சனை ஆக்க, ஓர் சிறுபான்மையினர் இந்த ஆட்சியில் பாதிக்கப்படுவதாக மாயையை உண்டாக்க தி.மு.க. வினர் முனைவது வருந்தத்தக்கது என்பதை நான் எடுத்துச் சொல்ல கடமைப் பட்டுள்ளேன்.

முஸ்லீம்கள் பெருவாரியாக உள்ள திருச்செந்தூரில், குலசேகரப்பட்டணம், உடன்குடி, கரும்பூர், சீருடையார்புரம் போன்ற பல்வேறு பகுதிகளிலுள்ள இஸ்லாமிய நண்பர்கள் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வுக்கு வாக்களித்தார்கள் என்பதை நினைவூட்ட கடமைப்பட்டுள்ளேன்.

[திரு. இரா. அமிர்தராஜ்] [1983 ஏப்ரல் 7

தனது சுய லாபத்திற்காக ஒரு தாய் மக்களாக வாழும் தமிழகத்து இந்து-முஸ்லீம்களிடையே மத சண்டையை உருவாக்க யார் முயன்றாலும் அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்காது என நான் நம்புகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்த இஸ்லாமியப் பெரியவர்கள் இன்று ஜமாத் என்ற பெயரால் பழி வாங்கப்படுகின்றனர். காயல்பட்டிணத்தில் உள்ள சிறு நயினார் பள்ளிவாசலில் கடந்த 20 ஆண்டுகாலமாக கலிபாவாக பணியாற்றிய ஜனாப் வி. பி. எஸ். மவுலானா, கட்சி சார்பற்ற மிலாது விழாவில் கலந்துக் கொண்டதற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். முஸ்லீம்கள் கழகத்திற்கு வாக்களித்ததற்காக தனவந்தர்களால் வேலை நீக்கம் செய்யப்பட்டு அச்சுறுத்தப்படுகின்றனர். இதுதான், இன்றைய காயல்பட்டிணத்தின் நிலை. இந்த வேதனை மிகு சம்பவங்கள் தொடர்ந்து கலவரம் உண்டாக்கி, சட்டம் ஒழுங்கைக் கெடுக்க யாரேனும் முயன்றால் அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்செந்தூர் மக்கள் மிகவும் அமைதியுடனும் கட்டுக்கோப்புடனும் வாழ்கிறார்கள். அந்த அளவுக்கு காவல் துறையினர் சீரான நேர்மையான நிர்வாகத்தைத் தந்துள்ளனர். இதை குலைப்பதற்கும் இனக் கலவரங்களை உருவாக்கவும் சில சமூக விரோத சக்திகள் சதித் திட்டங்களை உருவாக்கி வருகிறார்கள். கடந்த சில தினங்களுக்கு முன்னதாக ஒரு நபர், தனக்குத் தானே ரேசர் பிளேடால் காயங்களையும் சிராய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொண்டு மருத்துவ மனையில் மருத்துவர்களை மிரட்டி கட்டுகளைப் போட்டுக் கொண்டு எந்த விதத்திலும் சம்பந்தமில்லாத காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என உண்ணாவிரதம் இருப்பதும் மறியல் போராட்டங்களில் ஈடுபட்டும் வருகிறார்கள்.

சுப்பிரமணிய பிள்ளையை வைத்து அரசியல் நடத்தியவர்கள் நீதி கேட்டு நெடிய பயணத்தை மேற்கொண்டவர்கள் இடைத் தேர்தலில் மக்கள் தெளிவான நீதியை வழங்கியதற்குப் பின்பு அதைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்கள் ஏற்றுக் கொள்ள மனமில்லாதவர்கள், பாசத்துடனும், ஒற்றுமையுடனும் வாழும் மக்கள் மத்தியில் இனக் கலவரங்களை உருவாக்கி அதை அரசியல் லாபத்திற்கு பயன்படுத்தலாம் என எண்ணி மனச் சாட்சியில்லாமல் தேவையற்ற அறிக்கைகளை விட்டுக் கொண்டும், அவசியமற்ற ஆதாரமற்ற போராட்டங்களையும் உருவாக்கி வருகிறார்கள், இவற்றில் எல்லாம் தொகுதி மக்கள் ஏமாற மாட்டார்கள். ஏமாற்ற முடியாது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்ற இந்த வேளையில் மக்களுக்கு தீவிர பாதுகாப்பு தேவை என்பதையும் நான் வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.



1983 ஏப்ரல் 7] [திரு. இரா. அமிர்தராஜ்]

கடமையையும் கட்டுப்பாட்டையும் காத்து சீரிய பணிகளை மேற் கொள்ளும் திருச்செந்தூர் காவல் துறையினருக்கு திரு விழாக் காலங்களில் தங்குவதற்கு அறைகள் ஒதுக்குவதில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அதுபோல் ஆலய நிதியிலிருந்து சிறப்பு படியும் வழங்கி அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். ஆலய பக்தர்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பு அவர்களுக்கு இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற காவல் துறையினருக்கு ஸ்பெஷல் படி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பழைய வண்டி ஒன்றையே நம்பியிருக்கும் திருச்செந்தூர் தீயணைப்பு நிலையத்திற்கு அதை மாற்றி இரண்டு புதிய வண்டிகள் ஒதுக்க வேண்டும். இதை மெயின் ஸ்டேஷனாக உயர்த்தி, தேவையான பணியாட்களை நியமிக்க வேண்டுமென்றும் அங்கே ஆம்புலன்ஸ் ஒன்றை வழங்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்வதோடு அங்கே வாடகைக் கட்டடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரமான கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு காலனியையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலமைச்சரின் காவல் துறை மானியம் சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சினையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய அருமை மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கோணங்களிலே காவல் துறையைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தோழர் சங்கரய்யா பல்வேறு கருத்துக்களை தெளிவுபடச் சொன்னார்கள். தலைவர் அவர்கள் கூறியபடி நான் சுருக்கமாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். காவல் துறை என்று எடுத்துக் கொள்கிறபோது மக்கள் மத்தியில் உள்ள ஒரு அவல நிலையை அரசு தயவு செய்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போலீஸ் ஸ்டேஷன் என்று சொன்னால் நம்பிக்கைக்குரிய இடமாகவும் பாதுகாப்பான இடமாகவும் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய இடமாகவும் அமைய வேண்டுமென்பதுதான் பொதுமக்களுடைய கருத்தாக இருக்கிறது.

(பிற்பகல் 1—00)

ஆனால், இன்றைக்கு அது எப்படியிருக்கிறது என்று சொன்னால் அரசியல்வாதிகளின் மேலாதிக்கத்திற்கு உட்பட்ட ஒரு பகுதியாக ஆக்கப்பட்டுள்ளது. அங்கே செல்வது என்றாலே பொது

பிட்டுச் செத்ததாகவும் ஒரு அறிவிப்பு தந்திருக்கிறார்கள். இது எனக்கு நிறைவு தருகிறதோ இல்லையோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கு நிறைவு தராது என்பதை நான் பணிவோடு அரசுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி சென்ற ஆண்டு என்னுடைய தொகுதியில் கே. வி. குப்பத்தில் மாடு விரட்டு விழாவில் தகராறு ஏற்பட்ட பொழுது அங்கே ஒருவருக்கொருவர்—விழாவிலே பங்கெடுத்துக்கொண்டவர்கள் தகராறு செய்துகொண்டார்கள். போலீசார் தலையிட்டு ஒரு கலவரம் ஏற்பட்டது. கலவரத்திற்குப் பின்னால் 17 பேர்களைப் பிடித்துக்கொண்டு விட்டார்கள். 17 பேரில் 16 பேர்கள் அண்ணா தி. மு. க., ஒரு தோழர்தான் வெளித் தோழர். அவர்கள் மேல் கடுமையான வழக்குகள் இருக்கின்றன. இன்னமும் இருந்துகொண்டிருக்கிறது முடியவில்லை. ஆனால், அந்த வழக்கிலே போலீசார் நடந்துகொண்டது சரி, நியாயம் என்று சொல்லி, அந்தக் காவல் நிலையத்திற்கு அண்ணா பதக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அடிப்பட்டவர்கள் பொதுமக்கள், விவசாயிகள், சாதாரணத் தொழிலாளர்கள். கொடுப்பது அண்ணா பதக்கம் என்று சொன்னால், எப்படி பொதுமக்களுக்குச் சாதாரண ஏழை, எளிய விவசாயிகளுக்குக் காவல் துறை மீது நம்பிக்கை வரும் என்று நான் இந்த அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஊத்தங்கரை அப்படி, கே.வி. குப்பம் இப்படி.

1½ மாதத்திற்கு முன்னால், இதே கே. வி. குப்பத்தில் நந்தகோபால் என்ற ஒரு வாலிபரைப் போலீசார் பிடித்துக் கொண்டு போனார்கள். பிடித்துக்கொண்டு போன பிறகு காவல் நிலையத்தில் வைத்து நையப் புடைத்து, இரவு 1 மணி அளவிற்கு டி. பி. யிலே தூக்கிக்கொண்டு வந்து போட்டு விட்டார்கள். அதிகாலையிலே பொதுமக்கள் பார்த்து ஆஸ்பத்திரியிலே சேர்த்தார்கள். அன்றைய தினம் என்ன நடந்தது என்றால் அந்த ஊரிலே இருக்கிற அத்தனை கட்சிகளும், அண்ணா தி.மு.க. உட்பட ஒன்றியச் செயலாளர் எனது அருமை திரு. ஜி. ரகுபதி உட்பட ஒன்றாக இணைந்து அர்த்தால் நடத்தினார்கள். யாரை எதிர்த்து? காவல் துறையை எதிர்த்து. யாரை எதிர்த்து? முதலமைச்சரின் இலாகாவை எதிர்த்து. யாரை எதிர்த்து? அடக்கு முறையை எதிர்த்து நடத்துபவர் யார்? அண்ணா தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும். ஆனால், ஆர். டி. ஓ., விசாரணை போட்டார்கள், ஒன்றுமே நடக்கவில்லை. ஆர். டி. ஓ. வந்தது உண்மை, டி. எஸ். பி. வந்தது உண்மை, அத்தனையிலும் நான் பங்கேற்றேன், நியாயம் வேண்டுமென்று. இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் அந்த ஊரிலே எடுக்கப்படவில்லை. அந்தப் பகுதியைப் பொறுத்த வரையிலும், இந்தத் துறை சம்பந்தமாக, பொதுமக்கள் மத்தியிலே ஒரு நல்ல கருத்து இல்லை.





அதே போல, சென்ற 3—4—1983-இல் எனது அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். யாரை எதிர்த்து? டெல்லியை எதிர்த்து. எதற்காக? உணவு வேண்டும், உணவுப் பொருள் வேண்டும், நிவாரண நிதி வேண்டும் என்று கேட்டார்கள். மாநிலம் முழுமையிலும் அன்றைக்கு சைக்கிள் ஊர்வலம். ரொம்ப ஆர்ப்பாட்டமாக, நல்ல முறையிலே பண்ணினார்கள். ஏன் பண்ணினார்கள்? வறட்சியால் பாதிக்கப்பட்ட மாநிலம், தண்ணீரினால் பாதிக்கப்பட்ட மாநிலம்,, உணவுப் பொருள் நெருக்கடியிலுள்ள மாநிலம். ஆகவே, டெல்லி தரவேண்டும் என்று குரல் எழுப்பினார்கள். வரவேற்கிறோம். பாராட்டுகிறோம். ஆனால், அதே போல், உழைக்கின்ற மக்களுக்கு எதிராக, உழைக்கிற மக்களை ஒடுப்பதற்காக, டெல்லியிலே இருக்கிற அரசு ஒரு சட்டம் கொண்டுவந்தது. அத்தியாவசியப் பணிகள் சட்டம் என்று. சில முக்கியத் தேவையான தொழில்கள் என்று குறித்து, கோடிட்டுக் காட்டி, இன்ன, இன்ன தொழில்களிலே உள்ளவர்கள் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்று சட்டம் கொண்டு வந்தார்கள். அதைக் கண்டித்து நாங்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றும் அனைத்து கட்சிகளும், ஏன் அண்ணா தி.மு. கழகம் உள்ளிட்டு..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள், 15 நிமிஷம் பேசிவிட்டீர்கள், 1 நிமிஷத்திலே முடியுங்கள்.

திரு. என். ஏ. பூங்காவனம் : அப்படி, அந்தச் சட்டத்தைக் கண்டித்து, டெல்லி அரசை எதிர்த்து ஒரு போராட்டம் நடத்துகிறபொழுது தஞ்சை மாவட்டத்திலே மட்டும் துப்பாக்கிச் சூடு நடத்தி அன்றைக்குப் பலரைக் கைது செய்தார்கள். 1,400 பேர்கள் மீது இன்றைக்கும் வழக்கு இருக்கிறது. யாரை எதிர்த்தோம்? டெல்லியை எதிர்த்தோம். சட்டத்தை எதிர்த்தோம். நாங்கள் என்ன கேட்டோம்? உரிமை வேண்டுமென்று கேட்டோம். நீங்களும் கேட்டது உரிமைதான், நாங்களும் கேட்டது உரிமைதான்.

(பிற்பகல் 1-10)

ஆனால் நீங்கள் மட்டும் ஆட்சியிலே இருக்கிறீர்கள் என்ற முறையில் சுதந்திரமாக ஊர்வலம் போனீர்கள். இதுதான் நிலைமை.

[திரு. என். ஏ. பூங்காவனம்] [1983 ஏப்ரல் 7

மக்களுக்கு ஒரு அச்சமும், பயமும் தமிழகம் முழுவதிலும் பரவியிருக்கிறது என்பதுதான் உண்மையான நிலையாகும். அதுமட்டுமல்லாமல் காவல் நிலையங்களுக்கு உள்ளே ஏதாவது நமக்கு வேலை நடக்கவேண்டுமென்றால் ஒவ்வொரு பிரச்சினைக்கும் இவ்வளவு என்று ரேட் ஃபிக்ஸ் செய்து வைத்திருக்கிறார்கள். இந்த காரியங்களை நடத்திக் கொடுக்க புரோக்கர்ஸ் எல்லா காவல் நிலையங்களிலும் அநேகமாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை தமிழகத்திலுள்ள எல்லா காவல் நிலையங்களிலும் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலை இருக்கிறபோது சாதாரண மக்கள், ஏழை மக்கள், உழைக்கக்கூடிய மக்கள் அங்கே செல்லுகிறபோது எந்த எண்ணத்தில் செல்கிறார்கள்? வசதியுள்ளவர்கள் தங்களுக்கு பாதுகாப்பு வேண்டுமானால் பல்வேறு வகைகளில் பாதுகாப்பை தேடிக்கொள்கிறார்கள். வசதியற்றவர்கள் நிர்வாகத்தை நாடுகிறார்கள். வசதியுள்ளவர்கள் நீதியை நாடுகிறார்கள். அதிக வாய்ப்புள்ளவர்கள் நீதியை நாடுகிறார்கள். இவற்றிற்கு மத்தியிலே காவல் நிலையங்கள் செயல்படுகிற பொதுவான வேலைகள் சாதாரணமாக மக்களுக்கு தமிழகத்தைப் பொறுத்த வரையில் பயமுறுத்துவதாகவும், அச்சமூட்டுவதாகவும், இருக்கின்றன. நம்பிக்கைக்குரிய பாத்திரமாக இருப்பதற்கு பதிலாக மாற்று உருவத்தில் தெரிகிற நிலைமைதான் நிலவி வருகிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

உதாரணமாக ஊத்தங்கரை என்ற பகுதியில் நடைபெற்ற ஒரு சம்பவம் சென்ற ஆண்டில் ஆய்வு அறிக்கையில் வந்திருக்கிறது. அங்கே தகராறு நடந்தது; கொலை குற்றம் செய்தவர் பிடிபட்டார். போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு வந்ததற்கு பின்னால் ஏதோ மருந்தை உட்கொண்டு அதனால் இறந்துவிட்டார் என்று அறிக்கையிலே சொல்லப்படுகிறது. ஆனால், நடந்தது என்னவென்றால் அந்த குறிப்பிட்ட நபர், சுப்பிரமணியம் என்று பெயர் என நினைக்கிறேன்; அந்த நபர் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் ஆதரவாளர். அங்கே இருக்கிற ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர். இரவு 8—30 மணிக்கு காவல் நிலையத்திற்கு அழைத்து வந்திருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்ததற்குப் பிறகு தாக்கப்பட்டிருக்கிறார். தாக்கி, காலை 6—00 மணிக்கு முன்னாலே அங்கேயிருந்த ஒரு மரத்திற்கு பக்கத்திலே பிணமாக கிடந்திருக்கிறார். இதை பொதுமக்கள் பார்த்திருக்கிறார்கள். சுற்றுப்பக்கத்திலே இருக்கிற பத்திற்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்கள், ஆயிரக்கணக்காக ஒன்று கூடியிருக்கிறார்கள். இதிலே எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களோ, அல்லது எந்த தனி நபரோ ஜாதியின் அடிப்படையிலும், மதத்தின் அடிப்படையிலும் இந்த கிளர்ச்சியை ஆரம்பிக்கவில்லை. பொதுமக்களே ஆரம்பிக்கிறார்கள்.



1983 ஏப்ரம் 7] [திரு. என். ஏ. பூங்காவனம்]

நேற்று காலை நன்றாக இருந்தவன் இன்று காலை மாண்டிருக்கிறான். எப்படி மாண்டார்? ஏன் மாண்டார்? யார் அழைத்துச் சென்றார்கள்? என்ற வினா எழுகிறது. இப்படி ஒரு பிரச்னை எழுந்து, மக்கள் ஏராளமாக கூடுகிறார்கள். அங்கேயுள்ள அத்தனை கட்சியினரும் ஒன்றாக கூடுகிறார்கள். தெண்டி என்ற தெண்டாயுதபாணி முன்னாள் ஊராட்சி ஒன்றியத் தலைவர், இப்போது அனைத்திந்திய அண்ணா தி.மு.க. கட்சியின் அந்த ஊரின் அவைத் தலைவர். போலீசார் அவருடைய வீட்டை என்ன பண்ணியிருக்கிறார்கள், தெரியுமா? வீட்டு கதவை சுட்டிருக்கிறார்கள். அவருடைய வீட்டுக் கதவு துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளாகியிருக்கிறது. அங்கே அடிபட்டவர்களில் 100-க்கு 90 பேர்கள் அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள். நான் இதைச் சொல்வதற்கு என்ன காரணம்? காவல் துறைக்கு அடிப்பதில் கட்சி பாகுபாடே கிடையாது. பணம் வருவதில் கட்சிப் பாகுபாடே கிடையாது. மற்றவர்களை ஒடுக்குவதில் கட்சிப் பாகுபாடே கிடையாது. அவர்கள் ஒரு முடிவு எடுத்துக்கொண்டு தமிழகத்தில் யாரையும் ஒடுக்கலாம், யாரையும் அடிக்கலாம் என்ற நிலை இருக்கிறது. ஊத்தங்கரைக்கு நானும் எங்களுடைய கட்சியின் பொதுச்செயலாளர் திரு. மாணிக்கம் அவர்களும் மறுநாள் காலை சென்றோம். எந்த பகுதியிலும் எங்களுக்கு தங்குவதற்கு இடமே இல்லை. எல்லா அறைகளையும் எடுத்துவிட்டதாக சொல்லிவிட்டார்கள். அன்றைக்கு காலையில் டி.ஐ.ஜி. தேவாரம் அவர்கள் அந்த ஊரிலே முகாம் செய்திருந்தார்கள். எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் பல்வேறு இடங்களில் ஊரை விட்டே ஓடக்கூடிய வகையில் கடுமையான அடக்குமுறையை ஊத்தங்கரை போலீஸ் எடுத்துக்கொண்டது. அப்படி நடந்ததற்கு பின்னால் அந்த ஊரிலே இருக்கிற எல்லாக் கட்சியினரும், அண்ணா தி.மு.க.வை தவிர மற்ற அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் எங்களை பார்க்க வந்தார்கள். அவர்களிடத்தில் என்ன நடந்தது என்பதை பற்றி விசாரித்தோம். விசாரணையின் போது போலீசார் எடுத்துக்கொண்ட கடுமையான நடவடிக்கைகளைப்பற்றி சொன்னார்கள். குறிப்பாக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் முறையிட்டுக் கொண்டார்கள். எங்களுடைய முதல்வர் புரட்சித் தலைவரிடம் சொல்லுங்கள், போலீஸ் அக்கிரமத்தை எடுத்துக் கூறுங்கள், அவர் தடுத்து விடுவார், நம்பிக்கையோடு இருக்கிறோம், என்று சொன்னார்கள். ஆனால், வழக்கு நடக்கிறது. ஊரைவிட்டு வெளியே இருக்க வேண்டுமென்று, வேலூரிலே பெருவாரியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் வெளியே தங்க வேண்டுமென்று கோர்ட் உத்தரவு வந்திருக்கிறது. எங்கள் ஊரிலே இருந்தார்கள், இன்றைக்கு கேஸ் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், கொடுக்கப்பட்டுள்ள ஆய்வுரையில் ஊத்தங்கரையில் திருடியதாகவும் அவனைப் பிடித்ததாகவும், [illegible]

பல போலீஸ் நிலையங்களில் சர்வ சாதாரணமாக மரணங்கள் ஏற்படுகின்றன. சேலம், இன்னும் வேறு பலயிடங்களில் இப்படி நடக்கின்றன. எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் அழகாகச் சொன்னார்கள். அந்த நிலைமை தடுக்கப்பட வேண்டும் ; பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதில் அரசு கவனமாக இருக்க வேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், எல்லோருக்கும் வேலை தருகிறோம், சத்துணவுத் திட்டம் என்றும், வேறு பல திட்டங்கள் என்றும் கொண்டு வருவதாக அரசு அறிவிக்கிறது. அதேமாதிரி காவல் துறைக்கு, இரண்டாண்டுகளுக்கு முன்பு பல்லாயிரக்கணக்கான பேர்கள் வேலைக்கு எடுக்கப்பட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது. அவர்களுக்கு இன்டர்வியூ நடத்தப்பட்டது. சம்பந்தப்பட்ட விவரங்களையெல்லாம் எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சிலிருந்து வாங்கி வரச் சொல்லி இவர்களுடைய ஆபீசிலே பத்திரமாக வைத்துக் கொண்டிருக்கிறார்களாம். அந்த இண்டர்வியூவில் இலட்சக்கணக்கான பேர்கள் பங்கேற்றிருக்கிறார்கள். ஆனால் எத்தனை ஆயிரம் பேர்களை வேலைக்கு எடுப்பார்களோ தெரியாது. ஆனால் மறுபடியும் புதிதாக அழைக்கப் போகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இரண்டாண்டுகளுக்கு முன்பு தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்கள் மறுபடியும் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் ஆபீசுக்கு சென்று பதிய வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அரசு இதைப் பரிசீலனை செய்து, முதலில் அழைத்தவர்களிலேயிருந்தே தேர்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில் தலைமை அதிகாரிகளை மட்டும் நிறையப் பேர்களைப் போடுகிறார்கள். மேல் அதிகாரிகளை மட்டும் நிறையப் பேர்களைப் போடுகிறார்கள். எல்லாத் துறைகளிலேயுமே இப்படித்தான் இருக்கிறது. இப்படி அதிகாரிகள் மட்டும் கூடிக்கொண்டிருக்கிறார்கள். காவல் நிலையத்தில் நான்கைந்து பேர்கள் அல்லது பத்து பேர்கள் இருப்பார்கள் ; ஆனால் ஜூரிஸ்டிக்ஷன் பரந்த அளவில் இருக்கிறது. குற்றச்சாட்டுகள், கொலைகள் போன்றவற்றைத் தவிர்ப்பதற்கோ அல்லது தடுப்பதற்கோ குறுகிய நேரத்தில் நடவடிக்கை எடுப்பதற்குப் போதிய ஆட்கள் இல்லாமல் இருப்பதால் அவர்களை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்ஸ்பெக்டர்கள் தங்களுக்குக் கீழே பணியாற்றுகின்றவர்களைக் குறைந்தபட்சம் சக ஊழியர்கள் என்று பார்க்காமல் வீட்டு வேலைகள் உட்பட அனைத்து வேலைகளையும் வாங்குகிறார்கள்.





வீட்டு வசதியைப் பொறுத்தவரையில் நிரந்தரமான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். வீடு கட்டுவதைப்பற்றித் தோழர் சங்கரய்யா அவர்கள் மிகவும் அழகாகச் சொன்னார்கள். அதை அமலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவலர்களின் வேலை நேரத்தைப் பார்த்தால் ரொம்பவும் பாவமாக இருக்கிறது. எல்லோருக்கும் எட்டு மணி நேரம்வேலை என்றால் காவலர்களுக்கு எந்த நேரமும் கிடையாது. அவர்கள் எப்பொழுது வருகிறார்கள், எப்பொழுது போகிறார்கள், எப்பொழுது தங்குகிறார்கள் என்ற உத்தரவாதமே இல்லை. அவர்களுக்கு வேலை நேரம் நிச்சயிக்கப்பட வேண்டும்.

பெண் போலீசாருக்கு இப்பொழுது என்ன வேலை கொடுத்திருக்கிறீர்கள், என்ன பண்ணுகிறீர்கள், எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்ற விவரம் இல்லை. அதையும் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உடைகள், மற்ற வசதிகள், போக்குவரத்துப் பேட்டா, படி ஆகியவற்றை நல்லமுறையில் கொடுக்க வேண்டும். அவர்கள் நிறைய அடிக்கிறார்கள் என்பதை ஒத்துக்கொள்கிறேன், இருந்தாலும்கூட வீட்டு வசதி, படி, உடை, ஓய்வு நேரம், லீவ் போன்ற வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு காவல் துறை, தீயணைப்புத் துறை கொள்கை விளக்கம், சாதனையினுடைய அடிப்படையிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற குறிப்புகளை அடிப்படையாக வைத்து அவைகளின் மேலே காந்தி-காமராஜ் தேசிய காங்கிரசின் கருத்தைச் சொல்வதற்கு நான் விழைகின்றேன். முதலமைச்சர் அவர்களாலே சட்டப்பேரவையிலே அளிக்கப்பட்டிருக்கின்றன குறிப்புகளில், தமிழ்நாட்டில் இருக்கின்ற காவலர்கள் செய்திருக்கின்ற சாதனைகளைப் பற்றியெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

விளையாட்டுத் துறையிலே அவர்கள் பலயிடங்களில் வெற்றி பெற்று, தங்கப் பதக்கங்களையும், கோப்பைகளையும் பெற்று வந்திருப்பதும், அதிலே ஆண்கள் மட்டுமல்லாமல், பெண்களும் அந்தச் சாதனைகளைப் புரிந்திருப்பதும் நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருகின்ற ஒன்று.

அப்படிப்பட்ட சாதனைகளைச் செய்து கொண்டிருக்கின்ற இந்தக் காவல் துறை நல்லமுறையிலே இருக்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சென்ற ஆண்டே ஓய்வு

பெறும் காவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதாக அறிவித்
திருந்தார்கள். ஆனால், இன்னும் அவர்களுக்குக் கொடுக்கப்பட
வில்லை என்பதோடு, ஓய்வு பெறுகின்ற நிலையில் இருக்கின்றவர்
களும், பெற்று விட்டவர்களும் தாங்கள் இருந்து கொண்டிருக்
கின்ற வீடுகளைக் காலி செய்ய வேண்டிய நிலையில் ஒரு இக்கட்
டான நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்ற வேத
னையான செய்தியையும் நான் இங்கே குறிப்பிட விரும்பு
கிறேன்.

அதோடு இந்தக் காவல்துறை தமிழகத்தைப் பொறுத்தவரை
யிலே மிகத் துயரத்தோடு பணிபுரிந்துகொண்டு இருப்பதாக
இங்கே சொல்லப்படுவதற்கான காரணம் அமைச்சர்கள், பெரிய
பெரிய அதிகாரிகள் செல்லுகின்ற நேரத்திலேஎல்லாம்அவர்களுக்கு
பாதுகாப்பு கொடுப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு உப
சரிப்புச் செய்கின்ற வேலையையும் அவர்கள் ஆற்ற வேண்டி
யிருக்கிறது. கொளுத்துகின்ற வெய்யிலிலே மணிக்கணக்காக
காத்திருப்பவர்கள் இவர்கள்தான். நள்ளிரவு நேரத்திற்குப் பின்
னாலும்கூட தங்களுடைய கடமையை முடிக்க முடியாத நிலை
மையிலே வேலி ஓரங்களிலே சிறிய சிற்றூர் பக்கங்களிலே காத்து
இருக்கின்ற அந்தப் பணியை அவர்கள் செய்துகொண்டிருக்
கிறார்கள். பாதுகாப்புக்கு என்று ஏற்பாடு செய்யப்பட்டு இருக்
கின்ற போலீஸ் இலாக்காவிற்கு பாதுகாவலே இல்லையோ என்ற
அளவிற்குக்கூட சில இடங்களிலே நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்
கொண்டு இருக்கின்றன.

போலீஸ் நிலையங்களுக்கு நாம் தகவல் கொடுத்தால் அங்கே
ஆள் இல்லை என்ற பதில் வருகிறது. பழங்காலத்திலே மணி
அடித்துப் புகார் சொல்வது என்று இருந்தது அல்லவா, அதைப்
போலவேதான் இப்போது .தொலைபேசி மணி அடித்து, அதை
எடுத்து அவர்கள் கேட்டால், புகார்கள் சொல்லப்படுகின்றன.
ஆனால் எங்களிடம் ஆட்கள் இல்லை என்று தான் பதில் வந்து
கொண்டிருக்கிறது. எனவே 54 ஆயிரத்துச் சொச்சம் பேர்களை.
வைத்துக்கொண்டு, ஏறக்குறைய 43/4 கோடி மக்கள் இருக்
கின்ற இந்த தமிழகத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது
என்பது சிரமமான காரியம் என்பதை ஒத்துக்கொள்கிறோம்.
ஆனால் அதே நேரத்திலே அரசாங்கம் அறிவித்தபடி காவலர்
களை தேர்ந்தெடுத்து உடனே நியமிக்க வேண்டுமென்று நான்
பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காவலர்கள் இல்
லாத நிலை மட்டுமல்ல. காவலர்களை சில நேரங்களிலே கூப்
பிட்டால் கூட இங்கே எல்லாம் சொல்வதில் பயன் இல்லை
என்று சொல்வது போன்ற முடிவிலே இருக்கிறார்களோ என்று
ஐயுறத்தோன்றுகிறது. இரவு நேரத்தில் யார் இருப்பார்கள்
என்ற ப தில் வருகிறது. ஆட்கள் இல்லாமல் என்ன செய்வது





என்ற பதில் வருகிறது. சில இடங்களிலே வாகனங்கள் இல்லாத
காரணத்தாலே எங்காவது கலவரம் நடக்கிறது என்று புகார்கள்
சொல்லப்போனால், வண்டி எடுத்து வந்தீர்களா என்று கேட்
கிறார்கள். அவர்களைக் குறை சொல்வதற்கு வழியில்லை.
ஏன் என்று சொன்னால், அவர்களுக்கு போக்குவரத்துச் சாதனங்
கள் இல்லை. அந்தச் சாதனங்கள் இல்லாத காரணத்தாலே
சிற்றூர்களிலிருந்து போகின்றவர்கள், அந்தச் சிற்றூரிலே
வாடகை வண்டி இல்லாத நிலையிலே வேறு இடத்திற்குச் சென்று
வாடகை வண்டியை அமர்த்திக் கொண்டு அங்கே போவதற்
குள்ளே கலவரம் எந்த அளவிற்கு போய் இருக்கும் என்பது
போலீஸ் அதிகாரிகள் அறியாதது அல்ல. மாண்புமிகு முதல்
அமைச்சர் அவர்களும் புரியாதவர் அல்ல. எனவே வாகன
வசதிகள் எல்லா இடங்களுக்கும் இருக்கின்ற அளவிற்கு இந்த
திட்டத்தை உடனேயே செயல்படுத்த வேண்டுமென்று நான்
அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே தமிழகத்திலே போலீசார் செய்திருக்கின்ற சாதனை
யினை 1980, 1981, 1982 என்று பட்டியல் போட்டு காட்டி
யிருக்கிறார்கள். குற்றங்களைக் கண்டுபிடித்ததினுடைய சத
வீதத்தைப்பற்றி இங்கே சொல்லி இருக்கிறார்கள். அந்தச் சத
வீதத்தைச் சொல்லுகின்றபோது, 1980 ஆம் ஆண்டிலே கண்டு
பிடிக்கப்பட்டவை, குற்றச்சாட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்ட
விழுக்காடு 59 சதவீதம் என்றும், 1981 ஆம் ஆண்டிலே 69 சத
வீதம் என்றும், 1982 ஆம் ஆண்டிலே 71.9 சதவீதம் என்று
கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது 1980—ஆம் ஆண்
டிலே 59 சதவீதம்தான் கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது 71
சதவீதம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்
கிறார்கள். இதிலே பெருமைபடுவதற்கு ஏதும் இருப்பதாக
எனக்குத் தெரியவில்லை. காரணம் என்ன என்று சொன்னால்,
59 சதவீதம்தான் கண்டுபிடிக்கப்பட்டது என்று சொன்னால்,
அப்போதும் இதே போலீஸ்காரர்கள்தான், இப்போதும் 71 சத
வீதம் கண்டுபிடிக்கப்பட்ட போதும், அதே போலீஸ் அதிகாரிகள்
தான். ஆனால் திறமையை வளர்த்துக்கொண்டார்கள் என்று
வேண்டுமானால் சொல்லி, இங்கே பெருமைப்படலாம் என்
றால், இதிலே புள்ளிவிவரங்கள் நம்மை ஏமாற்றுவதாக இருக்
கிறதோ என்ற ஐயம் எனக்கு எழுகிறது. உதாரணத்திற்குச்
சொல்லப்போனால் மொத்தத்திலே விழுக்காடு இப்படி இருக்
கிறதே த்விர, ஆதாயத்திற்காக கொலை என்று 1980-லே 53
புகார்கள் வந்திருக்கின்றன. கண்டுபிடிக்கப்பட்டவைகள்
28, அப்படி என்று சொன்னால் எத்தனை சதவீதம் அவர்கள்
கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஆதாயத்திற்காக கொலை
செய்யப்பட்ட இடத்திலே 53 விழுக்காடு கண்டுபிடித்திருக்

இங்கே மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் கேட்டார்கள். ஏழை எளியவர்களை எங்கேயாவது உட்கார வைத்துப் பேசுகிறார்களா, உட்காருங்கள் ஐயா என்று சொல்கிறார்களா என்று கேட்டார்கள். இங்கே சமரசம் செய்ய விரும்பி இருக்கிறார் அந்த அதிகாரி, ஏழை எளியவர்களுக்கு நல்ல மரியாதை வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். எல்லோருக்கும் அந்த மரியாதை வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். ஆனால் இன்று தமிழகமெங்கும் நடந்து கொண்டு இருக்கும் எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், அதை நெஞ்சிலே சுமந்து, அதை மன்றத்திலே வைத்து தீர்வு காணும் பொறுப்பில் இருக்கின்ற ஒருவ்ருக்குக் கிடைக்கின்ற மரியாதை ' நீ யாரடா ' என்பதாகும். அப்படிக் கேட்டதோடு நிற்கவில்லை, '' நீங்கள் எல்லாம் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறீர்கள், உங்களையெல்லாம் கீழ மாசி வீதியில் தூக்கிப்போட்டு உதைத்தால் கூட கேட்பது யார் ' என்று அகம்பாவத்தோடும், ஆணவத்தோடு பேசியிருக்கிறார். இத்தனையும் நடந்து இருக்கிறது. இதைப் பற்றி நானே மேல் அதிகாரிகளோடு தொடர்புகொண்டு, அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறேன், அங்கேயிருந்து தொலைபேசியில் எனக்குச் செய்திகிடைத்தவுடன் அங்கேயிருக்கும் அனைத்து அமைப்புகளும் தந்தி கொடுத்துள்ளன. அவருக்குக்கொடுக்கப்பட்ட தண்டனை என்ன? அங்கேயிருந்து அவர் கன்ட்ரோல் ரூமிற்கு மாற்றப்பட்டார் அவ்வளவுதான். இப்போது விசாரணை நடைபெறுகிறது என்றுதான் நினைக்கிறேன். இந்த மதுரை நகரத்திலே மிகப்பெரிய அறிஞர், கான்ஸ்டிடியூஷனல் எக்ஸ்பர்ட், மக்களின் நலன் பாதுகாக்க மிகப்பெரிய தூணாக இருக்கின்ற தார்குண்டே அவர்கள் தாக்குண்டுபோனாரே அந்த மதுரை மாநகரத்திலேதான் இதுவும் நடைபெற்று இருக்கிறது. அந்த தார்குண்டேவை தாக்கியவன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இன்று தமிழக போலீஸ்துறைக்கு இந்தியா முழுவதும் கெட்டபெயர் வாங்குவதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சி அது. ஏனென்றால் இந்தியாவில் எந்த மூலையிலே ஒரு குடிமகன் துன்பப்பட்டாலும், அவனுடைய துன்பத்தை துயரத்தை போக்குவதற்கு என்று உரிமைக்குரல் எழுப்புவதற்கு என்று இருக்கிற அமைப்பினுடைய மிக முக்கியமான தலைவர்களிலே ஒருவரை மதுரை மாநகரின் வீதிகளிலே ஒரு போலீஸ் அதிகாரி தாக்குகிறார். தாக்கிய நிலையிலே அது இந்தியா முழுவதும் எதிரொலிக்கிறது. ஏன்? 'ஆம்னஸ்டி இன்டர்நேஷனல்' என்று சொல்லுகின்ற அளவுக்கு அகில உலகத்திலேயும் எதிரொலிக்கிறது. ஒரு போலீஸ் அதிகாரி அந்த இடத்திலே எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற நிலையை மீறி காரியம் செய்துவிட்ட காரணத்தினாலே தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டது இழப்பு அல்ல இழுக்கு என்று நான் சொல்ல விரும்புகிறேன்.



அந்த அதிகாரிக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை என்னவென்று சொல்கிறார்கள்? கடலூருக்கு மாற்றப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் கடலூருக்கு மாற்றப்பட்ட அந்த அதிகாரி திருச்செந்தூர் தேர்தலிலே எப்படி வந்தார் ? திருச்செந்தூர் தேர்தலுக்கு முழு பொறுப்பு எடுத்து எப்படி ? திருச்செந்தூரிலே வாக்குகள் எண்ணுகின்ற இடத்திலே அடிதடி நடத்தியது யார்? அடிப்பதற்கு உத்தரவு போட்ட அதே அதிகாரியைத்தானே, அங்கே ஏற்கனவே இருந்துகொண்டிருந்த இராமானுஜம் என்பவரை மாற்றி, கடலூரிலே இருந்த இதே மனிதனை மீண்டும் இங்கே கொண்டுவந்தது யார்? ஜனநாயகப் பண்புகளுக்கு விரோதமாக வாக்குச்சீட்டு எண்ணுகின்ற இடத்திலே அடி, லத்திச்சார்ஜ் செய்கின்ற சூழ்நிலையை உருவாக்கியது இதே மனிதன்தான் என்பதை மனதிலே கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்ல. இந்தத் தேர்தல் நடப்பதற்கு முன்னால் அவர்களுக்கு வசதியாக இருப்பதற்காக 4 காவல் நிலையங்களில் இருந்த அதிகாரிகள் மாற்றப்பட்டார்கள். குலசேகரப் பட்டிணத்திலே இருக்கிற அதிகாரி மாற்றப்பட்டார். மெஞ்ஞானபுரத்திலே இருக்கின்ற அதிகாரி மாற்றப்பட்டார். திருச்செந்தூரில் இருக்கின்ற அதிகாரி மாற்றப்பட்டார். இவற்றை எல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம் அரசியல் சட்டம் மட்டுமல்ல. தேர்தல்விதிகளிலே சொல்லப்பட்டிருப்பதற்குமாறாக பீப்பிள்ஸ் ரெப்பிரசென்டேஷன் ஆக்ட்' என்ன சொல்கிறதோ அதற்கு நேர் மாறான செயல்கள் எல்லாம் நடந்திருக்கின்றன.

ஆக, தார்குண்டேயை ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கின்றவரை தாக்கியவரை ஜனநாயக முறையிலே நடைபெறுகின்ற தேர்தலிலே பார்வையாளராக மட்டுமல்ல; பாதுகாவலராகவும் அமைக்கின்றபோது எவ்வளவு பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே திருச்செந்தூரிலே, எல்லா இடங்களிலேயும் இவ்வளவு தீவிரங்களைக் காட்டினார்களா ? கள்ளத்தனமாக நோட்டீஸ் அச்சடித்த அச்சகத்தை கண்டுபிடித்துக் கொடுக்கிறோம். நடைபெறுகின்ற தவறுகளைக் கண்டிப்பதற்காக நாங்கள் உண்ணாவிரதம் இருக்கிறோம். உண்ணாவிரதம் இருக்கின்ற போது, ஜனநாயகத்திற்கு விரோதமான காரியம் நடக்கிறது என்பதற்காக காந்திமகான் சீடர் காமராஜ் சிலைக்கு முன்னால் என்னைப் போன்றவர்கள் உண்ணாவிரதம் இருக்கும்போது, அங்கே இருக்கிற அதிகாரிகள். யார்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவில்லை. திருட்டுத்தனமாக அச்சகத்தின் பெயரைப் போடாமல் நோட்டீஸ் அச்சடித்து

கிறார்கள். அதேபோல் 1981-லே 53 விழுக்காடு கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் 1982-லே 46 விழுக்காடுதான் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆக கொலையைப் பொறுத்தவரையில் ஆதாயத்திற்காக கொலை என்பதிலே, 1980-லே 53 விழுக்காடு, 1981-லே 53 விழுக்காடு, 1982-லே 46 விழுக்காடுதான். அதைப் போலவே பெரிய கொள்ளை என்ற வகையிலே 1980-லே கண்டுபிடிக்கப்பட்டது 45 விழுக்காடு, 1981-லே கண்டுபிடிக்கப்பட்டது 51 விழுக்காடு. இப்போது கண்டுபிடித்திருப்பது வெறும் 42 விழுக்காடுதான், என்பதை நினைவிலே கொண்டுவந்தால் சென்ற தடவை 51 விழுக்காடு கொள்ளையை கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது 42 விழுக்காடுதான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 1–20)

வழிப்பறியை எடுத்துக்கொண்டால், 1980–லே 50 விழுக்காடு கண்டுபிடித்து இருக்கிறது நமது போலீஸ். 62 விழுக்காட்டை 1981–லே கண்டுபிடித்த நமது போலீஸ் வெறும் 50 விழுக்காட்டைத்தான் இப்போது கண்டுபிடித்து இருக்கிறது. ஆகவே, 1962-ல் இருந்து 50 விழுக்காடு என்று அது குறைந்து இருக்கிறது. இந்த 3-ம் தான் மிகப்பெரிய குற்றங்கள். அதிகப்படியாக கண்டுபிடித்து இருப்பதாக உங்கள் புள்ளிவிவரம் மிகையாகக் காட்டுவதற்குக்காரணம், என்னவென்றுசொன்னால் கால்நடைகள் கடத்தப்பட்டவைகளை அதிகமாகக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். சிறு குற்றங்களை அதிகமாகக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஆடு, மாடுகளை கடத்தப்பட்ட வழக்குகளை அதிகமாகக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். சில சமயங்களில் ஆட்களைக் கடத்தியிருக்கிறார்கள். ஆனால் அவைகள் கண்டுபிடிக்கப்படாமலேயே போயிருக்கக்கூடும். ஆகவே, இப்படி எல்லாம் கணக்குப் பார்க்கிறபோது மொத்தத்தில் சில்லரை விவகாரங்களைத்தான் அதிகமாகக் கண்டுபிடித்து இருக்கிறார்களே தவிர, பெரும்பெரும் கொள்ளைகள் கண்டுபிடிக்கப்படாமலேயே போயிருக்கிறது என்பதை இங்கே அச்சத்தோடு நினைவுபடுத்தவிரும்புகிறேன்.

ஓய்வு பெற்ற காவலருக்கு வீட்டு வசதி பற்றிச்சொன்னார்கள். சில இடங்களில் வேலையில் இருக்கும் காவலர்களுக்கு வீடுகிடைக்கிறதா என்றால் இல்லை. இப்படி வீடுகள் கிடைக்காமல் இருப்பதற்குக் காரணம், காவலர்களுக்கு வீடுகள் கொடுக்க சிலர் அஞ்சுகின்றனர். வாடகை வருமோ என்று அஞ்சுகின்றனர். அல்லது ஏதாவது பிரச்னை வருமோ என்று அஞ்சுகின்றனர். ஆகவே, காவலர்கள் காவல்நிலையம் இருக்கும் இடத்திலிருந்து 5 மைல்களுக்கு அப்பால் கூட இருந்து வசிக்க





வேண்டிய நிலை இருக்கிறது. அந்தத்தகவல்கள் எல்லாம் என்னிடத்தில் இருக்கின்றன. இப்படி 5 மைலுக்கு அப்பால்அவர்கள வீடுகளை வைத்து இருந்தால், அவர்களை அவசரமாக அழைக்கின்ற நேரத்தில் உடனடியாக அவர்கள் வருவதற்கு எப்படி சாத்தியமாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சில இடங்களில் அவர்களுக்கு யார் வீடுகள்கொடுக்கிறார்கள் என்றால் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் வீடுகள் கொடுக்கிறார்கள். அப்படியானால் அந்தத் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களை அவர்கள் எப்படி கைது செய்வார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எனவே வீடு கட்டிக் கொடுத்து, அவர்களுக்கு வசதி செய்து தரவேண்டியது அவசரமான நிலைமையாக மேற்கொள்ளவேண்டியதொன்றாக இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

தவறு செய்தால் மேல் அதிகாரிகள் தண்டிப்பார்கள் என்ற எண்ணம் நமது போலீஸ் அதிகாரிகள்கீழ் மட்டத்தில்கீழ் நிலையில் இருப்பவர்களுக்கு பலருக்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. உதாரணத்திற்கு மதுரையிலே, நடந்த ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்ட நான் விரும்புகிறேன். காரணம் அதிலே மதுரையில் உள்ள மேலவை உறுப்பினர் ஒருவர் சம்பந்தப்பட்டு இருப்பதால் தான். வணிகம் செய்து கொண்டு அதே நேரத்தில் அரசியலில் இருந்துகொண்டு மேலவையில் உறுப்பினராக இருக்கும் மேலவை உறுப்பினருக்கு வந்து கொண்டு இருந்த சரக்குகளை அந்த வண்டியை ஓட்டிக்கோணடு வந்தவர்கள் யாருக்கோ கள்ளத்தனமாக விற்று விட்ட காரணத்தால் அது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில் அந்த உள்ளூர் போலீஸ் அதிகாரிக்கு கோபம் எப்படி வந்தது என்பது தான். 120 மூட்டைகளை ஏற்றிக்கொண்டு வந்த லாரியை—லாரியின் பெயர் பலகையை மாற்றி, ரிஜிஸ்டிரேஷன் நம்பரை மாற்றி—அதிலே இருந்த டிரைவர்களும் மற்றவர்களுமாகச் சேர்ந்து அந்த 120 மூட்டைகளையும் விற்றுவிட்டார்கள். அதற்காக மணலூர் பேட்டையில் இருந்து வந்த இன்ஸ்பெக்டர் விசாரணை நடத்திவிட்டுச்சென்று இருக்கிறார். ஆனால் உள்ளூர் இன்ஸபெக்டருக்கு கோபம் வந்தது. தொலைபேசியில் கடையில் இருந்தவர்களைத் தாறுமாறாகப் பேசியிருக்கிறார். எம்.எல்.சி.க்கு தகவல் கிடைத்தஉடனே, எம்.எல்.சி. கேட்டார். மேலவை உறுப்பினர் கேட்டார். என்ன விவகாரம், எதுவாக இருந்தாலும் இங்கே கடையில் வந்து பேசலாமே? ஏன் கடையில் இருப்பவர்களை விரட்டுகிறீர்கள் என்று சொன்னதற்கு, 'நீ யாரடா' என்ற வார்த்தைத்தான் அடுத்தாற்போல் வந்து இருக்கிறது.

விநியோகித்தவர்கள்மீது எங்காவது, இதுவரை ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ? இந்த அச்சகத்தில்தான் இது அச்சடித்துக் கொடுக்கப்பட்டது என்று கண்டுபிடித்து கொடுத்தவர்கள் எமது தோழர்கள். இதோ இருக்கிறது அவர்கள் எழுதிக்கொடுத்த மூலப்பிரதிகள் என்று காட்டிக்கொடுத்தவர்கள் எமது தோழர்கள். கோத்து வைக்கப்பட்ட அச்சுகள் இதோ இருக்கின்றன. பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னது எங்கள் தோழர்கள். ஆனால் அச்சகத்தின் உரிமையாளரும் மேலாளரும் அங்கே கைது செய்யப்பட்டார்களே தவிர அதனை அடிப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் இன்றுவரையில் விசாரிக்கப்படக்கூட இல்லை என்பதை எண்ணிப்பார்க்கும் போது போலீஸ் இலாகாமீது நமக்கு இருக்கிற மரியாதை, நமக்கு இருக்கிற மதிப்பு கீழே விழுந்துவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது என்பதாலேயே இதைச் சொல்கிறேன்.

இந்த மாமன்றத்திலே சில நிகழ்வுகளைச் சொல்வதற்கு நாம் முயல்கிறோம். பக்கத்திலே, என்னுடைய திருவொற்றியூர் தொகுதியிலே தீர்த்தகிரிபட்டு என்பது ஓர் ஊர். நமது அரசாங்க அதிகாரிகள் அங்கே சென்றார்கள். ஊர் புறம்போக்கு சர்வே எண் 108. அந்த இடத்தைப் பார்த்தார்கள். ஏற்கெனவே இருந்துகொண்டிருக்கிற பஞ்சாயத்து கிணற்றுக்கு பக்கத்தில் இருக்கிற ஒரு நல்ல இடம். அங்கே சத்துணவுக் கூடம் கட்ட வேண்டுமென்று நன்றாக அடையாளம் இட்டு வந்தார்கள். அன்றே அங்கே இருக்கிற ஒரு பிரமுகர் அதை ஆக்கிரமித்துக்கொண்டு பெரிய வீட்டையே கட்டிக்கொண்டார். வீடு கட்டியவர் யார் என்று பார்க்கின்ற நேரத்தில் யாரையும் பக்கத்தில் நெருங்கவிட மாட்டேன் என்று சொல்லுகின்ற அளவுக்கு அதிகாரம் படைத்தவராக இருக்கிறார் அல்லது அதிகாரம் இருப்பதாக ஆட்களை மிரட்டுகிறார். பெண்கள் தண்ணீர் எடுக்கப் போக முடியவில்லை. அந்த ஊரில் இருக்கிற மக்கள் தொகுதி எம்.எல்.ஏ. என்ற முறையில் என்னிடம் வந்து சொல்கிறார்கள். நான் அந்த இடத்தைப் பார்க்கப்போகிறேன். பார்க்கும்போது நன்றாகத் தெரிகிறது. மக்கள் தண்ணீர் எடுக்க போக முடியவில்லை. பெண்கள் அங்கே போக முடியாது. ஆக்கிரமித்த அவரும் வருகிறார். வந்து ஏதேதோ சொல்கிறார். ஆனால் உண்மை என்ன என்று விசாரித்துப் பார்க்கும்போது என்ன நடக்கிறது? ஏற்கெனவே புறம்போக்கு நிலத்திலே ஒரு வீட்டைக்கட்டி, 12,000 ரூபாய்க்கு விற்றுவிட்டவர் இப்போது மீண்டும் புறம்போக்கு நிலத்தில். அதுவும் சத்துணவுக் கூடத்திற்கு என்று இடம் எடுத்து அடையாளம் போட்டதை தானே சொந்த இடமாக மாற்றிக்கொண்டு, வீடு கட்டிக்கொண்டு இருக்கிறார்.



(பிற்பகல் 1–30).

எல்லா அதிகாரிகளிடமும் புகார் சொல்லியாகிவிட்டது. இந்த மன்றத்தின் மூலமாகவாவது தீர்வு காணலாம் என்று நினைத்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எனக்கு அதை திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். என்னவென்று சொல்லி திருப்பியிருக்கிறார்கள் என்றால்—'இது போலீஸ் நடவடிக்கைக்கு உட்பட்டது' என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைய தினம் வரை போலீஸ் துறை அதில் நடவடிக்கைஎடுக்கவில்லை. அரசாங்கம் சத்துணவு திட்டத்திற்காக கட்டிடம் கட்ட ஒரு இடத்தை தேர்ந்தெடுத்தால் அதை கூட ஆக்கிரமிக்கிற அளவுக்கு இங்கே அராஜகம் நடந்து கொண்டிருக்கிறது. பேரவையிலாவது தீர்வு காணலாம் என்றால், பேரவைத் தலைவர் அவர்கள் அதனை திருப்பியிருக்கிறார்கள். அதையும் ஏற்றுக்கொண்டு.......(மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையின் முன் அனுமதியோடு பேரவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரின் உத்தரவை வாங்கி வைத்துக் கொண்டு, போலீஸ் துறை நடவடிக்கை எடுக்கும் எடுக்கும் என்று காத்திருந்தோம். ஆனால் இன்று வரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. அங்கே நமது அருமைத் தோழர்கள் 23 ஆம் தேதி முதல் உண்ணாவிரதம் இருந்தார்கள். இதை கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அன்று இரவே, எந்த மனிதன் பொது மக்களுடைய நிலத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறானோ, அவருடைய தூண்டுதலாலேயே, உண்ணாவிரதம் இருந்தவர்கள் மிரட்டப்படுகிறார்கள், அடிப்பேன் என்று சொல்லுகிறார்கள். ஏன் அடித்தேவிட்டார்கள் ஒருவரை. முன்னாள் பஞ்சாயத்து தலைவராக இருந்த அவரை அடித்து விட்டார்கள். அது குறித்து அவர் காவல் துறைக்கு புகார் கொண்டு போகிறபோது கூட, அதன்மீது அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் அந்த ஊர் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்ட மனிதர், இவர் மீது புகார் தொடுக்கிறார், வேண்டும் என்றே பொய் குற்றம் சாட்டி, அதன் பேரில் போலீசார் இவருடைய வீட்டுக்கு வந்து, இவரை காவல் நிலையத்திற்கு அழைக்கின்றார்கள். ஊர் மக்கள் எல்லாம் திரண்டு விட்டார்கள் அவர் பின்னே காவல் நிலையத்திற்குசெல்ல. அதனால் நடவடிக்கை எடுக்கவில்லை. நிறுத்தப்பட்டது. [illegible]

இப்படி நியாயத்தின் குரல் கேட்காமலே இருக்குமேயானால் நீதியின் குரல் கேட்காமல் இருக்குமேயானால், மக்கள் காவல் துறையின் மீது நம்பிக்கை இழப்பார்களேயானால், உண்மையிலேயே தமிழகத்தில் அராஜகம் பரவி விடும் என்பதற்கு இதை ஒரு காரணமாக முன் வைக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே எனக்கு தெரிந்த ஒருவர் இருந்தார். அவரிடமிருந்து ஒவ்வொரு நாளும் கடிதம் வந்துகொண்டே இருந்தது. அங்கே நடைபெறும் பலவித குற்றங்களைப் பற்றி எழுதி, அதற்கெல்லாம் காரணமான ஒரு அதிகாரி மீது புகார்எழுதிக்கொண்டேயிருந்தார். நான் அவைகளையெல்லாம் நம்பக்கூடாது என்பதற்காக, ஒரு முறை ஊரிலே பொதுக் கூட்டத்திற்காக சென்றிருந்த போது, நேரிலேயே அந்த அதிகாரி பற்றி விசாரித்து பார்த்தேன். விசாரித்ததில் அவை எல்லாம் உண்மைதான் என்று தெரிந்தது. அது குறித்து நான் சம்பந்தப்பட்ட மேலதிகாரியிடம் தெரிவித்தேன். அவர் உடனே மாற்றல் செய்யப்பட்டார். அவருடைய மேலதிகாரி அவரை மாற்றி விட்டார்.

ஆனால் அவர் மாற்றலில் போகும்போது, நான் இன்னும் 15 நாட்களில் மீண்டும் இந்த இடத்திற்கு வருகிறேனா இல்லையா பாருங்கள் என்று சவால் விடுத்து போகிறார். அதேபோல 15-வது நாள் அங்கே உட்கார்ந்திருக்கிறார். அதை எல்லாம் எண்ணுகிறபோது சில நேரங்களிலே சவால் விடுகிறவர்கள் சாதனை புரிகிறார்கள் என்பதை எண்ணுகிறபோது, அந்த சாதனைக்கு வழி வகுத்து கொடுத்தர்கள் யார் என்ற பெரிய வினா எழுகிறது. இங்கேயிருக்கிற அதிகாரிகள் அதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

இப்போது அந்த ஊரிலே எல்லாம் நல்லதாகத்தானே நடக்கிறது. அவர் திரும்பி வந்திருக்கிறார் என்றாலும், அதை அவர் திருந்தி விட்டார் என்று பாராட்டலாம் என்று நான் சொல்கிறேன். இல்லை இல்லை அவர் இந்த ஊருக்கு அவரால் நன்மை வரவில்லை. டிரைனிங் என்பதற்காக அங்கேயிருந்து இங்கே வந்திருக்கிறார். எனவேதான் எல்லாம் நல்லதாக நடக்கிறது என்று ஊர் மக்கள் சொல்கிறார்கள். இந்த நிலை ஏற்படுமேயானால், இது நல்லதா என்று தயவுசெய்து சிந்திக்கவேண்டும். எங்கே போனாலும் சில போலீசார் அரசியலில் இருப்பவர்களைச் சொல்லி ஏசுகிறார்கள்.

வில்லிவாக்கத்திலே குடியிருக்கக்கூடிய தொழிலாளர் ஒருவர், பெரம்பூர் கோச் பேக்டரியில் பணிபுரிகிறார். தந்தையும் அங்கே வேலை செய்கிறார். முத்து என்னும் அவருடைய மகனும் அங்கே வேலை செய்கிறார். அவர் பெருந்தலைவர்



காமராசர் காலத்திலிருந்தே கள்ளுக்கடை மறியலில் கலந்துக்கொண்டு, சிறைக்கு அனுப்பப்பட்டவர். அவரை கள்ளச் சாராயம் காய்ச்சியதாக காவல் நிலையத்திற்கு வா என்று போலீசார் அழைக்கிறார்கள். அவர் எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. நான் இன்னாருடைய மகன் என்று சொல்லியும், பிறகு என்னுடைய பெயரை சொன்னாலும் கேட்காமல், என்னுடைய பெயரையும் கட்சியினுடைய பெயரையும் சொல்லி, ஓஹோ ஹோ ஹோ என்று அட்டகாசமாக சிரித்து அங்கே அடக்குமுறையை நடத்தியிருக்கிறார்கள்.

மாமனிதனா, மாமேதையா என்பது அல்ல பிரச்னை. சாதாரண பிரஜைக்கும், இந்த நாட்டிலே எல்லாவிதமான உரிமையும் உண்டு, அவருக்கென்று பெருமையும் இருக்கிறது. கௌரவமும் இருக்கிறது என்பதை போலீஸ் இலாகா சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். ராதாபுரம் தொகுதியிலே என்னுடைய கட்சியைச் சேர்ந்த வின்சென்ட் என்பவர் தாக்கப்படுகிறார். தாக்கியவர் மீது 307-ன்படி முதலிலே கேஸ் போடப்பட்டிருக்கிறது. எப்.ஐ.ஆரிலே கூட அப்படித்தான் இருக்கிறது. பிறகு, மறுநாளே அதை மாற்றி எழுதியிருக்கிறார்கள். என்ன சூழ்நிலை ஏற்பட்டது என்று தெரியவில்லை. இதுபோன்ற நிலைமைகளிலே என்ன செய்து வருகிறது போலீஸ் இலாகா என்று புரியவில்லை.

எனக்கு இது குறித்து இன்று வந்திருக்கிற செய்தி அந்த காவல் நிலையத்திலே போலீஸ் இன்ஸ்பெக்டர் உள்ளே உட்கார்ந்திருக்கிறார். 2, 3 கான்ஸ்டபிள்கள் இரவு 12 மணிக்கு அந்த காவல் நிலையத்தின் உள்ளே நுழைந்து, அந்த சப்-இன்ஸ்பெக்டரை சுற்றி 3 பேர்களும் சூழ்ந்துக் கொள்கிறார்கள். அவரை நையத் தாக்குகிறார்கள். நாங்குநேரி அரசு மருத்துவ மனையிலே படுகாயத்தோடு அந்த சப்-இன்ஸ்பெக்டர் இன்றைய தினம் சேர்க்கப்பட்டுள்ளார். ஆக, ஒவ்வொரு நாளும் அடித்து அடித்து பழக்கப்பட்டவர்களுக்கு, ஒரு நாள் அடிப்பதற்கு வசதியில்லை என்றாலும், தங்களுடைய மேலதிகாரிகளையே அடித்துவிடுவார்களோ என்று சிந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு காவல் துறை போகுமேயானால், கொஞ்சம் கொஞ்சமாக நாம் சேர்த்து வைத்த பெருமை எல்லாம் என்ன ஆவது என்பதை தயவுசெய்து சிந்துத்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவொற்றியூரிலே அருமைக்குரிய தோழர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அந்த நேரத்திலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் ஒரு பெரிய மோட்டார் சைக்கிள் எடுத்து

வைத்துக்கொண்டு யாரடா உண்ணா விரதம் இருப்பது என்று
பேசுகின்ற நேரத்தில் பக்கத்திலே நின்றுகொண்டிருந்த இரண்டு
காவலர்கள் அமைதியாகப் ஒதுங்கிப் போனார்களாம்
நமக்கெதற்கு வம்பு என்று நான் கேட்கிறேன். நமக்கெதற்கு
வம்பு என்று போனால் என்ன நடக்கும் ? ஆகவே நீங்கள் அதைக்
கண்டுபிடித்தீர்களா, இதைக் கண்டுபிடித்தீர்களா என்பது
இல்லை. இவனைத் தண்டித்தீர்களா அல்லது அவனைத்
தண்டித்தீர்களா என்பது எல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். அது
கண்டுபிடிப்புத் துறை அல்ல. காவல் துறை. எல்லாவற்றுக்கும்
காவலாக இருக்க வேண்டிய துறை. மாந்தோப்புக்கு ஒருவரைத்
காவல் போடுகிறோம் என்று சொன்னால் மாங்காய் எல்லாம்
அப்படி அப்படியே இருக்கின்ற அளவில் அவர் பார்த்துக்கொள்ள
வேண்டும். அதைப்போன்று காவல் துறை இருக்கின்றது என்று
சொன்னால் யாருக்கும் துன்பம் வராமல் காக்கவேண்டும். அவ்
வளவுதான். துன்பமும் துயரமும் வந்ததற்குப் பிறகு தான்.
இத்தனை விழுக்காடு கண்டுபிடித்தோம் என்பதில்லை. காவல்
துறை என்பதைப் பொறுத்தவரையில் அதனை நல்லவர்கள்
காண்கின்றபோது அதோ ஒரு காவலன் என்ற எண்ணுகின்ற
போது, அங்கே ஒரு காவல் நிலையம் என்று எண்ணுகின்றபோது
வீதியிலே நடந்துகொண்டிருப்பவன் நிழல் என்பதைப் பார்த்து
விட்டால் எப்படி மகிழ்வானோ அதைப் போன்ற நம்பிக்கை
வரவேண்டும். அதே நேரத்தில் துன்மார்க்கர்களுக்கு அச்சத்தை
ஏற்படுத்துவதாக இருக்கவேண்டும். ஆனால் இந்த இரண்டும்
இல்லை. இப்போது துன்மார்க்கர்களோடு சேர்ந்து கொண்டு
சில இடங்களில் ஒருவருக்கொருவர் துணையாக இருப்பது போல்
தோன்றுகிறது. சில ஊர்களில் நயம் சாராயம் என்று கடை
போட்டிருக்கிறார்கள். சாராயத்தில் நயம் சாராயம். இதோ
சாராயக் கடைக்குப் போகும் வழி என்று ஒரு இடத்தில் இருக்கும்,
இப்போது பல கிளைகளாகப் பிரிந்திருக்கின்ற காரணத்தால்
கள்ளும், சாராயமும் தண்ணீராக ஓடிக்கொண்டிருக்கின்ற
நேரத்தில், இவ்வளவு வந்தாகவேண்டும். இவ்வளவு தந்தாக
வேண்டும். இதற்கு மேல் தர முடியவில்லையா ? இன்னும்
பத்து பானைகளை வைத்து விற்கவேண்டாம் என்று யார்
சொன்னது என்று கேட்கின்ற அதிகாரிகளும் இருந்துகொண்
டிருக்கிறார்கள். எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை.
நல்ல அதிகாரிகளும் இருக்கிறார்கள். ஆனால் அந்த நல்ல
அதிகாரிகளுக்கும் கெட்ட பெயர் வருகின்ற அளவுக்கு இப்படிப்
பட்ட காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை
இங்கே உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனக்கு
ஒரு வருத்தம் ; அம்னாஸ்டி இன்டர்னேஷனல்லில் இருந்து
வருகின்ற அந்த 131 பக்க அறிக்கையிலே எந்தெந்த நாடோ
இடம் பெற்றது. இந்தியாவும் இடம் பெற்றது. இந்தியா
விலே உள்ள 8 மாகாணங்கள் இடம் பெற்றிருக்கின்றன.





பொலிட்டிகல் கில்லிங்ஸ், அதாவது அரசியல் கொலைகள் நடக்
கின்ற இடங்கள் என்று சொல்வதில் தமிழகமும் இடம் பெற்
றிருக்கின்றது. அதை எண்ணுகின்றபோது உண்மையிலேயே
நான் வேதனைப் படுகிறேன். ஏனென்றால் ஆளும் கட்சியாக
இருக்கலாம். எதிர்கட்சியாக இருக்கலாம். ஆனால் ஒட்டு
மொத்தமாக நாம் எல்லாம் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற
முறையிலே உலகத்திலே மாபெரும் சமுதாயமாக உணர
வேண்டும் என்று கருதுகின்ற ஆசை என்னுடைய உள்ளத்திலே
இருக்கின்ற காரணத்தால் இதை வேதனையோடு வெளிப்படுத்து
கிறேன். இப்படிப்பட்ட சம்பவங்கள் இனித் தொடர் கதையாக
இல்லாமல் சிறு கதையாக முடிந்து இனிமேல் தொடர்வது
நன்றாக இருக்கவேண்டும் என்பதற்காக இவைகளை எல்லாம்
நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

அடுத்து இன்னும் சில செய்திகளைச் சொல்ல இருக்கிறேன்.
போலீஸ்காரர்கள் இன்னின்ன பணிகளில் ஈடுபடுத்தப்படு
கிறார்கள் என்று சொல்கிறோம். போக்குவரத்து பற்றிச்
சொல்லி இருக்கிறார்கள். ஆனால் சாலையிலே சிக்னல் இருக்
கின்ற இடத்திலே தான் இந்தப் போக்குவரத்துத் துறை ஒழுங்கு
படுத்தப்படுவதாக இருக்கின்றது. மற்ற சந்திப்புகளிலே போலீஸ்
காரர்கள் நிற்பதேயில்லை. அதைத் தயவு செய்து நினைவிலே
வைத்துக்கொள்ளுங்கள். பெண் போலீஸ்காரர்கள் பாவம்,
அவர்கள் நல்ல முறையிலே பணியாற்ற வேண்டும் என்று
விரும்பி காவல் துறையிலே நியமிக்கிறார்கள். முதலமைச்சர்
அவர்களும் அவர்களை நியமிக்கிறார்கள். ஆனால் அவர்கள்
என்ன செய்வார்கள் ? அவர்களால் சில காரியங்களைச் செய்ய
முடியாத நிலைமை இருக்கின்றது. நேற்று முன்தினம் ஒரு
இடத்திலே ஒரு பெண் போலீஸ் யாரையோ ஒரு பெண்ணைத்
துரத்திக்கொண்டு போனார். அவருடைய கையிலே இருக்கின்ற
விசிலே ஊதவில்லை, ஊதியிருந்தால் கூட யாராவது திரும்பிப்
பார்த்து உதவியிருப்பார்கள். ஆனால் அவர் தனியாக
ஓடிக்கொண்டு வந்தார். என்ன நடந்தது தெரியுமா ? வெகு
தூரத்திற்கு அங்கே ஒரு பெண் போய்க்கொண்டிருந்தாள்.
ட்ராஃபிக்கிலே எல்லோரும் நின்றுகொண்டிருந்தார்கள். அவ்
வளவுதான், அவள் போய்விட்டாள். அதன் பிறகு இந்தப்
பெண் போலீஸ் பேசாமல் போய்விட்டார். சாந்தித் தியேட்டர்
அருகிலே நடந்தது இது. எனவே அவரால் ஒன்றும் செய்ய
முடியவில்லை. ஆனால் அதே நேரத்தில் வீராங்கனையாக
சில இடங்களில் ரவுடிகளைக் கூட மடக்கி அடக்கிக் கொண்டு
போவதை நாம் பார்க்கிறோம். ஆகவே அவர்களுக்குரிய
தற்காப்புப் பயிற்சிகளைக் கொடுத்து உண்மையிலேயே அவர்
களை வீராங்கனைகளாக ஆக்கவேண்டும். பழைய காலத்திலே
யபுலியை முறத்தால் அடித்தவர்களுடைய பரம்பரைதானே

[திரு. குமரி அனந்தன்] [1983 ஏப்ரல் 7

எனவே இவர்களை எல்லாம், வீராங்கனைகளாக ஆக்குவதோடு மேலும் அப்படி இருப்பவர்களை எல்லாம் கூட எந்தெந்த இடங்களிலே எப்படி பயன்படுத்த வேண்டுமோ அந்த அளவுக்குத்தான் பயன்படுத்தவேண்டுமே தவிர வேறு பணிகள் கொடுக்கக் கூடாது. ஒரு பெண் போலீஸைக் கொண்டு வந்து ட்ஃராபிக்கிலே விடுவதற்கு துணையாக ஒரு ஆண் கான்ஸ்டபிள் வரவேண்டிய நிலைமை இருக்கின்றது. அந்தப் பெண்ணைக் கொண்டு வந்து விட்டுவிட்டு பிறகு வந்து கூட்டிக்கொண்டு போகிறார். ஆகவே இந்த அளவுக்கு சில இடங்களிலே அவர்களைத் தனியாக விடுவதற்குரிய சூழ்நிலை வந்தால் கூட அங்கே நமக்கு பயனற்று இருக்கின்றது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்து ட்ராஃபிக் என்று சொல்கின்றபோது எத்தனையோ காரியங்களை ஒருங்கிணைத்து நாம் பார்க்கவேண்டும். சில சாலைகள் சிறிய சாலைகளாக இருக்கின்றன. திருவொற்றியூரிலே ஒரு இடத்திலே 60 வருட காலமாக ஓடாத ஒரு தேர் மிக முக்கியமான சாலையிலே நிற்கின்றது. அந்தத் தேரிலே உள்ள சிற்பங்கள் எல்லாம் போய் எதற்குமே உதவாத அந்தத் தேர் 60 வருட காலமாக அங்கே நின்றுகொண்டிருப்பதால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கின்றது. 10, 15 நாட்களுக்கு முன்பு கூட அங்கே ஒரு பஸ் ஒரு பெண்ணை அடித்துக் கொன்று விட்டது. அந்தத் தேரை எடுத்து அந்தக் கோயிலின் வளாகத்திலே விடுங்கள் என்று எத்தனையோ தடவை சொல்லியாயிற்று. இன்னும் எடுக்கவில்லை. இந்த வகையிலே ட்ராஃபிக் நடந்துகொண்டிருக்கின்றது.

அடுத்து தீயணைக்கும் பிரிவினைப் பற்றி இரண்டு மூன்று வார்த்தைகளைச் சொல்லி என்னுடைய உரையினை நிறைவு செய்ய இருக்கிறேன். தீயணைக்கும் படையைப் பொறுத்தவரையில் வால்டாக்ஸ் ரோட்டிலே 15 தீயணைக்கும் வண்டிக்களுக்குரிய சேஸிஸ் இரண்டு வருடமாக துருப்பிடித்த நிலையில் கிடக்கின்றன. அப்படி 15 தீயணைப்பு வண்டிகள் தயாரிப்பதற்குரிய சேஸீஸ் இரண்டு வருடங்களாக கிடக்கின்றன.

(பிற்பகல் 1–40)

சில இடங்களில் எப்படி இருக்கிறது என்று சொன்னால் உதாரணமாக திருவாரூர், நாகப்பட்டினம் என்று 2 ஊர்களை கணக்கில் எடுத்துக்கொண்டால், ஒரு ஊரிலே அந்த தண்ணீர் டாங்க் இருக்கிறது. இன்னொரு ஊரிலே அந்த தண்ணீர் டாங்கை இழுத்துச் செல்கிற இன்ஜின் இருக்கிறது. இந்த இரண்டும் ஒரே இடத்தில் வைக்காத காரணத்தால் இரண்டும் பயன் அற்றுப் போய்விடுகிறது. இப்படி எல்லாம்



1983 ஏப்ரல் 7] [திரு. குமரி அனந்தன்]

தீயணைப்புப்படை தங்களுடைய தேவைகளை செம்மையாக செய்யமுடியாத அளவுக்கு நிர்வாக சீர்கேடு இருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிடவிரும்புகிறேன்.

இப்போது பெரிய பெரிய மாடி கட்டிடங்கள் வந்துவிட்டன. அவைகளில் தீப்பற்றினால் விஞ்ஞான ரீதியில் புதுமைகளைக்கண்டு இருக்கிற மற்ற நாடுகளிலிருந்து பல கருத்துக்களை நாம் .பெற்றுக்கொண்டு அதற்கு ஏற்ப அப்படிப்பட்ட இயந்திரங்களை அவர்களுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காவலர்களுடைய கடமை மிகப்பெரிய கடமை. அவர்களுடைய சிக்கலான பல பிரச்சினைகளையும், சாதிப்பதற்கும் சமாளிப்பதற்கும் நாம் இருக்கிறோம். அப்படிப்பட்டவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கவேண்டும் என்பதிலே இந்த மாமன்றத்தில் இருக்கிற யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது. ஆனால் நல்லவர்கள் என்று எல்லாம் இவர்களை நம்பி நாம் இருக்க முடியும், இவர்களை நம்பி நாம் வாழ்க்கை நடத்த முடியும், . இவர்களை நம்பி நாம் அச்சம் அற்று இருக்க முடியும் என்று சொல்லுகின்ற ஒரு சூழ்நிலையை அரசியல் சார்பற்ற நிலையில் இவர்களுடைய தீர்ப்புகள் இருக்கும், இவர்களுடைய நடவடிக்கைகள் இருக்கும் என்று சொல்லுகின்ற சூழ்நிலையை இந்த காவல் துறை உருவாக்கி முன்னொரு காலத்திலே எப்படி பெயரோடும், புகழோடும் சீரோடும், சிறப்போடும் பேசப்பட்டதோ அதைப்போல் பேசப்படுகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் அவர்களோடு பணியாற்றிக்கொண்டு இருக்கக்கூடிய மற்ற அதிகாரிகளையும் நான் கேட்டுக்கொண்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

5. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி.

(இ) விதி 106 (1)ன் கீழ் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிக்கை.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் விதி 106 (1)-ன் கீழ் இந்த அறிக்கையை அறிவிக்கிறேன்.

தென் பிராந்திய ரயில்வே சென்னை நகருக்கு ரயில் மூலம் தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்கிறார்கள் என்று பத்திரிக்கையின் வாயிலாக தெரிய வந்தது. இதற்கு தமிழ்நாடு

237. ஐயப்பன்தாங்கல் கிராமத்தின் சென்னை பெருநகர் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி-நகர்புற வளர்ச்சித் துறையின் 20–7–1982-ஆம் தேதியிடப்பெற்ற 653-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) [தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர எண்-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் பேரவைமுன்வைக்கப் பெற்றது.

238. பூவிருந்தவல்லி கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது சம்பந்தமாக வீட்டுவசதி-நகர்புற வளர்ச்சித் துறையின் 20–7–1982-ஆம் தேதியிடப்பெற்ற 659-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) [தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

239. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் துணை நிறுவனமான தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் 1981–82-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்) [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்) 1/1956) 691-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

161. தமிழ்நாடு காவல் துறை குறித்த ஆய்வுரை, 1982–83 (தமிழ், ஆங்கிலம்).

162. தமிழ்நாடு தீயணைப்புத் துறை குறித்த ஆய்வுரை, 1982–83 (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு I.

(80?-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்டவினா எண். 674-க்கான விடையை காண்க.)

(அ) 1981–82-ஆம் ஆண்டின் மொத்தம் 10 மாவட்டங்கள் இலக்கினை எய்தின. அவையாவன—





(1) கோயம்புத்தூர், (2) மதுரை, (3) சேலம், (4) திருச்சிராப்பள்ளி, (5)திருநெல்வேலி, (6) தென் ஆற்காடு, (7) இராமநாதபுரம், (8) பெரியார், (9) கன்னியாகுமரி, (10) நீலகிரி.

(ஆ) இத் திட்டத்தை தீவிரப்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன;—

இத்திட்டத்தை தீவிரப்படுத்த பல்வேறு முயற்சிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறு சேமிப்பு வசூலை அதிகரிக்க ஆண்டு தோறும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறியீடு, நிர்ணயிக்கப்படுகிறது. அக்குறியீட்டை அடைவதற்காக சிறப்பு இயக்கமும் நடத்தப்படுகிறது. குறியீடு எய்திய மாவட்டங்களுக்கு நிகர வசூல் அடிப்படையில் சிறப்பு ஊக்கத்தொகை மாவட்டத்தின் நலவளர்ச்சி திட்டத்திற்காக வழங்கப்படுகிறது. இலக்குத் தொகையைவிட மிகக் கூடுதலான சதவீதம் முதலீடு செய்யும் முதல் மூன்று மாவட்டங்களுக்கு கூடுதல் ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

அனைத்து மாவட்டங்களும் விளம்பரச் சாதனங்களுடன் கூடிய விளம்பர ஊர்தி, பகுதி II திட்டத்தின்கீழ் ஆண்டிற்கு மூன்று மாவட்டங்கள் வீதம் தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை வட ஆற்காடு, செங்கற்பட்டு மற்றும் பெரியார் மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களுக்கும் விளம்பர ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் உதவியால் மாவட்டத்திலுள்ள கிராமப்புறங்களில் சிறு சேமிப்பு திட்டத்தைப்பற்றி விளம்பரப்படுத்தப்படும். சிறு சேமிப்புத் திட்டத்தைப் பாமர மக்கள் எளிதில் புரிந்து கொள்ளவேண்டுமென்ற அடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டிற்கு 100 சிறு சேமிப்பு விளம்பர நாடகங்கள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பஞ்சாயத்து யூனியன்களும் தலா 5,000 ஆர்.டி/சி.டி.டி. கணக்குகள் சேகரிக்கவேண்டும் என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டு புதிய கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது.

சேமிப்பின் அவசியத்தை மாணவர்கள் இளம் வயதிலேயே புரிந்து கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் மாவட்ட அளவில் அனைத்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு ஆண்டுதோறும் நாவுண்மைப் போட்டி நடத்தப்பட்டு சேமிப்பின் அவசியத்தை உணர்த்தப்பட்டு வருகிறது.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1983 ஏப்ரல் 7

அரசு நன்றியை தெரிவிக்கிறது. இன்று காலை 11.00
மணி அளவில் தென்பிராந்திய ரயில்வே உயர் அதிகாரிகளுடன்
நான் பேச்சுவார்த்தை நடத்தினேன். இதிலிருந்து தெரிய
வருவதாவது ரயில்வே நிர்வாகம் நாள் ஒன்றுக்கு 75
வேகன் கொண்ட தொடர் ரயில் மூலம் விஜயவாடாவிலிருந்து
சென்னைக்கு சுமார் 3 லட்சம் காலன் தண்ணீர் கொண்டு
வர ஏற்பாடு செய்து வருகிறது. அதற்கு முன்னோடியாக
பிட்ரகுண்டாவிலிருந்து தற்சமயம் 10 வேகன் வந்துள்ளன.
ஒவ்வொரு வேகனிலும் சுமார் 5 ஆயிரம் காலன் தண்ணீர்
இருக்கும். இந்த தருணத்தில் சென்னை குடிநீர் வாரியம்,
தென் பிராந்திய ரயில்வேயுக்கும், பெரம்பூர் இரயில்
பெட்டித் தொழிற்சாலைக்கும் இந்த வறட்சி காலத்திலும்
நாள் ஒன்றுக்கு 15 லட்சம் காலன் குடிநீர் குழாய்கள் மூலம்
வழங்கி வருகிறது. இதற்கு மேல் மேற்படி 2 நிறுவனங்
களும் நாள் ஒன்றுக்கு ½ லட்சம் காலன் தண்ணீரை
லாரிகள் மூலம் கீழ்ப்பாக்கத்திலிருந்து சேகரித்துக்கொள்
கிறார்கள். நாம் இரயில்வேய்க்கு வழங்கும் குடிநீர் அளவோடு
ஒப்பிட்டுப்பார்க்கும்போது இரயில்வேயால் இரயில் மூலம்
கொண்டுவரப்படும் நீர், குடிநீர் வாரியம் வழங்கும் நீரில்
5-ல் ஒரு பங்கு தான் ஆகும். இவ்வாறு ரயில்வே மூலம்
கொண்டுவர இருக்கும் குடிநீரை ரயில்வே இலாக்கவே
உபயோகித்து சென்னை குடிநீர் வாரியத்திடமிருந்து
குறைவாக பெற்றுக் கொள்ளலாம் என்று கருத்து தெரிவிக்கப்
பட்டது. ஆனால் ரயில்வே அதிகாரிகள் இதை ஏற்றுக்
கொள்வதில் நடைமுறை இடர்பாடுகள் இருப்பதாக கூறினார்
கள். அதாவது தண்ணீர் தரத்தை பரிசோதிப்பதற்கும்
தண்ணீரை அவர்களே பிடித்து வைப்பதற்கும் வசதிகள்
இல்லை என்று கூறினார்கள். ஆகையால் இப்போது 10
வேகன்களில் வந்துள்ள தண்ணீரின் தரத்தை சென்னை
குடிநீர் வாரியம் பரிசீலிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்
வதாகவும் அதன் பிறகு அந்த வேகன்களிலுள்ள தண்ணீரை
வில்லிவாக்கத்திலுள்ள சென்னை குடிநீர் வாரியத்தின் மூடு
கால்வாயில் 'கேன் டியூப்' பரிட்சார்த்தமாய் இரயில்வே இலாக்
காவுக்கு விடுவதாகவும் முடிவு எடுக்கப்பட்டது. இந்த
ஏற்பாடு சரியாகச் செயல்பட்டால் தொடர்ந்து இரயில்வே
இலாகாவே வேகன்களில் கொண்டுவரும் நீரை வில்லிவாக்கத்தில்
உள்ள குடிநீர் வாரியத்தின் மூடு கால்வாயில் விடுவதற்கான
ஏற்பாடுகள் செய்யும், இதற்கு உதவியாக அவ்வப்போது
உதவிகள் தமிழக அரசும் குடிநீர் வாரியமும் இரயில்வே
இலாக்காவிற்கு வழங்கும். நாம் இரயில்வேக்கு தேவையான
தண்ணீர் 15 லட்சம் காலன்கள் கொடுக்கிறோம். ஒரு
நாளைக்கு இரயில்வேக்கு தேவையான தண்ணீர் 15 லட்சம்
காலன்கள் கொடுக்கிறோம். இப்போது இரயிலில் கொண்டு





1983 ஏப்ரல் 7] [திரு. எஸ். இராகவானந்தம்]

வந்து நமக்கு தருவதாகச் சொல்வது 3 லட்சம் காலன்தான்.
நாம் சொல்வது இதுதான். இரயில்வேக்கு நாம் கொடுக்கும்
15 லட்சம் காலன் தண்ணீரை அவர்களே பெற்றுக் கொள்ளா
மல் அவர்களுக்கு தேவையான தண்ணீரை அவர்களே ஏற்பாடு
செய்து கொள்வார்களேயானால் நமது தண்ணீர்ப்பிரச்சினை
பெருமளவுக்குத் தீரும். மேலும் அவர்கள் தருவதாகக்
கூறும் தண்ணீர் குடிநீருக்குப் பயன்படுமா என்பதையும்
ஆராய்ந்து முடிவு எடுக்கவேண்டியுள்ளது. எனவே மீண்டும்
இதைப்பற்றி விரிவாகப் பேசிய பிறகுதான் முடிவு எடுக்க
இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய
அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 8–4–1983 காலை 9
மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–46 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

235. கடப்பேரி கிராமம் நி.அ.பு. எண்கள் 34, 35, 36,
37, 43 மற்றும் 44-ன் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான
பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது சம்பந்தமாக வீட்டு
வசதி–நகர்புற வளர்ச்சித் துறையின் 20–7–1982-ஆம் தேதி
யிடப்பெற்ற 638-ஆம் எண் அரசாணையில் வெளியான
அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) [தமிழ்நாடு 1971–ஆம்
ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ்
பேரவைமுன் வைக்கப்பெற்றது].

236. திருநீர்மலை கிராமம் நி.அ.பு. எண்கள் 224
மற்றும் 225-ன் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெரும்
திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி-நகர்புற
வளர்ச்சி துறையின் 20–7–1982-ஆம் தேதியிடப்பெற்ற
652-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை
(தமிழ், ஆங்கிலம்) [தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர-
நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்
பெற்றது.]

இணைப்பு II.

(842-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ்நாடு காவல் துறை.

ஆய்வுரை.

மக்கள் சமுதாயத்தில் சட்டம், ஒழுங்கைக் காப்பதும் அமைதியை யை நிலை நிறுத்துவதும், குற்றங்களைக் கட்டுப்படுத்துவதும் காவல் துறையின் முக்கிய கடமைகளானாலும், பழமை வழிபட்ட ஒருசமுதாயத்தில் காவலர்களுடைய பங்கு எளிதானதல்ல. அந்த நிலையில், நமது மாநிலத்தைப் போன்றுள்ள, முன்னேறி வரும் மக்களைக் கொண்ட சமுதாய அமைப்பில், காவல் துறையின் கடமைகள் பலவகைப் பட்டதாகவும் சிக்கல்கள் நிறைந்ததாகவும் உள்ளன. அத்தகைய சமுதாயத்தில் சமூக மாற்றங்களும் பொருளாதார வளர்ச்சியும் பெரும் அறை கூவல்களை ஏற்படுத்தி வருகின்றன. ஏனெனில் அச்சமுதாயத்தில் பழையன கழிந்தும் புதியன புகுந்தும் புதிய புதிய சமூக பொருளாதார மாறுபாடுகள் தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன. இத்தகைய பின்னணியில், சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்துவதோடு காவல் துறைக்குப் பல கடமைகள் அமைகின்றன. காவல் துறை, சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான பல்வேறு திட்டங்களைச் சிக்கலின்றி, முறையான வழிகளில் நிறைவேற்ற அரசுக்குத் துணை புரிய வேண்டியுள்ளது. பெருகி வரும் தொழிற்துறைகள் தோற்றுவிக்கும் சூழல்களால் மக்கள் வாழ்க்கைப் போக்கிலும் கலாச்சாரத் தொடர்புகளிலும் மாற்றங்கள் ஏற்படுவதின் விளைவாக, குற்றங்களின் தன்மை பெரிதும் மாறுபட்டு, குற்றவாளிகள் செயல் புரியும் முறைகளிலும் நவீன முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் காவலர், குற்றங்களைக் கையாளுவதில் அதே அளவிற்குத் திறமையாகச் செயல் பட்டு, குற்றங்களைத் தவிர்ப்பதிலும், குற்றவாளிகளை அடக்குவதிலும் தங்கள் திறமையில் மக்கள் அனைவரும் நம்பிக்கை கொள்ளக் கூடிய சூழ்நிலையையும் உருவாக்க வேண்டியுள்ளது.

2. மக்களின் நண்பர்களாகவும், சிக்கல்களைத் தீர்க்கும் உதவியாளர்களாகவும், குற்றங்களை நீக்கப் பணியாற்றுபவர்களாகவும் சமுதாயத்தில் ஒழுங்கும் அமைதியும் நிலவச் செய்பவர்களாகவும் காவல் துறையினர் தங்கள் கடமைகளை நிறைவேற்றி வருவது ஓர் வளர்ச்சி நிர்வாகத்தின் தேவையாக அமைகிறது. மிகச் சிறிய தூண்டுதலின் பேரிலேயே மத, இன, சமூக கொந்தளிப்புகள் விரைவில் கிளர்ந்தெழுந்து சட்ட ஒழுங்கு



நிலைமைகள் பாதிக்கப்பட்டு சில நேரங்களில் வன்முறை சம்பவங்கள் நிகழும் போது, நிலைமையைத் தெளிவாகக் கண்டறிந்து நெருக்கடிகள் மேலும் வளராமல், நியாயமாகவும் திறமையுடனும், நுட்பமாகவும், தெளிவாகவும் பணியாற்றுவதில் காவலர்களுக்கு மிகப் பெரிய பொறுப்புள்ளது.

3. இந்த வகையில் காவலரின் பொறுப்புகள் பெருமளவில் வளர்ந்துள்ளன என்பதில் ஐயமில்லை. இந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு காவலர் படை தக்க அலுவலர்களைக் கொண்டதாகவும் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்ற பணியாளர்களைக் கொண்டதாகவும் அமைய வேண்டியுள்ளது. விரைந்து அங்குமிங்கும் சென்று வரவும் உரிய இடங்களுக்குத் தகவல்களை, உரிய வகையில் தெரிவிக்க நவீன சாதனங்களைக் கொண்டிருப்பதும், நிலைமைகளை விரைவாகச் சமாளிக்க நவீன இயந்திர வசதிகள் முதலியவற்றைப் பெற்றிருப்பதும், காவல் துறைக்குப் பெரிதும் தேவையாகும்.

4. தமிழ்நாடு காவல் துறை அதன் பொறுப்புகளை முழுவதும் உணர்ந்துள்ளது. அதனிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாடு அரசும் காவலர்களின் தேவைகளை நன்கு உணர்ந்திருப்பதோடு, துறை திறமையாகச் செயல்படும் வகையில் தேவையான உதவிகளை அவ்வப்போது அளித்து வருகிறது. 1982—83 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் துறையினரின் செயல் திறமை மற்றும் சாதனைகள் பற்றிய தொகுப்பு கீழ் வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

5. நவீன காவல் துறையின் முதல் தேவை, அது சரியான பணியாளர்களைக் கொண்ட ஒழுங்கு நிறைந்த ஒரு அமைப்பாக இருத்தலாகும். பிரிவு 1-ல் தமிழக காவல் துறையின் பணியாளர் நிலை மற்றும் அதன் அமைப்பு முறைகளைப் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. காவல் இயந்திரம் நல்ல முறையில் செயல் படுவதற்குத் தகுந்த ஆயத்தங்களும், சீரிய செய்தித் தொடர்பு வசதிகளும், விரைவில் இடம் விட்டு இடம் செல்வதற்கு ஏற்ப வாகன வசதிகளும், குற்றங்களைக் கண்டுபிடிக்க அவற்றின் விவரங்களைச் சேகரித்துச் செய்திகளைப் பாதுகாக்கத் தக்க விஞ்ஞான முறை உதவிகளும் தேவைப்படுகின்றன. செய்தித் தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிகள் பற்றிய தொகுப்பு பிரிவு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது. குற்றங்களைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்தப்படும் விஞ்ஞான முறை பற்றிய விவரங்கள், பிரிவு 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

[1983 ஏப்ரல் 7

6. அலுவலர்க்குப் போதுமான வாழ்க்கை வசதிகளும், செயல் படுவதற்கு உற்சாகமும் ஊக்கமும் இல்லையேல் இந்தக் காவல் துறை அமைப்பு மிகச் சிறந்த பலனளிக்க இயலாது. அண்மை ஆண்டுகளில், காவலரின் வாழ்க்கை வசதி மேம்பாட்டிற்காகவும் அவர்களுக்குச் சரிவர ஊக்கமளிக்கவும் பல நடவடிக்கைகள் இந்த அரசால் மேற் கொள்ளப்பட்டன. காவலரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் அவர்களுக்குத் தகுந்த உற்சாகம் அளிக் கவும் இவ்வரசு மேற் கொண்ட நடவடிக்கைகள் பற்றிய தொகுப்பு பிரிவு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

7. இறுதியாக மிகவும் முக்கியமானது, காவலர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே உள்ள உறவுத் தன்மையாகும். இது காவலர் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு இன்றியமையாத தாகும். தகுந்த பயிற்சியும், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கண்காட்சிகளில் பங்கு கொள்ளுதலும் காவலரின் பங்கைப் பற்றி மக்களிடையே தெரிவிக்க செய்தி அமைப்பினைப் பயன் படுத்துதலும், தொண்டு நிறுவனங்களை இப்பணியில், சேர்த் தலும், இந்த உறவுத் தன்மையை வளர்க்கத் தேவைப்படு கின்றன. காவல் நிர்வாகத்தின் இந்தப் பகுதி பற்றிய குறிப்புகள் பிரிவு 5-ல் இடம் பெற்றுள்ளன.

8. மைய அரசு கொடுத்துள்ள உதவிகளின் விவரம் பிரிவு 6-ல் தரப்பட்டுள்ளது. கடந்த 1982—83 ஆம் ஆண்டு குற்றம், சட்டம், ஒழுங்கு முதலியவற்றில் காணப்பட்ட முக்கியமான நிகழ்ச்சிகள் பிரிவு 7-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

9. மேலும் 1982—83 ஆம் ஆண்டில் காவலருக்கு அளிக்கப் பட்டுள்ள பல சலுகைகளை 8-ம் பிரிவில் பார்க்கலாம். காவல் துறையை வலுப்படுத்த எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் இங்கு விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சில புள்ளி விவரங்கள் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

## பிரிவு 1.

### அமைப்பும், பணியாளர்களும்.

10, காவல் துறை இயக்குநர் காவல் துறைக் காவலர் படை யின் தலைவராக உள்ளார். காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள் இருவர் இவருக்கு உதவியாக இருக்கின்றனர். குற்றம் மற்றும் புலனாய்வுத் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல்



1983 ஏப்ரல் 7]

புலனாய்வு குற்றங்கள், பாதுகாப்பு, திட்டமிடல், வானொலிப் பிரிவு, விரல் ரேகைப் பிரிவு மற்றும் கம்பியூட்டர் பிரிவு போன்ற தொழில் நுட்பப் பணி பற்றிய துறைகளை நிர்வகிக்கிறார். சட்டம், ஒழுங்கு மற்றும் நிர்வாக இன்ஸ்பெக்டர் ஜெனரல், அன்றாட நிர்வாகம் மற்றும் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு ஆகிய வற்றில் காவல் துறை இயக்குநருக்கு உதவுகிறார்.

11. இந்திய காவல் பணி (I.P.S.) காவல் துறைக்கு முக்கியமான மேற் பார்வைத் தலைவர்களை அளிக்கிறது. தமிழ்நாட்டிற்கென ஒதுக்கப்பட்ட இந்தியக் காவல் பணிப் பதவிகள் 130 ஆகும். மூன்று ஆண்டு ஆய்வின் பகுதியாக 23 புதிய பதவிகளை இந்திய காவல் பணியில் சேர்க்க வேண்டுமெனக் கோரி மாநில அரசு ஒரு செயற் குறிப்பை மைய அரசுக்கு இவ்வாண்டு அனுப்பியுள்ளது.

12. இவ்வாண்டில், மூன்று இந்தியக் காவல் பணி அதிகாரிகள் பதவியிலிருந்து ஓய்வு பெற்றனர். ஐந்து நேரடி நியமன காவல் பணி அதிகாரிகள் தமிழ் நாட்டிற்கென ஒதுக்கப்பட்டு காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறச் சேர்ந்துள்ளனர். நான்கு மாநிலக் காவல் பணி அதிகாரிகள் தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப் பட்ட இந்தியக் காவல் பணிப் பதவிகளில் பதவி உயர்வு வழங்கி நியமிக்கப்பட்டுள்ளனர். 1982ஆம் ஆண்டில் நேரடி நியமனம் மூலம் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் (வகை 1) ஒருவர் பணியமர்த்தப்பட்டு தற்போது பயிற்சி பெற்று வரு கிறார்.

13. 1-1-1983 அன்று உள்ளவாறு, தமிழ்நாடு காவல் துறைப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 54,483 ஆகும். அதன் விவரங்கள் இணைப்பு 1-ல் தரப்பட் டுள்ளன. இந்த ஆண்டில் 1,248 நிர்வாகப் பணியிடங்களும் 266 அமைச்சுப் பணியிடங்களும் 68 தொழில் நுட்பப் பணியிடங் களும் புதிதாக ஏற்படுத்தப்பட்டன. இதன் விவரம் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

14. தமிழ்நாடு காவல் துறையின் தாக்குதல் பிரி வான 166 சேமப்படை சிறுபடைப் பிரிவுகளும் தமிழ் நாடு சிறப்புக் காவல் படையில் 7 அணிகளும் சட்டம்-ஒழுங்கு நிலைமைகளைப் பராமரிப்பதில் உள்ளூர் காவலர் பிரிவுகளுக்குச் சிறப்பான முறையில் உதவி வருகிறார்கள். ஆவடியில் அமைந்துள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை இரண்டாம் அணி மாநிலத்திற்கு வெளியே மத்திய அரசின் கீழ் புதுடில்லியில் பணிபுரிய 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 25-ம் தேதியன்று அனுப்பப்பட்டு தொடர்ந்து அங்கேயே உள்ளது முகமையில்

சென்ற ஆண்டு மணிமுத்தாரில் இருந்த தமிழ்நாடு சிறப்புக் காவல் படை ஏழாம் அணி, கூழலூரில் இருப்பிடங்கள் குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் முடிவடையாததால் அங்கு மாற்றப்படாமல் பழநிக்கு தற்போது மாற்றப்பட்டுள்ளது.

15. மாநிலத்தில், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு இடங்களில் நாய்ப்படைகள் உள்ளன. 1982-ம் ஆண்டில் 687 நிகழ்வுகளில் இவற்றின் பணி பயன்படுத்தப்பட்டது. அவற்றில் 254 நிகழ்வுகளில் இவை பயனுள்ளவையாக இருந்தன.

16. போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதில் குதிரைப்படை பெரிதும் பயனுள்ளதாக இருக்கிறது. தற்போது சென்னை நகரில் 34 குதிரைகளைக் கொண்ட ஒரு பிரிவு இருந்து வருகிறது. சென்ற ஆண்டு மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில பெரு நகர் அமைப்பு முறையை ஏற்படுத்த வேண்டும் என அறிவிக்கப் பட்ட முடிவையொட்டி இவ்விரு நகரங்கள் ஒவ்வொன்றிலும் 10 குதிரைகள் கொண்ட இரு குதிரைப்படைப் பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவ்விரு பிரிவுகளுக்கும் குதி ரைகள் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

17. சென்னை பெருநகருக்கு மேலும் திறமையான நிர்வாகத்தை வழங்குவதற்கென மேற்பார்வை அதிகாரிகள், பணியாளர்கள், வண்டிகள் மற்றும் செய்தித் தொடர்பு வசதி கள் முதலியவற்றைக் கொண்ட சென்னை பெருநகர் காவல் பிரிவை மேலும் வலுப்படுத்த வேண்டுமென அரசு அறி வித்தது. இதனையொட்டி இரண்டு துணை காவல் துறை ஆணையாளர் உள்ளிட்ட பல புதிய பதவிகளை ஏற்படுத்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் வண்டிகள் வாங்கவும் ஆணை இடப்பட்டுள்ளது. 8 புதிய காவல் நிலையங்களை ஏற்படுத்தவும், 3 புறக்காவல் நிலையங்களைக் காவல் நிலையங்களாக தரம் உயர்த்தவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டத்திலுள்ள 12 காவல் நிலை யங்களை சென்னை பெரு நகருடன் சேர்க்க அரசு முடிவு எடுத் துள்ளது. இதற்குத் தேவையான சட்ட முன் வடிவு விரைவில் சட்டப் பேரவையில் கொண்டு வரப்படும். சென்னை நகரில் ஒரு புதிய காவல் மாவட்டத்தை ஏற்படுத்தவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

18. குற்றம் நிகழும் இடங்களில் காவலரின் பணி உடனடி யாகக் கிடைக்கும் வகையிலும் பொது மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் குறைகளை ஆங்காங்கே நிவர்த்தி செய்யும் தேவையைக் கருத்தில் கொண்டும் 5 நடமாடும் காவல் நிலையங்களை சென்னை நகரில் நிறுவுவதற்கு அரசு ஆணை வழங்கியுள்ளது. இந்த 5-ல் ஒன்று முற்றிலும் பெண் காவலர் களைக் கொண்டு இயங்க ஒதுக்கப்பட்டுள்ளது.



19. இம்மாநிலம் முழுவதிலும் வளர்ந்து வரும் பணிகளைச் சமாளிக்க 19 புதிய காவல் நிலையங்களையும் 5 புதிய புறக் காவல் நிலையங்களையும் அமைக்கவும், 8 புறக்காவல் நிலையங்களைக் காவல் நிலையங்களாக மேம்படுத்தவும் அரசு ஆணை வழங்கியுள்ளது.

20. சென்னை நகரிலிருந்து பல திசைகளில் செல்லும் நெடுஞ்சாலைகளில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும், போக்குவரத்துக் குற்றங்களை கட்டுப்படுத்தவும் உள்ள அவசியத்தைக் கருதி, 3 நெடுஞ்சாலை ரோந்துப்படைகளை அமைக்கவும் ஒவ்வொரு ரோந்துப் படைக்கும் ஒரு ஜீப் வழங்கவும் அரசு உத்தரவிட்டுள்ளது. இந்தப் புதிய அமைப்பினால் நெடுஞ் சாலை போக்குவரத்திற்குத் தேவையான பாதுகாப்பு கூடுத லாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மக்கள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப் படுத்துதல்.

21. தீண்டாமையை ஒழித்தல் என்ற அரசினால் அறிவிக்கப் பட்ட கொள்கையை நிறைவேற்றுவதில் மக்கள் உரிமைகள் பாது காப்புச் சட்டத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்துதல் ஒரு முக்கிய நடவடிக்கையாகும்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும் இச் சட்டத்தை அமுல்படுத்த, ஒரு சுற்றுக் காவல் படைப் பிரிவு இயங்கி வருகிறது. ஒவ்வொரு பிரிவிலும் ஓர் ஆய்வாளர், ஓர் உதவி ஆய்வாளர், இரண்டு தலைமைக் காவலர், இரண்டு இரண் டாம் நிலைக் காவலர் உள்ளனர். சுற்றுக் காவல் படைப் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் ஜீப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணம் மற்றும் திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய நான்கு இடங் களில் உள்ள தனி நீதிமன்றங்களுக்கு நான்கு உதவி குற்ற வழக்குரைஞர்கள் பதவிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ஒவ்வொன்றிலும் ஓர் உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர், ஓர் இரண்டாம் நிலைக் காவலர் ஆகியோர் கொண்ட 6 நடமாடும் குற்ற வழக்குப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் நான்கு பிரிவுகள் மேற் குறிப்பிட்ட நான்கு வழக்கு மன்றங்களின் வழக்குகளைக் கவனிக்கும், மற்ற இரண்டும்

தென்னாற்காடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் இருக்கும் மக்கள் உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தேங்கியுள்ள வழககுகளை விரைந்து முடிப்பதற்கு உதவும்,

**பெண் காவலர் :**

22. காவல் துறையில் பெண் காவலர் பங்கினைப் பற்றி குறிப்பிடுவது மிக அவசியமானதாகும். இவர்கள் பணியைக் குறிப்பிடாவிடில் காவல் துறையைப் பற்றிய எந்த அறிக்கையும் முழுமை பெறாது. இப்பிரிவு 1973-ம் ஆண்டு துவக்கப்பட்டு, 1979-ம் ஆண்டு பெருமளவு வலுப்படுத்தப்பட்டுள்ளது. இப் பிரிவில் தற்போது உள்ளவர்களின் எண்ணிக்கை 82 பெண் உதவி ஆய்வாளர்கள், 74 பெண் தலைமைக் காவலர்கள் மற்றும் 666 பெண் காவலர்கள் ஆகும். தற்போது பெண் காவலர்கள் விமான நிலையங்களில் பெண் பயணிகளைச் சோதனையிடப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் இரயில் நிலையங்களில் வழிதவறித் தடுமாறும் பெண் பயணிகளின் நன் மைக்கும், மருத்துவமனைகளில் பெண் நோயாளிகளுக்கு உதவவும், குழந்தைகள் திருட்டைத் தடுக்கவும் பெண் காவலர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். நடப்பு ஆண்டில் 10 காவல் நிலையங்களில் பெண் காவல் இணைப்பு நிலையங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் 50 நிலையங்களுக்கு இவ்வாறு ஆணை வழங்கக் கருதப்பட்டு வருகிறது. இந்த இணைப்பு நிலையங்கள் காவல் நிலையங்களோடு இணைந்து செயல்பட்டு, பெண்கள் சம்பந்தப்பட்ட குற்றங்கள் மற்றும் பிரச்சினைகள் மீது தீவிர கவனம் செலுத்தும். இத னால் பெண்களின் நம்பிக்கையைப் பெறுவதோடு காவல் துறையின் உதவி, பெண்களுக்கு நிச்சயமாக கிடைக்கப் பெரு மளவு உதவியாக இருக்கும்.

## பிரிவு 2.

## செய்தித் தொடர்பு.

23. காவல் துறைப்பணி நன்முறையில் நடைபெறுவது என்பது பணியாளர்கள் தங்கள் படைகளுடனும் தலைமை யிடத்துடனும் செய்திகளையும் கட்டளைகளையும் பெற்று அனுப்புவதற்கான நல்ல செய்தித் தொடர்புக்கட்டமைப்பு இருப்பதைப் பொறுத்துள்ளது. இவ்வகையில், கம்பியில்லாத் தந்திச் சாதனங்கள், வானொலி தொலை பேசிகள் மற்றும் இருவழிச் செய்தித் தொடர்புக் கருவிகள் ஆகியவற்றின் மூலம் ஒரு சிறந்த செய்தித் தொடர்பை தமிழ்நாடு தன்னகத்தே பெற் றுள்ளது பெருமைக்குரிய ஒன்றாகும்,



24. காவல் துறை வானொலிப் பிரிவு, தமிழ்நாடு காவல் துறை மாவட்டத் தலைமை இடங்கள் அனைத்தும் சென்னை யுடன் அதிர்வலை, மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்புக் கருவிகள் மூலம் இணைக்கப்பட்டு சிறந்த முறையில் இயங்கி வருகின்றன. இவ்வமைப்பின் மூலம் ஒலி மற்றும் தொலை அச்சுப் பொறிகளின் நேரடித் தொடர்பு செயல்படுத்தப்படுகிறது. 951 காவல் நிலையங்களில், 832 நிலையங்களும், 92 உட் கோட்டங்களில் 50 உட்கோட்டங்களும் மாவட்டத் தலைமை இடங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் தற்போது எல்லாக் காவல் நிலையங்களுடனும் காவல் துறைத் தலைமை யிடம் தொடர்பு கொள்ள முடிகிறது. மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்புக் கருவிகள் எல்லாக் காவல் நிலையங்களிலும் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

835 காவல் நிலையங்களிலும், 138 புறக்காவல் நிலை யங்களிலும் தொலைபேசி வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. எல்லாக் காவல் நிலையங்களுக்கும் மற்றும் புறக்காவல் நிலையங்களுக்கும் முடிந்த அளவு விரைவில் இவ்வசதி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

25. ஒவ்வொரு காவல் நிலையத்திலும், ரோந்துப் பணிக்கு செல்லும் காவலரின் பயனுக்காக இரண்டு இருவழிச் செய்தித் தொடர்புக் கருவிகள் (W. lkie T. lkie) உபயோகத்திலிருக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மைய அரசின் ஏழாவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி 630 இருவழிச் செய்தித் தொடர்புக் கருவிகள் வாங்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. 31-3-1983-க்குள் அவை யாவும் கிடைத்து விடுமென எதிர் பார்க்கப்படுகிறது. காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத் தின் கீழ் 570 இருவழிச் செய்தித் தொடர்புக் கருவிகள் வாங்க அனுமதி வழங்கப்பட்டது. மீதமுள்ள காவல் நிலையங்களுக்கு மேலும் 600 கருவிகள் மாநில நிதியிலிருந்து வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. புதிதாக ஏற்பட்ட காவல் நிலையங்களின் உபயோகத்திற்கென வரும் ஆண்டில் 400 கருவிகள் வாங்கத் திட்டமுள்ளது.

26. செய்தித் தொடர்பு அமைப்பில் மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்பு அமைப்பு ஒரு முக்கிய பிரிவாகும். இது 83 நிலையங்களும் 5 கட்டுப்பாடு நிலையங்களும் உடையதாகும். வெள்ளப் பெருக்கு முதலிய சமயங்களின் சேவைக்காக 12 அவசர காலத் தகவல் சேகரிப்பு நிலையங்களும் (Emergency Stations) முக்கியமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

[1983 ஏப்ரல் 7

27. வானொலி செய்தித்தொடர்பு வேலைகளின் அளவு அதிகரித்துள்ளதால், முக்கியமாக குற்றவியல் விசாரணைப் பிரிவின் உபயோகத்திற்கு வானொலித் தொடர்புச் சாதனங் களைப் பலப்படுத்த வேண்டியுள்ளது. ஆகவே, அதிமீயுவர் மின்னலைச் சாதனங்கள் (Ultra High Frequency) பொருத்து வதற்கென ரூ. 120 லட்சம் செலவிற்கு அரசு அனுமதியளித் துள்ளது. இந்திய அரசின் எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் நிறுவனத்திடம் (Electronic Corporation of India) இதை வாங்கத் தேவையான ஆணை வழங்கப்பட்டுள்ளது.

28. 1980-81 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட '' பழைய வண்டி களை மாற்றும் திட்டத்தின் '' கீழ் , நடப்பு ஆண்டில் ரூ. 1.93 கோடி செலவில் 205 புதிய வாகனங்கள் வாங்க அரசு ஆணை யிட்டுள்ளது. வரும் ஆண்டுகளிலும் இத்திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படும். இது தவிர ரூ. 66.48 இலட்சம் செலவில் மேலும் 304 புதிய வாகனங்கள் வாங்கவும் ஆணையிடப்பட் டுள்ளது. இவைகள் காவல் துறையின் பல பிரிவுகளுக்கும் வழங்கப்படும்.

29. காவல் துறை வாகனங்களைப் பராமரிக்கும் பொறுப்பு சென்னை மோட்டார் வண்டிகள் பராமரிப்பு அமைப்பி (Motor Vehicles Maintenance Organisation) னுடையதாகும். காவல் துறை வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாவதாலும், விரைவான போக்குவரத்துத் தேவை அதிகரித்துள்ளதாலும், காவல் துறைக்குச் சொந்தமாக ஒரு பணிமனை தொடங்கப்பட்டுள்ளது. தற்சமயம் சென்னை நகர் காவலர் அமைப்பு தமிழ்நாடு சிறப்புப் காவலர் அணி ஆகியவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஆவடியில் ஒரு பணிமனை தொடங்கப்பட்டுள்ளது. காவல் துறையைச் சீரமைக்கும் திட்டத்தின் கீழ் இப் பணி மனைக்கு ரூ. 10 லட்சம் செலவில் கூடுதல் அலுவலர் நியமனம் செய்யவும் கருவிகள் வாங்கவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இது தவிர, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய இடங் களில் மூன்று பணிமனைகள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. முதற் கட்டமாக காவல் துறையைச் சீரமைக்கும் திட்டத்தின் கீழ் திருச்சியில் ஒரு பணிமனை தொடங்கப்படும்.

### பிரிவு 3.

### அறிவியல் சாதனங்கள்.

30. தமிழ்நாட்டிலுள்ள விரல் ரேகைப் பிரிவு இந்தியாவி லேயே மிகவும் நவீனமானதொன்றாகும். நடப்பு ஆண்டில் இந்தப் பிரிவில் கூடுதலாக 3 இயக்குநர் பதவிகளும், 40 விரல்



1983 ஏப்ரல் 7]

ரேகை தேடுநர் மற்றும் வல்லுநர் பதவிகளும், 7 கண்காணிப் பாளர் பதவிகளும் ஏற்படுத்தப்பட்டு இத்துறை வலுப்படுத்தப் பட்டுள்ளது. 3.82 லட்சம் குற்றவாளிகளின் விரல்ரேகைப் பதிவுகளும் கம்பியூட்டர் முறையில் சேகரித்து வைத்து வரப் படுகின்றன. இதோடு எளிதாகத் தேட வசதியாக, விரல் ரேகைப் பதிவை மைக்ரோ பிலிமில் (Micr. Film) செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுவரை இப்பணியில் பாதி அளவு முடிவடைந்துள்ளது.

31. தேசிய காவல் துறைக் (கம்ப்யூட்டர்) கணக்கீட்டுப் பொறிகணிப்பு முறைத்திட்டத்தின்கீழ் ரூ. 74 இலட்சம் செலவில் மிகவும் நல்ல முறையில் அமைக்கப்பட்ட டி.டி.சி. (T.D.C.) 316 கணக்கீட்டுப் பொறி (கம்ப்யூட்டர்) ஒன்று தமிழ் நாடு காவல் துறையிலிருக்கிறது. சுமார் 5 லட்சம் குற்றங் களையும், 3 லட்சம் தொழில் முறைக் குற்றவாளிகளையும் பற்றிய புள்ளி விவரங்கள் இக்கணக்கீட்டுப் பொறிப் பிரிவில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. குற்றங்களை எளிதில் கண்டு பிடிப்பதற்கு வசதியாக, தினமும் மாநிலத்திலுள்ள எல்லாக் காவல் நிலையங்களுக்கும் இப் பொறியில் சேகரித்து வைக்கப் பட்டுள்ள புள்ளிவிவரங்களிலிருந்து ஆலோசனை வழங்கப்படு கின்றது. தற்போது உபயோகத்திலுள்ள செய்தித் தொடர்பு முறைகள் மூலம் அந்தத் தகவல்கள் அளிக்கப்படுகின்றன. கணக்குப் பொறி இயந்திரத்திலிருந்தே தகவல்களை நேரடி யாகப் பெறும் (On line m de) முறை பரிசோதனை நிலையின் இறுதிக் கட்டத்தில் இருக்கிறது. இது பூர்த்தியடையும்போது மாவட்டத் தலைமையகங்கள் கணக்குப்பொறி இயந்திரத்தி லிருந்து நேரடியாகத் தேவையான தகவல்களை, குற்றங்களைத் துரிதமாகக் கண்டு பிடிக்க உதவி செய்யும் வகையில், பெற்றுக்கொள்ள இயலும்.

32. தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வகம் 1980 ஆம் ஆண்டு முதல் ஓர் இயக்குநரின் கீழ் தனித்துறையாக இயங்கி வருகிறது.

33. இந்தத் துறையில் சென்னையில் ஒருங்கிணைக்கப்பட்ட தடய அறிவியல் ஆய்வகமாக துப்பாக்கி இயல் முதல் நச்சு இயல் வரையுள்ள பத்துப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. தற் போது மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, வேலூர் ஆகிய இடங்களில் ஐந்து வட்டார தடய அறிவியல் ஆய்வகங்கள் உள்ளன. மேலும் மாவட்ட அளவில் 21 நட மாடும் தடய அறிவியல் ஆய்வகங்களும் இயங்கிவருகின்றன. இவை தவிர, சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர் ஆகிய மூன்று இடங்களிலும் மாவட்டத் தடய அறிவியல் ஆய்வகங்கள் ஏற் படுத்தப்பட்டுள்ளன. இவை, தற்போது மது வகைகளை ஆய்வு செய்கின்றன.

34. சென்னையிலுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட தடய அறிவியல் ஆய்வகம் கீழ்க்கண்ட பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது :—

(i) துப்பாக்கி இயல்

(ii) உயிரியல்

(iii) வேதியியல்

(iv) ஆவணங்கள்

(v) ஆயத் தீர்வை

(vi) பௌதீகம்

(vii) மதுவிலக்கு

(viii) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி

(ix) குருதி நீரியல்

(x) நச்சு இயல்

35. வேலைப்பளு அதிகரிப்பாலும், சோதனைக்காக உள்ள முக்கியமாக மதுவிலக்கு மாதிரிகள் அதிகமாகத் தேங்கியிருப்பதாலும், 16 அறிவியல் உதவியாளர்கள் (முதல் நிலை), 22 அறிவியல் உதவியாளர்கள் (இரண்டாம் நிலை), 10 இளநிலை ஆய்வுக்கூட உதவியாளர்கள், 5 தட்டச்சர்கள், 5 இளநிலை உதவியாளர்கள் ஆகியோர் இத்துறையில் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் சில கருவிகள் அமைக்க ரூ. 4.94 இலட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

36. சென்னை ஆய்வுக்கூடத்தின் முக்கிய பரிசோதனைச் சாலையின் உபயோகத்திற்காக வரும் ஆண்டில் ரூ. 4.50 லட்சம் செலவில் மேலுறை ஆவி பகுப்பாய்வு கருவி (Head Space Analyser) ஒன்று வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ரூ. 6.67 லட்சம் செலவில் ஒரு அதி அழுத்த திரவ நிறமாலை மானியம் இரண்டு ஆஷாய் பெண்டெக்ஸ் நிழற்படக் கருவிகளும் அவற்றிற்கான துணைக் கருவிகளும் வாங்க அரசு அனுமதியளித்துள்ளது.

37. தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வுக்கூடம், இரண்டாண்டு பட்ட மேற்படிப்பு வகுப்பும், தடய அறிவியல் பண்டாரகர் (Ph. D.) பட்டத்திற்கான வகுப்பும் நடத்துகின்றது.



பிரிவு 4.

## காவலர் நலமும், ஒழுக்கமும்.

38. காவலர்களது வாழ்க்கைத் தரத்தையும் ஒழுக்கத்தையும் மேம்படுத்தப் பல நடவடிக்கைகள் நடப்பு ஆண்டில் எடுக்கப்பட்டுள்ளன. அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

39. காவலர்க்கு மலிவு விலையில் நுகர்பொருள்கள் வழங்கும் திட்டம் வெற்றிகரமாகத் தொடர்ந்து நடத்தப்படுகிறது. இதோடு, காவலர்கள் நிர்ணயிக்கப்பட்ட அளவு சர்க்கரையை அலகுவரையறையின்றி வாங்கலாம். ஏற்கெனவே இது 4 அலகு (Units) என்ற வரம்பு அளவுக்குட்பட்டிருந்தது. திருமணமாகாமல் தங்கள் பெற்றோருடன் வசிக்கும் காவலர்களும் இரண்டு அலகு (Units) வீதம் உணவுப் பொருள் வாங்க முதன் முறையாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

40. சென்னை நகரத்திலுள்ள போக்குவரத்துப் பிரிவினருக்கும் இரகசியப் (Intelligence) பிரிவினருக்கும், சிறப்பு ஊதியம் பல விகிதங்களில் கூட்டப்பட்டுள்ளது. போராட்டத்தில் கலந்து கொள்ளாத காவல்துறை வானொலிப் பிரிவினருக்கு ஒரு நிலை முன் ஊதிய உயர்வு (Advance Increment) வழங்கப்பட்டுள்ளது.

41. படை வீடுகளில் குடியிருக்கும் காவல்துறை சிறப்புப் படையினருக்கு கட்டில்கள் வாங்குவதற்கு ரூபாய் 3.96 இலட்சம் செலவு செய்ய அரசு அனுமதியளித்துள்ளது.

## காவலர் வீட்டு வசதித் திட்டம்.

42. நம் மாநிலத்தில் காவலர் வீட்டு வசதித் திட்டம் 1955–56-ம் ஆண்டு துவக்கப்பட்டது. சார்நிலை காவலர்களில் குறைந்தது 80 சதவீதத்தினருக்காவது வீட்டு வசதி அளிப்பதே அதன் நோக்கமாகும். இதில் 1980-81-ம் ஆண்டு வரை 46.2 சதவீதத்தினருக்கு குடியிருப்புகள் கட்டப்பட்டன.

இந்திய அரசின் ஏழாவது நிதிக் குழு 1979-80 முதல் 1983–84 வரையிலான ஐந்து ஆண்டு காலத்திற்கு காவல்துறை முதுநிலைப் பணியாளர்களுக்கு 524 குடியிருப்புகள் கட்டவும், காவல்துறை சார்நிலைப் பணியாளர்களுக்கு 830 குடியிருப்புகள், 5,097 படை வீடுகள் ஆக 6,451 குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூபாய் 675.00 இலட்சம் மானியம் ஒதுக்கியுள்ளது. இதனைப் பயன்படுத்தி தமிழ்நாடு அரசு முதுநிலைப் பணியாளர்களுக்கு

523 குடியிருப்புகளும், சார்நிலைப்பணியாளர்களுக்கு 3,487 குடியிருப்புகளும், 2,445 படை வீடுகளும் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஒதுக்கியுள்ள மானியத்திற்கு மேல் ஆகும் கூடுதல் செலவாகிய ரூபாய் 13.30 கோடியை மாநில அரசே ஏற்கிறது. குழு பரிந்துரைத்துள்ள 6,451 குடியிருப்புக்கள் அனைத்தும் 31-3-1984-ல் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரையில் ஏழாவது நிதிக் குழுவின் மானியத்தைக் கொண்டு கட்டப்பட்டு வரும் குடியிருபுகளில் காவல் துறைப் பணியாளர்களுக்கான 766 குடியிருப்பு கட்டுமானப் பணி முடிவுற்று, அக்குடியிருப்புக்கள் குடிபுகுவதற்காக ஒப்படைக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள 3,010 குடியிருப்புக்கள் மற்றும் 2,445 படை வீடுகள் பல நிலைகளில் கட்டுமானத்தில் உள்ளன,

### தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகம்.

43. காவல்துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் " உங்களுக்குச் சொந்த வீடு " என்ற திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டித்தரும் நோக்கத்தோடு தமிழ் நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் 1980 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இக் கழகம் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் பதிவு செய்யப்பட்டது. இக்கழகத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் ஒரு கோடியாகும்.

இக்கழகம் திருச்சிராப்பள்ளி மாவட்டம் நாவல்பட்டு என்ற இடத்தில் 720 வீடுகளைக் கட்டி வருகிறது. இத்திட்டத்திற்கு ஹட்கோ (Hudco) நிறுவனம் ரூபாய் 88.05 இலட்சம் உதவித் தொகையையும், மாநில அரசு ரூபாய் 30.00 இலட்சம் கடன் வசதியையும் அளித்துள்ளன. இத் திட்டத்தில் கட்டுமானப் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

1983-84 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், திண்டிவனம், திருநெல்வேலி, மதுரை மற்றும் வேலூரில் காவல் துறையினருக்கு வீடுகள் கட்டுவது என்று இக்கழகம் உத்தேசித்துள்ளது. தமிழ் நாடு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ்ப் பல இடங்களிலிருந்தும் எடுக்கப்பட்ட உபரி நிலங்களில் சிலவற்றை இதன் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக அரசு இக்கழகத்திற்கு ஒதுக்கி ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூலமாகக் காவல்துறையினர் வீடுகள் கட்டிக் கொள்ளவும், இக்கழகம் கட்டியுள்ள வீடுகளை விலைக்கு வாங்கிக் கொள்ளவும் வசதியாக



வீடு கட்டும் முன் பணமாக அவர்களுக்கு அளிப்பதற்கு ஆண்டு தோறும் ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசு உத்தர விட்டுள்ளது.

### காவல் நிலையக் கட்டிடங்கள்.

44. தற்சமயம் 951 காவல் நிலையங்களும், 189 புறக் காவல் நிலையங்களும் உள்ளன. இவற்றில் 485 காவல் நிலையங் களும், புறக்காவல் நிலையங்களும் தனியார் வாடகைக் கட்டிடங் களில் இயங்கி வருகின்றன. இதற்கு ஒரு ஆண்டுக்கு வாடகைச் செலவு சுமார் ரூபாய் 6.06 இலட்சம் ஆகும். வாடகைக் கட்டிடங் களில் இயங்கிவரும் 150 காவல் நிலையங்கள் புறக் காவல் நிலையங்களுக்கு அரசுக் கட்டிடங்களை ரூபாய் 350 இலட்சம் செலவில் கட்டுவதற்கு அனுமதி அளித்து அரசு உத்தரவிட்டு உள்ளது. இந்தக் கட்டிடங்களின் கட்டுமானப் பணிகள் பல நிலைகளில் முன்னேறி வருகின்றன. மேலும் சில காவல் நிலை யங்களுக்கு கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு பரிசீலனையில் இருந்து வருகிறது.

### பதக்கங்கள்

45. காவலர் படையின் ஒழுங்குணர்வு உயர்ந்த நிலையில் இருப்பதற்கும், அது மேலும் சிறந்த முறையில் பணியாற்ற ஊக்கமளிக்கவும், காவலரின் சிறப்பு மிக்க பணிகளைக் கவனித்து மதிக்கவேண்டியது ஓர் அவசியமான நடவடிக்கையாகும்.

### குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கம் மற்றும் காவல்துறை பதக்கம்.

46. தமிழ்நாட்டைச் சேர்ந்த 21 காவல்துறை அலுவலர் களுக்கும், காவலர்களுக்கும் 1982 ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கமும் காவல்துறைப் பதக்கமும் வழங் கப்பட்டன. இம்மாநிலத்தைச் சார்ந்த 3 ஊர்க்காவல் படை யினருக்குக் குடியரசுத் தலைவரின் ஊர்க்காவல்படை மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்புப் பதக்கம், அவர்களின் சிறப்பு மிக்க பணிக்காக 1982 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

### உயிர் காப்பிற்கான பிரதம மந்திரியின் காவலர் பதக்கம்.

47. இராமநாதபுரம் (மேற்கு) மாவட்டம் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. கே. வி. எஸ். கோபால கிருஷ்ணன் (இ. கா. ப.) அவர்களுக்கு 1982 ஆம் ஆண்டில் உயிர்காப்பிற்கான பிரதம மந்திரியின் காவலர் பதக்கம் வழங்கப்பட்டது.

## தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம்.

(வீரச் செயலுக்கும் சிறப்புமிக்க கடமைப்பற்று உறுதிக்காகவும்).

48. வீரச் செயலுக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம் 10 காவல்துறை அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும், 1982 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டது. 36 காவல்துறை அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும் அவர்களின் சிறப்பு மிக்க பணிக்காக முதலமைச்சரின் காவலர் பதக்கம் வழங்கப்பட்டது. 5 ஊர்க் காவல் படையினருக்கு முதலமைச்சரின் ஊர்க்காவல் படைப் பதக்கம் வழங்கப்பட்டது.

## தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம்.

(பாராட்டத்தக்க பணிக்காக.)

49. இப்புதிய திட்டத்தின்படி 10 ஆண்டுகளுக்குக் குறையாமல் எவ்விதக் குறையுமின்றிச் சிறப்புமிக்க பணிபுரிந்த தலைமைக் காவலர்களும், காவலர்களும், மற்றும் இவர்களுக்குச் சமமான பதவி வகிக்கும் மற்றவர்களும் இந்தப் பதக்கம் பெறத்தகுதியுடையவர் ஆவர். இப்பதக்கம் அளிப்பது குறித்த அறிவிப்பு ஆண்டுதோறும் பொங்கல் திருநாளன்று அரசால் அறிவிக்கப்படும். 1983 ஆம் ஆண்டில் 1,179 பேர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்பட்டது.

## தமிழ்நாடு காவலர் நலநிதி.

50. காவல்துறையைச் சேர்ந்த சார்நிலைப் பணியாளர்களுக்கு இறப்பு, பிணி, குறித்த செலவுக்காக நிதி உதவி, குறிப்பிட்ட சில பிரிவுகளில் பயிலும் குழந்தைகளுக்குப் படிப்புதவி ஏனைய நல உதவி, பொழுது போக்கு வசதி ஆகிய உதவிகள் செய்து கொடுப்பதற்காக, ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு காவலர் நல நிதி தொடர்ந்து நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. காவல்துறையில் பணி புரியும் சார்நிலை அலுவலர்கள் மனமுவந்து கொடுக்கும் அன்பளிப்புத் தொகைகள் மூலமும் உயர் அலுவலர்களிடமிருந்து பெறும் நன்கொடைகள் மூலமும் இந்நிதிக்குப் பணம் திரட்டப்படுகிறது. 1971-72 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு நிதி ஆண்டும், மானியமாக ரூபாய் 1.51 இலட்சம் அரசு இந்நிதிக்கு வழங்கி வருகிறது. 1982 ஆம் ஆண்டில் ரூபாய் 2.61 இலட்சம் இந்நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டு வழங்கப்பட்ட தொகை ரூபாய் 2.32 இலட்சம் ஆகும்.



## தமிழ்நாடு காவல்துறை நூற்றாண்டு விழா படிப்புதவித் தொகை நிதி.

51. தமிழ்நாடு காவலர் நல நிதியைத் தவிர தமிழ்நாட்டுக் காவல்துறை நூற்றாண்டு விழாப் படிப்புதவித் தொகை நிதியும் உள்ளது. காவல்துறை அரசிதழ் பதிவு பெறாத நிர்வாக அலுவலர்களின் பிள்ளைகளில் தகுதியுடையோருக்குக் கல்லூரிகளில் மேல்படிப்பும், தொழில் நுட்பக் கல்வியும் கற்க, ஆண்டுதோறும் இந்நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது. தனிப்பட்டவர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகள் மூலம் இந்நிதிக்குப் பணம் திரட்டப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 32,000 படிப்புதவித் தொகையாக இந்நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

## தமிழ்நாடு காவலர் நல்வாழ்வு நிறுவனம்.

52. காவல்துறையைச் சேர்ந்த, அமைச்சுப் பணியாளர் உள்ளிட்ட அனைத்து அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களின் குடும்பங்களில் நல்வாழ்வு பணிகளை தோற்றுவித்து வளர்த்து ஒருங்கிணைப்பது, தமிழ்நாடு காவலர் நல்வாழ்வு நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும். காவல்துறையைச் சேர்ந்த பணியாளர் குடும்பங்களுக்கு உபரி வருவாய்க்கு வழி வகுத்தல். காவலர்க்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் பொழுதுபோக்கு, மருத்துவம் மற்றும் கல்வி வசதிகள் செய்து கொடுத்தல் போன்ற திட்டங்கள் இவ்வமைப்பில் அடங்கும். இந்த அமைப்பு குறித்த பல்வேறு திட்டங்களின்கீழ் நூற்பு, தையல், வேலை, பாய் முடைதல், ஜமுக்காளம் நெய்தல், தீக்குச்சி செய்தல், பட்டாசு உறைகள் செய்தல், பீடி சுற்றுதல், காகித உறைகள் செய்தல், புத்தகம் பைண்டிங் செய்தல், பால் பண்ணை, கோழிப் பண்ணை கைவினைத் தொழில்கள், பனியன் தயாரித்தல் ஆகிய பல்வேறு தொழில்கள் காவலர் குடும்பங்களின் வருவாயைத் தொடர்ந்து பெருக்கி வருகின்றன.

## பிரிவு 5.

## காவலர்—பொது மக்கள்தொடர்பு.

53. இன்றைய உலகில் காவல்துறை சீராக இயங்கப் பொது மக்களுடன் ஒத்துழைப்பு இன்றியமையாதது. இதற்குக் காவல் துறையும், பொது மக்களும் அவரவர் பிரச்சினைகளை மற்றவர் புரிந்துக் கொள்ளச் செய்ய வேண்டும். காவல்துறையைப் பொருத்த மட்டில் பயிற்சி மற்றும் அன்றாட நடவடிக்கைகள்

1982 ஆம் ஆண்டில், போக்குவரத்தை முறைப்படுத்துதல். இரவுநேரத்தில் ரோந்துப் பணி, பிரமுகர்கள் வருகையின்போது பந்தோபஸ்து, திருவிழா, பொது நிகழ்ச்சிகள் ஆகிய சமயங்களில் பாதுகாப்புப் பணி மற்றும் சமூக சேவை ஆகியவற்றிற்கு ஊர்க்காவல் படை அணிகள் பயன்படுத்தப்பட்டன. வெள்ளம், புயல், தீயணைப்பு முதலியவைகளைச் சமாளிக்கத் தேவையான திறமை பெற அவர்கள் பல்வகைப்பட்ட பயிற்சி நிலையங்களில் சிறப்புப் பயிற்சி வகுப்புகளில் பயிற்சி பெற்றுள்ளனர்.

60. ஊர்க்காவல் படையினருக்குப் பல்வகைப் பயிற்சிகள் அளிக்க திருச்சிராப்பள்ளியில் பயிற்சி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. தமிழக முதலமைச்சரின் ஊர்க்காவல் படைப் பதக்கம் என்ற புதிய திட்டம் ஏற்படுத்தப்பட்டு அதன் கீழ் வீரச் செயலுக்காகவும் சிறப்பு மிக்க பணிக்காகவும் ரூபாய் 1,000 முதல் ரூ. 3,000 வரை ஒரேமொத்தத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. 1982-ல் ஊர்க்காவல் படையைச் சேர்ந்த 5 நபர்கள் மேற்கண்ட பதக்கத்தை பெற்றனர்.

அகில இந்திய ஊர்க்காவல் படையினரின் விளையாட்டுப் போட்டியை தமிழக அரசு சமீபத்தில் வெற்றிகரமாக நடத்தி முடித்தது.

61. சென்னை மாநகரக் காவல் போக்குவரத்து நெறிக் காவலர் அமைப்பு 1978 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அது முற்றிலும் தானே முன் வந்து செயல்படுவோரைக் கொண்ட அமைப்பாக உள்ளது. இது தமிழக முதல்வர் அவர்களால் தமிழக கவர்னர் அவர்கள் முன்னிலையில் 20—9—1978 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இவ்வமைப்பு ஒரு முதன்மைப் பாதுகாவலர், ஒரு துணை முதன்மைப் பாதுகாவலர், எழுபது போக்குவரத்து நெறிக் காவலர் ஆகியோரைக் கொண்டது. இவர்களுக்கு உடற்பயிற்சி, போக்குவரத்து விதிகள், போக்குவரத்தினை ஒழுங்கு படுத்துதல் ஆகியவற்றில் 10 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த அமைப்பின் முக்கிய நோக்கம் போக்குவரத்துப் பாதுகாப்பினைப் பராமரிக்க காவலருக்கு உதவுவது, பொதுமக்களுடனும் அதிகாரிகளுடனும் ஒத்துழைப்பது, விபத்தைத் தவிர்க்கவும் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும் ஒரு சரியான திட்டம் உருவாக்குவது, பாதைகளைப் பயன்படுத்துவோர்களிடையே பாதுகாப்புத் தேவையை உணர்த்துவது ஆகியவையாகும். முக்கிய பிரமுகர்கள் வருகை பெருந்திரளாக மக்கள் கூடுதல், கிரிக்கெட் விளையாட்டுப் பந்தோ



பஸ்து முதலியவற்றின்போது போக்குவரத்தை நெறிப்படுத்தும் பணியில் பாராட்டத்தக்க வகையில் இந்த அமைப்பு செயல் புரிந்துள்ளது.

பகுதி 6.

மத்திய அரசின் நிதி உதவி.

62. காவல்படையை நவீனப்படுத்தும் திட்டத்தை 1980—81 முதல் 1989—90 வரை பத்தாண்டுகளுக்கு மத்திய அரசு மீண்டும் புதுப்பித்துள்ளது. 1980—81 மற்றும் 1981—82 ஆண்டுகளுக்காக ரூ. 131.45 இலட்சங்களைக் கடன் மற்றும் மானியமாக மத்திய அரசு வழங்கி உள்ளது. இந்தத் தொகை முழுவதும் மீவுயர் மின்னலைத் செய்தித் தொடர்பு கருவிகளும் (V.H.F. Sets) இருவழிச் செய்தித் தொடர்பு கருவிகளும் (Walkie Talkie) வாங்கப் பயன்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 200 மோட்டார் சைக்கிள்களும், பெண் உதவி ஆய்வாளர்களுக்காக 50 மொபெட்களும் வாங்கப்பட்டுள்ளன. வட்டாரப் பணிமனை அமைத்தல், அதிமீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்புக் கருவிகள் (U.H.F.) அமைத்தல், தமிழ்நாடு குற்றதடய அறிவியல் ஆய்வகத்திற்கு கருவிகள் வாங்குதல் ஆகியவை இந்த ஆண்டில் நிறைவேற்றப்படும் இதர திட்டங்களாகும். மத்திய அரசின் உதவிக்கு மேல், இம்மாநில அரசும் 1981—82 வரை ரூ. 74.48 இலட்சம் செலவழித்துள்ளது.

63. இந்திய அரசின் ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துரையின் படி மூலதனச் செலவாக ரூ. 675 இலட்சமும், வருவாய் இனச் செலவாக ரூ. 443 இலட்சமும், காவல் துறை நிர்வாகச் சீர்திருத்தத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. மூலதனச் செலவுகள் காவல் துறையினருக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்காக மட்டும் பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. வருவாய் இனச் செலவுகள், பெண் காவலர்கள் சிறப்புப் பிரிவு, விரல் ரேகை பதிவு பிரிவு, காவல் துறை வானொலிப் பிரிவு ஆகியவைகளை விரிவுப்படுத்துவதற்கும் மற்றும் 630 இருவழிச் செய்தி தொடர்பு கருவிகள் வாங்கவும் பயன்படுத்தப்படுகின்றன. 1982-க்கான வருவாய் தலைப்பின் கீழ் ரூ. 202.05 இலட்சமும் மூலதனச் செலவினத்தின் கீழ் ரூ. 649.67 இலட்சமும் செலவு செய்யப்பட்டுள்ளது.

64. மேலே குறிப்பிட்டவைகளைத் தவிர இரயில்வே காவல் பிரிவுக்கும், குடியுரிமை பாதுகாப்பு சட்டத்தினை அமுல்படுத்துவதற்கும் ஆகும் முழுச் செலவில் 50 சதவீதத்தினை மத்திய அரசு மாநில அரசுக்கு திரும்ப அளித்து வருகிறது.

மூலம் இது நிறைவேற்றப்படுகிறது. காவலர்களின் பணியைப் பொது மக்கள் புரிந்து கொள்ளவும் அவர்களின் பரிவுணர்வைப் பெறவும் செய்தித்தாள்கள், தொலைக் காட்சி, திரைப்படம் ஆகியவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. காவலர்-பொது மக்கள் தொடர்பு பற்றிய தொடர் நாடகங்களின் முதல் தொகுப்பு இந்த ஆண்டில் தயாரிக்கப்பட்டது. செய்தித் திரைப்படங்கள் இரண்டு ரூ. 2.40 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. பெண் காவலர் பிரிவை விரிவாக்கியது, காவலர்—பொது மக்கள் தொடர்பை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்ட மற்றொரு முக்கியமானதொரு நடவடிக்கையாகும்.

ஒன்பதாவது ஆசிய விளையாட்டுக்களின்போது தமிழ்நாடு பெண் காவலர்கள் மட்டுமே பணி புரிவதற்காக டெல்லிக்கு வெளியிலிருந்து, அழைக்கப்பட்டனர் என்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட வேண்டும். பெண் காவலர்களைத் தவிர, இரு கூடுதல் கண்காணிப்பாளர்களும், மற்றும் அனேக காவலர்கள், வானொலி தொழில் நுட்பப் பணியாளர்களும் பாதுகாப்பு மற்றும் தொடர்புப் பணிகளுக்காக ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு அனுப்பப்பட்டனர். தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பிரிவின் அணியும் ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளின், வண்ணமயமான ஆரம்பம் மற்றும் முடிவு நிகழ்ச்சி விழாக்களில் கலந்து கொண்டது.

54. தமிழ்நாடு காவல்துறை கீழ் விவரித்துள்ளவாறு பல விளையாட்டு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டது. புது டில்லியிலுள்ள அகில இந்திய காவல்துறை விளையாட்டுக் கட்டுப்பாட்டு வாரியம் ஏற்பாடு செய்த பதினாறாவது தேசீய விளையாட்டுப் போட்டியை நடத்தும் பொறுப்பை தமிழ்நாடு காவல் துறை ஏற்றுக்கொண்டு 14—8—1982 அன்று சென்னைக்கு அருகே இதனைச் சிறப்பாக நடத்தியது. 17—9—1982 முதல் 20—9—1982 வரை டில்லியில் நடைபெற்ற இருபத்தி ஓராவது அகில இந்திய உடற்பயிற்சித் திறமைப் போட்டியில் தமிழ்நாடு காவல்துறையினரைச் சார்ந்த இரு காவலர்கள் கலந்து கொண்டனர்.

55. பாலக்காட்டில் 24—10—1982 முதல் 30—10—1982 வரை நடைபெற்ற கேரள மாநில துப்பாக்கிச் சுடும் போட்டிகளில் தமிழ்நாடு மாநிலக் காவல்துறையினர் கலந்து கொண்டு இரண்டு கோப்பைகள், மூன்று தங்கப் பதக்கங்கள், ஆறு வெள்ளி பதக்கங்கள் மற்றும் எட்டு வெண்கலப் பதக்கங்கள் ஆகியவற்றை வென்றனர். சென்னை மாநகர காவல்படையைச் சேர்ந்த பி. சி. ரஞ்சனி என்ற பெண் காவலர் மகளிருக்கான



கோப்பை உள்பட இரண்டு கோப்பைகள், இரண்டு தங்கம் மற்றும் இரண்டு வெள்ளிப்பதக்கங்களைப் பெற்றது பாராட்டுக்குரியதாகும்.

56. 3—12—1982 முதல் 6—12—1982 வரை பெங்களூரில் நடைபெற்ற முப்பத்தி இரண்டாவது அகில இந்திய காவல்துறை விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு காவல்துறை கூடைப் பந்து மற்றும் கால்பந்து போட்டிகளில் முதலிடத்தையும், ஹாக்கி கைப்பந்து, உடற்பயிற்சிப் போட்டிகளில் இரண்டாவது இடத்தையும், சடுகுடு போட்டியில் மூன்றாவது இடத்தையும் பெற்றது.

57. மேற்கு வங்காளத்திலுள்ள பாரக்பூரில் 19—12—1982 முதல் 26—12—1982 வரை நடைபெற்ற இருபத்திஆறாவது அகில இந்திய காவல்துறை பணியாளர்கள் விளையாட்டுப் போட்டிகளில் ஆறு தங்கம், ஐந்து வெள்ளி, ஏழு வெண்கலப் பதக்கங்களைத் தமிழ்நாடு காவல்துறை வென்றது.

58. காவலர்களின் பணிகளில் பொது மக்கள் ஈடுபாடு கொள்ளச் செய்வதில் அலுவல் சார்பற்ற நிறுவனங்களை பயன்படுத்துவது காவலர்-பொது மக்கள் உறவினை மேம்படுத்தும் மற்றுமொரு முறையாகும். குற்றத் தடுப்பு மற்றும் குற்றவாளிகளைக் கண்டு பிடித்தல் ஆகிய பணிகளில் பொது மக்களை ஈடுபடச் செய்வதில் பொதுத் தொண்டில் ஆர்வமுள்ளவர்கள் பங்கு பெற்றுள்ள ஒழுக்கக்கண்காணிப்புக் குழுக்கள் பயன் படுத்தப்படுகின்றன. இதுபோன்று போக்கு வரத்துக் காப்பாளர் அமைப்பு ( Traffic Warden System) மற்றும் ஊர்க்காவலர் படை ஆகியவை காவல்துறைக்கு உதவி புரிவதில் முக்கிய பங்கேற்பதோடல்லாமல் காவலர்-பொதுமக்கள் தொடர்புகளையும் மேம்படுத்துகின்றன. இது பற்றிய விவரங்கள் கீழே விவரிக்கப்படுகின்றன.

ஊர்காவல் படை.

59. இந்தத் தொண்டு நிறுவனம், காவல் துறையினருக்கு துணைப் படையாகத் திறம்படச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள 96 அணிகளில் 10,010 ஆண் மற்றும் 550 பெண் ஊர்க்காவல் படையினர் இடம் பெற்றுள்ளனர். மகளிர் ஊர்க்காவல் படை, சென்னை மாநகர், மதுரை (தெற்கு), கோயம்புத்தூர் (நகர்ப்புறம்), திருச்சிராப்பள்ளி மற்றும் கன்யாகுமரி ஆகிய இடங்களிலும் அமைந்துள்ளது. 32 அணிகள் சென்னை மாநகரில் உள்ளன. எஞ்சிய 64 அணிகள் மாவட்டங்களில் 52 மையங்களில் அமைந்துள்ளன,

[1983 ஏப்ரல் 7

பிரிவு 7.

குற்றம் மற்றும் சட்டம் ஒழுங்கு.

குற்றம்.

65. குற்றத் தடுப்பு என்பது காவலர்களின் பணிகளில் இயல் பாகவே மிக முக்கியமான ஒன்றாகும். குற்ற நிலைமையின் போக்கிற்குப் பல்வேறுபட்ட காரணங்கள் அடிப்படையாக உள் ளன. எந்த ஒரு காரணத்தையும் குறிப்பிட்டுச் சொல்லி, இதுவே குற்றங்களுக்கு முக்கிய காரணம் எனக் கூற இயலாது. குற்றத் தின் முறை, இடத்துக்கு இடம் மாறுபடுகிறது. குறிப்பிட்ட பகுதி எந்த அளவு நகர்ப்புற வளர்ச்சி பெற்றுள்ளது என்பதற் கேற்பக் குற்றங்களின் தனித் தன்மையையும் அவற்றைக் கண்டு பிடிக்கத் தேவைப்படும் விசாரணை புலனாய்வு ஆகியவற்றின் பிரத்தியேக முறையையும் நிர்ணயிக்க இயலும். இருந்த போதி லும் குற்றங்களை, சொத்தினைச் சார்ந்த குற்றமென்றும் அல்லது நபர்களைச் சார்ந்த குற்றமென்றும் பரவலாகப் பாகுபடுத்தி அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைக் குறிப் பிடலாம்.

66. 1980—82-ல் நடைபெற்றுள்ள குற்றங்களை ஆய்வு செய் ததில் குற்றங்கள் குறைந்துள்ளதும் கண்டுபிடித்த குற்றங்களின் விழுக்காடு, குறிப்பாகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்டவை அதி கரித்திருப்பதும் தெரிய வருகிறது. புள்ளி விவரம் கீழே கொடுக் கப்பட்டுள்ளது—

1980-82 ஆம் ஆண்டுகளில் சொத்து குறித்து நிகழ்ந்த குற்றங்கள் பற்றி புகார்கள், அவை கண்டுபிடிக்கப்பட்டது பற்றிய விவர அறிக்கை

| குற்றங்களின் வகைப்பாடு. | 1980 | |
|---|---|---|
| | புகார் செய்யப் பட்டவை. | கண்டு பிடிக்கப் பட்டவை. |
| (1) | (2) | (3) |
| ஆதாயத்திற்காகக் கொலை .. .. | 53 | 28 |
| கொள்ளை .. .. | 60 | 27 |
| வழிப்பறி .. .. | 371 | 136 |



1983 ஏப்ரல் 7]

| குற்றங்களின் வகைப்பாடு. | 198 | |
|---|---|---|
| | புகார் செய்யப் பட்டவை. | கண்டு பிடிக்கப் பட்டவை. |
| (1) | (2) | (3) |
| கன்னக் களவு .. .. | 9,410 | 4,676 |
| பெரிய திருட்டுகள் .. .. | 25,991 | 15,802 |
| சிறிய திருட்டுகள் .. .. | 2,061 | 1,846 |
| கால்நடைத் திருட்டுகள் .. .. | 1,241 | 950 |
| மொத்தம் .. .. | 39,087 | 23,465 |

குற்றக் கண்டுபிடிப்பு விழுக்காடு. 59 சதவீதம்.

| | | |
|---|---|---|
| ஆதாயத்திற்காக கொலை .. .. | 66 | 35 |
| கொள்ளை .. .. .. | 37 | 19 |
| வழிப்பறி .. .. .. | 266 | 165 |
| கன்னக் களவு .. .. .. | 9,075 | 5,199 |
| பெரிய திருட்டுகள் .. .. | 25,623 | 18,218 |
| சிறிய திருட்டுகள் .. .. .. | 1,806 | 1,671 |
| கால்நடைத் திருட்டுகள் .. .. | 1,156 | 1,004 |
| மொத்தம் .. .. | 38,029 | 26,311 |

[1983 ஏப்ரல் 7

குற்றக் கண்டுபிடிப்பு விழுக்காடு 69 சதவீதம்.

| குற்றங்களின் வகைப்பாடு. | 1982 | |
|---|---|---|
| | புகார் செய்யப் பட்டவை. | கண்டுப் பிடிக்கப் பட்டவை. |
| (1) | (2) | (3) |
| ஆதாயத்திற்காகக் கொலை .. .. | 52 | 24 |
| கொள்ளை .. .. .. | 38 | 16 |
| வழிப்பறி .. .. .. | 283 | 142 |
| கன்னக் களவு .. .. .. | 8,203 | 4,619 |
| பெரிய திருட்டுகள் .. .. | 23,654 | 15,744 |
| சிறிய திருட்டுகள் .. .. .. | 1,501 | 1,372 |
| கால்நடைத் திருட்டுகள் .. .. | 949 | 822 |
| மொத்தம் .. .. | 34,680 | 22,739 |

குற்றக் கண்டுபிடிப்பு விழுக்காடு ; 71.9 சதவீதம்.

67. சென்னையிலுள்ள மாநில விரல்ரேகைப் பதிவுக் கழகம், எல்லா மாவட்டங்களிலுமுள்ள ஒற்றை விரல் பதிவுப் பிரிவுகள், தமிழ்நாடு குற்றத் தடயப்பொருள் அறிவியல் ஆய்வகம், நாய்ப் படை மற்றும் காவல்துறை கணக்கீட்டுப் பொறிப் பிரிவு ஆகியவற்றை உபயோகித்து அறிவியல் முறையில் குற்றங்களைப் புலன் ஆய்வு செய்யும் முறை இவ்வாண்டிலும் தொடர்ந்து பயன் படுத்தப்பட்டுள்ளது.

68. இந்திய அரசு உள்துறை அமைச்சகத்தின் காவல்துறை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறையின் சார்பாக 1978-ல் வெளியிடப்பட்ட ''இந்தியாவில் குற்றங்கள்'' என்னும் குறிப்பில் களவாடப்பட்டு மீட்கப்பட்ட பொருட்களின் சதவிகிதம் இந்தியாவில் 1973-ல் 24.1 சதவீதத்திலிருந்து, 1974-ல் 28.3 சதவீதமாக உயர்ந்து, மறுபடியும் 27.3 சதவீதமாக 1975 ஆம் ஆண்டில் குறைந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அதே போல



1983 ஏப்ரல் 7]

களவாடப்பட்டு மீட்கப்பட்ட பொருட்களின் விகிதம் 1976-ல் 35.9 சதவீதமாகவும் 1977-ல் 25 சதவீதமாகவும் இருந்தது. 1978-ல் நாடு முழுவதற்கும் சேர்த்து, திரும்பக் கிடைக்கப்பெற்ற பொருட்கள் 26.7 சதவீதமாகும். மேற்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து நம் நாட்டில், களவாடப்பட்டு மீட்கப்பட்ட பொருட்களின் மதிப்பு 1973 முதல் 1978 வரையுள்ள கால கட்டத்தில் எப்போதும் 36 சதவீதத்திற்கு அதிகமாக இருந்ததில்லை எனத் தெரிகிறது. 1978 ஆம் ஆண்டுக்குப் பின்னால் உள்ள தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை. இருந்த போதிலும் களவாடப்பட்டு மீட்கப்பட்ட பொருட்களின் சராசரி மதிப்பு நாடு முழுவதற்கு மாக 40 சதவீதத்திற்கு அதிகமாக ஒரு போதும் சென்றதில்லை என்று எச்சரிக்கையுணர்வுடன் கூற முடியும். அப்படி இருக்க தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மீட்கப்பட்ட பொருட்களின் குறைந்த பட்ச மதிப்பு அண்மைக் காலத்தில் 1978-ல் 41.2 சதவீதமாகவும், 1982-ல் 58.85 சதவீத அளவிலும் இருந்து உள்ளது. தமிழ்நாட்டைத் தவிர இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் 50 சதவீதமாவது சொத்து வழக்குகளைக் கண்டு பிடிக்கும் பணியில் அண்மை ஆண்டுகளில் வெற்றி பெறாதிருக்கையில், தமிழ்நாட்டில் 1980-ம் ஆண்டு முதல் 60 சதவீதத்திற்கும் அதிகமாக சொத்து வழக்குகளைக் கண்டுபிடிப்பதில் வெற்றி காணப்பட்டுள்ளது.

69. குற்றப் புலனாய்வுப் பிரிவில் 825 உதவி சார்பு ஆய்வாளர்கள் பதவிகளை சார்பு ஆய்வாளர்களாகவும் 245 துணை ஆய்வாளர்கள் பதவிகளை ஆய்வாளர்களாகவும் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. இது குற்றப் புலனாய்வுப் பிரிவினை வலுப்படுத்த இவ்வாண்டில் எடுத்த ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாகும். மேற்கூறப்பட்ட பதவிகள் அனைத்தும் குற்றம் மற்றும் நீதிமன்ற வழக்குகள் விசாரணை சம்பந்தமான பணிகளில் பயன்படுத்தப்படும்.

70. காவல் துறையின் இப்பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட முக்கியமான சில வழக்குகளைப் பற்றி கீழ்க்கண்ட பத்திகளில் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

71. இராமேஸ்வரம் காவல் நிலைய எல்லைக்குள் (இராமநாத புரம் கிழக்கு மாவட்டம்) வெற்கோடு என்ற இடத்தில் 27—8—82 தேதிய குற்ற வழக்கு எண் 850/82-ல் குற்றவாளிகளான எட்வின் பர்னாண்டோ, அவருடைய மனைவி பாக்கியம் மற்றும் அவருடைய உறவினர் அந்தோணி பர்னாண்டோ என்பவர்கள் பெண் மணி ஒருவரைக் கொலை செய்து அவருடைய ரூ. 18,000 மதிப் புள்ள தங்கச் சங்கிலியை பறித்துச் சென்றனர். அனைத்துக் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு, பொருட்கள் அனைத் தும் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

[1983 ஏப்ரல் 7

79. மாதவரம் பால் பண்ணைக் காலனி காவல் நிலையத்தில் குற்ற எண். 103/82 (செங்கை கிழக்கு மாவட்டம்) வழக்கில் வெளியூரைச் சேர்ந்த முன்னாள் குற்றவாளிகள் பச்சம்மாள், பழனியாண்டி ஆகியோரும் உள்ளூர் முன்னாள் குற்றவாளி சம்பத்தும் சேர்ந்து ரூ. 12,000 மதிப்புள்ள தங்கச் சங்கிலியை 25—6—1982 அன்று ‘பூஸ்டர்’ நிலையக் காலனியில் வழிப்பறி செய்தனர். அக்குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு வழிப்பறி செய்யப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டன. குற்றவாளிகள் நீதி மன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

80. ஈரோடு நகரக் காவல் நிலையக்குற்ற எண். 1254/82 (பெரியார் மாவட்டம்) வழக்கில் கேரள மாநில கொல்லத்தைச் சேர்ந்த வர்க்கலாநத்யாரா என்ற ஊரைச் சேர்ந்த காணாமல் போயிருந்த வெளியூர் குற்றவாளியான தாதா சங்கர் என்ற தாதா, வயது 34, தகப்பனார் பெயர் முகம்மது இலியாஸ் என்பவரை ஈரோடு நகர (கிழக்கு) குற்றப்பிரிவுக் காவலர் ஆந்திர மாநிலத்தின் சித்தூர் மாவட்டத்திலுள்ள சத்தியவேட்டில் 22—1—1982 அன்று கைது செய்து சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் 1979, 1980 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் 15 வீடுகளில் புகுந்து திருடிய ரூ. 1½ லட்சம் மதிப்புள்ள தங்க நகைகளையும் பதிவு நாடாக்களையும் (C ss ttes) மீட்டனர். குற்றவாளிக்கு 15 மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

81. இராமநாதபுரம், சிறுவயல் கிராமத்தைச் சேர்ந்த பரமன் என்னும் பரமசிவம் வயது 30 (த.பெ. முத்தையப் பிள்ளை) என்னும் பழைய குற்றவாளி 17 வீடுகளில் புகுந்து திருடியதாக கோயம்புத்தூர் நகரக் காவலர்களால் கைது செய்யப்பட்டு அவரிடமிருந்து ரூ. 67,800 மதிப்புள்ள பொருட்கள் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

82. சாக்கோட்டை காவல் நிலைய குற்ற எண். 26/82 (இராமநாதபுரம் கிழக்கு மாவட்டம்) வழக்கில் உள்ளூர் கன்னக்களவுக் குற்றவாளியாகிய ஆலங்குடியைச் சேர்ந்த மைக்கேல், கண்டனூரைச் சேர்ந்த பெரியண்ணன், பள்ளத்தூரைச் சேர்ந்த ராஜாமுகமது மற்றும் இராமசாமி ஆகியோர் கண்டனூரில் 31—1—1982 அன்று திரு. நாச்சியப்பன் என்ற வழக்கறிஞர் வீட்டில் புகுந்து ரூ. 1½ இலட்சம் மதிப்புள்ள வைர தங்க நகைகள் மற்றும் வெள்ளிப் பாத்திரங்களை திருடியதற்காக உள்ளூர்க் காவலரால் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள். அவர்களிடமிருந்து அனைத்துப் பொருட்களும் மீட்கப்பட்டன. அனைவரும் நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.



1983 ஏப்ரல் 7]

83. சென்னை மாநகர் ஆர். 3 அசோக் நகர் காவல் நிலையக் குற்ற எண் 668/82 வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட உள்ளூர் பழைய குற்றவாளி ராசு என்கிற ராசாமணி (வயது 28, த./பெ. ராகவன்) 18—5—1982 அன்று அசோக் நகர் இராமகிருஷ்ணாபுரம் மூன்றாவது தெரு 14 ம் எண் வீட்டில் புகுந்து ரூ. 25,000 ரொக்கம் திருடினார். உள்ளூர் காவலர்கள் தீவிர புலன் விசாரணைக்குப் பின்னர் குற்றவாளியைக் கைது செய்து அவரிடமிருந்து ரூ. 2 லட்சம் மதிப்புள்ள பொருள்களைக் கைப்பற்றினர். குற்றவாளி 20 வீடுகளில் புகுந்து நிகழ்த்திய திருட்டுக்களுக்குப் பொறுப்பானவர். வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

84. செங்கல்பட்டு (மேற்கு) மாவட்டம் விஷ்ணு காஞ்சி காவல் நிலைய குற்ற எண் 352/82 ன் படி தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த பிரபல குற்றவாளி மணியும், உள்ளூரைச் சேர்ந்த பிரபல குற்றவாளி வெள்ளையும் 18—6—82 அன்று எண்ணைக்காரத் தெருவில் ரூ. 80,000 மதிப்புள்ள தங்க நகைகள் மற்றும் வெள்ளிப் பாத்திரங்களைத் திருடியதற்காக கைது செய்யப்பட்டு, களவுபோன பொருட்கள் மீட்கப்பட்டன. இருவரும் நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

85. சேலம் மாவட்டத்திலுள்ள இரத்ன சபாபதி நகைக் கடையில் 17—7—1982 அன்று நுழைந்து ரூ. 2·75 இலட்சம் மதிப்புள்ள தங்கம் மற்றும் வெள்ளி நகைகளைத் திருடியதற்காக ஆத்தூரைச் சேர்ந்த பிரபல உள்ளூர் கொள்ளைக் குற்றவாளி வரதராஜன் என்கிற இராசு சேலம் நகர காவல் நிலைய குற்ற எண் 1386/82 ன் படி உள்ளூர்க் காவல்ரின் தீவிர புலன் விசாரணைக்குப் பிறகு கைது செய்யப்பட்டு அவரிடமிருந்து அனைத்துப் பொருட்களும் மீட்கப்பட்டன. குற்றவாளி நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

86. வெளியூரைச் சேர்ந்த முன்னாள் குற்றவாளி கேரள மாநிலம் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த கோபால் மகன் இராஜன் (வயது 28) என்பவர் சென்னை நகர் இ-1 மைலாப்பூர் காவல் நிலையக் குற்ற எண் 1508/82-ன்படி நகர காவலராக 21—7—1982 அன்று கைது செய்யப்பட்டு அவரிடமிருந்து 22 வீடுகளில் புகுந்து திருடிய ரூபாய் 1½ இலட்சம் மதிப்புள்ள தங்க நகைகளை மீட்டனர். அவருக்கு 11 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

87. ரூ. 1·40 இலட்சம் மொத்த மதிப்புள்ள தங்க நகைகளையும் ரொக்கத்தையும் 28—7—1982க்கும் 30—7—1982—க்கும் இடையில் கிருஷ்ணகிரி, பழைய பேட்டையிலுள்ள நேதாஜி சாலை

72. சென்னை வண்ணாரப்பேட்டை எச். 1 காவல் நிலைய எல்லைக்குள் 11–10–1982 தேதிய குற்ற எண். 2008/82-ல் வேணுகோபால் என்பவரின் மனைவி, அன்றாட கூலி வேலை செய்யும் 27 வயதுள்ள ஜெயா என்பவர் 12 வயதுள்ள ஒரு சிறுமியைப் பள்ளியிலிருந்து கடத்திச் சென்று கொலை செய்து ரூ. 750 மதிப்புள்ள அவளது தங்கக்கம்மல், வெள்ளிக் கொலுசு ஆகியவற்றைத் திருடி அச்சிறுமியின் பிணத்தை ஒரு கோணியில் அடைத்து இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லும் பொழுது, ரோந்துக் காவலர் மேற்படி ஜெயா வை கைது செய்து அச்சிறுமியின் பிணத்தைக் கைப்பற்றினார். தீவிர புலனாய்வுக்குப்பின் அனைத்துப் பொருட்களும் மீட்கப்பட்டன. குற்றவாளி தண்டிக்கப் பட்டார்.

73. சென்னை நகர் சி–2 பூக்கடை காவல் நிலையத்தில் 12–11–82 தேதிய குற்ற எண். 1837/82ல் வி.எம். முதலித்தெரு 3 ம் எண்ணில் வசிக்கும் செங்கல்பட்டு மாவட்ட பொன்னேரியைச் சேர்ந்த பெருமாள் என்பவரின் மனைவி கஸ்தூரி என்ற வெள்ளியூர் குற்றவாளி ஒரு மூதாட்டியை வரது இல்லத்தில் விஷம் கலந்த பால் கொடுத்துக் கொன்று ரூ. 5,000 மதிப்புள்ள நகைகளைத் திருடிக் கொண்டார். தீவிரப் புலனாய்விற்குப் பின் உள்ளூர்க் காவலர்கள் குற்றவாளியைப் பொன்னேரியில் கைது செய்து அனைத்துச் சொத்துக்களையும் மீட்டனர். இவ்வழக்கு புலனாய்வில் உள்ளது.

74. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த கீழப்பாலூர் காவல் நிலைய 1–12–1982 தேதியிட்ட குற்ற எண். 191/82 வழக்கில் குற்றவாளிகளான வெங்கடாசலம் மற்றும் முத்துலிங்கம் என்பவர்கள் சன்னாவூரில் ஊருக்கு வெளியில் இயற்கைக் கடன் கழிக்கச் சென்றிருந்த ஒரு பெண்ணை வாயில் துணியை அடைத்து தூக்கிச் சென்று கொன்றனர். இரண்டாம் குற்றவாளி அவரைப் பிடித்துக்கொள்ள முதல் குற்றவாளி அரிவாளினால் அவளது கழுத்தை வெட்டிக் கொன்று ரூ. 17,000 பெறுமானமுள்ள தங்க தாலிக் கொடி மற்றும் பூச்சிக் கூடு ஆகிய நகைகளைத் திருடிக் கொண்டனர். பின்னர் பிணத்தை ஒரு கோணிப் பையில் அடைத்து ஏரியில் எறிந்து விட்டனர். பின்னர் குற்றவாளிகள் பிணத்தை ஏரியிலிருந்து எடுத்து தீயிட்டு எரிக்க முயன்றனர். தீவிர புலன் விசாரணைக்குப் பின் உள்ளூர்க் காவலர்கள் இரு குற்றவாளிகளையும் கைது செய்து ரூ. 17,000 மதிப்புள்ள எல்லாச் சொத்துக்களையும் மீட்டனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.



75. திருச்சிராப்பள்ளி மாவட்டம் உப்பிலியாபுரம் காவல் நிலைய குற்ற எண். 171/82 தேதி 31–12–1982 மேட்டூர் கிராமத்தில் ஆலத்துடையான்பட்டி முருகன்பிள்ளை என்பவரின் மகன் ஜெயராமன் என்ற குற்றவாளி முத்துசாமியின் மனைவி காமாட்சி அம்மாளை கழுத்தை நெறித்துப் பின் மரப் பெஞ்சு ஒன்றில் மோதிக் கொன்று ரூ. 15,000 மதிப்புள்ள அவளுடைய தங்கத் தாலிக் கொடியைத் திருடினார். தீவிர புலன் விசாரணைக்குப் பின்னர் உள்ளூர்க் காவலர், குற்றவாளியைக் கைது செய்து அனைத்துச் சொத்துக்களையும் மீட்டனர். வழக்கு புலனாய்வில் உள்ளது.

76. மணமேல்குடி காவல்நிலைய எல்லைக்குள் (புதுக்கோட்டை மாவட்டம்) உள்ள அம்மாபட்டினம் என்ற இடத்தில் 27–4–1982 தேதிய குற்ற வழக்கு எண். 52/82 ல் உள்ளூர் குற்றவாளிகளான பழனியாண்டி மகன் சின்னத்தம்பி, இராமன், இலட்சுமணன், ஆறுமுகம் மற்றும் சப்பாணி மகன் சின்னத்தம்பி ஆகியோர் ஒரு வீட்டினுள் புகுந்து வீட்டிலிருந்த நபர்களைக் காயப்படுத்திவிட்டு அவர்களிடமிருந்து ரூ. 11,660 மதிப்புள்ள, பொன் நகைகள் முதலியவற்றைப் பறித்துச் சென்றனர். அனைத்துக் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு எல்லாப் பொருட்களும் மீட்கப்பட்டன. வழக்கு விசாரணையில் உள்ளது.

77. தர்மபுரி மாவட்டம் மாரண்டஹள்ளி காவல் நிலைய எல்லைக்குள் (வழக்கு எண். 159/82 ல்) அமானிமல்லாபுரம், கொல்லாங்கோட்டை என்ற இடத்தில் 31–8–1982 அன்று ஏற்கனவே தண்டனையடைந்த உள்ளூர்க் குற்றவாளி முனிராஜ் மற்றும் தண்ணிவண்டி என்ற முனியப்பா மற்றும் 4 நபர்களும் சேர்ந்து ரூ. 13,000 பெறுமான பொன் நகைகள், பணம் முதலியவற்றை ஒரு தனித்துள்ள குடியிருப்பு வீட்டில் கொள்ளை அடித்தனர். குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு அனைத்துப் பொருட்களும் மீட்கப்பட்டன. அவர்கள் மீது வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

78. சென்னை நகர் நுங்கம்பாக்கம் காவல் நிலையக் குற்ற எண். 327/82 வழக்கில் 18–3–1982 இரவு சுமார் 8 மணியளவில் வள்ளுவர் கோட்டத்தில், தேனாம்பேட்டையைச் சேர்ந்த அலெக்சாண்டரின் மகன் யேசுதாஸ் வழிப்பறி செய்து கைக்கடியாரத்தைப் பறித்துச் சென்றார். சென்னை நகரகாவல் துறையினர் தீவிர புலனாய்வுக்குப் பின் குற்றவாளியை கைது செய்து அவரிடமிருந்து வன்முறையில் பறித்தல், ஏமாற்றுதல் ஆகிய 37 நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை மீட்டனர்.

யில் திருடியதாக உள்ளூரைச் சேர்ந்த பழைய குற்றவாளி அசானி என்ற ஹசாணி (த./பெ. பாஷா சாகிப்) பாஸ்தாகுடி அரிசிக்கேர கர்நாடக மாநிலம்) என்பவரை கிருஷ்ணகிரி காவல் நிலைய குற்ற எண் 526/82 (தர்மபுரி மாவட்டம்) படி கைது செய்யப்பட்டு களவு செய்யப்பட்ட பொருட்கள் அவரிடமிருந்து மீட்கப்பட்டன. அவருக்கு நான்கு வருடக்கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

88. 31–10–1982 அன்று புல்கான் குல்பி அல் போன்ஸ் தாஸ் என்கிற ராமு (த./பெ. ஆறுமுகம், பழைய அரவன்காடு, கூனூர் காவல் நிலையம் உதகை) என்பவரை செங்கற்பட்டு (கிழக்கு) மாவட்ட துணை பகுதி அலுவலகக் குற்றப்பிரிவினர் கைது செய்து அவரிடமிருந்து தாம்பரம், பழவந்தாங்கல். ஆதம்பாக்கம், வேளச்சேரி, காவல் நிலையங்களின் எல்லைக்குட்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்ட வானொலிப்பெட்டி, தங்க நகைகள், கைக்கடிகாரங்கள், முதலானவை ரூபாய் 2½ லட்சம் மதிப்புள்ள பொருட்களை மீட்டனர். அவர் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

89. காஞ்சி தாலுக்கா காவல் நிலையக் குற்ற வழக்கு எண் 21/81(செங்கல்பட்டு,மேற்கு மாவட்டம்)-ன்படி உதவி மருத்துவ அதிகாரியின் வீட்டுச் சுவர் ஏறிக்குதித்து அவரது இல்லத்தில் புகுந்து ரூ.30,000 மதிப்புள்ள தங்க நகைகள் மற்றும் ரொக்கப் பணத்தை கேரள மாநிலம், கொல்லம் மாவட்டத்தைச் சேர்ந்த தாமோதரன் கேசவநாயர் என்ற பெயர்கள் உள்ள வெளியூர்க் கொள்ளைக் குற்றவாளி கோபிநாத் என்பவர் திருடினார். குற்றம் நிகழ்ந்த இடத்தில் கிடைத்த கைவிரல் ரேகைப் பதிவுகள் குற்றவாளியின் கைவிரல் ரேகைப் பதிவுடன் ஒத்திருந்தன. 24–1–1982 அன்று குற்றவாளி கைது செய்யப்பட்டு திருடப்பட்ட பொருள்கள் தமிழ்நாடு, ஆந்திர மாநிலம் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களிலிருந்து மீட்கப்பட்டன. குற்றவாளிக்கு 9 மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

90. எப். 2 சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலைய குற்ற எண் 348/82 (சென்னை நகரம்) வழக்கில் ரூபாய் ஒரு லட்சம் மதிப்புள்ள தங்க நகைகளை 4—2—1982 அன்று வீடு புகுந்து திருடியதாக தேவீசந்த் (வயது 26, த/பெ. பாலுசந்த், சிந்தாதிரிப்பேட்டை) என்பவர் புலன் விசாரணையின் போது நகரக் காவலரால் கைது செய்யப்பட்டார். திருடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டன. குற்றவாளி நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.





91. திருச்சி இரயில்வே காவல் நிலைய குற்ற எண். 266/82 வழக்கின்படி 5—3—1982 அன்று வைகை துரித இரயில் வண்டியில் பயணம் செய்த பிரயாணி ஒருவரின் ரூ. 2.22 இலட்சம் அடங்கிய பையொன்றை அவர் இருக்கையில் இல்லாத நேரத்தில் திருச்சியைச் சேர்ந்த நாகரத்தினம் (த/பெ. தங்கசாமி, மதுரை) என்பவர் திருடினார். இது பற்றிய புலன் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது இரயில்வே காவலர் மேற்கண்ட குற்றவாளியைக் கைது செய்து, திருடப்பட்ட மொத்த தொகையையும் மீட்டனர். வழக்கின் முடிவில் குற்றவாளிக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

92. ரூபாய் ஒரு லட்சம் மதிப்புள்ள 709 கிராம் தங்க நகைகளை 17—3—1982-க்கும் 8—4—1982-க்கும் இடையில் வேலூர் அலுவலர் இல்லத் தெருவில் உள்ள தனலட்சுமி வங்கியில் சிலர் திருடியதாக வட ஆற்காடு மாவட்டம் (வேலூர் தெற்கு) காவல் நிலைய குற்ற எண். 189/82-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஜெயக்குமார் என்ற அவ்வங்கியின் முன்னாள் அட்டண்டர் அவரது சகோதரர் சிவராமன், திருநாவுக்கரசு மற்றும் கிருஷ்ணன் என்ற வேலூரைச் சேர்ந்த லாரி அதிபர் ஆகியோரைப் புலன் விசாரணைக்குப் பின் உள்ளூர்க் காவலர் கைது செய்தனர். அவர்களுடைய ஒப்புதல் வாக்குமூலத்தின்படி கிட்டத்தட்ட திருடப்பட்ட எல்லா பொருட்களையும் உள்ளூர் காவலர் மீட்டனர். வழக்கு மேலும் புலன் விசாரணையிலுள்ளது.

93. ரூபாய் 60,000 மதிப்புள்ள தங்க நகைகளை 14—8–1982 அன்று பெரிய காட்டுப்பாக்கனூர் கிராமத்தில் வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஏழுமலை என்பவர் திருடினார். இதுசம்பந்தமாக திருக்கழுக்குன்றம் காவல் நிலைய குற்ற எண் 169/82 (செங்கல்பட்டு மேற்கு மாவட்டம்) வழக்கில் தீவிர புலன் விசாரணையின் போது உள்ளூர் காவலர் குற்றவாளியைக் கைது செய்து, திருடப்பட்ட அனைத்துப் பொருட்களையும் மீட்டனர். வழக்கில் குற்றவாளி தண்டிக்கப்பட்டார்.

94. திருச்சி மாவட்ட கண்டோன்மெண்ட் காவல் நிலையத்தில் பதிவான குற்ற எண் 1920/82-ல் 15—11—1982 அன்று கவிதா ஓட்டலுக்கு முன் ரூ. 60,000 மதிப்புள்ள தங்க நகைகளை ராம்ஜி நகரைச் சேர்ந்த சேகரும் அவருடைய மூன்று சகாக்களும் களவாடினர். தீவிர புலன் விசாரணைக்குப் பிறகு உள்ளூர்க் காவலர்கள், குற்றவாளிகள் அனைவரையும் கைது செய்து களவாடப்பட்ட சொத்துக்கள் யாவற்றையும் மீட்டனர். குற்றவாளிகள் நீதிமன்ற விசாரணையில் உள்ளனர்.

[1983 ஏப்ரல் 7

95. சென்னை நகர ஜி-1 வேப்பேரி காவல் நிலையத்தில் பதிவான குற்ற எண். 576/82-ல் 1981 மற்றும் 1982 ஆகிய ஆண்டுகளில் 9 அம்பாசிடர் கார்களையும் ஒரு ஸ்கூட்டரையும் திருடிய வெளியூரைச் சேர்ந்த மோட்டார் வாகனத் திருடர்கள் மணி, தம்புசாமி, ஆசிர்கோவில், பாலகிருஷ்ணன், நடராஜன் மற்றும் சேகர் ஆகியோரை 7—4—1982 அன்று நகரக் காவல் துறையினர் கைது செய்தனர். இதில் இருவருக்கு ஒன்பது மாதக் கடுஞ்சிறை வாச தண்டனை கொடுக்கப்பட்டது மற்றவர்கள் நீதி மன்ற விசாரணையில் உள்ளனர்.

96. சென்னை ஜே.1 சைதாப்பேட்டை காவல் நிலைய குற்ற எண். 724/82 தொடர்பாக 31—5—1982 அன்று நகர காவல் துறையினர் தகவலின் மீது திருநெல்வேலியைச் சேர்ந்த சந்திரமோகன், பெங்களூரைச் சேர்ந்த கிருஷ்ணன் எனப்படும் சாய்பாபா மற்றும் ஆந்திர பிரதேசம் குண்டூரைச் சேர்ந்த ராஜா ஆகியோரைக் கைது செய்தனர். இவர்களிடமிருந்து ரு. 5 லட்சம் மதிப்புள்ள 6 அம்பாசிடர் கார்களும் ஒரு பியட் காரும் மற்றும் ஒரு எஸ்டி மோட்டார் சைக்கிளும் அவர்களின் ஒப்புதல் வாக்கு மூலத்தின்படி கைப்பற்றப்பட்டன. மேற்சொல்லப்பட்ட ஆட்டோ திருட்டுக்கள் பெங்களூர் நகரத்தில் நடைபெற்றவை. இவ்வழக்குகள் விசாரணை அதிகார வரம்பின் அடிப்படையில் பெங்களூர் நகரத்திற்கு மேல் நடவடிக்கைக்காக மாற்றப்பட்டன.

97. சேலம் மாவட்ட, சேலம் நகர காவல் நிலையக் குற்ற எண் 689/82 தொடர்பாக 29—4—1982 அன்று சேலத்திலுள்ள பாரத வங்கிக்கு முன் புகார் கொடுத்தவரின் கவனத்தை திசை திருப்புவதற்காக குற்றவாளி அவரை நோக்கி ஒரு ரூபாய் நோட்டுக்கள் தரையில் சிதறியுள்ளன என்று சுட்டிக்காட்டினார். புகார் செய்தவர் ஒரு ரூபாய் தாள்களைக் குனிந்து எடுக்க முற்பட்டபோது குற்றவாளி அவரிடமிருந்து ரூ. 50,000 மதிப்புள்ள கரன்சி நோட்டுக்கள் கொண்ட ரெக்ஸின் பையைப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டார். புலன் விசாரணையின் போது இம்மாதிரியான குற்றங்களை திருச்சியைச் சேர்ந்த ராம்ஜிநகர் குற்றவாளிகள் .செய்திருக்க வேண்டும் என்று உள்ளூர் காவல் துறையினர் முடிவுக்கு வந்தனர். அதன் பிறகு திருச்சி மாவட்டக் காவல் துறையினர் உடனடியாக எச்சரிக்கை செய்யப்பட்டனர். காலதாமதமின்றி எடுக்கப்பட்ட நடவடிக்கையின் பயனாக திருச்சி ராம்ஜி நகரைச் சேர்ந்த கணபதியின் மகன் துரைசாமி கைது செய்யப்பட்டு அவரிடமிருந்து ரூ. 30,000 ரொக்கம் மீட்கப்பட்டது. இதன் தொடர்பாக வழக்கு நீதி மன்ற விசாரணையில் உள்ளது.



1983 ஏப்ரல் 7]

98. சென்னை ஜே. 5 சாஸ்திரி நகர் காவல் நிலையக் குற்ற எண். 56/82 தொடர்பாக 17—7—1982 அன்று நகரக் காவல் துறையினர் 28 வயது நிறைந்த செங்கை மாவட்டம் கந்தன் சாவடி, நேரு தெருவில் வசிக்கும் ராதாகிருஷ்ணன் மகன் பாபு என்னும் கேடி கண்ணன்பாபுவைக் கைது செய்து அவரிடமிருந்து ரூ. 50,000 மதிப்புள்ள சொத்துக்களை மீட்டனர். அவர் அடையாறு, சாஸ்திரி நகர், தேனாம்பேட்டை மயிலை, மற்றும் அசோக்நகர் ஆகிய பகுதிகளில் ஸ்கூட்டரிலோ அல்லது மோட்டார் வண்டியிலோ சென்று வழிப்பறி செய்ததாக 9 வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ளார். 1982ஆம் ஆண்டு தமிழ் நாடு சாராயம் காய்ச்சுவோரின் பயங்கர நடவடிக்கை, போதை மருந்துகள் குண்டர்கள், விபசாரக்குற்றம் மற்றும் குடிசை நிலம் கைப்பற்றுவோர் தடைச் சட்டத்தின்கீழ் அவர் காவலில் வைக்கப்பட்டார்.

99. ஊத்தங்கரை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட எலச்சூரைச் சேர்ந்த பெரிய ஜோடயன் மகன் கொரவேடி என்ற குரவன் தலைமையில் உள்ள ஒரு குறவர்கள் கூட்டம் அவனுடைய ஒன்பது கூட்டாளிகளுடன் செய்த செயல்கள் இந்த வருடத்தில் கவனத்துக்கு வந்தன. அவர்களது நடவடிக்கைகள் மூன்று மாவட்டங்களில் பரவியிருந்தன. தர்மபுரி காவல் நிலையத்தாரால் தீவிர புலனாய்வு செய்யப்பட்டுக் குற்றவாளிகள் அனைவரும் கைது செய்யப்பட்டு, அவர்களால் சேலம், தர்மபுரி மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் கொள்ளையடிக்கப்பட்ட, 30 வழக்குகளில் சம்பந்தப்பட்ட அனைத்துப் பொருட்களும் மீட்கப்பட்டன. இது சம்மந்தமாக தர்மபுரி மாவட்டம் பர்கூர் காவல் நிலையத்தில் குற்ற எண். 129/82-ல் ஐ.பி.சி.பிரிவு 120-பி மற்றும் 401-ன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு நீதி விசாரணையில் உள்ளது.

100. கண்டமனூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த நந்தி மாயாண்டி மகன் பதிவு செய்யப்பட்ட குற்றவாளி அய்யாவு என்பவர் தன் கூட்டாளிகளுடன் சேர்ந்து மதுரை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் குற்றங்கள் புரிந்துள்ளார். தீவிர புலன் விசாரணைக்குப்பின் மதுரை வடக்கு மாவட்ட காவல் நிலையத்தாரால் அனைத்துக் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு 10 கொள்ளைகளில் சம்பந்தப்பட்ட ரூ. 81,120 மதிப்புள்ள பொருட்கள் மீட்கப்பட்டன. கொள்ளைக்கூட்ட உறுப்பினரனைவரும் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்கப்பட்டு வெவ்வேறு கால அளவில் சிறைத்தண்டனை வழங்கப்பட்டனர்.

[1983 ஏப்ரல் 7

101. செங்கல்பட்டு கிழக்கு காவல் துறையினர் பறங்கிமலை காவல் நிலையக் குற்ற எண் 503/82-ல் ஒரு கொள்ளைக் கூட்ட வழக்கு பதிவு செய்து மணலியைச் சேர்ந்த பீட்டர், கேரளத்தைச் சேர்ந்த வேணுகோபால், மதுரையைச் சேர்ந்த மணி என்ற செல்லையா, மணலியைச் சேர்ந்த செல்வன் ஆகியோரைக் கைது செய்தனர். இவர்களிடமிருந்து தாம்பரம், சிட்லபாக்கம், பழவந்தாங்கல் மற்றும் ராஜமங்கலம் காவல் நிலையங்கள் சம்பந்தபட்ட ரூ. 1½ இலட்சம் பெறுமானமுள்ள தங்கநகைகள், வெள்ளிப் பாண்டங்கள் முதலியவை கைப்பற்றப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

102. ஓட்டேரியைச் சேர்ந்த பழைய கைதி நாராயணன் என்ற ராஜநாராயணன் மற்றும் 9 நபர்கள் கொண்ட கூட்டம் கே. 1 செம்பியம் காவல் நிலையக் குற்ற எண் 2363/82 (சென்னை மாநகரம்)-ன் சம்பந்தமாகப் பிடிபட்டனர். அவர்களின் ஒப்புதல் வாக்கு மூலப்படி சென்னை நகரின் எல்லாப் பகுதிகளிலும் கொள்ளையடிக்கப்பட்ட மூன்று லட்ச ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

103. தஞ்சை கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மருதூர் தெற்கில் உள்ள சிதம்பரேஸ்வரர் கோயிலில் 2—1—1982 அன்று மருதூரைச் சேர்ந்த சீனிவாசன், கோவிந்தராஜ், நாராயணசாமி ஆகியோர் இரண்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள பஞ்சலோக நடராஜர் சிலையைத் திருடினர். இவர்கள் கைது செய்யப்பட்டு வாய்மேடு காவல் நிலையக் குற்ற எண் 1/82-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

104. கேரள மாநிலத்தைச் சேர்ந்த கண்ணனூர் மாவட்டத்தைச் சேர்ந்த வெளியூர் பழைய கைதியான பாலன் என்கிற பாலகிருஷ்ணன் சென்னை நகரம், சூளை அவதானம் பாப்பையர் சாலையில் 9—1—1982 அன்று திருடிய மொத்தம் ரூ. 50,000 மதிப்புள்ள ஒரு அம்மன் சிலையையும் தங்க நகைகளையும் கைப்பற்றி ஜீ-1 வேப்பேரி காவல் நிலையக் குற்ற எண் 316/82-ல் பதிவு செய்து வழக்குத் தொடர்ந்ததில் குற்றவாளிக்கு 3 வருடக் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.



1983 ஏப்ரல் 7]

105. தஞ்சை கிழக்கு மாவட்டம் நாகப்பட்டினத்தில் உள்ள நீலாயதாட்சியம்மன் கோயிலில் உள்ளூர்ப் பழைய கைதிகள் கணேசன், சௌந்தர ராஜன், மதிவாணன் மற்றும் தேவதாஸ் ஆகியோரால் 25—3—1982 அன்று கண்ணன், கண்ணப்ப நாயனார், வேணுகோபால் மற்றும் அதிகார நந்தி அம்மன் ஆகிய ரூ. 1 லட்சம் பெறுமானமுள்ள நான்கு சிலைகள் களவாடப்பட்டன. நாகப்பட்டினம் காவல் நிலைய குற்ற எண் 99/82-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். வழக்கு நீதி மன்றத்தில் விசாரைணயில் உள்ளது.

106. சேலம் மாவட்டம் வேப்பலைப் பட்டியில் உள்ள அமிர்தலிங்கேச்வரர் கோயிலில் 25—5—1982 அன்று பழைய கைதிகள் மணக்காடு ராஜேந்திரன் மற்றும் குருவேல்காடு இராசு ஆகியோர் ரூ. 2 லட்சம் பெறுமானமுள்ள 5 பஞ்சலோக சிலைகளைக் களவாடினர். வாழப்பாடி காவல் நிலையத்தாரால் சேலம் மாவட்டம் குற்ற எண் 114/82-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. உள்ளூர் காவலர் தங்களது தீவிர புலன் விசாரணையின்போது குற்றவாளிகளைக் கைது செய்து பொருட்களையும் மீட்டனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

107. சேலம் மாவட்டம் கல்ராயப்பட்டியில் 25—5—1982 அன்று ஸ்ரீசன்னியாசி வரதராஜசுவாமி சன்னதியில் பழைய கைதி வளாரிப்பாளையம் அங்கமுத்து, சடையன், மற்றும் அகிரிக்காடு நல்லதம்பி என்கிற ஜெயபால் ஆகியோர் பூட்டை உடைத்து ரூ. 3 லட்சம் பெறுமானமுள்ள ஐந்து பஞ்சலோகச் சிலைகளைக் களவாடிச் சென்றுவிட்டனர். ஏத்தாப்பூர் காவல் நிலையத்தில் சேலம் மாவட் டம் குற்ற எண் 54/82-ல் வழக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளது. தங்களது தீவிர புலன் விசாரணையின் போது உள்ளூர் காவலர் குற்றவாளிகளைக் கைது செய்து பொருட்கள் எல்லாவற்றையும் மீட்டனர். விசாரணையின் போது இதே குற்றவாளிகள் வளாரிப்பாளையும் திருட்டு வழக்கிலும் சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்தது. உள்ளூர்க் காவலர்கள் அந்த வழக்கில் சம்பந்தப்பட்ட ரூ. 30,000. பெறுமானமுள்ள ஒரு பஞ்சலோகச் சிலையைக் கைப்பற்றினர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

சட்டம் மற்றும் ஒழுங்கு :

108. கடந்த ஓராண்டு காலத்தில், தமிழ்நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமை அநேகமாக கட்டுக்கடங்கி, அமைதியாக இருந்தது. காவல் துறையினரால் உடனடி

நடவடிக்கை எடுக்கப்பட்ட முக்கியமான சட்ட-ஒழுங்கு சம்மந்தப்பட்ட நிகழ்ச்சிகள் கீழ் வரும் பத்திகளில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன :

109. ஆய்வு ஆண்டில் நாடாளுமன்றத்தின் மக்கள் சபைக்குப் பெரியகுளம் தொகுதியிலும், சட்டமன்றத்திற்கு திருச்செந்தூர் தொகுதியிலும் ஆக இரண்டு இடைத் தேர்தல்கள் நடைபெற்றன. தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதின் பயனாக இடைத் தேர்தல்கள் அமைதியாக நடந்து முடிந்தன.

110. தமிழ்நாடு பொதுவாக சாதி அடிப்படையில், கலவரங்களின்றி பெரும்பாலும் அமைதியாக உள்ளது. இருப்பினும் ஒரு சில இடங்களில் சாதிக் கலவரங்கள் நிகழ்ந்தது பற்றிய அறிக்கைகள் வந்துள்ளன. உள்ளூர் விவகாரங்களே, இந்தக் கலவரங்களனைத்துக்கும் காரணம். காவல் துறையினரால், தக்க தருணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், உடனடியாக நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்குப் பெரிதும் உதவின. கீழ்க்கண்ட சம்பவங்கள் குறிப்பிடத் தக்கவை.

111. கன்னியாகுமரி மாவட்டத்தில், திருவிழா கொண்டாடுவதில் ஏற்பட்ட தகராறுகளினால் கலவரங்கள் நிகழ்ந்தன. 1982-ஆம் ஆண்டு, மார்ச் மாதத்தில், இந்துக்களுக்கும், கிருத்துவர்களுக்கும் மோதல்கள் ஏற்பட்டன. காவலர்கள், இரண்டு முறை துப்பாக்கிச் சூடு நிகழ்த்த வேண்டியிருந்தது. மேற்படி சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக, '' விசாரணைக் கமிஷன்கள் சட்டப்படி, ஒரு '' விசாரணைக் கமிஷன் '' அரசினால், நியமனம் செய்யப்பட்டு உள்ளது. விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வட ஆற்காடு மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலும், மேற்படி சம்பவங்களின் எதிரொலி இருந்தது. இவ்விரு மாவட்டங்களிலும், காவல் துறையினர், தக்க உடனடி நடவடிக்கை எடுத்தனர்.

112. செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டத்தில் உள்ள அமுதூர்மேடு என்னுமிடத்தில், ஒரு இந்து நபருக்குச் சொந்தமான கிணற்றில், 21-3-1982 அன்று சில ஆதி திராவிடச் சிறுவர்கள் குளித்தனர். அவர்களை உள்ளூரைச் சேர்ந்த சில இந்துக்கள் திட்டினார்கள். இதனையொட்டி இரு தரப்பினருக்கிடையே கை கலப்பு ஏற்பட்டது. 22-3-82 அன்று, தண்டரை, அமுதூர்மேடு மற்றும் கருணாகரச்சேரியைச் சேர்ந்த இந்துக்கள், தண்டரை ஆதி திராவிடர் குடியிருப்புக்குச் சென்று அங்குள்ளவர்களைத் தாக்கி,



அவர்களது வீடுகளையும், உடைமைகளையும் சேதப்படுத்தியதோடு, ஒரு வீட்டிற்குத் தீவைத்தனர். மீண்டும் 23-3-82 அன்று சில அடையாளம் தெரியாத நபர்களால் ஒரு ஆதி திராவிடர் தாக்கப்பட்டார். தண்டரையைச் சேர்ந்த ஆதி திராவிடர்கள் அமுதூர்மேடு மற்றும் வெங்கடாபுரம் கிராமங்களிலுள்ள இந்துக்களைத் தாக்குவதற்குப் புறப்பட்டனர். ஆனால் காவல் துறையினர் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். ஆதி திராவிடர்களைச் சேர்ந்த மற்றொரு பிரிவினர், தண்டரை இந்துக்களைத்தாக்கி, அவர்களுடைய 13 குடிசைகளைத் தீக்கிரையாக்கினர். காவல் துறையினர் தலையீட்டினால் மீண்டும் சுமுக நிலை ஏற்படுத்தப்பட்டது.

113. 4-4-1982 அன்று, இராமநாதபுரம் (கிழக்கு) மாவட்டத்தில் உள்ள கூரியூர் என்ற ஊரில், ஆதி திராவிடர்களுக்கும், அவர்களில் மதம் மாறிய சில முஸ்லீம்களுக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு, குழப்பத்தை உண்டாக்கியது. காவல்துறையினர் உடன் நடவடிக்கை எடுத்து, அமைதியை நிலை நாட்டினர்

114. 29-5-1982 அன்று, வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த, மின்னல் கிராமத்தில், முன் பகைமை காரணமாக, ஓர் ஆதி திராவிடரை, 6 இந்துக்கள் அடித்துத் தீயிட்டுக் கொளுத்திக் கொன்றனர். காவல் துறையினர், அவ்விடத்திற்கு விரைந்து சென்று, நிலைமையைக் கட்டுப்படுத்தினர்.

115. 13-6-1982 அன்று, இந்துப்பெண் ஒருவருக்கு ஏற்பட்ட சைக்கிள் விபத்தினால் கருத்து வேற்றுமை ஏற்பட்டு, அதன் காரணமாக ஆதி திராவிடர்களுக்கும், இந்துக்களுக்கும், கை கலப்பு ஏற்பட்டது. 14-6-1982 அன்று, இரு தரப்பினரிடையே மோதலைத் தடுக்கவும், நிலைமையைக் கட்டுப்படுத்தவும் காவல் துறையினர் '' கண்ணீர் புகை '' குண்டுகளை வெடிக்க வேண்டியிருந்தது.

116. தமிழ் நாட்டின் தெற்கு மாவட்டங்களான மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில், சில ஆதி திராவிடர்கள் முஸ்லீம்களாக மதம் மாறியதை அடுத்து ஒரு பக்கம் இந்துக்களுக்கும், மற்றொரு பக்கம் ஆதி திராவிடர்கள் மற்றும் முஸ்லீம்களுக்கும் கசப்பும், வெறுப்புணர்ச்சியும் ஏற்பட்டன. இந்த மத மாற்றத்தினால் ஏற்பட்ட பதட்ட நிலைமை, இந்துக்களின் நடவடிக்கைகளை எதிர்ப்பதற்க்க, ஆதி திராவிடர்களும், முஸ்லீம்களும் ''கூட்டாக'' ''சமத்துவ சகோதரத்துவ சங்கம் '' என்ற அமைப்பை ஏற்படுத்தியதால் மேலும் சீர் குலைந்தது. ஆதி திராவிடர்கள், தேவர் வகுப்பினருக்கு எதிராக எழுப்பிய முழக்கங்களாலும், அதன் எதிரொலியாக தேவர் வகுப்பினர் ஆதி திராவிடர்களைத் தாக்கியதாலும்,

திருநெல்வேலி மாவட்டத்தில், புளியங்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் கலவரம் ஏற்பட்டு 7 ஆதி திராவிடர்களும், ஒரு முஸ்லீமும் கொல்லப்பட்டனர். போராட்ட வெறியிலிருந்த இவ்விரு தரப்பினருக்கும் இடையே அடுத்தடுத்துத் தாக்குதல்களும் எதிர்த் தாக்குதல்களும் மூண்டன. காவல் துறையினரால் தக்க தருணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நிலைமையைக் கட்டுப்படுத்த உதவியது.

117. ஓர் ஆதி திராவிடப் பெண்ணைக் கேலி செய்ததாகக் கூறப்பட்டதையடுத்து 1—7—1982 அன்று திண்டிவனத்தில் ஆதி திராவிடர்களுக்கும், இந்துக்களுக்கும் இடையே கலவரமும், தீ வைப்பும் ஏற்பட்டது. ஒரு கூட்டம், தீயணைப்புப் படையினரைத் தீயணைக்க விடாமல் தடுத்தது. காவல் துறையினர் தலையிட்ட பொழுது, கூட்டம் அவர்களை நோக்கிக் கல்லெறிந்ததால், 3 காவலர்கள் காயமுற்றனர். நிலைமை ஆபத்தானதால் காவலர்கள் தடியடியில் இறங்கினர். பின்னர், தற்காப்புக்காகத் துப்பாக்கிச் சூடு நிகழ்த்த வேண்டியிருந்தது. இந்தத் துப்பாக்கி சூட்டினால் ஒரு இந்து உயிர் இழந்தார். தென் ஆர்க்காடு மாவட்ட வருவாய்த்துறை அலுவலரது விசாரணை அறிக்கை கிடைக்கப் பெற்று, அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

118. ஓர் ஆதி திராவிடர் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்டதையும் 5—7—1982, 6—7—1982 நாட்களில் ஆதி திராவிடர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களையும் அடுத்து, 7—7—1982 அன்று, இராமநாதபுரம் (மேற்கு) மாவட்டத்தைச் சேர்ந்த செய் தூர் என்ற ஊரில் ராயப்பன் என்பவர் தலைமையில் ஆதி திராவிடர்கள் தேவர்களைத் தாக்கினர். இந்தத் தாக்குதலில் அம்மையப்பத் தேவர் என்பவர், காயத்திற்கு உள்ளாகி அதனால் உயிரிழந்தார். வெகுண்டு எழுந்த தேவர் வகுப்பினர் கூட்டம் ஒன்று சில ஆதி திராவிடர்களைத் தாக்கியது. இதன் விளைவாக ஜெயக் கனி என்பவர் உயிரிழந்தார். ஒரு சில ஆதி திராவிடர்கள் காயமுற்றனர்.

119. செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டத்தில், பெரிய கோலடி இந்துக்களுக்கும், சின்னக் கோலடி ஆதி திராவிடர்களுக்கும், நிலத் தகராறு காரணமாகக் காழ்ப்பு உணர்வு இருந்தது. 1—10—1982 அன்று சின்னக் கோலடியிலிருந்து சுமார் 100 ஆதி திராவிடர்கள் பெரிய கோலடிக்குச் சென்று, இந்துக்களைத் தாக்கி, அவர்களது வீடுகளை நாசமாக்கினர். இந்துக்கள் திருப்பித் தாக்கினர். இச் சம்பவத்தில் 4 இந்துக்களும், 4 ஆதி திராவிடர்களும் காயமுற்றனர். காவலர் தலையிட்டு அமைதியை நிலை நாட்டினர். இந்நிகழ்ச்சியில், 5 காவலர்கள் காயமுற்றனர். காயமுற்ற 4 ஆதி திராவிடர்களில் இருவர், மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும்பொழுது உயிரிழந்தனர்.





120. 20—12—1982 அன்று, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், புத்தநத்தம் என்னுமிடத்தில், நீண்ட நாட்களாகவே முஸ்லீம் களுக்கும், இந்துக்களுக்கும் இடையே இருந்துவந்த பகைமை, சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சினையாக உருவெடுத்தது. காவல் துறையினர் விரைந்து சென்று, இரு தரப்பினரையும் அமைதிப் படுத்தினர். இது சம்பந்தமாக ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிலர் காயமுற்றனர். கல்லடிக்கு உள்ளானதாகக் கூறப்பட்ட சின்ன கவுண்டர் என்பவர் காயத்தின் விளைவாக உயிர் இழந்தார்.

121. 15—11—1982 அன்று திருப்பனந்தாள் என்ற ஊரில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் நடந்து கொண்ட இரு ஆதி திராவிடர்களை படையாச்சி வகுப்பைச் சேர்ந்த தனியார் பேருந்து நடத்துனர்கள் இருவர் கண்டித்ததை யடுத்து இரு ஆதி திராவிடர்களும் பேருந்து நடத்துனர்களைத் தாக்கினர். இதற்கிடையே, ஆதி திராவிடர்களும், படையாச்சி வகுப்பினரும், தத்தம் ஆதரவாளர்களைச் சேர்த்துக் கொண்டு ஒருவர் மீது ஒருவர் கல் வீசினர். தகவலறிந்ததும் கூட்டத்தைக் கலைக்கக் காவல் படை தளத்துக்கு விரைந்தது. அதற்குள் ஆதி திராவிடர்கள் இராசேந்திரன் என்பவரை அரிவாளால் தாக்கி அவருக்குப் பலத்த காயம் ஏற்படுத்தினர். நிலைமை கட்டுக் கடங்காதபோது, காவல் துறையினர் தலையிட்டு வானை நோக் இச் சுட்டவுடன் கூட்டம் கலைந்தது. ஆனால் இரு தரப்பினரும் வீடுகளையும், கடைகளையும் தாக்குவதில் ஈடுபட்டனர். காய முற்ற இராசேந்திரனை மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்ற பின் அங்கு அவர் இறந்துவிட்டார். காவல் துறையினர் வழக்கு கள் பதிவு செய்தனர். 35 பேர் கைது செய்யப்பட்டனர். 4 பேர் மயிலாடுதுறை நீதி மன்றத்தில் சரணடைந்தனர். தஞ்சா வூர் மாவட்ட ஆட்சித் தலைவர் நீதி விசாரணை தேவையில்லை என கருத்து தெரிவித்து உள்ளார். இது அரசு பரிசீலனையில் உள்ளது.

122. 1982 ஆம் ஆண்டில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளன. இருப்பினும், தலை மறைவாகவுள்ள பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் அதிகரித்தன. இத் தீவிரவாதிகளின் நடவடிக் கைகளை ஒடுக்க மாநில அரசு எடுத்துள்ள கடுமையான நட வடிக்கைகளைக் கண்டிக்கும் சுவரொட்டிகள் பல இடங்களில் ஒட்டப்பட்டன.

123. ஆந்திரப் பிரதேசத்தில் வன்முறை சம்பந்தப்பட்ட 10 வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டு சென்ற 13 ஆண்டு களாகத் தலை மறைவாக இருந்து வரும் ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த பிரபல தீவிர[illegible]யும் சந்திரபுல்லா ரெட்டியின் மனைவியுமான ராதிகா என்கிற அக்கிநானி நிர்மலா என்பவர் 29—5—1982

சங்கத்திலுள்ள உறுப்பினர்கள் மாநிலம் முழுவதும் உள்ள மா
வட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், பஞ்
சாயத்து யூனியன் அலுவலகம் நிலவள வங்கி மற்றும் கூட்டுறவு
வங்கிகளின் முன்பு 15, 16 மற்றும் 17—4—1982 அன்று மறியல்
செய்ய முயற்சி செய்தனர். இது சம்பந்தமாகச் சுமார் 1,080
பேர் கைது செய்யப்பட்டனர். இதற்கு முன்பாக ஒரு தடுப்பு
நடவடிக்கையாகச் சுமார் 1,100 சமூக விரோதிகள் மற்றும் 740
விவசாயிகள் கைது செய்யப்பட்டனர். 15—4—1982 அன்று
திரு. நாராயணசாமி நாயுடு மற்றும் 16 பேர்கள் தடை உத்தி
ரவை மீறித் தலைமைச் செயலகத்தை நோக்கி ஊர்வலம் செல்
லத் தொடங்கியதால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்
பட்டனர். தென் ஆற்காடு மாவட்டம் கடலூரில் உள்ள மா
வட்ட ஆட்சியாளர் அலுவலகம் நோக்கி ஊர்வலம் சென்று
கொண்டிருந்த விவசாயிகள் 15—4—1982 அன்று கலைந்து செல்
லும்படி காவலரால் கேட்டுக்கொள்ளப்பட்டனர். அவர்கள் அத
னை மறுத்து முன்னேறிச் சென்று கொண்டிருந்தனர். தகுந்த
எச்சரிக்கைக்குப்பின் காவலர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை
வெடித்து கூட்டத்தினரைக் கலைத்தனர். அதே நாளில் தஞ்
சாவூரில் காவலர் குறைந்த அளவு சக்தியை உபயோகித்துத்
தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத் ன் முன்பு வன்முறை
யில் ஈடுபட்ட சுமார் 200 விவசாயிகள் அடங்கிய கூட்டத்தின
ரைக் கலைத்தனர். இந்நிகழ்ச்சியில் 9 பேர் சிறுகாயம் அடைந்
தனர்.

131. 22—4—1982 அன்று சுமார் 50 பேர் கொண்ட தமிழ்
நாடு விவசாயிகள் சங்கத்தினர் இராமநாதபுரம் மாவட்டத்தில்
முதுகுளத்தூரில் உள்ள வட்ட ஆட்சியர் அலுவலகத்தினுள்
நுழைய முயன்றனர். அவர்கள் காவலர்கள் மீது கற்களை
எறிந்து, கலைந்து செல்ல மறுத்தனர். அதன் பிறகு காவலர்
கூட்டத்தினரை சிறிதளவு தடியடி செய்து கலைத்தனர். கல்
லெறிந்ததில் காவலரும் மற்றும் ஒருவரும் காயம் அடைந்தனர்.
மேலும், பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் வண்டி ஒன்
றின் முன்புறக் கண்ணாடி, கல்லெறிந்ததில் உடைந்தது. இது
சம்பந்தமாக முதுகுளத்தூர் காவல் நிலையத்தில் குற்ற எண்
72, 73/82-இல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

132. வரப்பாளையத்தில் (பெரியார் மாவட்டம்) உள்ள ஞான
பிரகாசம் என்பவர் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் முடிவினை
மீறி அரசிற்குச் செலுத்த வேண்டிய கடன் பாக்கியினைச் செலுத்
தியதால் அதனை எதிர்த்து 13—5—1982 அன்று சுமார் 500
பேர் அவரது வயலில் புகுந்து அங்குள்ள பம்பு செட் மற்றும்
தென்னை மரங்களைச் சேதப்படுத்தினர். வயலின் அருகில்,
ரோந்து ணியில் ஈடுபட்டிருந் இரு காவலர்கள் கூட்டத்
தினரை எச்சரித்து அவர்களை அச்சுறுத்திக் கலைக்க வானத்தை



நோக்கி இரண்டு முறை துப்பாக்கியால் சுட்டனர். ஆனால்,
கூட்டத்தினர் காவலர்கள் மீது கல்லெறிந்து அவர்களைக் காயப்
படுத்தினர். அதன் பிறகு காவலர்கள் 4 முறை துப்பாக்கியால்
சுட்டுக் கூட்டத்தினரைக் கலைத்தனர். தாராபுரத்திலுள்ள அர
சினர் மருத்துவ மனையில் காயமுற்ற காவலர்கள் அனுமதிக்கப்
பட்டனர். ஈரோடு கோட்டாட்சித் தலைவரின் நீதிவிசாரணை
அறிக்கை பரிசீலிக்கப்பட்டு ப்பாக்கி சூடு நடத்தியது நியாய
மானதே என்று உத்திரவிடப்பட்டது.

133. பல்வேறு விவசாயிகள் சங்கத்தினரின் கூட்டு நடவடிக்
கைக் குழுவின் தீர்மானத்தினையொட்டி சுமார் 400 பேர்கள்,
சின்னச்சாமி கவுண்டர், முத்துசாமி கவுண்டர் மற்றும் இந்திய
கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மற்றும் மார்க்சிஸ்டு கம்யூ
னிஸ்டுக் கட்சித் தலைவர்கள் ஆகியோரின் தலைமையின் கீழ்
விவசாயிகள் மீது எடுக்கப்பட்ட ஜப்தி நடவடிக்கைகளைக் கண்
டித்து சென்னையில் மூர்மார்க்கெட்டிலிருந்து தலைமைச் செய
லகத்தினை நோக்கி ஊர்வலம் சென்றனர். அவர்கள் கடற்கரைச்
சாலையில் உழைப்பாளர் சிலையின் அருகில் காவலரால் தடுத்து
நிறுத்தப்பட்டனர். ஆனால், அவர்கள் தடை உத்தரவை மீறி
முன்னேறிச் செல்ல முயன்றனர். திரு. எஸ். அழகிரிசாமி,
எம்.எல்.ஏ., திரு. எஸ். சிவசாமி, எம்.எல்.ஏ., திரு. என்.
வரதராசன், எம்.எல்.ஏ., திரு. சின்னசாமி கவுண்டர், திரு.
முத்துச்சாமி கவுண்டர் உட்பட 322 பேர்கள் காவலரால் கைது
செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் அன்று மாலையே விடு
தலை செய்யப்பட்டனர். 1982 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள்
20, 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் இதே காரணத்திற்காகத்
தமிழ் நாட்டில் பல்வேறு பகுதிகளில் மேலே கூறப்பட்ட சங்கத்
தைச் சேர்ந்தவர்கள் மத்திய மற்றும் மாநில அரசின் அலுவலகங்
கள் மற்றும் நிலவள வங்கிகள் முதலியவற்றின் முன்பு மறியல்
செய்தனர். இதில் 5,401 பேர் தடுப்பு நடவடிக்கைப் பிரிவுகளின்
கீழ் கைது செய்யப்பட்டனர். மேலும் 428 பேர்கள் குறிப்பிட்ட
பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட
டோரனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டனர்.

134. 22—11—1982 அன்று மதுரை (தெற்கு) மேலூரில்
"பெரியாறு பன்னிரண்டாங் கால்வாய் ஆயக்கட்டு" பகுதி
யைச் சேர்ந்த சுமார் 3,000 விவசாயிகள் பெரியாற்றிலிருந்து
பாசனத்திற்காக தண்ணீர் விடக்கோரி திரு. வீரண்ணன் அம்பலம்,
எம்.எல்.ஏ., தலைமையில் மேலூர் வட்ட ஆட்சி அலுவலகத்திற்கு
ஊர்வலமாகச் சென்று மனு கொடுத்தனர். ஊர்வலத்தினர்,
கலைந்து செல்லும்போது மேலூர் எல்லையில் திருச்சிராப்பள்ளி
சாலையில் சென்றுகொண்டிருந்த பாண்டியன் போக்குவரத்துக்

அன்று கோவை மாவட்டத்தில் தமிழகப் புலனாய்வு காவல் துறையினராலும், ஆந்திரப் பிரதேச மாநிலக் காவல்துறையினராலும் கைது செய்யப்பட்டார்.

124. 30—7—1982 அன்று ஆந்திரப் பிரதேசம், விஜயவாடாவைச் சேர்ந்த சந்திரசேகரன் என்கிற சேகர் சென்னை சென்டிரல் இரயில் நிலையத்தில், சென்டிரல் இரயில்வே காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார். ஒரு கைப் பையும், கை வெடி குண்டுகள் அடங்கிய ஒரு பெட்டியும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டன. இது குறித்து வெடி மருந்துப் பொருட்கள் சட்டம், பிரிவு 5–ன் கீழ் சென்னை சென்டிரல் இரயில்வே காவல் நிலையத்தில் குற்ற எண் 1724/82 இல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. புலனாய்வுத் துறைக் காலவரால் வழக்கு மேற்கொண்டு புலன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சென்னை அரும்பாக்கத்தில் உள்ள சேகருடைய வீட்டில் சோதனை நடத்தி அவருடன் குற்றம் சாட்டப்பட்டுள்ள சுஜாதா (மனைவி), ரங்காராவ் (சகோதரர்) ஆகியோர் கைது செய்யப்பட்டனர். 7 கை வெடி குண்டுகளும், துளைபோடும் இயந்திரங்கள், தீயடுப்பு, இரும்பு சம்மட்டிகள், அச்சுகள் முதலியவைகளும் பல்வகைப் பொருள்களுடன் கைப்பற்றப்பட்டன.

125. 17—11—1982 அன்று வட ஆற்காடு மாவட்டம், கந்திலி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இலக்கிநாயக்கன்பட்டி என்ற ஊரில், பல குற்ற வழக்குகளில் ஈடுபட்ட இருட்டு என்ற பச்சையப்பன் மற்றும் அவரது இரு கூட்டாளிகளையும், காவல் குழுவினர் தேடிச் சென்றபோது, அவர்கள் உரிமம் பெறாத துப்பாக்கிகளினாலும், கத்திகளினாலும் காவலர்களைத் தாக்கினர். அவர்களைச் சரணடையுமாறு காவலர்கள் விடுத்த எச்சரிக்கை வீண்போகவே, காவலர் தற்காப்புக்காகத் துப்பாக்கிச் சூடு நிகழ்த்தினர். இருட்டு என்ற பச்சையப்பன் தலத்திலேயே இறந்து போனார். அவரது இரு கூட்டாளிகளும் அந்த இடத்திலிருந்து தப்பிவிட்டனர். இந்நிகழ்ச்சியில், 5 காவலர்கள் காயமுற்றனர். இதன் தொடர்பாக திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் குற்ற எண் 688/82 இல் இ.பி. கோ. 307 இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு அதிகார வரம்பெல்லை காரணமாக கந்திலி காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டது. அங்கு அது குற்ற எண் 311/82 ஆக பதிவு செய்யப்பட்டது. 18—11—1982 அன்று திருப்பத்தூர் கோட்டத்திற்குப் பொறுப்பு ஏற்றிருந்த திருவண்ணாமலை துணை ஆட்சியாளர், காவல் நிலை ஆணை 145-ன் கீழ், பிரேத விசாரணை நடத்தினார். பிரேத பரிசோதனைக்குப் பிறகு இறந்தவர் உடல் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. திருவண்ணாமலை சார்பு ஆட்சியாளரின் நீதி விசாரணை அறிக்கை பரிசீலிக்கப்பட்டு, துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதே என உத்தரவிடப்பட்டது.



126. பொதுவாக விவசாயிகளிடையே அமைதி நிலவியது. ஆயினும் குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

127. தஞ்சாவூர் (மேற்கு) வரகூர் கிராமத்தில் 17—3—1982 அன்று நிலவள வங்கி மற்றும் கூட்டுறவு வங்கி அதிகாரிகள் அடங்கிய குழு, திருவையாறு தாசில்தார், காவல்துறை அதிகாரிகள், கடன் வசூல் பணியை முடித்துவிட்டு திரும்பி வந்துகொண்டிருந்தபோது, அவர்களைச் சுமார் 200 பேர் வழிமறித்துக் கற்களால் தாக்கினர். இதில் அதிகாரிகளால் பயன்படுத்தப்பட்ட ஒரு ஜீப்பும், தனியாருக்குச் சொந்தமான ஒரு லாரியும் சேதமடைந்தன. திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்ட விதிகள் பிரிவுகள் 147, 341, 427 மற்றும் 506 (iii)-ன்படி 43/82 எண்ணுள்ள குற்ற வழக்கொன்று பதிவு செய்யப்பட்டது. இது சம்பந்தமாக 26 பேர் கைது செய்யப்பட்டனர்.

128. திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகத்தினரும் ஊத்தங்கரை மற்றும் செங்கம் பகுதிகளைத் தவிர மற்ற இடங்களில் இருந்து கரும்பு வாங்குவதை எதிர்த்து கரும்பு உற்பத்தியாளர் சங்கத்தினரின் ஒரு பகுதியினர் அரூரில் (தருமபுரி மாவட்டம்) இருந்து ஊத்தங்கரைக்குக் கரும்பு எடுத்துவருவதை 17—3—1982 அன்று தடுத்தனர். ஊத்தங்கரை காவல் நிலையத்தில் குற்றவியல் தண்டனைச் சட்டம் 151-பிரிவின்படி 83/82 எண்ணுள்ள குற்ற வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக 9 பேர் கைது செய்யப்பட்டு, பின் விடுதலை செய்யப்பட்டனர்.

129. வட ஆற்காடு மாவட்டம் வாணியம்பாடியில் உள்ள கூட்டுறவு மத்திய வங்கியின் அலுவலர்கள் காவலர் துணையுடன் வள்ளிப்பட்டு கிராமத்தில் 23—3—1982 அன்று கடன் நிலுவையை வசூலித்துக்கொண்டிருக்கும்போது கிராமத்தைச் சேர்ந்த இருவர் அங்கிருந்த காவல்துறைத் துணை ஆய்வாளரை ஒரு பேனாக் கத்தியால் குத்த முயன்றனர். இதனால் துணை ஆய்வாளரின் கன்னத்தில் காயம் ஏற்பட்டது. அவர்கள் கைது செய்யப்படுவதை எதிர்த்ததால், குறைந்த அளவு பலத்தினை உபயோகித்து அவர்கள் கைது செய்யப்பட்டனர். வாணியம்பாடி காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டம் 341, 332 மற்றும் 307-ன்படி 33/82 எண்ணுள்ள குற்ற வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

130. மின் இணைப்பு துண்டிப்பு நடவடிக்கை மற்றும் விவசாயிகளிடம் கடன் வசூலிப்பதில் மேற்கொள்ளப்படும் கடுமையான நடவடிக்கையினை எதிர்த்து தமிழ்நாடு விவசாயிகள்

திற்கு விரைந்து சென்று தீயை அணைத்தனர். இது தொடர்பாக E2 இராயப்பேட்டை காவல் நிலையத்தில் இ.பி.கோ. 143, 436 மற்றும் 448 பிரிவுகளின் கீழ் குற்ற எண். 193/82 இல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. நான்கு மாணவர்களைக் காவல் துறையினர் கைது செய்தனர். மேலும் மூவர் 9/10—2—1982 அன்று இரவு கைது செய்யப்பட்டனர்.

143. சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் பல்கலைக் கழகத் தேர்வு எழுதிக் கொண்டிருந்த மாணவர்களில் காப்பி யடித்ததற்காக தேர்வு கூடத்தை விட்டு வெளியேற்றப்பட்ட ஒரு பிரிவு மாணவர்கள் 15—5—1982 அன்று வன்முறைச் செயலில் இறங்கி கல்லூரி ஜன்னல், முதல்வரின் அறைக் கண்ணாடிக் கதவுகள் ஆகியவற்றை உடைத்து பல்கலைக் கழக வேன் ஒன்றிற்கும் தீ வைத்தனர். காவலர் தலத்திற்கு விரைந்து சென்று அமைதியை நிலைநாட்டினர். இது தொடர்பாக 18—5—1982 அன்று பதினெட்டு மாணவர்களைக் காவலர் கைது செய்தனர்.

**காவலர் துப்பாக்கிச் சூடு :**

144. தமிழ்நாட்டில் 1982–ஆம் ஆண்டு ஜனவரி 1–ஆம் தேதி முதல் டிசம்பர் 1982 முடிய காவலர் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவங்கள் 21 ஆகும். 8 சம்பவங்கள் பத்திகள் 111, 117, 121, 125, 132, 136, 137 மற்றும் 138-ல் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. மீதி 13 சம்பவங்கள் பற்றிய விவரங்கள் கீழே விளக்கமாக தரப்பட்டுள்ளன.

145. 15—1—1982 அன்று மஞ்சுவிரட்டின் போது ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து தேவாரத்தில் (மதுரை வடக்கு) நாடார் வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கும் தேவர் வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கும் மோதல் ஏற்பட்டதன் விளைவாக இருசாராரும் அவரவர்களுடைய ஆட்களைக் கூட்டி ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். உள்ளூர்க்காவலர் தலத்துக்கு விரைந்து கூட்டத்தைக் கலைக்க முயன்றனர். ஆனால் கட்டிலடங்காத கூட்டத்தினர் காவலரைத் தாக்கியதில் காவலர் ஒருவர் காயமடைந்தார். காவலர் கூட்டத்தினர் மீது தடியடி நடத்தியும் பயனளிக்காமல் போகவே தற்காப்பிற்காகக் காவலர்கள் சுட்டதில் கூட்டத்தினர் கலைந்து சென்றனர். இச்சம்பவத்தில் யாரும் காயமடையவில்லை. மதுரை மாவட்ட வருவாய்த் துறை அலுவலரின் நீதி விசாரணை அறிக்கையின் அடிப்படையில் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதே என்று அரசு ஒப்புக் கொண்டது.



146. 13—2—1982 அன்று கே.வி. குப்பத்தில் (வட ஆற்காடு) ஏற்பட்ட ஜல்லிக்கட்டுத் தகராறைத் தொடர்ந்து இரு பிரிவினருக்கிடையே மோதல் ஏற்பட்டது. பாதுகாப்புப் பணியில் இருந்த காவலர் அந்த இரு பிரிவினரையும் பிரிக்கக்குறைந்த அளவு சக்தியை உபயோகித்தனர். அப்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி ஒரு சிறுவன் காயமடைந்தான். இதனால் வெகுண்ட ஒரு கூட்டம் உள்ளூர்க்காவல் நிலையத்திற்குச் சென்று காயமடைந்த அந்த பையனை மருத்துவ மனைக்குக் காவலர்கள் எடுத்துச் செல்வதை தடுத்தது. கூட்டத்தினர் காவல் நிலையத்தின் மீது கற்களை வீசி, காவல் நிலையத்தினுள் நுழைய முயற்சித்தனர். இந்தச் சம்பவத்தில் 2 காவலர்கள் காயமுற்றனர். காவலர்களின் தற்காப்புக்காக அக்கூட்டத்தைக் கலைக்க காவலர் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர். இந்த் துப்பாக்கிச் சூட்டால் எவரும் காயமடையவில்லை. திருப்பத்தூர் சார்பு ஆட்சியாளரது நீதி விசாரணை அறிக்கையின் அடிப்படையில் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதே என்று அரசு ஒப்புக் கொண்டது.

147. 9—4—1982 அன்று காளிமார் கொளச்சலில் (கன்னியாகுமரி) 400 மீனவர்கள் இந்துக்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்று நாட்டு வெடி குண்டுகளை வீசி ஒரு கோவிலைச் சேதப்படுத்தியதுடன் 3 குடிசைகளைத் தீயிட்டு கொளுத்தினார்கள். இந்துக்களும் கற்களை எறிந்து எதிர்த்தனர். காவலர் தலத்திற்கு விரைந்து சென்று முறையாக எச்சரிக்கை செய்த பின்பும் கூட்டம் கலையாமற்போகவே துப்பாக்கிச் சூடு நடத்தினர். துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயமடையவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரின் விசாரணை தேவையில்லை என்ற பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டது.

148. 14—5—1982 அன்று அருப்புக்கோட்டையில் (இராமநாதபுரம் மேற்கு) ஒரு திருவிழாவில் கலை நிகழ்ச்சி நடத்துவது தொடர்பாக தேவாங்க் செட்டியார் வகுப்பினர்களுக்கும் தேவர் வகுப்பினர்களுக்கும் ஏற்பட்ட வாய்ச்சண்டையைத் தொடர்ந்து இருசாரார்களுக்கும் மோதல் ஏற்பட்டு கடைகளுக்கும், வீட்டிற்கும் சேதம் விளைவிக்கப்பட்டது. அருப்புக்கோட்டை கோட்டாட்சி அலுவலர் 15—5—1982 அன்று அமைதிக்குழு கூட்டத்திற்கு ஏற்பாடுசெய்தார். தேவாங்க செட்டியார்கள் அவர்களுடைய வகுப்பைச் சேர்ந்தவர்கள் கூட்டம் ஒன்றை 15—5—1982 அன்று கூட்டி வன்முறையைக் கைவிடும்படி அவர்களுக்கு அறிவுரை வழங்கினார். அதையும் மீறி சுமார் 1,000 தேவாங்க செட்டியார் வகுப்பினர் தேவர் வகுப்பினர் வீடுகளுக்குத் தீ வைத்து சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தனர். தேவர்களும் பதிலுக்கு அவ்வாறு செய்தனர். இதற்குப் பிறகு காவலர் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசி கூட்டம் கலையாமற்போகவே துப்பாக்கி

கழகம் மற்றும் சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் மீது கல்லெறிந்தனர். ஊர்வலத்தின் மற்றொரு பகுதியினர் அங்கு உள்ள பொதுப்பணித்துறையின் சுற்றுலா மாளிகையின் கண்ணாடி சன்னல்கள் மீது கல்லெறிந்தனர். இது சம்பந்தமாக மேலூர் காவல் நிலையத்தில் குற்றவியல் எண். 512/82-ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

135. 1982-ஆம் ஆண்டில் தொழிலாளர்களிடையே பொதுவாக அமைதி நிலவியது. ஆயினும் பின்வரும் சில நிகழ்ச்சிகளில் காவல் துறையினர் தலையிட்டு, சட்டம்-ஒழுங்கை நிலை நாட்ட வேண்டியதாயிற்று.

136. 19—1—1982 அன்று விலைவாசி உயர்வு, தேசியப் பாதுகாப்புச் சட்டம், இன்றியமையாத பணிகள் பராமரிப்புச் சட்டம் ஆகியவற்றை எதிர்த்து தொழிற்சங்கங்களின் தேசீய அளவிலான கூட்டுக்குழு அறிவித்த '' பாரத் பந்த் ''-இல் தமிழ் நாட்டில் கிட்டத்தட்ட அனைத்துத் தொழிலாளர் சங்கங்களும் பணியாளர் அமைப்புகளும் பங்கேற்றபோதிலும் அதற்குத் தமிழ் நாட்டில் சிறிதளவே வரவேற்பிருந்தது. எனினும், தஞ்சாவூர் (கிழக்கு), தஞ்சாவூர் (மேற்கு) மற்றும் சென்னை நகர் ஆகிய இடங்களில் சில வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன. சென்னையில் நிகழ்ந்த சம்பவத்தில், பெரம்பூர் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியிருந்தது. இதில் 9 பேர் காயமுற்றனர். சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) நடத்திய நீதி விசாரணையின் அறிக்கையின் அடிப்படையில் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதே என்ற முடிவை அரசு ஏற்றுக்கொண்டது.

137. அன்று, தஞ்சாவூர் (மேற்கு) மாவட்டம் கீழ் அமராவதியில் உள்ள வெட்டாறு பாலத்தில் சுமார் 30 பேர், கோட்டாறு அருகில் உள்ள இரட்டப்புலியூர் கிராமத்தின் அருகே சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றினை நாசம் செய்ததோடு சுமார் 400 இந்திய கம்யூனிஸ்ட்டுக்கட்சி உறுப்பினர்கள் காவல்துறையினரை வழி மறித்ததின் காரணமாக 8 காவலர் காயமடைந்தனர். நிலைமை மேலும் மோசமடைந்து, காவலரின் உயிருக்கு மிக ஆபத்தான நிலை ஏற்பட்டதால், கூட்டத்தினரை நோக்கி காவலர் சுட்டதில் இருவர் காயமடைந்னர். அவர்களில் ஒருவர் பின்னர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் இறந்தார். தஞ்சாவூர் மாவட்ட வருவாய்த்துறை அலுவலரின் நீதி விசாரணை அறிக்கை பரிசீலிக்கப்பட்டு, துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதே என்று அரசு உத்திரவிட்டுள்ளது.





138. தஞ்சாவூர் (கிழக்கு) திருமெய்ஞ்ஞானத்தில் சாலையின் குறுக்கே வைக்கப்பட்டிருந்த தடைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காவலர்களை ஒரு கட்டுப்பாடற்ற கூட்டத்தினர் தாக்கினர், காவலர்கள் கண்ணீர் புகைக் குண்டுகளை வெடித்து தடியடி நடத்தினர். இவை பயனற்றுப் போகவே காவலர்கள் கூட்டத்தினரை நோக்கி சுட்டதின் காரணமாக இருவர் இறந்தனர் ; 12 பேர் காயமுற்றனர். அவர்கள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். தஞ்சாவூர் மாவட்ட வருவாய்த்துறை அலுவலரின் நீதி விசாரணை அறிக்கை பரிசீலிக்கப்பட்டு, துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதே என்று அரசு உத்திரவிட்டுள்ளது.

139. சிறுமுகை (கோயம்புத்தூர் புறநகர்) யிலுள்ள தென் இந்திய விஸ்கோஸ் தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்களின் இரு பிரிவினருக்கிடையே இருந்த போட்டி காரணமாக மோதல் சம்பவங்கள் 1—5—1982, 2—5—1982 நாட்களில் ஏற்பட்டன. அதனால் 22 பேர் காயமடைந்தனர்.

140. போத்தனூரில் (கோயம்புத்தூர் புறநகர்) உள்ள எவரெஸ்ட் பொறியியல் பணியகத்தில் வேலை நிறுத்தம் செய்து வரும் ஊழியர்கள் பகைமையின் காரணமாக, வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளாத ஊழியர்களை 3—9—1982 அன்று தாக்கியதால் ஒருவர் இறந்ததுடன் 6 பேர் காயமடைந்தனர். 51 பேர் கைது செய்யப்பட்டனர். தற்போது சுமுக நிலை நிலவுகிறது.

141. நீலகிரியில் கோத்தகிரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நார்வல்லா மலைத் தோட்ட நிர்வாகம் ஒரு தொழிற் சங்கத்தைச் சேர்ந்த 8 தற்காலிக ஊழியர்களின் பணிகளை 1—2—1982 முதல் முறைப்படுத்தியது. மற்ற தொழிற் சங்கத்தைச் சேர்ந்த தற்காலிக ஊழியர்களில் ஒருவரின் பணி கூட முறைப்படுத்தப்படவில்லை. அதனால், ஊழியர்களுக்குள் பகைமை மூண்டு 10—2—1982 அன்று மோதலில் முடிந்தது. இதில் 6 ஊழியர்கள் காயமடைந்தனர். இது தொடர்பாக கோத்தகிரி காவலர் இ.பி.கோ. 147, 324 மற்றும் 323 பிரிவுகளின் கீழ் குற்ற எண்கள் 24 மற்றும் 25/1982 இல் வழக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.

மாணவர்கள் :

142. 8—2—1982 அன்று புதுக்கல்லூரியைச் சேர்ந்த சில மாணவர்கள் கல்லூரி முதல்வரின் அறைக்குத் தீ வைக்க முயன்றனர். பாதுகாப்புப் பணியில் இருந்த காவலர் தலத்

சூடு நடத்தினர். இதில் 11 பேர்கள் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்தில் 4 காவல்ர்களும் காயமடைந்தனர். அருப்புக் கோட்டை கோட்டாட்சித் தலைவரின் நீதி விசாரணை அறிக்கையின் அடிப்படையில், துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதே என உத்திரவிடப்பட்டது.

149. 22—5—1982 அன்று பாண்டிச்சேரி விழுப்புரம் சாலையில் கண்டமங்கலம் (தென்னாற்காடு) அருகே விரைந்து சென்று கொண்டு இருந்த ஒரு காரை நிறுத்துமாறு மதுவிலக்கு அமல் பிரிவின் காவலர் படையினர் வண்டியோட்டிக்குச் சைகை காட்டினர். ஆயினும் அந்தக் காரோட்டி சைகையைப் புறக் கணித்து வண்டியை மிக வேகமாக ஓட்டிச் சென்றார். காவலர் ிடாமல் துரத்திச் சென்று காரை நோக்கிச் சுட்டனர். பிறகே ண்டியோட்டி காரை நிறுத்தினார். வண்டியிலிருந்து ரூ. 50,000 மதிப்புள்ள கள்ளக்கடத்தல் மது வகைகளைக் காவலர் கைப்பற்றினர். காவலர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவரும் காயமடையவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் பேரில் விசாரணையைக் கைவிடலாம் என அரசு ஆணையிட்டுள்ளது.

150. குறிஞ்சிப்பாடி, கருவேப்பன்பட்டி ஆகிய ஊர் மக்களிடையே இருந்த முன் பகை காரணமாக குறிஞ்சிப்பாடியைச் சேர்ந்த மூன்று பேரைக் கருவேப்பன்பட்டியைச் சேர்ந்த சிலர் 29—5—1982 அன்று தாக்கினர். இதனால் வெகுண்ட குறிஞ்சிப்பாடி மக்களின் ஒரு பகுதியைக் கொண்ட கூட்டம் பழிவாங்கும் நோக்குடன் கருவேப்பன்பட்டியை நோக்கிச் செல்ல எத்தனித்தனர். அவர்கள் அவ்வாறு செய்யாமல் காவல் துறையினரால் தடுக்கப்பட்டனர். இதைக் கேள்விப்பட்டவுடன் கருவேப்பன்பட்டியில் குடியிருப்பவர்கள் குறிஞ்சிப்பாடி பஸ் நிலையம் அருகே உள்ள சில கடைகளை நாசப்படுத்தினர். இதில் தலையிட்ட காவலரையும் அவர்கள் தாக்கினார்கள். அதன்பிறகு தற்காப்பு நடவடிக்கையாக குறிஞ்சிப்பாடி காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் காயமுற்றார். இந்தச் சம்பவத்தில் ஏழு காவலர்கள் காயமடைந்தனர். சிதம்பரம் சார்பு ஆட்சியாளரின் நீதி விசாரணை அறிக்கையின்பேரில் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதே என்று அரசு ஒப்புக்கொண்டது.

151. 28—5—1982 அன்று தேனி அல்லி நகரத்தில் (மதுரை வடக்கு) ஒரு இந்து பெண்மணியை கிண்டல் செய்தற்காக ஒரு ஆதிந்திராவிடரை இந்துக்கள் தாக்கினர். இதன் விளைவாய 29—5—1982 அன்று இந்துக்களுக்கும் ஆதி திராவிடர்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டது. காவல் துறையினர் தலத்துக்கு விரைந்து சென்று அமைதியை நிலைநாட்டப் பாடுபட்டனர்: எனினும் அது பயனளிக்காமல் போகவே நிலைமையைக் கட்டுப்படுத்த



காவல் துறையினர் வானத்தை நோக்கிச் சுட்டனர். இந்தச் சம்பவத்தில் எட்டுக் காவலர் காயமுற்றனர். பெரியகுளம் சார்பு ஆட்சியாளரின் நீதி விசாரணை அறிக்கையின் பேரில் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதே என்று அரசு ஒப்புக்கொண்டது.

152. 8—6—1982 அன்று ''சமத்துவ சகோதரத்துவ சங்கம்'' கடையநல்லூரில் (திருநெல்வேலி மாவட்டம்) காயிதே மில்லத் மற்றும் டாக்டர் அம்பேத்கார் ஆகியோரின் பிறந்த நாள் நினைவாக ஒரு விழா ஏற்பாடு செய்தது. இவ்விழாவில் கலந்து கொள்ள புளியங்குடியிலிருந்து (திருநெல்வேலி) ஆதி திராவிடர்கள் குழுவொன்று இரண்டு டிராக்டர்களில் சென்று கொ டிருந்தபோது தேவர் வகுபபினர்க்கெதிரான கோஷங்கள் எழுப்பினர். இதனால் ஆத்திரமடைந்த தேவர் வகுப்பினரில் ஒரு பிரிவினர் சொக்கன்பட்டியில் (திருநெல்வேலி) ஆதி திராவிடர்களைத் தாக்கினர். கட்டபொம்மன் போக்குவரத்துக்கழகப் பேருந்து ஒன்றின்மீது சரமாரியாகக் கற்களை வீசி ஓட்டுநரையும், நடத்துனரையும் காயப்படுத்தினர். 9—6—1982 அன்று புளியங்குடியில் விசுவஹிந்து பரிஷத் சபையினரால் எழுப்பப்பட்ட அலங்கார வளைவு ஒன்றைச் சில ஆதி திராவிடர்கள் கீழே வீழ்த்தினர். இதற்கெதிராக இந்துக்கள் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றைச் சொக்கன்பட்டியில் நிறுத்தி ஆதி திராவிட பயணிகளைத் தாக்கினர். இதனைத் தடுக்க முற்பட்ட ஒரு காவல் துறை ஆய்வாளர் கத்தியால் குத்தப்பட்டார். இதனை அடுத்து 1,000 ஆதி திராவிடர்கள் புளியங்குடி காவல் நிலையம் முன்பு கூடித் தேவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி காவல் நிலையத்தையும் அருகிலுள்ள கடைகளையும் தாக்கியும், அவ்வழியே சென்ற வாகனங்கள் மீது கற்களையும் சோடா பாட்டில்களையும் வீசியும் கலவரம் செய்தனர். எனவே, போலீசார் கூட்டத்தைக் கலைக்க வானத்தை நோக்கிச் சுட்டனர். இந்தச் சம்பவத்தில் நான்கு காவல் துறையினர் காயமுற்றனர். திருநெல்வேலி மாவட்ட வருவாய்த்துறை அலுவலரால் நீதி விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

153. 10—6—1982 அன்று புளியங்குடியில் தேவர் பிரிவைச் சார்ந்த ஒரு பெண்மணி முஸ்லிம் பகுதியில் தண்ணீர் எடுப்பது குறித்துச் சச்சரவு எழுந்தது. அன்றே முஸ்லிம்களும் ஆதி திராவிடர்களும் தேவர்கள் வீட்டிற்கு நெருப்பு வைத்தனர். தேவர்களும் பதிலுக்கு தாக்கினர். கொலை ஆயுதங்களுடன் புளியங்குடி காவல் நிலையம் அருகே கூடியிருந்த ஆதி திராவிடர்களைக் கலைந்து செல்லுமாறு காவலர் கேட்டுக் கொண்டனர். ஆனால் காவலரை ஆதி திராவிடர்கள் தாக்க ஆரம்பித்தனர். தடியடிப் பிரயோகம் செய்தும் பலனில்லாமல் போகவே, தற்

காப்புக்காக காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால் இருவர் இறந்தனர்; ஒருவர் காயமுற்றார்; ஒன்பது காவலர்கள் காயமுற்றனர். திருநெல்வேலி மாவட்ட வருவாய்த் துறை அலுவலரால் நீதி விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

154. 2—7—1982 அன்று ஊத்தங்கரையில் (தருமபுரி) திருட்டு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சுப்பிரமணியம் என்பவர் ஒரு பாட்டிலிலிருந்து அமிலம் போன்றதொரு திரவத்தைச் சாப்பிட்டு விட்டதால், அவர் ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதற்குச் சிலமணிநேரம் கழித்து அவரைப் படுக்கையில் காணவில்லை. பிறகு மருத்துவ மனை வளாகத்தில் ஒரு மரத்தினடியில் அவருடைய சடலம் காணப்பட்டது. அவருடைய மரணம் குறித்து சந்தேகங்கொண்ட ஊத்தங்கரை மக்கள் சிலர் அவர் மரணம் பற்றிய தீவிர புலன் விசாரணை நடத்தக் கோரி 1,500 பேர் கூடி வண்டிப் போக்குவரத்தைத் தடைசெய்தனர். காவல்துறையினரையும் தாக்கினர். பதட்ட நிலைமை ஏற்படவே காவலர், கூட்டத்தைக் கலைக்க தடியடி நடத்தினர். இதற்கிடையில் கூட்டத்தில் ஒரு பிரிவினர் மீண்டும் கூடி வன்முறையில் இறங்கி காவலரைத் தாக்க ஆரம்பித்தனர். அவர்கள் ஊத்தங்கரை காவல் நிலையத்தை நோக்கிப் போக முனைந்ததுடன் சரமாரியாகக் கற்களையும் வீசினர். காவல் துறையினரின் உயிருக்கு மிக்க அபாயம் ஏற்படும் நிலையிருந்ததால், அவர்கள் வானை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர். அப்போதும் கூட்டம் கலையாமற்போகவே தற்காப்புக்காக கூட்டத்தின்மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதன் விளைவாக நான்குபேர் மாண்டனர். மற்றும் நான்கு பேர் காயமுற்றனர். இந்நிகழ்ச்சியில் 19 காவலர்கள் காயமுற்றனர். தருமபுரி மாவட்ட வருவாய்த் துறை அலுவலரின் நீதி விசாரணை அறிக்கையின் அடிப்படையில் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதே என்று உத்திரவிடப்பட்டது.

155. 15—11—1982 அன்று விடியற்காலை நேரத்தில் கார்குடி கிராமத்தைச் (திருநெல்வேலி) சேர்ந்தவரும் பல குற்ற வழக்குகளில் தேடப்பட்டு வந்தவருமான வேம்பு என்பவரைக் காவலர் கைது செய்ய முற்பட்டனர். ஆனால் வேம்பு ஒரு உதவி ஆய்வாளரையும், ஒரு காவலரையும் அரிவாளால் தாக்கினார். அவரிடமிருந்து தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள வேண்டி காவலர் துப்பாக்கியால் சுட்டனர். வேம்பு தலத்திலேயே மாண்டார். காயமுற்ற காவல்துறை உதவி ஆய்வாளரும், காவலரும் உள்ளூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். திருநெல்வேலி கோட்ட வருவாய் அலுவலரால் நீதி விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.



156. 10—12—1982 அன்று காளப்ப நாய்க்கன்பட்டியைச் (சேலம்) சேர்ந்த 500 பேர் (150 பெண்கள் உட்பட) தமிழ்நாடு மாதர் சங்கத்தைச் சேர்ந்த அம்பிகா என்ற பெண்மணியின் தலைமையில் கிராமத்திற்குப்போதிய குடிநீர் வசதி செய்து தரக்கோரி ஊர்வலம் நடத்தியதில் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டது. உள்ளூர் சட்டமன்றப் பேரவை உறுப்பினரும் காவலர் துறையினரும் கூட்டத்தினரைக் கலைந்து செல்லுமாறு வேண்டிக் கொண்ட பின்பும் அவர்கள் கலைய மறுத்தனர். இதற்கிடையில் இக்கூட்டத்தோடு சில ஆண்களும் சேர்ந்து கொண்டு காவலர் மீதும் வருவாய்த் துறை அதிகாரிகள் மீதும் கற்களை வீசியதில் 5 காவலரும், பொதுமக்களில் ஒருவரும் காயமுற்றனர். எனவே, காவலர் லேசான தடியடி நடத்தினர். அது பலனளிக்காமல் போகவே துப்பாக்கிச் சூடு நடத்தினர். இச்சம்பவத்தில் ஒருவரும் காயமடையவில்லை. சேலம் மாவட்ட வருவாய்த்துறை அலுவலரால் நீதி விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

157. 30—12—1982 அன்று இழப்பூங்குடி கிராமத்தைச் சேர்ந்த (ராமநாதபுரம் கிழக்கு) 300 பேர் மதுவிலக்கு இடர் பரிசோதனை நடத்திக் கொண்டு இருந்த காவல்துறையினரைத் தாக்க முற்பட்டனர். காவல்துறை வாகனத்துக்கும் தீ வைத்தனர். காவலர் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலையில், கூட்டத்தை அச்சுறுத்திக் கலைக்க காவல்துறை ஆய்வாளர் வானை நோக்கிச் சுட்டார். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஒருவரும் காயமடையவில்லை. தேவக்கோட்டை சார்பு ஆட்சியாளரால் நீதி விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

**கண்ணீர் புகைப் பிரயோகம் :**

158. 1982 ஆம் ஆண்டு சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட தென் ஆற்காடு, கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம் (மேற்கு) பகுதிகளில் இரு முறையும், சென்னை நகரில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட மூன்று முறையும் கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்யப்பட்டது.

## பிரிவு 8.

### நடப்பு ஆண்டில் வழங்கப்பட்ட அரசாணைகள்.

159. 1982–83 ஆம் ஆண்டில் அரசு கீழ்க்கண்டவைகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

[1983 ஏப்ரல் 7

160. நீதிமன்றங்களில் உள்ள குற்ற வழக்குகளின் எண்ணிக்கையைப் பொறுத்துக் குற்றம் சம்மந்தப்பட்ட பணிகளை கவனிப்பதற்காக முன்பிருந்த 825 இளம் உதவி ஆய்வாளர் பதவிகளை உதவி ஆய்வாளர்களாகத் தரமுயர்த்தியுள்ளது.

161. 245 துணை ஆய்வாளர் பதவிகளை ஆய்வாளர் பதவிகளாகத் தரமுயர்த்தி அவற்றிற்கு வட்ட ஆய்வாளர் (குற்றவியல்) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

162. திருச்சிராப்பள்ளி, வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர், தர்மபுரி மாவட்டத்திலுள்ள தேன்கனிக்கோட்டை ஆகிய ஊர்களிலுள்ள இந்தியன் வங்கியின் கிளைப் பணப் பெட்டகங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கென 2 தலைமைக் காவலர் மற்றும் 10 இரண்டாம் நிலைக் காவலர்களைக்கொண்ட காவல் பிரிவுகளுக்கான கூடுதல் பணியாளர்களை ஓராண்டிற்கு நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

163. காவல் துறை அலுவலர்களின் கீழ் பணியாற்றும் ஏவலர்களுக்குப் பதிலாக 950 அடிப்படை ஊழியர் பதவிகளை ஏற்படுத்தி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

164. சுற்றுக் காவலர் படைப் பிரிவு ஒவ்வொன்றுக்கும் ஒரு பேருந்து வீதம் இருவழி செய்தித் தொடர்பு கருவிகள் பொருத்தப்பட்ட விரைந்து செல்லும் சிறிய பேருந்துகளை ரூ. 4.50 இலட்சம் செலவில் வழங்கவதற்கென அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

165. மூன்று நெடுஞ்சாலை ரோந்துப் படைகள் பரிட்சார்த்தமாக அமைக்கப்படுவது, ஒவ்வொரு ரோந்துப் படைக்கும் சில கூடுதல் பணியாளர்களை நியமிப்பது, ஒவ்வொரு படைக்கும் ஒரு ஜீப் வீதம் 3 ஜீப்புகள் வாங்குவது ஆகியவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

166. படை வீடுகளில் வசிக்கும் தமிழ்நாடு சிறப்புக் காவலர் பயன்படுத்துவதற்காக ரூ. 3.96 இலட்சம் செலவில் கட்டில்கள் வாங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

167. பெண் காவலர் ஆற்றும் பணியினை விளக்கி வெவ்வேறு கருத்துக்கள் கொண்ட இரு செய்தித் திரைப்படங்களைத் தயாரிப்பதற்கென ரூ. 2.40 இலட்சம் வழங்கியுள்ளது.

168. கோயம்புத்தூர், மதுரை ஆகிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் 10 குதிரைகள் கொண்ட 2 குதிரைப் படைகள் அமைக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.



1983 ஏப்ரல் 7]

169. மாவட்டக் காவல் அலுவலகங்களிலும், நகரக் காவல் ஆணையாளர் அலுவலகத்திலும், மாவட்டங்களிலுள்ள வேறு பல காவல் துறை அலுவலகங்களிலும் நியமிப்பதற்கென கூடுதல் அமைச்சுப் பணியாளர் பணியிடங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

170. 7 சுற்றுக் காவல் படைகள் அமைக்கப்பட்டதோடு நீதிமன்றப் பணிகளை கவனிப்பதற்கு 6 காவல் மாவட்டங்களுக்கு கூடுதல் பணியாளர்களும் வழங்கப்பட்டுள்ளனர்.

171. மாநகராட்சி மற்றும் மாவட்டத் தலைமையிடங்களின் அதிகார வரம்புக்குட்பட்ட இடங்களில் உள்ள, காவல் நிலையங்களுக்கும், புறக்காவல் நிலையங்களுக்கும் வரும் பொது மக்களின் பயனுக்காக மேசை நாற்காலிகள் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

172. மாநிலத்திலுள்ள காவல் நிலையங்களுக்காக 200 மோட்டார் சைக்கிள்களும் காவல் நிலையங்களில் உள்ள பெண் உதவி ஆய்வாளர்கள் உபயோகத்திற்கென 50 மோபெட் வண்டிகளும் வாங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

173. காவலர் குடும்பங்களிலுள்ள நபர்களின் எண்ணிக்கை அடிப்படையில் லெவி சர்க்கரை உச்சவரம்பு இல்லாமல் மலிவு விலையில் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. பெற்றோருடன் வசிக்கும் திருமணமாகாத காவலர்களுக்கு ஒரு அலகுக்குப் பதில் இரண்டு அலகு உணவுப் பொருட்கள் மலிவு விலையில் வழங்கப்படுகிறது.

174. ஊர்க்காவல் படையினர் பயிற்சிக்காக திருச்சிராப்பள்ளியில் ஒரு மாவட்டப் பயிற்சி நிலையம் நிறுவ ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் அவர்களுக்கு மாவட்ட நீர் மூழ்கிப் பயிற்சியில் பயிற்சி அளிப்பதற்காக 11 மீட்பு வண்டிகளும், சாதனங்களும் வாங்கவும் அவற்றைப் பராமரிக்கவும் மேலும் 21 மாவட்டங்களுக்கு பயிற்சி சாதனங்கள் வாங்கவும் உத்தரவு இடப்பட்டுள்ளது.

175. மாவட்டங்களில் மதுவிலக்கை அமுல்படுத்த 21 களப் பணிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றிற்குத் தேவையான ஜீப்புகள் வாங்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சென்னை நகர காவல் துறையில் உள்ள புலனாய்வுப் பிரிவு ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சிறப்பு ஊதியம் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

176. சென்னை நகரில் போக்குவரத்து மேம்பாட்டிற்கென ரூ. 25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

177. காவல் துறையில் உள்ள உட்கோட்ட அலுவலர்களுக்கு ( Sub divisio al Officers ) அவர்களுடைய அலுவல் எல்லைக்குள் அலுவல் காரணமாகப் பயணம் செய்ய, பயணப் படி மாதத்திற்கு ரூ. 350 ஆக இருந்ததை மாதத்திற்கு ரூ. 450 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**காவல் துறையை வலுப்படுத்தல் :**

178. 1982-ஆம் ஆண்டில் 1,248 நிர்வாகப் பணியிடங்களையும் 266 அமைச்சுப் பணியிடங்களையும் 68 தொழில் நுட்பப் பணியிடங்களையும் அரசு வழங்கியுள்ளது. இவற்றின் விவரம் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது. சில முக்கிய ஆணைகள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

179. மதுரை, கோயம்புத்தூர் பெருநகர் திட்டங்களை நிறைவேற்றுவதற்கென இரண்டு துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் பதவிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

180. திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கும், சென்னையிலுள்ள அரசு இருப்புப்பாதை காவல் பிரிவிற்கும் இரண்டு காவல் துறை கண்காணிப்பாளர்கள் பதவிகளுக்கு இந்திய காவல் பணி அமைப்பில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

181. அரசு உள்துறை செயலரின் நேரடிப் பார்வையில் ஒரு தனிக் குழு, மின் கம்பித் திருட்டுக்களை கண்டுபிடிப்பதற்கென அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக ஒரு துணைக் காவல் துறை கண்காணிப்பாளர் இருக்கிறார். இவருக்கு உதவியாக ஒரு ஆய்வாளர், இரண்டு துணை ஆய்வாளர்கள் மற்றும் மூன்று காவலர்கள் உள்ளனர்.

182. மதுரை, கோயம்புத்தூர் நகரங்களுக்கு ஒவ்வொன்றிலும் 10 குதிரைகள், ஒரு தலைமைக் காவலர், 5 நேர்த்தியாளர்கள் ஆகியோர் கொண்ட இரண்டு குதிரைப் படைகள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

183. கிழக்கு செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள சில காவல் நிலையங்களை இணைத்து சென்னைப் பெருநகர காவல் சரகம் அமைக்கப்பட்டுள்ளது.





184. 1982–83-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட 19 இடங்களில் புதிய காவல் நிலையங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன :—

| | மாவட்டத்தின் பெயர். | புதிய காவல் நிலையம் திறக்க அனுமதிக்கப்பட்ட இடம். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | மேற்கு செங்கல்பட்டு .. | .. செவ்வாப்பேட்டை, கல்பாக்கம். |
| 2 | தென்னார்க்காடு .. | .. புதுச்சத்திரம். |
| 3 | வடார்க்காடு .. | .. வாழப்பந்தல். |
| 4 | தர்மபுரி .. .. | .. கிருஷ்ணகிரி நகர காவல் நிலையம் இரண்டாக பிரிக்கப்பட்டு, கிருஷ்ணகிரி நகர் கிருஷ்ணகிரி வட்டம், மதிகோணப்பாளையம், தொப்பூர், சிங்காரப்பேட்டை. |
| 5 | கன்னியாகுமரி .. | .. தூத்தூர். |
| 6 | மதுரை (வடக்கு) | .. வீரவேடு. |
| 7 | மதுரை (தெற்கு) .. | .. எஸ். எஸ். காலனி, மதுரை விமான நிலையம். |
| 8 | சென்னை .. .. | .. மேற்கு மாம்பலம். |
| 9 | புதுக்கோட்டை .. | .. மாத்தூர். |
| 10 | இராமநாதபுரம் (கிழக்கு) | .. பாம்பன். |
| 11 | சேலம் .. .. | .. சேலம் அரசு மருத்துவமனை காவல் நிலையம். |
| 12 | தஞ்சாவூர் (மேற்கு) | .. தோகூர். |
| 13 | திருச்சிராப்பள்ளி .. | .. சமயபுரம். |
| 14 | திருநெல்வேலி .. | .. பகவந்தாணை. |

(எ) அவ்வாறு திறம்படைத்த காவல் பாதுகாப்பு கிட்டுவதை உறுதி செய்யும் பொருட்டு காவல் துறையின் பயிற்சி வசதிகள் மேம்படுத்தப்படும். ஆராய்ச்சி வசதிகள் வலுப்படுத்தப்படும், காவல் துறையை நவீனப்படுத்தலும் தொடரும்.

(ஏ) இயன்றவரை வனம் மற்றும் வன விலங்குகளைப் பாதுகாத்தல், விலங்குகளைக் கொடுமைப்படுத்துவதைத் தடுத்தல், துப்பரவுக் கேடு, சப்தத்தால் வரும் கேடு தூய்மைக்கேடு ஆகியவற்றைத் தவிர்த்தல் போன்ற ஏனைய பணிகளிலும் காவல் துறை முனைப்புடன் உதவி புரிய வேண்டும்.

(ஒ) பொதுமக்களின் நன்மதிப்புடன் பெறும் ஆதரவு இன்றியமையாதது என்பதைக் காவல் துறையினர் உணர்ந்து இத்தகைய ஒத்துழைப்பை மிக அதிக அளவில் பெறும் வகையில் மக்கள் தொடர்பைச் சீர்படுத்திக் கொண்டு மேலும் தங்கள் பணிகளைத் தொடர வேண்டும்.



## இணைப்பு 1.

[பத்தி 13].

**31—12—1982 நிலவரப்படி—காவல் துறையின் அமைப்பு.**

| | | |
|---|---|---|
| 1 | காவல்துறைத் தலைவர் .. .. | 1 |
| 2 | காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் .. | 2 |
| 3 | காவல்துறை ஆணையாளர் .. .. | 1 |
| 4 | காவல்துறை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் .. .. .. | 16 |
| 5 | காவல்துறை கண்காணிப்பாளர்கள் .. .. | 46 |
| 6 | காவல்துறை கூடுதல் கணிகாணிப்பாளர்கள் | 34 |
| 7 | காவல்துறை இணை கண்காணிப்பாளர்கள் | 5 |
| 8 | தளவாய்கள் .. .. .. .. | 8 |
| 9 | துணைத் தளவாய்கள் .. .. | 4 |
| 10 | காவல்துறை உதவி கண்காணிப்பாளர்கள் .. | 12 |
| 11 | காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் .. (நிலை 1) .. .. | 188 |
| 12 | காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் .. (நிலை 2) .. .. .. .. | 34 |
| 13 | காவல்துறை உதவி தளவாய்கள் .. | 32 |
| 14 | அட்சுடண்ட்/ஆய்வாளர்கள் .. .. | 1,060 |
| 15 | சேமப்படை ஆய்வாளர்கள் .. .. | 86 |
| 16 | சார்பு ஆய்வாளர்கள் .. .. .. | 3,397 |
| 17 | சேமப்படை சார்பு ஆய்வாளர்கள் — | 318 |
| 18 | உதவி சார்பு ஆய்வாளர்கள் .. .. | 43 |
| 19 | ரிசர்வ் உதவி சார்பு ஆய்வாளர்கள் .. | 164 |
| 20 | தலைமைக் காவலர்கள் .. .. .. | 5,023 |

**185.** தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பொம்மிடி, ஒசூர் தொழிற்பேட்டை, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கருங்கல், சென்னை நகரில் உள்ள ஸ்டான்லி மருத்துவமனை, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஏம்பல் கிராமம் மற்றும் ஆதனக்கோட்டை, தஞ்சாவூர் (மேற்கு) மாவட்டத்திலுள்ள செங்கிப்பட்டி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பழவூர் ஆகிய எட்டு இடங்களில் உள்ள புறக்காவல் நிலையங்கள் காவல் நிலையங்களாக மேம்படுத்தப்பட்டன.

**186.** செங்கல்பட்டு (மேற்கு) மாவட்டத்திலுள்ள மேல் மருவத்தூர், தர்மபுரியில் உள்ள கிருஷ்ணகிரி நீர்த்தேக்க அணை, சென்னை நகரில் கீழ்ப்பாக்கம் மன நோய் மருத்துவ நிலையம், கஸ்தூரிபா அரசு மருத்துவமனை, நகர அரசு மருத்துவமனை ஆகிய இடங்களில் 5 புறக்காவல் நிலையங்கள் அனுமதிக்கப் பட்டுள்ளன.

**187.** காவல் துறை அமைச்சுப்பணியாளர் பகுதியில் 8 நேர்முக உதவியாளர்கள், 34 கண்காணிப்பாளர்கள், 71 உதவியாளர்கள், 75 இளநிலை உதவியாளர்கள், 24 தட்டச்சர்கள், 18 இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் 21, சுருக்கெழுத்நர்கள், 12 பதிவேட்டு எழுத்தர்கள், 7 அடிப்படை ஊழியர்கள் மற்றும் தனிப் பிரிவிற்கென, 1 உதவி மேலாளர், 4 தனிப்பிரிவு உதவியாளர்ஆகிய பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**188.** காவல் துறை தொழில் நுட்பப் பகுதியில் 3 விரல் ரேகை இயக்குநர், 7 விரல் ரேகை கண்காணிப்பாளர், 2 விரல் ரேகை வல்லுநர், 38 விரல் ரேகை தேடுநர், ஒரு தொழில்நுட்ப அலுவலர், 1 தொழில்நுட்ப உதவியாளர், 6 வானொலி மேற்பார்வையாளர் மற்றும் 10 வானொலி தொழில் நுட்பாளர்கள் ஆகிய பதவிகள் அனுமதிக்கப்பட்டன.

## பிரிவு 9.

## முடிவுரை.

**189.** தமிழ்நாடு காவல் துறை இவ்வாறாக அதன் எல்லாவித பொறுப்புக்களையும் ஆர்வத்துடனும் கட்டுப்பாட்டுடனும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. அதன் கடமைகளை ஆற்றுவதில் கடந்த காலத்தைப் போலவே தமிழ்நாடு காவல் துறை கீழ்க்கண்ட வழிமுறைகளைத் தொடர்ந்து பின்பற்றிவரும் :—



(அ) தெரிவிக்கப்பட்ட எல்லாக் குற்றங்களும் புள்ளிவிவர நிலையைக் கருதாமல் கட்டாயமாகப் பதிவு செய்யப்படும். இவ்வாறு தெரிவிக்கப்படும் குற்றங்களைப் பதிவு செய்வதன் மூலம்தான் அக்குற்றங்களை வெளிப்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும்.

(ஆ) மிகச் சிறிய குற்றங்கள் குறித்து இயன்ற வரையில் அக்குற்றங்களைச் செய்தோரை எச்சரித்து விட்டுவிடவேண்டும். காவல்துறை, நீதிமன்றங்கள், சிறைத்துறை மற்றும் குற்றவாளிகள் நன்னடத்தையைக் கண்காணிக்கும் பிரிவு ஆகியவை அடங்கிய மாநிலக் குற்றவியல் நிர்வாகம் தன் வசமுள்ள வரையறுத்த அளவு வசதிகளை அநாவசியமாக பயன்படுத்தவோ சிதறடிக்கவோ கூடாது. மதுவிலக்கைப் பொறுத்தவரை கள்ளச் சாராயம் காய்ச்சுதல், அவற்றைக் கடத்துதல், அவற்றை பெருமளவு கையிருப்பு வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றைத் தடுப்பதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

(இ) காவலரிடம் முறையிடவோ, குற்றம் சாட்டப்பட்டவராகவோ அல்லது உதவி கோரியோ வருபவர்களில் .பெரும்பான்மையான மக்கள் ஏழைகளாகவும் சமூகத்தில் கீழ் மட்டத்தில் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதைகாவல் துறை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். எனவே அவர்களிடம் காவலர் அன்பும் அனுசரணையும் காட்டி நடந்து கொள்ளவேண்டும்.

(ஈ). காவல் துறையினர் மொத்தத்தில் எப்பொழுதும் நேர்மையாகவும் திறமையாகவும் இருப்பார்கள். இதற்காக கட்டுப்பாடு மற்றும் எல்லாபட்டணிகளிலும் உயர்வான தரம் ஆகியவை, குறிப்பாக நேர்மையும் திறமையற்றவர்களைப் பொறுத்துத்தயை தாட்சண்யமின்றி செயற்படுத்தப்படும். இவ்வாறு செயல்படும்பொழுது காவலர்களைவிடக் காவல்துறை அதிகாரிகளைப் பொறுத்தமட்டில் இது மேலும் அதிக தரக்கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்படும்.

(உ) காவல்துறையினரின் தூய்மையையும் திறமையையும் உறுதி செய்யும் .பொருட்டு அவர்களது ஒழுங்குணர்வையும் கட்டுப்பாட்டையும் உயரிய நிலையில் பேணிவர வேண்டும். இதைச் சாதிப்பதற்கு வேண்டிய இன்றியமையாத அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

(ஊ) பொதுமக்கள் சிறந்த காவல் பாதுகாப்பிற்கு உரிமை உடையவர்கள் ஆவர். எனவே இதுகாறும் போதிய அளவு காவல் பாதுகாப்பு இல்லாத பகுதிகளில் காவல் நிலையங்கள் அமைத்து அவற்றில் நன்கு பயிற்சிபெற்ற காவலர்கள் போதிய எண்ணிக்கையில் நியமிக்கப்படுவர்.

[1983 ஏப்ரல் 7

| | | |
|---|---|---|
| 21 | ஹவில்தார்கள் .. .. .. .. | 659 |
| 22 | நாயக்குகள் .. .. .. .. | 566 |
| 23 | லானஸ் நாயக்குகள் .. .. .. | 519 |
| 24 | காவலர்கள் தரம் 1 .. .. .. | 4,587 |
| 25 | காவலர்கள், தரம் 2 .. .. .. | 36,856 |
| 26 | பெண் சார்பு ஆய்வாளர்கள் .. .. | 82 |
| 27 | பெண் தலைமைக் கவலர்கள் .. .. | 74 |
| 28 | பெண் காவலர்கள்.. .. .. | 666 |
| | மொத்தம் | 54,483 |

இணைப்பு 2.

(பத்திகள். 13, 178)

1—1—1982 முதல் 31—12—1982 முடிய அனுமதிக்கப்பட்ட கூடுதல் பணியாளர்களின் விவரப்பட்டியல்

(அ) நிர்வாகப் பணி

| | | |
|---|---|---|
| 1 | காவல்துறை துணை இன்ஸ்பெக்டர் .. | 1 |
| 2 | காவல்துறை கண்காணிப்பாளர்கள் .. | 2 |
| 3 | காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர்கள் | 4 |
| 4 | காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் | 12 |
| 5 | காவல்துறை ஆய்வாளர்கள் .. .. | 51 |
| 6 | சேமப்படை ஆய்வாளர்கள் .. .. | 2 |
| 7 | சார்பு ஆய்வாளர்கள் .. .. | 127 |
| 8 | சேமப்படை சார்பு ஆய்வாளர்கள் .. | 8 |
| 9 | தலைமைக் காவலர்கள் .. .. | 246 |



1983 ஏப்ரல் 7]

| | | |
|---|---|---|
| 10 | காவலர்கள் தரம் 1 .. .. .. | 12 |
| 11 | காவலர்கள் தரம் 2 .. .. .. | 781 |
| 12 | நாயக் ஓட்டுநர் .. .. .. .. | 2 |
| | மொத்தம் .. .. | 1,248 |

(ஆ) அமைச்சுப் பணி.

| | | |
|---|---|---|
| 1. | நேர்முக உதவியாளர்கள் .. .. | 8 |
| 2. | கண்காணிப்பாளர்கள் .. .. .. | 34 |
| 3. | உதவியாளர்கள் .. .. .. .. | 71 |
| 4. | இளநிலை உதவியாளர்கள் .. .. | 75 |
| 5. | தட்டச்சர்கள் .. .. .. .. | 24 |
| 6. | இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்கள் | 18 |
| 7. | சுருக்கெழுத்து தட்டச்சர்கள் .. .. | 12 |
| 8. | பதிவெழுத்தாளர்கள் .. .. .. | 12 |
| 9. | கடைநிலை ஊழியர்கள் .. .. .. | 7 |
| 10. | தனிப்.பிரிவு உதவி மேலாளர் .. .. | 1 |
| 11. | தனிப் பிரிவு உதவியாளர்கள் .. .. | 4 |
| | மொத்தம் .. | 266 |

இதர பணியாளர்கள்.

| | | |
|---|---|---|
| 1. | விரல் ரேகைப்பதிவு இயக்குநர்கள் .. | 5 |
| 2. | விரல் ரேகைப் பதிவு கண்காணிப்பாளர்கள் | 7 |
| 3. | விரல் ரேகைப் பதிவு வல்லுநர்கள் .. | 4 |
| 4. | விரல் ரேகைப் பிரிவு தேடுநர்கள் .. | 56 |

| | | | |
|---|---|---|---|
| 5. தொழில் நுட்ப அலுவலர் | .. | .. | 1 |
| 6. தொழில் நுட்ப உதவியாளர் | .. | .. | 1 |
| 7. வானொலி மேற்பார்வையாளர்கள் | | .. | 6 |
| 8. வானொலி நுண்ணறிவாளர்கள் | .. | .. | 10 |
| மொத்தம் | | .. | 68 |

## இணைப்பு III.

(842-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

### தமிழ்நாடு தீயணைப்புத் துறை.

### 1982-83

### ஆய்வுரை.

1. நோக்கம்..—தமிழ்நாடு தீயணைப்புத் துறை, 1967 ஆம்
ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் தனித் துறையாக இயங்கி
வருகிறது. நம் நாட்டிலேயே மிகப் பெரியதாகவும், சீரிய
திறன் வாய்ந்ததாகவும் தமிழ்நாடு தீயணைப்புத் துறை
தொடர்ந்து பணியாற்றி .வருகிறது. மக்களின் உயிரையும்,
உடைமைகளையும் தீ விபத்துக்களிலிருந்து 'காத்து வருவதே,
தமிழ்நாடு தீயணைப்புத் துறையின் நோக்கமும் குறிக்கோளும்
ஆகும். இத்துறையின் பணி இரவு பகல் எந்நேரத்
திலும் பொது மக்களுக்குக் கிடைக்குமளவில் செயலாற்றி
வருகிறது. தீ விபத்தினைத் தடுப்பதும், தீயை அணைப்பதும்
இத்துறையின் தலையாய பணியாயினும், மக்களின் நலனுக்காக
பிறவகையிலும் பல நிலைகளில் இத்துறை நற்பணியாற்றி வரு
கிறது. பொருட்காட்சிகளிலும், திருவிழாக்களிலும் தீத்
தடுப்பு ஏற்பாடுகளைச் செய்வதுடன் சிதைந்த கட்டிடங்களின்
இடிபாடுகளிலும், வெள்ளம், கிணறுகள் முதலிய இடர்களிலும்
சிக்கிக்கொண்ட மக்களையும், கால்நடைகளையும் காப்பாற்
றும் நற் பணியையும் புரிந்து வருகிறது. நோயுற்றவர்களையும்,
காயமுற்றவர்களையும் உடனடியாக மருத்துவச் சிகிச்சைக்காக
மருத்துவமனைக்குக் கொண்டு செல்லக்கூடிய ஊர்திகள்
பெரிய நகரங்களிலுள்ள தீயணைப்பு நிலையங்களில் பரா
மரிக்கப்பட்டு வருகின்றன. கொள்ளை நோய்கள் பரவும்
காலங்களில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இத்துறை பெரிதும்
உதவுகிறது. தேர்தல் காலங்களிலும், கலவரங்களின் போதும்,
பந்தோபஸ்துப்.பணிக்காகவும் காவல் துறையினருடன் இணைந்து
பணியாற்றத் தீயணைப்புத் துறை பணியாளர்களும் அனுப்பி
வைக்கப்படுகின்றனர்.



மேற்கூறிய சமூக நலப் பணிகளைத் தவிர, பொது மக்கள்
கூடும் இடங்கள் பற்றிய சட்டம், தமிழ்நாடு மாவட்ட நக
ராட்சிகள் சட்டம், சென்னை மாநகராட்சிச் சட்டம், தமிழ்
நாடு ஊராட்சிகள் சட்டம், படைக்கலச் சட்டம் ஆகியவற்றின்
கீழும் அவற்றின்கீழ் இயற்றப்பட்ட விதிகள், தமிழ்நாடு
தொழிற்சாலைகள் விதிகள் ஆகியவற்றின் கீழும் உரிமங்கள்
வழங்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்படவுள்ள பல்வேறு இடங்
களை ஆய்வு .செய்யும் பணிகளையும் இத்துறை அலுவலர்கள்
மேற்கொண்டு வருகின்றனர்.

2. நிருவாக அமைப்பு.—இத்துறை, தீயணைப்புத்துறை இயக்
குநரின்கீழ் தொடர்ந்து செயலாற்றி வருகின்றது. இம்மாநிலம்
இரண்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, இரண்டு மண்ட
லங்களில் ஒன்று சென்னையிலும் பிறிதொன்று மதுரையை
யும் தலைமையிடமாகக் கொண்டு துணை இயக்குநர்களின்கீழ்
செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மண்டலமும், கோட்டங்
களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கோட்டத்திலும்,
ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்கள் அடங்கி
யுள்ளன. ஒவ்வொரு கோட்டமும், ஒரு கோட்டத் தீயணைப்பு
அலுவலரின்கீழ் செயல்பட்டு வருகின்றது. இவருக்கு நிருவாக,
செயல்முறைப் பணிகளில் உதவிபுரிய ஓர் உதவிக் கோட்டத்
தீயணைப்பு அலுவலர் உள்ளார். சமீப காலத்தில், பல புதிய
தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக,
ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் அதிகார வரம்பிற்கு
உட்பட்ட தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகமாகி
விட்டன. தற்சமயமுள்ள மண்டலங்கள், கோட்டங்களைப்
படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ் பல மண்ட
லங்கள், கோட்டங்களாகப் பிரிப்பதென அரசு முடிவு
செய்துள்ளது. முதல் கட்டமாக 1982 ஆம் ஆண்டில் இரண்டு
கோட்டங்களை அதாவது சேலம்—தருமபுரி—வட ஆர்க்காடு,
திருநெல்வேலி—கன்னியாகுமரி—இராமநாதபுரம் கோட்டங்களைப்
பிரிப்பதற்கு ஆணைகள் வழங்கியதோடு, தேவையான பணி
யாளர்களை நியமிக்கவும் ஒப்புதல் அளித்தது. இத்திட்டம்
1-10-1982 முதல் செயல்படுத்தப்பட்டது. தற் சமயம்
ஒவ்வொரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் கீழும் ஒன்று
வீதம் மொத்தம் 10 கோட்டங்கள் உள்ளன.

3. தீயணைப்பு நிலையங்கள்..—நம்முடைய மாநிலத்தில்,
1983 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1 ஆம் நாள் நிலவரப்படி,
இத்துறைப் பணியாளர்களால் நிர்வகிக்கப்பட்டு வரும்
சேலம் உருக்காலைத் தீயணைப்பு நிலையம் உட்பட மொத்தம்
137 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. (விவரங்
கள் இணைப்பு 2-ல் அளிக்கப்பட்டுள்ளன.)

இவற்றில், 19 தீயணைப்பு நிலையங்கள் சென்னை மாநகரிலும், ஏனைய 108 தீயணைப்பு நிலையங்கள் மாவட்டங்களிலும் அமைந்துள்ளன. இவ்வாண்டில் . கரூர், போளூர், நாங்குனேரி, சாத்தூர்.ஆகிய இடங்களில் .ஏற்படுத்தப்பட்டுள்ள 4 தீயணைப்பு நிலையங்களும் இதில் அடங்கும். சென்னை மாநகரில் வ.உ.சி. நகரில் 19–2–1983 ஆம் நாளன்று ஒரு தீயணைப்பு நிலையம் .ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி என்ற இடத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் விரைவில் .ஏற்படுத்தப்பட உள்ளது. இது தவிர, தேவையான புதிய ஊர்திகள் கிடைத்தவுடன், மேலும் 11 இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன. புதிய தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படுவதற்கான முன்னுரிமைப் .பட்டியலிலுள்ள நகரங்களின் பட்டியல் இணைப்பு 3-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

4. பணியாளர்களின் எண்ணிக்கை.—1983 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 ஆம் நாள் நிலவரப்படி தமிழ்நாடு தீயணைப்புத் துறைப் பணியாளர்களின் எண்ணிக்கை விவரங்கள் இணைப்பு 1–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

5. தீ விபத்து குறித்த அழைப்புகள்.—1982 ஆம் ஆண்டில் இம் மாநிலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு 11,965 அழைப்புகள் கிடைக்கப் பெற்றதில் 160 போலி அழைப்புகளாகும். அவசர, மீட்பு அழைப்புகள் 1,728.

எஞ்சிய 10,077 அழைப்புகள் தீ விபத்து அழைப்புகளாகும். இது பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை 4-ல் அளிக்கப்பட்டுள்ளன.

தீ விபத்து ஏற்பட்டவற்றுள் 132 விபத்துக்களில் ஒவ்வொன்றிலும் ரூ. 50,000-க்கு மேற்பட்ட உடைமைகள் இழப்பேற்பட்டது. இம்மாநிலத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்களினால் அழிந்துவிட்ட அல்லது சேதமடைந்த உடைமைகளின் மதிப்பு ரூ. 636.6 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தீ விபத்துக்களினின்றும் மீட்கப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூ. 4,375.1 இலட்சமாகும்.

6. உயிர் மீட்பு அவசரப்பணி அழைப்புகள் :—1982 ஆம் ஆண்டில் நேர்ந்த அவசர மீட்பு அழைப்புகளின் எண்ணிக்கை 1,728 ஆகும். தீயணைப்புத் துறைப் பணியாளர்கள் அல்லும் பகலும் அயராது அரும்பாடுபட்டு மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் காப்பாற்றியுள்ளனர்.

7. நோயாளிகளைக் கொண்டு செல்லும் ஊர்தி.—ஒவ்வொரு நகரத்தின் தேவைக்கேற்ப, அவசர சிகிச்சைக்கென நோயாளிகளை உடனடியாக மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும் ஊர்திகளும் தீயணைப்பு நிலையங்களில பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1982 ஆம் ஆண்டில் மட்டும் இவ்வூர்திகள் 5,637 அழைப்புகளுக்குச் சென்று பணியாற்றியுள்ளன. இவற்றில



விபத்து. ஏனைய இலவச அழைப்புகளின் எண்ணிக்கை 350.
5,287 அழைப்புகளுக்குக் கட்டணம் பெறப்பட்டுள்ளது.
நோயாளர்களைச் சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்குக்
கொண்டு செல்லும் ஊர்தி வாடகைக் கட்டணமாக
ரூ. 1,59,164 பெறப்பட்டது.

8. விபத்து உதவி வண்டி.—இத்துறையில் ஒரே ஒரு விபத்து
உதவி வண்டி உள்ளது. தென் சென்னைக் கோட்டத்தைச்
சேர்ந்த எழும்பூர் தீயணைப்பு நிலையத்தில் இவ்வூர்தி நிறுத்தி
வைக்கப்பட்டுள்ளது. சாலை விபத்துக்களில் கவிழ்ந்த ஊர்தி
களைத் தூக்கி அகற்றவும், இடிந்த கட்டிடங்களில் மீட்புப்
பணியின்போது பெரும்பாரமான கட்டிடப் பகுதிகளை அகற்ற
வும் இவ்வூர்தியில் தனித் துணைப் பாகங்கள் பொருத்தப்பட்
டுள்ளன. இது போன்ற பணிகளுக்காக 1982 ஆம் ஆண்டில்
இவ்வூர்தி 24 முறை பயன்படுத்தப்பட்டு ரூ. 3,990 கட்டணமாகப்
பெறப்பட்டது.

9. பணிக்களரி, பழுதுபார்க்கும் நடமாடும் குழு.— இத்
துறையின் ஊர்திகள், இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றைப்
பழுது பார்ப்பதற்காக சென்னையில் பணிமனை ஒன்று இயங்கி
வருகின்றது. இதில், துறை வண்டிகள் தொடர்பான ரூ.
1,55,788 மதிப்புள்ள 259 பழுது பார்ப்புப் பணிகள் மேற்
கொள்ளப்பட்டன. இத் துறையின் நீண்ட நாளைய தேவை
களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, மாநிலப் பட்டறையைப்
புனரமைப்பு செய்ய தீர்மானிக்கப்பட்டு, அதன் முதல் கட்டமாக
உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலருக்குப் (போக்குவரத்து)
பதிலாக, உதவிப் பொறியாளர் (இயக்கூர்தி) என்ற பதவியை
ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. மோட்டார் வாகன
பராமரிப்புத் துறையைச் சேர்ந்த ஓர் இயக்கூர்திப் பொறியா
ளரை மேற்படி பதவியில் நியமனம் செய்வதற்கான செயற்
குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. சேலம், விருதுநகர்
மற்றும் வட சென்னைக் கோட்டம் தவிர, இதர கோட்டங்
களில், அந்தந்தக் கோட்டத்தைச் சேர்ந்த ஊர்திகளில் அவ்வப்
போது ஏற்படும் பழுதுகளைக் கவனிப்பதற்கென ஒரு பழுது
பார்க்கும் நடமாடும் குழு உள்ளது. இந்தப் பழுது பார்க்கும்
நடமாடும் குழுக்கள் ரூ. 1,13,046 மதிப்புள்ள 333 பணிகளைச்
சென்ற ஆண்டில் மேற்கொண்டன.

தீயணைப்புத் துறையில் கோட்ட வாரியாக ஒப்புதல் அளிக்கப்
பட்ட சாதனங்களின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை
இணைப்பு 5-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தியப் பொது
ஈட்டுறுதிக் கழகம், புதிய ஊர்திகள் வாங்குவதற்கென இத்
துறைக்கு ரூ. 141 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. இந்தத்
தொகையிலிருந்து பின்பக்க பம்ப் அமைப்பும், 1,000 காலன்
கொள்ளளவும் கொண்ட நீர்தாங்கி வண்டிகள் கட்டுமானம்

மற்றும் 117 பணியாளர்களுக்கு இலவசக் குடியிருப்பும் வழங்கப்படும். படிப்படியாக இத் திட்டத்தின் கீழ் ஏனைய நகரங்களில் உள்ள இதர பணியாளர்களுக்கும் குடியிருப்புகள் கட்டித் தருவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

14. பொது.—இத்துறையின் பயன் மற்றும் நிர்வாகத் திறனை அதிகரிக்கும் நோக்கத்தோடு, அரசு இரண்டு புதிய மண்டலங்களை ஏற்படுத்தியும், அதிகத் தீயணைப்பு நிலையங்கள் கொண்ட கோட்டங்களைப் படிப்படியாக, திட்டத்தின் கீழ் பிரித்தும் இத் துறையை மாற்றியமைப்பது பற்றியும் கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. முதற் கட்டமாக, இவ்வாண்டில் சேலம்—தருமபுரி—வட ஆர்க்காடு, திருநெல்வேலி—கன்னியாகுமரி—இராமநாதபுரம் ஆகிய கோட்டங்களைப் பிரிக்க ஒப்புதல் அளித்துள்ளது. நடப்பு ஆண்டில் இரண்டாம் கட்டமாக, திருச்சிராப்பள்ளி—புதுக்கோட்டை—தஞ்சாவூர் கோட்டத்தினைப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசு அளித்துள்ள மாதிரியின் அடிப்படையில் தீயணைப்புத் துறைச் சட்ட முன்வடிவு தயாரிக்கப்பட்டது. இம் மாநிலத்திலும் அத்தகைய சட்டம் இயற்றுவது பற்றிய பிரச்சினை அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. இச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படும்போது இத் துறையில் நிர்வாகம், மற்றும் செயல்திறனில் பெருமளவில் முன்னேற்றம் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறாக, இத்துறை பொது மக்களுக்குப் பயனுள்ள வகையில் தொடர்ந்து நற்பணி ஆற்றி வருகிறது.



## தமிழ்நாடு தீயணைப்புத்துறை.

### இணைப்பு 1.

1983 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதலாம் நாள் அன்று அனுமதிக்கப்பட்டுள்ள தீயணைப்புப் படைப் பணியாளர்களின் எண்ணிக்கை :—

| வரிசை எண்ணும், பதவிப் பெயரும் (1) | பதவி எண்ணிக்கை. (2) |
|---|---|
| **நிர்வாகம்.** | |
| 1. தீயணைப்புத் துறை இயக்குநர் .. .. | 1 |
| 2. தீயணைப்புத் துறை துணை இயக்குநர்கள் .. | 2 |
| 3. கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் .. | 11 |
| 4. உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் | 12 |
| 5. உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் (போக்குவரத்து). | 1 |
| 6. நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் .. | 138 |
| 7. நிலைய அலுவலர்கள் (போக்குவரத்து) .. | 10 |
| 8. முன்னணித் தீயணைப்போர் .. .. | 459 |
| 9. ஓட்டுநர்—எந்திரக் கம்மியர் .. .. | 127 |
| 10. தீயணைப்புத் துறை கம்மியர் .. .. | 8 |
| 11. தீயணைப்புத் துறை ஓட்டுநர்கள் .. .. | 695 |
| 12. பற்றவைப்பாளர் (வெல்டர்) .. .. | 1 |
| 13. தீயணைப்புத் துறைத் தச்சர் .. .. | 1 |
| 14. தீயணைப்புப் பணியாளர் அதற்கு நிகரான பதவித் தரத்திலுள்ளவர்கள். | 2,612 |
| மொத்தம் .. | 4,078 |

**நிர்வாகப் பணியாளர்கள்.**

| | |
|---|---|
| 1. தீயணைப்புத் துறை இயக்குநரின் நிர்வாக நேர்முக உதவியாளர். | 1 |
| 2. கண்காணிப்பாளர்கள் (தேர்வுத் தரம்) .. | 4 |
| 3. கண்காணிப்பாளர்கள் .. .. .. | 11 |
| 4. உதவியாளர்கள் .. .. .. .. | 44 |
| 5. இளநிலை உதவியாளர்கள் .. .. .. | 48 |
| 6. சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் .. .. | 3 |
| 7. தட்டச்சர்கள் .. .. .. | 17 |
| 8. பதிவேட்டு எழுத்தர்கள் .. .. .. | 12 |
| 9. அடிப்படை பணியாளர்கள் .. .. | 29 |
| மொத்தம் .. | 169 |

## இணைப்பு 2.

### 1—2—1983 ஆம் நாள் நிலவரப்படி இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை.

| மாவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர். | இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **வட வட்டாரம்.** | |
| **சென்னை மாநகர் கோட்டம்.** | |
| வட சென்னைக் கோட்டம் | வண்ணாரப்பேட்டை. |
| | எஸ்பிளனேடு. |
| | இராயபுரம். |
| | வியாசர்பாடி. |
| | செம்பியம். |
| | கீழ்ப்பாக்கம். |
| | வேப்பேரி. |
| | தண்டையார்பேட்டை. |
| பொன்னேரி .. .. | எண்ணூர். |
| | மணலி. |
| தென் சென்னைக் கோட்டம் | எழும்பூர். |
| | திருவல்லிக்கேணி. |
| | மைலாப்பூர். |
| | தேனாம்பேட்டை. |
| | அசோக் நகர். |
| | சைதாப்பேட்டை. |
| | கிண்டி. |
| சைதாப்பேட்டை .. .. | தாம்பரம். |
| | அம்பத்தூர். |
| **தென் ஆற்காடு—செங்கற்பட்டு கோட்டம்.** | |
| **தென் ஆற்காடு மாவட்டம்.** | |
| சிதம்பரம் .. .. | சிதம்பரம். |
| கடலூர் .. .. .. | கடலூர். |
| பண்ருட்டி .. .. .. | பண்ருட்டி. |
| விருத்தாசலம் .. .. | விருத்தாசலம். |
| கள்ளக்குறிச்சி .. .. | கள்ளக்குறிச்சி. |
| திருக்கோயிலூர் .. .. | திருக்கோயிலூர் |
| உளுந்தூர்பேட்டை .. | உளுந்தூர்பேட்டை. |
| விழுப்புரம் .. .. | விழுப்புரம். |
| திண்டிவனம் .. .. | திண்டிவனம். |
| செஞ்சி .. .. .. | செஞ்சி. |



| மாவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர். | இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **தென் ஆற்காடு—செங்கல்பட்டு கோட்டம்.** | |
| **ங்கற்பட்டு மாவட்டம்.** | |
| காஞ்சீபுரம் .. .. | காஞ்சீபுரம். |
| ஸ்ரீபெரும்புதூர் .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| மதுராந்தகம் .. .. | மதுராந்தகம். |
| செங்கற்பட்டு .. .. | செங்கற்பட்டு. |
| திருவள்ளூர் .. .. .. | திருவள்ளூர். |
| கும்மிடிப்பூண்டி .. .. | கும்மிடிப்பூண்டி. |
| **சேலம்—தர்மபுரி கோட்டம்.** | |
| **சேலம் மாவட்டம்.** | |
| சேலம் .. .. .. | சேலம். |
| | சேலம் உருக்காலை. |
| ஆத்தூர் .. .. .. | ஆத்தூர். |
| மேட்டூர் .. .. .. | மேட்டூர். |
| நாமக்கல் .. .. .. | நாமக்கல். |
| இராசிபுரம் .. .. | இராசிபுரம். |
| **தர்மபுரி மாவட்டம்.** | |
| தர்மபுரி .. .. | தர்மபுரி. |
| ஓசூர் .. .. .. | ஓசூர் (சிப்காட்). |
| கிருஷ்ணகிரி .. .. .. | கிருஷ்ணகிரி. |
| அரூர் .. .. .. | அரூர். |
| **வடஆற்காடு கோட்டம்.** | |
| **வட ஆற்காடு மாவட்டம்.** | |
| வேலூர் .. .. .. | வேலூர். |
| வாலாஜா .. .. .. | ராணிப்பேட்டை (சிப்காட்). |
| | ராணிப்பேட்டை. |
| அரக்கோணம் .. .. | அரக்கோணம் |
| வந்தவாசி .. .. .. | வந்தவாசி. |
| ஆரணி .. .. .. | ஆரணி. |
| திருவண்ணாமலை .. .. | திருவண்ணாமலை. |
| செங்கம் .. .. .. | செங்கம். |
| திருப்பத்தூர் .. .. | திருப்பத்தூர். |
| வாணியம்பாடி .. .. | வாணியம்பாடி. |
| | ஆம்பூர். |
| குடியாத்தம் .. .. | குடியாத்தம். |
| போளூர் .. .. .. | போளூர். |

செய்வதற்கென 12 அடிக்கட்டைகளும், நோயாளர் ஊர்திகள் 10-ம், மற்றும் 10 ''ரோசன் பார்'' பம்புகளும் வாங்கப்பட்டுள்ளன. நோயாளர் ஊர்திகளும், பம்புகளும் தீயணைப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்டன. 54 நீர் தாங்கி வண்டிகள், 5 தண்ணீர் லாரிகள், 5 நோயாளர் ஊர்திகள் ஆகியவை கட்டுமானம் குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. இந்த ஊர்திகள் தயாராகி, தீயணைப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்டதும், இத்துறையின் செயல்திறன் எதிர்பார்க்கும் அளவிற்கு முன்னேற வாய்ப்புள்ளது. மேற்படி கடன் தொகையிலிருந்து வேறு சில ஊர்திகள் வாங்குவது பற்றியும் அரசு பரிசீலித்து வருகிறது. 1980 ஆம் ஆண்டு ''ஸ்நார்க்கல்'' என்ற நவீன வசதிகள் கொண்ட ஓர் ஊர்தி, இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, சென்னை மாநகருக்கு வழங்கப்பட்டது. சென்னை மாநகரிலும், அதன் சுற்றுப் பகுதிகளிலும் ஏற்பட்ட சில பெருந் தீ விபத்துக்கள் மற்றும் குடிசைத் தீ விபத்துக்களின் போது இந்த ஊர்தி மிகவும் உதவியாக இருந்தது.

10. பயிற்சி.—சென்னையிலுள்ள தமிழ்நாடு தீயணைப்புத் துறை மாநிலப் பயிற்சிப் பள்ளி இத்துறை அலுவலர்களுக்கும் மற்றும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் இத் துறைப் பணியாளர்களுக்கும், தொடர்ந்து பயிற்சியளித்து வருகிறது. இப் பயிற்சிப் பள்ளி கோட்டத் தீயணைப்பு அலுவலர் ஒருவரின் பொறுப்பில் செயல்பட்டு வருகிறது. இவருக்கு உதவியாக நிலையத் தீயணைப்பு அலுவலர் இருவரும், முன்னணித் தீயணைப்போர் இருவரும் உள்ளனர். இந்த ஆண்டில், தீயணைப்பு நிலைய அலுவலர்களுக்கு ஒரு பயிற்சி வகுப்பும், தீயணைப்புப் பணியாளர்களுக்காக 2 பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டன. நேரடியாக நியமனம் செய்யப்பட்ட தீயணைப்பு நிலைய அலுவலர்கள் 12 பேருக்கும், தீயணைப்போர் 182 பேருக்கும் மற்றும் துறைமுகத் துறைப் பணியாளர்கள் 10 பேருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. தற்போது, தீயணைப்போர் ஓட்டுநர்கள் பதவிக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட தீயணைப்போருக்குக் கோட்டத் தலைமையிடங்களில், நடமாடும் பழுது பார்க்கும் குழுவினர், ஓட்டுநர் மற்றும் பம்ப் இயக்கம் தொடர்பான பயிற்சி அளித்து வருகின்றனர். இப்பயிற்சியின் தரத்தை உயர்த்தும் பொருட்டு இப்பயிற்சியினைச் சென்னை மாநகரில் அளிக்கவும், அதற்கு வசதியாகத் தமிழ்நாடு தீயணைப்புத் துறை மாநிலப் பயிற்சிப் பள்ளியில் தேவையான பணியாளர்களுடன் ஓட்டுநர் பயிற்சிப் பிரிவு ஒன்றை அமைக்கவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இது தவிர, நாகபுரி தேசிய தீயணைப்புப் பயிற்சிக் கல்லூரியில் உயர் பயிற்சி பெறுவதற்காகத் தீயணைப்பு நிலைய அலுவலர்கள் இருவர் அனுப்பப்பட்டனர். மேலும், தீயணைப்பு நிலைய அலுவலர் ஒருவர் உயர் பயிற்சிக்காக இலண்டன் மாநகருக்கு அனுப்பப்பட்டார். அவர் வெற்றிகரமாகப் பயிற்சியை முடித்துக்கொண்டு 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தாயகம் திரும்பினார்.



11. பரிசுகள் :—இவ்வாண்டில் வீர தீர செயல்களுக்கான இந்தியக் குடியரசுத் தலைவரது பதக்கம் முன்னணித் தீயணைப்பாளர் ஒருவருக்கும் அளிக்கப்பட்டது. தீயணைப்பு நிலைய அலுவலர்கள் 3 பேருக்கும் முன்னணித் தீயணைப்பாளர் ஒருவருக்கும், தீயணைப்பாளர்-ஓட்டுநர் ஒருவருக்கும் பாராட்டத்தகு பணிக்கான இந்தியக் குடியரசுத் தலைவர் பதக்கம் வழங்கப்பட்டது. தீயணைப்பு நிலைய அலுவலர் ஒருவருக்கும், முன்னணித் தீயணைப்பாளர் ஒருவருக்கும், தீயணைப்பாளர் ஓட்டுநர் ஒருவருக்கும் பாராட்டத்தகு பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கப்பட்டது.

12. தீயணைப்புத்துறை சேமநல நிதி.— துயருற்ற தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு நிதியுதவி செய்யவும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் 1962 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத் துறை சேமநல நிதி தொடங்கப்பட்டது. காசநோய், தொழுநோய் அல்லது புற்றுநோயால் அவதியுறும் பணியாளர்களுக்கோ அல்லது அவரைச் சார்ந்துள்ளவர்களுக்கோ அவர்களின் சத்துணவிற்காக நிதியுதவி மேற்படி நிதியிலிருந்து அளிக்கப்படுகிறது. அவர்களுடைய குழந்தைகளின் உயர் கல்விக்குப் பண உதவியும் அளிக்கப்படுகிறது. பணியாளர்களோ அல்லது அவர்களைச் சார்ந்துள்ளவர்களோ இறக்க நேரிட்டால், அவர்களது ஈமச் சடங்கிற்கு நிதியிலிருந்து உதவி அளிக்கப்படுகிறது. பணிக் காலத்தில் இந்த நிதியிலிருந்து எவ்வித நிதி உதவியும் பெறாதவர்களுக்கு ஓய்வு பெறும்பொழுது அடையாள உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இந்த நிதியின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 3,776 ஆகும். 1982 ஆம் ஆண்டில் உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட மொத்த சந்தாத் தொகை ரூ. 62,289.13 ஆகும். 1982 ஆம் ஆண்டில் பணியாளர்களுக்கு இந்த நிதியிலிருந்து வழங்கப்பட்ட உதவியின் மதிப்பு ரூ. 30,001.55 ஆகும். அரசு இந்நிதிக்கென மொத்த மானியம் ரூ. 10,000 வழங்கியது.

13. பணியாளர் நலன்.—(1) உதவிக்கோட்டத் தீயணைப்பு அலுவலர் பதவித் தரத்திலும், அதற்குக் கீழும் உள்ள பணியாளர்களுக்குச் சலுகை விலையில் அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் காரணமாக, அரசுக்கு ஓர் ஆண்டிற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ. 30 இலட்சம் ஆகும்.

(2) அரசு, உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை மற்றும் சிவகாசியில் தீயணைப்புத் துறைப் பணியாளர்களுக்கு ரூ. 40.5 இலட்சம் செலவில் குடியிருப்புகள் கட்ட அனுமதியளித்துள்ளது. மேற்படி கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வேலை முடிவுற்றவுடன், 8 தீயணைப்பு நிலைய அலுவலர்கள்

[1983 ஏப்ரல் 7

| மாவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர். (1) | இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். (2) |
|---|---|
| **தென் வட்டாரம்.** | |
| **மதுரைக் கோட்டம்.** | |
| **மதுரை மாவட்டம்.** | |
| மதுரை (தெற்கு) .. .. | மதுரை. |
| மதுரை (வடக்கு) .. | தல்லாகுளம். |
| மேலூர் .. .. .. | மேலூர். |
| நத்தம் .. .. | நத்தம். |
| உசிலம்பட்டி .. .. | உசிலம்பட்டி. |
| நிலக்கோட்டை .. .. | வத்தலகுண்டு. |
| திண்டுக்கல் .. .. | திண்டுக்கல். |
| பழனி .. .. | பழனி. |
| | ஒட்டன்சத்திரம். |
| பெரியகுளம் .. .. | பெரியகுளம்: |
| | தேனி-அல்லிநகரம். |
| உத்தமபாளையம் .. .. | உத்தமபாளையம். |
| | போடிநாயக்கனூர். |
| **கோயமுத்தூர்—பெரியார்—நீலகிரி கோட்டம்.** | |
| **கோயமுத்தூர் மாவட்டம்.** | |
| கோயமுத்தூர் .. .. | கோயமுத்தூர் (தெற்கு) |
| | கோயமுத்தூர் (வடக்கு) |
| மேட்டுப்பாளையம் .. | மேட்டுப்பாளையம். |
| பல்லடம் .. .. .. | திருப்பூர். |
| பொள்ளாச்சி .. .. | பொள்ளாச்சி. |
| உடுமலைப்பேட்டை .. | உடுமலைப்பேட்டை. |
| **பெரியார் மாவட்டம்.** | |
| ஈரோடு .. .. .. | ஈரோடு. |
| தாராபுரம் .. .. | தாராபுரம். |
| | காங்கேயம். |
| கோபிச்செட்டிப்பாளையம் .. | கோபிச்செட்டிப்பாளையம். |
| **நீலகிரி மாவட்டம்.** | |
| கூடலூர் .. .. .. | கூடலூர். |
| உதகமண்டலம் .. .. | உதகமண்டலம். |
| குன்னூர் .. .. | குன்னூர். |



1983 ஏப்ரல் 7]

| மாவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர். (1) | இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். (2) |
|---|---|
| **திருச்சிராப்பள்ளி—புதுக்கோட்டை—தஞ்சாவூர் கோட்டம்.** | |
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்.** | |
| திருச்சிராப்பள்ளி .. .. | திருச்சிராப்பள்ளி. |
| | ஸ்ரீரங்கம். |
| முசிறி .. .. .. | முசிறி. |
| துறையூர் .. .. .. | துறையூர். |
| பெரம்பலூர் .. .. | பெரம்பலூர். |
| | ஜெயங்கொண்டசோழபுரம். |
| கரூர் .. .. .. | கரூர். |
| மணப்பாறை .. .. | மணப்பாறை. |
| **புதுக்கோட்டை மாவட்டம்.** | |
| புதுக்கோட்டை .. .. | புதுக்கோட்டை. |
| அறந்தாங்கி .. .. | அறந்தாங்கி. |
| **தஞ்சாவூர் மாவட்டம்.** | |
| தஞ்சாவூர் .. .. .. | தஞ்சாவூர். |
| கும்பகோணம் .. .. | கும்பகோணம். |
| மன்னார்குடி .. .. | மன்னார்குடி. |
| நாகப்பட்டினம் .. .. | நாகப்பட்டினம் |
| திருவாரூர் .. .. .. | திருவாரூர். |
| நன்னிலம் .. .. .. | நன்னிலம். |
| மயிலாடுதுறை .. .. | மயிலாடுதுறை. |
| பட்டுக்கோட்டை .. .. | பட்டுக்கோட்டை. |
| **திருநெல்வேலி—கன்னியாகுமரி கோட்டம்.** | |
| **திருநெல்வேலி மாவட்டம்.** | |
| திருநெல்வேலி .. .. | பாளையம்கோட்டை. |
| | (திருநெல்வேலி பேட்டை) |
| தென்காசி .. .. .. | தென்காசி |
| | கடையநல்லூர். |
| கோவில்பட்டி .. .. | கோவில்பட்டி. |
| தூத்துக்குடி .. .. | தூத்துக்குடி. |
| தூத்துக்குடி .. .. | தூத்துக்குடி அனல் மின் நிலையம். |
| திருச்செந்தூர் .. .. | திருச்செந்தூர். |
| நாங்குநேரி .. .. | நாங்குநேரி. |
| அம்பாசமுத்திரம் .. | அம்பாசமுத்திரம். |

| மாவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர். | இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **திருநெல்வேலி—கன்னியாகுமரி கோட்டம்.** | |
| **கன்னியாகுமரி மாவட்டம்.** | |
| அகஸ்தீஸ்வரம் .. | நாகர்கோயில்.<br>கன்னியாகுமரி |
| விளவங்கோடு .. .. | குழித்துறை. |
| **இராமநாதபுரம் கோட்டம்.** | |
| **இராமநாதபுரம் மாவட்டம்.** | |
| இராமநாதபுரம் .. .. | இராமநாதபுரம்<br>இராமேஸ்வரம். |
| காரைக்குடி .. .. | காரைக்குடி. |
| தேவக்கோட்டை .. .. | தேவக்கோட்டை. |
| சிவகங்கை .. .. .. | சிவகங்கை. |
| பரமக்குடி .. .. .. | பரமக்குடி. |
| ஸ்ரீவில்லிபுத்தூர். .. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| இராஜபாளையம் .. .. | இராஜபாளையம். |
| சாத்தூர் .. .. .. | சாத்தூர்.<br>சிவகாசி. |
| அருப்புக்கோட்டை .. | அருப்புக்கோட்டை. |
| விருதுநகர் .. .. .. | விருதுநகர். |



## இணைப்பு.

### தீயணைப்பு நிலையங்கள் தொடங்குவதற்கான முன்னுரிமைப் பட்டியலிலுள்ள நகரங்கள்.

1. சங்கரன்கோவில்.
2. திருமங்கலம்.
3. சீர்காழி.
4. காட்டுமன்னார்கோவில்.
5. செய்யார்
6. திருத்துறைப்பூண்டி.
7. வால்பாறை
8. கிரனூர்.
9. ஏர்க்காடு.
10. நெல்லிக்குப்பம்.
11. பாபநாசம்.
12. நாட்றாம்பள்ளி.
13. விளாத்திகுளம்.
14. திட்டகுடி.
15. ஆலங்குடி.
16. திருமயம்.
17. வத்திராயிருப்பு.
18. பேராவூரணி.
19. மறைமலைநகர்.
20. சாத்தான்குளம்.
21. அரவங்குறிச்சி.
22. திருக்காட்டுப்பள்ளி.

## இணைப்பு 4.

### 1982—தீ அணைப்பதற்கான அழைப்புகள்.

| மாவட்டம். (1) | பெருந் தீ. (2) | நடுத்தர தீ. (3) | சிறிய தீ. (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|
| சென்னை | 21 | 79 | 1,315 | 1,415 |
| தென் ஆர்க்காடு | 8 | 64 | 1,134 | 1,206 |
| செங்கல்பட்டு | 2 | 7 | 179 | 188 |
| சேலம் | 6 | 23 | 497 | 526 |
| தருமபுரி | 2 | 7 | 156 | 165 |
| வட ஆர்க்காடு | 17 | 52 | 1,158 | 1,227 |
| திருச்சிராப்பள்ளி | 16 | 51 | 810 | 877 |
| புதுக்கோட்டை | 1 | 13 | 132 | 146 |
| தஞ்சாவூர் | 9 | 34 | 805 | 848 |
| கோயமுத்தூர் | 6 | 25 | 498 | 529 |
| பெரியார் | 2 | 15 | 392 | 409 |
| நீலகிரி | .. | .. | 72 | 72 |
| மதுரை | 16 | 35 | 988 | 1,039 |
| திருநெல்வேலி | 10 | 43 | 570 | 623 |
| கன்னியாகுமரி | 8 | 10 | 131 | 149 |
| இராமநாதபுரம் | 8 | 31 | 619 | 658 |
| மொத்தம் | 132 | 489 | 9,456 | 10,077 |

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

## IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286 B.B. Ganguli Street, Calcutta-17

---

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS

வெளியீடு 28-11-1983] [Issued 28-11-1983

31 மார் 1984 2708

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை ஏப்ரல் 8, 1983 — தொகுதி XLVIII எண் 5
Friday 8th April 1983 Volume XLVIII No. 5

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department Fort St. George
Madras-600009

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

## இணைப்பு 5.

1—2—1983 ஆம் நாள் நிலவரப்படி ஒப்புதலளிக்கப்பட்ட தீயணைப்புப் பிரிவின் சாதனங்களின் எண்ணிக்கை.

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும் | நீர் தாங்கி வண்டி | இழுக்கும் ஊர்தி | இழுக்கும் மோட்டார் வண்டி | நோயாளி ஊர்தி | வான் தந்தி ஊர்தி | மோட்டார் சைக்கிள் | தண்ணீர் லாரி | ஏனைய வண்டிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. வட சென்னைக் கோட்டம் (10). | 15 | 5 | 5 | 5 | 3 | | 3 | பிக்கப் வேன் (பண்டக சாலை)-1. |
| தென் சென்னைக் கோட்டம் (9). | 12 | 5 | 5 | 6 | 3 | 2 | 3 | பாதுகாப்பு சாதனப் பிரிவு—1. நீர் குழாய் வண்டி—1. கிராஷ் டெண்டர்—1. மடக்கு ஏணி—1. அவசர கால வேன்—1. ஸ்நார்க்கல்—1. நீர்க்குழாய் வண்டி—1. |
| 3. தென் ஆர்க்காடு (10). | 10 | 5 | 10 | 6 | 1 | 1 | .. | |
| 4. செங்கல்பட்டு (6). | 6 | 2 | 5 | 2 | .. | .. | .. | |
| 5. வட ஆர்க்காடு (13). | 13 | 7 | 12 | 7 | [illegible] | 1 | .. | |
| 6. தருமபுரி (4) | 4 | 1 | 3 | 1 | .. | .. | .. | |
| 7. சேலம் (6) | 5 | 2 | 5 | 1 | . | .. | 1 | (சேலம் உருக்குத் தொழிற் சாலைப் பிரிவுகள் சேர்க்கப்படவில்லை.) |
| 8. திருச்சிராப்பள்ளி (8). | 8 | 5 | 7 | 5 | 1 | 1 | .. | |
| 9. புதுக்கோட்டை (2) | 2 | 1 | 1 | 1 | .. | .. | . | |
| 10. தஞ்சாவூர் (8) | 8 | 6 | 7 | 6 | .. | .. | .. | |
| 11. கோயமுத்தூர் (6). | 6 | 5 | 6 | 5 | 1 | 1 | 1 | |
| 12. பெரியார் (4) | 4 | 2 | 3 | 2 | .. | .. | .. | |
| 13. நீலகிரி 3) | 3 | 2 | 2 | 3 | .. | .. | .. | |
| 14. மதுரை 13) | 13 | 7 | 9 | 6 | 1 | 1 | .. | |
| 15. திருநெல்வேலி (10). | 11 | 4 | 8 | 4 | 1 | 1 | .. | கிராஷ் டெண்டர்—1. |
| 16. கன்னியாகுமரி (3). | 3 | 1 | 2 | 1 | .. | .. | .. | |
| 17. இராமநாதபுரம் (12( | 12 | 6 | 10 | 6 | . | .. | .. | |
| கோட்ட ஒதுக்கீடு | 12 | . | . | .. | .. | .. | .. | |
| மொத்தம் (137). | 147 | 66 | 100 | 67 | 12 | 8 | 8 | |
| அனுமதி வழங்கப்பட்டுத் தொடங்கப்படாமலுள்ள தீயணைப்பு நிலையங்கள் (13). | 13 | .. | .. | .. | .. | .. | .. | |
| அனுமதி வழங்கப்பட்டுள்ள பிரிவுகளின் எண்ணிக்கை (150). | 160 | 66 | 100 | 67 | 12 | 8 | 8 | |

## உள்ளடக்கம்.

8—4—1983

பக்கங்கள்.


1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 1009—1047

2. அறிவிப்புகள்—

(அ) உறுப்பினர் திரு. வெ. இராஜசேகரன் கைது செய்யப்பெற்றுள்ளது. .. 1047

(ஆ) பேரவை அலுவல். .. .. 1136—1137

3. தகவல் கோரல்—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் 1047—1052

4. ஒத்திவைப்புத் தீர்மானம்—

இராஜபாளையத்தில் நெசவாளர்கள் நடத்தும் போராட்டம் .. .. 1052—1058

5. கவன ஈர்ப்புகள்—

(அ) மன்னார்குடி உட்கோட்ட நீதித் துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தை பட்டுக்கோட்டைக்கு மாற்றுதல் .. .. 1058—1062

(ஆ) இராணிப்பேட்டை பி.எச்.இ.எல். தொழிற்சாலை .. .. 1062—1066

6. அறிக்கைகள் அளித்தல்—

(அ) தனிக்குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்டமுன்வடிவு, 1981—கூட்டாய்வுக் குழு .. .. 1066

(ஆ) பொது நிறுவனங்கள் குழு .. 1066—1067

(இ) விதி 106-ன் கீழ் தொழிலாளர் நலத் துறை [redacted]வர்களின் அறிக்கை... 1135

பக்கங்கள்.

7. வரவு-செலவுத் திட்டம் 1983-84 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 15—காவல்துறை .. } தொடர்ச்சி 1067—1142
(ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் .. }

டாக்டர் ஹே. சமரசம் .. .. 1067—1075
திரு. அ. ரகுமான்கான் .. .. 1075—1098
திரு. கோவைத்தம்பி .. .. 1098—1107
திரு. சோ. அழகர்சாமி . .. 1107—1120
திரு. இல. பலராமன் .. .. 1120—1127
திரு. ஏ. சாகுல் ஹமீது .. .. 1127—1134
திரு. க. பாரமலை .. .. 1138—1141

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 1142

2708

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1983 ஏப்ரல் 8,
பங்குனி 25, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர்."

போர் வந்தால் உயிரின்பொருட்டு அஞ்சாமல் போர் செய்யத் துணியும் வீரர், அரசன் சினந்தாலும் தம்முடைய சிறப்புக் குன்றாதவர் ஆவர்.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

தமிழ்நாடு மின்வாரியத்தின் கீழ் நடைபெறும் காண்ட்ராக்ட் பணிகளில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள்.

*வினா எண் 682—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மின்சார வாரியத்தின்கீழ் நடந்துவரும் காண்ட்ராக்ட் பணிகளில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்குச் சட்டரீதியான சம்பளம் மற்றும் அனுகூலங்கள் கிடைக்க மின்வாரியம் அடிப்படை முதலாளி ( Principal Employer ) என்ற முறையில் என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மின்வாரியம் அடிப்படை முதலாளி என்ற முறையில் ஒப்பந்தத் தொழிலாளர்கட்குச் சம்பளம் மற்றும் அனுகூலங்கள் கிடைக்க ஒவ்வொரு திட்டப் பணிக்கும் பொறுப்பான அதிகாரிகளை அடிப்படை முதலாளிகளாகப் பதிவு செய்து கொள்ளும்படி அறிவுறுத்தியுள்ளது. தொழிலாளர்கட்கு ஒப்பந்தக்காரர் சம்பளம்

வழங்கும்போது மின்வாரியம் தன்னுடைய பிரதிநிதி ஒருவரைச் சம்பளத்தைப் பட்டுவாடா செய்யும் சமயம் உடனிருக்க ஏற்பாடு செய்திருக்கிறது. மேலும், ஒப்பந்தக்காரர்கள் சம்பளம் கொடுக்கத் தவறினால் அந்தத் தொகையை அடிப்படை முதலாளி என்ற முறையில் வாரியம் வழங்க வகை செய்யப் பட்டுள்ளது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தில் ஒரு சில பணிகளுக்கு காண்ட்ராக்டர்கள் சென்று சட்ட ரீதியாக சொல்ல முடியாத முறையில் சில ஆட்களுக்கு வேலை கொடுத்து ஸ்பாட் பேமென்ட் என்ற நடைமுறையைக் கையாண்டு வருவதால் அந்தத் தொழிலாளர்களுக்குச் சட்டரீதியாக கிடைக்கக்கூடிய சம்பளமோ அல்லது இன்று மின்வாரியத்திலே மற்ற தொழிலாளர்களுக்குக் கிடைக்கக் கூடிய சம்பளமோ கிடைக்கப்படாத நிலைமையிருக்கிறது. மற்றும் உள்ள அனுகூலங்களும் அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கக்கூடிய நிலையிருக்கிறது. விபத்து ஏற்பட்டால் அதற்கான நிவாரணமும் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட ஸ்பாட் பேமன்ட் பெறக்கூடிய தொழிலாளர்களுக்கு இந்த முறையில் புரட்டக்ஷன் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகயை மின்சார வாரியம் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, முழு விவரங்களையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுத் தருவார்களானால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் பட்ஜெட் மீது பேசும்போது நான் குறிப்பிட்டு, தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒரு சில விபத்துக்கள் ஏற்பட்ட நேரத்திலே அதிலும் அந்த விபத்திற்கு உள்ளானவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படவில்லை என்பதைப் பற்றியும் குறிப்பிட்டேன். அதேபோல் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெர்நாட் என்ற தொழிலாளி விபத்திற்கு உள்ளான பிறகு எந்தவிதமான நிவாரணமும் அவருக்குக் கொடுக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டு இருந்தது. அந்த விவரங்களின் அடிப்படையிலே ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நிதிநிலையில் எழுப்பப்படுகிற பிரச்சினைகளுக்கு மின்வாரியம் நடவடிக்கை எடுப்பதும், எடுத்த நடவடிக்கையைப்பற்றி சட்ட





மன்றத்திற்கு அறிவிப்பதும் மரபு. ஆகையினாலே ஏற்கனவே அவர்கள் இதுபற்றி தெரிவித்து இருப்பார்களானால் நிச்சயமாக மின் வாரியம் அதுபற்றி நடவடிக்கை எடுக்கும்.

### மின்வாரியத்தை ஏழு தனிமண்டலங்களாகப் பிரிக்கும் திட்டம்

*வினா எண் 683— திரு. செ. சிவசாமி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்வாரியத்தை ஏழு தனி மண்டலங்களாகப் பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) திறமையை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தை மாற்றி அமைப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு, மின்சாரத்தை விநியோகிக்கும் பொறுப்பை மட்டுமே ஏற்க வட்டார நிறுவனங்கள் அமைக்கப்படலாம் எனவும், மற்ற பொதுப் பொறுப்புகளான மின் உற்பத்தி, மின் செலுத்துகை, நிர்வாகம் போன்றவற்றின் ஒட்டுமொத்த பொறுப்புகள் வாரியத்தின் பொறுப்பில் இருக்கலாம் என்ற செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, மின்சார வாரியத்தின் பணிகள் மற்ற நடைமுறைகளில் இருக்கிற சிக்கல்களைத் தீர்க்கின்ற வகையிலும் திறமையாகச் செயல்படுவதற்காகவும் மின்சார வாரியத்தை ஏழு மண்டலங்களாகப் பிரிக்கும் உத்தேசம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த 7 மண்டலங்கள் எப்போது பிரிக்கப்படும்? அதை எப்போது செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மின் உற்பத்தியைப் பொறுத்தவரையில் மின்சார வாரியம் பார்த்துக்கொள்ளும். பல இலட்சக் கணக்கான மின் பயனீட்டாளர்களைக் கொண்டிருப்பதால் ஆங்காங்கே மின்சாரம் வழங்கும் நிறுவனங்களை அரசே தனியாக ஏற்படுத்தி, மின்சாரம் விநியோகம் செய்ய தனியாகப் பிரிக்கப்படும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதற்குச் சட்டத் திருத்தம் தேவைப்படுகிறது. அந்தச் சட்டத் திருத்தம் விரைவில் சட்டப்பேரவைக்குக் கொண்டுவரப்படும்.

த்தினுடைய கம்பெனியாகும். மின்சார வாரியம் அவைகளை லைசன்சீயாக நடத்தும். மின்சார வாரியத்திலிருந்து அவர்கள் மொத்தமாக மின்சாரம் வாங்கி அவர்களுடைய பகுதிக்கு விநியோகம் செய்து அவர்கள் தனித்தனியாக வரவு செலவுக் கணக்கை அரசுக்குத் தருகிறார்கள். ஆனால் மின்சார வாரியம் தனி நிறுவனமாக என்றைக்கும் இருக்கும்.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, இந்த வாரியத்தில் அதிகாரக் குவியல் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், பொது மக்கள் சிரமப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதிகாரக் குவியலில் ஒரு சேர்மனைப் போட்டு, அந்தச் சேர்மனை எல்லா மக்களும் பார்க்க வேண்டுமென்ற உச்ச கட்டம் இருக்கிறது. அந்த நிலையை மாற்றி மண்டலங்களாகப் பிரிக்கும்போது, எல்லா மண்டலங்களுக்கும், இப்போது போக்குவரத்துக் கழகங்களில் எம்.டி. தருகிறார்கள்; அதுபோல தனித்தனி மண்டலங்களாக்கும் போது, அதிகாரத்தை பரவலாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினுடைய உணர்வு மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை ஒட்டியதுதான்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, 7 மண்டலங்களாகப் பிரித்து, பயனீட்டாளர்களுக்குச் சுலபமாக மின்சாரம் கிடைப்பதற்கான, திறமையான, தேவையான நிர்வாகமாக அந்த 7 மண்டலங்களைப் பிரிக்கிறார்களா? அப்படியானால் ஜனங்களுக்கு நல்லது என்றால், அது செய்யப்படுவதிலே தகராறு இருக்காது. ஆனால் அமைச்சர் கொடுத்த பதிலில் இவர்களைத் தனித்தனி லைசன்சியாக்கி, அவர்களுக்குத் தனியான உரிமைகள் கொடுத்து ஓரளவிற்கு அவர்கள் தனியாக இயங்கும்படியான சகல உரிமைகளும் கொடுக்கப்படுவதில்லை. அப்படியானால், இ.பி.யின் கீழ் இருக்கக் கூடிய அனைத்துத் தொழிலாளி, உழைப்பாளி மக்களுடைய சர்வீஸ் கண்டிஷனிலே அவர்களுடைய ஊதியத்தில் வித்தியாசமான நிலையை அவர்கள் கையாளுகிறார்களா? இன்றைக்கு இருக்கக் கூடிய அந்த ஊழியர்களுடைய சர்வீஸ் பாதிக்கப்படாமல், பாதுகாக்கும் வகையில் அரசு பார்த்துக் கொள்ளுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நிச்சயமாகப் பார்த்துக்கொள்ளும்.





## புதிய மின் உற்பத்தித் திட்டங்கள்.

*வினா எண் 684 —திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் புதிய மின் உற்பத்தி திட்டங்களை ஏற்படுத்தவும் அதற்காக வெளிநாட்டிலிருந்து கடன் பெறவும் அனுமதி கோரி மாநில அரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (அ) ஆம்.

(ஆ) (1) வடசென்னை அனல் மின் திட்டம்.

(2) எரிவாயு மின் நிலையம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இதிலே வெளிநாட்டிலிருந்து கடன் பெறக்கோரியுள்ள தொகை எவ்வளவு? மத்திய அரசு அனுமதி அளித்து விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, வட சென்னை அனல் மின் திட்டத்தைப் பொறுத்த வரையில் அன்னியச் செலாவணி 343½ கோடி ரூபாயாகும். எரிவாயு மின் உற்பத்தி நிலையத்தைப் பொறுத்த வரையில் 68.49 கோடி ரூபாய் செலவாகும். இன்னும் இரண்டு திட்டங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இரண்டு திட்டங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். மத்திய அரசாங்கத்தைக் கேட்டு மாநில அரசாங்கம் எப்போது எழுதியுள்ளது? பிறகு மறுபடி ஏதாவது ரிமைண்டர் அனுப்பப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே டிசம்பர் 1981 ஆம் ஆண்டில் அனுப்பப்பட்டு, அதற்குப் பின்னர் பல்வேறு நிலைகளில் கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்களும், நானும் டில்லி சென்றபோது மத்திய நிதியமைச்சரையும், மத்திய சக்தித் துறை அமைச்சரையும் பார்த்து, நேரில் பேசியிருக்கிறோம். மறுபடியும் [illegible] வதற்குத் தயாராக இருக்கிறோம். [illegible]

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, மின்சாரம் சௌகரியமாகக் கொடுக்கப்படும் உத்தேசத்தோடு இந்தச் சீர்திருத்தம் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அடிப்படையிலே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் அதிகமாக இல்லாத காரணத்தால் கிராமங்களில் மின்சார விநியோகம் செய்யப்படுவதில் சிக்கல் இருக்கிறது. 10 ட்ரான்ஸ்பார்மர்களுக்கு ஒரு ஹெல்ப்பர் இருப்பதால் அந்த ஹெல்ப்பர் எல்லா ட்ரான்ஸ்பார்மர்களையும் சரிவர இன்ஸ்பெக்ட் செய்ய முடியாமல் இருப்பதாகச் சொல்கிறார்கள். அது மட்டுமல்லாமல் கிராமங்களில் அதன் காரணமாக பம்புசெட்டுகள் ஒழுங்காக ஓடாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, அந்தத் தொழிலாளர்களை அதிகப்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இத்தகைய குறைபாடுகளை எல்லாம் அறிந்து, ஆராய்ந்து போக்குவதற்காகப் பல அமைப்புகள் ஆங்காங்கே இருக்குமானால் அது பயனுள்ளதாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் இந்த யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, மின்சார வாரியத்தை 7 மண்டலங்களாகப் பிரிப்பதற்குச் சட்டத் திருத்தம்கூட தேவைப்படும் என்று சொன்னார்கள். விநியோகத்தில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகப் பிரிக்கப்படும் கருத்து பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். இன்றைக்கு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் 40 இலட்சம் பயனீட்டாளர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு பணிக்கும் சென்னைக்கே வரும் சூழ்நிலை இருக்கிறது. இப்போது 11 தலைமைப் பொறியாளர்கள் சென்னையிலே இருக்கிறார்கள். மண்டலங்களாகப் பிரிப்பதற்கு முன்னால், ஒரு முன் நடவடிக்கையாக தலைமைப் பொறியாளர்களை பிராந்தியங்களுக்கு அனுப்பி, அங்கே அவர்கள் அலுவல்களை ஆரம்பிப்பதன் மூலம் பயனீட்டாளர்களுக்கு வசதி செய்ய இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சட்டத் திருத்தம் வரும் வரையில் இத்தகைய ஒரு ஏற்பாட்டைச் செய்யலாம் என்று மின்சார வாரியம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எப்படி இந்த விவரம் தெரிந்தது என்று தெரியவில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் சென்னை, திருச்சி,. மதுரை, கோவை ஆகிய நான்கு இடங்களை மையமாகக்கொண்டு இப்போது சென்னையிலே இருக்கிற தலைமை மின் பொறியாளர்கள் ஆங்காங்கே மாற்றப்படுவார்கள். அந்தந்தப் பகுதியிலே உள்ள மின்சாரத் திட்டங்களை அவர்கள் அங்கே பார்த்து. அதை சிறப்பாகச்





செய்வதற்கான திட்டம் விரைவிலே அமுல்படுத்தப்பட இருக்கிறது. சென்னை மையத்தைப் பொறுத்தவரையில் சென்னை மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம், வடாற்காடு மாவட்டம், தர்மபுரி மாவட்டம் ஆகியவை இருக்கும். சென்னையில் இருக்கும் தலைமைப் பொறியாளர் ஜூரிஸ்டிக்ஷன் எல்லைக்குள் அவை வரும். திருச்சி மையத்தைப் பொறுத்தவரையில் தென்னாற்காடு மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம், திருச்சி மாவட்டம் புதுக்கோட்டை மாவட்டம் ஆகியவை வரும். மதுரை மையத்தைப் பொறுத்தவரையில், மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், நெல்லை மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் ஆகியவை வரும். கோவை மையத்தில் கோவை மாவட்டம், உதகை மாவட்டம், பெரியார் மாவட்டம், சேலம் மாவட்டம் ஆகியவை அடங்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்த 7 மண்டலங்களைப் பொறுத்தவரையில் மின்சாரம் விநியோகிக்கும் திட்டத்தை அமுல்படுத்த இருப்பதாகச் சொன்னார்கள். 7 மண்டலங்களாகப் பிரிக்கும்போது ஏழு மண்டலங்களும் தனித் தனியாகச் செயல்படுமா ? அப்படியானால் இந்த வாரியத்திற்குச் செலவு அதிகரிக்காதா ? 7 மண்டலங்களுக்கும் தலைமையிடம் எங்கெங்கே இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் சொன்ன 4 அமைப்புகள் இப்போது இருக்கிற நிர்வாகத்தில் செய்வது. 7 மண்டலங்கள் என்பதைப் பொறுத்தவரையில் இரண்டு மாவட்டங்களுக்கு ஒன்று என்ற வகையிலே தனித்தனியாக அமையும். ஆங்காங்கே தனித்தனி நிறுவனங்களாக அமைக்கும்போது நிர்வாகத் திறமை அதிகமாகும், செலவு குறையும், அவை தனித்தனியாக ' கம்பெனி ஆக்டின் ' கீழ் வரும்.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, மின்சார விநியோகத்தைப் பொறுத்தவரையில் ஏழு மண்டலங்களாகப் பிரிப்பதாகச் சொன்னார்கள். ஏற்கனவே இருந்த தனியார் கம்பெனிகள் போல கார்ப்பரேஷன் மாதிரி அவை அமைக்கப்படுமா ? அல்லது மத்திய அரசின் கொள்கை அடிப்படையில் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக விநியோகம் செய்வதுமாதிரி அமையுமா ? அப்படியானால் அதற்கும் இதற்கும் பொருந்துமா ? அல்லது தொடர்பு அற்றுவிடுமா ? அல்லது ஒன்றாக இணைந்து செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்த நிறுவனங்கள் கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா கம்பெனிகள் ஆக்ட்டின் கீழ், அந்தச் சட்டத்தின் கீழ், நடத்தப்படும் அரசாங்

டில்லி சென்ற போதும் கூட, மத்திய மின்சாரத் துறை அமைச்சரை சந்திக்க விரும்பினேன். அந்த இரண்டு நாட்களிலும் மின்சாரத் துறை பற்றிய விவாதம் பாராளுமன்றத்திலே வந்தது. ஆகவே அவர்களை சந்திக்க முடியவில்லை. மறுபடியும் சந்தித்து வற்புறுத்தலாமென்று இருக்கிறோம்.

**திரு. ப. நெடுமாறன் :** தலைவரவர்களே, நம்முடைய திட்டத்திற்குப் போட்டியாக மேகதாது திட்டத்திற்குக் கர்நாடக அரசாங்கம் உலக வங்கியிலிருந்து நிதியுதவி கோரியதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால், ஒகேனக்கல் திட்டத்திற்கும் உலக வங்கியிடமிருந்து நிதியுதவி கோரப்பட்டதா ? அண்மையில் காவிரி நீர் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்ட மாண்புமிகு மின்துறை அமைச்சரவர்கள் ஒகேனக்கல்திட்டத்தைப் பற்றி அந்த அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தனிக் கேள்வி போட்டால் விவரமான பதில் தரமுடியும்.

**திரு. இ. கணேசன் :** தலைவரவர்களே, மேட்டூர் அனல் மின் திட்டம் விரிவாக்கத் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்து உள்ளதா ? அந்தத் திட்டத்திற்கு வெளி நாட்டு உதவியைக் கோர அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மேட்டூர் விரிவாக்கத் திட்டத்தைப் பொறுத்த வரையில், மத்திய மின்சக்தித் துறை அனுமதி தந்து, அது திட்டக் குழுவினுடைய ஒப்புதலுக்காகச் சென்றிருக்கிறது. ஆரம்பப் பணிகளை நாம் மேற்கொள்ளலாம் என்ற அடிப்படையில் பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். திட்டக் குழுவினுடைய அனுமதியை விரைவில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. என். வரதராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் வாழ்வே இந்த மின்சாரத்தோடு இணைந்திருக்கக் கூடிய சூழ்நிலையில் நாம் 1981 ஆம் ஆண்டு அனுப்பிய திட்டத்திற்கே இன்னும் அனுமதி இல்லை என்று சொல்கிறார்கள். அப்படியானால் டெல்லிதான் தமிழ்நாட்டிற்குத் திட்டங்கள் வருவதில் இடைஞ்சலாக இருக்கின்றது என் தெரிகின்றது. எனவே நடப்பு நிதியாண்டிலேயாவது இந்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மாநில அரசைப் பொறுத்தவரையில் நம்மாலான முயற்சிகளை எல்லாம் எடுத்து வருகிறோம். மேலும் நிதியினைப் பொறுத்த வரையில் நாம் தேடிக்கொண்டாலும் அன்னியச் செலாவணியைப் பொறுத்தவரையில் மத்திய அரசுதான் அனுமதி தரவேண்டி இருக்கின்றது. ஆனால் இந்தத் திட்டங்கள் வருவதன் மூலம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தலாம் என்றும் தெரிவித்து இருக்கிறோம். இப்போது சிமென்ட் இறக்குமதி செய்கிறார்கள், காஸ்டிக் சோடா இறக்குமதி செய்கிறார்கள், ஃபெர்டிலைசர் போன்றவற்றையும் இறக்குமதி செய்கிறார்கள். எனவே மின் பற்றாக்குறை இல்லாமல் இருந்து, இவற்றை நாம் உற்பத்தி செய்தால் ஆண்டுதோறும் அந்நியச் செலாவணி மிச்சமாகும் என்பதை எல்லாம் எடுத்துச் சொல்லி வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மின் திட்டங்கள் தேவைப்படுகின்ற அதே நேரத்தில் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட கல்பாக்கம் அணு மின் நிலையத்திற்குத் தேவையான ஹெவி வாட்டருக்கு மாற்றுப் பொருள் ஒன்று சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்கிறார்களே, அது எந்த அளவுக்குச் சரி ? அது உடனடியாகச் செயல்படுத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மின் உற்பத்தித் திட்டத்திற்கு வெளிநாட்டில் இருந்து கடன்பெற அனுமதி கேட்டிருப்பது போலவே வெளி நாடுகளிலிருந்து சாதனங்கள் வாங்குவதற்கு பீகார் மாநில அரசுக்கு அனுமதி அளித்திருப்பதுபோல தமிழக அரசுக்கு மைய அரசு அனுமதியினைத் தரவேண்டும் என்று மாநில அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியுதவியோடு கூடிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கு உதவி செய்வதற்குப் பல நாடுகள் முன் வந்துள்ளன. சான்றாக ரஷ்யா முன் வந்ததைப் பயன்படுத்திக் கொண்டு பீகாரிலே அனல் மின் நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது. நாமும் அது போன்று உதவ முன்வருகின்ற நாடுகளின் உதவியினைப் பெற்றுக் கொண்டு தமிழகத்தில் மின் உற்பத்தித் திட்டங்களை நிறுவ வேண்டும் என்று மத்திய அரசிடம் அனுமதி கேட்டு இருக்கிறோம். குறிப்பாக வட சென்னை அனல் மின் திட்டத்தைப் பொறுத்த வரையில் அந்நிய நாட்டு

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்டிருக்கக்கூடிய கேள்வி சீருடைகளைப் பற்றி என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பள்ளிகளுடைய நிலைமைகளைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய ஆதித்திராவிட நலப் பள்ளிகள் முன்பு எந்த வகையில் இருந்தன என்பதை மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் உணர்வார்கள். தற்போது இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு, அந்தப் பள்ளிகளுக்கு நிரந்தர கட்டிடங்களை அரசு கட்டிக் கொண்டிருக்கிறது. மேலும் மரத்தடிகளில் அந்த மாணவர்கள் படிப்பதாகச் சொன் னார்கள். அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு, இதற்கென்று ஒரு தொகையை அரசு ஒதுக்கிக் கொடுத்திருக்கிறது. அந்தத் தொகைக்குள்ளாக இருக் கக்கூடிய பழுதுகளை, குடிசைகளை அந்த அலுவலர்களே போட்டுக்கொள்ளும் வகையில் அரசு அனுமதி அளித்து ஆணை யிட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒட்டு மொத்தமாக இப்படிப்பட்ட குறைகள் பல இடங்களில் இருக் கின்றன என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளைக் களைவதிலேதான் இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருந்து கொண்டிருக்கிறது.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதிதிராவிட மாணவர்களுக்குக் கொடுக் கப்படக்கூடிய உடைகள் தைக்கப்பட்டு ரெடிமேடாகக் கொடுக் கப்படுகின்றன. 16 வயது மாணவனுக்கு, 5 வயது மாண வனுக்குக் கொடுக்கப்படக்கூடிய உடைகள் கொடுக்கப்படுகின்றன. மாணவிகளுக்கும் பற்றாக்குறையாக இருக்கக்கூடிய உடைகள் தற்போது வழங்கப்படுகின்றன. அதனால் நான் கேட்டுக்கொள் வது, எந்த மாணவ மாணவிகளுக்கு உடைகள் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறதோ, அவர்கள் அதைப் போட்டுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறதே, ஆகவே, அந்த மாணவ மாணவிகளின் அளவுகளை எடுத்து, துணியாகக் கொடுத்துவிட்டு, அதைத் தைப்பதற்கும் கூலியைக் கொடுக்கும் வகையில் அரசு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்ற நிலைமை இருப்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்றுதான் தற்போது இந்த அரசு அதனை ஆய்ந்து கொண்டிருக்கிறது. இதில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்





போல, விடுதியிலே தங்கிப் பயிலுகின்ற மாணவர்கள் பயன் அடையத் தக்க வகையிலும், பள்ளிகளிலே ஆங்காங்கே படிக் கக் கூடிய மாணவர்களுக்கும் தற்போதுள்ள முறை உண்மை யாக பயன்தரவில்லை என்பதையும் எண்ணி, அதை மாற்றி அமைக்க வேண்டும் என்பதற்காக, ஆங்காங்கே இருக்கக்கூடிய இடங்களிலே தையற்காரர்களை தனியாக வைத்து, அந்த மாணவர்களின் உயரத்திற்கும், தகுதிக்கும் ஏற்றவகையில் உடை கள் தைக்கலாம் என்ற கருத்தைத் தற்போது அரசு எடுத்திருக் கிறது. அந்த நிலைமைகளை உருவாக்கத் தேவையான நட வடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது உண்மையை ஒப்புக்கொண்டார்கள். அந்த ஆதிதிராவிடப் பள்ளி மாண வர்களுக்கு உடை சரியாகத் தைத்துக் கொடுக்கப்படுவதில்லை என்ற நிலைமை இருக்கிறது என்பதை அவர்கள் ஒப்புக் கொண் டிருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் 2 செட் கொடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதுசில இடங்களில் நடைமுறைப்படுத்தப்படாமல், ஒரு செட் மட்டுமே கொடுக்கப்படுகிறது. அந்த நிலைமை தஞ்சை மாவட்டத்திலே இருக்கிறது. மேலும் ஓர் ஆசிரியர் பள்ளிகளில், அந்தச் சீருடைகள் இதுவரையில் அந்தப் பிள்ளைகளுக்குக் கொடுக்கப் படவில்லை. அதுமட்டும் அல்ல, அந்தப் பிள்ளைகளுக்கு இது வரையில் மேசை நாற்காலி கூட கொடுக்கப்படவில்லை. இது போன்ற நிலைமை ஒட்டு மொத்தமாக, தஞ்சை மாவட்டம் என்று மட்டும் அல்ல, தமிழகம் முழுவதிலும் உள்ள நூற்றுக் கணக்கான பள்ளிகளில் இருக்கிறது. அதைப்போக்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாணவர்களுக்கும் தைத்துக் கொடுக்கப்படுகின்ற துணிகள் போதவில்லை என்று நான் ஒப்புக் கொள்ளவில்லை. ஒருசில பள்ளிகளிலே உள்ள ஒரு சில மாணவர்களுக்கு, வயது அதிகமாக இருக்குமேயானால், தைத்துக் கொடுக்கப்படுகின்ற துணிகள் குறைவாக இருக்கின்றன என்கிற நிலை சில பள்ளிகளில் இருக்கின்றன. என்றுதான் நான் ஒப்புக் கொண்டேன். தமிழகம் முழுவதற்கும் ஒட்டு மொத்த மாக அப்படிப்பட்ட நிலைமை இல்லை ஒரு சில பள்ளிகளில். இரண்டு சீருடைகளைக் கொடுப்பது பொறுத்தவரையில்! ஆண்டுத் துவக்கத்திலேயே அதைக் கொடுக்க வேண்டும் என்கிற உத்தரவு இருக்கிறது. ஒருசில இடங்களில் கொடுக்காத அப்படிப் பட்ட நிலைமை இருக்கிறது என்றால், குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால் நடவடிக்கை எடுக்கப்படும். ஆசிரியர்

பள்ளிகளைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பள்ளி களிலே ஒட்டுமொத்தமாக இருக்கும் நிலைமைகளைப் பற்றி மேசை நாற்காலிகள் கொடுப்பதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நான் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையிலே கூட, இங்கே மாண்புமிகு உறுப்பினர் இராசு அவர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போது, இந்த அரசாங்கம் அதைக் கொள்கை அள வில் ஏற்றுக் கொண்டு, அதற்காக ஏறத்தாழ 43 லட்சத்தை ஒதுக்கி வைத்திருக்கிறது என்று சொன்னேன். அந்த வகையில் ஆதிதிராவிட நலத் துறை பள்ளிகளுக்கு மேசை, நாற்காலி போன்றவைகளை அரசு வாங்கவேண்டும் என்று கொள்கை அள விலும் ஏற்றுக் கொண்டு, நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. என். பழனிவேல் :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஆதி திராவிட நலத்துறை 160-க்கு மேற் பட்ட பள்ளிகள் நடத்துவதாக அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். இது அந்த மக்களின் நலன் கருதி செய்யப்பட்டுள் ளது. ஆனால் அந்தக் குழந்தைகளின் பிஞ்சுள்ளங்களில்——அவர் களைத் தனியாகப் பிரித்து இவர்கள் ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் மற்றவர்கள் வேறு வகையினர் என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கக்கூடியதொரு சூழ்நிலை இருப்ப தால்——இவர்களுக்கு உதவிகள் செய்வதைத் தாராளமாகச் செய்யுங்கள், ஒரே பள்ளியில் எல்லாக் குழந்தைகளையும் ஒன்றாக வைத்து நடத்துவதற்காக இந்தத் தனிப் பள்ளிகள் என்பதை மாற்றியமைக்க அரசாங்கம் உத்தேசிக்குமா? அதேபோல் இந்த ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் சேராமல் வேறு பொதுவான பள்ளிகளில் படிக்கும் ஏழைக் குழந்தைக ளுக்கும் இப்படிப்பட்ட சீருடைகள் வழங்குவதற்கு அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தலைவர் அவர்களே, நலத்துறையின்கீழ் இயங்கக் கூடிய பள்ளிகளைக் கல்வித்துறை யோடு இணைக்கவேண்டும் என்ற உணர்வில் அரசாங்கம் நட வடிக்கைகள் எடுத்தபோது பல சட்டமன்ற உறுப்பினர்கள் கூட அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். அது மட்டுமின்றி, இந்தத் துறையின்கீழ் இயங்கக்கூடிய பள்ளிக்கூடங்கள் தனியாக இயங்க வேண்டுமென்ற ஒரு கருத்து தமிழகம் முழுவதும் பரப்பப்பட்ட தால் அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டு இந்தத் துறையின் கீழ் இயங்கும் பள்ளிக்கூடங்கள் இந்தத் துறையின்கீழ் இயங்க லாம் என்று முடிவு எடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் இன்னொரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 163 பள்ளிகள் தற்போது இயங்கி வருகின்றன. நலத்துறையின்கீழ் இயங்கக்கூடிய பள்ளிகளில் பயிலும் மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்





களுக்கு என்னென்ன வகைகளில் வசதி செய்து கொடுக்க நட வடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவோ அதே போல் வேறு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் அந்தச் சலுகைகள் வழங்க படவேண்டும் என்ற கருத்தை உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அந்த முயற்சிகளை முடித்துக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கும்.

### ஜவ்வாது மலைவாழ் மக்களுக்காக கட்டப்பட்ட வீடுகள்.

*வினா எண் 696—**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா —

1979–80, 1980–81, 1981–82 ஆம் ஆண்டுகளில் வட ஆற்காடு ஜவ்வாது மலைவாழ் மக்களுக்கு அரிசன நலத்துறை மூலம் தாட்கோ கூட்டுறவுத்துறை மூலம் எவ்வளவு வீடுகள் கட்டி வழங்கப்பட்டன.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** 1979–80, 1980–81, 1981–82 ஆம் ஆண்டுகளில், வடாற்காடு, ஜவ்வாது மலைவாழ் மக்களுக்கு ஆதி திராவிடர் நலத்துறை மற்றும் ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மூலம் வீடுகள் கட்டப்படவில்லை. கிராமப்புற வீட்டு வசதி கூட்டுறவு திட்டத்தின்கீழ் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கட்டப்பட்ட வீடுகளின் விபரங்கள் பின் வருமாறு :—

| ஆண்டு. | கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | கட்டுமான நிலையிலுள்ள வீடுகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1980–81 .. | 7 | 19 |
| 1981–82 .. | 26 | 28 |

[1983 ஏப்ரல் 8

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 1979—80 ஆம் ஆண்டுக்
கான விவரங்களை அவர்கள் கூறவில்லையென்று நான் கருது
கிறேன். ஆதி திராவிட நலத்துறை மூலம் கட்டப்படவில்லை,
கூட்டுறவுத்துறை மூலமாகக் கட்டப்பட்டுள்ளது என்று சொன்
னார்கள். அந்த ஏழை எளிய, மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு
நலத்துறை மூலமாகக் கட்ட என்ன சங்கடம் உள்ளது ? அதற்
கான ஒதுக்கீடு இல்லையா ? எவ்வளவு பேர்கள் மனுக்கள் போட்
டிருக்கிறார்கள் என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அளிப்
பார்களா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே,
எவ்வளவு பேர்கள் மனு செய்திருக்கிறார்கள் என்ற விவரம்
இல்லை. ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இந்த
மக்களுக்குப் போதுமான வசதிகளை, வாய்ப்புகளை ஏற்படுத்தித்
தரவேண்டுமென்று உணர்வோடு 21—3—1982 ஆம் ஆண்டில்,
மலைவாழ் மக்களுக்கு ஆதி திராவிடர் வீட்டு வசதித் திட்டத்
தைப் போல் மானியம் மற்றும் பயன் பெறுவோரின் உழைப்பின்
அடிப்படையில் பயன் பெறுவதற்கு வீடுகள் ஆதி திராவிடர்
வீட்டு வசதிக் கழகத்தின் மூலமாக கட்டிக் கொள்ள ஆணை
யிடப்பட்டிருக்கிறது. இதன்படி சமவெளியில் ரூ. 4,000 மதிப்
பீட்டு அளவிலும் மலைப் பகுதிகளில் இருக்கக் கூடியவர்களுக்கு
50 சதவீதம் கூடுதல் செலவில் ரூ. 6,000 மதிப்பீட்டளவில்
பழங்குடியினர் அரசாங்க மானியம் பெற்று வீடுகளை அவர்களே
கட்டிக் கொள்கிற ஒரு நிலையை அரசாங்கம் உருவாக்கியிருக்
கிறது.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, பழங்குடி
மக்களுக்கு வீட்டு வசதி செய்து தர மத்திய அரசு எவ்வளவு
நிதி ஒதுக்கீடு செய்துள்ளது ? அது முழுமையாகச் செலவழிக்கப்
பட்டதா ? அப்படி முழுமையாகச் செலவழிக்கப்படவில்லை
என்றால் வரும் ஆண்டுகளிலாவது அதற்கான நடவடிக்கைகளை
எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே,
ஆதி திராவிட மக்களுக்கு, பழங்குடி மக்களுக்கு இப்படிப்பட்ட
நன்மைகளைச் செய்ய வேண்டுமென்ற உணர்வோடு அரசாங்கத்
தைப் பொறுத்தவரையில் மைய அரசின் உதவி பெற்று நாம்
வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் இதற்காக
ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய —பழங்குடி மக்களைப் பொறுத்த
வரையில் இந்தத் திட்டத்தின்கீழ் ரூ. 4 இலட்சம் மேற்படி
கழகத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் தேர்ந்
தெடுக்கப்படக்கூடிய பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளில்



1983 ஏப்ரல் 8]

அவர்களுக்கு 89 வீடுகள் கட்டப்பட வேண்டும் என்ற
வகையில் அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கிறது. இந்த வகை
யில் ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய பணம் முழுமையும் செலவிடப்
படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9—30)

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பழங்குடி மக்களுக்கு
50 விழுக்காட்டில் வீடுகள் கட்டிக் கொடுப்பதாகக் கூறினார்கள்.
இந்தப் பழங்குடி மேம்பாட்டுத் திட்டத்தில், மத்திய அரசு
கொடுக்கும் நிதியையும் இந்த மேம்பாட்டுத் திட்டத்தோடு
சேர்த்து, அதிகமான அளவுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க இந்த
அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அத்தகைய எண்ணம் தற்போது நடை
முறையில் இல்லை. ஆனால், உறுப்பினர் சொன்ன கருத்தை
அரசு பரிசீலனை செய்யும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே
1979 லே இருந்து 1982 ஆம் ஆண்டு வரை
யிலும், இந்தத் துறையின் மூலமாக இலவசமாக வீடுகள் கட்டிக்
கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்
கள். இந்த அவையில் ஒவ்வொரு ஆண்டும் இலவசமாக வீடுகள்
கட்டித் தரப்படும் என்று கூறப்படுகிறது. இந்த மானிய கோரிக்
கையிலும் அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, வருகின்ற
ஆண்டில் மலைவாழ் மக்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக்
கொடுப்பது செயல்படுத்தப்படுமா ? அப்படிச் செயல்படுத்தினால்,
எத்தனை வீடுகள் கட்டுகின்ற உத்தேசம் உள்ளது என்பதை அறி
விப்பார்களா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த ஆண்டைப் பொறுத்த வரையில்
சமவெளியில் இருக்கக்கூடிய பழங்குடியினருக்கு ரூ. 4,000 என்ற
அளவிலும், மலைப் பகுதிகளிலே வாழ்கின்ற பழங் குடியினருக்கு
ரூ. 6,000 என்ற அளவிலும் கட்டித் தர வேண்டுமென்ற உத்
தரவை அரசு பிறப்பித்திருக்கிறது. அந்த அடிப்படையிலே
ரூ. 4,000 அளவிலே பயனடைகின்றவர்கள் ரூ. 3,250 அரசு
மானியமாகவும், எஞ்சிய ரூ. 750 உழைப்பின் மூலம் பங்காகவும்
செலுத்த வேண்டும். அதே போல், மலைவாழ் மக்களுக்கு
ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,000-த்தில் ரூ. 5,250 அரசு மானியமாக
வும், எஞ்சியுள்ள ரூ. 750 அவர்கள் உழைப்பின் மூலம் பங்காக

சென்னை தலைமை மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நடந்த கையாடல்.

*வினா எண். 686—திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோரணம் மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள எழும்பூர் தலைமை மெட்ரோ பாலிடன் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் சுமார் பல இலட்சம் பெறு மான வழக்கு பொருள்களை கோர்ட் சிப்பந்தி கையாடல் செய் துள்ளார் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

(இ) 1975 மற்றும் 1976 ஆம் வருடத்தில் நடந்த கை யாடல் பற்றி 1979—1980 இல் வழக்குப் பதிவு செய்ய காரணம் என்ன ?

(ஈ) பணத்தை வசூலிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ, ஆ, இ, மற்றும் ஈ) : அவை முன் ஓர் அறிக்கை ** வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கையாடல் பற்றி சொல் கிறபோது கொஞ்சம் நஞ்சம் அல்ல 2 இலட்சத்து சொச்சம் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது, திருட்டுப்போன சொத்துக்கள் மற்றும் பல சொத்துக்கள் பாதுகாப்புக்காக நீதி மன்றத்தில் வைக்கப்பட்டிருந்த சொத்துக்கள் அது. அந்தச் சொத் துக்களில் கையாடல் நடைபெற்றிருக்கிறது. அதிலும் குறிப்பாக 1976 ஆம் ஆண்டிலே இவைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த அறிக் கையில் 1976 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும்கூட அந்தப் புகார்கள் தாக்கல் செய்யப்பட்டது 26—12—1976 ஆக இருந்தாலும் கூட இதன் மீது தீவிர புலன் விசாரணை என்ற பெயரால் 3 ஆண்டுகள் நடந்து இருக்கிறது. இந்த 3 ஆண்டு காலம் ஆவதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்வார்களா ? அதோடு, இந்த வழக்கு தாக்கல் ஆகி 3 ஆண்டுகள் ஆகிவிட்டது. அந்த வழக்கின் முடிவு என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**1143—1144 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்று உள்ளது.





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே கையாடல் நடந்திருக்கிறது என்பது உண்மை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றை கவனிக்க வேண்டும். அரசைப் பொறுத்தவரைக்கும் நீதி மன்றத்தினுடைய அதிகார எல்லைக்குள் மிக ஆழமாகச் செல்ல முடியாத நிலை. இந்த கையாடல் நடந்து இருப்பதாகத் தகவல் கிடைத்ததும் 1976 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்க ஆய்வுகளை செய்து இருக்கிறார்கள். ஆனாலும் கூட இதில் ஒரு மெட்ரோ பாலிடன் மாஜிஸ்ட்ரேட்டாக இருக்கிற ஒரு நீதிபதி அங்கு இருக்கிற மற்ற கேஷியர் போன்றவர்கள் எல்லாம் பொறுப்பு என்ற குற்றம் வந்த பிறகு தீவிரமாக ஆய்வு நடவடிக்கை எடுக் கின்றபோது இதில் நீதித்துறை சம்பந்தப்பட்டு இருக்கிற கார ணத்தால் தான் இந்த புலனாய்வில் காலம் எடுத்து இருக்கிறது. ஆனாலும், குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்கள். நீதித்துறை சம்பந்தப்பட்டவர்கள் என்பதற்காக அங்கே யாரை யும் விட்டுவிடவில்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டு இருக்கிறது. ஆனாலும், இதில் சம்பந்தப்பட்ட நீதிபதி ஒருவர் மரணம் அடைந்துவிட்டார். வழக்கு நடந்து வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி கோரி போன இடத்தில் நீதியே வேறு மாதிரி போய் இருக்கிறது. வேலியே பயிரை மேய்கிற நிலைக்கு போய் இருக்கிறது. நீதியை வழங்கவேண்டி யவர்கள் இடத்திலேயே இப்படி கையாடல் நடைபெற்றிருக்கிறது என்றால் முக்கியமாக துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டிய ஒரு இடம் இது. இது தாக்கல் செய்த பிறகும் கூட 3 ஆண்டுகள் ஆகியும் கூட அந்த கேஸ் இன்னும் முடிவு ஆகவில்லை. எல்லா வற்றுக்கும் மேலாக அந்த மாஜிஸ்டிரேட்—அவர் முதல் எதி ரியோ, இரண்டாம் எதிரியோ—காலம் ஆகிவிட்டார். ஆனால், பணத்தை வசூலிக்கும் முயற்சியில் சாதாரணமானவர்களிடம் மட் டும் வசூலிப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கையில் பணம் இல்லை என்றும் கொஞ்சம்தான் பணம் இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். அந்த மாஜிஸ்டிரேட்டும் இதில் உடந்தை என்ற முறையில் அவருக்கு ஏதாவது சொத்து இருக் கிறதா ? அந்த சொத்துக்களையும் வசூலிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க முன் வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட 2-ஆவது பெருநகர மாஜிஸ்டிரேட் ஜார்ஜ் என்பவர் 1978 ஆம் ஆண்டு இறந்துவிட் டார். அவர் இறந்த பிறகு அவர் சம்பந்தப்பட்ட சொத்துக் கள் ஏதாவது இருந்தால் அதை ஜப்தி செய்து இதற்குக் கொண்டு

வும் கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த அடிப்படையில், இந்த ஆண்டு 89 வீடுகளைக் கட்ட அரசு உத்தர விட்டிருக்கிறது.

திரு. கா. வே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ' தாட்கோ ' நிறுவனத்தின் மூலமாக அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தின் பேரில் ஒரு குழு அமைத்து, யார் யாருக்கு எங்கெங்கே கொடுக்க வேண்டும் என்பதற்கு, அந்த மாதிரி தணிக்கை செய்து, கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஜவ்வாது மலை, ஏலகிரி மலை ஆகிய பகுதிகளிலே வசிக்கின்ற மலைவாசிகளுக்கு இதுபோன்ற வீடுகள் கட்டுவதற்கும், மற்றும் அவர்கள் வளர்ச்சிக்காகவும் ஒரு வட்டம் அமைக்கப்படும் என்று அரசால் சொல்லப்பட்டது. அது அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தனியாகக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள், பழங்குடி மக்கள் ஆகியோருக்கு எவ்வளவு தான் அரசாங்கம் வீடுகள் கட்டிக் கொடுத்தாலும், அந்த வீடுகளில் இந்த மக்கள் குடியேறுவதில்லை. அவர்கள் மரத்தடியில் குடிசையைப் போட்டு, அங்கே உள்ள கட்டாந் தரையில் படுத்துக் கொள்ளவே விரும்புகிறார்கள். ஆதலால், இதைப் பரிசீலனை செய்து, அந்த அடிப்படையில் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும். அவர்களுக்கு வசதியான ஒரு இடத்தைக் கொடுக்க வேண்டுமென்ற உணர்வோடு அரசு, அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், உறுப்பினர் சொல்வதைப் பார்க்கின்றபோது, பழங்குடி மக்கள் அத்தகைய சலுகையைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்ற முறையில் அவரது கேள்வி அமைந்திருக்கிறது. எனவே, குறிப்பாக எந்த இடத்தில் அப்படி இருக்கின்றது என்பதைச் சொல்வார்களானால்,



அந்த இடத்தில் அந்த மக்களுக்கு வீடுகள் கட்டித் தர வசதியாக இருக்கும். அவர்கள் அப்படிப் பயனடைவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

## செய்யாறிலுள்ள மாவட்ட முன்சிப் மற்றும் உட்கோட்ட குற்றவியல் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்

*வினா எண் 685— திரு. ப. வெங்கசுப்பிரமணியம் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் செய்யாறு நகரில் உள்ள மாவட்ட நீதிமன்றம், துணை குற்றவியல் நடுவர் மன்றம் (District Munsif–Cum–Sub-Divisional Magistrate Court) சிவில் அதிகாரங்கள் நீக்கப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) இவ்வுத்தரவை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென பொதுமக்களும், வழக்கறிஞர்கள் சங்கமும் வேண்டியுள்ளனரா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) செய்யாறிலுள்ள மாவட்ட முன்சிப் மற்றும் உட்கோட்ட குற்றவியல் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தின் உரிமையியல் அதிகாரங்களை எடுத்து விடலாம் என்று அரசு 1981 ஆம் ஆண்டு ஆணையிட்டது. ஆனால், பின்னர், இவ்வுத்தரவை மறு பரிசீலனை செய்யவேண்டுமென வழக்கறிஞர்கள் சங்கம் விண்ணப்பித்ததையும் மற்றும் மாறிய நிலைமைகளையும் கருத்தில் கொண்டு உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைக்கேற்ப, உரிமையியல் அதிகாரங்களை செய்யாறிலுள்ள மாவட்ட முன்சீப் மற்றும் உட்கோட்ட குற்றவியல் நீதிமன்றம் வைத்துக்கொள்ளலாம் என்று 1982 ஆம் ஆண்டு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. ப. வெங்கசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சிவில் அதிகாரங்கள் மாற்றப்படுகின்றபோது, அந்தப் பகுதியிலே உள்ள வழக்கறிஞர்கள் சங்கத்தின் அபிப்பிராயத்தைக் கேட்டு அறிவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றம் இதுபோன்ற பரிந்துரைகளை அரசுக்கு அனுப்புகிறது. மாவட்ட நீதிபதி அல்லது மாவட்ட நீதிபதியின் கீழ் பணியாற்றுகின்ற கீழ்நிலை நீதிபதிகள் ஆகியோரைக் கலந்து, பெரும்பாலும் அந்தந்தப் பகுதிகளிலே உள்ள வழக்கறிஞர்கள் சங்கத்தையும் கலந்துதான் செய்கிறோம். அது கடைப்பிடிக்கப்படும்.

[1983 ஏப்ரல் 8

**கோவை மாவட்டத்தில் ஒரு விசேஷ நீதிமன்றம் அமைக்கும்திட்டம்.**

***வினா எண் 687**—திரு. கு. ரமணி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட மக்கள் சம்பந்தமான வழக்குகளை நடத்தி முடிக்க கோவை மாவட்டத்தில் ஒரு விசேஷ நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) அது குறித்த ஆலோசனைகள் அரசிடம் உள்ளதா !

**மாண்புமிகு திரு. சி பொன்னையன்:** (அ) மற்றும் (ஆ) : வழக்குகளின் விவரங்களை ஆராய்ந்துபார்த்ததில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிறப்பு நீதிமன்றம் ஒன்று அமைப்பது சரியானதாகத் தோன்றவில்லை என்று உயர்நீதிமன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்தில் நடந்து இருக்கும்படியான வழக்குகளின் எண்ணிக்கையைப் பார்த்து இப்போது நீதிமன்றம் அமைப்பதற்குத் தேவை இல்லை என்று உயர்நீதி மன்றம் முடிவுக்கு வந்துள்ளது என்றால் எவ்வளவு வழக்குகளை எந்த முறையில் பரிசீலனை செய்து எப்படி முடிவு செய்திருக்கிறது ? எவ்வளவு வழக்குகள் இருந்தால் இந்த நீதி மன்றம் அமைக்கலாம் என்று ஏதாவது வழிகாட்டும் நெறிமுறை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, குறைந்தபட்சம் 100 வழக்குகளேனும் இருக்க வேண்டும் என்பதை ஒரு தோராய மதிப்பீடாக வைத்திருக்கிறார்கள். 1979 ஆம் ஆண்டு 43 வழக்குகள் குடியியல் உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும், இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் 5 வழக்குகளும் ; 1980 ஆம் ஆண்டில் 17 வழக்குகள் குடியியல் உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும், 12 வழக்குகள் இந்திய தண்டனை சட்டத்தின் கீழும் ; அதேபோல 1981 ஆம் ஆண்டு 34 வழக்குகள் மட்டுமே குடியியல் உரிமை பாதுகாப்புச் சட்டத்திலும், 9 வழக்குகள் மட்டும் இந்திய தண்டனைச் சட்டத்திலும் இருந்த காரணத்தால் உயர்நீதிமன்றம் அங்கே தனியாக ஒரு நீதிமன்றத்தை அமைப்பதற்கான வாய்ப்பில்லை என்று சொல்லியிருக்கிறது. ஆனாலும் கூட ஒரு ஸ்பெஷல் மொபைல் கோர்ட் அங்கே அமைக்க வேண்டுமென்று அரசு தற்போது கருதி வருகிறது.



1983 ஏப்ரல் 8]

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, ஐ. பி. சி., சி.ஆர்.பி.சி. சட்டங்களின் கீழ் வரக்கூடிய எல்லா வழக்குகளையும் இந்த விசேஷ கோர்ட் பரிசீலிக்கும் என்ற நிலை இருந்தால் நிச்சயமாக வழக்குகளின் எண்ணிக்கை இதற்கு அதிகமாக இருக்கும். இதை அரசே பரிசீலனை செய்தால் தெரியவரும். அப்படி பரிசீலனை செய்யாமல் தேவையில்லை என்ற முடிவிற்கு வந்திருக்கிறது. இருந்தாலும் கூட இந்த மொபைல் கோர்ட் என்பதை உடனடியாக அமைக்க வேண்டும். காரணம் ஏழை எளிய அரிசன மக்களின் பலவிதமான தொல்லைகளுக்குத் தீர்வேயில்லாமல் இருந்து வருகிறது. அதற்காக உருவாக்கப்பட்டுள்ள விசேஷ போலீஸ் பிரிவும் அவர்களுக்கு நியாயம் வழங்குவதில்லை. ஆகவே இந்த மொபைல் கோர்ட் உடனடியாகக் கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, மொபைல் கோர்ட்டிலே எல்லாவிதமான வழக்குகளையும் நடத்த முடியாது. காரணம் சம்பந்தப்பட்டவர்கள் வழக்குகளை ஒத்துக்கொள்வதில்லை. அவர்கள் ஒத்துக்கொள்ளாமல் வாதிடக்கூடிய நிலை ஏற்படுகிறது. அத்தகைய நிலை அதிகமாக ஏற்படுகிறபோது (that cannot be attended to by a Mobile Court--that needs a permaneni Court) என்ற முறையில், அது முடியாது என்று உயர்நீதிமன்றம் கூறியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். பழங்குடி வகுப்பினர், ஆதிதிராவிட மக்கள் ஆகியோர் பாதிக்கப்படுகிறபோது அவர்களுக்கான வழக்கை விசாரிக்கிறபோது (certain types of cases only can be tried in Special Mobile Court) அந்த முறையிலேதான் உயர்நீதிமன்றம் அதை வேண்டாம் என்று சொல்லியிருக்கிறது.

## DIRECTOR OF PRIMARY HEALTH SERVICES MADRAS,

*Q. No. 688—THIRU. N.S.V. CHITHAN : Will the Hon. the Minister for Health be pleased to state —

(a) Whether a retired Director of Medicall Services has been appointed as the Director of Primary Health Services in this state ?

(b) the age of the incumbent ?

(c) the grounds on which he has been appointed ? and

(d) whether steps have been taken by the Government to appoint an officer in service as the Director of Primary Health Services in the place of a reemployed retired incumbent ?

வருவதற்கு வழிவகை இருக்கிறது. அதற்கு நடவடிக்கை எடுக்
கப்பட்டிருக்கிறது. ஆனாலும்கூட காசாளரிடம் சொத்துக்கள்
இல்லை என்று தெரிய வந்துள்ளது. இருந்தபோதிலும்கூடஒருவர்
கையாடல் செய்துவிட்டார், அதுவும் நீதிபதி செய்துவிட்டார்.
அவர் இறந்துவிட்டார் என்றாலும் நீதிபதி தொடர்பு உள்ள அதி
காரிகள் செய்து விட்டார்கள் என்கிறபோது கிரிமினல் சட்டப்படி
அவர்கள் தண்டனைபெற்றாக வேண்டும் என்பதும் தான் முக்கிய
மான ஒன்று. அந்த அடிப்படையில் கிரிமினல் வழக்கு தொடரப்
பட்டு நடந்து வருகிறது. குற்றவாளிகள் சட்டத்தின் அடிப்படை
யில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படுவார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, எழும்பூர் தலைமை மெட்ரோபாலிடன் மாஜிஸ்டி
ரேட் கோர்ட்டில் இவ்வாறு 2 இலட்சம் பெருமான பொருள்கள்
களவு போயிருக்கின்றன, திருட்டு போயிருக்கின்றன காரணத்
தால் அங்கே ஏதாவது வழக்குகள் பாதிக்கப்பட்டுள்ளனவா என
அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே,
சில பொருட்கள் சில வழக்குகளுக்குத் தடயங்களாகக்கூட இருப்
பது உண்டு. அந்த அடிப்படையில் காலதாமதப் பிரச்சினை
ஏற்படுவது உண்டு. நீதித் துறையில் இந்தக் கையாடல் நடை
பெற்றிருப்பதன் காரணமாக இது போன்ற பிரச்சினைகள்
எழுகின்றன. உயர்நீதிமன்றத்தோடு தொடர்புகொண்டு நீதித்
துறையிலே இதுபோன்ற பிரச்சினைகள் அறவே எழாத வண்ணம்
நீதித் துறையிலே இருக்கிற ஜுடிஷியல் விஜிலன்ஸ் தக்க நட
வடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு கேட்டு இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே****

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாமே அவைக்குறிப்
பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

திரு: இரா. தாமரைக்கனி : எழும்பூர் கோர்ட்டு தவிர
சைதாப்பேட்டை, ஜார்ஜ் டவுன் கோர்ட்டுகளிலே இப்படி
கையாடல் சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டதா என்று
அறிய விரும்புகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இந்தக் கையாடல் எழும்பூர் நீதிமன்றத்திலே நடந்திருக்கிறது. அதுகுறித்து அங்கே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்டவர்கள் நீதித்துறையைச் சேர்ந்தவர்கள், வழக்கறிஞர்கள் அல்ல.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, இந்த மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்டிரேட் கோர்ட்டு மட்டுமல்ல, பல கோர்ட்டுகளில் இந்தப் பொருட்கள் பந்தோபஸ்தாக இல்லாத காரணத்தினால் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே அவைகளையெல்லாம் பாதுகாப்பாக வைப்பதற்கு நல்ல பாதுகாப்பான இடமும் பந்தோபஸ்தும் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட கையாடல் வழக்கிலே அந்தப் பொருட்கள் பிரத்தியேகமாக டபுள் லாக்கரிலே வைக்கப்பட்டு பூட்டப்பட்டு அது உடைக்கப்பட்டு கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல் பொருள்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்பதுதான் அரசின் விருப்பம். நீதிமன்றமும் அந்த நடைமுறையைக் கடைபிடித்து வருகிறது என்று அரசு எண்ணுகிறது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சென்னையிலே நீதிமன்றத்திலே பல லட்ச ரூபாய் பொருள்கள் திருடு போய்விட்டதாகவும் அதுகுறித்து வழக்கு தொடரப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்திலே இது போன்று எத்தனை இடங்களில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்திருக்கின்றன ? தமிழ்நாட்டிலே இம்மாதிரி திருடு போனது சம்பந்தமாக எத்தனை வழக்குகள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் தனி வினா ஒன்று இதற்காக எழுப்ப வேண்டும்.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, இந்த வழக்கு சம்பந்தமான குற்றவாளிகள் சினிமா படம் எடுப்பதற்கு முதலீடு செய்ததாக பத்திரிகையிலே செய்தி வந்தது. ஆனால், அமைச்சர் அவர்கள், அவர்களுக்குச் சொத்துக்கள் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே அதையே தடயமாக எடுத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, எழும்பூர் நீதிமன்றத்தைச் சேர்ந்த அவர்கள் சினிமா படம் எடுத்து முதலீடு செய்தார்கள் என்ற தகவல் புலனாய்வுத் துறைக்கும் இல்லை, அரசிற்கும் இல்லை.

[1983 ஏப்ரல் 8

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) ஆம்.

(ஆ) இப்போதைய வயது 64.

(இ) ஆரம்பச் சுகாதார நிலையங்களில் நோய் தீர்ப்புப் பணியை மேம்படுத்துவதற்காகவும், இந் நிலையங்களில் கிடைக்கப்பெற்றுவரும் அனைத்துப் பணிகளை மேம்படுத்தும் நோக்குடனும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள பணியை மேற்பார்வையிடுவதற்காக மட்டும் மூத்த அனுபவம் வாய்ந்த மருத்துவ ஆட்சியாளரைக்கொண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கென்று தனியாக இயக்குநர் பதவி ஒன்றை ஏற்படுத்தியது. ஓய்வுபெற்ற சுகாதார இயக்குநர் டாக்டர் பி. ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான இயக்குநராக ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு ஆரம்பத்தில் நியமிக்கப்பட்டார். அவர் இப்பதவியை 11—2—1980 ல் ஏற்றுக்கொண்டார். தொடர்ச்சி இருக்கவேண்டும் என்பதற்காகவும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்பாட்டில் முன்னேற்றம் இருக்கக் கருதியும், டாக்டர் பி. ஆர். பாலகிருஷ்ணன் அவர்களில் ஒப்பந்தக் காலம் முறையாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 10-8-1983 வரை அவருடைய ஒப்பந்தகாலம் அதிகரிக்கப்பட்டு தற்சமயம் அவர் தொடர்ந்து பணியிலிருந்து வருகிறார்.

(ஈ) பணியில் இருக்கும் ஒரு அதிகாரி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான இயக்குநராக அமர்த்தப்பட வேண்டுமா என்ற கேள்வி தகுந்த நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்கத் தலைவர் அவர்களே, இவருடைய பதவி நீடிப்புக் காலத்தை இனியும் நீட்டிக்க செய்ய அரசு விரும்புகிறதா ? இதைப்போல மருத்துவத் துறையில் அதிகாரிகள் வேறு எவரும் பதவி நீட்டிப்பு செய்யப்பட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, இது ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்த வரையில் நீண்டகாலமாக இருக்கிற பிரச்னை. அது மூன்று அதிகாரிகளுடைய எல்லைக்குள்ளே வருகிறது. டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அவர்களுடைய தலைமையில் முன்பு இயங்கிக் கொண்டு வந்தது. அதிலே மூன்று மருத்துவர்கள் இருக்கிறார்கள். ஒரு மருத்துவர் டி.பி.எச். அவர்களுடைய நேர் பார்வையிலே பணியாற்றி வருகிறார்கள். இன்னொரு மருத்துவர் டி. எம். எஸ். அவர்களுடைய நேர் பார்வையிலே பணியாற்றி வருகிறார்கள். இப்போது இவர்களெல்லாம் ஒருங்கிணைந்து



1983 ஏப்ரல் 8]

பணியாற்ற வேண்டுமென்பதற்காக ஒரு டைரக்டர் ஆப் பிரைமரி ஹெல்த் சென்டர் என்று கிராமப் பகுதிகளிலே சுறு சுறுப்பாகப் பணியாற்றவேண்டும் என்றும், நல்லமுறையிலே ஒரு இண்டக்ரேட்டட் எஃபர்ட்ஸ் தேவை என்பதற்காக அப்படிப் பட்ட அதிகாரியை நியமித்தார்கள். ஆனால் இன்றையதினம் இதை மறுபரிசீலனை செய்யலாமா என்ற வகையில்—ஹெல்த் சர்வீசே ஒரு காலத்தில் டி.எச்.எஸ். ஆக இருந்தது ; இவை களையெல்லாம் ஒட்டுமொத்தமாக நல்லவகையிலே ஒருங் கிணைத்து எப்படி செய்யலாம் என்பதற்காக ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறோம். அந்தக் கமிட்டி இதைப் பரிசீலனை செய்து உடனடியாக அறிக்கை தரவிருக்கிறது. அதற்குப் பிறகு ஒரு முடிவிற்கு வருவதற்கு நமக்கு வாய்ப்பிருக்கிறது.

(முற்பகல் 9—50)

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நல்ல திறமையான, நிர்வாகத்திறமை கொண்டவர்களை ஓய்வு வயதைக் கணக்கெடுக்காமல், அவர் களுடைய திறமையைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுமானவரையில் ஓய்வு பெற்றவர்களைப் பயன்படுத்த வேண்டாம் என்றுதான் அரசும் அந்த இலாகாவும் செயலாற்றி வருகிறது. இந்த வகையில் நான் ஏற்கனவே சொன்னமாதிரி எப்படியெல்லாம் நாம் செய்ய லாம் என்பதற்காக ஒரு கமிட்டி அமைத்து இருக்கிறோம், அந்தக் கமிட்டியின் விவரம் கொடுக்கவிரும்புகிறேன்.

Secretary, Health and Family Welfare Department.

Secretary, Planning and Development Department.

Secretary, Finance Department.

Dr. Maricar

Dr. C.A.K. Shanmugam

Dr. Natarajan

இவர்கள் எல்லாம் இந்தக் கமிட்டியில் (குழுவில்) இருக்கிறார்கள். அவர்கள் இதனைப் பரிசீலித்து, நமக்குப் பரிந்துரை செய்ய இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தப் பதவியில் இருப்பவர்கள் ரயில்வே துறையில் பணியாற்றியதாகவும், அந்தப் பதவிக்கு உள்ள தகுதிக்குக் குறைவான தகுதி உடையவராக இருப்பதாகவும் செய்திகள் வருகின்றனவே அது உண்மையா ? அவர் தொடர்ந்து பல ஆண்டுக்காலம் ஓய்வு பெற்ற பிறகு அதிலே நீடிக்கவேண்டிய அவசியம் என்ன ? வேறு ஆள் இல்லையா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னமாதிரி இதிலே விசேஷ காரணம் என்னவென்றால் நல்ல அனுபவம் பெற்ற ஒருவர், ஆரம்ப சுகாதார நிலையங்களையெல்லாம் நன்றாகச் சென்று பார்வையிட்டு, அந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் எல்லாம் எப்படி இயங்கு கின்றன என்பதை அறிந்து சொல்வதற்காக அந்தப் பதவி ஏற்படுத்தப்பட்டது. அதற்காக அவர் நியமிக்கப்பட்டார். அந்த வகையில் அவர் அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை யெல்லாம் அவ்வப்போது பார்வையிட்டு அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுத்து வருகிறார். அவைகளை எப்படி யெல்லாம் முன்னேற்ற வேண்டும், அதிலே என்னென்ன செய்ய வேண்டும், என்பதையெல்லாம் அவர்கள் எடுத்துத் தெரிவித்து வருகிறார்கள். அந்த அடிப்படையில் நாமும் பணிகளைச்செய்து வருகிறோம். நாம் ஒருவரை நியமிக்கின்ற நேரத்தில் அவருக்கு அந்தப் பதவி வகிக்கத் தகுதியில்லை என்று பரவலாக வரக்கூடிய நிலைமை இருக்கலாம். ஆனால் அரசாங்கம் அவருக்கு அந்தத் தகுதி இருக்கிறது என்று கருதித்தான் அந்தப் பதவியைக் கொடுத்து இருக்கிறார்கள்.

**ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மருந்து வாங்க ஒதுக்கப்படும் தொகை.**

*வினா எண் 689 :—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன் மற்றும் திரு. செ செம்மலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு மருத்துவமனைக்கும் மருந்து வாங்க ஒதுக்கப்படும் தொகை எவ்வளவு ?

(ஆ) இந்தத் தொகையை உயர்த்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?





மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மருந்துகள் வாங்க ஒவ்வொரு நிலையத்திற்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 20,000 வீதம் தற்போது ஒதுக்கப்படுகிறது. மேலும் நடமாடும் மருந்தகங்கள் இணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையங் களுக்கும் ரூபாய் 20,000 ஆண்டொன்றிற்கு ஒதுக்கப்படுகிறது.

(ஆ) ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ஆண்டுக்கு அளிக்கும் ரூ. 20,000—ஐ ரூ. 30,000 ஆகவும் நடமாடும் மருந் தகங்களுக்கு ஆண்டுக்கு வழங்கும் ரூ. 20,000—ஐ ரூ. 25,000 ஆகவும் உயர்த்த கருத்துரு ஒன்று ஆய்வில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சைப் பெறச் செல்லும் நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள் அங்கே இல்லை என்று சொன்னால் அங்கே பணியாற்றும் மருத்து வர்கள் வெளியே மருந்துக்கடைகளில் இருந்து அவற்றைப் பெற வேண்டும் என்று சொன்னால் அவர்களுக்கு அப்படிச் செய்வ தற்கு அதிகபட்சமாக ரூ 200 தான் அனுமதிக்கப்பட்டு இருப்ப தாகத் தெரிகிறது. அந்தத் தொகை மிகவும் குறைவாக இருப்ப தால் அதை உயர்த்த அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த ரூ. 200 என்பது உடனடியாக அவசியத் தேவையுள்ள மருந்துகள் வேண்டும் என்ற நிலை இருக்கு மானால் அதற்காக அவர்களே வாங்கிக் கொள்வதற்காக அந்த அளவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டு இருக்கிறது. அந்த அளவிற்கு அந்த அதிகாரம் போதும் என்றுதான் நினைக்கிறோம். ஏனென்றால் ரூ. 100-க்கு மேல் எந்த ஒரு நேரத்திலும் மருந்து தேவை ஏற்படாது. ஆனால் இப்போது பரிசீலனையில் உள்ளது என்பது எதைப்பற்றியது என்று சொன்னால் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்துகள் வாங்க ஆண்டு ஒன்றுக்கு அளிக்கப்படும் ரூ. 20,000-ஐ ரூ. 30,000 என்று ஆக்கவும் நடமாடும் மருந்தகங்களுக்கு மருந்துகள் வாங்க, ஊர்துகளை வைத்துக்கொண்டு ஒவ்வொரு கிராமம் கிராமமாகச் சென்று சிகிச்சை கொடுத்து வருகிறோமோ அந்த மருந்தகங்களுக்கு மருந்துகள் வாங்க, தற்போது ஆண்டு ஒன்றுக்கு வழங்கும் ரூ. 20,000 என்பதை ரூ. 25,000 என்று ஆக்கவும் உள்ள பரிந்துரைதான் அரசின பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான் ஒவ்வொரு

[1983 ஏப்ரல் 8

ஆரம்பச்சுகாதார நிலையமும் படிப்படியாக இன்று தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. அப்படித் தரம் உயர்த்தப்படுகின்ற நேரத்தில், அந்த மருத்துவ மனைகள் தாலுக்கா மருத்துவ மனை அந்தஸ்தைப் பெறுகிற நிலை இருக்கிறது. எனவே, அப்படித் தரம் உயர்த்தப்பட்ட ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் தாலுக்கா மருத்துவ மனைகளுக்கு ஒதுக்கப்படுகின்ற அளவிற்கு மருந்துகள் வாங்க நிதி ஒதுக்கப்படுகிறதா? அப்படிப் பட்ட நிலையங்களுக்குத் தேவையான மருந்துகள் எவ்வளவா அவ்வளவு தொகை தற்போது அரசால் ஒதுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இன்றைய புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே இதுவரையிலே, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, ஆரம்பச் சுகாதார நிலையங்களை தாலுகா மருத்துவ மனைகளுடைய அந்தஸ்துக்கு உயர்த்தியிருக்கிறது. இப்பொழுது 30 மருத்துவ மனைகளை நாம் அந்த அந்தஸ்துக்குக் கொண்டு வந்திருக்கிறோம். இன்னும் 12 மருத்துவ மனைகளில் அறுவை சிகிச்சை கூடங்களை ஏற்படுத்தி, அப்படிப் பட்ட மருத்துவ மனைகளை உருவாக்க இருக்கிறோம். அந்த மருத்துவ மனைகளுக்கு எல்லாம் எவ்வளவு தேவை என்று அங்கு அனுமதிக்கப்பட்ட உள் நோயாளிகளைப் பொறுத்து, அதே மாதிரியாக, புறநோயாளிகளைப் பொறுத்து, அந்த நேரத்திலே தேவையான அளவுக்கு மருந்து ஒதுக்குவதிலே எந்தவித மான சங்கடமும் இருக்காது.

**பல் மருத்துவ வேலைக்காக விண்ணப்பித்தோர் எண்ணிக்கை.**

* வினா எண் 690—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல் மருத்துவ வேலைக்காக விண்ணப்பித்துள்ளவர்கள் எத்தனை பேர்?

(ஆ) மார்ச் 1982 முடிய எத்தனை பேர் அரசு மருத்துவ மனைகளில் நியமிக்கப்பட்டனர்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) கடந்த 1981–82 ஆம் ஆண்டில் மொத்தம் 149 நபர்கள் உதவிப் பல் மருத்துவர் வேலைக்காக தமிழ்நாடு தேர்வாணைக் குழுவிற்கு விண்ணப்பித்தனர்.

(ஆ) விண்ணப்பித்தவர்களில் 30 நபர்கள் தமிழ்நாடு, பொதுத் தேர்வாணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏப்ரல் 82-ல் அரசால் நியமனம் செய்யப்பட்டனர்.



1983 ஏப்ரல் 8]

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல் மருத்துவர்கள் 1982–லே 149 பேர்கள் அப்ளிகேஷன் போட்டு, 30 பேர்கள் மட்டும் எடுக்கப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மற்ற கிட்டத் தட்ட 120 பேர்கள் – அதாவது 80 சதவீதம் எடுக்கப்படாம லிருப்பதற்கு என்ன காரணம்? தகுதி இல்லாததா? அல்லது அந்த ஆண்டு அவ்வளவுதான் தேவையா என்பதை அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் சென்ற 34 ஆண்டுகளாக இல்லாத அளவுக்கு, பல்வேறு தாலுகா மருத்துவ மனைகளிலே, பல் சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்தி இருக்கிறோம். ஒவ்வொரு தாலுகா மருத்துவ மனையிலும் நாம் அப்படிப்பட்ட ஒரு பிரிவை ஏற்படுத்துகிற நேரத்தில் அந்தத் தேவையை நாம் கணக்கிலே எடுத்துக் கொள்கிறோம். ஆகவே, இவ்வளவு தேவை என்று தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குத் தெளிவாகச் சொல்கிறோம். எவ்வளவு வேகன்ஸீஸ், எவ்வளவு பேரை ரெக்ரூட் செய்யலாம் என்று நாம் சொல்கிறோம். ரெக்ரூட்டிங் பொறுத்தவரையிலேயே முழுக்க, முழுக்க சர்வீஸ் கமிஷன் வேலை. எவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொல்வது நம்முடைய வேலை. அந்த அடிப்படையிலே 30 வேகன்ஸீஸ் என்று சொல்கிறோம்; 30 இடங்களை நிரப்பியிருக்கிறோம்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் 30 டாக்டர்களை எடுத்தோம் என்று சொன்னார்கள். அப்ளை செய்தவர்களில் எஸ்.சி., எஸ்.டி., எத்தனை பேர்கள்? அவர்களில் எத்தனைப் பேர்களுக்கு அந்த ரிசர்வ்வேஷன் கோட்டா கொடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Number of applications received from SC/ST is 21. அதிலே 5 பேரை நாம் எடுத்திருக்கிறோம்.

**கம்பம் காந்திஜி அரசினர் மருத்துவமனை.**

* வினா எண்: 691—திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கம்பம் காந்திஜி அரசினர் மருத்துவமனையில் விபத்து கால-அவசரக்கால வார்டு ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1983 ஏப்ரல் 8

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் தொகுதியைச் சுற்றிலும் மலைப்பாதைகள் அதிகமாக இருக்கின்றன. மேலும் சுருளி நீர்வீழ்ச்சிக்கும் தேக்கடிக்கும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்த வண்ணமே இருக்கிறார்கள். அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்ட வண்ணம் இருக்கின்றன. அதில் அபாயகரமான நிலையிலே இருப்பவர்களை 72 மைல் தூரத்திலுள்ள மதுரைக்குத்தான் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, இதைத் துரிதப்படுத்த அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைக்கட்டுவதற்காக ரூ. 9 இலட்சம் செலவாகும். அதிலே, மாண்புமிகு கம்பம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் நல்ல முறையில் தீவிரமாகக் கவனம் செலுத்தி, அங்கே இருக்கக்கூடிய கார்டமம் போர்ட் நிர்வாகிகளிடத்திலே, மருத்துவ மனைகளுடைய அந்த பிரிவுக்காக ஒரு தொகை அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதற்கிணங்க அவர்களும் முன் வந்திருக்கிறார்கள். ஆனால், நாம் 'அஃபிஷியல்' —ஆக ஒரு கடிதம் எழுதியிருக்கிறோம்.

(முற்பகல் 10-00.)

அவர்களிடமிருந்து இன்னும் பதில் வரவில்லை. அந்தப் பதில் விரைவில் வருவதற்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். 9 இலட்சம் ரூபாய் செலவில் எக்ஸ்டென்ஷன் என்று சொல்லப்படும் இந்த மருத்துவமனையை விஸ்தரிக்கப்பட்டிருக்கக் கூடிய பிரிவில்,

ஆண்களுக்காக 16 படுக்கைகள்,

பெண்களுக்காக 10 படுக்கைகள்,

லேபர் வார்டுக்காக 14 படுக்கைகள்,

Infectious Diseases வார்டுக்காக 6 படுக்கைகள்.



1983 ஏப்ரல் 8]

கொண்டிருக்கக்கூடிய ஒரு அவசரத் சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் இன்னும் கடுமையாக முயற்சியெடுத்துக் கொண்டால் அதை வெற்றிகரமாக முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

## தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் சிமெண்ட்.

* வினா எண். 692 —திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிமெண்ட் உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெற எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : சிமெண்ட் உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெற்றுள்ளது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் மதுரை மாவட்டத்தில் உள்ள பாளையம் பகுதியில் ஆண்டு ஒன்றுக்கு 4 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட சிமெண்ட் தயாரிக்கும் ஆலை ஒன்றை அமைக்க இசைவுக் கடிதத்தை (Letter of Intent) வழங்கும்படி தமிழக அரசு மைய அரசை உயர்மட்ட அளவில் அணுகியுள்ளது. மைய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு தருகின்ற லெவி சிமெண்ட் நமக்குப்போதுமானதாக இருக்கிறதா? கூடுதலாக லெவி சிமெண்டை ஒதுக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன். அல்லது வெளிநாட்டிலேயிருந்து அதிக அளவிற்கு இறக்குமதி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிற்கு ஒரு காலாண்டுக்குத் தேவைப்படுகின்ற சிமெண்ட் சுமார் ஆறு இலட்சம் டன்களாகும். ஆனால் மைய அரசு 1,42,000 டன்களை ஒரு காலாண்டுக்குக் கொடுக்கிறது. பற்றாக்குறையைப் போக்கிக் கொள்ள வட கொரியா, தென் கொரியாவிலிருந்து

சுமார் ஐந்து இலட்சம் டன்களை இறக்குமதி செய்து கொள் வதற்கு மாநில அரசுக்கு மைய அரசு அனுமதி வழங்கியுள்ளது. மாநில அரசு சிமெண்ட் கார்ப்பரேஷனுக்கு அனுமதி வழங்கி அந்த நடவடிக்கைகளில் சிமெண்ட் கார்ப்பரேஷன் ஈடுபட்டிருக் கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது சிமெண்டிற்குச் சிறிதளவு தட்டுப்பாடு இருப்பதால் சிமெண்டால் கட்டப்படும் கட்டிடங்களை விட, அந்தக் காலத் தில் நமது முன்னோர்கள் சுண்ணாம்பு, மணல், கருப்புக்கட்டி பாகு, முட்டையில் வெள்ளைக் கரு ஆகியவைகளைக் கொண்ட கலவையைத் தயார் செய்து கட்டிய கட்டிடங்கள் ஸ்ட்ராங் காக இருக்கின்றனவே, அந்த முறையில் கலந்து அரசு விற்பனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தாமரைக்கனியோ, அவர்களது நண்பர்களோ இந்த முயற்சியில் பரீட்சார்த்தமாக ஈடுபட்டுப் பார்க்கலாம்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறக்குமதி செய்யப்படும் சிமென்டைக் கிளியர் செய்யவும், டிரான்ஸ்போர்ட்டுக்கும், ஓரிரு கம்பெனிகளுக்கு மட் டுமே தொடர்ந்து கொடுக்கப்படுவதாக அறிகிறேன்? அது உண் மையா? அப்படியென்றால் பிற்காலத்திலாவது மற்றக் கம்பெனி களுக்கும் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவ ரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லையென் றாலும் ஃபார்வர்டிங் அல்லது கிளியரிங்கைப் பொறுத்த வரைக் கும் டெண்டர் கால்பார் செய்து தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்ப ரேஷன் முடிவு செய்கிறது. லோயஸ்டாக யார் பார்ட்டிசிபேட் பண்ணுகிறார்களோ அதையெல்லாம் பார்த்து சிமெண்ட் கார்ப்பரேஷன் முடிவு செய்கிறது. யாருக்குக் கொடுப்பது என்று அரசு முடிவு செய்வதில்லை. தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு, சிமெண்ட் கார்ப்பரேஷன் அதற்கான அனுமதியை வழங்குகிறது.

**திரு என். வரதராஜன் : :** பேரவைத் தலைவரவர்களே, சமீபகாலத்தில் சிமெண்ட் தட்டுப்பாட்டின் காரணமாகப் பல கட்டிடங்களை அரசுத் துறையில் கட்ட முடியாமல் சிரமத்தில் இருக்கிறது. இதனால் இலட்சக் கணக்கான கட்டிடத் தொழி





லாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். எனவே, தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் சிமெண்ட் அனைத்தும் தமிழ்நாட்டிற்கே உரிமை என்ற முறையைத் தமிழக அரசு வற்புறுத்துமா? மேலும், பல ஆண்டுகளாக வற்புறுத்தப்பட்டு வருகின்ற பாளையம் சிமெண்ட் ஆலைக்கான உரிமையை வாங்குவதற்கு அரசு முயற்சி யெடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே, 1981, 1982 ஆண்டு களில் ஆண்டுக்குச் சராசரியாக 35 இலட்சம் டன்கள் சிமெண்ட் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் ஒரு கால் ஆண்டுக்கு, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, 1,42,000 டன்கள் லெவி சிமென்டாக நமக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால் பல மாநிலங்களிலே எங்கெல்லாம் உற்பத்தியில்லையோ அதைப் பார்த்து, இதை அனைத்திந்திய அளவிலே எடுத்து உற்பத்தி செய்கிறோமே தவிர, விநியோகத்தை மைய அரசு லெவி சிமென்ட் பேரில் பிரித்துக் கொடுக்கிறார்கள். எனவே, நம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற சிமெண்ட் முழுவதையும் நாமே வைத்துக் கொள்வது என்ற பிரச்சினை ஏழாது. மத்திய அரசு அதற்கு அனுமதியும் வழங்காது. ஆனால் அங்கு தேவைக்கு ஏற்ப அதிகமாக ஒதுக்க வேண்டு மென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து வற் புறுத்துவோம். அதைப் போன்று பாளையம் சிமெண்டைப் பொருத்தவரைக்கும் அதற்காகவும் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருப்போம்.

**திரு. கோவைத்தம்பி;** தலைவரவர்களே, சிமெண்ட் வினி யோகம் மற்ற மாநிலங்களுக்கு லெவி முறையில் அனுப்பப்படு வது போல், சிமெண்ட் உற்பத்திக்காக தேவையான மின்சாரத்தை மற்ற மாநிலங்களிலிருந்து வழங்கவேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டதா? (பதில் இல்லை).

**திரு. ஏ. . குலசேகர் :** தலைவரவர்களே ; வெளிநாட்டி லிருந்து வரவழைக்கப்பட்ட சிமெண்ட் எந்த முறையில் இப்போது வழங்கப்படுகிறது? தொழிற்சாலை கட்டுவதற்கு விண்ணப்பித்த வர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு தலைவ ரவர்களே, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சிமெண்ட் டுக்கு மட்டுமல்ல, லெவி சிமெண்டுக்குக் கூட முன்னுரிமை, அரசு நிறுவனங்களுக்கும், அரசுத் துறையிலே கட்டப்படுகின்ற

கட்டிடங்கள் போன்றவைகளுக்கும் கொடுக்கப்படுகிறது' ஏறக்குறைய 2 பங்கு அரசுத் துறைக்கும், 1 பங்கு பொது மக்களுக்கும் வழங்கப்படுகிறது.

திரு. ஏ. டி. குலசேகர் : தலைவரவர்களே, நான் கேட்பது' தொழிற்சாலைகள் கட்டுவதற்காக முன்னுரிமை வழங்கப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர் களே, தொழிற்சாலைகளுக்கும், அதற்குரிய 'ரேஷியோ' வகையில், முன்னுரிமை கொடுத்து, வழங்கப்படுகிறது.

**சிமெண்டை பாலிதின் பைகளில் அடைத்து விற்பனை செய்யும் திட்டம்**

* **வினா எண் 693—திரு. சி. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சிமெண்டை பாலிதீன் பைகளில் அடைத்து விற்பனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏஸ். திருநாவுக்கரசு :** (அ) மற்றும் (ஆ): சிமென்ட் கட்டுப்பாட்டு ஆணையை மத்திய அரசு நிர்வகித்து வருகிறது. எந்த வகை பைகளில் சிமென்ட்டை அடைத்து விற்பனை செய்ய வெண்டுமென்பதை மத்திய அரசுதான் பரிசீலனை செய்ய வேண்டும். 1-10-1982 முதல் அமுலுக்கு வந்த மத்திய அரசின் உத்திரவின்படி எல்லா சிமென்ட் உற்பத்தியாளர்களும் முற்றிலும் புதிய நல்லதரமான 100 சதவீதம் சணல் பைகளில் சிமென்டை அடைத்து விற்பனை செய்ய வேண்டும்.

* **வினா எண் 694—திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகுதொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள சிமென்ட் தொழிற்சாலைகள் ஒவ்வொன்றிலும் 1981-82-ம் ஆண்டு எத்தனை டன் சிமென்ட் உற்பத்தி செய்யப்பட்டது.

(ஆ) சணல் பைகளில் நிரப்பி அனுப்புவதால் போக்கு வரத்தின் போது சிமென்ட் சேதம் ஆவதைத் தடுக்க சிமென்ட்டை பாலிதீன் பைகளிலோ அல்லது பேப்பர் பைகளிலோ நிரப்பி அனுப்புவதற்கு அரசு உத்தரவிடுமா,





**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) தமிழகத்தி லுள்ள 8 சிமென்ட் ஆலைகளும் சேர்ந்து 1981-82-ஆம் ஆண்டுக்கு (ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 முடிய) சுமார் 35.60 இலட்சம் டன் சிமென்ட் உற்பத்தி செய் துள்ளார்கள்.

(ஆ) எந்த விதமான பைகளில் சிமென்டை அடைத்து விற்க வேண்டும் என்பது குறித்த ஆணையை மத்திய அரசு தான் வெளியிட வேண்டும். 1-10—1982 முதல் அமுலுக்கு வந்த மத்திய அரசின் உத்தரவுப்படி முற்றிலும் புதிய நல்ல தரமான 100 சதவீதம் புதிய சணல் பைகளில் சிமென்டை அடைத்து விற்பனை செய்ய வேண்டும். பழைய சிமென்ட் பைகளை உபயோகிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. எனவே அதிக அளவு சிமென்ட் சேதமடைவது தடுக்கப் படுகிறது.

**திரு. சி. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, சணல் பைகளில் சிமென்ட் அடைத்து விற்பதால் பாதி சிமென்ட் விநியோகம் செய்யப்பபடுவதாகச் சில இடங்களில் சொல்லப்படுகிறது. கலப்படம் செய்யவும் ஏது வாகயிருக்கிறது. பாலிதின் பைகளில் சிமென்ட் விற்பனை செய்ய தமிழக அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்திருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே இதுகுறித்து சமீபத்திலே மத்திய அரசு இவ்வரசினுடைய ஆலோ சனையைக் கூறுமாறு கேட்டுள்ளது. அதன் அடிப்படையிலே சிமென்ட் 50 கிலோ மூட்டைகள் அனுப்பினால் 40 முதல் 45 தான் போய்ச்சேருகிறது. எனவே அதற்குப் பதிலாக பாலிதின் அல்லது ஃபிளை பேப்பர்களில் கட்டி அனுப்பலாம் என்று இவ்வரசு ஏற்கனவே மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது

**திரு. எஸ். இராசாராமன் :** தலைவர் அவர்களே, 35 இலட்சம் டன் உற்பத்தி செய்வதாக அமைச்சரவர்கள் கூறி னார்கள். அப்படியிருந்தும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் சிமென்ட் பற்றாக்குறை இருக்கிறது. இதை நிவர்த்தி செய்வதற்கு ஜெனரேட்டரைப் பயன்படுத்தி உற்பத்தி செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர் களே, நான் ஏற்கனவே சொன்னேன். மின் வெட்டு இருக்கிற காரணத்தால் ஜெனரேட்டரைப் பயன்படுத்தி, ஏற்கனவே உற்பத்தி செய்வதிலே சிமென்ட் தொழிற்சாலை ஈடுபட்டுள்ளது.

பற்றாக்குறை என்பது உற்பத்தி செய்வதினால் அல்ல. 35 இலட்சம் டன் ஒரு காலாண்டுக்கு, தமிழகத்திலே உற்பத்தியாகிறது. நமக்கு முழுமையாக தேவை ஒரு காலாண்டுக்கு 6 இலட்சம் டன், ஆக ஓராண்டிற்கு 24 இலட்சம் டன். இப்போது உற்பத்தி 35 இலட்சம் டன்னாக இருக்கிறது. இது அதிகம் தான். மத்திய அரசு பகிர்ந்து கொடுப்பதால், லெவி சிமெண்ட் குறைவாக இருக்கிறதே தவிர, உற்பத்திக் குறைவினால் பற்றாக் குறை அல்ல.

**திரு. த. ஆறுமுகம் :** 1980–81, 1981–82-ல் அரியலூர், ஆலங்குளத்தில் சிமெண்ட் எவ்வளவு உற்பத்தியானது என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ஆலங்குளத்திலே 1981–82-ல் முதல் காலாண்டில் 63,628 டன்; இரண்டாவது காலாண்டில் 80,000 டன்; அதற்கடுத்து 91,000 டன்; அதற்கடுத்து 85,000 டன் என்ற அளவில் உற்பத்தி இருந்தது.

அரியலூரைப் பொறுத்தவரைக்கும், 1981—-ல் முதல் காலாண்டில், 57,000 டன், இரண்டாவது காலாண்டில் 69,000 டன்; மூன்றாவது காலாண்டில் 72,000 டன், இறுதி காலாண்டில் 77,971 டன் என்ற அளவில் உற்பத்தி இருந்தது.

(முற்பகல் 10–10).

**திரு. சி. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசின் சார்பிலே நடைபெறும் சிமெண்ட் நிறுவனங்களில் இந்த சிமெண்ட்டை பாலிதின் பைகளிலே அடைத்து விற்பதாகத் தெரிகிறது. ஆனால் மற்ற தனியார் நிறுவனங்களில் பாலிதீன் பைகளில் அடைக்காமல் சாக்குப் பைகளில் அடைத்து விற்பதாக தெரிகிறது. ஆகவே இந்த நிறுவனங்களும் சாக்குப் பைகளில் அடைத்து விற்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா? அடுத்து, சாக்குப் பைகளிலே அடைத்து விற்பதற்கும், பாலிதின் பைகளிலே அடைத்து விற்பதற்கும் விலைகளில் வித்தியாசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே விலை வித்தியாசம் அதிகம் இல்லை. ஆனால் நஷ்டம் அதிகமாக ஏற்படுகிறது. சணல் பைகளில் அடைத்து விற்பதைவிட பாலிதின் பைகளில் அடைத்து விற்பது பொதுமக்களுக்கு நன்மை செய்வதாக



இருக்கும். ஏன் என்றால் 50 கிலோ சிமெண்ட்டை சணல் பைகளில் அடைக்கிறபோது, அது பொதுமக்களுக்குச் சேருகிறபோது, 45 கிலோவாகக் குறைந்து போய்ச் சேருகிறது. நான் முதலிலே சொன்னேன். இதுகுறித்து மத்திய அரசுக்கு ஏற்கனவே பரிந்துரை செய்திருக்கிறது. பாலிதின் பைகளிலே அடைக்கவேண்டுமென்று கேட்டு மத்திய அரசிடம் இருந்து உத்தரவு கேட்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையை மத்திய அரசுதான் இடவேண்டும். அந்தக் கட்டுப்பாடு மத்திய அரசின் கையிலேதான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் ( * ) உடுக் குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

**(அ) உறுப்பினர் திரு. வெ. இராஜசேகரன் கைது செய்யப் பெற்றுள்ளது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. காவல் துறை கமிஷனரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றிருக்கிறது என்பதை பேரவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

I have the honour to inform you that Thiru V. Rajasekha an MLA who was arrested along with others in 'X' Station Crime No. 300/83 under Section *143 IPC 41*, Madras City Police Act, read with Section *7(1)(a)* of the Criminal Law Amendment Act was remanded till *21—4-83* and lodged in the Central Prison Madras, today *(7-4—83)*.

## 3. தகவல் கோரல்.

**உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் :**

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சென்னை உட்பட தமிழகத்திலே பல்வேறு இடங்களில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ரசிகர் மன்றத்தினர், தமிழகததில் ஏற்பட்டுள்ள குடி நீர்த் தட்டுப்

[திரு. என் எஸ். வி.சித்தன்] [1983 ஏப்ரல் 8

பாடு, அரிசி பற்றாக்குறை, மின் தட்டுப்பாடு ஏற்பட்டதைத் தடுக்கத் தவறிய தமிழக அரசின்போக்கைக் கண்டித்து ஜனநாயக முறைப்படி அமைதியான முறையிலே ஊர்வலம் செல்ல காவல் துறையினரிடம் முறைப்படி அனுமதி கேட்டும், அனுமதி மறுக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், சென்னை, மதுரை இன்னும் பல ஊர்களிலே அமைதியான முறையிலே இருந்த காங்கிரஸ் கட்சிக்காரர்கள் மீது, குறிப்பாக பெண்கள் மீது, ஊர்வலம் துவங்காத நிலையிலே, கொடுமையான முறையிலே தடியடிப் பிரயோகம் செய்தும், பல்லாயிரக்கணக்கானவர்களைச் சிறைப்படுததியும், சென்னை, மதுரை ஆகிய ஊர்களிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதைப் பற்றி தாங்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** சென்னை, மதுரை, ஆகிய ஊர்களிலே புகைப்படக்காரர்களை தாக்கியும், காயப்படுத்தியும், ஜனநாயகத்தினுடைய குரல்வளையை நெறித்து இருக்கின்ற தமிழக அரசினுடைய போலீஸ் துரைத்தனத்தை.....

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, (குறுக்கீடு). நம்முடைய பேரவையைப் பொறுத்த வரையில் மேட்டர் ஆப் பப்ளிக் இம்பார்ட்டன்ஸ், பொது மக்களுடைய கவனத்தைக் கவரத்தக்க பிரச்சினைகளில் கட்சித் தலைவர்கள் எழுந்து பொதுவாக கேட்பது உண்டு. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் இங்கே ஒரு அறிக்கையை எழுதி வைத்துப் படிக்கிறார்கள். அதைத்தான் நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சாதாரணமாக வெளி நடப்புச் செய்கிறபோதுதான் அறிக்கையை வைத்துப் படிப்பார்கள். இந்த மாதிரியாக விளக்கங்கள் கேட்கும்போது இப்படி எல்லாம் செய்வதில்லை என்பதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்று நடந்த சம்பவம் சம்பந்தமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். எனவே நேற்றைக்கு ஜனநாயகத்தின் குரல் வளையை நெறித்து விட்டு, போலீஸ் துரைத்தனத்தை நடத்தியிருக்கிற தமிழக அரசினுடைய இந்தப் போக்கைக் கண்டிக்கின்ற வகையிலே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி வெளிநடப்பு செய்கிறது.

*(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*



1983 ஏப்ரல் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஜனநாயகப் போராட்டங்களை எல்லாம் உள்ளே இருந்து நடத்தலாம்.

**திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒத்திவைப்புத் தீர்மானம் இது சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மறியல் செய்வதற்குக் கூட உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை இன்றைக்கு இல்லாவிட்டாலும், நாளைக்காவது தாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காவல் துறை மானியம் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. இதன் மீது பேசலாம். இதைப்பற்றி வெளி நடப்பே செய்து விட்ட பிறகு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வது மரபாக இருக்காது. (குறுக்கீடு).

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி வெளிநடப்பு செய்து இருக்கிறது. ஆனால், நாங்கள் எல்லோரும் அந்தச் சம்பவம் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறோம். ஆகவே, இது பற்றி போலிஸ் மானியத்திலே பொதுவாகப் பேச முடியாது. அது சாத்தியம் அல்ல. இதிலே சில குறிப்பிட்ட பிரச்சினைககள் இருக்கின்றன. தடியடி செய்வதற்கு உரிமை இருக்கிறதா, ஊர்வலம் நடத்த உரிமை இருக்கிறதா, என்பதைப் பற்றிய விவரங்களைக் குறித்து நாம் பேச வேண்டியிருப்பதால், அதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றும் இன்றும் காவல் துறை மானியத்தின் மீதான விவாதம் நடைபெறுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் இதே பொருள் குறித்து, இத்தகைய உரிமைகள் குறித்து நேற்றுத்தான் பேசினார்கள். அந்த மறியல் செய்யும் உரிமை, வேலை நிறுத்தம் செய்ய உரிமை போன்றவைகளெல்லாம் வழி வழியாக சுதந்திரப் போராட்ட காலத்தில் இருந்து கடைபிடிக்கப்பட்டு வருகின்றனவாக ஆகிவிட்டன என்றும், அதைத் தடுக்கக் கூடாது என்றும் பேசியிருக்கிறார்கள். அதை நானும் கேட்டுக்கொண்டு இருந்தேன். ஆக, நான் தெரிவித்துக் கொள்வது அவர்கள் ஒரு பிரச்சினையை இங்கே கிளப்பி வெளிநடப்பு செய்து இருக்கிறார்கள். அப்படி அவர்கள் வெளிநடப்பு செய்த பிறகு, அந்தப் பிரச்சினை குறித்து மீண்டும் அவையில் விவாதிப்பதற்கு விதிகளில் இடம் இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1983 ஏப்ரல் 8

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத்தலைவர் அவர்களே, நான் பேசும் போது இந்தச் சம்பவம் பற்றி தெரியாது. மாண்புமிகு அமைச்சர் சொன்ன மாதிரி நான் பேசவில்லை. பொது வாகத்தான் பேசினேன். ஆனால், நான் அப்படி பேசிய பிறகும் இந்தச் சம்பவம் நடந்து இருக்கிறது. மறியல் செய்வதற்கான உரிமை பறிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவேதான் இது சம்பந்த மாக நாங்கள் தீர்மானம் கொடுத்து இருக்கிறோம். நான் உங்க ளிடத்தில் கேட்டுக் கொள்வது எல்லாம், இன்றைக்கு எடுத்துக் கொள்ளாவிட்டாலும், நாளைக்காவது இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அதைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே' இன்றைக்கு காவல் துறை மானியத்தின் மீது விவாதிக்க இருக் கிறோம். அந்த மானியத்தின் மீதான விவாதத்திலேயே அந்த விவகாரத்தைப் பற்றி எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் பேச வாய்ப்பு இருக்கிறது. அதோடு, அந்தப் பிரச்சினையைப் பற்றி இங்கே பேசிவிட்டு, வெளிநடப்பு செய்து விட்ட பிறகு, ஒரு முறை நடைபெற்று விட்ட பிரச்சினையை மறு முறை எழுப்பக் கூடாது என்று நம்முடைய விதிகளில் தெளிவாக இருக்கிறது என்பதால் அதை மறுபடியும் எழுப்புவதற்கு எப்படி பொருத்த மாக இருக்கும்.

**டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின் மீது பொதுவான பல பிரச்சினை களைப் பற்றி பேசும் போது, அவைகளிலே ஒன்றாகத்தான் இது ஆகிவிடும். ஆகவேதான் மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியது போல், நேற்றைய தினம் நடை பெற்ற சம்பவம் குறித்து குறிப்பாக விவாதிக்க வேண்டும் என்ற காரணத்தால், அதை இன்றைக்கு எடுத்துக்கொண்டு விவா திப்பது நலமாக இருக்கும்.

**திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, நீங்கள் இதிலே ஜாஸ்தியாக எதுவும் யோசிக்க வேண்டாம். இன்றைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தச் சம்பவத்தின் அடிப்படையில் ஒரு கட்சி வெளி நடப்பு செய்து இருக்கிறது. ஒரு கட்சி வெளிநடப்பு செய்து விட்ட பிறகு, இன்றைக்கு அதை





எடுத்துக் கொள்வது என்பது சரியாக இருக்காது. வேண்டு மானால், இன்னொரு நாளைக்கு அதை எடுத்துக் கொள்வது பற்றி யோசிக்கலாம். இன்றைக்கு காவல் துறை மானியத்தின் மீதும் நிறைய பேர் பேச இருப்பதால், அதிலே அவர்கள் இந்தத் தத்துவங்களை எல்லாம் சொல்ல வாய்ப்பு இருக்கிறது.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 1[illegible] ஆண்டுகளுக்கு முன்னாலே எண்ணூர் கத்திவாக்கம் பகுதியில் ஒரு சுடுகாட்டுப் பிரச்சினையில் சவ அடக்கம் செய்ய முடியாத நிலை இருந்து, அந்தப் பகுதி மக்கள் உண்ணாவிரதம் இருந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட நேரில் அங்கே வந்து பார்வையிட்டு, அதற்கு ஒரு ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அந்தப் பிரச்சினை இன்றும் முடியாத காரணத்தால், அந்தப் பகுதி யில் இருக்கும் 18 கிராமத்தில் உள்ள பொது மக்களும் தலைவர் களும் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளனர். எனவே இந்தப் பிரச்சினையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதற் கான தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நேற்று நடந்த சம்பவம் குறித்து நானும் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். அதை எடுத்துக் கொண்டு விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று நான் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒவ்வொரு கட்சியும் இதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எனக்கு வேண்டுகோள் விட வேண்டிய அவசியம் இல்லை, முறைப்படி எடுத்துக்கொள்ளப் பெறும்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை மத்திய சிறையில் 16 ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து கொண்டு இருக்கிறார்கள். அதிலே ஒரு கைதி மிகவும் உடல் நலம் பாதிக்கப் பட்ட நிலையில் பாளையங்கோட்டை மருத்துவமனையில் சேர்க் கப்பட்டு இருப்பதாகத் தகவல் வந்து இருக்கிறது.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது போன்ற பிரச்சினைகளில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்கின்ற உணர்வுகளை நான் மதிக்கிறேன். ஆனால், அவைகளை முறையாகக் கொண்டு வர வேண்டும். ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற முறையிலோ, கவன ஈர்ப்புத் தீர்மானம் என்ற முறையிலோ அதைக் கொண்டு வரலாம். அப்போதுதான் அரசுத் தரப்பில் அதற்கு பதில் தர முடியும்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

### இராஜபாளையத்தில் நெசவாளர்கள் நடத்தும் போராட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் பி.ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், சோ.அழகர்சாமி தி.கா.நல்லப்பன், இரா. கருப்பையா, என். ஏ. பூங்காவனம் செ.சிவசாமி, மு. அப்பாதுரை, ரா. கிருஷ்ணன், கே. ஆர். சுந்தரம் ஆகியோர் ''இராஜபாளையம் தாலுக்கா சர்வ கட்சி சார்பில் நெசவாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி தாலூகா அலுவலகம் முன்பு 4–4–1983 முதல் தொடர் மறியல் நடைபெற்று வருவதால் மக்களிடையே எழுந்துள்ள நிலை குறித்து விவாதிக்க பேரவையில் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களை மிகச் சுருக்கமாகக் கூறும் படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். வரதராஜன் :** மான்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இராஜபாளையம் வட்டம், இராஜபாளையம், சக்கரப்பட்டி சேத்தூர், முகவூர் பகுதிகளில் இருக்கக்கூடியபல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் கடந்த 4–ந்தேதியிலிருந்து மறியல் போராட்ட கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த வட்டாரத்தில் 21 நெசவாளர் கூட்டுறவு அமைப்புகளும் 6 தொழிலியல் கூட்டுறவு அமைப்புகளும் செயல்பட்டு வருகின்றன. அவர்களுடைய முக்கியமான கோரிக்கைகளை அரசு மிகக் கவனமாகக் கவனிக்க வேண்டும். மக்கள் இயக்கம் எவ்வாறு வளர்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும்.

இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட கைத்தறித் துணிகள் அங்கே அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே தேங்கிக் கிடக்கின்றன. அவர்கள் ஏற்கனவே கோவாப்டெக்ஸுக்கு கொடுத்திருக்கக் கூடிய கைத்தறித் துணிக்கு இன்னும் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் பாக்கியிருக்கிறது ; நெசவாளர்களுக்கு அந்தப் பணம்



வர வேண்டியிருக்கிறது. ஆகவே அங்கே வேலை நடைபெறவில்லை என்ற நிலையிலே பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் கொடுத்த துணிகளுக்கு பணமும் வரவில்லை. உற்பத்தியான துணிகளும் விற்பனை இல்லாமல் ஸ்டாக் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையை தவிர்க்க பல அதிகாரிகளிடம் சொல்லியும் இன்றுவரையில் காரியங்கள் நடைபெறாததால் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அதற்கு மேலே ஒன்றை சொல்ல வேண்டுமென்றால் சக்கரப்பட்டியில் உள்ள நெசவாளர்கள், மருத்துவ மனைகளுக்கு முக்கியமாகத் தேவைப்படும் 'பேன்டேஜ்' துணியை உற்பத்தி செய்து வருகிறார்கள். அந்தத்துணியும் கொள்முதல் ஆகவில்லைஎன்பதால் அந்தத் தொழிலும் நடக்கவில்லை என்று சொல்லி உட்கார்ந்திருக்கிறார்கள்.

அதற்குமேலே அவர்களுக்குத் தேவையான நூல்விலையும். இன்றையதினம் உயர்ந்திருக்கிறது என்று வேதனைப் படுகிறார்கள். இதிலே இருக்கிற வேதனை என்னவென்றால் வெளிமார்க்கெட்டில் விற்கின்ற நூல்விலையை விட கோவாப்டெக்ஸ் நூலின்விலை அதிகமாக இருக்கிறது. பாலித்தின் நூல் விலையில் 50 ரூபாய் உயர்ந்து இருக்கிறது. 26 எஸ். ஒருகட்டுக்கு 10 ரூபாய் உயர்ந்திருக்கிறது. அதனாலும் கட்டுபடி ஆகவில்லை என்று சொல்கிறார்கள்.

இப்படி பல்வேறு காரணங்களுக்காக அவர்கள் 16 அம்ஸ கோரிக்கையை வைத்துப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த 16 அம்ஸ கோரிக்கையில் முக்கியமானது, நாங்கள் இன்றைய தினம் வேலை யில்லாமல் இருக்கக்கூடிய இந்த நிலையில் பட்டினி கிடக்கிறோம் ; இந்த நேரத்தில் மத்திய அரசோ அல்லது மாநில அரசோ பட்டினியால் வாடும் குடும்பம் ஒவ்வோன்றுக்கும் உடனடியாக 500 ரூபாய் இனாமாகக் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். அதைப் போன்று, இன்ஷூரன்ஸ்லிருந்து கொடுக்கப்படும் பணம் 3,000 ரூபாயை 10,000 ரூபாயாக உயர்த்தவேண்டுமென்று. ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

அதைப் போன்றுதான் ஆபரணப்பட்டு பாக்கியலட்சுமி கூட்டுறவுச் சங்கம் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னால் தீ விபத்திற்கு இலக்காகி சுமார் 50,000 ரூபாய்க்கும் மேல் நஷ்டம் ஏற்பட்டு, 200 தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கும் நிவாரணம் வேண்டுமென்று கேட்கிறார்கள்.

அதற்குமேலே கடந்த ஒருமாதத்திற்கு முன்னால் சுப்ரீம் கோர்ட்
பேன்டேஜ் துணியை விசைத்தறிகள் உற்பத்தி செய்யக்கூடாது
என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஆனால் அதை மீறி விசைத்
தறிகள் பேன்டேஜ் துணியை உற்பத்தி செய்து வருகின்றன.
அதனால் சக்கரப்பட்டியில் இருக்கக்கூடிய 1,500 பேன்டேஜ்
துணி உற்பத்தியாளர்கள் வேலையில்லாமல் பட்டினி கிடக்கிறார்
கள். இத்தகைய பல பிரச்சனைகள் இருக்கின்றன. அவைகளுக்கு
உடனடியாக தீர்வு காண வேண்டும்; அவர்களுக்கு நிவா
ரணம் அளிக்க வேண்டும். அவர்கள் எழுப்பி இருக்கக்கூடிய
16 அம்சக் கோரிக்கையை பரிசீலித்து நிவாரணம் அளிப்பதோடு
கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்து சமரசத்தை
ஏற்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட பிரச்சனைகளில் மாநில
அரசு உடனடியாக கவனம் செலுத்த வேண்டியிருப்பதால்
இன்னும் பல பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்க வேண்டியிருப்
பதால், அவையில் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இதை
எடுத்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலுள்ள ஏறக்குறைய
30 இலட்சம் மக்களில் 10ல் ஒரு பங்கு மக்கள் கைநெசவுத்
தொழிலை நம்பி வாழக்கூடிய மக்கள். அவர்கள் இன்றைக்கு
மிகப் பெரிய நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறார்கள். ராஜபாளை
யம் வட்டத்தில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியை போக்குவ
தற்கு வேண்டி அவர்கள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். அவர்
களுடைய கோரிக்கை மொத்தமாக நூல் விலையை கட்டுப்படுத்த
வேண்டும். தேக்கமாக இருக்கிற துணிகளை உடனடியாக மாநில
சங்கம் கொள்முதல் செய்ய வேண்டும். இதற்கு முன்னால்
கொள்முதல் செய்யப்பட்ட ஜவுளி துணிகளுக்கு உண்டான
பணத்தை உடனடியாக கொடுக்க வேண்டும், என்ற கோரிக்கை
யை முன் வைத்து, அத்தோடு நியாய விலையிலே இன்றைக்கு
குடும்ப கார்டுகளுக்கு அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள்கள்
வினியோகிக்கப்பட வேண்டும் என்று கேட்டு அவர்கள் கிளர்கூதி
செய்து வருகிறார்கள்.

இன்றைக்கு அவர்கள் கிளர்ச்சியிலே ஈடுபடக்கூடிய இந்த
நேரத்திலே ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த
மாதிரி கடந்த ஆண்டு அவர்கள் மிகப் பெரிய போராட்டத்தை
நடத்திய போது பல்லாயிரக்கணக்கான நெசவாளத் தொழிலா
ளர்கள் கைது செய்யப்பட்டு கொடுமைக்குள்ளானார்கள். அப்
போதும் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு இனிமேல் இதிலே
தேக்கம் இல்லாமல் அந்த நெசவாளர்களுக்கு எப்போதும் வேலை





கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்வதாகச் சொல்லியும் கூட, இன்றைய தினம் அவர்கள் மிகப் பெரிய நெருக்கடிக்கு ஆளாகி யிருக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய கூலியும் மிக மிக குறைவான கூலி, இன்றைக்கு இருக்கிற விலைவாசி உயரத் தில் அன்றாடம் அவர்கள் வேலை செய்தால்தான், அவர்கள் தங்கள் குடும்பத்தை பட்டினியில்லாமல் பாதுகாக்கமுடியும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதை அனைவரும் ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். குறைந்த வருவாய் உள்ள அந்த வேலை கூட தினமும் அவர்கள் செய்வதற்கு, நூல் வாங்க முடியாமலும், கையில் இருக்கிற தொழிலை பார்க்க முடி யாமலும், விற்ற துணிகளுக்கு காலாகாலத்தில் பணத்தை மாநில சங்கம் கொடுக்காமல் இருப்பதன் காரணமாகவும், மிகப் பெரிய கஷ்டத்திற்கு மட்டுமல்ல, பட்டினிக்கும் அவர்கள் ஆளாகக்கூடிய ஒரு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. ஆகவே உடனடியாக அவர் களுடைய கஷ்டத்தைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக தொடர்ந்து அவர்கள் கூட்டம் போட்டார்கள். தீர்மானம் நிறைவேற்றினார்கள்,. நேராகவும் வந்தார்கள். நானே அவர்களை நேரில் அழைத்துச் சென்று மாநில சங்கத்திற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் பேசினேன். உடனடியாக அவர்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டேன்.

அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகச் சொன் னார்கள். அப்படிச் சொல்லியும்கூட, இதுவரையில் அவர்கள் நெய்த ஜவுளிகளுக்கு தரவேண்டிய பணம் போய் சேராததன் காரணமாக, அவர்கள் மேலும் நூல் வாங்க முடியவில்லை. வேலை செய்யவும் முடியவில்லை. வேலை செய்யாமல் வருமானம் இல்லை. இது சம்பந்தமாக இப்போது அந்த வட்டாரத்தில் மட்டும் கிளர்ச்சியை ஆரம்பித்தி ருந்தாலும், மற்ற இடங்களிலும் இப்படிப்பட்ட பிரச்சனைகள் எழுந்து வருகின்றன, ஆகவே, இது சம்பந்தமாக அந்த கைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை போக்குவதற்காக உடனடியாக அரசாங்கம் என்னென்ன செய்யவேண்டும், அந்த மக்களை பட்டினியிலிருந்து பாதுகாக்க நிரந்தரமான பணிகளை என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும்.

அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. நூலின் விலையைக் குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். குறைந்த விலையில் தாராளமாக அவர்களுக்கு நூல் சப்ளை செய்யப்பட வேண்டும். தேங்கிக் கிடக்கும் ஜவுளிகளின் முடக்கம் நீக்கப்பெற வேண்டும். மாநில சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஜவுளிகளுக்கு தரவேண்டிய பணம் வந்து சேர வேண்டும் என்று இப்படிப்பட்ட கோரிக்கைகளைதான் அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆகவே

(டாக்டர். எச். வி. ஹண்டே)



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) மன்னார்குடி உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தை பட்டுக்கோட்டைக்கு மாற்றுதல்.—

**திரு. மு. அம்பிகாபதி** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம் மன்னார்குடியிலுள்ள சப்-டிவிஷனல் நீதிமன்றத்தைப் பட்டுக்கோட்டைக்கு மாற்றம் செய்வது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை**

தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடியில் உட்கோட்ட
நீதித் துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் ஒன்று செயல்பட்டு வரு
கின்றது. அந்நீதிமன்றம், பட்டுக்கோட்டையில், வாரத்தில்
மூன்று நாட்கள் 'தங்கல் நீதிமன்றம்' ( Camp Court)
நடத்தி வருகிறது. நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்த
குழுவிடம் மன்னார்குடியில் உள்ள உட்கோட்ட நீதித்துறை
மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தை, பட்டுக்கோட்டைக்கு மாற்ற
வேண்டும் என்னும் ஒரு கருத்து எடுத்து சொல்லப்பட்டது.
அக்குழு மேற்சொன்ன கருத்தையும், மன்னார்குடி வழக்
கறிஞர்கள் சங்கம் மற்றும் பட்டுக்கோட்டை வழக்கறிஞர்கள்
சங்கத்திடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளையும் ஆராய்ந்து,
மேற்படி நீதிமன்றத்தை மன்னார்குடியிலிருந்து பட்டுக்கோட்
டைக்கு மாற்ற பரிந்துரைத்தது. அரசு, அக்குழுவின் பரிந்
துரையை, உயர்நீதிமன்றம், காவல் துறைத் தலைமை அதிகாரி
மற்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளர் ஆகியவர்களுடன்





-லந்தாலோசித்து ஏற்றுக் கொண்டது. அதற்கிணங்க அந்த நீதிமன்றத்தை மன்னார்குடியிலிருந்து பட்டுக்கோட்டைக்கு மாற்ற, 27—6—1978 நாளிட்ட உள்துறை அரசு ஆணை (நிலை) எண். 1472—ல் அரசாணையும் பிறப்பித்தது.

2. 1978—ம் வருடம் மன்னார்குடியைச் சார்ந்த பொது மக்கள், வழக்கறிஞர்கள் சங்கம், வழக்கறிஞர்கள் குமாஸ்தாக்கள் சங்கம் ஆகியவை மன்னார்குடியிலேயே உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தை நீடிக்க வேண்டும் என்று கொடுத்த வேண்டுகோள்களை அரசு மீண்டும் ஆராய்ந்தது. முன்பு முடிவெடுத்தவாறு பட்டுக்கோட்டைக்கே மாற்றலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அம் முடிவிற்கேற்ப, மன்னார்குடியில் உள்ள உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தை பட்டுக்கோட்டையில் மாற்றி அமைப்பதற்கு தேவையான அறிக்கை ஒன்றும் 2—11—1979 நாளிட்ட அரசு உள்துறை ஆணை (நிலை) எண். 2743—ல் வெளியிடப்பட்டது.

3. பல்வேறு மக்கள், வழக்கறிஞர்கள் இந்த மாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், பட்டுக்கோட்டைக்கோ அல்லது மன்னார்குடிக்கோ கூடுதல் உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதி மன்றத்தை அமைக்க வாய்ப்புண்டா என்பதை பற்றி அரசு மீண்டும் உயர்நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்தது. மன்னார்குடியில் இயங்கிவரும் உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தினை பட்டுக்கோட்டைக்கு மாற்றம் செய்வது குறித்த உயர்நீதி மன்றத்தின் முடிவினை மீண்டும் மாற்றுவதில் எந்தவித நியாயமும் இருப்பதாக தெரியவில்லை; மேற்படி நீதிமன்றம் பட்டுக்கோட்டைக்கு மாற்றியபின், மன்னார்குடியில் எழும் வழக்குகளை விசாரிக்க, அங்கு வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒரு 'தங்கல் நீதி மன்றம்' (Camp Court) முன்பு பட்டுக்கோட்டையில் இருந்தது போல், நடைபெறலாம் என்றும், தற்பொழுது மன்னார்குடியில் உள்ள நீதிமன்றத்தை, பட்டுக்கோட்டைக்கு மாற்றிய பின்னர், அரசு விரும்பினால், வேறொரு உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தினை, மன்னார்குடியில் அமைக்கலாம், எனவும் சென்னை உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

4. எனவே, ஏற்கனவே எடுத்த முடிவின்படி, மன்னார்குடியில் இயங்கி வரும் உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தினை உடனடியாக பட்டுக்கோட்டைக்கு மாற்றலாம்; மன்னார்குடியில் எழும் வழக்குகளை விசாரிப்பதற்காக, அங்கு வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு தங்கல் நீதிமன்றத்தினை (Camp Court) அமைக்கலாம் எனவும், அரசு முடிவு செய்தது. மேற்படி நீதிமன்றத்தை மன்னார்குடியிலிருந்து பட்டுக்கோட்டைக்கு உடனடியாக மாற்று

[திரு. சோ. அழகர்சாமி] [1983 ஏப்ரல் 8

இந்த நெருக்கடியைப் போக்குவதற்கு என்ன செய்ய வேண்டும்
என்பது பற்றி விவாதிக்க இதர அலுவல்களை ஒத்தி வைக்க
வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்
தைப் பொறுத்த வரையில், இங்கே மாண்புமிகு கல்வி அமைச்ச
ரின் சார்பாக நான் இந்த அறிக்கையை இந்த அவையிலே விளக்கத்
திற்காக தர கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலிலே மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள்
பேண்டேஜ் துணிகளை எல்லாம் வாங்குவது இல்லை என்று
சொன்னார்கள். இப்போது நாம் அரசாங்கத்திலே பரிசீலனை
செய்ததிலே, பேண்டேஜ் துணிகளை கைத்தறி நெசவாளர்
களிடமிருந்து வாங்குவதற்காக இந்த ஆண்டு ஏற்பாடு செய்
திருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன்.

அதேமாதிரியாக ராஜபாளையம் தொகுதியைச் சேர்ந்த
கைத்தறி நெசவாளர்கள் போராட்டக் குழு ஒன்று அமைத்து
16 அம்சங்களைக் கொண்ட .கோரிக்கைகளை முன் வைத்து
4–4–83 முதல் ராஜபாளையம் தாலுக்கா ஆபீஸ் முன்பாக
தர்ணா நடத்தி வருகிறார்கள். இந்த 16 அம்சக் கோரிக்கை
களில் ராஜபாளையம் பகுதியிலுள்ள சுமார் 40 கைத்தறி நெச
வாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலேயிருந்து கொள்முதல் செய்து
கைத்தறி துணிகளுக்கு கோவாப்டெக்ஸ் உடனடியாக பணம்
பட்டுவாடா செய்ய வேண்டும் என்பதும், அப்பகுதியிலுள்ள
கைத்தறி நெசவாளர்களிடம் தேங்கிக் கிடக்கும் கைத்தறித்
துணிகளை உடனடியாக கோவாப்டெக்ஸ் கொள்முதல் செய்ய
வேண்டும் என்பதும் அவர்களுடைய முக்கியமான கோரிக்கைகள்
ஆகும்.

கோவாப்டெக்ஸ், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்
களிடமிருந்து கொள்முதல் செய்யும், கைத்தறி துணிகளுக்கு
அதன் நிதிநிலைமையைப் பொறுத்து, அவ்வப்போது பணம்
பட்டுவாடா செய்து வருகிறது. பொதுவாக தீபாவளி மற்றும்
பொங்கல் விழாக்களுக்கு பின்பு உள்ள காலம் கைத்தறி துணி
களின் விற்பனையில் ஒரு மந்த காலமாக மாறும் என்பதால்
கைத்தறி துணிகள் கோவாப்டெக்ஸ் நிறுவனங்களிலேயும்,
பிரதம நெசவாளக் கூட்டுறவுச் சங்கங்களிலேயும் பொதுவாக
பொங்கலுக்குப் பின்பு தேங்கிக் கிடக்கவேண்டிய நிலை உள்ளது.
கோவாப்டெக்ஸீக்கு அரசிடமிருந்து வரவேண்டிய ஜனதா
மானியம், தள்ளுபடி மானியம் மற்றும் இதர தொகைகள்



1983 ஏப்ரல் 8] (டாக்டர் எச். வி. ஹண்டே)

நிலுவையில் இருந்ததால், கோவாப்டெக்ஸ் பிரதம நெசவாளர்
கூட்டுறவுச் சங்கங்களுக்கு பணம் பட்டுவாடா செய்வதில் தாமதம்
ஏற்பட்டிருந்தது.

மேற் கூறிய காரணங்கள் இருந்தும், அரசிடமிருந்து
31–3–1983 அன்று ஆணை பெற்று, ராஜபாளையம்
பகுதியிலே உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு,
கோவாப்டெக்ஸ் கடந்த 6–4–83ஆம் தேதியில் 1 கோடியே
30 இலட்சம் ரூபாய் அளவுக்கு பணம் பட்டுவாடா செய்து
உள்ளது. மேலும் 7–4–1983 அன்று அந்தப் பகுதியிலே உள்ள
சங்கங்களுக்காக மேலும் 50 இலட்சம் ரூபாயை பணம் பட்டுவாடா
செய்ய ஏற்பாட்டை செய்துள்ளது.

(முற்பகல் 10–30)

மேற்கூறிய பட்டுவாடா செய்த வகையில் ராஜபாளையம்
பகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்கப்
பட வேண்டிய நிலுவைத் தொகையிலே ஏறக்குறைய 80 சத
வீதத்திற்கு மேல் கோ-ஆப்டெக்ஸ் பட்டுவாடா செய்துள்ளது.
அதாவது மோர் தேன் 80 பெர்சன்ட் பட்டுவாடா செய்துள்ளது.
தவிர கோ ஆப்டெக்ஸ் ராஜபாளையம் பகுதியிலுள்ள
நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கிக் கிடக்கும் கைத்தறித்
துணிகளைக் கொள்முதல் செய்வதற்கு தேவையான உடனடியான
ஏற்பாடுகள் நடப்பு மாதத்தில் இருந்து மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக சட்டமன்றப்
பேரவையில் வறட்சிப் பகுதியிலுள்ள விவசாயத் தொழிலாளர்
களுக்கு அவர்கள் பெறும் ஊதியத்துடன் ஜனதா சேலைகள்,
வேஷ்டிகள் வழங்கப்படும் என்று அறிவித்ததற்கிணங்க, தமிழகத்
திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கி
கிடக்கும் ஜனதா ரகத் துணிகள் முழுமையும் கொள்முதல் செய்ய
கோ-ஆப்டெக்ஸ் உடனடி. நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.
மற்றும் அகில இந்தியக் கைத்தறி வார விழாவின்போது—அது
9-ஆம் தேதி ஆரம்பிக்கப்பட இருக்கின்றது—தள்ளுபடி மானியம்
வழங்கும்போது சங்கங்களில் இருக்கும் சரக்குகளை எல்லாம்
விற்க ஏதுவாக இருக்கும். அதன்மூலம் ராஜபாளையம் பகுதியில்
உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கிக் கிடக்கும்
இதர ரகத் துணிகளுடன் ஜனதா ரகத் துணிகளையும் உடனடி
யாக கொள்முதல் செய்ய வாய்ப்பு இருக்கின்றது என்பது தெளி
வாகும். மேலே விவரிக்கப்பட்ட நடவடிக்கையிலிருந்து ராஜ
பாளையம் பகுதியில் சர்வ கட்சிப் போராட்டக் குழுவின் முக்கிய
கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுவிட்டன ; நெசவாளர்
கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள அங்கத்தினர்களுக்கும் தடங்க
லின்றித் தொடர்ந்து வேலை கொடுக்க வாய்ப்புள்ளது. ஆகவே

வதற்கு அவசியமான ஏற்பாடுகளை செய்யுமாறு சென்னை
உயர்நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும் இது
தொடர்பாக, மன்னார்குடியிலிருந்து பட்டுக்கோட்டைக்கு
உட்கோட்ட நீதி துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் மாற்றப்படு
வதன்பேரில், அந்நீதிமன்றம் அங்கு செயல்படுவதற்கு அறிக்கை
(Notification) ஒன்று வெளியிட வேண்டியுள்ளதால் நீதிமன்றம்
துவக்கப்பட வேண்டிய நாளினைத் தெரிவிக்குமாறு சென்னை
உயர் நீதிமன்றம் கோரப்பட்டது.

5. பட்டுக்கோட்டையில், உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்
டிரேட் நீதிமன்றம் அமைக்க தேவையான கட்டிடம் ஒன்று அரசின்
செலவில் கட்டி முடித்த பின்னர் அல்லது தனியார் கட்டிடம்
ஒன்று நீதித்துறைக்கு கிடைத்தபிறகு, மன்னார்குடியிலிருந்து
பட்டுக்கோட்டைக்கு மாற்றும் திட்டத்தினை எடுத்துக்
கொள்ளலாம் என்றும், அது வரையில் மேற்படி நீதிமன்றத்தை
மன்னார்குடியிலேயே இயங்கிவரும்படிச் செய்யலாம் என்றும்,
சென்னை உயர் நீதிமன்றம் சென்ற ஆண்டு ஆகஸ்டு திங்களில்
கருத்து தெரிவித்தது. தற்காலிகமாக இடம் கிடைக்கவில்லை
என்பதற்காக அரசு ஏற்கெனவே எடுத்த முடிவை மாற்ற
வேண்டியதில்லை; உயர்நீதிமன்றம், வாடகைக்காக ஒரு இடத்தை
எடுப்பதில் தீவிர அக்கறை காட்டி இரண்டு மாதங்களுக்குள்,
உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தை பட்டுக்
கோட்டையில் துவக்க ஏற்பாடுகளை செய்யுமாறு, 1-2-1983
அன்று உயர் நீதிமன்றம், கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்பேரில்,
சென்னை உயர் நீதிமன்றம் மேற்படி நீதிமன்றத்தை பட்டு
கோட்டைக்கு மாற்ற, தேவையான கட்டிடத்தை விரைவில்
தேர்ந்துஎடுத்துத்தருமாறு, தலைமை பொறியாளர் (கட்டிடங்கள்)
பொதுப்பணித்துறை, மாவட்ட ஆட்சியாளர், தஞ்சாவூர்
ஆகிய இருவரையும் கேட்டுக் கொள்ளுமாறு கருத்து தெரிவித்தது.
அதற்கிணங்க மேற்கூறிய நீதிமன்றத்தை பட்டுக்கோட்டைக்கு
மாற்றி செயல்படுத்த தேவையான கட்டிடம் ஒன்றை உடனடி
யாக ஏற்பாடு செய்து தருமாறு, மாவட்ட ஆட்சி தலைவரும்
மற்றும் தலைமைப் பொறியாளரும் கேட்டுக் கொள்ளப்
பட்டுள்ளனர். அவ்வாறு மாற்றிய பின்னர், மன்னார்குடியில்
எழும் வழக்குகளை விசாரிப்பதற்காக அங்கு வாரத்திற்கு
இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு "கேம்ப் கோர்ட்டை"
அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற விவர
அறிக்கையின்படி அந்த நீதிமன்றத்தை பட்டுக்கோட்டைக்கு
மாற்றம் செய்யக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் அளிக்க
வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களின் அதிகார
வரம்பு குறித்து அமைக்கப்பட்ட குழு செய்த பரிந்துரையின்
அடிப்படையில் மன்னார்குடியில் இருந்த அந்த சப்-டிவிஷனல்
கோர்ட்டைப் பொறுத்தவரையில் பட்டுக்கோட்டைக்கு மாற்ற
வேண்டும் என்று அரசு ஆணையிட்டது. ஆனால் அதற்குப்
பிறகு மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்களும்,
மரியாதைக்குரிய திரு. அழகு திருநாவுக்கரசு அவர்களும் அர
சுக்குக் கோரிக்கை தந்து அவ்வாறு மாற்றக்கூடாது என பலமுறை
சொன்னதற்குப் பிறகு அது குறித்து மீண்டும் ஆய்வு செய்ய
வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தினுடைய ஆலோசனையைக்
கேட்டது. உயர்நீதிமன்றம் இரண்டாவது முறையாக ஆய்ந்தும்
கூட பட்டுக்கோட்டைக்குத்தான் அதை மாற்றவேண்டும்
என்று அரசுக்குச் சொன்னது. அதற்குப் பிறகும் மாண்புமிகு
உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் கோரிக்கை வைத்ததன் கார
ணத்தால் அது மீண்டும் உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு,
அதுகாறும் உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையினை நடைமுறை
படுத்தாமல் நிறுத்தி வைக்கப்பட்டு அதன்மீது ஆய்வு செய்யுமாறு
உயர்நீதிமன்றம் கோரப்பட்டது. ஆனால் உயர்நீதிமன்றம் இறுதி
யாக மாற்றவேண்டும் என்றுதான் சொல்லி இருக்கின்றது. இது
வரையில் பட்டுக்கோட்டையில் எப்படி கேம்ப் கோர்ட்
இயங்கியதோ அப்படி மன்னார்குடியில் கேம்ப் கோர்ட் இயங்கும்
என்றும் மன்னார்குடியிலிருந்து சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்
கோர்ட் பட்டுக்கோட்டைக்கு மாற்றப்பட்டு அங்கே
இருக்கலாம் என்றும் சொல்லி இருக்கிறார்கள்.
ஆனாலும் கூட, அரசு இதை தனிப்பட்ட முறையில் ஆய்வு
செய்து மன்னார்குடியில் ஒரு உட்கோட்ட நீதிமன்றத்தை அமைக்
கலாம் என்றும் இந்த பிரச்சனையில் ஒரு சுமுகமான முறையில்
தீர்க்கப்படவேண்டும் என்பதற்காக அரசு தற்போது பரிசீலித்து
வருகிறது.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அறந்தாங்கி
தாலுக்கா சேர்ந்து இருந்த காலத்தில் இந்த நீதிபதியினுடைய
தீர்ப்பின் அடிப்படையில் இந்த நீதிமன்றம் பட்டுக்கோட்டைக்கு
மாற்றுவதாக இருந்தது. ஆனால் அறந்தாங்கி தாலுக்கா தஞ்சை
மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு தற்சமயம் புதுக்கோட்டை
மாவட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது. அன்று பரிந்துரை
செய்த சூழ்நிலை வேறு, இன்றைக்கு இருக்கிற சூழ்நிலை வேறு,
எனவே மன்னார்குடியில் 5 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட
சொந்தக் கட்டிடங்கள் இருக்கிறது. பட்டுக்கோட்டையில்
வாடகை கட்டிடம் பார்ப்பதாக கேள்வி, பட்டுக்கோட்டையில்

வேறு நீதிமன்றம் இருக்கிறது. எனவே இதை மன்னார்குடியிலேயே இருப்பதற்கு அரசு தகுந்த மாற்றாமல் எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள நடவடிக்கை விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தினுடைய கருத்தை நான் ஏற்கனவே சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் அறந்தாங்கியை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மாற்றி விட்ட காரணத்தால்', "the reorganisation of the Jurisdiction has become inevitable, a fresh" என்ற முறையில் சொன்னார்கள். அதைகூட உயர்நீதிமன்றத் திற்கு நாங்கள் தெரிவித்தோம். அனுப்பிய பிறகும் கூட அதே பரிந்துரையைதான் அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அத னால்தான் நான் சொன்னேன் மன்னார்குடிக்கு தனிப்பட்ட முறையில் உட்கோட்ட மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தை நிறுவு வதற்கு அரசு பரிசீலித்து வருகிறது என்று சொன்னேன்.

## (ஆ) இராணிப்பேட்டை பி.எச்.இ.எல். தொழிற்சாலை

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, "இராணிப் பேட்டையில் அமைந்துள்ள 'பெல்' நிறுவனத்தில், அந்த நிறு வனம் நிறுவ நிலம் கொடுத்த உடைமையாளர்களுக்கு வேலை கொடுப்பதில் முன்னுரிமை தரவேண்டும் என்கிற நியதியைப் புறக்கணித்ததால், அப்பகுதி மக்களிடையே எழுந்துள்ள கவலை குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர் களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

அறிக்கை.

அரசு வட ஆற்காடு மாவட்டத்தில் 1,400 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தை 'பெல்' நிறுவனத்தின் கொதிகலன் துணைப் பாகங்கள் Boilor auxiliaries project of Bharat Heavy Electricals Ltd தொழிற்சாலையை இராணிப்பேட்டையில் நிறுவுவதற்காக ஆர்ஜிதம் செய்வதற்கு உத்தரவிட்டது. கீழே கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மாநில அரசால் வரை யறுக்கப்பட்டுள்ளது :—

(அ) மேற்படி தொழிற்சாலை அமைப்பதற்காக நன்செய் நிலத்தை கொடுத்துள்ள நிலச் சொந்தக்காரர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகையில் முன்னுரிமை தர வேண்டும் ;





(ஆ) தொழிற்சாலை நிறுவுவதற்காக மொத்த நிலைத்தையும் கொடுத்துள்ள நிலச் சொந்தக்காரர்களின் குடும்பங்களுக்கு குடும்பத்திற்கு ஒரு நபருக்காவது வேலை வாய்ப்பு தருவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

2. அந்நிறுவனத்தில் மொத்தம் 1,196 நபர்கள் தற்சமயம் வேலை செய்கிறார்கள். அந்த நிறுவனம் நிறுவ நிலம் கொடுத்த உடமையாளர்களில் 267 பேருக்கு அந்நிறுவனம் வேலை வாய்ப்பு அளித்துள்ளது. மேலும் 59 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்க உத்தரவு பிறப்பித்துக் கொண்டிருக்கிறது.

3. பெல் நிறுவனம் நிலம் இழந்தவர்களுக்கு உயர்ந்த பட்ச அளவுக்கு வேலை வாய்ப்பு அளிததிருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. அந்நிறுவனம் விரிவு செய்யப்பட்டால் மேலும் பலருக்கு வேலை கொடுக்க வாய்ப்பு இருக்கிறது.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலம் கொடுத்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவில்லை என்பது தான் என்னுடைய கவன ஈர்ப்பு தீர்மானம். இதை ஒரு விவர அறிக்கை என்று போட்டு இருக் கிறீர்கள். 20 வரி தான் இதில் இருக்கிறது. இது ஒரு விவர அறிக்கை. என்ன போட்டு இருக்கிறார்கள் என்றால் அந்த நிறுவனத்தில் 1,196 பேர்கள் வேலை செய்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நிலம் கொடுத்தவர்கள் எத்தனைப் பேர் என்ற விவரம் இல்லை. 1,400 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். 1,196 பேர்கள் வேலை செய்கிறார்கள். ஆனால் 1,400 ஏக்கர் நிலத்தை கொடுத்தவர்கள் எத்தனைப் பேர், அதனுடைய உரிமையாளர்கள் யார் என்ற விவரம் இதில் இல்லை. ஆனால் இதற்குபேர் விவர அறிக்கை. சரி அதை ஒத்துக்கொள்கிறேன். இத்தனை பேரிடத்திலிருந்து நிலம் எடுக்கப்பட்டது என்ற விவரம் இல்லாமல் அந்த உரிமையாளர்களில் 267 பேர்களுக்கு அந்த நிறுவனம் வேலை வாய்ப்பு அளித்துள்ளது என்று மட்டும் குறிப்பிட்டிருக் கிறார்கள். இதில் எப்படி நாங்கள் விளக்கத்தைப் பெற முடியும். மொத்த ஏக்கர் கொடுக்கப்பட்டது 1,400 ஏக்கர், அதில் 267 பேர்களுக்கு தான் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மீது இவ்வளவு பேர்களுக்கு வேலை தரவேண்டும் என்று அப்படி தானே விளக்க அறிக்கை இருக்க வேண்டும். ஆனால் ஒட்டுமொத்த மாக இப்படிபோட்டது சரியல்ல என்பதை நம்முடைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். 1,196 பேர்கள் வேலை செய்கிற நேரத்தில் அவர்களுடைய கணக்குப்படி 267 பேர்களுக்கு நிலம் கொடுத்தவர்களுக்கு வேலை கொடுக்கப்பட் டிருக்கிறது. மீதி இருப்பவர்களுக்கு எப்படி வேலை தரப்

(திரு. சீ. இராமச்சந்திரன்) [1983 ஏப்ரல் 8

மந்திரி வீட்டுப் பிள்ளை என்றால் எங்கேயும் வேலைக்கு சேரக் கூடாது என்று ஏதாவது சட்டம் போடவேண்டுமா ? அப்படி இருந்தாலும்கூட பொதுவாகச் சொல்கிறேன்., இன்னும் எங்கள் வீட்டுப் பிள்ளைகள் எல்லாம் படித்துக்கொண்டு இருக்கிறார் கள் வேலைக்குப் போகிற வயதாகவில்லை. ஆகவே அப்படிச் சொல்வது சரிதானா ?

திரு. துரைமுருகன் : மின்சாரத் துறை அமைச்சர் பெயரை நான் சொல்லவில்லையே.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இது வெற்று மிரட்டல் என்றே கருதுகிறேன் (குறுக்கீடு).

திரு. துரைமுருகன் : என்ன மிரட்டல் ? இராகவானந்தம் பிள்ளை வேலை செய்யவில்லையா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : உட்காருங்கள். மின்சாரத் துறை அமைச்சர் பிள்ளை பிளஸ் 2 படிக்கிறான், என் பிள்ளை எல்.கே.ஜி. படிக்கிறான். நான் அதிலே குறிப் பிட்டதைப்போல் 1,196 பேர்கள் எடுத்திருக்கிறார்கள், அவர் களிலே 267 பேர்கள் நிலம் கொடுத்திருக்கிற குடும்பத்திலிருக் கிறவர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள். ஆயிரம் பேர் களுக்கு தகுதி அடிப்படையிலே வேலை கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்த ஆயிரம் பேரிலே அமைச்சர் யாராவது ஒருவ ருடைய மகன் இருந்தால் அதில் தவறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாளையிலிருந்து இரண்டு கேள்விகளுக்கு அனுமதி கிடையாது. இன்றைக்கு மட்டும் தான் இரண்டு கேள்விகளுக்கு அனுமதி.

## 6. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) தனிக் குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவு 1981 கூட்டாய்வுக் குழு.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு தனிக்குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/1981) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிக் கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. கே. குப்புசாமி : துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.



1983 ஏப்ரல் 8] (திரு. கே. குப்புசாமி)

(1) 1972-73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையின் (சிவில்) மீது பொது நிறுவனங் கள் குழு (1977-78) அளித்த மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய குழுவின் இருப்பத்தைந்தாவது அறிக்கை ;

(2) தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் 1966-67, 1967-68 மற்றும் 1968-69 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகளின் மீதான குழுவின் இருபத்தாறாவது அறிக்கை.

## 7. வரவு செலவுத் திட்டம் 1983-84 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

### (அ) கோரிக்கை எண். 15—காவல் துறை.—(தொடர்ச்சி).

### (ஆ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப்பணிகள்-தொடர்ச்சி.

டாக்டர் கே. சமரசம் : துணைத் தலைவர் அவர்களே, வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய கோரிக்கை எண். 15 காவல் துறை மற்றும் கோரிக்கை எண். 16 தீயணைப்புப் பணிகள் குறித்து இந்த நாட்டு மக்களின் குரலை இந்த மன்றத் திலே வைக்க அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் முன் வருகிறேன். இந்தியத் துணைக்கண்டத் திலே தமிழ் நாடு தான் காவல்துறையில் மிக சீரும், சிறப்புமாக இருக்கிறது என்று பாராட்டத்தக்க வகையில பல்வேறு பரிசுகளை பெற்றிருக்கிறது ; பெருமையினை பெற்றிருக்கிறது என்று துணிந்து சொல்வேன். மதுரையில் ஒரு ஜவுளிக் கடையிலே கொள்ளை நடந்தது. துப்புத் துலக்கிப் பார்த்தார்கள். எந்த ஆதாரமும் சிக்கவில்லை. கடைசியாக கிடைத்தது ஒரு பீடித் துண்டு. அந்த பீடித் துண்டை பார்த்தபோது அது தமிழ் நாட்டிலே தயாரானதாக தெரியவில்லை. அது வடநாட்டிலே தயாரிக்கப்பட்டதாகத் தெரிந்தது. உடனே அந்தக் கொள்ளைக் கும்பல் வடநாட்டுக் கும்பலாக இருக்குமென்று மோப்பம் பிடித்து அங்கே சென்று குற்றவாளிகளைப் பிடித்து கூண்டிலே ஏற்றிய பெருமை தமிழ் நாட்டுப் போலீசுக்கு உண்டு.

அதுமட்டுமல்ல. கடந்த ஆண்டு நவம்பர் மாதத்திலே காட் பாடிக்கு அருகில் பஸ்ஸை வழிமறித்து கொள்ளையடித்தார்கள். அவர்கள் அங்கே எந்த விதமான தடயத்தையும் விட்டுச் செல்ல வில்லை. கடைசியாக பார்த்தபோது ஒரு திரிசூலம் அங்கே கிடந்தது. அந்த திரிசூலம் எங்கே தயாரானது என்று பார்த்த போது அது வடநாட்டு நிறுவனத்திலே தயாரானது என்று

(திரு. துரைமுருகன்) [1983 ஏப்ரல் 8

பட்டது. அவர்களுக்கு எப்படி வேலை தரப்பட்டது என்று
சொன்னால் திருச்சியிலிருந்து அங்கே வேலை செய்கிற கம்பெனி
தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் , அரசியல் பெரிய
விற்பனர்கள் இவர்கள் வீட்டு பிள்ளைகளுக்கும், மந்திரிமார்கள்
வீட்டு பிள்ளைகளுக்கும் வேலை கொடுத்து இருக்கிறார்களே
தவிர நிலம் கொடுத்து, ஆண்டியாய், ஓட்டாண்டியாய் நிலமும்
போய், வீடும் போய், கிணறும் போய், பம்புசெட்டும் போய்,
நடுத்தெருவில் இலங்கை அகதிகள் போல் உட்கார்ந்து இருக்கிறார்
கள்......(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது கவன
ஈர்ப்பு. மானியம் இல்லை.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராணிப்பேட்டை
யில் அமைத்து இருக்கிற 'பெல்' நிறுவனம் மைய அரசினுடைய
நிறுவனம் ஆகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன்
அவர்கள் வேகமாக குற்றச்சாட்டுக்கள் சொல்வதிலிருந்து அந்த
நிறுவனம் பெரிய தவறுகளை செய்து இருக்கிறார்கள் என்று
இங்கே சுட்டிக்காட்டினார்கள்.

(முற்பகல் 10-40).

அந்த மைய அரசினுடைய அமைச்சர்களுடைய யாருடைய
குழந்தைகளுக்காவது முறையில்லாமல் அங்கே வேலை கொடுக்கப்
பட்டிருக்குமானால் அதைப்பற்றி விசாரித்து பின்னாலே அவர்
விரும்புவதைப்போல் 20 பக்கத்திலே அல்ல ஒரு 200 பக்கத்திலே
ஒருவிவர அறிகை அவருக்குக் கொடுக்க அரசு தயாராக இருக்
கிறது. இங்கே ஏற்கெனவே அறிக்கையில் சொல்லப்பட்டு
இருப்பதைப்போல் 1,196 பேர்கள் இதுவரைக்கும் வேலைக்கு
அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதிலே சுமார் 267 பேர்கள் நிலம்
கொடுத்தவர்கள் குடும்பங்களிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறார்
கள். இதைத்தவிர 59 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்
காக பரிசீலித்துக்கொண்டு இருப்பதாகவும் நமக்கு தெரிவித்திருக்
கிறார்கள். அந்த நிறுவனத்திடமிருந்து விவரம் பெற்று தருகி
கிறோம். நம் அரசு அதிகாரியும் அங்கே இல்லை, வேலைவாய்ப்
பிலே நாம் தலையிடுவதும் இல்லை. அவர்கள் அறிக்கையி
லிருந்து நிலம் கொடுத்த குடும்பங்களிலிருந்து தகுதியானவர்கள்
அனைவரையும் நாங்கள் எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.
பெரும்பான்மையானவர்களை எடுத்துவிட்டோம் என்ற
விவரத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது எடுக்கிற
போது எந்தெந்த பிரிவுக்குத் தேவை இருக்கிறதோ
அதற்குத் தகுந்தமாதிரி எடுக்கப்படுகிறது. ஒரு குடும்பத்திலே



1983 ஏப்ரல் 8] (திரு. எஸ் திருநாவுக்கரசு)

நிலம் கொடுத்திருக்கலாம். நிலம் கொடுக்கிறபோது காம்பன்
சேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசினுடைய உத்திரவு
நிலம் கொடுத்தவர்களுடைய குடும்பத்திற்கு வேலைவாய்ப்புக்
கொடுப்பதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று அரசு
ஸ்பெஸிபிக்காக உத்தரவிட்டிருக்கிறது. அந்த வேலைக்கு எடுக்கிற
போது தகுதிக்கேற்றபடி கேஷுவல் லேபர் என்றால் அல்லது
உடல் உழைப்பைத் தருகின்ற உழைப்பாளர்கள் என்றால் அது
போல் ஐ.டி.ஐ., பி.இ., போன்ற டெக்னிக்கல் சம்பந்தப்பட்ட
டெக்னோகிராட்ஸாக இருந்தால் எந்த எந்த கேட்டகிரிக்கு யார்
யார் தேவையோ அந்த கேட்டகிரிக்கு உட்பட்டவர்கள் நிலம்
கொடுத்த குடும்பத்திலே இருந்தால் பிரையாரிடி கொடுத்து அவர்
களை எடுத்துக் கொள்கிறார்கள். பி.இ. தேவைப்படுகிற ஒரு
வேலையிலே நிலம் கொடுத்த காரணத்தினாலே 8-வது வகுப்பு
படித்த ஒருவரை எஞ்சினியர் வேலையிலே அமர்த்தமுடியாது.
எனவே, எந்த கேட்டகிரி என்று பார்த்து வேலையிலே
அமர்த்தியிருக்கிறார்கள், பெரும் பகுதி கொடுத்திருகிறோம்
என்று சொல்லியிருக்கிறார்கள். தகுதியானவர்கள் இருந்து அவர்
களுக்கு வேலை வாய்ப்புத தரப்படவில்லை என்று ஸ்பெசிப்பிக்
காக அவர் கவனத்திற்கு வந்திருந்தால் அதைச் சொன்னால்
அந்த நிறுவனத்தோடு கலந்து பேசி ஏன் கொடுக்கவில்லை
என்பதை விவர அறிக்கை மூலமாகவோ நேரடியாகவோ
அல்லது மன்றத்திலோ சொல்ல அரசு தயாராக இருக்கிறது.

**திரு. துரைமுருகன் :** அமைச்சர் அது மத்திய நிறுவனம்
என்று சொன்னார்கள். அதை நான் மறுக்கவில்லை. ஆகவே
வேலை கொடுப்பதற்கு நீங்கள் பொறுப்பு என்று உங்கள்மேல்
நான் பழி போட விரும்பவில்லை. தமிழ் நாட்டிலே இப்படிப்
பட்ட நிலைமை இருக்கிறபோது மத்திய அரசு நிறுவனமானாலும்
நிலம் இல்லாதுபோனது நம்முடைய மக்கள். ஆகவே, அவர்
களுடைய கஷ்டத்தை நாம் தான் முன்னின்று போக்கவேண்டும்
இன்னொன்று, யாராவது மத்திய மந்திரி வீட்டுப் பிள்ளைக்கு
வேலை கொடுத்து இருந்தால் அதைப்பற்றி நான் கேட்டுச் சொல்
றேன் என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்களுக்குச்
சொல்கிறேன். மத்திய மந்திரி இல்லை. நம் மந்திரி; இங்கே
கேபினட்டிலே உட்கார்ந்திருக்கிற மந்திரி பிள்ளைகள் நிறைய
இருக்கிறார்கள். அதையெல்லாம்தான் சொல்லவேண்டாம்
என்று நினைக்கிறேன். வேண்டுமானால் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது மந்திரிகள்
வீட்டுப் பிள்ளைகளுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று
சொன்னார்கள். மந்திரி வீட்டுப் பிள்ளையாக இருந்தாலும்
வேலைகளுக்கு ஏற்ற தகுதி இருந்தால் கொடுப்பதிலே என்ன தவறு
என்பதை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தெரிந்தது. வடநாட்டிற்கு உடனே சென்று பீகார் மாநிலத்தில் ஒரு கிராமத்தையே சுற்றி வளைத்து குற்றவாளிகளை பிடித்து கூண்டில் ஏற்றிய பெருமையும் தமிழ் நாட்டுப் போலீசுக்கு உண்டு.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

பெண் போலீசைப் பற்றி இங்கே சொன்னார்கள். ஆசியா 82 விளையாட்டுப் போட்டியில் பெண் போலீஸ் கலந்து கொண்டதை சொல்லிய நேரத்தில் சிலர் அவர்கள் ஏதோ காட்சிப் பொருளாக இருந்ததாக குற்றச்சாட்டாகவும், கிண்டலாகவும் கூறினார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் சொல்வேன். தமிழ் நாட்டிலே இருக்கின்ற பெண் போலீஸ்தான் இந்தியத் துணைக் கண்டத்திலே முன் உதாரணமாக இருக்கிறார்கள். சினிமா ஆசையால் எத்தனையோ மாநிலங்களிலிருந்து சென்னைக்குவந்த பெண்கள் பல்வேறு வழிகளில் தவறி செல்கிறபோது அவர்களை எல்லாம் கண்டுபிடித்து அவர்களைப் பாதுகாப்பாக அவர்களின் வீட்டிற்கு அனுப்பிவைத்த பெருமை பெண் போலீசிற்குத்தான் உண்டு.

அதேபோல பேருந்துகளில் கர்ப்பிணி பெண்கள் பயணம் செய் கின்றபோது வண்டியிலேயே பிள்ளை பெறுகிறபோது அவர்களை மருத்துவமனைகளிலே சேர்த்து, பாதுகாப்பு கொடுத்து ஏற்பாடு களை செய்த பெருமை பெண் போலீசிற்கு உண்டு. அதுமட்டு மல்ல. காதலன், காதலி சண்டை வந்து குடும்பச் சண்டையாக முற்றி, பெற்றோர்களிடத்திலே மிகப் பெரிய சண்டை வருகிற போது அவர்களிடையே ஒரு சமரச உடன்படிக்கை செய்துவைத்து திருமணத்தைக் கூட அந்தக் காவல் நிலையத்தில் செய்த பெருமை இந்த பெண் போலீசிற்கு உண்டு என்பதை துணிந்து சொல்வேன்.

(முற்பகல் 10-50)

இன்னும் ஒன்றைக் கூடச் சொன்னார்கள். இங்கே பேசிய தலைவர் ஒருவர் சொன்னார். ஏதோ ஆசிய விளையாட்டிலே இந்தப் போலீஸ் கலந்துக் கொண்டு விளையாடினார்கள். தங்கப் பதக்கம் கூடப் பெற்றார்கள் என்று சொன்னார்கள். ஆசிய விளையாட்டிலே அனைத்துத் துறையினரும் கலந்து கொண்டார்கள். தமிழ் நாட்டிலேயிருந்து சென்றவர்கள் கலைத் திறமையின் மூலமாகத் தங்களுடைய திறமையை வெளிப்படுத்தி னார்கள். அங்கு சென்று வெற்றி பெற்றது மட்டுமல்ல. பெருமை பெற்றது மட்டுமல்ல, அவர்தான் தர்மபுரி மாவட்டத்திலே நக்சலைட் இயக்கத்தை உடைப்பதற்காக, மாறுவேடத்திலே, குறத்தியாக, பெண்ணாக, அந்தப் பகுதியிலேயிருக்கின்ற





சாதாரண குடிமகனாக எல்லாம் வேடம் போட்டு, குகைக்குள்ளே சென்று, மலைகளிலே சென்று, காட்டுக்குள்ளே சென்று, அங்கே யிருக்கின்ற நிலைமைகளையெல்லாம் கண்டறிந்து அந்த நக்சலைட் இயக்கத்தை ஒழித்து, இன்றையதினம் அங்கே சமுதாய சீர்திருத்தம் நல்லமுறையிலே ஏற்பட வழிவகை செய்த வரும் அந்தக் கரக ஆட்டம் ஆடிய சிவகுருதான்.

அது மட்டுமல்ல. ஊத்தங்கரையைப் பற்றிச் சொன்னார்கள். இந்திய துணைக் கண்டத்திலேயே, நக்சலைட்டைச் சீர்திருத்தக் கூடிய ஒரு வழியைக் கொண்டு வந்தது தமிழ்நாடு அரசுதான். கலெக்டர், எஸ். பி., சட்டமன்ற உறுப்பினர்கள் இவர்கள் எல்லாம் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். நாங்கள் மிகப் பெரிய நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து பொதுமக்கள் கலந்து கொண்டு, அவர்களுடைய கருத்தை எடுத்து வைத்து, நக்சலைட் டுகள் இல்லாமல் ஆக்கிய பெருமை இந்த அரசுக்கு உண்டு. 3 ஆண்டுகளுக்கு முன்னால், இந்தச் சட்டமன்றத்திலே பேசுகின்ற பொழுது, நக்சலைட்டுகள் கொடுமை இப்படி இருக்கிறது என்று சொன்னேன். வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் எடுத்து வைத்த பல்வேறு விதமான ஆலோசனைகளின் பேரில் இன்றைய தினம் காவல் துறை நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றது. புரட்சித் தலைவர் எனக்கு ஒரு கட்டளையிட்டார். நக்சலைட்டு கள் யார் ? எதற்காக இப்படி ஒரு நிலைமை ஏற்படுகிறது ? திருடு ஏற்படுவதற்குக் காரணம் என்ன ? கொலைகள் ஏற்படு வதற்குக் காரணம் என்ன ? கொள்ளை ஏற்படுவதற்குக் காரணம் என்ன ? அவர்களை மனமாற்றம் செய்ய முடியுமா என்று கேட்டார்கள். இன்றையதினம் தர்மபுரி மாவட்டத்தில் அது பற்றி ஆய்ந்து, அரசாங்கத்தின் சார்பாகவே, 13 பேருக்கு வேலை வாய்ப்பு கொடுத்திருக்கின்றோம். அப்படிப்பட்டவர் களைக் கண்டு பிடித்து, பேசி, யார் யார் இருக்கிறார்கள் என்று பார்த்து, எந்த எந்த வகையிலே உதவி செய்ய முடியுமோ, அதைச் செய்து மனமாற்றம் செய்து, அவர்களுடைய வாழ்க்கை யிலே ஒரு சீர்திருத்த மாற்றத்தை உருவாக்கிக் கொடுத்ததுகூட அந்த ஆய்வுதான்.

அதுமட்டுமல்ல. இங்கே பேசுகின்றபொழுது, இந்த போலீஸ் மானியக் கோரிக்கை வருகிறது என்று முன்பாகவே, பத்திரிகை களிலே ஒரு கருத்து வந்துவிட்டது. இந்தியன் எக்ஸ்பிரசிலே கூட ஒரு செய்தி வந்திருக்கிறது. இங்கேயிருக்கின்ற சி. ஐ. டி.க்கள் என்ன செய்கிறார்கள். ஏற்கெனவே துப்பு துலக்கி ஏதாவது சொல்லியிருக்கிறார்களா ? செய்திருக்கிறார்களா ? அதனுடைய நிலை என்ன என்றெல்லாம் மானியக் கோரிக்கை வருவதற்கு முன்னாலே, யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே என்பதுபோல், அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லி

உறுப்பினர் இளையபெருமாள் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவிற்கு நிலைமையிருக்கிறது என்பதைத் தெளிவாக்குவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அடுத்து, தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரையில், இந்தியக் குடியரசு தின அணி வகுப்பில் எடுத்த படத்தை நமக்கு போட்டுக் காட்டினார்கள். அது படக் காட்சியா என்று ஐயப்படும் அளவிற்கு, கண் முன்னால் நடக்கின்ற காட்சியைப் போல இருந்தது. அந்த அளவிற்கு நவீன ஆயுதங்களை வைத்துக்கொண்டு பிரமாதமாக, நல்லமுறையில் அந்தத் துறை வளர்ந்து வந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில் அந்த நிகழ்ச்சி இருந்தது என்பதை எந்தக் கட்சியானாலும் மறுக்க முடியாது.

இப்படியெல்லாம் செய்வதற்குக் காரணம் இந்த அரசு செய்திருக்கின்ற சீரமைப்புகள், போலீசுக்கு வழங்கியிருக்கின்ற சலுகைகள், போலீசுக்கு வழங்கியிருக்கின்ற பதவி உயர்வுகள். போலீசாருக்கு ஏற்படுத்தியிருக்கின்ற நிர்வாக சீரமைப்புகள் என்று இப்படிப் பல்வேறு காரண காரியங்களால் தமிழ்நாட்டில் முன்பிருந்ததைவிட இன்றைக்குப் பல்வேறு வகைகளிலேயுட் அமைதியான சூழ்நிலை ஏற்படுகின்ற வகையில் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுகின்ற வகையில் போலீஸ் துறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஊத்தங்கரையைப் பொறுத்தவரையில்கூட சொல்ல வேண்டுமென்றால், ரோஜாவைப் பறிக்கும்பொழுது சில வேளைகளில் முள் குத்தத்தான் செய்யும்; களையெடுக்கும்பொழுது சில வேளைகளில் பயிரேகூட அழிவதும் உண்டு. இப்படிச் சில நேரங்களில், சட்டம்—ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத் தங்களுக்குக் கிடைத்த தகவல்கள், ஏற்படுகின்ற நிலைமைகள், உணர்ச்சி வசப்பட்ட நிலைமைகள் என்று வரும்பொழுது போலீஸ் துறையினரே தவறாக நடந்திருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றுகூட அரசாங்கம் இன்றைக்கு ஆலோசனை செய்து ஆணையிட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல. மக்களுக்கு மனமாற்றம் ஏற்படச் செய்ய வேண்டும்; அந்த அளவிற்கு நாட்டிலே சீர்திருத்தப் பிரச்சாரம் தேவை. கொள்ளை அடித்தல், கொலை செய்தல் ஆகியவற்றுக்கு வகை செய்யும் வழிவகைகளைக் களைந்து அவர்களைத்





திருத்த வேண்டும். அந்த முறையில் அவர்கள் திருந்த வேண்டும். ஒரு நேரத்தில் புரட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள்: "திட்டம் போட்டுத் திருடற கூட்டம் திருடிக்கொண்டே இருக்குது; அதைச் சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது; திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் விமோசனம் அப்பொழுதுதான் உண்டு.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், உலகத் தமிழ் மாநாட்டிற்கு வந்த கூட்டம் கடல் அலையா, மக்கள் தலையா என்று வியக்கின்ற அளவிற்கு, எவ்வளவு தலைகள் இருக்கின்றன என்று சொல்ல முடியாத அளவிற்கு நிலைமை இருந்தது. அப்பொழுது ஒரு தலைவர் சொன்னார். நான் செல்ல மாட்டேன். என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் செல்ல மாட்டார்கள், வேறு யாரும் அங்கே செல்லக் கூடாது என்று சொன்னார்கள். அவ்வளவு பெரிய உலகத் தமிழ் மாநாட்டில் ஒரு பிக் பாக்கெட் உண்டா? ஒரு வழிப்பறி உண்டா? ஒரு கற்பழிப்பு உண்டா? அல்லது வேறு ஏதாவது இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தனவா என்று பார்க்கும்பொழுது நிச்சயமாக இல்லை என்ற நிலைமைதான் ஏற்படுகிறது.

(முற்பகல் 11—00)

இப்படிப்பட்ட மனமாற்றம் ஏற்பட்டு அது போன்ற சீர்திருத்த கருத்துக்களால், பாமரர்களால், கலை உணர்வாகக்கூட சிலர் அப்படிச் செய்யும்பொழுது, அது மக்களுக்கு பயன்படுகிறது என்பதனை இங்கே சொல்லவிரும்புகிறேன். காரணம்—மகாத்மா காந்தியடிகள்கூட அரிச்சந்திரன் கதையைப் பார்த்துத்தான் தனது வாழ்வின் சரித்திரத்தையே அமைத்துக் கொண்டார் என்பது சரித்திரம். அந்த அடிப்படையில் இப்படிப்பட்ட பல்வேறு விவகாரங்களில் இந்த நிலைமைகள் ஏற்படாமல் தடுக்கக் கூடிய சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கூடிய வகையில் நாம் பிரச்சாரங்கள் மேற்கொள்வது தான் சாலச் சிறந்ததாக இருக்க முடியும் என்பது என்னுடைய கருத்து. இன்றைய தினம் பல வழக்குகள் கோர்ட்டில் பலவீனப்படுகின்றன. நேற்று பாராளுமன்றத்தில் கொண்டு வந்த ஒரு தீர்ப்பு கூட ஒரு நிகழ்ச்சிகூட, கோர்ட்டிலே போகும்பொழுது இது மனித உரிமைக்கு அப்பாற்பட்டது; அடிப்படை உரிமைக்கு அப்பாற்பட்டது என்று ஒரு ஆயுள் கைதி ஜெயிலுக்குள்ளே இருந்து கொண்டு அவன் கொலை செய்து விடுவானேயானால், அவனுக்கு மரண தண்டனை விதிக்கக்கூடாது என்று கோர்ட்டு சொல்கிற இப்படிப்பட்ட நிலையில் கோர்ட்டுக்கே இருக்கின்ற அதிகாரத்தை கூட மறு பரிசீலனை செய்யத் தவறுவார்களேயானால், நாட்டின் நியாயங்களை நாம் நிலை நிறுத்த முடியாது என்பது தான் என்னுடைய தீர்மானமான வாதமாகும்.

இருப்பதைக் கூட நான் பார்த்தேன். பத்திரிகையிலே வருகின்ற
செய்தியைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. இந்தியத்
துணைக் கண்டத்தில் எல்லா மாநில பிரச்சினைகளையும் அவர்கள்
போட்டிருப்பார்களானால் அது இந்த நாட்டுக்கு நன்மை பயக்கத்
தக்கதாக இருந்திருக்க முடியும். தமிழ்நாட்டிலே நடந்த சில
வற்றைச் சொல்லியிருக்கிறார்கள்.

நான் ஒரு உதாரணம் சொல்கிறேன். காவேரிப்பட்டிணம்
ஊராட்சி ஒன்றியத்திலே சில அதிகாரிகள் தவறுதலாக நடக்க
இருந்தார்கள். ஒரு நாள் அவர்கள் ஒரு கொள்ளைக் கூட்டமாகச்
சேர்ந்து, பணத்தை எடுக்க இருந்தார்கள் என்ற செய்தி
போலீஸ் துறைக்கு வருகிறது. புலனாய்வுத் துறை இரவு
12 மணி அளவிலே அங்கே என்ன நடக்கிறது என்பதை அறிந்து
12½ மணிக்குள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தகவல்
கொடுத்திருக்கிறார்கள். காலை 8 மணி அளவில் அவர்களைக்
கண்டு பிடித்து, 13 பேரை சஸ்பெண்ட் செய்தார்கள். உரிய
நேரத்திலே போலீஸ் கொடுத்த துப்பு காரணமாக, அப்படி
செய்தது மட்டுமல்லாமல், 3 பேர் மீது என்கொயரி போட்டு
" டிஸ்மிஸ்ட் ஃபிரம் சர்வீஸ் " என்கின்ற நிலையிலே ஒரு
நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார்கள். மற்றவர்கள் சாதாரண
குற்றம் என்கிற நிலையில் 6 மாதம், 3 மாதம் இன்கிரிமென்ட்
கட் என்ற நிலையிலே நடவடிக்கைக்கு ஆளானார்கள். அப்படிப்
பட்ட நிலையிலே, உரிய காலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்
சீனிவாசன் அவர்கள் நடவடிக்கை எடுத்தார்.

அது மட்டுமல்ல. இன்றையதினம் பார்க்கின்றபொழுது,
இந்தியத் துணைக் கண்டத்தில் எத்தனை பிரச்னைகள். டில்லி
யைச் சுற்றி எப்படி இருக்கிறது என்று பார்த்தால், எனக்குக்
கிடைத்திருக்கின்ற தகவலின்படி, புது டில்லியில் சில மாதங்
களில் 1—1—1983 முதல் 31—3—1983 வரை, கிடைத்திருக்
கின்ற புள்ளி விவரப்படி, ஒரு பத்திரிகையில் வந்த செய்திப்படி
மட்டுமே, 125 குற்றங்கள்—தற்கொலை 18, கொலை 30,
கொள்ளை 25, கற்பழிப்பு 13, மோசடி 18, கடத்தல் 7,
வரதட்சிணைக் கொடுமை 2, வன்முறை 11, இப்படி டில்லியிலே
மட்டும்—அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்த்து 3 மாத
காலங்களிலே மட்டும், இரண்டே இரண்டு பத்திரிகைகளில்
வந்த செய்திகள் மட்டுமே இவ்வளவு. அப்படியானால் மற்ற
மாநிலங்களுடைய நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பதைத்
தமிழ்நாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டுமென்று மாண்புமிகு
உறுப்பினரை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டிலே சில தகராறுகள் நடக்கின்றன என்றால்,
இந்து—முஸ்லீம் தகராறுகள் ஏற்படுகின்றன என்று சொன்னால்,
மத மாற்றம் மற்றும் ஆர். எஸ். எஸ். விவகாரங்கள் வருகின்றன





என்று சொன்னால் அதுகூட கேரளா வழியாக வந்து
தமிழ்நாட்டிலே ஒரு அமைதியற்ற சூழ்நிலையை உருவாக்கியது.
தமிழ்நாட்டிலே இப்பொழுது ஏற்பட்ட வழிப்பறிக் கொள்ளை,
ஜவுளிக் கடையில் ஏற்பட்ட நிலைமை, இன்னும் மத மாற்றம்
ஆகியவைகள் ஏற்பட்டன என்றால் அதற்குக் காரணம் தமிழ்
நாட்டு மக்கள் அல்ல. வேறு மாநிலத்திலேயிருந்து இங்கே வந்து
புகுந்து விளையாடியதன் விளைவுதான் அது என்பதை தயவு
செய்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவற்றையெல்லாம் முறி
யடிப்பதற்கு சில அருமையான முறைகளை கையாண்டு, எந்த
அளவிற்குச் சீரமைக்க முடியுமோ அந்த அளவிற்குச் சீரமைத்து
நல்ல முறையிலே நாம் செய்து கொண்டிருக்கிறோம் என்று
சொன்னால் அது மிகையாகாது.

இப்படிப்பட்ட சாதிப் பூசல்கள், கலவரங்கள், வேறு மதங்
களுக்கு வந்ததன் விளைவு போன்றவற்றால் ஆங்காங்கிருக்கும்
சூழ்நிலையில் 1982 ஆம் ஆண்டு மட்டும் இந்த அரசுக்கு
முன்னெச்சரிக்கையாக 336 நிலைகளை, அறிக்கைகளைப்
போலீஸ் துறை கண்காணித்து துப்பு துலக்கி, நான் ஏற்கெனவே
சொன்ன காரணங்களால், தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம்
ஏற்பட்டது. 1983 ஆம் ஆண்டில் கூட, இதுவரையிலும் 43-க்கு
மேற்பட்ட அறிக்கைகள் அப்படி அரசாங்கத்திற்கு அனுப்பியதாக
நான் அறிகிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு மாற்றுத்
தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம்
அவர்கள் சொல்லும்பொழுது, மதமாற்றம் சம்பந்தமாகச் சொல்
லும்பொழுது, வெளி மாநிலத்திலேயிருந்து வந்தவர்களால் மத
மாற்றம் ஏற்பட்டது என்று சொல்கிறார்கள். அது தவறான
அறிக்கையாகும். மத மாற்றம் நடந்த இடத்திற்கு நானும்,
சமரசம் அவர்களும் சென்றிருந்தோம். ஜாதிக் கொடுமை
களினால் பாதிக்கப்பட்ட மக்கள் மத மாற்றத்திற்கு உள்ளா
னார்கள் என்ற விவரம் தெரிய வந்தது என்பதை அவர்களுக்குத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : மாற்றுத் தலைவரவர்களே,
நானும் அவரும்தான் சென்று பார்த்தோம் ; மீனாட்சிபுரத்தில்
பார்த்தோம் ; அங்கு எல்லோரிடத்திலேயும் பேசினோம் ; தனித்
தனியாக விவாதித்தோம். அங்கிருந்து எப்படி வருகிறது.
எப்படிப் பிரிக்கிறார்கள் என்பதையெல்லாம் கேட்டறிந்தோம்.
யார் எதற்காக மாறினாலும்கூட தமிழ்நாட்டிலே பிரச்னை
அதிகமாக இல்லை. அதற்கு எங்கெங்கிருந்து தொடர்பு இருக்
கிறது என்பது இங்கே மட்டுமல்ல, டெல்லி பாராளுமன்றத்தி
லேயும்கூட விளக்கப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு

அதுமட்டுமல்ல. இன்றைய தினம் எவ்வளவோ பிரச்சினைகள்.
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது கூட
உதாரணத்திற்கு ஒரு குதிரைப் பந்தயத்தை ஒழித்து, குதிரை
வீரன் சிலையை வைத்து, அடையாளச் சின்னமாக வைத்
தார்கள். அது திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது
ஏற்பட்ட நிலை. ஆனால் கோர்ட்டிலே போய் தடுக்கப்பட்டது.
இன்றைய தினம் அங்கே இருக்கிறது, குதிரை வீரன் சிலை
அடையாளச் சின்னமா, அல்லது கோர்ட்டாரால் கொண்டு வந்த
அவமானச் சின்னமா என்ற நிலையில் இருக்கிறது.

அதுமட்டுமல்ல. மால்கோ தேசியமயமாக்கப்பட வேண்டும்,
என்று அரசு சொன்னது. ஆனால் கோர்ட்டிலே நிறுத்தி விட்
டார்கள். இது இந்த நாட்டிற்குப் பெருமையா அல்லது சிறு
மையா என்று பார்க்க வேண்டும். எவ்வளவோ வாய்க்கரிசி
போட்டுக்கொண்டுதான் போலீஸ்காரர் வேலை செய்ய வேண்டி
யிருக்கிறது. அவர்கள் எவ்வளவு பாடுபடுகிறார்கள் என்பதனை
அங்கே இருக்கக்கூடிய சூழ்நிலையில் நக்சலைட்டை ஒழிக்கின்ற
நேரத்தில், பாடுபட்ட தன்மையில் பார்த்தவர்களுக்குத் தெரி
யும். எப்படி ராணுவக் கோர்ட்டு, எப்படி சிவில் கோர்ட்டு,
எப்படி பஞ்சாயத்து கோர்ட்டு என்கின்றோமோ அது போல்
தீர்ப்பு வழங்குவதற்கு ஒரு போலீஸ் கோர்ட்டு இருந்தால்கூட
அது மிக நல்லதாக இருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலையில்
இந்தியத் துணைக்கண்டத்திலே ஒரு சட்டத்தைக் கொண்டு வரு
வதற்கு முடியுமா என்று கூட ஒரு ஏற்பாடு செய்ய வேண்டியது
மிகவும் அவசியமானது என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வட நாட்டிலே பீகாரிலே, ஒரு பத்திரிகைக் குறிப்பு சொல்
கிறது. வாரத்திற்கு 84 திருடு. ஒரு நாளைக்கு 17 கற்பழிப்பு,
ஒரு மணிக்கு 13 பிக் பாக்கெட் நடக்கிறதாம். இப்படிப்பட்ட
சூழ்நிலையில் இந்தியத் துணைக் கண்டத்திலே சூழ்ந்து கொண்டி
ருக்கின்ற இந்த நேரத்தில், தமிழ்நாடுதான் இவ்வளவு நிலை
யிலும் ஓரளவிற்கு திருப்தியாக எந்த அளவிற்கு முடியுமோ
மக்களுக்கு சேவை செய்கிற ஒரு சேவா இயக்கமாக இயங்கு
கிறது என்று நான் சொல்வேன். ஆகவே அந்த அடிப்படை
யில் இன்றைய தினம் இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்
வதிலே பெருமைப் படுகிறேன். இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர்
சுந்தரராஜன் பேசுகிறபோது, ஒரு கருத்தைச் சொன்னார்கள்.
ஏதோ எங்கள் அரசியல் வாதியைச் சுற்றி ஆங்காங்கே
சி.ஐ.டி.க்கள் இருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.
இவை எல்லாம் திருடனுக்குத்தான் வெளிச்சத்தைக் கண்டால்
பயம் வரவேண்டும். நமக்கு வரவேண்டிய அவசியமே இல்லை.
அதுவும் சுந்தரராஜன் மிகவும் கண்ணியமானவர், நாணயமானவர்





நேர்மையானவர் என்று எனக்குத் தெரியும்—அவர் எந்தக்
கட்சியில் இருந்தாலும், நானே எதிர்க்கட்சியிலே இருந்தேன்.
அண்ணா தி.மு.க.வில் இருந்தபோது ஒரு பொய் வழக்கைப்
போட்டு, அதன் மூலம் சென்னையில் தங்கியிருக்க வேண்டுமென்ற
நிலை வந்து நான் அண்ணா தி. மு. க. தலைமை அலுவலகத்திலே
இருக்கின்றபோது, அங்கிருந்து ஒருவர் வருகிறார். வந்து பேசிக்
கொண்டிருந்துவிட்டு, அங்கிருந்து பேசியவுடன் சொல்கிறார்.
உனக்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன். வாருங்கள் அங்கே
போகலாம் என்றெல்லாம் சொல்கிறார். நான் பேசிக்கொண்டி
ருக்கும்போதே உள்ளே இருக்கின்ற தலைமைக் கழகத்திலிருந்து
தண்டபாணி வருகிறார். சி.ஐ.டி. போலீஸ் இங்கு எதற்காக
வந்தார் என்று அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே இவர்
ஓடிவிட்டார். இப்படி அரசியல் வாதிகள் வெளியே வருகின்ற
போது ஏதாவது ஒரு குற்றத்திலே ஈடுபடுத்திவிட வேண்டுமென்ற
அளவிற்குக் கூட அப்படிப்பட்ட நிலையில் சி.ஐ.டி.க்களை பயன்
படுத்தியவர்கள் உண்டு. ஆனால் இந்த ஆட்சியைப் பொறுத்த
வரையில், எந்தக் காரணத்தை முன்னிட்டு, எந்த நேரத்திலும்,
எந்த அடிப்படையிலும், அவர்களை அதற்குப் பயன்படுத்தாமல்,
போலீஸ் துறையைப் பயன்படுத்தி, அவர்கள் எப்படிப்பட்ட தகுதி
யானவர்கள், திறமையானவர்கள், அவர்களை எப்படி இந்த
நாட்டிற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதிலே,
அப்படிப்பட்டச் சூழ்நிலையிலே இந்த அரசு போலீஸ் துறையை
ஒரு பாம்பு என்று கூட சொல்வார்கள். நாங்கள் கூட
அதைத்தான் சொல்கிறோம். ஆனால் நாங்கள் போலீஸ் துறை
யிலே ஒரு அண்ணாயிச தத்துவத்தைக் கையாளுகிறோம். நாகப்
பாம்பினுடைய விஷத்தை எடுத்தால் நாகா என்று பெயர். நாகப்
பாம்பிலிருந்து எடுக்கப்படுகின்ற நாகா என்ற மருந்து
தான் நெஞ்சு வலி, இதய படபடப்பு, இதய வால்வு போன்ற
நோய்களுக்குத் தீர்க்கக் கூடிய மருந்தாக இருக்கிறது. போலீ
சுக்கு இருக்கக் கூடிய அந்த சக்தியை இந்த நாட்டிலே
இருக்கக் கூடிய, கொள்ளை, களவு போவதை, கொலை
செய்வதை தடுப்பதற்குக் கூடிய சமுதாயச் சீர்கேட்டை ஒழிக்கக்
கூடிய வகையில் அவர்களை பயன்படுத்துகிறோம் என்று சொல்லி
இத்தகைய மானியத்தைப் பற்றி பேசுகின்ற வாய்ப்பளித்த
மைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்

**திரு. அ. குமான்கான் :** மன்றத்தினுடைய துணைத் தலை
வர் அவர்களே, காவல்துறை மானியத்தின் மீது சில கருத்துக்
களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய முதல்வர் அவர்கள்
12 ஆயிரம் போலீஸ்காரர்களை நியமிக்கப் போகிறோம்
என்று நீண்டகாலமாகச் சொல்லி வருகிறார்கள். ஆனால்
இன்றைக்கு மக்கள் தொகையின் கணக்குக்கு ஏற்ப போலீசா
ருடைய எண்ணிக்கை போதாது. ஆனால் இன்றுவரை அது

போடப்பட்டதாகத் தெரியவில்லை. மக்களுடைய வரிப் பணத்திலே விளம்பரம் செய்து, அதைப்போலவே மற்ற செலக்சன்களுக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, காரியங்கள் எல்லாம் முடிந்து, மெடிக்கல் டெஸ்ட் எல்லாம் நடந்தும்கூட இன்னும் அவர்களுக்கு வேலை கொடுக்காமல் இருப்பது எந்தவிதத்தில் நியாயம். இப்படி செலக்ஷன் செய்வதற்காக பெரிய பெரிய பந்தல்களை எல்லாம் அரசாங்கத்தை நம்பி போலீஸ் அதிகாரிகள் போட்டுவிட்டார்கள். பந்தல்கள் பல இடங்களிலே பிரிக்கப்படாமல் இருக்கின்றன. பல ஆயிரக் கணக்கான ரூபாய்கள் இன்னும் கான்ட்ராக்டர்களுக்கு கொடுக்க வேண்டி இருக்கிறது. ஆனால் அரசாங்கம் இந்தத் தொகையை கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டதாக கேள்விப்படுகிறேன். நம்முடைய மெட்ராஸ் போலீஸ் கமிஷனருக்குக் கூட விரைவிலே கான்ட்ராக்டரிடமிருந்து நோட்டீஸ் வரப்போவதாக கேள்வி. இந்தத் தகவல்கள் எல்லாம் பத்திரிகையிலே செய்தியாக வெளியாகி இருக்கிறது. இது எந்த ஊர் நியாயம் என்று தெரியவில்லை. கமிஷனர் கொடுக்கிறாரா? ஆக இன்றைக்கு 12 ஆயிரம் போலீஸ்காரர்களை வேலைக்கு நியமிக்கிறோம் என்று சொல்லிவிட்டு இப்படி அதிக தூரம் இந்தக் காரியத்தில் ஈடுபடாமல் இருப்பது எந்தவிதத்தில் நியாயம் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே ஸ்பெசல் பிராஞ்ச் என்று ஒன்று இருக்கிறது. அடுத்து கிரைம் பிராஞ்ச், சி.ஐ.டி. என்று ஒன்று இருக்கிறது. இந்த பிராஞ்சு கொஞ்சம் அதிக கவனத்தோடு இருந்தால் இன்றைக்கு வகுப்புக் கலவரங்களைக்கூட தடுத்து இருக்க முடியும். முன்கூட்டியே அரசாங்கத்திற்கு தகவல்கள் எல்லாம் தந்திருக்க முடியும். ஆனால் அவர்கள் பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆக இன்றைக்கு இந்த ஸ்பெஷல் பிராஞ்ச் என்ன செய்து கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. ஆக இன்றைக்கு மேல் மட்டத்திலே உள்ள சிலருக்கு பதவி கொடுப்பதற்காக பதவி உயர்வுகளையும், புதிய பொறுப்புகளும் செய்யப்படுகிறதே தவிர, 12 ஆயிரம் போலீஸ்காரர்கள் வந்தபாடில்லை. பல பேர்கள் மருமகன் போலீஸ்காரனாக வரப்போகிறான் என்று பெண்ணை வேறுக் கொடுத்து விட்டார்கள். ஆனால் இன்றைக்கு பிள்ளைகள் தான் வந்திருக்கிறதே தவிர வேலை வந்தபாடில்லை. எனவே அவர்களுக்கு வேலை தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எஸ். ஐ. செலக்ஷன் என்று சொன்னார்கள். எல்லா ஏற்பாடுகளும் ஆகிவிட்டது. முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஊழல் நடக்கிறது என்று. யார், போலீஸ்



மந்திரி நம்முடைய முதல்வர் அவர்கள். அவருடைய துறையிலே ஊழல் நடக்கிறது. அது அவர்களுக்குத் தெரிகிறது. அப்படியானால் நடவடிக்கை உண்டா? இல்லை. ராணுவத்தை அழைத்து வந்து ஆட்களை எடுப்பேன் என்று சொன்னார்கள், இதே சட்டசபையில். அது பத்திரிகையிலே எல்லாம் செய்தியாக வந்தது. நாங்கள் அந்தக் கேள்வியைக் கேட்டபோது நடவடிக்கை எடுப்போம் என்றார். ஆனால் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இன்றைக்கு போலீஸ் டிபார்ட்மென்டிலே பல இன்ஸ்பெக்டர்கள் பல ஆண்டுக்காலமாக, 10, 12, 13 வருடங்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் டி. எஸ். பி. புரமோசன் கிடையாது. ஆனால் முதல் அமைச்சருடைய செக்யூரிட்டி விவேகானந்த ராஜ், அனுபவம், மற்றவர்களைக் காட்டிலும், சீனியாரிட்டி குறைவாக இருந்தாலும்கூட அவர்கள் திடீரென்று டி. எஸ். பி. யாக மாற்றப்படுகிறார். இதே மன்றத்திலே சொன்னார்கள். முதல்வர் அவர்கள் அப்போது பதில் சொல்லவில்லை. இது நியாயம் தானா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொரு தகவலையும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு தனிப்பட்ட அதிகாரிகளைக் குறை சொல்வதாகக் கருதக்கூடாது. ஒரு எஸ். பி. யாக இருக்கக்கூடியவர், அவருடைய பெயரைச் சொல்ல விரும்புகிறேன். அலெக்சாண்டர், அவருக்கு பதவி புரமோசன் கொடுப்பதற்காக ஏற்பாடுகள் நடைபெறுகிறது. நல்லது. முறைப்படி கொடுங்கள். ஆனால் அதற்காக ராஜகோபால், டி. ஐ. ஜி.; வெங்கடேசன், டி. ஐ. ஜி. கிருஷ்ணன், பையர் சர்வீஸ், தயாசங்கர், டி. ஐ. ஜி., ஃபுட் செல், இவர்களை எல்லாம் கட்டாயமாக லீவிலே போங்கள் என்று சொல்லி, உத்தரவு தயாராகக்கூடாது. இது மாறுபாடாகும். நான் கேள்விப்படுகிறேன். ஆகையினாலே 7 வருஷமாக இருக்கக்கூடியவர். இவரைக் காட்டிலும் சீனியர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களைக் கட்டாய லீவிலே போங்கள் என்று சொல்லிவிட்டு, முறைகேடான காரியங்கள் நடைபெறுகின்றது என்பதை நான் சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொன்று, ஆயுதப் படையைச் சேர்ந்த பெண்கள் 7½ ரூபாய்தான் அவர்களுக்குச் சம்பளம், தினக் கூலி. ஆனால் அதை மாற்றிக் கொடுக்கவேண்டும். விலைவாசிகள் எல்லாம் ஏறிவிட்டது என்று சொல்லி, அவர்கள் முதல் அமைச்சர் அவர்களுக்கு மனுகொடுக்க வந்தால், பாவம் அவர்களைக் கைது செய்கிறீர்களே, இது நியாயம் தானா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்,

போலீஸ் சங்கம் உரிமை என்ன ஆயிற்று? அது இயங்குகிறதா என்பது தெரியவில்லை. அதையும் நீங்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே ஆர்டர்லி முறை ஒழிக்கப் பட்டதாகச் செல்கிறார்கள். ஆனால் இன்னும் அந்தக் கொத்தடிமை முறை ஒழிக்கப் படாமல் இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதைப்போல பொதுக்கூட்டங்களுக்கு ஒற்றர்கள் செய்தி சேகரிக்க வருகிறார்கள். கூட்டம் முடிந்த பிறகு அவர்களுக்கு வருவதற்கு வாகன வசதிகள் இல்லை. அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே நான் மிக முக்கியமாகப் பேச விரும்புவது பல்வேறு குற்றச்சாட்டுக்களை எங்களுடைய கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். திண்டுக்கல்லிலே மாலா என்ற பெண்மணி விபச்சாரத்திற்கு உட்படாத சூழ்நிலையில் அவர்களைக் கொன்றார்கள். அன்று கடுமையாக கலைஞர் அவர்கள் இங்கே ஆதாரத்தோடு சொன்னார்கள். முதலமைச்சர் நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். என்ன ஆயிற்று என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திண்டுக்கல்லில் அப்சல்கான், ரிப்போர்ட் வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னார். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்றார். என்ன ஆயிற்று? தெரிந்துகொள்ள விரும்புகிறேன். திருத்தணியில் உள்ள லாட்ஜிலே லட்சுமி என்ற பெண் கற்பழித்துக் கொலை செய்யப்பட்டார். நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே சொன்னார்கள். என்ன ஆயிற்று என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

சிதம்பரம் டி.எஸ்.பி. ஒருவர் ஒரு பெண்ணைக் கற்பழித்தார். அந்தப் பெண் கொல்லப்பட்டார் என்ற செய்தி எல்லாம் இங்கே சொல்லப்பட்டது. குற்றவாளிகள் கடுமையான தண்டனைக்கு உள்ளாவார்கள் என்று முதலமைச்சர் சொன்னார். என்னவாயிற்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நடிகை ஷோபா கொலையா தற்கொலையா பிரச்சினை வந்தது. விசாரணையில் இருக்கிறது, விவரம் சொல்கிறேன் என்று சொன்னார். என்னாயிற்று? தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தேனாம்பாளையம் தாழ்த்தப்பட்ட மக்கள் கொடுமைக்கு உட்படுத்தப்பட்டபோது குற்றவாளிகள் வெளியே வருவார்கள்



நாங்கள் அடையாளம் காட்டுகிறோம், நடவடிக்கை எடுப்போம் என்று முதலமைச்சர் சொன்னார். அது என்னாயிற்று என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, இன்னும் பல்வேறு சம்பவங்களை நான் இங்கேசுட்டிக்காட்ட விரும்புகிறேன். திராவிடக் கழகத்தின் தலைவர் வீரமணியைத் தாக்கினார்கள். கம்ப்ளெயின்ட் கொடுக்கப்பட்டது. மம்சாபுரத்திலே பலர் கைது சொய்யப்பட்டார்கள். ஆனால், அதே நேரத்தில் முதலமைச்சர் கேட்கிறார். வீரமணி கம்ப்ளெயிண்ட் கொடுக்கவில்லையே? கம்ப்ளெயிண்ட் கொடுக்காதபோது எப்படி நடவடிக்கை எடுக்க முடியும். வீரமணி எம். ஏ. பி. எல். படித்தவர். கம்ப்ளெயின்ட் கொடுக்கவில்லையென்றால், குற்றவாளிகளை எப்படி கைது செய்யமுடியும் என்று கேட்டார். அங்கே வழக்குப் போட்டிருக்கிறார்கள். அதிலேகூட சம்பந்தப்பட்ட முக்கியமானவர்களை விட்டுவிட்டு, வழக்குப் போட்டிருக்கிறார்கள். நடவடிக்கை இல்லை. வழக்கு நடைபெறவில்லை. ஆனால், நிலைமை என்ன? பாதிக்கப்பட்ட வீரமணி, பாதிக்கப்பட்டவராகத்தான் இருக்கிறார்.

அதேபோல் ஆம்னி பஸ் ஊழல் என்று பேசினார்கள். நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னார்கள். வழக்குப் போடப்படும் என்று சொன்னார்கள். அதெல்லாம் என்னாயிற்று என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

சட்டம் ஒழுங்குபிரச்சினை பற்றி சொல்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் சமரசம் கூட சொன்னார். சென்னைக் கடற்கரையிலே மெட்ராஸ் ஹைக்கோர்ட் நீதிபதி ஒருவரின் உறவினர், உட்கார்ந்திருக்கிறார். கத்தியைக் காட்டி மிரட்டி அவரிடமிருந்து பணத்தை பறித்துக் கொண்டு சென்றுவிட்டார்கள். நடவடிக்கை உண்டா? சென்னை டி.எஸ்.பி. ஒருவர் மனைவியோடு உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவர் கண் முன்னாலேயே மனைவியின் ஜாக்கெட்டைக் கிழித்து, கொள்ளையடித்துக் கொண்டுபோய் விட்டனர். அதைப்போலவே 1-1-1983 அன்று செங்கற்பட்டு மாவட்டம் திருப்போரூரில் தனியார் ஒருவர் நடத்தக்கூடிய ஒரு வட்டிக்கடையில் கன்னக்கோல் வைத்து சுமார் 10 லட்ச ரூபாய் கொள்ளையடித்துக் கொண்டு போயிருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்பட்டதா? இல்லை.

அதைப்போலவே மேலும் சில சம்பவங்களை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். போலீஸ் லாக்கப்பிலே நடைபெறுகிற சாவுகள் சாதாரணமானதல்ல. போலீஸ்காரர்களே போலீஸ் நிலையத்தில் கற்பழிப்பு செய்கிற சூழ்நிலை இருக்கிறது.

கீழ்ப்பாக்கத்தில் ஜெயா என்ற 27 வயதுப் பெண்ணை இரண்டு போலீஸ்காரர்கள் விசாரணைக்காக அழைத்துப்போய் கற்பழித்து இருக்கிறார்கள். இந்தக்கொடுமை நடக்கலாமா?

பேரூர் போலீஸ் நிலையத்தில் செல்வி என்ற பெண்ணை விசாரணைக்கு அழைத்துப்போய் அந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டார் என்று சொல்லி, அந்தப் பெண் போலீஸ் லாக்கப்பிலேயே கொல்லப்பட்டிருக்கிறார்.

கிச்சிலிப்பாளையத்திலே அரிசனப் பெண் கொல்லப்பட்டிருக்கிறார். ஆனால், தற்கொலை செய்துகொண்டார் என்று சொல்லியிருக்கிறார்கள்.

தென்காசியிலே வெளியூர் செல்லும் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்த மாரியம்மாள் என்ற பெண் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டு கற்பழித்து இருக்கிறார்கள். நான் கேட்கிறேன். இந்த அக்கிரமங்கள் நடக்கலாமா ? உங்களுடைய ஆட்சியிலே, 156 பேர்கள் காவல் நிலையத்திலே கொல்லப்பட்டிருப்பதாகப் பத்திரிகையிலே செய்திகள் வந்து இருக்கின்றன. அவர்கள் மீதெல்லாம் 302 கேஸ், போடவேண்டாமா? அவர்களெல்லாம் கொலைகாரர்கள் இல்லையா? சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும். போலீஸ் உடுப்பு அணிந்துவிட்ட காரணத்தாலே யாரையும் கொலை செய்வதற்கு அவர்களுக்கு உரிமை கிடையாது. சுப்ரீம் கோர்ட் நம்முடைய அரசுக்குக் கூட நோட்டீஸ் அனுப்பி இருக்கிறது. என்ன நோட்டீஸ் என்று கேட்டால் திருப்பத்தூரில் மளிகை வியாபாரி ஒருவரின் நகையைத் திருடிவிட்டார் என்று சொல்லி, 5 ஆதிதிராவிடப் பையன்களைக் கைது செய்து 4 பேரை விடுதலை செய்துவிட்டார்கள். ஒரு பையன் என்ன ஆனான் என்று தெரியவில்லை. மேத்யூஸ் ஆப்ரகாம் என்பவர் சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு தொடுத்து விசாரிக்கவேண்டுமென்று சொல்லி அவர்கள் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அந்த விசாரணை என்னாயிற்று என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

ஊத்தங்கரை போலீஸ் லாக்கப்பில் கோவிந்தபுரம் சுப்பிரமணியன் என்ற 20 வயது இளைஞர் கொல்லப்பட்டிருக்கிறார். இதை எதிர்த்து பொது மக்கள் கூடினார்கள். அதற்கு துப்பாக்கிப் பிரயோகம். 10, 15 பேர் சுட்டுக்கொல்லப்படுகிறார்கள். நியாயம்தானா?

அதைப்போலவே, தார்க்குண்டே தாக்கப்படுகிறார். உலகமே அதைக் கண்டிக்கிறது. முதலமைச்சர் அவர்கள் ஒரு ஆளையனுப்பி மன்னிப்புக் கேட்கிறார். மன்னிப்புக் கேட்டால்





என்ன அர்த்தம்? அந்த அதிகாரி தவறு செய்துவிட்டார் என்பதுதானே பொருள். அங்கே மவுன ஊர்வலம் நடந்தது. அவர் ஹைக்கோர்ட் நீதிபதியாக இருந்தவர். மனித உரிமைக் கழகத்தின் தலைவர். 50 பேர்தான் ஊர்வலத்தில் இருந்தனர். ஏற்கனவே அனுமதி வாங்கியாகிவிட்டது. இருந்தும் போலீஸ்காரர்கள் தாக்குகிறார்கள் ஒரு டி.எஸ்.பி. தலைமையில். நம்முடைய முதலமைச்சர் மன்னிப்புக் கேட்கிறார். இந்தத் தவறு செய்த போலீஸ் அதிகாரி டிஸ்மிஸ் செய்யப்பட வேண்டாமா ? சஸ்பென்ட் செய்யப்பட வேண்டாமா ? இப்படிப்பட்ட தவறுகள் ஆங்காங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

தானப்பநாயக்கன்பட்டியில் பெண்களுக்கெதிராக துப்பாக்கிப் பிரயோகம். அவர்கள் கள்ளச் சாராயம் காய்ச்சினார்களா? கள்ள நோட்டு அடித்தார்களா? இல்லை. பானையை வைத்துக் கொண்டு தண்ணீர் கேட்டார்கள். தாசில்தார் நடராசன் என்பவரே துப்பாக்கியை வாங்கிச்சுடுகிறார். தாய்க்குலம், தாய்க்குலம் என்று பேசுகிற இந்த அரசு அந்த தாய்மார்களுக்கெதிராக துப்பாக்கிப் பிரயோகம் நடத்தலாமா?

நேற்று முன்தினம் கூட இங்கே ஒரு பிரச்சினையை நான் குறிப்பிட்டேன். அதற்கு அமைச்சர் பொன்னையன், அவர்கள் பதில் சொல்லவில்லை. நமக்கெதற்கு வம்பு என்று. ஜீவகன் என்பவரைபோலீஸ் கைதுசெய்தது 23-ம் தேதி. அடித்துஉதைத்து 29-ம் தேதி கொண்டுபோய் கோர்ட்டில் நிறுத்துகிறார்கள். 30,000 ரூபாய் திருடினார் என்று சொல்லி பொய் கேஸ் போடுகிறார்கள். நீதிபதி விசாரித்து இது உண்மையல்ல ; சோடிக்கப்பட்டிருக்கிறது. இந்த போலீஸ் அதிகாரி தப்பாக நடந்திருக்கிறார்கள் ; சட்டத்தை தன் கையில் எடுத்துக்கொண்டிருக்கிறார். இவர் தண்டிக்கப்பட வேண்டுமென்று ஜட்ஜ்மென்ட் கொடுத்திருக்கிறார்கள். அப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்ன அதிகாரிமீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். எப்படி எடுத்திருக்கிறார்கள் தெரியுமா ? முதலமைச்சர் தங்க மெடல் கொடுத்திருக்கிறார்கள். சட்டத்தை மீறியவருக்கு முதலமைச்சர் தங்கமெடல். வெளியிலே பேசுகிறார்கள். முதலமைச்சர் நீதிக்கு தலை வணங்குவேன் என்று சொல்கிறார். அவர் எந்த நீதிக்கு தலைவணங்குவார் என்று தெரியவில்லை.

அதைப்போன்று இன்னொன்று. மச்சக்காளை என்ற நபரை நக்சலைட் என்று பெயர் சூட்டி, அடித்து, உதைத்து, கைது செய்து டிராக்டரில் வைத்து, மலைமேலே கொண்டு சென்று

[1983 ஏப்ரல் 8

**திரு. ஆர். மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * * என்ற விவரம் தேவை. (கூச்சல்—குழப்பம்).

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** எப்படி கொண்டு வந்தோம் என்பதைக் கேட்க யாருக்கும் உரிமை கிடையாது. யாரும் அதைக் கேட்க முடியாது...... (கூச்சல்— குழப்பம்).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் அந்த ஆதாரத்தைப் பாருங்கள்.

* * பிறகு சொல்லுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் தாராளமாக பார்க்கலாம. அந்த தேதி, இடம், மற்ற விவரம் எல்லாம் உங்களிடம் கொடுத்திருக்கிறேன். அதற்கு என்ன தீர்ப்போ ஏற்றுக் கொள்கிறேன். வேண்டுமானால் இடத்தைக் கூடச் சொல்லுகிறேன். * * போலீஸ் ஸ்டேஷன் அது. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்னொன்றையும் நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆசிய விளையாட்டுப் போட்டி இந்த ஆண்டிலே நடைபெற்றது...... (குறுக்கீடு) துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்திலே இன்னும் பேசவேண்டும்......

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல சிதம்பரம் டி.எஸ்.பி. ஒரு பெண்ணை கற்பழித்து அவர் இறந்ததாக, ஆதாரமற்ற புகாரையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கிறார். அப்படி கற்பழித்தது உண்மை என்று சொன்னால், அந்தப் பெண்ணின் பெயர் என்ன, அந்தப் பெண்ணினுடைய தந்தையின் பெயர் என்ன ? (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மற்றவர்கள் தயவுசெய்து உட்காருங்கள். உறுப்பினர் சி. கோபால் அவர்கள், அவருடைய தொகுதியின் பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னதால் பேச வேண்டும் என்று கேட்கிறார், அவரை அனுமதிக்கிறேன்.

**திரு. சி. கோபால் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * *

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.



1983 ஏப்ரல் 8]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் தொடர்ந்து பேச வேண்டும். அதனால் கொடுத்திருக்கிற ஆதாரங்களை தாங்கள் பாருங்கள். சரி என்று தெரிந்தால் அதை அவைக் குறிப்பிலே ஏற்றிக் கொள்ளுங்கள். * * ஆகவே, ரகுமான்கான் அவர்களை தொடர்ந்து பேச அனுமதியுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள், * * இங்கே எடுத்துச் சொல்லி ............ (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்.)

**திரு. துரைமுருகன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவருக்கு இதில் சம்பந்தம் இல்லை, அவர் ஏன் இதில் குறுக்கிட வேண்டும் ? (கூச்சல், குழப்பம்.)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவான விவரத்தைத்தான் சொல்ல விரும்புகிறேன். நான் யார் மீதும் எந்தக் குற்றச்சாட்டையும் சொல்ல விரும்பவில்லை .............. (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்.)

I am giving general information, I am not accusing anybody.

நான் ஒரு பொதுவான பிரச்சினையைச் சொல்ல வருகிறேன். (குறுக்கீடுகள்.)

I am not accusing anybody. It is a general information with regard to the G.D. Entry. (குறுக்கீடுகள்)

நானும் திரு. துரைமுருகன் அவர்களும் ஒன்றாகப் படித்தவர்கள். ஆகவே அவர்கள் ஏன் இவ்வளவு உணர்ச்சிவசப்படுகிறார் என்பது தெரியவில்லை. நான் பொதுவான ஒன்றைச் சொல்கிறேன்.

G.D. is a confidential document of the Police Station.

(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

உருட்டிவிட்டு கொன்றுவிட்டார்கள் என்று சொல்லி ஹரி என்பவர் மெட்ராஸ் ஹைகோர்ட்டில் 'ஹேபியஸ் ஹார்ப்ஸ்' பெட்டிஷன் போட்டிருக்கிறார். நீதிபதி சொல்லியிருக்கிறார், கைது செய்ததற்கு ஆதாரங்கள் இருக்கின்றன ; ஆள் தெரியவில்லை என்று சொல்வது உண்மையல்ல ; போலீஸ் இது குறித்து விசாரணை செய்து அறிக்கை கொடுக்க வேண்டும் என்று. அதிலே என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். *** இதற்கு ஆதாரம் உண்டா என்று கேட்டால் கேஸ் நம்பர், வாரண்டு நம்பர் எல்லாம் தருகிறேன். அதை எல்லாம் தயாராக வைத்திருக்கிறேன்.

அடுத்து இன்னொரு * * *

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, * * சொல்வதை பற்றி எங்களுக்கு ஒன்றும் கவலை இல்லை சொல்லுங்கள். சொல்லுகின்ற விவரங்களுக்கு நாங்கள் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம் ; பதில் சொல்கிறோம், ஆனால் அப்படி சொல்லுகிறபோது தலைவரிடத்திலோ அல்லது துணைத் தலைவரிடத்திலோ அதற்கான ஆதாரங்களைக் காட்டியதாக அர்த்தம். அப்படிப்பட்ட ஆதாரங்கள் எதையாவது தாங்கள் பார்த்தீர்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம். நான் தங்களுடைய கவனத்திற்கு ஒன்றை மட்டும் கொண்டு வருகிறேன். இந்த மாமன்றத்தில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல பிரச்சனை வரவேண்டுமென்றால்,

** **

அதற்குமேலே யாராவது எழுந்துநின்று யார் அந்த உறுப்பினர், பொத்தாம் பொதுவிலே சொல்லக்கூடாது என்று கேட்டால் அப்போது நண்பர் ரகுமான்கான் அவர்கள் * * இதோ ஆதாரம் என்று காட்ட வேண்டிய காலகட்டம் வரும். அமைச்சர் கேட்க வேண்டிய கேள்வி அப்போதுதான் எழுகிறது. எனவே இப்போது எழவில்லை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவரவர்களே, தங்களுக்குப் பதிலாக துரைமுருகன் அவர்களே தீர்ப்பை

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





வழங்கிவிட்டார்கள். * * பொதுவாகச் சொன்னால் அது எல்லோரையும் குறிக்கும் ; அதுவும் தவறு. ** என்று சொல்கிறார் அதைச் சொல்லலாம் எப்போது ? எப்போது சொல்லலாம் என்றால் தங்களிடத்திலே அந்த சார்ஜஸ் பற்றிய விவரங்களைக் கொடுத்து, தங்களுக்கு மேலெழுந்த வாரியாக சில ஆதாரங்கள் இருக்கின்றன என்று தெரிந்தால் தாங்கள் அனுமதிக்கலாம். அது எந்த உறுப்பினராக இருந்தாலும் அமைச்சராக இருந்தாலும் பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். அந்த முறையை கடைபிடித்திருக்கிறார்களா என்று தங்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அப்படி கொடுக்கவில்லை என்றால் எப்படிச் சொல்லலாம் என்பதற்கு தாங்கள் தான் தீர்ப்பு வழங்க வேண்டும்.

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவரவர்களே, ஒரு சிறு விளக்கம். (குறுக்கீடுகள்)

I am requesting the cha'r and not th: Ruling Party Members. (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றி என்னுடைய முன் அனுமதி இல்லாமல் பேசியவை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

[முற்பகல் 11–20]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த ஆதாரத்தை தாங்கள் பாருங்கள். அதற்குள் வேறு பாயின்ட்டுகள் இருந்தாலும், தாங்கள் பேச அனுமதிப்பதாக இருந்தால் அனுமதிக்கலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் சாற்றிய குற்றச்சாட்டுகளைப் பற்றிய ஆதாரங்களை கொண்டு வந்திருக்கிறேன். * * நண்பர் துரைமுருகன் மூலமாக அதைத் தங்களிடம் கொடுத்து அனுப்புகிறேன். பார்த்துவிட்டு சரியாக இருந்தால் தாங்கள் சபைக் குறிப்பில் ஏற்றலாம். இல்லை என்றால் மாற்றலாம். தங்களுடைய ஆணையை இதில் ஏற்றுக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதற்கு ஆதரைஸ்ட் காப்பி கொண்டுவர முடியாது. அப்படி ஒப்புதல் அளித்திருக்கிறார்களா என்பதை நான் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்.)

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாகுமெண்ட் எப்படி இருக்க வேண்டும், அதனுடைய காம்பிடன்ஸ் என்ன என்பதைப் பொறுத்தவரையில் எல்லோரைக் காட்டிலும் திரு. குழந்தைவேலு அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே அவர் சொல்லியதுபோல் ஏற்பாடு செய்யுங்கள். ஒரு அக்ரீமெண்ட் எப்படி இருக்க வேண்டும். டாகுமென்ட் எப்படி இருக்க வேண்டும் என்பதை அவர் தெரிந்தவர். (கூச்சல், குழப்பம்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஜி. டீ. என்ட்ரி என்பது ஒன்றும் இல்லை. நாம் டைரி எழுதுவது போன்றதுதான் அது. உதாரணமாக திரு. துரைமுருகன் என்னை மிரட்டினார் என்று எழுதி வைத்துக்கொள்வது போன்று போலீஸ்காரர் ஜி. டி. எழுதி வைத்துக்கொள்கிறார் அவ்வளவுதான். ஆகவே

G. D. is not evidence (கூச்சல், குழப்பம்.)

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்கின்ற தீர்ப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதிலே இருந்து முரண்பட வில்லை. Genuineness of the document—It is left to you. அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அடுத்த முக்கியமான ஒரு பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன். ஆசிய விளையாட்டுப் போட்டி பற்றி ஒரு தகவல் வந்தது. நான் சொல்கின்ற தகவல் சரியா அல்லது தப்பா என்று சம்பந்தப்பட்ட அமைச்சர்களும், மற்றவர்களும் விளக்கம் தரலாம் அல்லது மறுக்கலாம். ஆசிய விளையாட்டுப் போட்டியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார்கள். அதைப் போல மற்ற அமைச்சர்களும் கலந்து கொண்டார்கள் என்று நம்புகிறேன். மக்களுடைய வரிப் பணத்திலிருந்துதான் காவல் துறை, இயங்குகின்றது. எனவே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது சர்க்காருடைய கடமை. ஏனென்றால் மக்களுடைய வரிப்பணம் அதற்குத்தான் செலவழிக்கப்பட வேண்டும். நம்முடைய அமைச்சர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும். ஏன் என்றால் 4½ கோடி மக்களுக்கு அமைச்சர்கள், 4½ கோடி மக்களுக்கு முதலமைச்சர், எனவே அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அவசியம். ** **கூச்சல்—குழப்பம்**

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா அவர்களே, அதிகாரப் பற்றற்றவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கக் கூடாது என்பதில்லை. முன்னாள் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் வருகிறார் என்றால் அவருக்குப் பாதுகாப்பு கொடுக்காமல் இருக்க முடியுமா? திருமதி இந்திரா காந்தி அவர்கள் முன்பு முன்னாள் பிரதமராக இருந்தாரே அப்போது பாதுகாப்பு கொடுக்காமல் இருந்திருக்க முடியுமா? (கூச்சல், குழப்பம்). மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை ஏன் சொல்ல விடமாட்டேன் என்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்பதைத் தயவு செய்து கேட்க வேண்டும். அதிகாரத்தில் உள்ளவர்களுக்குத்தான் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

(முற்பகல் 11-30).

அப்படி அல்ல. அதிகாரத்தில் இல்லாதவர்களுக்குக் கூட பொது முக்கியத்துவம் கருதி அரசு கொடுப்பது வழக்கம் என்று ஒன்று இரண்டு உதாரணங்களைக் சொன்னேன். ஆகவே தான் கருத்தை மாற்றிக்கொள்ளுங்கள் என்பதற்சாக குறிப்பிட்டேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, அந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு மட்டும் அல்ல, முக்கியமான அத்தனை பேருக்கும் கொடுக்க வேண்டியது அவசியம் தான். ஆனால் அந்த..................

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தாங்கள் மணி 11.04-லிருந்து பேசிக்கொண்டு இருக்கிறீர்கள். இதுவரை 26 நிமிடங்கள் ஆகியிருக்கிறது—இண்டரப்ஷனுக்கு 5 நிமிடங்கள் போனால் கூட—ஆகவே சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, அருள்கூர்ந்து நேரம் போனது உங்களுக்கே தெரியும். அடுத்து, யாருக்கு வேண்டுமானாலும் பாதுகாப்பு கொடுப்பது அவர்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு கொடுப்பது சர்க்காருடைய கடமை. ஆனால் அதே நேரத்தில் நான் சொல்ல விரும்புவது அதிலே பலர் கலந்து கொள்கிறார்கள். பல வி. ஐ. பி.கள் கலந்து கொள்கிறார்கள். அவர்கள் முக்கியமானவர்கள் தான் **

---

** மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதுதான் முதலிலேயே சொன்னேன். உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அரசினுடைய கடமை. தருகிறோம். தங்களுக்குக் கூட பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டால் நாங்கள் தரத் தயாராக இருக்கிறோம். (கூச்சல், குழப்பம்).

**திரு. டி. கே. கபாலி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால வரலாற்றை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அதை மறந்தே பேசிக்கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையின் கீழ் இயங்குகின்ற காரணத்தால் அவ்வளவு அநாகரிகமாக நாங்கள் போக தயாராக இல்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அனுமதி தந்தால் நானும் சொல்ல தயாராக இருக்கிறேன். அப்போது அதிகாரிகளை எப்படி எப்படியோ பயன்படுத்தியிருக்கிறார்கள். அதை எல்லாம் மறந்துவிட வேண்டாம் (கூச்சல், குழப்பம்) (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள்இன்னும் கொஞ்சம்தெளிவாகப்பேசினால் உதவியாக இருக்கும். எங்கே, எப்போது, எத்தகைய சூழ்நிலையில் என்பதையும்அவர்கள் சொன்னால், நடந்ததா? இல்லையா? உண்மையா, தவறா, என்பதைப் பற்றி எல்லாம் சொல்லலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவல் சவன்த் கேட் வழியாக திரு. குண்டுராவ் அவர்கள் போகிறார்கள். திரு. விஜய பாஸ்கர ரெட்டி அவர்கள் போகிறார்கள். அப்போது முதலமைச்சர் அவர்கள் வரவில்லை. கார் வருகிறது. அப்போது யூனிபார்ம் உடன் ஒருவர், மப்டியில் ஒருவர், அது தான் நான் கேட்கிறேன். இந்தப் பாதுகாப்பு எல்லோருக்கும் உண்டா?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அங்கே இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொண்டதற்கு நன்றி. அங்கே யார், யார் அப்படி இருந்தார்கள் என்பதை அவர்கள் நிரூபிக்கவேண்டும். அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ள தயாரா என்பதை நான் இங்கே உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.





**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இப்போது எனக்குக் கிடைத்த தகவலை சொல்லியிருக்கிறேன். அதற்கு முதல்வர் அவர்கள் விசாரணைக்கு ஏற்பாடு செய்யட்டும், சொல்கிறேன், அடுத்த பிரச்சனை............................

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, எந்த விசாரணை, எங்கு என்பது எனக்கு புரியவில்லை. இது இங்கு மட்டும் அல்ல; மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் வெளியே பேசியிருக்கிறாகள், நேற்று கூட பேசியிருக்கிறார்கள், முந்தா நாள் கூட பேசியிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த சப்செக்ட் தான் தெரியுமா? இல்லையா? என்று நான் சொல்ல மாட்டேன். நிறைய படித்தவர், நிறைய சப்செக்ட்ஸ் அவருக்குத் தெரியும். ஆனால் இதை மக்களிடத்தில் சொல்வது போல் இங்கே சொல்லி சர்ச்சைகள் வரவேண்டும் என்று அவர் ஆசைப்பட்டால் அதற்கு நான் பொறுப்பு ஏற்கவில்லை. ஆனால், நான் மிக மிக வேதனையோடு அல்ல, வருத்தத்தோடு கேட்கிறேன்; ஒரு மாண்புமிகு உறுப்பினர் பொறுப்போடு பேச வேண்டும் என்பதை உணர்ந்த ஒருவர், சட்டப்படி எப்படி பேச வேண்டும் என்பதை சட்டத்தின் மூலமாக தெரிந்து கொண்ட ஒருவர், பேசிவிட்டு விசாரணை என்றுசொல்வது ஒழுங்கு அல்ல. இப்போது இங்கேயே சொல்லலாம்; யார் யார் அவர்கள்; யார் யூனிபார்மில் இருந்தார்கள்; மப்டியில் யார் இருந்தார்கள்; அவர்கள் தயவுசெய்து சொல்லட்டும். எங்களுடைய உத்தரவு இல்லாமல் அப்படி செய்து இருந்தால் நான் நடவடிக்கை எடுக்கிறேன். இல்லை என்றால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடம் ஒப்படைத்து விடுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கிடைத்த தகவல் கிடைத்த தகவல் என்று சொல்லி பேசி கொண்டிருந்தால் எல்லோரைப் பற்றியும் பேசிக்கொண்டு இருக்கலாம். நாம் பொறுப்போடு எதுவாக இருந்தாலும் அதை நிரூபிக்கிற அளவுக்கு நம் கையில் மெட்டிரியல்ஸ் இருந்தாலொழிய அந்த மாதிரியான குற்றச்சாட்டுக்களை இங்கே சொல்லவேண்டாம் என்று உறுப்பினர்களுக்கு சொல்ல விரும்புகிறேன் அதை உங்களால் நிரூபிக்கமுடியும் அல்லது இங்கே விவாதத்தில் கலந்து கொள்ள முடியும் அப்படி என்று சொன்னால் நான் அனுமதிக்கிறேன். இல்லை என்றால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கித்தான் ஆகவேண்டும். பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொன்னால்தான் அதைப்பற்றி இங்கே விவாதிக்க முடியும் (குறுக்கீடு) நான் திரு. ரகுமான்கானிடம் கேட்கிறேன்.

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் கலந்து கொள்ள முடியாது, திரு. ரகுமான்கானிடம் நான் கேட்கிறேன்.

**திரு. துரைமுருகன் :** இது ஜாயின்ட் ரெஸ்பான்ஸிபிளிட்டி., எப்படி மந்திரிகளுக்கும் ஜாயின்ட் ரெஸ்பான்ஸிபிளிட்டி இருக்கிறதோ அதைப் போன்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படி எந்தச் சட்டத்திலும் இல்லை, அவர் பொறுப்பேற்றுக்கொள்ளவில்லையென்றால் இங்கே அதை விவாதிக்க முடியாது. திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். எனக்குக் கிடைத்த தகவல் என்று சொல்லிக்கொள்ளலாம், கிடைத்த தகவல் என்று சொல்லிக்கொண்டு நம்மை பாதுகாக்கக்கூடிய அளவுக்கு இடையிடையே நழுவிப் போகக்கூடிய அளவிற்கு தகவல் இந்த அவையிலே வேண்டாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அந்த பாதுகாப்பு கொடுத்த போலீஸ் அதிகாரி யார்? அவருடைய பெயர் என்ன என்ற விவரங்களை என்னிடத்திலே கேட்டு இருக்கிறார்கள். ஆனால் முதல்வர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். பாதுகாப்புக் கொடுத்த போலீஸ் அதிகாரியினுடைய பெயர் தெரியாது. (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, எப்போது பெயர் தெரியாது என்றெல்லாம் சொல்கிறார்களோ அப்படிப்பட்ட ஆதாரமற்ற செய்தியை நீங்கள் இங்கே அனுமதிக்கப் போகிறீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவரமே இல்லாத காரணத்தால் திரு. ரகுமான்கான் இப்போது பேசிய இந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) சாதாரணமாக போகிற காமன் மேன் சொன்னால் நம்பலாம், ஆனால் இங்கே ஒரு எம்.எல்.ஏ., வாக இருந்து கொண்டு எனக்கு அடையாளம் தெரியாது என்று சொல்ல முடியாது.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, எல்லா போலீஸ் அதிகாரிகளையும்—சி.ஐ.டி. கூட லாபியிலே நம்முடைய பக்கத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள். நாம் சி.ஐ.டி. என்றுதான் சொல்கிறோம் அதை விட்டுவிட்டு சி.ஐ.டி.



பெயர் காந்தராஜ், புஷ்பராஜ் என்று தெரியுமா தெரியாது—ஆகவே ஒரு தகவல் சொல்கிறோம் *** பரவாயில்லை (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விதிக்குட்பட்டு நீங்கள் பேசினால் அனுமதிக்கப்படும். கிடைத்த தகவலைச் சொல்லி நழுவிப் போவதால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. கான்கிரீட்டாக கொண்டு வாருங்கள், இப்போதும் ஆளைத் தேடி கண்டுபிடித்துச் சொல்லுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இப்போது இன்னொரு பிரச்சினையை உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிற காரணத்தினால் அவர்கள் பதில் சொல்வார்கள் என்ற நம்பிக்கையோடு. குறிப்பாக எங்களுடைய கட்சியினுடைய தலைவர் கலைஞர் அவாகள் விமான நிலையத்தில் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து........

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி விசாரித்து அதிகாரிகளுடைய பதிலைப் பெற இருக்கிறோம். வந்தவுடனே மன்றத்திலே வைக்க இருக்கிறோம்.

**திரு. அ. ரகுமான்கான் :** ஒன்றை மட்டும் நான் முதலமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் முதலமைச்சர் சொல்லியதற்குப் பிறகு எனக்கு அதிலே நம்பிக்கை இருக்கிறது. நிச்சயமாக விசாரணை நடைபெற்று தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்பார், அதிலே ஆளுங்கட்சி எதிர் கட்சி என்ற வேறுபாடு பார்க்கமாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால் தங்கள் மூலமாக முதலமைச்சரின் கவனத்திற்கு ஒரு அமைச்சருடைய பேச்சை நான் கொண்டுவருகிறேன். கருணாநிதி இந்தப் பிரச்சினையை வைத்து நாடகமாடுகிறார்............

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் வற்புறுத்திக் கூறுகிறேன். அறிக்கை வைக்கப்படும் அதிகாரிகளின் பதிலைப்பெற்று என்று சொன்ன பிறகு, யாரோ சொன்னார் எப்படியோ சொன்னார்

---

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்று பேச்சை நீட்டிக்கொண்டே போனால், அந்த பேச்சை வளர்த்துக்கொண்டு போனால் இது போன்ற பதில்கள்தான் வரும் அது சரியாக இருக்காது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** துணைத் தலைவர் அவர்களே, ஒரு அமைச்சர் பேசினார் என்று இங்கே பேசினார். நான் தான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவைக்கு வெளியே பேசியதை இங்கே உள்ளே பேசி இங்கே விவாதமாக்க வேண்டாம். ஏற்கெனவே இதிலே நாம் முடிவு எடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் பேசியபோது காப்பாற்றுவதற்கு என்று எல்லாம் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

(முற்பகல் 11–40)

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, . . . . . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, எந்தெந்த பகுதிகள் நீக்கப்பட்டிருக்கின்றன என்பதை தாங்கள் பார்த்து சொல்லிவிடுவது தான் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ரகுமான்கான் அவர்கள் குற்றச்சாட்டு சொன்ன பகுதிகளை நான் பார்த்து சொல்லிய பிறகு பத்திரிகைகளில் பிரசுரிக்கலாம். அதுவரையில் பத்திரிகையாளர்கள் யாரும் வெளியிட வேண்டாமென்றுவேண்டுகோளாக கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே,

* * *

என்று சொன்னதை, பார்த்து நீக்குங்கள் ; அதைப்போல

* * *

என்று சொன்னேன். அதையும் பார்த்து நீக்குங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நானும் வக்கீலுக்குப் படித்தவன். நீங்கள் விவரமாகச் சொல்வதைப் போல நினைத்துக் கொண்டு சொல்கிறீர்கள். நான் ஏற்கெனவே நீக்கியவற்றை நீங்கள் இரண்டாவது தடவை சொல்கிறீர்கள். ஆகவே இதையும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன்.

---

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கு இணங்க அகற்றப் பெற்றது



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, * * என்பது டெல்லி சர்க்கார் பொறுத்தது ; அதற்கும் நமக்கும் என்ன தொடர்பு ?

**திரு. அ. ரகுமான்கான் :** நியாயமான கேள்வியை கேட்க வேண்டிய இடத்தில் தான் கேட்டிருக்கிறார் நம்முடைய அமைச்சர் அவர்கள். நம்முடைய இராஜசேகரன் போன்றவர்கள், இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் ஒரு நியாயமான கோரிக்கையை வைத்து, சர்க்கரை பஞ்சம், நாட்டிலே மின்சாரம், தண்ணீர் பற்றாக்குறை ஆகியவற்றை முன்வைத்து போராட்டம் நடத்தினார்கள். இந்த சர்க்காருக்கும் அதிலே பொறுப்பு இருக்கிறது. சரியான நடவடிக்கை எடுக்காததால் ; அவற்றை ஜனங்களிடத்திலே எடுத்துச் சொல்கிற விதத்தில் ஒரு போராட்டம் நடத்தினார்கள். சட்டம் சரியாக வேலை செய்ய வேண்டும் ; ஒத்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்போதும் சொல்வார் ; நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் அவர்கள் மீது தடியடி பிரயோகம் நடத்தினார்கள். டி.ஜி.பி. அவர்கள் கூட விரட்டப்பட்டார்கள் என்று போலீஸ் லாங் வேஜிலே கூறியிருக்கிறார்கள். ஆனால் முக்கியமான ஒன்றை நான் கேட்க விரும்புகிறேன். அவர்களுக்கு ஒரு நீதி மற்றவர்களுக்கு ஒரு நீதி என்று இருக்கக் கூடாது. இங்கே ஒரு போட்டோ பிரசுரம் ஆகியிருக்கிறது. சொடைக்கானலில், . . . . . . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இங்கே படித்து காண்பிக்கிற குறிப்புகளை, ஆதாரங்களை எல்லாம் முன்னமேயே தங்களிடத்தில் காண்பித்து, தங்களுடைய அனுமதியைப்பெற்றுத்தான் இப்போது காண்பிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** என்னிடத்தில் அனுமதி பெறவில்லை. அனுமதி பெற்றுத்தான் அதைப்பற்றி பேசமுடியும். 31 நிமிடங்கள் ஆகிவிட்டது ; உட்காருங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, அதை மறுக்கவும் போவதில்லை. அந்த மறியல் நடைபெற்றிருக்கிறது. ஒரு அமைச்சர் எதிர்ப்பு, இன்னும் சொல்லப் போனால் இன்விடேஷனில் அமைச்சர் வீரப்பன், அமைச்சர் ராஜா முகமது அவர்கள் பெயரை மட்டும் போட்டு விட்டு எங்களை விட்டு விட்டார்கள் என்று, மாண்புமிகு முதலமைச்சர் சொல்வதைப் போல, கட்சிக் காரர்களே மறியல் நடத்துகிறார்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கு இணங்க அகற்றப்பெற்றது.

[1983 ஏப்ரல் 8

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கொடுத்த ஆதாரத்தை நான் பார்த்தேன். முதல் பக்க எண் 56, இரண்டாவது பக்க எண் 66. இடையிலே 10 பக்கங்கள் எங்கே இருக்கின்றது என்று தெரியவில்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** எனக்குத் தேவையான போர்ஷன்ஸ் அது.

**திரு. துரைமுருகன் :** ** **
** **

அது உண்டா இல்லையா என்று போலீஸ் ஸ்டேஷன் ரெக்கார்டை வரவழையுங்கள், Summon them.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் இரண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கு ஆதாரங்கள் தருகிறபொழுது தங்களுக்கு எப்படி கிடைத்தது என்பதைத் தெரிவிக்க வேண்டியதில்லை என்றார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். The source need not be disclosed.
ஆனால், அதே நேரத்தில் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களாகிய நீங்கள் அப்படி தருகின்ற ஆதாரங்கள் உண்மையானதா என்று பார்க்கக் கடமைப் பட்டிருக்கிறீர்கள். authenticity அது உண்மையல்ல என்று தங்களுக்குத் தோன்றி தீர்ப்பளித்தால் அதுதான் இறுதியானது. அதற்கு இந்தப் பக்கம் இப்படி எழுதியிருக்கலாம் ; அந்தப் பக்கம் இன்னொருவர் எழுதியிருக்கலாம் என்று விளக்கம் சொல்வது சரியல்ல. தங்கள் தீர்ப்பையே மறுத்துப் பேசுவது என்பது அதற்குப் பொருள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் தீர்ப்புக் கூறுகிறேன். என்னிடம் போட்டோஸ்டெட் காப்பி கொடுத்தீர்கள். அதை வெரிஃபை பண்ணிப் பார்த்தேன். பர்ஸ்ட் பேஜ் பெரிய, பெரிய கொட்டை எழுத்துக்களில் இருக்கிறது. செக்கன்ட் பேஜ்ஜிலே பொடி எழுத்துக்கள் இருக்கின்றன. ஸ்ட்ரோக்ஸ் டிஃபரன்ட்டாக இருக்கிறது. ஹான்ட் ரைட்டிங் டிஃபர்ரன்ட். பக்க எண்கள் டாலியாகவில்லை. ஆகவே, இதை நான் ஏற்கவில்லையென்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

**திரு. துரைமுருகன் :** ** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1983 ஏப்ரல் 8]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** ** கொண்டு, வர முடியும் என்றால் அதற்கும் வாய்ப்புத் தருகிறேன். (கூச்சல் குழப்பம்).

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** **

(முற்பகல் 11-50.)

**திரு. சி. கோபால் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தாங்கள் அளித்தத் தீர்ப்பின்படி ரகுமான்கான் அவர்கள் காட்டியிருப்பது போலி ரெக்கார்டு என்பது தெரிய வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொல்லிய** இன்னும் அது தொடர்பாகப் பேசிய விஷயங்களை அவைக் குறிப்பிலேயிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் அதைப் பார்த்துச் சொல்கிறேன்.

**திரு. துரைமுருகன் :** ** இல்லை என்றால் தாங்கள் எந்தத் தீர்ப்பைக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

**திரு. சி. கோபால் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரகுமான்கான் அவர்கள் இது குறித்துப் பேசியதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டும். அவர் மீது உரிமை பிரச்சினைகூட கொண்டுவரலாம் என்று இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேசப்பட்ட குறிப்புகளைப் பார்த்துவிட்டு நான் இதுபற்றிச் சொல்லுகின்ற வரையில் அதைப் பிரசுரிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேசுகின்ற சமயத்தில் எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள்** போட்டோஸ்டெட் காப்பி யைக் கொண்டுவந்து கொடுத்திருக்கிறார்கள். பொறுப்பேற்றுக் கொள்வதற்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? டெப்டி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கள் ரோட்டிலே ; ரிமாண்ட் உண்டா ? படம் வந்திருக்கிறது. ஆதாரம் கேட்டால் சொல்கிறேன். ஆகவே இரட்டை ணுகுமுறை எந்த விதத்திலே நியாயம்? அதுமட்டு மல்ல இப்படி ஒரு குறிப்பிட்டவர்களுக்கு ஒரு நியாயம் என்பதும், மற்றவர்களுக்கு இன்னொரு நியாயம் என்பதும் சரி யல்ல. நான் பேசுகிறபோது பத்திரிகையிலே வந்திருக்கிற அந்தப் படத்தை அடிப்படையாக வைத்து, அதிலே கீழே அந்தத் தகவல்கள் எல்லாம் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். ஆகவே முதலமைச்சர் அவர்கள் மறுப்பதாக இருந்தால் பதில் சொல்லட்டும். ஆனால் உங்கள் மூலமாக ஒன்றை கேட்க விரும்பு கிறேன். நீங்கள் ஆதாரம் கேட்கலாம். எங்களுக்கு கிடைத்த தகவல்களை சொல்கிறோம். தவறாக இருந்தால் முதலமைச்சர் அவர்கள் எழுந்து சொல்லலாம். மாற்றிக் கொள்ள முடியும். எதிர்க்கட்சிகளின் கடமை என்பதைப் பொறுத்தவரையில் அவ் வளவு தான் முடியும். ஆகவே நீங்கள் அனைத்தையும் சபைக் குறிப்பிலேயிருந்து நீக்கி விடுகிறேன் என்று சொன்னதை பரி சீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, என். ஜி.ஓ.க்கள் கூட கோரிக்கை வைத்திருக்கிறார்கள். கோரிக்கை வைத்தவர்கள் மீது கேஸ் இருக்கிறது. சிறைக்கு அனுப்பப்பட் டிருக்கிறார்கள். கேசை திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் சொள்கிறேன். அடுத்தபடியாக .. (மணியடிக்கப் பெற்றது).

**திரு. ஆர். மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் பணியாற்றிக் கொண்டிருக் கக்கூடிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கோபால் அவர் களுடைய நடவடிக்கைகளைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு மாண்பு மிகு சட்டமன்ற உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஒரு குற்றச் சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். * * * *

** **

மாண்புமிகு உறுப்பினர் கோபால் அவர்கள் இதே அவையிலே இருக்கிறார். அவர் எழுந்து நின்று அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்ற மறுப்பைத் தந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த விவகாரத்தில் எப்படிப்பட்ட முடிவைத் தாங்கள் எடுப்பதாக இருக்கிறீர்கள் ?

** **

இது என்ன பட்டணத்தில் பூதம், ஜீபூம்பா நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா ? அவருடைய கரங்களுக்கு எப்படி வந்தது?

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.





எப்படி அதை இங்கே கொண்டு வர அனுமதி அளித்தீர்கள் என் பதை மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர் களாகிய தாங்கள் அறிவிக்க வேண்டும்.

Thiru Durai Murugan : You gave a chance to Mr. Manimaran You must give a chance to me also.

Mr. DEPUTY SPEAKER I am not giving a ruling. நான் உங்களுக்கு சான்ஸ் கொடுக்கிறேன் உட்காருங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** நான் ஆதாரம் கொடுத்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கொடுத்த ஆதாரத்தைப் பார்த்தேன். ஒரு பக்கத்திலே இருக்கிற எழுத்துக்கள் வேறு ; அதனுடைய ஸ்ட்ரோக்ஸ் வேறுமாதிரி இருக்கிறது. ஃபர்ஸ்ட் பேஜ் ஒருமாதிரி இருக்கிறது. அதிலே நம்பர் இருக்கிறது. வேறு ஒன்றிலே நம்பர் இல்லை. இப்படி யெல்லாம் திடீரென்று சொல்லக் கூடாது. இதையும் நீங்கள் பார்த்து விட்டு, உங்களுக்கு உண்மை என்று சொல்ல முடியும் என்றால் அடுத்த ஆதாரத்தைக் கொண்டு வாருங்கள், நான் பார்க்கிறேன்.

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவர் அவர்களே, ஆதா ரங்கள் எப்படி உங்களுக்குக் கிடைத்தது என்று இந்த மன்றத்திலே சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்பதை சட்டம் படித்த தாங்கள் அறிவீர்கள். வெளியிலே, அப்படிப்பட்ட அரசினுடைய இரகசிய ஆணைகளை வெளியிட்டால் கூட, அதற்கு வேண்டிய இரகசியப் பாதுகாப்புச் சட்டப்படி நீங்கள் நடவடிக்கை எடுக்க லாம். ஆனால், இந்த மன்றத்தில் எதையும் நாங்கள் கொண்டு வந்து தரலாம். எப்படிக் கிடைத்தது என்று கேட்க முடியாது, பாராளுமன்ற ஜனநாயக மரபுப்படி இதை மாண்புமிகு மணி மாறன் அவர்கள் அறிய வேண்டும்.

இரண்டாவது, நண்பர் ரகுமான்கான் கூறும்போது * *

போலீஸ் ஸ்டேஷனிலே இருக்கிற ஜி.டி. யிலே, ஐயா, இன்னார். போன் பண்ணினார்கள் என்று எழுதுவார்கள். அப்படித்தான் சொன்னாரே தவிர, அவர் மைக்கிலோ, பேசும்பொழுதோ **

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

சூப்பரின்டெண்ட்டிடமிருந்து தருவித்து ஒப்பிட்டுப் பார்த்துவிட்டு அதற்குப்பிறகு தாங்கள் முடிவு சொல்லலாமே தவிர, மேலெழுந்தவாரியாகப் பார்த்துவிட்டுச் சொல்வது என்றால் **

** **

இப்படிச் சொல்வது சரியல்ல என்று சொல்லி திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய அதிருப்தியைத் தெரிவித்து நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழக மக்களின் காவல் தெய்வம், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற காவல் துறை மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தில் எடுத்துவைக்க நான் விரும்புகிறேன். இந்தத் துறையைப் பொறுத்தஅளவில் நான் விமர்சனம் செய்தற்கும், பாராட்டுவதற்கும் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். என்னைப் பொறுத்த அளவில் இந்த மாமன்ற உறுப்பினர் என்ற முறையில் நடிகை ஷோபா கொலை வழக்கைப் பற்றியோ, அல்லது இந்திரா நகர் பிரேமா கொலை வழக்கைப் பற்றியோ கவலை இல்லை ; சமுதாய மாற்றங்களுக்காகவும், ஏற்படுகின்ற கொலைக் குற்றங்கள் குறைவதற்காகவும் இந்த அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளை இந்த மாமன்றத்தின் மூலமாக எடுத்துச் சொல்வதன் மூலம் இந்த நாடு அதை விரும்பி வரவேற்கும் என்பதையும், குறைகள் இருந்திருந்தால் அந்தக் குறைகள் எந்த அளவிற்குக் குறைந்து, குற்றங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்காக எந்த அளவிற்கு விஞ்ஞான அறிவியல் துறை இந்தத் துறையில் வளர்க்கப்பட்டிருக்கிறது, வேகமாக முடுக்கி விடப்பட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்கு எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குற்றங்கள் என்று பார்க்கின்றபொழுது பலருக்குப் பல விதங்களில் தோன்றினாலும் தனிப்பட்ட முறையில் ஏற்படுகின்ற ஆங்காங்கு ஏற்படுகின்ற ஒரு விழுக்காடு, இரண்டு விழுக்காடு குற்றங்கள் ஒன்றும் ஒரு சமுதாயத்தையோ அல்லது ஒரு இனத்தையோ கெடுத்துவிடாது, ஒரு நாட்டை அழித்துவிடாது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

குற்றங்கள் என்று பார்த்தால், அக்பர் தன்னுடைய சாம்ராஜ்ஜியத்தை ஆண்டபொழுது இராஜா மான்சிங் தவறு செய்

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திருக்கிறான் என்பது நமக்கு நன்றாகத் தெரியும் ; அமெரிக்காவில் வெள்ளை மாளிகையில் கூட மிகப் பெரிய குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன என்று சான்றுகள் சொல்லுகின்றன ; டெல்லி செங்கோட்டையானாலும், பக்கிங்காம் அரண்மனையானாலும், கிரெம்ளின் மாளிகையாக இருந்தாலும் பல துப்பாக்கித்துரைத்தனங்களுக்கு ஆளாக்கப்பட்டதற்குப் பிறகுதான் மிகப் பெரிய மறுமலர்ச்சி உண்டாகியிருக்கிறது ; இந்தத் துறை மேம்பாடு அடைந்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கூறிய குற்றச்சாட்டுக்களை எண்ணிப்பார்க்கும்பொழுது இது ஒரு அரை விழுக்காடுகூட இந்த சாம்ராஜ்யத்தில், இந்த இந்தியாவில், தமிழகத்தில் இல்லை என்பதையும், அவர் குறிப்பிட்டுக் கூறிய குற்றச்சாட்டுகள் விசாரிக்கக்கூடிய தன்மை பெறுமேயானால் அவைகளெல்லாம் ஆதாரமற்றவை என்பது தெரியவரும் என்பதையும் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றை இங்கே சொல்ல வேண்டுமென்றால், சிதம்பரம் டி.எஸ்.பி., ஒரு பெண்ணைக் கற்பழித்துக் கொன்றதாக ஒரு அவதூறான, உண்மைக்குப்புறம்பான செய்தியை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பெண்ணின் பெயர் என்னவென்று நான் கேட்டபோது அவர் சொல்ல மறுத்துவிட்டார். அந்தப் பெண்ணின் தந்தை பெயர் என்னவென்று கேட்டபோது அவர் சொல்ல மறுத்துவிட்டார். அந்தப் பெண் உயிரோடு இருக்கிறாளா, இல்லையா என்று கேட்டபோது அதையும் சொல்ல மறுத்துவிட்டார். ஆகவே, ஆதாரங்கள் இல்லாத குற்றச்சாட்டு என்ற அடிப்படையில் இந்தத் துறையின்மீது சொல்வது மிக மிக சுலபமாகும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன்.

வளர்ந்துவரும் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்றவாறும், நாகரீக அமைப்புகளின் மாற்றத்திற்கு ஏற்றவாறும், குற்றங்கள் நவீனமான பிரிவுகள் பெறுகிறது என்பதை நாம் நன்கு அறிவோம். இன்று இந்தியாவைப் பொறுத்த அளவு அது தமிழகமானாலும், ஆந்திரமானாலும், உத்திரப்பிரதேசமானாலும், டில்லியானாலும், பீஹாரானாலும், பெருகி வருகின்ற மேலை நாட்டு நாகரீகங்கள், மேலை நாட்டு சினிமாப் படங்கள், இந்திப் படங்கள் இவைகள் மூலமாக, தமிழ்நாட்டில் கூட வினோதமான குற்றச்சாட்டுகள் பெருகி வருகின்றன என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். எந்த அளவிற்கு மேலை நாட்டு நாகரீகமும், எந்த அளவிற்கு ஆங்கிலப் படங்களும், எந்த அளவுக்கு இந்திப் படங்களும் அந்தக் குற்றத்தை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்வதற்கு நேரம் போதாது என்ற காரணத்தால்

அந்தக் குற்றங்களை நவீன முறையில் தடுப்பதற்கு அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குற்றமென்பது நலிந்து கிடக்கின்ற சமுதாயம் ஆயுதம் தாங்கிய புரட்சியின் மூலம் அவர்கள் அபிலாஷைகளைத் தீர்த்துக்கொள்ள முயற்சி செய்கிறபோது காவல் துறை அதைச் சமாளிக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நலிந்த சமுதாயம் என்றாவது ஒரு நாள் அதைக் காட்டிக்கொள்ள முடியாமல், ஊமைப் புரட்சி நடத்தும்போதுதான் காவல் துறை கவனமாக இருக்கவேண்டுமென்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று தமிழ்நாட்டில் அந்த ஊமைப் புரட்சி பலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திற்கு எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தச் ஊமைப் புரட்சியைப் போக்கத்தான் அந்த வறுமைக்கோட்டிற்குக் கீழே வாடிக்கொண்டிருக்கிறவர்களின் மனதில் தேங்கிவிட்ட ஆசைகள் நிராசைகளாக மாறிவிட்ட பிறகு மனச்சாட்சிக்குவிரோதம் இல்லாமல் அவர்கள் ஏதாவது செய்துவிடுவார்களா என்ற அச்சம் தமிழகத்தில் ஏற்பட்ட பிறகு தான் நாம் தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம், சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம், அதே நேரத்தில் நாம் குடும்பத்தில் ஒருவருக்கு வேலைத் திட்டம் என்று கொண்டுவந்திருப்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாய சீர்திருத்தம் என்பதும், சமுதாயத்தின் நிலையை உயர்த்துவது என்பதும், சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகளைச் சமாளிப்பது என்பதும் ஒரு அரசு எடுக்கின்ற திட்டங்களின் மூலம் அது நிறைவேற்றப்படுகிறது என்று சொன்னால், குற்றங்கள் அங்கே குறையும் என்பதற்கு உதாரணமாக நான் ஒன்றைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதையெல்லாம் நான் சொல்வதற்குக்காரணம்—ஏதோ தமிழ்நாட்டில் ஜாதிச் சண்டைகள் அதிகமாகவும், தமிழ்நாட்டில் கெடுபிடிகள் அதிகமாக இருப்பதுபோல் பல பேர் இந்த மாமன்றத்தில் குற்றச்சாட்டுக்களை எடுத்துச்சொன்னார்கள். இன்று இந்தியாவிலே வருகிற ஒரு பிரபலமான பத்திரிகையான '' சன்டே '' ஒரு புள்ளி விவரத்தைத் தந்திருக்கிறது. அந்தப் புள்ளிவிவரத்தின்படி நாம் பார்ப்போமேயானால், பீஹாரைவிட, மகாராஷ்டிரத்தைவிட, உத்திரபிரதேசத்தைவிட, கர்நாடகத்தைவிட, கேரளாவைவிட, ஏன் மேற்கு வங்காளத்தைவிடக் கூட, நம்



முடைய நாட்டில் ஜாதிச் சண்டைகள் குறைந்து வந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

1978-79 இல் இந்த மாமன்றத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் சில கோரிக்கைகளை திட்டங்களாக அறிவித்தார்கள். அந்தத் திட்டங்களின் அடிப்படையில் ஏற்பட்ட மாற்றங்கள், வேகமான வளர்ச்சிகள், அந்த வளர்ச்சியின் அடிப்படையில் இந்தப் புரட்சிக்கு ஏற்பட்ட அனுபவம்தான் இன்று மிகப் பெரிய நிலைமையை அடைந்திருக்கிறது என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் நிலையங்களில் பெண்களை விசாரிக்க பெண்களையே நியமிக்க வேண்டுமென்று 1979-ல் புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். மாநகராட்சி, நகராட்சி எல்லைக்குட்பட்ட காவல் நிலையங்களுக்கு தட்டச்சு பொறி இயந்திரம் வழங்கியது, சைக்கிளில் செல்ல இருவரை அனுமதித்தது, காவல்துறைக்கு ஜீப்புகள் கொடுத்தது, மோட்டார் சைக்கிள்களை கொடுத்தது, காவல்துறையில் பணியாற்றும் இளம் ஆய்வாளர்களுக்கு மேலுள்ளவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை போன்ற வசதி வாய்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று ஏற்பட்டிருக்கின்ற நவீன முறை, நவீன மாற்றம் காவல்துறையில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற சலுகைகள் எந்த மாநிலத்திலும் இல்லை என்பதையும் அந்த நிலையில் தான் இவைகள் பலம் பொருந்திய துறையாக அமைந்திருக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியம் இந்த ஆண்டு இந்த மாமன்றத்தில் விவாதத்திற்கு வரும்பொழுது நாடு கடுமையான வறட்சிக்கு ஆளாகியிருக்கிறதுஎன்பதை நாம் நன்கு அறிவோம். இதில் யாருக்கு மரியாதை கிடைக்கிறது இந்தத் துறையின் மூலம் , யாருக்கு மரியாதை இல்லை என்ற பிரச்சினைக்கே இடமில்லை என்பதையும் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் கூறும்போது கூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை கண்ணியமாக நடத்துங்கள் என்று சொன்னார்கள். இந்த மாமன்றத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூட நான் அதிகாரியைச் சந்தித்து விசாரித்து விமான நிலையத்தில் என்ன நடந்தது என்பதை

கேட்டு, விசாரித்து இங்கே சொல்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் 10 ஆண்டுக்காலம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இந்த அமைப்பு இங்கே எதிர்க்கட்சியாக இருந்தபோது மக்கள் செல்வாக்கைப் பெற்ற ஒரு தலைவராக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இருந்தபோது அவர்கள் தலைமையில் பணியாற்றிய நாங்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தபோது நாங்கள் அன்று இருந்த ஆளும்கட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் மத்தியிலே எவ்வளவு கேவலப்படுத்தப்பட்டோம் என்பதும், எவ்வளவு கொடுமைக்கு ஆளாக்கப்படுத்தப்பட்டோம் என்பது எவ்வளவு துயரங்களை நாங்கள் சந்தித்தோம் என்பது இந்த மன்றத்தில் இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் அறிந்த ஒன்று என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மன்றத்தில் மற்றவர்களைப் பார்க்கும்போது, இந்தத் தவறு செய்த காரணத்தினால்தான் இந்த நிலை ஏற்பட்டது என்பதையும், இந்தத் தவறைச் செய்யாதிருந்தால் நாம் நல்ல நிலையிலே இருக்கமுடியும் என்ற அடிப்படையில் இன்று ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இன்றைய ஒரு சூழ்நிலையில் நண்பர்கள் யார், எதிரிகள் யார்என்ற ஒருநிலைகூட இந்த ஆட்சிக்கு, இந்த அரசுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரியாத ஒரு சூழ்நிலையில் இந்த மன்றத்தில்இந்த மானியக் கோரிக்கை வந்திருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நண்பர்கள் யார், எதிரிகள் யார் என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இந்த நாட்டில் தெரியாத நிலையில் இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி இருக்கிறது என்று நான் சொல்வதற்குக் காரணம் எரிகின்ற வீட்டில் பிடுங்கிய மட்டும் லாபம் என்ற அடிப்படையில் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற வறட்சியைப் பயன்படுத்தி, சட்டம் ஒழுங்கு கெடாதா என்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் ஒரு பகிரங்கமான ஒரு குற்றச்சாட்டை இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்களின் வாயிலாக நான் துணைத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இன்று கிராமங்களில், நகரங்களில் உள்ள குடிசைகளை சமுதாய விரோதிகளிடமிருந்து இந்த அரசும், இந்தக் காவல்துறையும் காப்பாற்ற வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். காரணம் குடிசைகளுக்கு தீ வைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை சமுதாய விரோதிகளால், ஒருசிலரின் தூண்டுதலினால் நாடு முழுவதும் பரவலாகச் செய்ய வேண்டுமென்ற ஒரு சதித்திட்டம் இருக்கிறது என்பதை கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்களின் மூலமாக எங்களைப் போன்றவர்கள் அறிந்திருக்கி



றோம். அப்படிப்பட்ட ஒரு நிலையை இந்த அரசுக்கு உண்டாக்கி, சட்டம் ஒழுங்கைக் கெடுக்கக்கூடிய முறையில் இந்த வறட்சிநிலை பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் இதை காவல்துறை கண்காணிக்க வேண்டும் என்றும் இந்த நேரத்தில் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். ஒன்றை மாத்திரம் நான் பணிவோடு, தன்னடக்கத்தோடு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். புரட்சித் தலைவரிடமிருந்து இந்தக் காவல்துறையைப் பொறுத்தவரையில் எந்த அதிகாரம் வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அந்த அதிகாரத்தைப் பெறுகின்ற இந்தத் துறையைச் சார்ந்தவர்களைப் பற்றி நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்வதில் தவறு இல்லை என்று கருதுகிறேன். அதிகாரத்தைப் பெற முயற்சி செய்யும்போது, எந்த நோக்கத்திற்காக அந்த அதிகாரத்தை முதல்வரிடமிருந்து பெற வேண்டுமென்று விரும்புகிறார்களோ, எந்த நோக்கத்திற்காக முதல்வர் அவர்கள் அந்த அதிகாரத்தைத் தருகிறார்களோ, அந்த அதிகாரத்தை அதற்காகத்தான் பயன்படுத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதிகாரம் எந்த அளவிற்கு புரட்சித் தலைவரிடமிருந்து எதிர்பார்க்கிறீர்களோ அந்த அளவுக்கு இந்த நாட்டினுடைய முதல்வராக, இந்தத் துறையினுடைய தலைவராக இருக்கின்ற புரட்சித் தலைவர் புகழைக் காக்க நீங்கள் அந்த அதிகாரத்தை பயன்படுத்தாவிட்டாலும், அவர்கள் உயிரெனக் கொண்டிருக்கின்ற அண்ணாவின் கொள்கைகளுக்கு, இந்தச் சமுதாய மாற்றத்திற்காக உழைக்க வேண்டும் என்ற நிலையை நீங்கள் ஏற்படுத்தித்தரவேண்டும் என்றும் இந்த நேரத்தில் நான் பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். சமுதாய மாற்றத்திற்காக இந்தத் துறை எப்படிப்பயன்பட வேண்டும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை என்று சொன்னாலும் இந்த சமுதாய மாற்றம் என்பதை இந்தக்காவல் துறையின் மூலம் மாற்றமுடியுமா என்றுசொன்னால் முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். குற்றவாளிகள் சமுதாயத்தில் வெறும் குற்றவாளிகளாக மாத்திரம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கிரிமினல் குற்றங்கள் செய்வதும், அல்லது திருடுவதும்தான் குற்றம் என்று கருத வேண்டாம் என்பதை நான் காவல் துறையினரைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இன்று வறட்சிப் பணிகளில் தீவிரமாக ஈடுபடும்போது இந்த வறட்சிப் பணிகளை தடங்கல் செய்யும் விதத்தில் , வீதிகளில் பொதுமக்கள் தண்ணீர் கேட்கிறார்கள் என்ற அடிப்படையிலே குற்றத்தை ஒருசிலர் தூண்டிவிடுகின்ற காரியத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதையும், தன்னிறைவு திட்டங்களை நிறைவேற்றுகின்ற பணிகளைத் தடங்கல் செய்யக்கூடிய விதத்திலும் பல நிலைமைகள் ஏற்படுகின்றது என்பதையும் அதைத் தடுக்க வேண்டிய ஒரு நிலைமை இந்தக் காவல் துறைக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்,

காட்டினார்கள். சிதம்பரம் டி. எஸ். பி. ஒரு பெண்ணிடம் முறைகேடாக நடந்துகொண்டார் என்று ஒரு குற்றச்சாட்டை கடந்த ஆண்டில் இந்த அவையில் கலைஞர் அவர்களும், நண்பர் சித்தன் அவர்களும் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் பதில் தந்த நேரத்தில் அவர் சொல்லியிருக்கிறார். ''கலைமதியை காவல் துறை கண்காணிப்பாளர் மறுநாள் காலை அடித்து இருக்கிறார். கலைமதியின் தந்தையையும் அடித்து இருக்கிறார். பின்னர் விடுவிக்கப்பட்டார். அவமானம் தாங்காமல் மண்ணெண்ணெய் ஊற்றி தீவைத்துக்கொண்டு தற்கொலை செய்ய முயன்றார் என்று தெரிடவருகிறது'' என்று முதலமைச்சர் அவர்கள் இங்கே ரிப்போர்ட்டிலே குறிப்பிட்டு இருக்கிறார். ஆனால் எனக்குக்கொடுத்த தகவல் அவர் தற்கொலை செய்து கொள்ளமுயற்சித்தாலும் கூட சாகவில்லை, உயிரோடு இருப்தாகச் சொல்கிறார்கள். ஆகவே, அந்த வகையில் என் பேச்சை திருத்தவேண்டும் என்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த வகையில் திருத்த உத்தரவிடுகிறேன்.

(பிற்பகல் 12-10)

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் தந்ததற்கு நன்றி. 'இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பிரச்சனைகளை நியாயமான முறையிலே அணுகவேண்டும். 1974—75 ஆம் ஆண்டில் எதிர்க்கட்சியாக இருந்த அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத்தின் தானைத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்த நடவடிக்கை என்ன? அப்போது புரட்சித் தலைவர் அவர்களின் குணத்தை வைத்தோ அல்லது பொதுமக்களைக் கூட்டியோ ஆங்காங்கே மறியல் நடத்தினோமா? போக்குவரத்தை நிறுத்தினோமா? எந்தவிதமான தவறான காரியத்தையும் அன்றைக்கு தமிழ்நாட்டில் வறட்சி ஏற்பட்டபோது நாங்கள் செய்யவில்லை. அன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் எங்களுக்கு இட்ட ஆணை என்னவென்றால் எங்கெங்கே வறட்சி இருக்கிறதோ அங்கெல்லாம் அண்ணா திராவிடமுன்னேற்ற கழகத்தினர் உண்டி வசூல் செய்து, கஞ்சித் தொட்டி வைத்து, கிராமப்புறகளிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு கஞ்சி ஊற்ற வேண்டுமென்பது. அதைத்தான் செய்தோம். ஆனால் இன்றைக்கு என்ன செய்கிறார்கள்? வறட்சியை முன்னிட்டு மக்களைத் தூண்டிவிட்டு, மிகப்பெரும் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதைப் போலவும் பஞ்சத்தால் பட்டினிச் சாவு ஏற்பட்டதைப்போலவும் சொல்லி, அதைக் கண்டிக்கின்ற வகையிலே ஆங்காங்கே மறியல் போராட்டம்





நடத்தி, சட்டம் ஒழுங்கு கெடக்கூடிய சூழ்நிலைகளை ஏற்படுத்தி வருவது நியாயம்தானா என்பதை எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறைக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள்; தவறுகளைக் கண்டுபிடிப்பதில் அரசுக்கு உதவுங்கள். அன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் கஞ்சித் தொட்டி வைத்து எல்லாக் கிராமங்களிலும் கஞ்சி ஊற்றியதைப்போல நீங்கள் கஞ்சி ஊற்றாவிட்டாலும் கெஞ்சி அழுது கொண்டிருக்கும் மக்களுக்கு வறட்சியைப் போக்க அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. சோ. அழகர்சமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதமைச்சர் அவர்களால் இந்த அவையிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற காவல் துறை மானியத்தின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

காவல் துறை சம்பந்தமாக ஏற்கெனவே பல்வேறு சந்தர்ப்பங்களிலேயும் வேறுபல மானியங்களின்மீது பேசும்போதும் பல விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் பூங்காவனம் அவர்களும் வடாற்காடு மாவட்டத்தில், தர்மபுரி மாவட்டத்தில் போலீஸ் நடவடிக்கை சம்பந்தமாக பல விவரங்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள்.

இந்த அறிக்கையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல விவரங்களை வரிசையாகச் சொல்லியிருக்கிறார்கள். எத்தனை இடங்களில் களவுகள் நடந்திருக்கின்றன, என்ன என்ன குற்றங்கள் நடத்திருக்கின்றன என்று சொல்லி, அது சம்பந்தமாக எடுத்த நடவடிக்கைபற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இரண்டாவது பாராவில் மக்களின் நண்பர்களாகவும் சிக்கல்களைத் தீர்க்கும் உதவியாளர்களாகவும் குற்றங்களை நீக்கப்பணியாற்றுபவர்களாகவும் சமுதாயத்தில் ஒழுங்கும் அமைதியும் நிலவச் செய்பவர்களாகவும் காவல் துறையினர் தங்கள் கடமைகளை நிறைவேற்றி வருவது ஒரு வளர்ச்சி நிர்வாகத்தின் தேவையாக அமைகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது இதற்கு நேர்மாறாக இருக்கிறது.

இன்றைக்கு நாட்டில் சாதாரண உழைக்கும் மக்கள் தங்களுடைய கோரிக்கைகளை எடுத்துச் சொல்வதற்காக, தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அரசாங்கத்திடம் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்துவதற்சாக பல்வேறு

இந்தக் காவல்துறையைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் காவல்துறை பலம் பொருந்தியதாக இருக்கின்ற வகையில் அதற்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ள கருவிகளின் அடிப்படையிலும், அந்தத் துறையில் இருக்கும் ஊழியர்களுக்கு செய்துள்ள வசதிகளின் அடிப்படையிலும் இந்த அரசு செய்துகொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இத்தகைய சிறப்பு மிக்க இந்தத் துறையில் ஆங்காங்கு ஏற்படுகின்ற ஒரு சில குறைகளை மாத்திரம் சுட்டிக்காட்டி இந்தத்துறையின் வளர்ச்சி குன்றிப்போய் விட்டது, இந்தத் துறை மேம்பாடு அடையவில்லை என்று சொல்வது உள்ளபடியே அந்தத் துறையில் ஆர்வத்தோடு பணியாற்றுகின்றவர்களைத் தடை செய்வது போல் ஆகிவிடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று ஏற்பட்டு இருக்கின்ற நெருக்கடி, ஏற்பட்டு இருக்கின்ற வறட்சி, ஏற்பட்டு இருக்கின்ற பற்றாக்குறை, ஏற்பட்டு இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டம், இவைகளையெல்லாம் நாம் சந்திக்க வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு இருப்பதற்குக் காரணம், கடந்த ஆட்சியில் இருந்தவர்கள் செய்த தவறுகள் தான் என்று சொன்னாலும், அவைகளைச் சமாளிக்கும் வகையில் இந்த அரசு செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றது, அதனால்தான் இந்த அரசு எடுக்கும் தீவிர நடவடிக்கைகளுக்கு, இந்த அரசு எடுக்கும் நல்ல முயற்சிகளுக்கு பொதுமக்கள் ஆதரவு தந்து கொண்டு இருக்கிறார்கள். அதன் காரணமாகத் தான் போராட்டங்கள் என்ற பெயராலும், ஆர்ப்பாட்டங்கள் என்ற பெயராலும், மறியல் என்ற பெயராலும், நாட்டு மக்களைத் தட்டி எழுப்ப யார் முயற்சித்தாலும் அதற்கு ஆதரவு கிடைப்பது இல்லை. இந்த அரசு மக்கள் எதை நினைக்கிறார்களோ அதைத்தான் துணிந்து செய்து கொண்டு இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். அந்த வகையில்தான் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறை நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்ற அடிப்படையில் இதை 3-ஆகப் பிரித்து, குற்றம் மற்றும் ஒழுங்கு என்ற அடிப்படையிலும், ஆயுதப் படை என்ற அடிப்படையிலும், மது விலக்குப் பிரிவு என்ற அடிப்படையிலும் பிரித்து இருப்பதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.





வீர மரணம் அடைந்தவர்களின் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் வழங்கப்படும் என்று 1978-79-ல் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதை நிறைவேற்றி வருவதற்காக நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், அது மாநகராட்சி என்ற முறையில் வளர்ந்து வருகின்ற காரணத்தால், அந்த மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் இன்று ஏற்படுத்தப்பட்டு இருக்கும் வசதிகள் போதுமானதாக இருந்தாலும இன்னும் 2—3 காவல் நிலையங்களை அங்கே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கோவை நகர எல்லைக்குட்பட்ட சொக்கப்பனூர் வீட்டு வசதி வாரியப் பிரிவிலும், செல்வபுரம் பகுதியிலும், காட்டூர் பகுதியிலும் காவல் நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

துல்லியமாகச் செயல்படுகின்ற பணியில் ஈடுபடக்கூடிய நிலை இன்றைக்கு காவல் துறை பணியாற்றி வருவதற்காக நான் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு பெரிய துறையில் ஒரு சில குற்றங்கள் ஏற்படுவது இயல்புதான் என்றாலும் அந்தக் குற்றங்களை பெரிதுபடுத்திப் பேசிவிட்டு, அந்தத் துறை எப்படிப்பட்ட நியாயமான முறையில் செயல்பட வேண்டும் என்ற நிலை உருவாக்கும் வகையில் இந்த மாமன்றத்தில் பேசாமல் விட்டுவிடுவது அந்தத் துறையை தவறான முறையில் அடையாளம் காட்டுவதாக அமையும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் தமிழ் நாட்டில் செயற்கைப் பஞ்சம் உருவாக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லிவிட்டு, அதற்காக எந்தவிதமான தகவலையும் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறார்கள். செயற்கைப் பஞ்சத்தை உருவாக்கிவிட்டு பிரதம அமைச்சரிடத்தில் மனு கொடுத்து இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். அந்த மனுவில் அவர்கள் கட்சி எம்.பி. கையெழுத்துப்போடவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். பஞ்சத்தில் செயற்கை பஞ்சம், பஞ்சம் என்பது இல்லை. இன்றைக்கு ஏற்பட்டு இருக்கும் வறட்சி நிலையைப் போக்க நாம் நல்ல முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் ; மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நான் பேசிய பேச்சிலே ஒரு சிறு திருத்தம் செய்து கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு சகோதரர் கோவைத்தம்பி அவர்கள் கூட அதைக் கோடிட்டுக்

கூடாது என்று மறியலையே செய்யக்கூடாது என்று சொல்லக் கூடிய ஹிட்லர் ஆட்சியில் செய்வதுபோல் செய்வது சரியல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல 22—4—1982 அன்று சுமார் 50 பேர் கொண்ட தமிழ் நாடு விவசாயிகள் சங்கத்தினர் இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூரில் உள்ள வட்ட ஆட்சியர் அலுவலகத்தினுள் நுழைய முயன்றனர். அவர்கள் காவலர்கள் மீது கற்களை எறிந்து கலைந்து செல்ல மறுத்தனர். அதன் பிறகு காவலர் கூட்டத்தினரை சிறிதளவு தடியடி செய்து கலைத்தனர். ........ என்று சொல்லி மேற்கொண்டும் சில விஷயங்களை சொல்லியிருக்கிறீர்கள். 50 பேர்கள் வட்ட ஆட்சியர் அலுவலகத்துக்குள் நுழைய முயன்றனர் என்றால் எங்களைக் கைது செய்யுங்கள் என்ற பொருளில் தான் அவர்கள் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். அவர்களைக் கைது செய்து வழக்கு போட்டு நடவடிக்கை எடுக்க வேண்டியதுதானே? ஏன் கலைந்து செல்லும்படி கோருகிறீர்கள்?

அதேபோல இன்னொரு நடவடிக்கை—அது குறித்து 'பல்வேறு விவசாயிகள் சங்கத்தினரின் கூட்டு நடவடிக்கை குழுவின் தீர்மானத்தினையொட்டி சுமார் 400 பேர்கள் சின்னசாமி கவுண்டர், முத்துசாமி கவுண்டர் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஆகியோரின் தலைமையின் கீழ் விவசாயிகள் மீது எடுக்கப்பட்ட ஜப்தி நடவடிக்கைகளை கண்டித்து சென்னையில் மூர்மார்க்கெட்டிலிருந்து தலைமைச் செயலகத்தினை நோக்கி ஊர்வலம் சென்றனர். அவர்கள் கடற்கரைச் சாலையில் உழைப்பாளர் சிலையின் அருகில் காவலரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். ஆனால் அவர்கள் தடை உத்தரவை மீறி முன்னேறிச் செல்ல முயன்றனர். திரு. எஸ். அழகிரிசாமி எம். எல். ஏ., திரு. எஸ். சிவசாமி, எம். ஏல். ஏ., திரு. என். வரதராசன் எம். எல். ஏ., திரு. சின்னசாமி கவுண்டர், திரு. முத்துசாமி கவுண்டர், உட்பட 322 பேர்கள் காவலரால் கைது செய்யப்பட்டனர்..' என்று போட்டுவிட்டு தொடர்ந்து அதை விவரித்து இருக்கின்றனர்.

இதிலே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், நாங்கள் ஊர்வலமாகப் போகிறோம் என்று சொன்னால் மறியல் செய்யப்போகிறோம் என்று சொன்னால், அதை ஏன் நீங்கள் தடை செய்கிறீர்கள்? அன்று எங்களைக் காவலர்கள் வழி மறித்து கலைந்து செல்லுமாறு கேட்டுக் கொண்ட போது நாங்கள் கலைந்து செல்ல மறுத்து, எங்களைக் கைது





செய்து கொள்ளுங்கள் என்றோம், அதற்கு அவர்கள், முடியாது கலைந்து செல்லுங்கள், உங்களைக், கலைக்கத்தான் உத்தரவு, கைது செய்ய எங்களுக்கு உத்தரவு இல்லை என்று அன்றைக்கு சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்களும், சிவசாமி அவர்களும், நானும் அன்றைக்குச் சொன்னோம், நாங்கள் கலைந்து செல்ல முடியாது, எங்களைக் கலைப்பதனால், எங்களை அடித்துக் கலையுங்கள்

(பிற்பகல் 12—20)

நாங்கள் ரத்தம் சிந்துவோம், இந்த இடத்தை விட்டுப் போக மாட்டோம் என்று சொன்னதற்குப் பிறகு அரை மணி நேரம் கழித்த பின் மேலே உள்ள அத்தனை அதிகாரிகளையும் கேட்டுக் கொண்டதற்குப்பிறகு கடைசியாக உங்களைக் கைது செய்கிறோம் என்று சொன்னார்கள், நாங்கள் எந்தவிதமான பலாத்காரத்திலும் ஈடுபடவில்லை. ஊர்வலமாகச் சென்று நாங்கள் மறியல் செய்யப்போகிறோம் என்று சொன்னோம். ஆனால் கைது செய்ய மாட்டோம், அடித்து விரட்டுவோம் என்று சொல்லக் கூடிய ஒரு நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கிறது என்றால் அது எங்கே கொண்டு போய் விடும்? சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, சட்டம் ஒழுங்கைக் கெடுக்கக்கூடிய சூழ்நிலை தான் அதனால் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜனநாயக நாட்டிலே தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, விவசாயிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் போராட்டம் நடத்துவது சட்டத்திலே வழங்கப்பட்ட உரிமையின் அடிப்படையிலேதான். அப்படிப்பட்ட போராட்டங்கள் வருகின்ற போது உங்களுடைய அணுகு முறை மிகவும் மோசமாக இருக்கின்றது. அந்தப் போராட்டங்களைத் தடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. நம்முடைய முன்னாள் கவர்னர் தர்மவீரா அவர்களுடைய தலைமையில் போலீஸ் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த போலீஸ் கமிஷனுடைய அறிக்கை பாராளுமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. அது ஒன்றன்பின் ஒன்றாகப் பத்திரிகையில் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே இந்த ஜனநாயக நாட்டில் போலீஸ் நடவடிக்கை எப்படி இருக்கவேண்டும் என்றால் மக்களை நேசமாக நினைக்கவேண்டும், மக்களிடையே வரக்கூடிய சச்சரவுக்களைத் தீர்த்துவைக்கக்கூடிய சேவை மனப்பான்மையோடு அது இயங்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு அமைப்பாக இருப்பதற்குப் பதிலாக, பழைய காலங்களில் இருந்த மாதிரி அடித்து நொறுக்குவது, பயமுறுத்துவது என்ற நிலைமை இப்போது வந்திருக்கிறது. அந்த நிலைமை மாற்றப்பட்டாக வேண்டும். இல்லை என்றால் மிக மோசமான நிலைமைக்குக் கொண்டுப்போய் விட்டுவிடும்.

இயக்கங்களை வைத்து, கிளர்ச்சியில் ஈடுபடக்கூடிய காலகட்டமாகும். இப்படி ஒரு ஜனநாயக நாட்டில் தங்களுடைய ஜனநாயக உரிமைகளைப் பெறுவதற்காக கிளர்ச்சியில் ஈடுபடும்போது போலீஸ் நடந்துகொள்ளுகின்ற முறையைப் பார்க்கும்போது, அந்நியர் ஆட்சியில் வெள்ளைக்காரன் ஆட்சியில் எப்படி போலீஸ் நிர்வாகம் உரிமைக்காக மக்கள் போராடும்போது எப்படி கொடுமையான அடக்கு முறைகளைக் கையாண்டதோ அதே மாதிரி நடவடிக்கை இன்றைக்கும் தொடருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுசம்பந்தமாக சில உதாரணங்களைப் பின்னால் சொல்லத் தயாராக இருக்கிறேன். நேற்று நடைபெற்ற சம்பவத்தைக்கூட இன்று காலை இங்கே கிளப்பினார்கள். ஆகவே, மக்கள் தங்களுடைய ஜனநாயக உரிமைகளைப் பெறுவதற்காக, இருக்கின்ற உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஊர்வலம் செல்வதற்கோ அல்லது அரசாங்க அலுவலகங்கள் முன்னால் மறியல் செய்வதற்கோ சகல உரிமையும் படைத்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை.

அந்த வகையிலே மக்கள் ஊர்வலம் செல்லும்போதோ, மறியல் செய்யும்போதோ, இதுபோன்ற நடவடிக்கைகளில் அந்த மக்களுடைய இயக்கங்கள் பங்குகொள்ளக்கூடிய நேரத்தில் அந்தக் காரியத்தைச் செய்யவிடாமல், கூட்டம் நடத்த விடாமல் ஆரம்பத்திலேயே அடித்து விரட்டுவது அல்லது வேண்டுமென்றே தடியடி, கண்ணீர்ப்புகை வெடித்தல் போன்ற கொடுமையான காரியங்கள் மூலம் கூட்டத்தைக் கலைப்பது போன்ற காரியங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆரம்ப காலத்திலிருந்தே தொடர்ந்து 1982 ஜனவரி முதல் டிசம்பர் வரை நடைபெற்ற பல சம்பவங்கள் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படிச் சொல்லப்பட்டதிலே, பல முக்கியமான சம்பவங்களிலே, சில சொல்லப்படவில்லை. இன்றைக்கு நான் கேட்டுக் கொள்ளவிரும்புவது என்னவென்றால் எத்தனை போலீஸ் காவல் நிலையங்களில் தற்கொலை செய்து கொண்டார்கள் என்று சொல்லி, காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றவர்கள் எத்தனை பேர் பிணமாக வெளியே அனுப்பப்பட்டார்கள் என்ற விவரம் கூட இதிலே சொல்லப்படவில்லை. அது மட்டும் அல்லாமல் கடந்த காலத்திலே நடந்த பல போராட்டங்கள் சம்பந்தமாகவும் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது, நான் முதலிலேயே அதைப்பற்றிச் சொன்னேன். அந்தப் போராட்டங்கள் நடைபெற்ற காலத்தில் எப்படி அந்த போராட்டங்களை நீங்கள் தடுத்தீர்கள், எப்படி அவைகளைப் போலீசைக் கொண்டு அடக்கினீர்கள் என்று சொன்னேன்.

19—1—1982 அன்று நாடு பூராவும் இந்தியா பூராவிலும் தொழிலாளர்கள் எடுக்கக்கூடிய பிரத்யேகமான கோரிக்கையாக பொதுவான கோரிக்கையாக, நாடு முழுவதும் வாழக்கூடிய மக்களின்





கோரிக்கையாக, விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும், தொழிலாளர்களுடைய அடிப்படை உரிமையான போராடக்கூடிய, வேலைநிறுத்தம் செய்யக்கூடிய அந்த உரிமைகளைப் பறிக்கக்கூடாது, அதேபோல தமிழ்நாட்டிலுள்ள அத்தனை கோடி மக்களுக்கும் நியாயமான விலையிலே அத்தியாவசியமான பொருள்கள் எல்லாம் வினியோகிக்கப்பட வேண்டும் என்கிற பொதுவான கோரிக்கைகளை வைக்கிற நிலைமையிலே இந்தியா பூராவிலும் கிளர்ச்சி ஏற்பட்டு, படிப்படியாக அது வளர்ந்து 19-ம் தேதியன்று நாடு பூராவிலும் ஒரு நாள் வேலை நிறுத்தம் என்று செய்யப்பட்டது. எல்லா அரசியல் கட்சிகளும் செய்தன. எல்லா மக்களும் அதில் கலந்து கொண்டனர். அந்த வேலை நிறுத்தம் நடைபெற்றபோது போலீசார் அத்துமீறி தஞ்சை மாவட்டத்திலே 3 விவசாயத் தொழிலாளர்களை சுட்டதோடு மட்டுமல்லாமல், அந்த வட்டாரம் பூராவும் உள்ள மக்கள் அனைவரும் காரணம் இன்றி துன்பப்படுத்தப்பட்டனர். அத்தோடு கூட அவர்கள் மீது போடப்பட்ட 50-க்கும் மேலான வழக்குகள் இன்றும் கூட வாபஸ் வாங்கப்படாமல் இருக்கிறது. அதே மாதிரி பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆனால் அதுபற்றிய விவரம் இதில் இல்லை.

அத்தோடு விவசாயிகள் மீது நடவடிக்கைகளை இவர்கள் எப்படி எடுத்திருக்கிறார்கள் என்றால் இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது—'தென்னாற்காடு மாவட்டம் கடலூரில் உள்ள மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் நோக்கி ஊர்வலம் சென்று கொண்டிருந்த விவசாயிகள் 15—4—1982 அன்று கலைந்து செல்லும்படி காவலரால் கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்கள் அதனை மறுத்து முன்னேறிச் சென்று கொண்டிருந்தனர். தகுந்த எச்சரிக்கைக்குப் பின் காவலர் கண்ணீர்புகைக்குண்டுகளை வெடித்து கூட்டத்தினரைக் கலைத்தனர். அதே நாளில் தஞ்சாவூரில் காவலர் குறைந்த அளவு சக்தியை உபயோகித்து தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பு வன்முறையில் ஈடுபட்ட சுமார் 200 விவசாயிகள் அடங்கிய கூட்டத்தினரைக் கலைத்தனர். இந்நிகழ்ச்சியில் 9 பேர் சிறுகாயம் அடைந்தனர். என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஊர்வலம் செல்ல வேண்டும் என்று கேட்டால், ஊர்வலம் போவதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

மறியல் செய்ய வேண்டும் என்று கேட்டால் அவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்பதற்காகவே மறியல் செய்கிறார்கள். அதை உணர்ந்து அவர்களுக்கு அனுமதியளிக்க வேண்டும். மறியல் செய்யக்கூடாது என்று நீங்கள் நினைத்தால் அவர்களைக் கைது செய்து அவர்களுக்குத் தர வேண்டிய தண்டனையை நீதிமன்றம் மூலமாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி கைதுசெய்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஊர்வலமே செல்லக் கூடாது, கோரிக்கையே வைக்கக்

(திரு. சோ. அழகர்சாமி) [1983 ஏப்ரல் 8

அதேமாதிரியாக, பல போராட்டங்கள் நடந்திருக்கின்றன. ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். பிரஜா உரிமைக் கழகத்தின் தலைவர், முன்னாள் நீதிபதி தார்குண்டே அவர்கள் ஊர்வலம் போனார்கள். அந்த நீதிபதியையே அடித்து நொறுக்கினார்கள். நீதிபதியினை அவ்வாறு அடிக்கலாமா என்று கூட இந்த அவையிலே பேசப்பட்டது. ஆகவே இப்படி நடப்பது என்பது ஒன்றிரண்டு அல்ல. தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் இளைஞர் மன்றத்தார் எங்களுக்கு வேலை வேண்டும் என்று ஊர்வலம் வந்தபோது 100 பேர்கள் அப்படி வந்தபோது அடித்து நொறுக்கி மண்டையிலே எல்லாம் காயம் ஏற்பட்டிருக்கிறது. அப்போது போடப்பட்ட வழக்குகள் கூட இன்னும் வாபஸ் வாங்கப்படவில்லை. தொடர்ந்து இப்படிப் போடப்பட்ட பல வழக்குகள் வாபஸ் வாங்கப் படவில்லை.

அடுத்து, போலீஸ் ஸ்டேஷனுக்கு விசாரணைக் கைதி என்ற நிலைமையில் அழைத்துச் செல்லப்படுகின்றவர்கள் பிண மாகத்தான் திரும்பி வருகிறார்கள். தெய்வமணி என்பவர் பற்றி ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு நடப்பது போலீஸின் அக்கிரமம் என்று சொல்வதற்குப்பதிலாக, தவறு என்று கூறி நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அவற்றை எல்லாம் நியாயப்படுத்தி அது சரிதான், நடந்தது தற் கொலைதான் என்று போலீஸ்காரர்கள் சொல்ல வேண்டி யதை, போலீஸ்காரர்களுக்குப்பதிலாக நீங்களே சொல்கிறீர் கள். அப்படியானால் அவர்களைவிட பெரிய குற்றவாளியாக நீங்கள் ஆகிறீர்கள்.

நான் இன்னும் இரண்டு சம்பவங்களைச் சொல்ல விரும்பு கிறேன். சேலத்திலே தெய்வமணி என்ற அரிசனப் பெண் சுமார் 17 அல்லது 19 வயதுடையவர். அவர் 15—3—1983 அன்று மாலை பிடித்துச் செல்லப்பட்டிருக்கிறார். அலுமினியத் தட்டு காணவில்லை என்று புகார் கொடுத்ததன் அடிப்படையில் அவர் பிடித்துச் செல்லப்பட்டு இருக்கிறார். நியாயமாகப் பார்த்தால் அந்தப் பெண்ணை போலீஸ் ஸ்டேஷனிலே வைத் திருக்கக்கூடாது. ஆனால் அழைத்துச் சென்று கற்பழித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதுபற்றி இந்தச் சட்டசபை யிலேகூட சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், இன்றைக்கு விசாரணைக்குப் பிறகு அதில் எந்தவிதமான தவறும் இல்லை, அவர் தற்கொலைதான் செய்து கொண்டார் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கி கின்றது. எனக்கு இரண்டு மூன்று சந்தேகங்கள் இருக்கின்றன. அவற்றைச் சொல்ல விரும்புகிறேன். அவற்றுக்கு மாண்புமிகு



1983 ஏப்ரல் 8] (திரு. சோ. அழகர்சாமி)

முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது விளக்க வேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பெண்களை மாலை 6 மணிக்கு மேல் காவல் நிலையத்தில் வைத்திருக்கக் கூடாது என்ற மரபு கடைப்பிடிக்கப்படும்போது காவல் நிலையத்திலே ஒரு சாதாரணத் தட்டு திருட்டுக்காக அழைத்துச் செல்லப்பட்டவரை நீண்ட நேரம் வைக்க வேண்டிய அவசியம் என்ன? தெய்வமணியை விசாரிக்கப் பெண் போலீசார் பயன்படுத்தப்படாததற்குக் கார ணம் என்ன? அந்த தெய்வமணி மாலை 6 மணிக்கு முன்பே இறந்திருந்தால் கோட்டாட்சிக்கோ, வட்டாட்சிக்கோ அல்லது வேறு அதிகாரிகளுக்கோ மாலை 6 மணிக்கு முன்பே ஏன் தெரி விக்கப்படவில்லை? தெய்வமணியின் சடலத்தை அவருடைய தாயாரோ அல்லது அவருடைய நெருங்கிய உறவினரோ கூட பிரேதப் பரிசோதனையின்போது பார்க்க ஏன் அனுமதிக்க வில்லை? இரவு 9 மணியிலிருந்து காலை 9 மணி வரையில் பிரேதப் பரிசோதனை நடத்துவது என்பது வழக்கம் இல்லை. அப்படி இருக்க தெய்வமணியின் பிரேத பரிசோதனை இரவு நேரத்தில் நடப்பதற்குக் காரணம் என்ன? மேலும் தெய்வமணி தூக்கிலிட்டுக் கொண்டார் என்று கூறப்படுகின்ற லாக் அப் அறை மிக விநோதமான அமைப்புடையது, 8 அடி நீளம் 6 அடி அகலம் 4 அடி உயரம் உள்ள அறை.

அந்த அறையில் எப்படி தூக்குப் போட்டு சாகமுடியும் என்று அந்த அறையைச் சென்று பார்த்தவர்கள்—சர்வ கட்சியையும் சார்ந்தவர்கள், எல்லாக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் எல் லாம் நேரில் சென்று இவ்வளவு அக்கிரமங்கள் நடந்து இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. இன்றைக்கு அது சம்பந்தமாக இதை எப்படிப்பார்த் தாலும் இது ஒரு பயங்கரமான படுகொலை, கற்பழிப்பு, இந்தக் குற்றத்திற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது மாத்திரம் அல்ல இதற்கு ஒரு நீதி விசாரணை வேண்டும் என்று சகல கட்சியினரும் கேட்கிறார்கள். நீதி விசாரணை வைக்க வேண்டும். ஏன் என்றால் அங்குள்ள அதிகாரிகளை விசாரிக்க வேண்டியிருக்கிறது. அங்குள்ள அதிகாரிகள் சொல்வார்கள் அது பூராவும் நியாயம்தான், அது தற்கொலைதான் என்று சொல்வார் கள். போலீஸ் ஸ்டேஷனில் வந்து எப்படி தற்கொலைகள் நடக்க முடியும்? நாம் அதைப் பார்க்க வேண்டும். நமக்கு வைத்து இருக்கிற இந்த அறிக்கையில் எங்கேயாவது போலீஸ் லாக்கப்பில் இந்த இந்த ஆள் இந்த இந்தத் தேதியில் இறந்தார் கள் என்ற விவரத்தை நமக்குச் சொல்லவில்லை. அது மட்டு மல்ல, இன்றைக்குப் பலயிடங்களில் இருந்து வரக்கூடிய தகவல் களைப் பார்க்கும்போது போலீஸ் ஸ்டேஷனில் நடந்த பல அக்கி ரமங்களை, நான் சுருக்கமாக ஒன்று இரண்டு மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

சாத்தூர் தாலுக்காவில் அட்டைநாயக்கன் பட்டி—எங்களுக்கு வந்து இருக்கிறமாதிரி ஒவ்வொரு கட்சியின் தலைவருக்கும் அனுப்பியிருக்கிறார்கள்—போலீஸ் சரகத்தைச் சார்ந்த குல சேகரப் புறத்தில் இருக்கிற 70 வயது மூதாட்டி, அந்த அம்மையாருடைய கணவர் இறந்து 3 நாள் ஆகிறது, இரவு நேரத்தில் போய் போலீஸ்காரர்கள் உங்கள் மகன் ஏதோ குற்றம் செய்து இருக்கிறான், உங்களை விசாரிக்க வேண்டும் என்று கூப்பிட்டு இருக்கிறார்கள். ஐயா என்னுடைய கணவர் இறந்து 40 நாட்கள் வெளியே போகக் கூடாது என்று அந்த அம்மையார் சொல்லியும் கூட கேட்காமல் கட்டாயப்படுத்தி, போலீஸ் வேனில் அடித்து ஏற்றிக் கொண்டு போய் அந்த இரவு பூராவும் சாப்பாடும் கொடுக்காமல் பெண் போலீசும் இல்லாமல் அந்த லாக்-அப்பில் அடைத்து வைத்து துன்புறுத்தியிருக்கிறார்கள்.

அடுத்து, மாரியம்மாள் என்று சொல்லக்கூடிய மணிநாடாருடைய மகள். இந்த பெண்ணை தென்காசி காவல் நிலையத்தில் கற்பழித்து இருக்கிறார்கள். இது அத்தனை பேருக்கும் தெரிய வந்துஇருக்கிறது. அங்குள்ள மக்கள் எல்லாம் சொல்கிறார்கள் கற்பழிப்புதான் என்று. ஆகவே உங்கள் டிபார்ட்மெண்டு மூலமாக விசாரணை செய்து அது இல்லை என்று சொல்லி அங்கே அறிவிக்கப்பட்டதாக வந்து இருக்கிறது.

அடுத்து, நான் ஏற்கனவே—போன தடவையே—சொல்லியிருக்கிறேன், ஒத்திவைப்புத் தீர்மானத்திலும் பேசியிருக்கிறேன். நாகம்மாள் என்று சொல்லக்கூடிய ஒரு பேராசிரியை, திருப்பூரிலுள்ள எல். ஆர். ஜி. நாயுடு கலைக்கல்லூரியில் பௌதீக பேராசிரியையாகப் பணியாற்றக்கூடிய நாகம்மாள் என்பவர் கொலை செய்யப்பட்டார் என்று எங்களுக்குத் தகவல் வந்து இருக்கிறது. நீங்கள் சபையில் பேசினீர்கள், இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் இல்லை, யார் குற்றவாளி என்று சொல்லக்கூடிய நடவடிக்கை இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக நாங்களும் இந்தச் சபையில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து பேசினோம். அங்கே போலீஸ் அதிகாரிகள் எழுதிக் கொடுத்ததை இங்கே வந்து அமைச்சர்கள் பேசுகிறீர்கள். இப்படி ஒரு பேராசிரியை கொலை செய்யப்பட்டிருக்கிறார், இந்த கொலைக்கு யார்காரணம்? இல்லை கொலை செய்வதற்கு காரணமாக இருந்தவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை இருக்கிறதா என்று சொன்னால் இன்று வரை நடவடிக்கை இல்லை. ஆகவேதான் இதையும் நான் இன்றைக்குச் சொல்கிறேன். இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இப்படிப் பல சம்பவங்கள் தொடர்ந்து வரிசையாக இருக்கின்றன.





தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் முன்பு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தில்கூட நான் பேசியிருக்கிறேன். இன்றைக்கு நம்முடைய ஆளும் கட்சிக்காரர்களுக்கு அனுசரணையாக அங்குள்ள போலிசினுடைய மேலதிகாரிகள் முதற்கொண்டு காவலர்கள் வரை மிக மோசமாக, தாறுமாறாக பேசுவது மட்டும் அல்லாமல், அந்த வட்டத்திலுள்ள கம்யூனிஸ்டு கட்சிக்காரர்களின்மீது ஏகப்பட்ட பொய் வழக்குகளை ஜோடிப்பது மட்டும் அல்லாது அங்குள்ள கொடிகளைக் கிழிப்பது, அங்குள்ள கொடிக்கம்பங்களை வெட்டுவது—போலீஸ்காரர்களே சென்று இதைச் செய்கிறார்கள். இது சம்பந்தமாக நம்முடைய கவர்னர் அவர்களுக்கு அங்குள்ளவர்கள் எல்லாம் ஒரு மனுவை அனுப்பிய பின்னால்,. கவர்னர் விசாரணை செய்து, அவர் என்ன சொல்கிறார் என்று சொன்னால், அதை வாசிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். கவர்னருக்கு அனுப்பிய பெட்டிஷனை கவர்னர் அதை அரசாங்கத்திற்கு அனுப்பி, அரசாங்கம் அதை மறுபடியும் அதே போலீசுக்கு அனுப்பி அந்தப் போலீசார் பதில் அளித்து இருக்கிறார்கள். என்ன பதில் அளித்து இருக்கிறார்கள்? தமிழக ஆளுநருக்கு அனுப்பிய விசாரணை மீது பதில் தெரிவிப்பது சம்பந்தமாக—மனு நாள் 19—2—1983 பெண்ணகரம், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வினர் பொதுக்கூட்டம் போட்டு அடிக்கடி உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களைத் தூண்டுவது, வன்முறையைத் தூண்டுவது சம்பந்தமாக தமிழக ஆளுநருக்கு அனுப்பிய மனு விசாரித்து இனி அவ்வாறு செயல்களில் ஈடுபடக்கூடாது என எச்சரிக்கப்பட்டுள்ளார்கள். அப்படி யன்றால் என்ன அர்த்தம்?—செயல்படுகின்றார்கள், இனி அவ்வாறு ஈடுபடக் கூடாது என்று எச்சரிக்கப்பட்டுள்ளார்கள், போலீசார் மீது தெரிவிக்கப்பட்ட குற்றங்கள் உண்மை இல்லை என்று தெரிகிறது, எனவே அதன் மீது மேல் நடவடிக்கை தேவை இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது. நாம் யார் மீது புகார் சொல்கிறோமோ அவருக்கே பெட்டிஷனைத் திருப்பி அனுப்பிகிறீர்கள் நீங்கள். அமைச்சருக்கு அனுப்பினாலும் பதில் இல்லை. விசாரணைக்கு கவர்னருக்கு அனுப்பினால் அவர் என்ன செய்கிறார்? அதை உங்களுக்கு அனுப்புகிறார். நீங்கள் நேராகப் போலீசுக்கு அனுப்புகிறீர்கள். அவர் என்ன சொல்கிறார்? எங்கள் மேல் குற்றச்சாட்டு உண்மை இல்லை, ஆகவே இந்த மாதிரி மற்ற குற்றசாட்டு சம்பந்தமாக விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுக்கிறோம், இனிமேல் நாங்கள் ஒழுங்காக இருக்கும்படி சொல்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்,

(திரு. சோ. அழகர்சாமி) [1983 ஏப்ரல் 8

(பிற்பகல் 12-30).

இப்படி ஆளுங்கட்சிக்காரருக்கு அனுசரணையாகப் போலீஸ் பல இடங்களில் செயல்படுகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம். அதேமாதிரி கரூர் தாலுக்காவிலே ஏதோ ஒரு நகை தொலைந்து போனதாக விசாரிப்பதற்கு என்று சுப்பிரணியம், வாங்கிரியப்பன் என்ற இரண்டு பேர்களை பரமத்தி காவல் நிலையத்தைச் சேர்ந்த சப்இன்ஸ்பெக்டர் முத்துகுமாரசாமி என்பவர் அழைத்துச்சென்று அங்கு கருப்பண்ணன் என்பவரை சப்இன்ஸ்பெக்டர் இல்லத்திலே வைத்து அடித்து சித்திரவதை செய்துள்ளார்கள். அந்தக்கொடுமை தாளாமல் கருப்பண்ணன் இறந்து போய்விடுகிறார். இறந்த கருப்பண்ணனை பரமத்தி போலீஸ் நிலையத்திலே உள்ள கிணற்றிலே தூக்கிப்போட்டு விட்டார்கள். அந்த வட்டாரத்திலே கேட்டால் நடந்த விவரங்களை அப்படியே சொல்கிறார்கள். ஆனால் போலீசாரைக் கேட்டால் அவராகப் போய்க் கிணற்றிலே விழுந்துவிட்டாராம், அவரே தூக்குப்போட்டுக் கொண்டு விட்டார், அவரே பெட்ரோலை ஊற்றி இறந்துவிட்டார், இப்படியாகச் சொல்லி ரிப்போர்ட்டை இங்கே வைக்கிறார்கள். இந்த மாதிரியாகப் போலீஸ் சித்திரவதை தாங்காமல் இறந்து விட்டால் கிணற்றிலே போட்டுவிட்டு அவராகக் கிணற்றிலே விழுந்துவிட்டார் என்று சொல்கிறார்கள். அதே மாதிரி தஞ்சாவூர் மாவட்டத்திலே ஒரத்தநாடு போலீஸ் ஸ்டேஷனிலே அழகர் என்ற அரிசன விவசாயத் தொழிலாளியை அடித்து, அவர் இறந்ததற்குப் பிறகு தூக்கிலே போட்டுவிட்டு அவர் தற்கொலை செய்து கொண்டதாகச் சொல்கிறார்கள். பொதுமக்கள் எல்லாம் சேர்ந்து கொந்தளிப்பு ஏற்பட்டு ஆர். டி. ஓ. விசாரிக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்து இருக்கிறார்கள். ஆகவே எங்கு பார்த்தாலும் இந்தமாதிரியாக போலீஸினுடைய நடவடிக்கை மிக மோசமாக நடந்துகொண்டு வருகிறது. நெல்லை மாவட்டத்திலே போலீசிலே புகார் கொடுக்கச் சென்றவர்களைப் பிடித்து அவர்கள் மீதே கேஸ் போட்டிருக்கிறார்கள். களக்காடு போலீஸ் ஸ்டேஷனிலே இன்றைக்கு சப் இன்ஸ்பெக்டர், ஏட்டு அவர்கள் எல்லாம் நம்பி நாடாருடைய தம்பி சண்முகவேல் ஹார்பர் யூனியனிலே வேலைபார்க்கக் கூடியவர் அவர் அங்கேயுள்ள ஒரு போர்டினுடைய டைரக்டர், அங்கிருந்து 6 ஆயிரம் ரூபாய் கடனாக வாங்கிக்கொண்டு அந்த ஊருக்குச் சென்றுகொண்டிருக்கிறார். சென்றவுடனே அந்த ரூபாய் அவரிடம் இருப்பதைத் தெரிந்து அவரைக் கொலை செய்துவிட்டு அந்தப் பணத்தை மோசடி செய்துவிட்டார்கள். அது சம்பந்தமாக போலீஸிலே ரிப்போர்ட் செய்யப்போனவர்களை அண்ணனையும் அவருடைய சித்தப்பா மகனையும் உள்ளே வைத்துக்கொண்டு இன்றைக்குவரை எந்த நடவடிக்கையும் இல்லை. அந்தப் பிரேதம் தண்ணீரிலிருந்து கண்டுபிடிக்கப்



1983 ஏப்ரல் 8] (திரு. சோ. அழகர்சாமி)

பட்டது. கொலை செய்யப்பட்டவர் ஹார்பர் யூனியனிலே கோவாப்ரேட்டிவ் ஸ்டோரிலே டைரக்டர். அவருடைய படங்கள் மற்ற விரங்களையெல்லலாம் முதலமைச்சருக்கு அனுப்பியிருக்கிறோம், போலீஸ் இலாக்காவிற்கு அனுப்பியிருக்கிறோம். எந்த நடவடிக்கையும் இல்லை. அவர் 6 ஆயிரம் ரூபாய் கொண்டு சென்றார், அவருடைய பணத்தை அபகரிப்பதற்காக அவரைக் கொலைசெய்து அந்தப் பணம் பல பேர்கள் கைமாறியதன் காரணமாக இன்றுவரை சண்முகவேலு கொலை சம்பந்தமாக எந்த விதமான நடவடிக்கையும் இல்லை, யாரும் கைது செய்யப்படவில்லை, இன்ன இன்னார் தான் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், இவர்கள் மீதுதான் சந்தேகம், அவர்கள்தான் அவரை அழைத்துச் சென்றார்கள், அவர்கள்தான் கொலை செய்திருக்கவேண்டும் என்று சொல்லியும்கூட வெளியே விட்டதுமட்டுமல்லாமல் எங்கள்மேல் ஏதாவது சொல்லிக்கொண்டிருந்தால் உங்களையே உள்ளே வைப்போம் என்று அவருடைய அண்ணனையும் தம்பி குடும்பத்தையும் பயமுறுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இது சம்பந்தமாக பல பெட்டிஷன்கள் முதலமைச்சருக்கு அனுப்பியிருக்கிறார்கள், ஐ. ஜி. க்கு அனுப்பியிருக்கிறார்கள், மதிப்பிற்குரிய கல்யாணசுந்தரம் எம். பி. கைப்பட எழுதியிருக்கிறார்கள், ஹார்பர் யூனியனில் வேலை பார்க்கக் கூடியவர் என்று சொல்லி விசாரணை செய்யவேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். 18—1—1983 அன்று நடந்த கொலை சம்பந்தமாக ஒரு நடவடிக்கையும் இல்லை. ஏழை எளியவர்கள் போய் புகார் செய்யப்போனால் அவர்களையே பிடித்துப்போட்டு விடுகிறார்கள். களக்காடு போலீஸ் ஸ்டேஷனிலே புகார் கொடுக்கச் சென்றபோது 2 பேர்களை சித்தப்பா மகனையும் செல்லதுரையையும் அடித்து அவர்கள் மீதே கேஸ்போட்டு அவர்களை ஜாமீனில் எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அவருடைய மனைவியும் எந்த விதமான உதவியும் இல்லாமல் நிர்க்கதியாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்குத் தனியாக ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் ஏற்பாடு செய்து, கொலை சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக 18—3—1983--ல் திருநெல்வேலி டவுன் போலீஸ் ஒரு கடையைத் தாக்கி, கடையிலிருந்த டிரைவர் நம்பிராஜன் என்பவரைக் கடுமையாகத் தாக்கி, அவர் ஆஸ்பத்திரியிலே இருக்கிறார். அவர்களுடைய கடையைச் சூறையாடியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல சம்பவங்கள். பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டம், அச்சலூர் காவல் சரகத்தைச் சேர்ந்த காவலர்கள்—இன்றைக்கு அங்கேயுள்ள

விசைத் தறித் தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் தொழில் தகராறு ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளிர்கள் மீது பொய்யான வழக்குகளைப் போட்டு, கொடுமைகளை இழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல கதிரேசன் நாகப்பிள்ளை என்பவரும், அவருடைய மனைவி வள்ளிமயில் என்பவரும் திருப்பத்தூர ரோட்டில், தேவக்கோட்டையில் டீக்கடை வைத்திருக்கிறார்கள். அங்கே ஒருவர் நடுப்பகல் இரண்டரை மணிக்கு சாராயத்தை குடித்துவிட்டுவருகிறார். அவர் ஆளுங்கட்சிக்காரர்; அங்கேயுள்ள முக்கியமான தலைவர். டீக்கடையிலே போய் அந்தப் பெண்ணிடம் தாறுமாறாக நடந்திருக்கிறார். அந்தப் பெண்ணின் கணவர் அதைத் தடுத்திருக்கிறார். இதுசம்பந்தமாகப் போலீஸில் ரிப்போர்ட் செய்யப் போனால், போலீஸ்காரர் இந்தக் கணவன், மனைவி மீதே கேஸ் பதிவு செய்து இரண்டு பேரையும் லாக்கப்பிலே வைத்து விட்டார். தகராறு செய்தவர்மீது வழக்கில்லை. ஏனென்றால் அவர் ஆளும் கட்சிக்காரர்; அவர் ஒரு தலைவர் என்ற முறையிலே அவர்மீது எந்தவிதமான வழக்கும் பதிவு செய்யப்படவில்லை. இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது.

அதேமாதிரி, கோவையிலே ஆலந்துறை போலீஸ் ஸ்டேஷனில் விசாரணைக்காக ஒருவரை அழைத்துப் போகிறார்கள். மறுநாள் காலையில் அவர் பெட்ரோல் ஊற்றிக்கொண்டு செத்துவிட்டார் என்று சொல்கிறார்கள். பெட்ரோல் எப்படிக் கிடைத்தது? விசாரணைக்குப் போன கைதி பெட்ரோலைக் கையிலே எடுத்துப் போனாரா? பெட்ரோலை ஊற்றி அவராகவே இறந்து விட்டார் என்று சொல்லிவிட்டார்கள்.

அதேமாதிரி பேரூர் பி. 2 போலீஸ் ஸ்டேஷனில் இரவில் ஒரு பெண்ணை அடித்துக் கொலை செய்துவிட்டார்கள். அந்தக் காவல்துறை அதிகாரிகள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்றால் 6 மணிக்கு மேலே அந்தப் பெண்ணை போலீஸ் ஸ்டேஷனில் வைத்தது தவறு; ஆகவே அந்த சப்-இன்ஸ்பெக்டரை சஸ்பெண்ட் செய்திருக்கிறோம் என்று செய்திருக்கிறார்களே தவிர, அந்தக் கொலைக்கு என்ன காரணம், அந்தக் கொலைக்குக் காரணம் அந்த போலீஸ் ஸ்டேஷனில் உள்ள காவலர்கள் அல்லது இன்னார் என்று சொல்லவில்லை. அது தற்கொலையாம், ஆகவே போலீஸ் ஸ்டேஷனில் தொடர்ந்து தற்கொலை என்று சொல்லக்கூடிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இன்னொன்று, போலீஸ்காரர்களுக்கே பாதுகாப்பு இல்லை. நெல்லை மாவட்டத்திலே தாழையூத்து காவல் நிலையத்தில் ஒரு காவலரை இன்னொரு காவலர் கொலை செய்து விடுகிறார்.



இன்றுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. ஏன் அந்தக் கொலை நடந்தது? யார் அந்தக் கொலைக்குற்றவாளி? எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை.

அதேமாதிரி இராமநாதபுரம் காவல் நிலையத்தில் சப்-இன்ஸ்பெக்டர் ஒரு காவலரை அடிக்கிறார். காவலர்களுக்குக் காவல் துறையில் பாதுகாப்பு இல்லாத நிலை, ஒரு மோசமான சூழ்நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. அவர்களுக்குள்ளேயே பாதுகாப்பு இல்லாத நிலை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

நேற்று கூட என் தொகுதியிலே தங்களுக்கென்று சொந்த இடம் இல்லாதவர்கள், ஏழை மக்கள் புறம்போக்கு நிலத்திலே குடிசைகளைப் போடப் போனால், குடிசைகளைத் தீ வைத்துக் கொளுத்தி, அவர்களிடம் காவலர்கள் தாறுமாறாக நடந்து தொந்தரவு செய்திருக்கிறார்கள். கஷ்டப்படுகிற மக்கள் தங்களுக்குள்ள குறைகளைச் சொல்லி, அரசாங்கத்தின் கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்புவதற்காக, தங்களுக்கு நிவாரணம் வேண்டும் என்பதற்காக இயக்கங்களிலே, போராட்டங்களிலே ஈடுபடுகிற நேரத்தில் போலீசை வைத்து அவற்றை அடக்குகிற வகையில் வழக்குகளைப் போட்டு, தொந்தரவிற்குள்ளாக்கி, இனிமேல் போராட்டம் என்ற எண்ணத்தையே கொள்ளக் கூடாது என்று செய்ய முயற்சிப்பது சரியாக இருக்காது. அந்தமாதிரி இயக்கங்களை நடத்திய காலத்தில், கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளில் அவர்கள் மீது போலீஸ் போட்ட வழக்குகள் இருக்கின்றன. 19—1—1982, ஜனவரி மாதம் தஞ்சை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் மீது போடப்பட்ட வழக்குகள் இருக்கின்றன. மூன்று பேரை சுட்டிருக்கிறார்கள். அதற்கு மேல் அவர்கள் மீது வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள். அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்க வேண்டும். விவசாயிகள் போராட்டமானாலும், தொழிலாளர்கள் போராட்டமானாலும் அல்லது என். ஜி. ஓ.க்கள் போராட்டமானாலும் அவற்றை அடக்க வேண்டுமென்று நினைப்பதற்குப் பதிலாக, அவர்களுடைய கோரிக்கைகளில் இருக்கிற நியாய உணர்வுகளைப் பார்க்க வேண்டும். போலீசை வைத்து அடக்க நினைத்தால் பயங்கரமான விளைவுகள்தான் ஏற்படும். பிரச்னைகளைத் தீர்த்து வைக்கிற முறையில் அணுகு முறைகள் இருக்க வேண்டும். போலீஸ் இலாக்காக்களிலே நடைமுறை மாற்றத்தை உண்டாக்குவதற்காக தர்மவீரா தலைமையிலே இருக்கிற அந்தக் கமிஷன் ரிப்போர்டை ஆராய்ந்து அந்த மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். போலீஸ் மக்களுக்கு அனுசரணையாக இருக்கிற வகையில், உதவியாக இருக்கிற முறையில் சரியான ஒரு நடைமுறையை

கொண்டு வரவேண்டும். அதுசம்பந்தமாக பழைய கமிஷன் ரிப்போர்ட்களில் சொல்லியிருக்கிற ஆலோசனைகளை எல்லாம் நீங்கள் நடைமுறைப்படுத்தவில்லை. அவைகளை எல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

திரு. இல. பலராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட காவல் துறை மானியம் இன்றைக்குப் பெரும் பரபரப்புக்கு மத்தியிலே இந்த அவையிலே விவாதிக்கப்பட்டது. நாட்டுக்கு வெளியே பல பரபரப்புக்கள் இருந்தாலும், அவைகளை எல்லாம் எப்படிக் கட்டுப்படுத்துவது, எப்படி ஒழுங்குபடுத்துவது என்ற ஒரு ரீதியில் காவல் துறை செம்மையாக இருக்கவேண்டுமென்பதற்காக, இந்தத் தமிழகத்தினுடைய வருவாயில் ரூ. 76,23,05,000 அளவுக்கு வருவாயில்லாத ஒரு துறைக்கு — பாதுகாவலாக இருக்கவேண்டுமென்ற துறைக்கு — பெரும் தொகையைச் செலுத்துகின்றோம். இந்தத் துறை சமுதாயத்திற்கு வேலியாக இருக்க வேண்டிய துறை. அது மேயக் கூடிய நிலையில் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே பல தவறுகளைச் சுட்டிக்காட்டினார்கள் இந்தத் துறை மேலும் செம்மையாக இருக்க வேண்டுமென்ற, ஒரு நிலைக்கு ஆளாக்கப்பட்டு அந்தத் துறை ஒழுக்கம் உள்ள துறையாக, நாணயம் உள்ள துறையாக, மக்கள் மதிக்கக் கூடிய துறையாக இருக்க வேண்டுமென்ற உணர்வின் காரணமாகத்தான் முதலமைச்சரே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் உணர்கிறேன். அந்த முறையில், அந்தத் துறை செம்மையாக இருக்க வேண்டுமென்ற நிலைக்குத்தான் நாமெல்லாம் ஆளாகி இருக்கிறோம்.

(பிற்பகல் 12–40)

இந்தத் துறை இன்றைக்குச் செயல்படும் முறையில் பல நிலைகளில் தவறுகள் இருக்கின்றன. அந்தத் தவறுகள் திருத்தப்படவேண்டுமென்ற நிலைக்கு நாமெல்லாம் ஆளாகிக் கொண்டிருக்கிறோம். கடந்த ஆண்டுகளில், இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், காவல் துறை, மிகச் செம்மையாக, இந்தியாவில் மட்டுமல்லாமல், உலக அரங்கத்தில் கூட ஒரு நல்ல மேன்மையான ஒரு துறையாக இருந்தது. எந்தத் தவறானாலும் அதை விரைவாகக் கண்டுபிடிக்கக்கூடிய தகுதியும் திறமையும் உள்ள ஒரு துறை இன்றைக்கு மங்கிச் சீர்குலைந்து கொண்டிருக்கிறது என்ற எண்ணம் மக்கள் மத்தியிலே எழுந்துவிடக் கூடிய நிலை இருக்கக் கூடாது. மேலும் தூய்மையாகவும் தவறுகளைக் கண்டுபிடிக்கக்கூடிய துறையாகவும், பாதுகாப்பான ஒரு துறையாகவும் இது இருக்க வேண்டுமென்பதை எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அந்த நிலையில்,



மக்களது உணர்வுகளைப் பிரதிபலிக்கும் நிலையிலேதான் சில பல குற்றச்சாட்டுகளைக் கூறவேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கிறோம்.

சமுதாயத்திலே இன்றைக்குக் குற்றங்கள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. தமிழகத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்ற பின்னால் குற்றங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. குற்றங்களைக் கண்டு பிடிப்பதில் கூட குறைகள் ஏற்படுகின்றன. இதைக் குறையுங்கள் என்று எதிர்க்கட்சி வரிசையிலே கூறும்போது, கண்டு பிடியுங்கள் என்று சொல்லும்போது, பீகாரிலே என்ன ஆயிற்று, குஜராத்திலே என்ன ஆயிற்று என்று அகில இந்திய ரீதியில் இதை அலசக் கூடிய நிலை இருக்கக் கூடாது என்று நான் கூற ஆசைப்படுகிறேன். நம்முடைய மாநிலத்தில் கடந்த காலத்தில் இருந்தது என்ன, இந்த ஆண்டு எவ்வளவு குறைத்திருக்கிறோம்; கடந்த ஆண்டு எவ்வளவு குற்றங்கள் சமுதாயத்திலே நிகழ்ந்தன? இந்த ஆண்டு எவ்வளவு குறைத்திருக்கிறோம் —குற்றங்கள் நடைபெறாமல் தடுத்திருக்கிறோம், அல்லது ஏற்பட்ட குற்றங்களைக் கண்டு பிடித்திருக்கிறோம் என்ற ஒரு ரீதியிலே இருக்க வேண்டுமே தவிர, அதற்கு மாற்றாகத் திசை திருப்பும் நிலையில் வேறு மாநிலங்களைக் காட்டுவது அரசினுடைய கடமையாக இருக்கக் கூடாது என்பதை நான் குறிப்பிட்டுக் காட்டுகிறேன். அரசினுடைய தமிழ் நாடு மாநில ஆட்சி அறிக்கையிலே 1—4—1979 முதல் 31—3—1980 வரை 31,435 குற்றங்கள் என்று எண்ணிக்கை இருந்தது. ஆனால், 1—4—1980 முதல் 31—3—1981 வரையில் 32,519 குற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனுடைய வளர்ச்சி 3·4 சதவீதம் என்ற நிலையிலும் கூடுதலாக 1,034 குற்றங்கள் உயர்ந்துள்ளன என்ற நிலையைப் பார்க்கும்பொழுதே அதற்குப் பிறகு அறிக்கை இல்லை என்றாலும், ஒரு ஆண்டுக்குள்ள நிலையைப் பார்த்தால் குற்றங்கள் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றன. இதற் க் காவல்துறை பொறுப்பு அல்ல என்றாலும், சமுதாயத்தின் பொறுப்பு என்றாலும், காவல் துறை எந்த அளவிற்கு, நியாயமான அளவிற்கு நடவடிக்கை எடுக்கிறதோ அந்த அளவிற்கு இவைகள் குறைக்கப்படும் என்றுதான் சொல்கிறேன்.

1—4—1979 முதல் 31—3—1980 வரையில் எங்கள் மாவட்டமான வடாற்காடு மாவட்டத்தில், 2,734 குற்றங்களும் 1—4—1980 முதல் 31—3—1981 வரையில் 3,192 குற்றங்களும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இது இப்படி உயர்வது என்பது நியாயம்தானா என்ற கேள்வியை நான் இங்கே கேட்க விரும்புகிறேன்.

இந்த 32,519 குற்றங்களில் 10,310 குற்றங்கள் சம்மந்தமாகத் தீர்ப்பு கூறப்பட்டது என்ற நிலைமை இந்த அறிக்கையிலே இருக்கிறது. 1980—81—ஆம் ஆண்டில் நடந்த வழக்குகளிலே இன்றுவரையில் மூன்றில் ஒரு பங்கு வழக்குகளில் தான் தீர்ப்பு வழங்கப்பட்டதாக குற்றங்கள் கண்டுப்பிடிக்கப் பட்டதாக அரசு அறிக்கையிலே இருப்பது நியாயமா என்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்.

1979—80 ஆம் ஆண்டுக்கும், 1980-81 ஆம் ஆண்டுக்கும் உள்ள குற்றங்களின் உயர்வு, அரசின் கணக்குப்படி பார்த்தால் 16.7 சதவீதம் உயர்ந்திருக்கிறது. உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலும் அல்லது மின்சாரத்தைப் பெருக்குவதிலும் அல்லது மற்றத் தொழிற்சாலைகள் வளர்ந்து விட்டன என்று சொல்வதிலும் இருப்பதைப் போன்ற இதிலேயும் சதவீதத்தில் உயரக்கூடிய நிலைமைகளைப் பார்க்கும் பொழுது சமுதாயத்திலுள்ள மக்கள் சாதாரண நிலைமைகளை விரும்புகின்ற மக்கள் இதை விரும்ப மாட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இராமநாதபுரம் கிழக்கு மாவட்டத்திலே 37.2 சதவீதமும், மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்திலே 26 சதவீதமும் இந்தக் குற்றங்கள் உயர்ந்து கொண்டே இருக்கின்றன. இதில் ஏழு பிரிவுகளாப் பிரிந்து கொலை என்ற வகையில் 1979-80 ஆம் ஆண்டு 919-ம், 1980-81-ஆம் ஆண்டில் ஆயிரத்து நூற்று சொச்சமும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இப்படிக் கொலைக் குற்றங்கள் அதிகமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது இந்த எண்ணிக்கை கணக்குகளின் மூலமாக அறிகிறோம். 58 சதவீதம் என்று இருந்தது 61.1 சதவீதம் என்று உயர்ந்திருப்பதைப் பார்க்கும் பொழுது இப்படிக் கொலைக் குற்றங்களின் சதவீதம் அதிகமாக ஏறியிருப்பது சமுதாயத்திற்கு விரும்பத் தக்கதா என்ற ஒரு கேள்வியைத்தான் நான் இந்த நேரத்திலே கேட்க ஆசைப்படுகிறேன்.

திருட்டு என்பதும் அதிகமாகிக்கொண்டேயிருக்கிறது. திருட்டு வழக்குகள் 1979-80-ஆம் ஆண்டு 18,446 என்றும் 1980-81 ஆம் ஆண்டு 19,626 என்றும் ஆகியிருக்கிறது. அதிகம் 1,180.

இப்படி வரிசையாக எதிலும் குறைவு இல்லாமல் நிறைவாக இருக்கக்கூடிய நிலையில் இன்றைக்கு அதிகமாகி கொண்டேயிருக்கின்ற நிலையைத்தான் நாம் பார்க்கிறோம்.

சென்னை நகரத்தில் விபச்சாரத்தில் ஈடுப்பட்ட பரத்தையர்களைக் கைது செய்தது குறித்து அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். சமுதாயத்தில் இரகசியமாக நடக்கக்கூடிய





காரியங்களைக் கூட கட்டுப்படுத்த முடியுமா, கட்டுப்படுத்தியிருக்கிறோமா என்று பார்க்கின்ற போது அதிலேயும் சதவீதம் ஏறிக்கொண்டேயிருக்கிறது.

இப்படி எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் குற்றங்களின்எண்ணிக்கை அதிகமாகவே ஏறிக்கொண்டிருப்பது சமுதாயத்திற்கு நல்லதல்ல. வேலியாக இந்தத் துறை அமைந்து மிகவும் கண்காணிப்பாக இருக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 12-50)

காவல் துறை இன்றைக்கு குறிப்பாக பல இலட்சியங்களை ஏற்றுக்கொண்டு, அவர்கள் மக்கள் மத்தியிலே பணியாற்றுகின்றபொழுது அந்தக் காவலர்களுக்குப் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. அவர்கள் சமுதாயத்தினுடைய வேலியாக அமையக் கூடியவர்கள். எனவே அவர்களுக்கு பாதுகாப்பு என்பது அவசியமாகிறது. அவர்களே தவறு செய்யாமல் இருப்பதற்கு சூழ்நிலையை வகுத்துக்கொள்ள வேண்டும். காவல் துறையைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் ஒன்றன்பின் ஒன்றாய் சுட்டிக்காட்டினார்கள். சட்டத்தைச் செயல்படுத்துவதில் தவறு செய்கிறார்கள்; ஒழுங்கை நிலைநாட்டுவதில் தவறு செய்கிறார்கள் துப்பு துலக்குவதில் கூட தவறு செய்கிறார்கள் என்ற, நிலைமைக்கு ஆளாக்கி கொண்டிருக்கிறோம். அந்த நிலை இல்லாமல் காவல்துறையினர் நல்லமுறையில் செயல்பட்டு மேல் மட்டத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகளைக் காட்டிலும், கீழ்மட்டத்தில் இருக்கக்கூடிய அதிக எண்ணிக்கை உடையவர்களாகிய மனித எண்ணங்களுக்கு ஏற்றாற் போல் இன்றைக்கு விஞ்ஞான ரீதியில் காவல்துறையினர் வளர வேண்டுமென்ற கொள்கை இருந்தாலும் அந்த அமைப்பில் நாம் பின் தங்கியிருக்கிறோம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேல் மட்டத்தில் அதிகாரிகளின் எண்ணிக்கை, கீழ் மட்டத்தில் இருக்கின்ற ஜனத்தொகைக்கேற்ப காவல் நிலையங்கள் ஏற்படுகிறதா என்றால் இல்லை என்று தான் சொல்ல ஆசைப்படுகிறேன். அடிமட்டத்தில் இருக்கக் கூடிய காவலர்கள் அதிகமாக நியமிக்கப் போகிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தத் துறையை ஏற்றுக்கொண்டபின்னர், தேர்வுகள் நடத்தப்பட்டன; 10,000 காவலர்களை தேர்வு செய்தோம் என்ற நிலை ஏற்பட்டது. அதற்குப் பின்னால் அது ரத்து செய்யப்பட்டது. ஏன் ரத்து செய்தார்கள்? முதலமைச்சர் அவர்கள் விளக்கத்

இன்றைக்கு பதக்கங்கள் நல்ல முறையிலே வழங்கப்படுகின்றன என்ற நிலை இருந்தாலும் அவர்களுக்கு வீரச் செயல் செய்தவர்களுக்கு, வீரச் செயல் புரிந்து பொதுமக்களைக் காப்பாற்றுபவர்களுக்கு எல்லாம் இன்றைக்கு பதக்கங்கள் வழங்கிக்கொண்டிருக்கிறோம். ஆனால் அந்தப் பதக்கங்கள் ஒருசிலருக்கு வழங்கப்படாமல் இருப்பது நல்லதல்ல. அதிலும் நியாயமாக பணி செய்தவர்களுக்கு இல்லாமல், ஏதோ தொடர்ந்து சிபாரிசு உள்ளவர்களுக்கு தான் அந்தப் பதக்கங்கள் கிடைக்கிறது என்ற ஒரு அதிருப்தி அந்தத் துறையிலே இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த நிலைமை இல்லாமல், அவர்கள் எல்லாம், கண்டுபிடித்தவர்களுக்கு, வீரச் செயல்கள் புரிந்தவர்களுக்கு எல்லாம் பதக்கங்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருடுகள் என்பது மிகவும் சாதாரணமாகிவிட்டது. இன்றைக்கு எங்கள் மாவட்டத்திலே கோயில் சிலைத் திருட்டுக்கள் என்பது மிகவும் சாதாரணம். பஞ்சலோகத்தால் செய்யப்பட்ட திருவண்ணாமலைத் தேர்ச் சிற்பங்கள் திருடப்பட்டன. அந்தச் சிற்பங்களைத் திருடியவர்கள் யார் என்பதை இன்று வரையில் கண்டுபிடிக்கமுடியாத ஒரு நிலையிருக்கிறது. உண்டியல்கள் எல்லாம் உடைக்கப்படுகின்றன. அந்த உண்டியல்களை யார் உடைத்தது என்று கண்டுபிடிக்க முடியாத ஒரு நிலை காவல்துறைக்கு ஏற்பட்டதா என்று பார்த்தால், அதுதான், இல்லை. இங்கே பின்னால், பிண்ணணியாக யாரோ இருப்பதனால்தான் அது கண்டுபிடிக்கப் படமுடியாத நிலையில் இந்தக் காவல்துறை இன்றைக்கு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திருவண்ணாமலை தேர்ச் சிற்பங்கள் போனது என்பது பல லட்ச ரூபாய் மதிப்புள்ள புராதன சிற்பங்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

அதைப்போலவே வாலாஜாவிலும், சிலைத்திருட்டு. அரக்கோணத்திலும் சிலைத்திருட்டு. இப்படி எங்கள் மாவட்டத்தில் சிலை திருடுபவர்கள் ஒரு அணியாக இருந்து, அரசுத் தொடர்புடன், சங்கலித் தொடர்பு போன்ற ஒரு நிலையிலே இருந்துகொண்டு அவர்கள் இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அறங்காவலர்களாக இருப்பவர்கள் கூட இந்தக் குற்றத்தைச் செய்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். இப்படிப்பட்ட திருட்டுகளை எல்லாம் நாம் கண்டுபிடிப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும் என்று தான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00).

திருப்பத்தூர் வட்டத்தில் மேட்டுப்பள்ளி என்ற இடத்தில் ஒரு அரிஜன மாணவனைத் தாக்கினார்கள். அவன் காவல் நிலையத்தில் தான் இறந்தான் என்று குற்றச்சாட்டுக்கு உச்ச





நீதிமன்றத்தில் இருந்து ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள் வழக்கு தொடுத்து இருக்கிறார்கள். அதுபோன்ற நிலைமைகள் ஏற்படாமல் இருப்பதைப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

என்னுடைய தொகுதியில், காவல் துறையில் பலரை கைது செய்து வழக்கு போட்டு இருக்கிறார்கள். இது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அல்லது ஆளும் கட்சியின் வலையில் வீழ்ந்ததன் காரணமாக என்று நான் நேரடியாகக் குற்றம் சொல்லவில்லை. ஆனால் அப்படி செய்யப்பட்டவர்களில் பலர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மீது என்ன வழக்கு போட்டு இருக்கிறார்கள் என்றால், சாதாரணமான செக்ஷன் 75-ன் கீழ் நியுசென்ஸ் கேஸ் என்று போட்டு, வெறும் ஜட்டியை மட்டும் அணுவித்து அவர்களை தெருத் தெருவாக இழுத்துச் சென்று இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்களை கேடி லிஸ்டில் சேர்ப்பதற்கான நிலையையும் அங்கேயுள்ள காவல் துறையினர் எடுத்து இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை எடுத்துக்கூறி இது நியாயம்தானா என்று அறிய விரும்புகிறேன்.

2 லட்ச ரூபாய்க்கு மேல் ஒரு பெண்மணியினுடைய சொத்துக்களை எல்லாம் அவர்கள் வைத்துள்ளது சட்டத்திற்குப் புறம்பானது என்ற குற்றச் சாட்டைக் கூறி எடுத்து வந்துவிட்டு இருக்கின்றனர். இது குறித்து முதலமைச்சர் அவர்களுக்கு அது தெரிவிக்கப்பட்டும், இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இன்றைக்கு காவல் துறை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இருந்ததைப் போல, செக்ஷன் 124(ஏ) ஐ.பி.சி. யின் கீழ், ராஜதுரோகம் என்று சொல்லி, இன்றைக்கு பலரை கைது செய்யும் நிலையிருக்கிறது. இப்படி அரசியல் இயக்கத்தில் உள்ள பலர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். இப்படி அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக யாரைவேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், கைது செய்யலாம் என்ற நிலையை கையாள்வது சரியல்ல என்பதைக் கூறி, இந்தத்துறை நல்ல முறையில் செயல்பட வழிவகை செய்ய வேண்டும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் காவல் துறை மானியத்தின் மீது இ. யூ. மு. லீக் சார்பாக பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காவல் துறையைப் பற்றி நேற்றும், இன்றும் பல்வேறு கருத்துக்கள் இந்தச் சபையிலே எடுத்து வைக்கப்பட்டுள்ளன. அந்த துறை

தைத் தந்தார்கள். தேர்விலே தவறுகள் நடந்து விட்டது என்று ஒரு குற்றச்சாட்டை அவர்கள் கூறினார்கள். அதற்குப் பின்னர், அதை ராணுவத்தைக் கொண்டு தேர்வு செய்யப்போகிறேன். என்று வாக்குறுதி அளித்தார்கள் . ஆனால் வாக்குறுதி என்ன வாயிற்று ? இன்றுவரை நிறைவேற்றப்படாமல் இருக்கிறது என்பதை குற்றமாகக் கூற விழைகிறேன். அந்தத் தேர்வுக்கு, வந்த இளைஞர்கள், படித்த இளைஞர்கள், சான்றிதழ்களையெல்லாம் பெற்றுக்கொண்டு, 2, 3, ஆண்டுகளாயும்கூட, இன்றுவரையில் அவர்களுக்கு உத்தரவு அனுப்பப்படவில்லை. வேறு வேலைக்கும் போக முடியாத நிலையில், அந்த வேலையை நம்பி அவர்கள் திருமணம் செய்துகொண்டு, இருப்பதை எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். நானும் அதைத்தான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிலையை முதலமைச்சர் அவர்கள் தவிர்க்க வேண்டும். அடிமட்டத்திலே இருக்கின்ற காவலர்கள் ஒழுக்கமுள்ளவர்களாகவும், நல்ல முறையில் பணியாற்றக்கூடியவாகளாகவும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். இன்றைக்குச் சட்டத்தைச் செயல்படுத்துவதில் கூட பல தவறுகள் ஏற்படுகின்றன. உதாரணத்திற்கு ஒன்றை பொது மக்கள் மத்தியிலே ஒரு நிலையைக் கூறவேண்டுமென்றால், காவல் துறையினர் மிக முக்கியமானவர்கள், போக்குவரத்திலே அதிக எண்ணிக்கையை ஏற்றக்கூடாது என்று சட்டம் இருந்தாலும், நகரப் பேருந்தாக இருந்தாலும், வெளி இடங்களுக்குச் செல்லக் கூடிய பேருந்தாக இருந்தாலும், அவர்கள் தங்களுடைய சீருடையிலே 'புட்-போர்டில்' செல்லக் கூடிய நிலையைப் பார்க்கிறோம். பொது மக்கள் என்ன நினைக்கிறார்கள். எப்படி வேண்டுமானாலும் போகலாம், வரலாம், காவல் துறையினர் நம்முடன், இருக்கிறார்கள் என்று சர்வசாதரணமாக நிலையை மக்கள் மத்தியிலே ஏற்படுத்துகிறார்கள். அப்படியில்லாமல், சட்டத்தை நல்ல முறையிலே செயல்படுத்துவதற்கும், இன்றைக்கு சென்னை மாநிலத்தில் மட்டுமல்லாமல், நடைபாதையிலும், சாலை ஓரங்களிலும் விபச்சாரம் நடப்பதையும், லாரிகளை மடக்கி அங்கே கூட விபச்சாரம் நடப்பதையும், ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அந்த சிக்கலான பிரச்சினை வறுமையின் காரணமாக இந்தத் தொழில் இருந்தாலும், அதை எப்படிப் போக்குவது என்பதை இந்தத் துறை மட்டுமல்லாமல் மற்றைய சம்பந்தப்பட்டவர்களும் இதை ஒழிப்பதற்கான நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த விபச்சாரம் என்பது பரவலாக இருப்பதை யாரும் மறுக்க முடியாது. எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாக இது இருக்கிறது. இதை ஒழிப்பது நம்முடைய கடமை என்ற உணர்வுடன், இது ரோடுகளில் இருக்கக்கூடிய, வளரக்கூடிய நிலை இன்றைக்கு சிறு கிராமத்திலேகூட இன்றைக்கு பரவக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.





அடுத்து, இந்த இளம் குற்றவாளிகள் அதிகமாகிக்கொண்டு வருகிறார்கள், என்று கணக்கு இன்றைக்கு நமக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறது. அவர்களை குற்றம் செய்ததற்குப் பின்னால் திருத்துவது என்ற ஒருநிலை இருந்தாலும், குற்றம் செய்வதற்கு முன்னால், அவர்கள் ஏன் இதைச் செய்கிறார்கள் என்பதற்கான காரணத்தை ஆராயவேண்டும். அதற்கு இந்தத் துறை முன்வரவேண்டும். எல்லாவற்றுக்கும் காரணம் வறுமைதான் என்று ஒரே பதிலைக் கூறினாலும், இந்த இளைஞர்கள் குற்றம் செய்த பின்னால் குற்றவாளி ஆகிய பின்னால், அவர்கள் இந்தச் சமுதாயத்திலே நல்ல ஒரு அந்தஸ்தைப் பெறுவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சமுதாயத்தில் மற்ற துறைகளில் பல குற்றங்களைச் செய்பவர்கள் எண்ணிக்கை அதிகம் உருவாகக் கூடிய நிலையில் இன்றைக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. குற்றங்களைத் துப்பு துலக்குவதில் நம்முடைய மாநில அரசு நம்முடைய காவல்துறை மிக்க கண்ணியமிக்கதாக கடந்த காலங்களில் இருந்தது. அதற்கான பல பதக்கங்களை தகைசால் பணிபுரிந்தவர்களுக்கு நாம் கடந்த காலங்களில் வழங்கியிருக்கிறோம். கடந்த காலத்தில் அப்படிப்பட்டவர்கள் பெற்ற நிலையையும், நாம் வழங்கிய நிலையையும் நாம் பார்த்திருக்கிறோம். இப்போது துப்பு துலக்குவதற்கான ஒரு தனிப்பிரிவு இருந்தாலும், இந்தத்தனிப் பிரிவு நல்ல முறையில் செயல்படுவதற்கான ஒரு சூழ்நிலை இன்றைக்கு ஏற்படுத்தப்பட வேண்டும். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் இன்றைக்கு காவல் நிலையங்களில் யார் பிராது கொண்டு செல்லுகிறார்களோ அவர்களையே காவல் நிலையத்தில் வைக்கக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு சாதாரண கிராமங்களில் இருக்கக் கூடிய காவல் நிலையங்களில் கூட இருக்கிறது. நகரத்திலேயும் இது இருக்கிறது. பிராது யார் கொடுக்கிறார்களோ அவர்களைத்தான் இன்றைக்கு லாக்கப்பிலே அடைக்கிறார்கள். குற்றவாளிகள் வெளியிலே திரிந்துகொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றிரண்டைச் சொன்னர்கள். இதுபோன்ற நிகழ்ச்சிகளை நாங்களும் சொல்லமுடியும். நீங்களே உங்களுடைய அறிக்கையிலே அதைத்தான் ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். பிராது கொடுப்பவர்கள் சாதாரண மக்களாக இருக்கிறார்கள். அந்தச் சாதாரண மக்கள்தான் காவல் துறையினரின் உதவியைக் கோருகிறார்கள் என்ற ஒரு நிலைக்கு நீங்கள் ஆளாகியிருந்தாலும் அந்தப் பிராது கொடுப்பவர்களையே அடித்து அவர்களுக்கு தண்டனை வழங்குவது போன்ற நிலைமைதான் இன்றைக்கு காவல்துறையிலே இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'அதை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை இந்தத் துறையினர்எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்,

பற்றி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றையும் நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். காவல் துறை இன்றைக்கு யாருக்கு இருக்கிறது என்பதைப் பார்த்தால், மக்களுக்காக இருக்கிறதா அல்லது போலீஸ் துறையிலே பணியாற்றுகின்ற காவலருக்குப் பயன்படுகின்ற வகையில் இருக்கிறதா என்பதைத் தான் இன்றைக்கு நாட்டிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளின் அடிப்படையில் நாம் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இந்த மாமன்றத்திலே பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எதிர்க்கட்சியின் சார்பாக நாங்கள் கொடுத்து வந்துள்ளோம். இன்றைக்கு நாட்டிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை எடுத்துப் பார்த்தால், நாட்டிலே 'சட்டம்—ஒழுங்கு (லா அன்ட் ஆர்டர்) எப்படி இருக்கிறது, எந்த அடிப்படையில் நிர்வகிக்கப்படுகிறது என்பதை 80 ஆம் ஆண்டில் இருந்து பார்த்து வருகின்ற நாங்கள் அதனுடைய விளைவுகள் நல்ல முறையில் இல்லை என்பதை, மக்கள் மத்தியில் பழகுகின்ற அடிப்படையில் அறிந்து இருக்கிறோம். இன்றைக்கு பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன. நாட்டிலே லா அன்ட் ஆர்டர் என்பது காப்பாற்றப்பட வேண்டும். கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்றவைகள் நாட்டில் நடக்கக்கூடாது என்ற நிலை இருக்கிற நேரத்தில், காவல் துறையிலேயே அத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது என்று சொன்னால், அது நாட்டிலே ஒரு நல்ல லா அன்ட் ஆர்டர் நிலைமை இருக்கிறது என்பதற்கு சான்றாக இருக்குமா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எங்கே மக்கள் அபயம் தேடுகிறார்களோ, அங்கே மக்கள் புகலிடம் தேடுகிறார்களோ, எங்கே மக்கள் தற்காப்பு கிடைக்கும் என்று அபயம் தேடுகிறார்களோ, அந்த அபயம் தரப்படவேண்டிய அந்த இடத்தில் அவர்கள் கற்பு அழிக்கப்படுவதும், கொலை செய்யப்படுவதும் நியாயமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் தென்காசியில் வசித்துக் கொண்டு வருகிறேன். தென்காசி காவல் நிலையத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் கூறுகிறேன். பாவூர் சத்திரம் மணி நாடார் மகள் மாரியம்மாள் காவல் நிலையத்தில் கற்பழிக்கப்படுகிறாள். சேலத்திலே கிச்சிலி பாளையம் என்ற இடத்தில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டு கொலை புரியப்படுகிறாள். அதே நேரத்தில் பல இடங்களில் கொலை செய்யப்படுகிறார்கள். இப்படி எண்ணற்ற சம்பவங்களை நாங்கள் இங்கே தொகுத்துச் சொல்லியிருக்கிறோம்.

தென்காசி காவல் நிலையத்தைப் பொறுத்தவரையில், எத்தனையோ குறைபாடுகள் இருக்கின்றன. 13—1—1983 அன்று ஆற்றிலே குளித்து விட்டு ஒரு மாது வருகிறாள். வருகின்ற





நேரத்தில் கழுத்திலே உள்ள தங்கச் செயின் தாலியை ஒருவன் பிடுங்கிக் கொண்டு போய்விடுகிறான். அவனைப் பிடித்துக் கொடுத்து போலீசில் புகார் கொடுக்கிறார்கள். போலீஸ் என்ன செய்கிறார்கள் ? கேஸ் போடுகிறேன் என்று சொல்லி, இது வரைக்கும் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த மாதுவுக்கு அந்தத் தங்கச்செயின் தாலி இதுவரையில் திருப்பிக் கிடைக்கவில்லை. ஆனால் யார் திருடினாரோ, யார் தங்கச் செயின் தாலியை அறுத்தாரோ அவரை போலீஸ் நிலையத்தில் பிடித்துக் கொடுத் தார்கள். அதை விசாரித்து, வாங்கித் தருகிறோம் என்று காவல் நிலையத்தில சொன்னார்கள். ஆனால், இப்போது என்ன நடக் கிறது ? போலீஸ் ஸ்டேஷனில் கேட்டால், சாமான் யாருக்குக் கொடுக்கப்பட்டதோ அல்லது விற்கப்பட்டதோ அவரைக் கண்டு பிடிக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்தச் சாமான் விற்ற பணத்தை காவல் துறையினர் பெற்றுக்கொண்டு, அதை பங்குபோட்டுக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. சிந்தாம தார்மனை பிரம்மாளின் தங்கச்செயின் தாலியை அறுத்துக் சென் றதற்கு இதுவரை பரிகாரம் கிடைக்கவில்லை. ஆக காவல்துறை மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடியது என்ற நல்ல எண்ணத்தை சம்பாதிக்கவில்லை.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு காவல் துறையைப் பொறுத்த மட்டில் சாதனைப் பட்டியல் கொடுத்திருப்பதைப் பார்க்கிறோம்: சந்தோஷம். அதே நேரத்தில் மக்கள் தங்களுடைய கையிலே வேதனைப் பட்டியல்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த எந்த காவல் நிலையத்தில் மக்களுக்கு என்ன என்ன நேர்ந்திருக்கிறது என்பதைப் பற்றிய புள்ளி விவரங்கள் தொகுத்து வைத்துள்ளார்கள்.

கடந்த ஆண்டு புளியங்குடியில் என்ன நடந்தது ? அந்த சம்பவம் யாரால் நடந்தது ? அது ஜாதி கலவரமா? அல்ல. தாழ்த்தப்பட்ட சகோதரர்களும் இஸ்லாமிய சகோதரர்களும் ஒன்று சேர்ந்து டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய பிறந்த நாளையும் கண்ணியமிக்க காயிதேமில்லத் அவர்களின் பிறந்த தினத்தையும் கொண்டாடினார்கள். நம்முடைய இந்த சட்டமன்றத்திலே கூட அந்த இரு பெரியவர்களின் திருவுருவப் படங்களை அருகே அருகே வைத்து இருக்கிறோம் இல்லையா. இந்த முறையிலே அங்கே விழா நடந்து கொண்டிருக்கும்போது ஊர்வலத்தில் வந்த போது கோளாறு ஏற்பட்டது. கேஸ் போட்டார்கள். யாரை பிடித்தார்கள் ? கேசுக்கு சம்பந்தப் பட்டவர்களைப் பிடிக்கவில்லை. ஒன்றும் அறியாத மக்களை, அதிலே சம்பந்தப்படாத மக்களை பிடித்து, அடித்து, துன்புறுத்தி போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். போலீசாருடைய அடிக்கும் உதைக்கும் பயந்து, போலீஸ்

ஸ்டேஷனுக்குப் போக பயந்து, போலீஸ்காரர்கள் அடிக்காமல் இருக்க கொடுத்த லஞ்சம் கிட்டத்தட்ட 1.5 இலட்சம் ரூபாய் என்று பரவலாகப் பேசப்பட்டது. இது புளியங்குடியில் நடைபெற்ற சம்பவம்.

அய்யாபுரம் சம்பவம் என்ன? 5 அரிசனத் தோழர்கள் கொலை செய்யப்பட்டார்கள். வாசுதேவநல்லூரில் ஒரு இஸ்லாமிய சகோதரர் ஜவுளிக்கடை சூறையாடப்பட்டது. பலசரக்குக் கடை சூறையாடப்பட்டது. ஏன் இப்படி சூறையாடுகிறீர்கள் என்று கேட்டதற்கு இஸ்லாமிய சகோதரர் முகமது அலி என்பவர் குத்தி கொலை செய்யப்பட்டிருக்கிறார். இஸ்லாமிய சகோதரர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் வழக்கு யார் மீது? பாதிக்கப்பட்ட சமுதாயத்தின் மீதுதான் வழக்கு போட்டிருக்கிறார்கள்.

அடுத்து, கோவில்பட்டி நீதிமன்றத்தில் இரண்டு தீர்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நீதிபதி நியாயமான தீர்ப்பு வழங்கியிருக்கிறார். போலீஸ் குற்றச்சாட்டுப் பொய், சரியான சாட்சி இல்லை; பொய் குற்றச்சாட்டு என்று நீதி மன்றத்தின் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இந்த மாதிரி பொய் கேசுகள் போட்டிருக்கிறார்கள். இந்த மாதிரியான பொய் வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, கடையநல்லூரில் ஒரு அரிசனத் தோழரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். காரணம் களவு கேஸ் என்று சொன்னார்கள். அச்சம்புதூர் காவல் நிலையத்தில் அவரை கொடுமைப்படுத்தினார்கள். அடித்து சித்திரவதை செய்தார்கள். அங்கே காவல் நிலையத்தில் இருந்தவர்கள் அவரை பள்ளப்பயலே என்று சொல்லி அடித்திருக்கிறார்கள். ஜாதியைச் சொல்லி இழிவு படுத்தியிருக்கிறார்கள். அவருடைய பெயர் என்ன என்று கேட்டதற்கு ராஜா என்று சொல்லியிருக்கிறார். ''பள்ளப்பயலுக்கு ராஜா என்று பெயரா'' என்று சொல்லி அடித்திருக்கிறார்கள். காவல் துறையில் இந்தமாதிரி சம்பவம் நடக்கக் கூடாது அல்லவா? இந்த அளவுக்கு காவல் நிலையத்தில் வகுப்புவெறி தாண்டவமாடுகிறது. ஜாதி பெயரால் காவல் நிலையம் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் மாற்றப்பட வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்திலே பெரும்பச்சேரி என்ற கிராமம் இருக்கிறது. அது மானாமதுரை காவல் நிலைய எல்லைக்கு உட்பட்டது. ஓராண்டுக்கு மேலாக அந்த மக்கள் பயமுறுத்தப்பட்டு வருகிறார்கள். காவல் நிலையத்தில் முறையிடுகிறார்கள். எங்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்று காவல் நிலையத்தில்





பரிகாரம் கேட்டால் இதுவரையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரம் கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட நிலைமை நீடிக்கக் கூடாது, உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடையநல்லூரில் வெளிநாட்டுக்குச் சென்று வரக்கூடியவர்கள் நிறை பேர் இருக்கிறார்கள். அங்கே நிறைய பாஸ்போர்ட் எடுத்துக் கொண்டிருக்கின்றனர். அந்தப் பகுதியில் இருப்பவர்கள் பெரும்பாலும் முஸ்லீம் சகோதரர்கள். திடீரென்று போலீஸ்காரர் அந்த முஸ்லீம் சகோதரர்கள் வீட்டுக்குப் போய் ''உங்களை காவல் நிலையத்தில் அழைக்கிறார்கள்'' என்று சொல்லுவார். எதற்காக என்று கேட்டால், அங்கே வந்து கேட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுப் போய்விடுவார். பாஸ்போர்ட் பற்றித்தான் கேட்பார்கள் என்று நினைத்துக் கொண்டு அந்த தோழர்கள் போவார்கள். காவல் நிலையத்தில் போய் விசாரித்தால் ''ஒன்றுமில்லை'' ஐயாவிடம் 25 ரூபாய் கொடுத்துவிட்டுப் போங்கள் என்று சொல்லுகிறார்கள். ஒரு மெம்மோ இல்லாமல், ஒரு தாக்கீது இல்லாமல் முஸ்லீம் சகோதரர்கள் வீடு வீடாகச் சென்று ''பாஸ்போட்டில் ஏதோ குற்றம் வந்திருக்கிறது'' என்று சொல்லி, 25 ரூபாய் வாங்கிவிட்டு அனுப்புகிறார்கள். இதுபற்றி நானே அங்கே இருக்கிற டி. எஸ். பி-யிடம் ஆறு மாதங்களுக்கு முன்னால் ஒரு மனு கொடுத்தேன்.

(பிற்பகல் 1-10)

அந்த நிலை இன்னும் நீடித்துக் கொண்டு இருக்கிறது, நீங்கள் விசாரியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட சம்பவம் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதையும் நீங்கள் விசாரிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு எதிர்க் கட்சியைப் பொறுத்த வரையில், அவர்கள் மறியல் நடத்துகிறார்கள். என்றாலும், சரி, போராட்டம் நடத்துகிறார்கள் என்றாலும் சரி, அவர்களை முறியடிக்கின்ற, தடுக்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது ஜனநாயக நாட்டிலே மக்களுடைய நிலைமைகளை எடுத்துச் சொல்ல அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்காக மக்கள் பிரதிநிதிகளைப் பெற்றிருக்கின்ற இயக்கத்தின் தலைவர்கள், அவர்களுடைய மக்களுடைய மத்தியிலே நாட்டினுடைய அரசினுடைய நிலைமைகளை எடுத்துச் சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கின்ற இந்த நேரத்திலே, அந்த உரிமையை பாதிக்கின்ற—தடுக்கின்ற அளவுக்கு அராஜகம் வலுத்து வருகிறது. நேற்று கூட இந்தியத் தேசிய காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்த தலைவர்கள் பல்வேறு பகுதிகளிலே காவல் துறையினரால் தாக்கப்பட்டிருக்கின்றார்கள். எதிர்க்கட்சித் தலைவர் கலைஞருக்கு, முன்னாள் முதலமைச்சராக இருந்தவருக்கு விமான நிலையத்திலே புறந்தள்ளப்பட்டு அவமதிப்பு தரப்பட்டி

அடுத்ததாக, காவல் துறையைப் பொறுத்தவரையில் இந்த மைனாரிட்டி சமுதாயம் பெரிதும் புறக்கணிக்கப்படுகிறது. காவல் துறையில், இந்த மைனாரிட்டி மக்களுக்கு அதிக வேலை வாய்ப்பு இல்லை. புரோமோஷன் வாய்ப்புகளிலும் அதிக அளவில் வாய்ப்பு தரப்படவில்லை. தடுக்கப்படுகிறது. பேனல் தயாரிக்கப்படுகின்ற நேரத்தில் பார்த்தால் அதில் இஸ்லாமிய சமுதாய மக்களின் பெயர்களே காணப்படுவதில்லை. அப்படி ஒன்று இரண்டு இருந்தாலும் அதை எடுத்துவிடுகிறார்கள். பதவி உயர்வு கொடுப்பதில்லை. ஏன் நாங்கள் என்ன வரி செலுத்தவில்லையா ? நாங்கள் என்ன இந்த நாட்டு மக்கள் இல்லையா ? நாங்கள் என்ன இந்த நாட்டின் குடியுரிமை பெற்ற மக்கள் இல்லையா எங்களுக்கு காவல் துறை மட்டும் இல்லை எல்லாத் துறைகளிலேயும் முறைப்படி வேலை வாய்ப்புத் தரப்பட வேண்டும். குறிப்பாக இன்றைக்கு காவல் துறையை எடுத்துக் கொண்டால், அதில் எங்கள் சமுதாய மக்கள் 2 பெர்சென்ட் கூட இல்லை. ஒரு பெர்சென்டுக்கும் குறைவாக உள்ளனர். புலனாய்வுத் துறையில் அதுவும் கிடையாது. நான் இன்றைக்கு உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், எங்களுக்கு தரவேண்டிய முறையான உரிமையைத் தாருங்கள். எப்படி மற்றவர்களுக்கு கொடுக்கிறீர்களோ அப்படி—வேலை வாய்ப்பானாலும், எதுவானாலும் சரி—எங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து செய்யுங்கள் என்று வற்புறுத்திக்கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நாங்கள் இஸ்லாமிய சமுதாயத்தின் அரவணைப்பாலும், அன்பாலும் அவர்கள் எங்களை ஆட்சியில் அமர்த்தினார்கள் என்று சொன்னீர்கள். அப்படி ஆட்சியில் அமர வைத்ததற்காக இப்படிச் செய்யலாமா ? இஸ்லாமிய சமுதாய மக்களின் குறைகளைக்கேட்டு அவர்களுக்குரிய உரிமைகள்வழங்கப்படவேண்டும். நாட்டிலே வகுப்புக் கலவரங்கள் நடக்கக்கூடாது. தமிழகத்திலே இஸ்லாமிய சமுதாயம் அமைதியாக இருக்கின்றது. பாதுகாப்பாக இருக்கிறது என்ற உணர்வு ஏற்படும்படி செய்ய வேண்டும், நடந்து கொள்ளவேண்டும். மைனாரிட்டி மக்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை அரசுக்கும் காவல் துறைக்கும் இருக்கின்றது. மேலும் காவல் துறையிலே இருக்கின்ற குறைகளையும் போக்கவேண்டும். காவல் துறையினருக்கும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.



6. அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி.

(இ) விதி 106-ன் கீழ் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிக்கை.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்.**—மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதி 106 (1)-ன் கீழ் கீழ்க்கண்ட அறிக்கையை நான் வாசிக்கிறேன்.

சென்னை நகருக்கு இரயில் மூலம் தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளைப் பற்றி நேற்று சட்டப் பேரவையில் ஒரு அறிக்கையை நான் வாசித்தேன். அதைத் தொடர்ந்து வில்லிவாக்கம் பகுதியில் 5 இரயில்வே வேகன்கள் நேற்று வந்தன. நேற்று அவைகளிலிருந்து பரிசோதனைக்காகத் தண்ணீர் எடுக்கப்பட்டு சோதிக்கப்பட்டது. சோதனையிலிருந்து தரக்கட்டுப்பாடு திருப்திகரமாக இருக்கின்றது. ஆனால் தண்ணீரில் மண்ணெண்ணை வாசனை அடிக்கிறது. மேற்கொண்டு 20-க்கு ஒன்று என்ற விகிதத்தில் நல்ல தண்ணீரோடு கலந்து பார்த்தபோது வாசனை அடிக்கவில்லை. ஆகவே இந்தத் தண்ணீரை ஏற்றுக்கொள்ளலாம். என்று முடிவு எடுக்கப்பட்டு இரயில்வே இலாகாவினர் சென்னை குடிநீர் வாரியத்திற்கு மூடு கால்வாய் மூலம் அதாவது கான்ட்யூப் மூலம் விடும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் ஒரு வேகன் சி.ஆர். 4485 என்பதில் மட்டும் மண்ணெண்ணை மேலே மிதந்தது. இதைக் கால்வாயில் விட அனுமதி மறுக்கப்பட்டது. மற்ற நான்கு வேகன்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஒரு வேகன் 5000 காலன் கொண்டது. இன்னும் 5 வேகன்கள் வந்திருப்பதாகத் தகவல் வந்துள்ளது. அதற்கு பரிசோதனைக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாறு வரப்படும் தண்ணீர் கீழ்ப்பாக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டு சுத்திகரிக்கப்பட்டுதான் நகருக்கு வழங்கப்படும். சுத்திகரிப்பு நிலையம் கீழ்ப்பாக்கத்தில்தான் இருக்கின்றது. அங்கே கொண்டு வந்து சுத்திகரித்த பின்புதான் வழங்கப்படும். இந்தத் தண்ணீரை நேரடியாக மக்களுக்குக் குடிக்கக் கொடுத்துவிட முடியாது. வில்லிவாக்கத்திலிருந்து கான்ட்யூப் மூலம் சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கொண்டுவந்து சுத்திகரித்து அதற்குப் பின்னர்தான் மக்களுக்குக் கொடுக்கப்படும்.

ருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் நாட்டில் உள்ள தலைவர்களுக்கே ஏற்படுகின்றது என்றால், மற்றவர்களுக்கு எப்படிப் பட்ட நிலைமை ஏற்படும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நீங்கள் ஆட்சியைப் சிறப்பாக நடத்துவதாகச் சொல்லிக் கொள்கிறீர்கள். நடத்துங்கள். அதே நேரத்தில் காவல் துறை மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில், மக்களுக்கு அது காவலைத் தருகின்ற வகையில் அதனுடைய நடவடிக்கைகள் இருக்குமாறு நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மக்கள் காவல் நிலையத்திற்கு செல்ல வேண்டும் என்றாலே ஏதோ கொடும் சிறைச்சாலைக்கு செல்வது போன்று எண்ணுகிறார்கள். அந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். போலீஸ் அதிகாரிகள் என்றால், மக்களின் பொது நலச் சேவைக்காக வந்திருக்கும் அதிகாரிகள் அவர்கள் என்ற நிலைமை வர வேண்டும். காவல் துறையினர் மக்களுடைய சேவைக்காக, மக்களுக்கு சேவை புரிவதற்காக, அதையே தம்முடைய கடமையாக செய்வதற்காக இருக்கிறார்கள் என்கிற நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அதே போல பல போலீஸ் ஸ்டேஷனில் சில வழக்குகளுக்காக பணம் பெறுகிறார்கள். கேஸ்கள் பதியப் பட்டதாக ரசீதுகளைப் கொடுப்பதில்லை. அப்படி கேஸ்கள் பதியப் பெற்றால், அதற்கு ரசீது கொடுக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் காவலர்கள் தங்களுடைய பாதுகாப்பிற்காகத்தான் இருக்கிறார்கள் என்ற உணர்வை மக்கள் மத்தியிலே ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, மைனாரிட்டி சமூகத்தினருக்கு பல இடங்களிலே பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. அப்படி இன்றைக்கு எத்தனையோ சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. மேலும் மதுரை மாவட்டத்திலே பட்டிவீரன்பட்டியிலே கூட அரிஜன சமுதாயத்திற்கு இது போன்ற சம்பவம் நடைபெற்ற தகவல்கள் வந்திருக்கின்றது. நான் கேட்டுக் கொள்வது எல்லாம் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுவது தடுக்கப்பெற வேண்டும் என்பது தான். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். முதலிலே எல்லாவற்றையும் பேசாமல் விட்டுவிட்டு, பிறகு தடியடிகளில் இறங்கக்கூடாது.

உதாரணமாக, சென்னையிலே இந்து மத விழா ஒன்று நடைபெற்றது. நல்லதுதான். வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். பலரும் கலந்துக் கொண்டு அதிலே பேசினார்கள். எல்லாம் சரி. இந்து மதம் ஒரு உயர்வான மதம்தான், மனு தர்ம ஆட்சிப்பற்றி அதைப்பற்றி அவர்கள் புகழ்ந்து பேசுவதைப் பற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. எல்லாம் சரி. ஆனால் நடந்த ஊர்வலத்திலோ என்ன சென்னார்கள். பக்க



பைசா முறுக்கு பள்ளிவாசலை நொறுக்கு. என்ற கோசங்களை முழங்கினார்கள். இதுதேவையா அது இந்து மத முன்னேற்ற விழாவா அல்லது இஸ்லாமிய மதத்தை துவேஷிக்கும் விழாவா என்ற சந்தேகம் ஏற்பட்டுவிடுகிறது. அது மட்டும் அல்ல பெரியவர் சங்கராச்சாரியார் அவர்கள் இந்து மதத்தைப் பரப்பட்டும். அதிலே எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால் அதே நேரத்தில் இஸ்லாமிய மதத்தைப் பற்றி துவேஷமான கருத்துக்கள் அந்த ஊர்வலத்திலே பேசப்படுவதை அவர் அனுமதித்திருக்கிறாரே ? ஊர்வலத்திலே காவலாகச் சென்ற போலீசாரும் அதை அனுமதிக்கிறார்களே ? அரசும் அதை அனுமதிக்கிறதா ? என்று தான் நான் கேட்கவிரும்புகிறேன்.

சின்ன சங்கராச்சாரியார் அவர்கள் இந்து சமயத்தை வளர்க்க வேண்டும். இந்து சமயத்தை வளர்க்க, இந்து சமயத்தை காப்பாற்ற தற்போது தீவிர இயக்கம் தேவை. ஆர்.எஸ்.எஸ் தேவை, இந்து முன்னணி இயக்கம் தேவை என்று சொல்லுகிறார்கள். ஆட்சேபனை இல்லை. ஆனால் ஒரு மைனாரிட்டி சமுதாயத்தைப் பற்றி துவேஷமாகக்கருத்துக்களைப் பரப்புவார்களேயானால், இந்து மதத்திற்கு தேவை என்கிற தீவிர இயக்கம், இஸ்லாமிய மதத்திற்கும் தேவையா இல்லையா என்கிற நிலை ஏற்படும். அப்படியே ஒவ்வொரு சமுதாயத்தினரும் தங்களுடைய மதத்தைக் காப்பாற்ற ஒரு தீவிர அமைப்பு தேவை என்ற நிலை வந்து, துவேஷங்கள் தலைவிரித்தாடும் நிலைமை ஏற்பட்டு விடும்.

இஸ்லாமிய மதத்திற்கு, மைனாரிட்டி மக்களுக்கு எதிராக பேசப்படுகிற அது போன்ற துவேஷ கருத்துக்கள் தடுக்கப்பட வேண்டும். இன்றைக்கு இஸ்லாமிய சமுதாயம் பாதுகாப்பற்ற நிலையிலே, அமைதியற்ற நிலையிலே இருக்கிறது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, அவர்கள் அமைதியில்லாமல், பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு நியாயமா என்று கேட்டுக் கொண்டு—மைனாரிட்டி மக்கள், உங்களுடைய அண்ணன் தம்பிகள் நாங்கள். எங்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கவேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது. ஆனால் எங்களை பாதுகாக்காமல் இருப்பது நியாயமா ? எங்களை பாதுகாக்கின்ற பணியைச் செய்யாமல் இருப்பது சரியா ? நான் காவல் துறையைக் கேட்டுக் கொள்வது எல்லாம், இந்த மைனாரிட்டி மக்கள், இஸ்லாமிய சமுதாய மக்கள், இதுபோன்ற கொடுமைகள் அனுபவிப்பதை தடுக்க வேண்டும். அரசு அவர்களுக்கு உரிய உரிமைகள் வழங்க நியாயம் வழங்க நீங்கள் முயலவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :—பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (8–4–1983) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பெற்ற முடிவுகளுக்கிணங்கப் பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பெற்றுள்ளன என்பதை பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

| | |
|---|---|
| 9–4–1983 (சனிக்கிழமை) | ஏற்கெனவே அறிவித்தபடி மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். |
| 10–4–1983 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 11–4–1983 (திங்கள்கிழமை) | 15—காவல்துறை மற்றும் 16—தீயணைப்புப் பணிகள்—இறுதி நாள். |
| 12–4–1983 (செவ்வாய்க்கிழமை) | 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். 11—மாவட்ட நிர்வாகம். |
| 13–4–1983 (புதன்கிழமை) | 24—தொழில்கள். 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. |
| 14–4–1983 (வியாழக்கிழமை) | தமிழ் வருடப்பிறப்பு, தெலுங்கு வருடப் பிறப்பு—விடுமுறை. |
| 15–4–1983 (வெள்ளிக்கிழமை) | காலை 10-00 மணி முதல் 11-00 மணி வரை. 25–1–1983 அன்று பேரவை முன் வைக்கப் பெற்ற மாண்புமிகு நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி விசாரணைக் கமிஷன் அறிக்கை மீது அரசு எடுத்த நடவடிக்கை குறித்து விவாதிக்க, மாண்புமிகு உறுப்பினர் திரு எஸ். ஆண்டித்தேவர் அவர்கள் கொடுத்துள்ள தீர்மானத்தின் மீது விவாதம். காலை 11-00 மணி முதல்— 32—பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன். |



| | |
|---|---|
| 16—4—1983 (சனிக்கிழமை) | 2—மாநில ஆயத் தீர்வைத் துறை. 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம். |
| 17—4—1983 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை |
| 18—4—1983 (திங்கட்கிழமை) | (1) 7—மாநில சட்டமன்றம். 8—தேர்தல்கள். எடுக்கப்பெறாத மற்ற மானியக் கோரிக்கைகள் விவாதம் இன்றி வாக்கெடுப்புக்கு விடப்படும். (2) 1983–84 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு—அறிமுகம் செய்தல். |
| 19—4—1983 (செவ்வாய்க்கிழமை) | 1983–84 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். மற்ற அரசினர் சட்டமுன்வடிவுகள். |
| 20—4—1983 (புதன்கிழமை), 21—4—1983 (வியாழக்கிழமை) | அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |

1974–75 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், ஆளுநர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று பேரவைக்கு அளிக்கப்படும். அதன்பிறகு, 21–4–1983-க்குள் இந்த மானியக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்று, பின்னர் ஆய்வு செய்து நிறைவேற்றப்பெறும் என்பதையும் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. வரவு-செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 15—காவல்துறை<br>
கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் } தொடர்ச்சி

(பிற்பகல் 1–20.)

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிற காவல் துறை மானியத்தின் மீது நான் சார்ந்து இருக்கிற காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். நம்முடையே தமிழ்நாடு காவல் துறை திறமைக்கு பெயர் பெற்ற ஒரு காவல் துறை. அதனுடைய வரலாற்று பின்னணி எல்லாம் பெருமைப்படக்கூடியதாக இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்றைக்கு காவல் துறைக்கு இருக்கிற மகத்தான கடமைகளில் தலையானது சமுதாயத்தில் இருக்கின்ற சட்டம் ஒழுங்கைக் காப்பது, அமைதியை நிலை நிறுத்துவது போன்ற முக்கிய கடமைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட கடமைகளை ஆற்றுகின்ற இந்த போலீஸ் துறையினுடைய தேவைகளை பூர்த்தி செய்வது என்ற அடிப்படையில் இன்றைக்கு பல்வேறு குறிப்புகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அதிலே காவல் இயந்திரங்கள் நல்ல முறையிலே செயல்படுவதற்குரிய சீரிய செய்தித் தொடர்பு என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளைப் பார்க்கிறபோது நாம் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைய வேண்டும். ஏன் என்றால் அந்த அளவுக்கு இந்த துறையிலே மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்புக் கருவிகள், வாக்கிடாக்கி இரண்டு இருவழிச் செய்தித் தொடர்புக் கருவிகள் ஆகியவைகளில் எல்லாம் ஏற்பட்டு இருக்கிற முன்னேற்றம் உண்மையில் பாராட்டக்கூடியதாக இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. ஆனாலும் விரைவில் இடம் விட்டு இடம் செல்லக்கூடிய வாகன வசதியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு பல்வேறு முயற்சியை மேற்கொண்டாலும் அது போதுமானதாக இல்லை என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக இந்தத் திட்டத்தால் 205 புதிய வாகனங்கள் வாங்குவது என்று இந்த குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும் இன்றைக்கு ஒவ்வொரு சப்-டிவிஷனுக்கும், ஒவ்வொரு சர்க்கிளுக்கும் ஜீப் வழங்கப்பட வேண்டும். எனக்குத் தெரிந்த வரையில் அப்படிப்பட்ட ஜீப்கள் வழங்கப்பட்டு இருப்பதாக தெரியவில்லை. அதனால் ஒரு குறிப்பிட்ட செய்தியை, செயலை புரிந்தவுடனே அந்த இடத்திற்குச் சென்று தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்



கொள்வதற்கு துறையினால் இயலவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது குறித்து ஏற்கெனவே நம்முடைய தமிழ்நாடு காவல் துறை விசாரணைக் குழுவினுடைய அறிக்கையில் பாரா 92-ல் எல்லா காவல் நிலையத்திற்கும்—அதிலே குறிப்பாக சொல்லியிருக்கிறார்கள்—அந்த அடிப்படையிலே சப்-டிவிஷன்களுக்கும், சர்க்கிள்களுக்கும் ஜுப்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொலைபேசியைப் பொறுத்தவரைக்கும் எல்லா காவல் நிலையங்களுக்கும், புற காவல் நிலையங்களுக்கும் புது காவல் துறை ஆய்வாளர்கள்—அலுவலகங்களுக்கும் தொலைபேசியை வழங்க வேண்டும் என்று அந்த காவல் துறை விசாரணைக் குழுவின் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. எங்களுடைய மானாமதுரையில் உள்ள இன்ஸ்பெக்டருக்கு, வீட்டுக்கு தொலைபேசி இல்லை என்பதை தெரிவித்துக்கொண்டு எங்கள் மாவட்ட ஸ்பெஷல் பிராஞ்சு இன்ஸ்பெக்டர் வீட்டுக்குகூட தொலைபேசி இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிற இந்த நேரத்தில் ஒன்றை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். எங்களுடைய கிழக்கு இராமநாதபுரம் தனியாக பிரிக்கப்பட்டு தனி கண்காணிப்பாளர் அலுவலகம் பல ஆண்டு காலமாக செயல்பட்டும்கூட அந்த ஸ்பெசல் பிராஞ்சு இன்ஸ்பெக்டர் அலுவலகம் தற்காலிகமாகவே ஒவ்வொரு ஆண்டும் அது நீட்டிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதை நிரந்தரமாக்கித் தர வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இந்த குறிப்பிலே இந்த ஆண்டு 1982–83-ல் 19 புதிய காவல் நிலையங்களுக்கு அனுமதி வழங்கியிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் கட்டனூ ரில் கடந்த 25 வருடமாக செயல்பட்டு வருகிற புற காவல் நிலையத்தை காவல் நிலையமாக ஆக்கித்தரவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தக் குறிப்பில்சொல்லியிருக்கிறார். மக்கள் உரிமை பாதுகாப்புச் சட்டம் பிரிவு அமுலாகி அது நடைமுறைப் படுத்து வதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சுற்றுக் காவல் படைப் பிரிவு இயங்கி வருவதாக கூறப்பட்டிருக்கிறது. அந்தப் படைப் பிரிவு எப்படி இயங்குகிறது என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அரசியல் சட்டம் 46-வது பிரிவிலே சொல்லப்பட்டிருக்கிற குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக மக்கள் உரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955-ன்படி அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. அந்த சுற்றுக் காவல் படைப்பிரிவுனுடைய தலைமையான நோக்கம் என்பது அப்படிப்பட்ட குற்றங்கள் நடக்காமல்

(திரு. க. பாரமலை) [1983 ஏப்ரல் 8

தடுப்பதற்கு ஒரு முக்கியமான கடமை என்பதை நான் தெரி
வித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இன்று நடப்பது
அவர்களுக்கு கொடுக்கிற புகார்களை அடிப்படையாக வைத்து
அதை விசாரித்து நடவடிக்கை எடுக்கிறார்களே தவிர அந்த
மக்கள் உரிமை சட்டம் செக்ஷன் 15 (ஏ) (2) உட்பிரிவு 6-ல்
சொல்லியிருக்கிற அந்த கடமையை அந்தப் படைப்பிரிவு செய்ய
வில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

The identification of he areas where persons are under ary disabili y, and adoption of such measures as would ensure the removal of such disability from such areas.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் படையினுடைய தலை
யாய கடமை இந்த துவேஷங்கள் அல்லது ஏற்றத்தாழ்வுகளால்
பாதிக்கப்பட்ட பகுதிகளை முன்கூட்டியே கண்டறிந்து அந்த
ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்
டும் என்று சொல்கிற நேரத்திலே அந்த முயற்சியைச் செய்யாத
காரணத்தினால் இன்றைக்குத் தடுக்கப்பட வேண்டிய நிகழ்ச்சி
கள் நடந்து கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். அந்த அடிப்படையிலே பார்த்தால் மதுரை
மாவட்டத்திலே அலங்காநல்லூர் போலீஸ் நிலையத்திலே
மாணிக்கம்பட்டியிலே படுகொலை நடந்திருக்கிறது. காட்டு
ராஜா என்ற அரிசன இளைஞன் படுகொலை செய்யப்படுகிறார்
என்று சொன்னால் அது எவ்வளவு பெரிய கொடுமை என்பதை
நான் சுட்டிக்காட்ட விரும்பகிறேன். அந்தக் கொலைக்கு என்ன
காரணம் என்று சிந்தித்துப் பார்த்தால் ஒரு பொதுக் குழாயிலே
தண்ணீர் எடுக்க அரிசனப் பெண்கள் சென்றார்கள் அதைத்
தடுப்பதினால் ஏற்பட்ட விளைவு ஒரு கொலையிலே முடிந்
திருக்கிறது. அந்த இளைஞன் பம்பாயிலே தனி நிறுவனத்திலே
வேலை செய்து நாகரிகமாக இருந்தான். அவனுடைய
தூண்டுதல்தான் அதற்கு காரணம் என்று அந்த
ஊர்க்காரர்கள் எல்லாம் சேர்ந்து திட்டமிட்டு அந்தக்
கொலையை செய்திருக்கிறார்கள். அந்தக் கொலையைக்
கண்டித்து மதுரையிலே 5 ஆயிரம் பேர்கள் கிராமத்து பொது
மக்கள், மாதர்கள் எல்லாம் ஊர்வலம் நடத்தி சரியான
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்
கள். அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத்
தெரியவில்லை. அப்படி தடுக்கப்பட வேண்டிய அந்த
நடவடிக்கைகளை இந்த சுற்று காவல் படைத் துறை மேற்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு அப்படி
நடக்கிற நடவடிக்கைகளை தடுப்பது மட்டுமல்ல; நடந்த
பின்னாலாவது கடும் நடவடிக்கை எடுப்பதின் மூலம் இப்படிப்
பட்ட நடவடிக்கைகள் தொடராமல் இருப்பதற்கு அரசு
முயற்சிக்க வேண்டும். ஆகவே போலீஸ் துறையிலே ஒரு



1983 ஏப்ரல் 8] (திரு. க. பாரமலை)

பப்ளிக் செக்யூரிட்டி கமிட்டி அமைக்க வேண்டுமென்று மத்திய
அரசு தமிழ்நாடு அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறியிருக்கிறது.
அந்தக் கமிட்டியை இதுவரை அமைக்கவில்லை என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன். அந்த கமிட்டியை அமைக்க வேண்டு
மென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு பல்வேறு வழக்குகள் தோல்வியுற்றிருக்கின்றன
என்று பல சந்தர்ப்பங்களிலே சொல்லப்படுகிறது. நம்முடைய
ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்கூட ஒரு கேள்
விக்குப் பதில் அளிக்கிறபோது சொன்னார்கள். 2,800-க்கும்
அதிகமான வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அதிலே
1,300 வழக்குகளில்தான் தண்டனை அளிக்கப்பெற்றது, மற்ற
வைகள் எல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்
னார்கள். தள்ளுபடி செய்யப்பட்டதற்கு காரணம் சரியான
சாட்சியம் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. என்னைப்
பொறுத்த வரையில் பணிவோடு அரசாங்கத்திற்கு தெரிவித்துக்
கொள்கிறேன், சாட்சியங்கள் கிடைக்கவில்லை என்பது மாத்திர
மல்ல, அந்த புலனாய்வில் ஈடுபடுகிற அதிகாரிகளின் மனோ
பாவமும் அதற்கு ஒரு காரணம் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். ஆதோடு வழக்கறிஞர், பப்ளிக் பிராசிகியூட்டரும்
ஓரளவுக்கு காரணம் என்று சொல்ல முடியும். ஆதற்காக
ஷெட்யூல்ட் காஸ்ட் கமிஷன் என்ற கமிஷன் ரிப்போர்ட்டிலே
கூட தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த வழக்குகளை
நடத்துவதற்கு ஒரு லாயர்கள் கமிட்டி அமைக்கப்பட வேண்டு
மென்று சொல்லியிருக்கிறார்கள்.

The Commi ion recommends that the State Gover me t should maintain sepa te panel of competent lawyers to handle the cases.

வழக்குகளைக் போடுகிற அதிகாரிகள், வழக்குகளை நடத்துகிற
பப்ளிக் பிராசிக்கியூட்டர்கள் அந்தக் குற்றத்திலே ஈடுபடுகிற
வர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கொண்டால் எப்படி வழக்கு
வெற்றி பெறும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
இப்படி பல்வேறு சந்தர்ப்பங்களில் தனியாக ஒரு நிலைமை ஏற்
படுகிறபோது மாநில அதிகாரிகளையும் அமைச்சர்களையும்
கூட்டி நிலைமையை விளக்கிய பின்னாலே ஏற்கெனவே இருக்கிற
பப்ளிக் பிராசிக்கியூட்டரை விட்டு விட்டு புதிதாக தனியாக
வழக்கறிஞர்களை வைத்து கேஸ்களை நடத்துவதற்குக்கூட
அனுமதி வழங்கியிருக்கிறார்கள், என்று சொல்கிற போது
அந்த வழக்குகளிலே வெற்றி பெறுவதற்கான நிலைமையை
ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
(மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 9–4–1983 காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(8) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

240. எரனாவூர் கிராமத்தின் சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெரும் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து, வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 20–7–1982 ஆம் தேதியிடப் பெற்ற 664 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) [தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

241. புல்லில்யான் கிராமத்தின் சென்னை பெருநகர்ப்பகுதிக்கான பெருந் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 20–7–1982 ஆம் தேதியிடப் பெற்ற 666 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிக்கை (தமிழ, ஆங்கிலம்) [தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு நகர, நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

242. மண்ணூர் கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப்பகுதிக்கான பெருந் திட்டத்தில் மாற்றம் செய்வது சம்பந்தமாக வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 20–7–1982 ஆம் தேதியிடப்பெற்ற 668 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

243. அரசங்கழனி கிராமம் நி. அ. எண். 9-1, 7-1 மற்றும் 5-ன் சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெரும் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 20–7–1982 ஆம் தேதியிடப் பெற்ற 669 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்பு திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

163. 1972–73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையின் (சிவில்) மீது பொது நிறுவனங்கள் குழு (1977–78) அளித்த மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தைந்தாவது அறிக்கை (தமிழ். ஆங்கிலம்).

164. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 1966–67, 1967–68 மற்றும் 1968–69 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தாறாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

165. 29–4–1981 அன்று பேரவையில் நடை பெற்ற சம்பவங்கள் குறித்த உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கை (தமிழ்).

166. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தனிக்குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 20/1981) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

இணைப்பு.

(1028-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 686-க்கான விடையைக் காண்க).

(அ) கையாடல் நடந்தது உண்மை.

(ஆ) எழும்பூர் பிரிவில் உள்ள, பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களில் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சம்பந்தப்பட்ட பொருள்கள், இரண்டு பூட்டுகள் கொண்ட (Do ble L ck System) அலமாரியில் வைக்கப்பட்டு வருகின்றன. முன்னாள் காசாளர் (C shier) திரு. எம். ஆர். சுப்பிரமணியம் என்பவரிடம், இரட்டைப் பூட்டுக்கள் கொண்ட அலமாரியின், ஒரு பூட்டின் சாவியும், முன்னாள் இரண்டாம் பெருநகர் மாஜிஸ்டிரேட் திரு. ஜே. ஏ. ஜார்ஜ் அவர்களிடம் மற்றொரு பூட்டின் சாவியும் இருந்தன. நீதிமன்றங்களில் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சம்பந்தப்பட்ட விலைமதிப்புள்ள பொருள்களின் 31–12–1976-ல்

சென்னை-600 008 136032



முடியும் காலாண்டு முடிவுக்கான ஆய்வு சான்று அனுப்பும் பொருட்டு, 19-12-1976 அன்று இரட்டை பூட்டு அலுவலர் (Do ble Lock Officer) திரு. ஜே. ஏ. ஜார்ஜ் ஆய்வு நடத்தினார். அப்பொழுது பதிவேட்டின்படி உள்ள பல பொருட்கள் காணப்படவில்லை என்று தெரியவந்தது. காசாளர், மற்றும் இரட்டை பூட்டு அலுவலர் (Do ble Lock Officer) ஆகிய இருவருமே அலமாரியில் வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு பொறுப்பானவர்கள் ஆவார்கள், இரட்டைப் பூட்டு அலுவலர், தன்னுடைய கடமையில் தவறிய காரணத்தாலும் மற்றும் அவர்தம் கவனக் குறைவினாலும் மேற்படி நீதிமன்றத்தின் காசாளர் ரூபாய் 2,14,106.72 கையாடல் செய்ய நேரிட்டது.

(இ) 19-12-1976 அன்று இரட்டைப் பூட்டு அலுவலர் (Double Lock Officer) ஆய்வு செய்த பொழுது தான், மேற்படி கையாடல் நடைபெற்றது என்று தெரிய வந்தது. எனவே காவல் துறை ஆணையாளரிடம் 26-12-1976 அன்று, ஒரு புகார் மனு கொடுக்கப்பட்டது. காவல் துறையானது, தன்னுடைய தீவிர புலன் விசாரணைக்குப் பிறகு, முன்னாள் காசாளர் திரு. எம். ஆர். சுப்பிரமணியம் மற்றும் உதவி காசாளர் திரு. என். கண்ணன் ஆகிய இருவர் மீதும், கூடுதல் தலைமை பெருநகர் நீதிமன்றத்தில், 6-10-1979 அன்று குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்தது. அவ்வழக்கு மேற்படி நீதி மன்றத்தில் குற்ற வழக்கு 16057/79 என்ற எண்ணில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

(ஈ) இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட முன்னாள் இரண்டாம் பெருநகர் மாஜிஸ்டிரேட் திரு. ஜே. ஏ. ஜார்ஜ் அவர்கள் 4-9-1978 அன்று மரணமடைந்தார். மேலும் முன்னாள் காசாளர் திரு. எம்.ஆர். சுப்பிரமணியம் அவர்களிடம் எவ்வித அசையும் மற்றும் அசையா பொருட்கள் ஒன்றுமில்லை எனவும், காவல் துறை ஆணையாளர் தன் விசாரணைக்குப் பிறகு தெரிவித்தார். எனவே, மேற்படி காசாளர் தன்னுடைய பணிக்கு அளித்திருந்த பிணை வைப்புத் தொகையான (S c rity D po it) ரூபாய் 3,000 பிடிப்பு செய்யப்பட்டது. கூடுதல் அகவிலைப் படியான ரூபாய் 95.30ம் நீதிமன்றத்தில் வைப்புத் தொகையில் உள்ளது. மற்றும் அவரின் பொது வைப்புத் தொகையான (General Pr vident Fund) ரூபாய் 4,785-ம் நீதிமன்றத்தில் உள்ளது. மேற் குறிப்பிட்ட தொகையைத் தவிர, வேறு எந்த சொத்துக்களும் அவரிடம் இல்லாத காரணத்தால், மேற்படி இரு நபர்களின் மனைவி, மக்கள் போன்றவர்களின் பெயரில் ஏதேனும் சொத்துக்கள் இருந்தால், அதனைக் கைப்பற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

V211,31 N83
N83-44591